கலைஞரின்
கடிதங்கள்



50

13.10.2013 - முதல்
19.03.2014 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 50

13.10.2013 - 19.03.2014

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பொருளாளர்
இல்லம்
சென்னைக்கு
அன்னை அறிவுசால் ஆயிரம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3817. சிலர் பெறுவதோ “லாபம்”; பலர் தருவதோ “சாபம்!”	13-10-2013	23
3818. அம்மா ஆட்சியின் அவலங்களைக் கூறிட ஒரு நாள் போதுமா?	22-10-2013	30
3819. நடப்பது ஆட்சியா; வெறும் காட்சியா?	23-10-2013	40
3820. போனஸ் பற்றி “ஜெயா” தந்த விளக்கம்!	24-10-2013	48
3821. அக்கறையின்மை, தொலைநோக்கற்ற பார்வை; யாருக்கு?	27-10-2013	56
3822. இசைப்பிரியாவின் மறைவை எண்ணியாவது இந்தியா கண்ணீர் சிந்துமா?	4-11-2013	65
3823. “மோனோ” போய்; “மெட்ரோ” வந்தது!	08-11-2013	71
3824. இருகரம் கூப்பி அழைக்கின்றேன்!	10-11-2013	77

3825. விளக்கமும்; நான் விடுக்கும் வினாக்களும்!	12-11-2013	86
3826. மக்கள் நலப் பணியாளர்களும், தமிழர்களே!	14-11-2013	97
3827. நாளை ‘‘டெசோ’’ கூடுகிறது!	16-11-2013	103
3828. தொழிலாளர்கள் ஊதியம் உயர்வு; இன்னுமா கேள்விக்குறி!	19-11-2013	111
3829. இங்கிலாந்து பிரதமரும்; நமது இந்தியப் பிரதமரும்!	20-11-2013	118
3830. ஏவுதளம் இங்கே வந்திட ஏன் வீண் தயக்கம்?	21-11-2013	125
3831. அராஜகத்தின் முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது!	24-11-2013	132
3832. உரிமை கேட்கிற நேரத்தில் கடமை மறந்து விடலாமா?	28-11-2013	140
3833. வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசுவதா?	30-11-2013	146
3834. நல்ல செய்தி தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!	3-12-2013	156
3835. தேர்தல் கமிஷனுக்கும் “பெப்பே” தானா?	8-12-2013	163
3836. தோல்வி கண்டு துவளாமல் தொடர்ந்து பணியாற்றுவோம்!	10-12-2013	170

3837. சொத்துக்குவிப்பு வழக்கும்; கோடநாடு வழக்கும்!	14-12-2013	177
3838. எத்தனை கொலைகள்? எத்தனை கொள்ளைகள்?	18-12-2013	183
3839. நிதிக் குழு உரையா? நிந்தனை உரையா?	19-12-2013	191
3840. ஒப்பிட்டுப் பார்த்து தெளிவடைய வேண்டுகிறேன்!	22-12-2013	199
3841. கரும்பு, நெல் விவசாயிகள் மீது காழ்ப்பு ஏன்?	24-12-2013	206
3842. நெம்மேலித் திட்டம்; யாரால், எப்பொழுது?	26-12-2013	213
3843. கொடநாட்டிலிருந்து ஆட்சி பரிபாலனம்?	27-12-2013	219
3844. தமிழ்வழிக் கல்வியின் தலையிலும் கைவைப்பதால்?	28-12-2013	225
3845. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (1)	29-12-2013	232
3846. மேயருக்கும், மக்களுக்கும் ஒரு விளக்கம்!	30-12-2013	239
3847. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (2)	5-1-2014	245

3848. தை திங்கள் முதல் நாளே, தமிழர் புத்தாண்டுத் திருநாள்!	11-1-2014	252
3849. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (3)	12-01-2014	257
3850. அம்மாவின் வார்த்தைகள்; “அம்மா”வுக்கே வெளிச்சம்!	13-1-2014	266
3851. மீனவர் பிரச்சினைக்கு விடிவு ஏற்படுமா?	17-01-2014	272
3852. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (4)	19-1-2014	279
3853. இடஒதுக்கீட்டில் நீதிமன்றத்தின் மீது பழி சுமத்துவதா?	20-1-2014	287
3854. மனிதநேயத் தீர்ப்பு!	23-01-2014	294
3855. பொம்மலாட்ட ஆட்சியைப் புரிந்து கொள்ளுங்கள்!	24-01-2014	301
3856. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (5)	26-1-2014	308
3857. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி - அன்றும், இன்றும்!	29-1-2014	317
3558. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (6)	3-2-2014	324

3859. பதில் உரையா? பழி உரையா?	5-2-2014	332
3860. பதில் உரையா? பழி உரையா? (2)	6-2-2014	340
3861. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (7)	9-2-2014	349
3862. உதவாதினி ஒரு தாமதம்; உடனே எழுக தம்பி!	14-3-2014	358
3863. இஸ்லாமியர்களின் இனிய நண்பர் யார்?	15-3-2014	367
3864. நாடாளும் ஜெயாவே; நாவை அடக்குவது நல்லது!	16-3-2014	377
3865. கோயபல்ஸ் யார்? நானா? ஜெயலலிதாவா?	17-3-2014	384
3866. நீதியே; நீ இன்னும் இருக்கின்றாயா?	19-3-2014	390

3817. சிலர் பெறுவதோ "லாபம்"; பலர் தருவதோ "சாபம்!"

உடன்பிறப்பே,

சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் அலுவலுகக் கட்டிடத் திறப்பு விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதா கலந்து கொள்வது பற்றி அ.தி.மு.க.விற்கு வேண்டிய முக்கியப் பத்திரிகைகளில் எல்லாம் முழுப்பக்க விளம்பரங்கள் வெளிவந்துள்ளன. அந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலந்து கொள்வது பற்றியும் அந்தக் கட்டிடத்தைத் திறந்துவைப்பது பற்றியும், காவல் துறையில் பணியாற்றும் இருபதுபேருக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு பரிசளித்தது பற்றியும் நாளேடுகள் பக்கம் பக்கமாக வெளியிட்ட செய்திகளுக்கு நல்ல பயனாக இன்று முழுப்பக்க விளம்பரங்கள் கிடைத்துள்ளன. அந்தச் சாலையில் யாரும் நடந்து செல்ல முடியாத அளவிற்கு இரண்டு பக்கங்களிலும் விளம்பரப் பதாகைகள் வைக்கப்பட்டிருந்ததாம்!

போலீஸ் கமிஷனர் அலுவலகத்தைத் திறந்துவைக்கின்ற விளம்பரத்தைப் பார்க்கும் அனைவருக்கும் குறிப்பாக காவல்துறை நண்பர்களுக்கு அந்தக் கட்டிடம் பற்றிய அனைத்து விவரங்களும் உடனடியாக ஞாபகத்திற்கு வந்தே தீரும்.

23-3-2007 அன்று தி.மு. கழக ஆட்சியில் பேராசிரியர் படித்த நிதிநிலை அறிக்கையில் பக்கம் 12இல், "ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் காவல் துறைத் தலைவர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் மற்றும் ரூபாய் 21 கோடி மதிப்பீட்டில் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றைக் கட்டுவதற்கு இந்த அரசு அனுமதி அளித்துள்ளது" என்று அப்போதே கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஒரு கட்டிடம் மாத்திரமல்ல; காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் 1.61 இலட்சம் சதுர அடி

பரப்பளவில் புதிய இணைப்புக் கட்டடம் 24 கோடியே 50 இலட்சம் ரூபாய்ச் செலவில் கழக ஆட்சியில் கட்டப்பட்டுக் காவல்துறையிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டு விட்டது.

அதுபோலவேதான் சென்னை மாநகரப் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் ஒன்று வேப்பேரி, போக்குவரத்துக் காவல் அலுவலக வளாகத்தில் 25 கோடியே 46 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று, ஒரு சில மாதப் பணிகளே இருந்தநிலையில், 2011ஆம் ஆண்டிலேயே திறப்பு விழா நடத்துவது பற்றி யோசிக்கப்பட்டபோதுதான் பொதுத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டதால், திறப்பு விழா நடைபெறவில்லை. தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றதால், அதன் திறப்பு விழாவினை இத்தனை மாதங்களாக நடத்தாமல் இருந்தார்கள். நான் சென்ற மாதம் 6-9-2013 அன்று முத்தியால்பேட்டை காவல் நிலையக் கட்டிடம், செம்பியம் காவல் நிலையக் கட்டிடம் போன்ற பல காவல் நிலையக் கட்டிடங்கள் பல மாதங்களாக முதல்வரின் தேதிக்காகத் திறக்கப்படாமல் இருக்கின்றன என்று எழுதியபிறகு,

17-9-2013 அன்று தமிழகம் முழுவதும் திறக்கப்படாமல் இருந்த பல காவல் நிலையங்களைக் காணொலிக் காட்சி மூலம் முதலமைச்சர் திறந்துவைத்ததாகச் செய்திவந்தது.

புதிய காவல் நிலையங்கள் கட்டப்பட்டபிறகும், முதலமைச்சரின் தேதி கிடைக்காத காரணத்தால், பல்வேறு இடிந்த கட்டிடங்களில் உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு பணியாற்றிய காவலர்கள்; நான் அது பற்றிக் குறிப்பிட்டு எழுதியதற்காக எனக்குத்தான் மனதளவில் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். அதுபோலவேதான் சென்னை மாநகரப் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கான கட்டிடம் முடிவுற்றுப் பல மாதங்களாக அதைப் பற்றியே சிந்திக்காமல் இருந்துவந்தார்கள். அதைப்பற்றிப் பல முறை நான் குறிப்பிட்டு எழுதிய பிறகு, அதற்கும் தற்போது ஒரு விடிவு காலம் வந்திருக்கிறது. அந்தக் கட்டிடத்தை முதல்வர் திறந்து வைப்பதற்கான முழுப் பக்க விளம்பரங்களும், அந்த நிகழ்ச்சி பற்றிய செய்திகளும் ஏடுகளில் வெளிவந்துள்ளன.

ஆனால் எந்தவொரு ஏட்டிலாவது, அந்தக் கட்டிடம் எந்த ஆட்சிக் காலத்திலே கட்டத்திட்டமிடப்பட்டது, எப்போது பணிகள் முடிந்தது, எத்தனை மாதங்களாக அது திறக்கப்படாமல் உள்ளது என்பது பற்றி ஒரு வரியாவது எழுதியிருக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக ஆட்சியில் இந்தக் கட்டிடங்கள் மாத்திரமல்ல; எழும்பூர், காவல் ஆணையாளர் அலுவலகத்தில் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறைக்காக 10 கோடியே 17 இலட்சம் ரூபாய்ச் செலவில் புதிய பலமாடிக் கட்டடம் - தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும அலுவலகத்திற்காகச் சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் அலுவலக வளாகத்தில், 6 கோடியே 54 இலட்சம் ரூபாய்ச் செலவில் சொந்தக் கட்டடம் - 18 கோடியே 82 லட்சம் ரூபாய்ச் செலவில் சேலம், திருவாரூர், நீலகிரி, மதுரை மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கான புதிய மாவட்டக் காவல் அலுவலகங்கள் - 3 கோடியே 85 இலட்சம் ரூபாய்ச் செலவில் திருநெல்வேலி நகர காவல் அலுவலகக் கட்டடம் - வேலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 1 கோடியே 75 இலட்சம் ரூபாய்ச் செலவில் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறைக்கான புதிய அலுவலகக்கட்டடங்கள் - காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ்த் தனிப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறைக்கான அலுவலகக் கட்டடங்கள் - ஆவடியில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 2ஆம் அணி நிர்வாக அலுவலகக் கட்டடம், பாளையம் மற்றும் கிடங்குக் கட்டடங்கள் அனைத்தும் தி.மு. கழக ஆட்சியில்தான் கட்டப்பட்டன.

67 கோடியே 24 இலட்சம் ரூபாய்ச் செலவில் 219 புதிய காவல் நிலையக் கட்டடங்கள் - மேலும், வாடகைக் கட்டடங்களில் இயங்கிய 92 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் - ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறைக்கெனக் கட்டடங்கள் - அனைத்தும் கழக ஆட்சியில்தான்!

கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தம் ரூ.683 கோடியே 19 இலட்சம் செலவில் 11,029 காவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு

கழக ஆட்சியில் அனுமதிக்கப்பட்டு; 8,254 குடியிருப்புகள் ரூ. 411 கோடியே 85 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு எஞ்சிய குடியிருப்புகள் கட்டப்பட்டுவந்தன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி, திண்டுக்கல் மாவட்டத்தில் கீரனூர், சத்திரப்பட்டி, வேலூர் மாவட்டத்தில் நாட்றம்பள்ளி, சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 2010-2011ஆம் ஆண்டில் கழக ஆட்சியில் 136 கோடியே 94 இலட்சம் ரூபாய்ச் செலவில் 2,000 குடியிருப்புகள் - இதுவும் கழக ஆட்சியிலேதான்!

சென்னை, மருதம் வளாகத்தில் 1 கோடியே 44 இலட்சம் ரூபாய்ச் செலவில் மகளிர் அதிரடிப்படையினருக்கான பயிற்சிக் கூடம் கட்டிமுடிக்கப்பட்டு, காவல்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.

ஊனமாஞ்சேரியில் தமிழ்நாடு காவலர் பயிற்சியகம் முதல்கட்ட கட்டுமானப் பணிகள் முடிவடைந்து காவல்துறைவசம் கழக ஆட்சியில் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வளவும் கழக ஆட்சியில் காவல் துறையினருக்கு வேண்டிய கட்டிடங்களை எழுப்புவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள். காவல் துறையினருக்குக் கழக ஆட்சியில் கட்டிடங்கள் மட்டுமா கட்டப்பட்டன? காவல் துறையினருக்குக் கழக ஆட்சியில் செய்யப்பட்ட ஒருசில சாதனைகளின் பட்டியலைச் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டவா?

காவலர்களின் நலன்களுக்காக இந்தத் துறையிலே காவல் ஆணையம் அமைக்கப்பட்டது என்றால், அது தி.மு.கழக ஆட்சிக் காலங்களில் மட்டும்தான். 1969ஆம் ஆண்டு முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான் திரு. ஆர்.ஏ. கோபாலசாமி ஐயங்கார், ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் இந்தியாவிலேயே மாநில அரசு சார்பில் முதல் முறையாகக் காவல் ஆணையம் ஒன்றை அமைத்து, அந்த ஆணையம் தந்த 133 பரிந்துரைகளில் 115 பரிந்துரைகளை உடனே ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாகக் கழக அரசு அமைந்தபோது, திரு. பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் இரண்டாவது காவல் ஆணையத்தை அமைத்து 112 பரிந்துரைகளைப் பெற்று,

இரண்டாண்டுகளில் கழக ஆட்சி கலைக்கப்பட்ட போதிலும், அதற்குள் - 87 பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மீண்டும், 2006 கழக ஆட்சியிலேதான் திரு. பூரணலிங்கம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் மூன்றாவது காவல் ஆணையம் அமைக்கப்பட்டு, அந்த ஆணையம் பரிந்துரைத்த 444 பரிந்துரைகளில் 278 பரிந்துரைகள் கழக அரசால் கொள்கையளவில் ஏற்கப்பட்டன. அவற்றுள் 48 பரிந்துரைகள் மீது ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும் 166 பரிந்துரைகள் துறைத் தலைவர்களால் செயல்படுத்தப்பட்டு வந்தன.

கழக ஆட்சியைத் தவிர வேறு எந்த ஆட்சியிலாவது காவலர்களின் நலன்களுக்காகக் காவல் துறை ஆணையம் அமைக்கப்பட்டது உண்டா? கிடையாது.

காவலர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதிக்கு அருகில் உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் 50 சதவீத விலையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் முறை 1.10.2008 முதல் கழக ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டு, ஏறத்தாழ 60 ஆயிரம் காவலர் குடும்பங்கள் இப்போதும் பயனடைகின்றன.

1973 ஆம் ஆண்டு முதன்முதலாக மகளிரைக் காவல் துறையிலே சேர்ப்பதற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆணையைப் பிறப்பித்ததும் கழக ஆட்சியிலேதான். காவல் துறையிலே மகளிர் அப்போது சேர்க்கப்பட்ட காரணத்தால், அ.தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சர் ஜெயலலிதா மகளிர் காவல் நிலையங்களை அவருடைய ஆட்சிக் காலத்தில் முதன்முதலாகத் தொடங்கினார். நான் அதை மறைக்க விரும்பவில்லை. எதிர்க்கட்சி செய்தது என்றால், அதை அப்படியே மூடிமறைக்க நான் என்றைக்கும் விரும்பமாட்டேன்.

காவல் துறையினருக்கு நிதியளிப்பு, பதவி உயர்வு என்றெல்லாம் தற்போது பக்கம் பக்கமாகச் செய்தி வருகிறதே; நான் இதற்கு முன்பு நடைபெற்ற ஒரேயொரு சம்பவத்தை மட்டும் நினைவூட்டுகிறேன்.

12-9-2003 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா ஓர் அறிக்கை விடுத்தார். அதில், ஈரோடு மாவட்ட ஆயுதப்படைப் பிரிவில் காவலராகப் பணியாற்றிய மயில்சாமி என்பவர் பாதுகாப்புப் பணியில்

ஈடுபட்டிருந்தபோது திடீரென்று உடல் நலம் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததையொட்டி அவருடைய குடும்பத்திற்கு ஒரு இலட்ச ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். பாதுகாப்புப் பணி என்று கூறப்பட்ட போதிலும், அது முதலமைச்சரின் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டிருந்தார் என்பதுதான் சரி. அந்த ஒரு இலட்ச ரூபாய் நிதி எப்போது வழங்கப்பட்டது தெரியுமா? முதல்வர் அறிவிப்புக்கு 15 மாதங்களுக்குப் பிறகு 22-12-2004 அன்று இதற்கான கோப்பு முதல்வரின் அலுவலகத்திற்கு உத்தரவிற்காக அனுப்பப்படுகிறது. கோப்பு கையெழுத்தானதா? 22.12.2004 அன்று அனுப்பப்பட்ட கோப்பு முதலமைச்சர் அலுவலகத்திலே இருந்து மீண்டும் திரும்ப வரவில்லை என்றும் இறந்துபோன மயில்சாமியின் தாயார் அந்தத் தொகையைக் கேட்டு வலியுறுத்துவதாகவும், கோப்பினைத் திரும்ப அனுப்பக்கேட்டு, ஒரு குறிப்பு முதல்வர் அலுவலகத்திற்கு 14-9-2005 அன்று அனுப்பப்படுகிறது. அப்போதும் கோப்பு கையெழுத்திடப்பட்டதா? இல்லை. 24-1-2006 அன்று மீண்டும் உள் துறையிலே இருந்து ஒரு கோப்பு தயாரிக்கப்பட்டு, ஒரு இலட்ச ரூபாய் பாதிக்கப்பட்டவர்களுடைய குடும்பத்திற்கு வழங்க, ஒப்புதல் கோரி முதல்வர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. அந்தக் கோப்பில் நிதித்துறைச் செயலாளர் 27-1-2006 அன்று கையெழுத்திட்டு, முதல்வர் அலுவலகத்திற்கு கோப்பு அனுப்பிய போதிலும் அதில் முதல்வர் ஜெயலலிதா கையெழுத்திட்டு ஆட்சியிலே இருந்தவரை திரும்ப அனுப்பவே இல்லை. 2006ஆம் ஆண்டு மே திங்களில் பொதுத் தேர்தல் முடிந்த பிறகு அந்தக் கோப்பு முதல்வராக இருந்த எனக்கு அனுப்பப்பட்டு 11-6-2006 அன்று நான் ஒப்புதல் கையெழுத்திட்டு அனுப்பினேன்.

இந்த விவரத்தை நான் 30-8-2006 அன்றே காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது பேரவையிலேயே எடுத்துக் குறிப்பிட்டு, அது நடவடிக்கைக் குறிப்பிலும் இடம் பெற்றுள்ளது. இன்றுகூட ஒரு செய்தி வந்துள்ளது. 2002ஆம் ஆண்டு போலீஸ் பக்ருதீன் குருவான இமாம் அலியைச் சுட்டுப் பிடித்த காவலர்களில் சிலருக்கு மட்டும் அப்போது சிறப்புப் பரிசும், பதவி உயர்வும் அளித்த ஜெயலலிதா 12 போலீசாருக்கு பதவி உயர்வு தரவில்லையாம்.

இந்தச் செய்திகளை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டுதான், காவலர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் பரிசு, பதவி உயர்வு என்றெல்லாம் சிலருக்கு அறிவித்து ஏமாற்ற நினைக்கிறார்கள். ஆனால் அதைக்கூட முறையாக அந்தச் சம்பவத்திற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் வழங்காமல், ஒரு சிலருக்கு மட்டும் வழங்கி, மற்றவர்களின் "சாபத்தை"த்தான் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்! சிலர் பெறுவதோ "லாபம்"; பலர் தருவதோ "சாபம்!"

அன்புள்ள,

மு.க.

13-10-2013

3818. அம்மா ஆட்சியின் அவலங்களைக் கூறிட ஒரு நாள் போதுமா?

உடன்பிறப்பே,

23ஆம் தேதியன்று தமிழகச் சட்டப் பேரவைக் கூடப் போவதாகவும், ஒரு வார காலம் பேரவை நடைபெறும் என்றும், 25-10-2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 189(1)-ன்கீழ் 2013-2014ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதி நிலை அறிக்கை பேரவையில் வைக்கப்படுமென்றும் துறையின் சார்பில் அறிவிப்புகள் வந்துள்ளன பேரவை ஒரு சில நாட்கள் நடைபெறும் என்ற போதிலும் முக்கியமான பல முடிவுகள் எடுக்கப்படலாம் என்று ஏடுகள் எல்லாம் எதிர்பார்த்துக் கட்டியம் கூறியுள்ளன.

இலங்கைத் தமிழர்கள் மீது சிங்கள அரசு மனிதாபிமானம் சிறிதுமின்றித் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதை எதிர்த்தும், இலங்கை அரசின் போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் சுட்டிக்காட்டியும், 2009ஆம் ஆண்டு இலட்சக்கணக்கான தமிழர்களை இலங்கை கொன்று குவித்து இனப்படுகொலை நடத்தியதைக் கண்டித்தும், இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா சார்பில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று "டெசோ" இயக்கத்தின் மூலமாகப் பேரழுத்தம் கொடுத்திடும் வகையில் கடுமையாகவே தெரிவித்திருக்கிறோம். நம்மைப் போலவே தமிழகத்திலே வேறு சில முக்கியமான கட்சிகளும், மாணவர் இயக்கங்களும், குறிப்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் 15-10-2013 அன்றும், பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் 16-10-2013 அன்றும், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்களும் விடுத்த அறிக்கைகளில், இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்றும், அந்த மாநாட்டினை இந்தியா புறக்கணிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி இருக்கிறார்கள். தமிழக அரசின் சார்பிலும் 18-10-2013 அன்று முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு

இதே வேண்டுகோளை கடிதத்தின் மூலம் தெரிவித்திருக்கிறார். ஏன் அதற்கு முன்பே 25-3-2013 அன்றும் பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் கொழும்பில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டை புறக்கணிக்கவேண்டுமென்று வலியுறுத்தி யிருந்தார். கனடா இந்த மாநாட்டைப் புறக்கணித்து ஏற்கனவே தகவல் தெரிவித்திருப்பதும், இங்கிலாந்து நாட்டிலே உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையிலே இந்த மாநாடு நடைபெறுவதற்குக் கண்டனம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்க திருப்பங்களாகும்.

தோழர் தியாகு அவர்கள் இதே வேண்டுகோளையும் இணைத்து சாகும்வரை உண்ணா விரதம் இருந்த நேரத்தில், இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், "I wish to inform you that a decision on the issue of my participation in the CHOGM Conference will be taken only after considering all relevant factors, including the sentiments of your Party and the Tamil People. I therefore request you to use your good offices to persuade Thiru Thiagu to call off his fast" என்று தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையில் மீண்டும் ஒருமுறை இந்தப் பிரச்சினையில் ஒட்டுமொத்த தமிழகத்தின் உணர்வும் ஒருமுகப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கும் வகையிலும் - தமிழகத்திலே உள்ள பல்வேறு கட்சிகளும் மற்ற பிரச்சினைகளில் வெவ்வேறு கருத்திலே இருந்தாலும், ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதில் அனைவரும் ஒன்றிணைந்து ஈடுபட்டிருக்கிறோம் என்பதை உலகச் சமூகத்திற்கு நிரூபிக்கும் வகையிலும் தமிழகச் சட்ட மன்றத்தின் வாயிலாக ஏகமனதாக ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பது சிறப்புடையதாக இருக்கும். எனவே சட்டமன்றத்தில் அத்தகையதொரு தீர்மானத்தை நிறைவேற்றிட ஆளுங்கட்சி முன்வர வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

தமிழகச் சட்டப்பேரவை கூடவிருப்பதாக ஆளுநர் அவர்கள் நாள் குறிப்பிட்டு, அந்தச் செய்தி ஏடுகளில் வெளிவந்த பிறகு, அரசின் சார்பில் முக்கியமான அறிவிப்புகள் வெளியிடுவது வழக்கமுமல்ல; மரபுமல்ல; அப்படி வெளியிடுவது பேரவையின் மாண்புக்குப் பெருமை சேர்ப்பதும் ஆகாது. ஆனால் பேரவை 23ஆம் தேதியன்று கூடப் போவதாக 14ஆம் தேதியன்று அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட போதிலும், முதலமைச்சர்

ஜெயலலிதா உத்தரவிட்டதாகத் தெரிவித்து - நுங்கம்பாக்கம் டென்னிஸ் அரங்கத்தை மேம்படுத்த நான்கரை கோடி ரூபாய் - எழும்பூர் அருங்காட்சியகத்துக்கு ஒரு கோடி ரூபாய் - பூண்டியில் 20 லட்சம் ரூபாய் செலவில் தொல் பழங்காலப் பூங்கா - பத்து மாவட்டங்களில் 16 ரயில்வே மேம்பாலங்கள் அமைக்க 180 கோடி ரூபாய் - 15 மாவட்டங்களில் 232.30 கோடி ரூபாய்ச் செலவில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் - சென்னை தேசிய கலைக்கூடத்தைப் புதுப்பிக்க 11 கோடி ரூபாய் - வனத்துறைப் பணியாளர்களுக்குப் புதிய சலுகைகள் - கூட்டுக்குடிநீர்த் திட்டங் களுக்காக 717 கோடி ரூபாய் ஒதுக்கீடு - அண்ணா பல்கலைக் கழக மண்டல அலுவலகங்களுக்கு புதிய விடுதிக் கட்டிடங்கள் - ஏன் இன்றைய தினம் கூட, பணிபுரியும் மகளிருக்கு 24 கோடி ரூபாய்ச் செலவில் பத்து புதிய அரசு விடுதிகள் - நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்த 287 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு - 19,500 மனைகளுடன் புதிதாக துணைக்கோள் நகரம் - சோழிங்கநல்லூரில் 1500 குடியிருப்புகள் கட்ட 379 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு - போன்ற பல்வேறு அறிவிப்புகள் செய்யப்பட்டிருப்பது மரபுக்கு மீறிய அறிவிப்புகளாகும். ஆனால் அரசின் சார்பில் நாங்கள் இவ்வாறு செய்வது இது முதல் முறையல்ல, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று அறிவித்த பிறகு கூட இதுபோல பல அறிவிப்புகளை அரசின் சார்பில் செய்திருக்கிறோம் என்று கூறுவார்களானால், ஒரு பிழையை நியாயப்படுத்திட, இன்னொரு பிழையைச் சுட்டிக்காட்டிடும் இருட்டடிப்பு வேலையாகவே இருக்கும். இன்னும் சட்டப் பேரவையில் 110வது விதியின் கீழ் எத்தனை அறிவிப்புகள் படிக்கப்பட இருக்கிறதோ?

அடுத்து, அ.தி.மு.க. ஆட்சியின் சார்பில் ஏதாவது புதிய அறிவிப்புகள் என்றால், அதனை அறிவிக்க எந்த அமைச்சருக்கும் இதுவரை அனுமதி அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த அறிவிப்பு வெறும் ஒரு கோடி ரூபாய்க்கான அறிவிப்பாக இருந்தாலும்கூட, அதனை முதலமைச்சர் பெயரில்தான் அறிவிக்கப்படுகிறது. பேரவை நடைபெற்றால் அந்த அறிவிப்பு விதி 110இன் கீழ் முதலமைச்சரால் அவையிலே படிக்கப்படும். அந்த விதியின் கீழ் அறிக்கை படித்தால் அதைப்பற்றி எதிர்க்கட்சிகள் எந்தக் கேள்விகளும் கேட்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் அந்த அறிவிப்பினை, அதை வெளியிட்ட முதல் அமைச்சரைப் பாராட்டவும், நன்றி தெரிவிக்கவும் மாத்திரம் அனுமதி உண்டு.

ஆனால் பேரவைக் கூட்டம் இல்லாத நேரத்தில் எந்த அறிவிப்புகளும் முதல் அமைச்சர் உத்தரவு என்ற பெயரால் அரசின் செய்திக் குறிப்புகளாக வெளியிடப்படுகின்றன. அப்படி வெளியிடப்படும் அறிவிப்புகளில் சில ஏற்கனவே முதல் அமைச்சரால் பேரவையில் படிக்கப்பட்டு, ஆளுங்கட்சியின் தோழமைக் கட்சிகள் பாராட்டிய அதே அறிவிப்புகளுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கான கோப்புகளில் முதலமைச்சர் கையெழுத்திட்ட பிறகு, ஏதோ புதிய அறிவிப்புகளைப்போல, முன்பொரு முறை அதை முதல் அமைச்சர் அறிவித்ததையே அப்படியே மறைத்து வெளியிடுகிறார்கள். ஒரே திட்டத்திற்கு, திரும்பத் திரும்ப வெளியிடும் வெற்று அறிவிப்புகளின் மூலம் விளம்பரம் தேடிக் கொள்ளலாமே தவிர, அதனால் நன்மை எதுவும் நாட்டு மக்களுக்கு விளைந்திடப் போவதில்லை!

உதாரணமாக 15-10-2013 அன்று 180 கோடியே 89 லட்சம் ரூபாய் செலவில் 16 சாலை மேம்பாலங்களை அமைக்க முதலமைச்சர் ஒப்புதல் அளித்திருப்பதாக ஓர் அறிவிப்பு ஏடுகளுக்குத் தரப்பட்டது. 7-9-2011 அன்று முதலமைச்சர் பேரவையில் 110வது விதியின் கீழ் படித்த அறிக்கையில் 740 கோடி ரூபாய் மதிப்பில் 23 புதிய ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப் பாலங்கள் கட்டும் பணிகள் 9 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் என்று படித்தார். அந்தப் பாலங்களின் கதி என்ன? கட்டி முடிக்கப்பட்டுவிட்டதா? என்று கூட நான் கேட்டிருந்தேன். அதிலே இன்னும் ஒரு வேடிக்கை! இந்த ஆண்டு 1-4-2013 அன்று பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின் கீழ் ஓர் அறிக்கையைப் படித்திருக்கிறார். அந்த அறிக்கையில் 948 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பில் மொத்தம் 11 மாவட்டங்களில் 18 ரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும், ஆரம்பக் கட்டப் பணிகள் 201 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்றும் படித்தார். அவருடைய அணியினரின் பாராட்டுகளையும் பெற்றார்.

1-4-2013 அன்று பேரவையில் முதலமைச்சர் 110வது விதியின் கீழ் படித்த அறிக்கையிலே குறிப்பிட்டிருந்த மேம்பாலங்களைக் கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதலைத்தான் - சுமார் ஆறு மாதங்கள் கழித்து முதல் அமைச்சர் அளித்து,

அதுபற்றிய அறிவிப்பினையே புதியதோர் அறிவிப்பினைப் போலச் செய்து, அதை அனைத்து நாளேடுகளும் "முதலமைச்சர் உத்தரவு" என்று வெளியிட்டிருக்கின்றன. மக்களை ஒன்றும் தெரியாதவர்களாக - நினைவாற்றலை இழந்தவர்களாகக் கருதி, அவர்களை மூளைச் சலவை (Brain-Wash) செய்து, ஏமாற்றுகின்ற வகையில் ஒரு அரசே நடந்துகொள்வதை மக்கள் நலனிலும், மக்களாட்சியிலும் ஈடுபாடும், நம்பிக்கையும் கொண்டோர் ஏற்றுக்கொள்ள முடியுமா; முடியவே முடியாது.

அதுபோலவேதான் 4-4-2013 அன்று 110வது விதியின் கீழ் முதலமைச்சர் 3500 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 280 கோடி ரூபாய் செலவில் புதிய அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைக்கப்படும் என்று அறிக்கை படித்தார். அதே அறிவிப்புக்கு கடந்த செப்டம்பரில் நிர்வாக ஒப்புதல் வழங்கினார். அப்போதும் ஒரு முறை அதை ஒரு புதிய அறிவிப்பினைப் போலச் செய்து, ஏடுகளில் எல்லாம் முதலமைச்சர் உத்தரவு என்று பெரிதாக வெளியிடப்பட்டிருந்தது.

21-10-2013 தேதிய நாளேடுகளில் "ஜெயலலிதா உத்தரவு" என்ற தலைப்பில் அனைத்து வசதிகளுடன் மதுரையில் 587 ஏக்கரில் துணைக்கோள் நகரம் என்ற அறிவிப்பு மிகப் பெரிய அளவில் வெளிவந்துள்ளது. அது போலவே சோழிங்கநல்லூரில் 1500 பன்னடுக்கு மாடிக்குடியிருப்புகள் கட்ட 379.51 கோடி ரூபாய் ஒதுக்கி முதலமைச்சர் அம்மா உத்தரவு என்றும் இன்று காலையில் செய்தி வந்துள்ளது. ஆனால் ஆறு மாதங்களுக்கு முன்பே, 4-4-2013 அன்று முதல் அமைச்சர் சட்டப் பேரவையில் மதுரையில் 587 ஏக்கரில் துணைக் கோள் நகரம் உருவாக்கப்படும் என்றும், சோழிங்கநல்லூரில் 612 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1500 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டார். அதற்கான நிர்வாக ஒப்புதலைத் தான் ஆறு மாதங்கள் கழித்து, நாளைக்கு பேரவை கூடினால் யாராவது தி.மு.க. எம்.எல்.ஏ. பேரவையில் எங்கே அந்தத் திட்டங்கள் என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று அவசர அவசரமாக இன்று நிர்வாக ஒப்புதல் வழங்கி ஏடுகளில் புதிய அறிவிப்பினைச் செய்வதைப் போல செய்திருக்கிறார்கள். கழக ஆட்சியில் திருமழிசையில் துணைக்கோள் நகரம் ஒன்றினை எழுப்பிட முயற்சித்தபோது, இதே ஜெயலலிதா அதற்கு எதிராக

எப்படியெல்லாம் அறிக்கை விடுத்தார் என்பதை அவரே தற்போது எடுத்துப் பார்த்து தெரிந்துகொள்வது நல்லது. இவற்றைப் பற்றியெல்லாம் இந்தக் கூட்டத் தொடரில் அரசின் சார்பில் விளக்கம் அளிக்கப்படலாம்.

ஓய்வூதியதார்கள் இறக்கும்பொழுது அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடும்பப் பாதுகாப்பு நிதியை 50 ஆயிரம் ரூபாயாக முதலமைச்சர் ஜெயலலிதா உயர்த்தியிருப்பதாக 8-8-2013 அன்று ஏடுகளில் செய்தி வெளிவந்தது. ஆனால் இதிலே உண்மை என்ன தெரியுமா? முதலமைச்சரின் இந்த அறிவிப்புக்கு முன்பேயே கடந்த ஏப்ரல், மே திங்களில் தமிழகச் சட்டப்பேரவை நடைபெற்றதல்லவா? அப்போதே கொள்கை விளக்கக் குறிப்பில் இரண்டு இடங்களில் அதாவது பக்கம் 2லும், பக்கம் 18லும் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? "ஓய்வூதியதார்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வரும் நிதி உதவியை 35 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்த தற்போது அரசு முடிவு செய்துள்ளது" என்று மே திங்களிலேயே அறிவிக்கப்பட்டுவிட்டு, நிதித்துறை சார்பிலும் அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இந்தக் குழப்பத்தைப் பற்றி நான் 11-8-2013 அன்று எழுதியிருந்தேன். அரசு தரப்பில் இன்று வரை இதைப்பற்றி வாயே திறக்கவில்லை.

அடுத்து தீவிரவாதிகள் போலீஸ் பக்ருதீன் போன்றவர்களைக் கைது செய்தது பற்றியும், அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் பற்றியும், அவர்களைப் பிடித்த காவல் துறையினருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது பற்றியும் பல குழப்பமான தகவல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் யார் யாரைக் கொலை செய்ததாக ஒப்புக் கொள்கிறார்கள் என்பது பற்றிக் காவல் துறை சொல்வதும், அதே குற்றத்தை வேறு சிலர் செய்ததாக ஏற்கனவே காவல் துறைத் தலைவரே அறிக்கை கொடுத்ததும், ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும், குழப்பமாகவும் இருக்கிறது. அதைப் பற்றிய உண்மைகளும் பேரவையில் விளக்கமாகச் சொல்லப்பட்டால் மக்களுக்கு இதுகுறித்துத் தெளிவு பிறக்கும். இல்லாவிட்டால் திசை திருப்பும் முயற்சியில் அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருவது வெளிச்சத்துக்கு வந்துவிடும்!

தமிழகத்தில் மத்திய தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை என்றும், பணி செய்யாமலேயே பலர் பெயரில் ஊதியம் வழங்கப்பட்டிருப்பதாகவும் மத்திய அமைச்சர் ஒருவரே தமிழக அரசின் மீது குற்றம் சாட்டியிருக்கிறார். இதுவரை அரசின் சார்பில் அந்தக் கடுமையான குற்றச்சாட்டு பற்றிய எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. இந்தக் கூட்டத் தொடரிலாவது அதற்கு அரசின் சார்பில் விளக்கம் அளிக்கப்படலாம்.

அதைப்போலவே தமிழக அரசின் தாமதம் காரணமாக 15 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மத்திய அரசின் நெடுஞ்சாலைத் திட்டங்கள் பல நிறைவேற்றப்படாமல் இருப்பதாகவும், அதைப்பற்றி தமிழக முதல் அமைச்சரிடம் நேரம் பெற்றுச் சந்திக்க விருப்பதாகவும் மத்திய அமைச்சர் தெரிவித்திருக்கிறார். மதுரவாயல் - துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டம் பற்றியும் அவர் பேச விரும்புவதாகச் செய்தி வந்துள்ளது. அதைப் பற்றி தமிழக அரசின் கருத்து என்ன என்பதையும் பேரவையில் அரசின் சார்பில் கூறலாம். அப்படிக் கூறவில்லை என்றால், மத்திய அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில அரசுக்கு ஒப்புதல் இல்லை என்ற பொதுவான கூற்று நிரூபணமாகிவிடும்!

கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல், சிமெண்ட் போன்றவை இந்த ஆட்சியில் விலை உயர்ந்துள்ளது. கழக ஆட்சியில் சிமெண்ட் விலை உயர்ந்தபோது அதைக் கண்டித்து அறிக்கை விட்ட இன்றைய முதலமைச்சர் தற்போது அவற்றின் விலை இந்த அளவிற்கு உயர்ந்திருப்பதற்கு விளக்கமாவது பேரவையில் தருவார் என்று எதிர்பார்க்கலாம்.

அடுத்து இந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு ஊருக்கு ஊர் சிரிப்பாய்ச் சிரிக்கின்றது. இதுவரை பா.ஜ.க.வைச் சேர்ந்தோர் உள்ளிட்ட அரசியல் கட்சியினர் பலர் கொலை செய்யப் பட்டுள்ளார்கள். அன்றாடம் கொலை, கொள்ளைச் செய்திகள் குவிந்த வண்ணம் உள்ளன. கோவை போலீஸ் பயிற்சிக் கல்லூரி மைதானத்தில் குண்டு வெடித்து 7 சப் இன்ஸ்பெக்டர்கள் படுகாயமடைந்து மருத்துவ மனையிலே சிகிச்சை பெறுவதாகவும் செய்தி வந்துள்ளது. இந்த ஆட்சியில் காவல்துறையில் எந்த அளவுக்கு எச்சரிக்கை உணர்வு காப்பாற்றப்படுகிறது என்பதற்கு இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவமும் எடுத்துக்காட்டாகும்.

மணல் கொள்ளை பற்றியோ கேட்க வேண்டியதில்லை. உயர் நீதிமன்ற நீதிபதியே அது பற்றிக் கண்டனம் தெரிவித்திருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவரையே "சஸ்பென்ட்" செய்கின்ற அளவிற்கு நிலைமை முற்றியுள்ளது. மணல் கொள்ளைகள் நடைபெறுவதை புகைப்படங்களோடு ஏடுகள் செய்திகளாக வெளியிட்டுள்ளன. தாதுமணல் கொள்ளை பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. அதிகாரிகள் சோதனை, விசாரணை என்ற செய்திகள்தான் வருகின்றன. உருப்படியான நடவடிக்கை குறித்து எந்தச் செய்தியும் இதுவரை இல்லை. இதுவரை நடைபெற்ற விசாரணை பற்றி வெள்ளை அறிக்கை பேரவையில் வைக்கலாம்.

வீட்டு வசதி வாரியத்தில் சந்தை மதிப்பைக் குறைத்துக்காட்டி மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், அந்தத் துறையிலே பேரம் பேசப்பட்டதாகவும், அதற்கான வீடியோ ஆதாரங்கள் இருப்பதாகவும் "தி இந்து" (தமிழ்) போன்ற நாளேடுகளே செய்தி வெளியிட்டிருக்கின்றன. அந்தப் பத்திரிகையில் குறிப்பிட்ட ஒருவர், 50 வயதுகூட ஆகாத பொறியாளர், அந்தச் செய்தியைப் பார்த்தவுடன் தற்கொலை செய்துகொண்டு நேற்று இறந்திருக்கிறார். இதற்குப் பேரவையில் விளக்கம் அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

மத்திய அரசு கொண்டு வந்த உணவுப் பாதுகாப்புச் சட்டத்தால் தமிழகத்திற்கு பல கோடி ரூபாய் இழப்பு என்று முதலமைச்சரே தெரிவித்தார். ஆனால் மத்திய அமைச்சர் 600 கோடி ரூபாய் தமிழகத்திற்குக் கூடுதலாகக் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார். அதைப் பற்றிய விளக்கத்தையும் பேரவையில் அரசின் சார்பில் அளிக்கவேண்டும்.

தமிழகத்திலே உள்ள மருத்துவமனைகள் பற்றியும் புகார்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. மதுரை, திருச்சி, சேலம், திருவொற்றியூர், நாகை போன்ற நகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகள் சரியில்லை என்று செய்தி வந்திருக்கின்றது. அந்தத் துறைக்காக அமைச்சர் ஒருவர் இருக்கிறாரா என்றே தெரியவில்லை.

விவசாயிகளின் பிரச்சினையோ கேட்கவே வேண்டியதில்லை. குறுவை சாகுபடியை அறவே இழந்துவிட்டு, சம்பாவிலாவது ஏதாவது கிடைக்குமா என்று எதிர்பார்த்திருக்கும் விவசாயிகள்

ஏமாற்றமடையும் அளவிற்கு கடைமடைப் பகுதிக்கு தண்ணீரே சென்றடைய வில்லை என்று அவர்கள் பல்வேறு போராட்டங் களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு அரசின் சார்பில் வழங்கப்பட்ட நிவாரணத் தொகையும் முறையாக அவர்களைச் சென்றடையவில்லை என்று கூறப்படுகிறது. "தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்க முயற்சிப்பதைப் போல" சாகுபடி காலம் முடிந்த பிறகு நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துவதற் காக ரூ.287 கோடி நிதி ஒதுக்கீடு செய்வதாக முதலமைச்சர் இன்று அறிவித்திருக்கிறார். நெல்லுக்கும் கரும்புக்கும் கொள்முதல் விலை போதாது என்று தொடர்ந்து விவசாயிகள் குரலெழுப்பி வருகிறார்கள். இதுபற்றியும் இந்தக் கூட்டத் தொடரில் அரசு விளக்கம் அளிக்க வேண்டும்.

கல்வித்துறை பற்றி வேதனையைத்தான் வெளிப்படுத்த வேண்டும். இதுவரை நான்கைந்து பேர் இந்த இரண்டரை ஆண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கான அமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்டிருப்பதிலிருந்தே, இந்தத் துறையின் செயல்பாடுகளைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியும். ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மீது உயர் நீதிமன்றம் கொடுத்திருக்கின்ற சான்றுகளே இந்த ஆட்சியின் தரத்திற்கு சரியான சாட்சிகளாகும். கல்விக் கட்டணத்தை ரத்து செய்து இந்த அரசு அறிவித்தது. ஆனால் அந்தக் கல்லூரிகளுக்கு அரசின் நிதி இதுவரை தரப்படவில்லை.

அரசு அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு என்று 26-7-2013இல் ஓர் அறிவிப்பு வந்தது. ஆனால் அதன் காரணமாக பல அலுவலர்கள் ஏற்கனவே பெற்று வந்த ஊதியத்தைவிடக் குறைவாகப் பெறக்கூடிய அளவிற்கு நிலைமை ஏற்பட்டு, அதை விளக்கி நான் அப்போதே கடிதமே எழுதினேன். அதற்கு அரசுத் தரப்பில் எந்த விளக்கமும் தரப்படவில்லை. ஒருவேளை பேரவையில் விளக்கம் தரலாம் என்றிருந்திருக்கலாம். தற்போது அளிப்பார்கள் என்று நம்புவோம்.

இந்த ஆட்சியில் எந்த அளவிற்கு விளம்பரங்கள், ஆட்சியாளர்கள் விரும்புகின்ற ஏடுகளுக்குத் தரப்பட்டுள்ளன என்பதைப் பற்றி விரிவாக நான் எழுதி எத்தனையோ நாட்களாகிவிட்டன. இந்த அரசிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. எந்தெந்த பத்திரிகைகளுக்கு இந்த இரண்டரை

ஆண்டுக் காலத்தில், எவ்வளவு ரூபாய் விளம்பரக் கட்டணமாகத் தரப்பட்டுள்ளது என்பது பற்றிப் பேரவையில் வெள்ளை அறிக்கை தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினால் தாக்கப்படும் கொடுமை நின்றபாடில்லை. என்னதான் தமிழக மக்களின் சார்பில் அனைத்துக் கட்சிகளும் தமிழக மீனவர்களுக்காக குரல் கொடுத்த போதிலும், அந்தக் கொடுமை நீங்கவில்லை. மத்திய அரசிடம் அதற்காக எத்தனையோ முறை குரல் கொடுத்தாகிவிட்டது. நேற்றையதினம் கூட ராமேஸ்வரம் மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்திய மீனவர்களைப் பாதுகாக்கும் வகையில் இந்தியக் கடற்படையினர் இனி துணைக்கு வர வேண்டுமென்று பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

போக்குவரத்துக் கழக ஊழியர்களின் போனஸ் பேச்சுவார்த்தை, ஊதிய உயர்வு பிரச்சினை போன்றவைகளில் அ.தி.மு.க. அரசு அக்கறை காட்டவில்லை. விசைத்தறியாளர்கள் உற்பத்தி செய்த துணிகள் விற்பனையின்றி தேங்கிக் கிடப்பதாகச் செய்தி வந்துள்ளது. நாளை கூடுகின்ற சட்டப்பேரவையில் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அரசின் சார்பில் தகுந்த பதில் அளிப்பார்கள் என்று எதிர்பார்ப்போம். மேலும் மேலும் இப்படி அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களைப் பற்றி எடுத்துரைக்க வேண்டுமென்றால் அதற்கு இடமும் போதாது; ஒரு நாளும் போதாது!

அன்புள்ள,

மு.க.

22-10-2013

3819. நடப்பது ஆட்சியா; வெறும் காட்சியா?

உடன்பிறப்பே,

நேற்றைய தினம் நான் எழுதிய "உடன்பிறப்பு மடலில்" இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள மதுரை துணைக்கோள் நகரம் பற்றியும், சோழிங்க நல்லூர் மாடிக் குடியிருப்புகள் பற்றியும் ஒரு பத்தி எழுதியிருந்தேன். அதைப்பற்றி சற்று விரிவாக உனக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கடிதம்.

அ.தி.மு.க. அரசின் சார்பில் 20-10-2013 அன்று வெளியிடப்பட்ட செய்தி வெளியீட்டில், சோழிங்க நல்லாரில் கட்டப்பட உள்ள 1,500 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள் திட்டத்தினைச் செயல்படுத்த 1379 கோடியே 51 லட்சம் ரூபாய்க்கு முதலமைச்சர் நிர்வாக ஒப்புதல் வழங்கி உத்தரவிட்டுள்ளார் என்றும்; மதுரை அருகே ஒருங்கிணைந்த ஒரு துணைக்கோள் நகரத்தை உருவாக்க முதலமைச்சர் உத்தரவிட் டுள்ளார் என்றும், அந்தத் துணைக்கோள் நகரத்தில் 19,500 மனைகள் உருவாக்கப்படும் என்றும், மேலும் அங்கே பள்ளி வளாகம், வணிக மனைகள், காவல் நிலையம், அஞ்சலகம், ஆரம்ப சுகாதார நிலையம், தீயணைப்பு நிலையம் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் என அனைத்து வசதிகளும் உருவாக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மதுரையில் 19,500 மனைகள், காவல் நிலையம், பள்ளி வளாகம், தீயணைப்பு நிலையம் என்றெல்லாம் கூறிவிட்டு, கடைசியாக அடிப்படை வசதிகளை அமைக்க முதற்கட்டமாக 120 கோடி ரூபாய்க்கு மட்டுமே நிர்வாக ஒப்புதலாம்! இந்த நிர்வாக ஒப்புதலுக்குக்கூட எத்தனை மாதங்கள் ஆயிற்று என்பதைக் கூறுகிறேன்.

இந்த ஆண்டு 4-4-2013 அன்று சட்டப் (பேரவையில் முதலமைச்சர் 110வது விதியின் கீழ் படித்த அறிக்கையிலேயே,

"மதுரை மாவட்டத்தில், தற்போது பெருகி வரும் வீட்டு வசதித் தேவையைக் கருத்தில் கொண்டு, மதுரையிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் விமான நிலையத்திற்கு அருகில் மதுரை - திருநெல்வேலி நான்கு வழிப்பாதையில் தோப்பூர் மற்றும் உச்சப்பட்டி கிராமங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 586.86 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த **"துணைக்கோள் நகரம்"** ஒன்று உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துணைக்கோள் நகரத்தில் 19,500 மனைகள் உருவாக்கப்படும்" என்றெல்லாம் அந்த அறிக்கை நீண்டு கொண்டே போகிறது.

இந்த மகத்தான அறிவிப்பினை முதலமைச்சர் அவையிலே படித்துவிட்டு அமர்ந்ததுதான் தாமதம். உடனே இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலும், பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பிலும், அகில இந்தியச் மத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும், இந்தியக் ம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் முதலமைச்சருக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

பேரவையில் இத்தகைய அறிவிப்பினைச் செய்து, ஆறு மாதங்கள் ஓடி விட்ட பிறகு, தற்போதுதான் அடிப்படை வசதிகளுக்காக அதுவும் முதற்கட்டமாக 120 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி யிருக்கிறார்கள் என்றால் எப்படிப்பட்ட ஏமாற்று நாடகம் இந்த ஆட்சியிலே நடைபெற்றிருக்கிறது என்பதற்கு வேறு உதாரணம் வேண்டுமா?

2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் 8-9-2011 அன்று சட்டப்பேரவையில் 110வது விதியின் கீழ் ஜெயலலிதா ஓர் அறிக்கை படித்தார். அதில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் 2,160 கோடி ரூபாய்ச் செலவில், 311 ஏக்கரில், திருமழிசை துணைக்கோள் நகரம் அமைக்கப்படும் என்றும், அங்கே 12 ஆயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்றும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் ஆகியோர் எளிதில் வாங்கக்கூடிய விலையில் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா பெருத்த ஆரவாரத்திற் கிடையே அறிவித்தார்.

அறிவித்து இரண்டாண்டுகள் முடிந்துவிட்டன. எங்கே 12 ஆயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகள்? இதிலே இன்னும்

ஒரு வேடிக்கை. முதலமைச்சர் 8-9-2011 அன்று திருமழிசை துணைக்கோள் நகரத்தைப் பற்றி அறிவித்தார் அல்லவா, அதற்கு முன்பே 25-8-2011 அன்று பேரவையில் வீட்டு வசதித் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இத்திட்டம் அறிவிக்கப்பட்டுவிட்டது. அதையே முதலமைச்சர் 110வது விதியின் கீழ் அவையிலே படித்தார். இதனைக் குறிப்பிட்டு நான் அப்போதே எழுதியிருந்தேன். வழக்கம் போல யாரும் விளக்கம் அளிக்க முன்வரவில்லை. பொதுமக்கள் நலன் கருதியும், மாநிலத்தின் முன்னேற்றம் கருதியும் நான் எழுப்பி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு அ.தி.மு.க. அரசு உரிய பதிலளிப்பதே இல்லை. இதிலிருந்தே பதிலளித்திடத் தேவையான அடிப்படை, அவர்களிடம் இல்லை என்பதும்; நாட்டு நலனில் அவர்கள் அலட்சியம் காட்டுகிறார்கள் என்பதும் புலனாகிறதல்லவா?

சென்னையையொட்டி துணைக்கோள் நகரம் அமைக்கும் இந்த யோசனை இந்த அ.தி.மு.க. ஆட்சியிலே அல்ல, அதற்கு முன்பே தி.மு. கழக ஆட்சியிலும் வந்தது. அதாவது; 2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும் 1-9-2006 அன்று பேரவையில் செய்யப்பட்ட அறிவிப்பில், "வண்டலூர் - கேளம்பாக்கம் சாலைக்கு தென் பகுதியில், ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தை உத்தேசமாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தேர்வு செய்துள்ளது. இப்பகுதியில் 13 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. 270 சதுர கிலோ மீட்டரில் உள்ள இந்நிலப்பரப்பு மாசற்ற, நல்ல சுற்றுப்புறச் சூழலில் இருக்கிறது. புதிய நகர அமைப்பிற்கு இது உகந்த பகுதியாகும். இப்பகுதியில் பெரும்பாலான நிலங்கள் பயிரிடப்படாமல் தரிசாகவே உள்ளன. இவற்றைக் கையகப்படுத்தும் போது நீர் வளப் பகுதி, குடியிருப்புப் பகுதி, காடுகள் உள்ள பகுதி ஆகியவற்றை நீக்கிவிட்டு தரிசாகவும், புஞ்சையாகவும் உள்ள நிலங்கள் மட்டுமே கையகப்படுத்தப்பட உள்ளன. நிலங்களைக் கையகப் படுத்தும்போது நில உரிமையாளர்களுக்கு நியாயமான "மார்க்கெட்" விலை வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் வசிக்கும் மக்கள் இடப்பெயர்ச்சி செய்யப்பட மாட்டார்கள். அவர்கள் அந்தந்த இடங்

களிலேயே தொடர்ந்து வாழலாம். புதிய நகரம் அமையும்போது உருவாகும் வேலை வாய்ப்புகள் இப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு நல்ல பலனை வழங்கி அவர்கள் பொருளாதார ரீதியாக உயர்வடைய வழிவகுக்கும்" என்றெல்லாம் கழக ஆட்சியில் தெரிவிக்கப்பட்டது.

தி.மு கழக ஆட்சியில் பேரவையில் இந்த அறிக்கை படிக்கப்பட்டதற்கு மறுநாளே 2-9-2006 அன்று ஜெயலலிதா அவசர அவசரமாக ஓர் அறிக்கையினை வெளியிட்டார். அதில்,

> "ஆணவம் கொண்ட அற்ப ஜீவராசிகளின் பொறுப்பில் ஆளும் அதிகாரம் சிக்கிக் கொண் டிருப்பதால், ஜனநாயக மக்கள் விரோத அலங்கோலங்கள், பாரம்பரியம் மிக்க தமிழகத்தில் தொடர் நிகழ்வுகளாகிக் கொண்டிருக்கின்றன என்பதற்கு, சென்னையை ஒட்டி அமைக்க இருப்பதாக மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கும் துணை நகர அறிவிப்பும் ஓர் உதாரணமாகிவிட்டது. ஓர் முதலமைச்சருக்குத் தொலைநோக்குப் பார்வை இல்லாதபோது இதுபோன்று தான்தோன்றித் தனமாகச் செயல்படுகின்ற நிகழ்வுகள் நெஞ்சை நடுங்க வைக்கும் நீசச் செயல்களாக அமைந்து விடுகின்றபோது அதற்கான விலையை கருணாநிதியும் அவரது கட்சியும் கொடுத்துத்தான் ஆக வேண்டும். சென்னை மாநகரத்தில் உள்ள மக்களின் இட நெருக்கத்தைக் குறைப்பதற்காக இந்தத் துணை நகரம் ஏற்படுத்தவிருப்பதாக கருணாநிதி சொல்கிறார். முதலில் அவர் வீட்டில் உள்ள பெண்டு பிள்ளைகள், பேரன் பேத்திகள், மறைந்த முதல் மனைவியின் உறவினர்கள், அவர்கள் வழிவந்த உறவினர்கள், இருக்கும் மனைவியின் உறவினர்கள், ஏற்படுத்திக் கொண்ட துணைவியின் வழிவந்த உறவினர்கள் ஆகியோர் முதலில் கோபாலபுரத்தை விட்டும், சி.ஐ.டி. காலனியை விட்டும் வெளியேறி ஜனநெருக்கத்தை மேற்படி பகுதிகளில் குறைக்கட்டும். மக்கள் நெருக்கடியைப் பற்றி மிகவும் கவலைப்படும் கருணாநிதி

தனது குடும்ப உறுப்பினர்களால் உருவாகியுள்ள ஜன நெருக்கடியை உணர்ந்து அவர்களை முதலில் சென்னை மாநகரத்தை விட்டு வெளியிலே அனுப்பி வைக்கட்டும். கருணாநிதிக்கு "துணை" என்றால் மிகவும் பிடிக்கும்போலும், அதனால்தான் சென்னை மாநகருக்கும் ஒரு "துணையைத் தேடுகின்றார். துணை நகரம் பற்றிய அறிவிப்பு வந்தவுடனே அலறித் துடிக்கும் மக்களின் வேதனை, சுகபோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் கருணாநிதிக்குத் தெரிய வாய்ப்பில்லை. தனது குடும்பத்தார், சுற்றத்தார் மற்றும் பேரன்கள் தயாநிதி மாறன், கலாநிதி மாறன் பயன்பெறவே சென்னை துணை நகரத் திட்டம் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படவுள்ளது என்ற செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன "

என்றெல்லாம் அந்த அறிக்கையில் ஜெயலலிதா தாறுமாறாகவும், தான்தோன்றித்தனமாகவும் என் மீது வசைபாடி எழுதியிருந்தார். தற்போது எதிர்க்கட்சிகள் மீதெல்லாம் எத்தனை அவதூறு வழக்குகள்? ஆனால் முன்பு முதலமைச்சராக இருந்த என் மீது ஜெயலலிதா எப்படிப்பட்ட அருவருப்பான வார்த்தைகளை அவருக்கே உரிய நாகரிகத்தோடு அள்ளி வீசியிருந்தார். எனினும் பண்பாடற்ற நாலாந்தரச் செயலுக்காக அப்போது கழக அரசு அவர் மீது அதற்காக அவதூறு வழக்கு போடவில்லை. நியாயமான அடிப்படை இருந்தும்; அரசியலில் அவரவர் தரத்திற் கேற்ற விமர்சனம் சகஜம்தானே என்று வழக்கு போட எண்ணவில்லை.

ஆனால் ஜெயலலிதா அப்போது விடுத்த அந்த அறிக்கையையே மறந்து விட்டு, அவரே திருமழிசையில் "துணை நகரம்" அமைக்கப்போவதாக அறிவித்தார். அதன் பிறகு மதுரையிலே "துணை நகரம்" அமைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார். அம்மையார் அறிக்கை யிலே கேட்டதைப் போல அவருக்குத் தற்போது, துணை என்றால் மிகவும் பிடிக்கும் போலும், அதனால்தான் ஒரு துணை நகரத்திற்கு மேல் இரண்டாவது துணைக்கோள் நகரம் அமையும் என்று துணைக்கு மேல் துணை தேடி அறிக்கை விடுத்திருக்கிறாரா என்றெல்லாம் ஜெயலலிதா போல நான் கேள்வி கேட்கத் தயாராக இல்லை .

ஜெயலலிதா தி.மு.க. அறிவித்த துணை நகரத்தை அப்போது எதிர்த்து அறிக்கை கொடுப்பதற்கு முன்பாகவே; அப்போது எங்களுடன் தோழமைக் கட்சியாக இருந்த பா.ம.க. சார்பில் டாக்டர் ராமதாஸ் அவர்கள் இந்த துணை நகரம் வருவதால் விவசாய நிலங்கள் எல்லாம் பாதிக்கும், அங்கே வசிக்கின்ற மக்கள் சிரமப்படுவார்கள் என்று நாகரிகமாகச் சொன்னதன் பேரிலேயே இரண்டே நாட்களில், அதாவது 2-9-2006 அன்றே நான் விடுத்த அறிக்கை யில், "தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டு சென்னையை ஒட்டிய துணை நகர அமைப்பு உருவாக்கப்படுமென நான் குறிப்பிட்டிருந்த திட்டம்;

நல்லெண்ண அடிப்படையிலும் தோழமைக் கட்சி வழங்கிய அறிவுரையைச் சிந்தித்துப் பார்த்தும், சில சுயநல தீய சக்திகள் திட்டமிட்டுள்ள பகிரங்க வன்முறை வெறியாட்டத்துக்கு அப்பாலிப் பொதுமக்கள் பலியாகி விடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை உணர்வுடனும் கைவிடப்பட்டுள்ளது" என்று அறிவித்துவிட்டேன்.

அறிக்கை பற்றி 3-9-2006 அன்றே பா.ம.க.வின் அதிகாரபூர்வ ஏடான "தமிழ் ஓசை"யில், "ஜெயலலிதா வின் அறிக்கை - அநாகரிகத்தின் உச்சக்கட்டம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதியிருந்தார்கள், தற்போது ஏற்காடு இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வை ஆதரிப்பதாக அறிக்கை விடுத்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடான "தீக்கதிர்", 4-9-2006 அன்று எழுதிய தலையங்கத்தில்,

"சென்னை அருகே துணைநகரம் அமைக்கும் திட்டம் ரத்து செய்யப்படுவதாக முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார். நல்லெண்ண அடிப்படையில் தோழமைக் கட்சியினரின் உணர்வுகளை மதித்து இந்த முடிவை எடுத்திருப்பதாக முதல்வர் அறிவித்துள்ளார். ஆனால் ராணிமேரிக் கல்லூரியை இடித்து விட்டு அந்த இடத்தில் தலைமைச் செயலகம் கட்ட முந்தைய (அ.தி.மு.க.) ஆட்சி முயன்றபோது மாணவிகள் போராடினர். அனைத்துத் தரப்பு மக்களும் எதிர்ப்புத்

தெரிவித்தனர். ஆனாலும் ஆணவத்தோடு அந்தத் திட்டத்தைக் கைவிட அடாவடியாக மறுத்த ஜெயலலிதா அரசின் செயலோடு முதல்வர் கலைஞரின் இந்த அறிவிப்பை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. துணை நகரத் திட்டம் கூடாது என்று ஜெயலலிதா விடுத்த அறிக்கை அரசியல் அநாகரிகத்தின் உச்சமாக இருந்தது வேதனையளிக்கிறது. அரசின் ஒரு திட்டத்தை எதிர்க்க எதிர்க்கட்சிகளுக்கு முழு உரிமை உண்டு . ஆனால் அதில் அரசியல் நாகரிகம் பேணப்பட வேண்டும். ஆனால் ஜெயலலிதாவின் அறிக்கையில் முதல்வர் கருணாநிதி குடும்பத் தினர் குறித்து அருவருக்கத்தக்க, அநாகரிகமான வார்த்தைகளை ஜெயலலிதா பயன்படுத்தியுள்ளார். அவரது வன்மத்தையும், வக்கிரத்தையுமே இந்த சட்டமன்றத்தில் இந்த அறிக்கையை முதல்வர் (கலைஞர்) படித்துக் காட்டியபோது, அ.தி.மு.க. வினரால் கூட சகித்துக் கொள்ள முடியவில்லை போலும். சட்டமன்றமும், அரசியல் அரங்கமும் நாகரிகமான விவாதம் நடைபெற வேண்டிய இடங்களேயன்றி ஆத்திரத்தையும் அவதூறையும் வெளிப்படுத்தும் இடங்கள் அல்ல. ஜெய லலிதாவோ, அவரது கட்சியினரோ மக்களின் தீர்ப்பிலிருந்து இன்னமும் பாடம் கற்றுத் திருந்த வில்லை என்பதையே அவர்களது வார்த்தைகளும் செயல்பாடுகளும் நிரூபிக்கின்றன”

என்று “தீக்கதிர்” எழுதியிருந்ததை இந்த நேரத்தில் எண்ணிப் பார்த்து மார்க்சிஸ்ட் தோழர்களுக்கு நினைவுபடுத்தாமல் இருக்க முடியவில்லை.

ஆனால் தற்போது இந்த ஆட்சியில் 2011ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட திருமழிசை துணைக்கோள் நகரம் என்ன ஆயிற்று? இரண்டாண்டுகள் முடிந்த பின்னரும் அடிக்கல் நாட்டியதாகவே தெரிய வில்லையே? இந்த அழகில் ஆறு மாதங்களுக்கு முன்பு அறிவித்த மதுரை துணைக்கோள் நகரத்திற்கு ஆறு மாதத்திற்குப் பிறகு நிர்வாக ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அ.தி.மு.க. அரசின் மற்ற பல திட்டங்களைப்

போலவே ஆமை வேகத்தில் நகரும் இந்தத் திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும்? திட்டத்தை வெளிக்கொணர ஒருமுறை அறிக்கை; நிர்வாக ஒப்புதலுக்கு ஒருமுறை அறிக்கை என்ப தெல்லாம் மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளா? மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களை மறந்து, அறிக்கைகள் மூலமே விளம்பரம் தேடிக் காலத்தைக் கழித்திடும் அதிசயம்தான் தொடர்ந்து அரங்கேறிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் ஆட்சி நடக்கிறதா? அல்லது வெறும் காட்சிதான் நடக்கிறதா? அதையாவது தெரிவித்துவிடலாமே?

அன்புள்ள,

மு.க.

23-10-2013

3820. போனஸ் பற்றி “ஜெயா” தந்த விளக்கம்!

உடன்பிறப்பே,

22-10-2013 தேதிய ஆளுங்கட்சியின் நாளேட்டிலும், அதன் ஆதரவு நாளேடுகளிலும் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் வெளிவந்துள்ள தலைப்புச் செய்தி : “தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட தாயின் அன்புப் பரிசு ரூ. 240 கோடி - பொதுத் துறை நிறுவன ஊழியர்களுக்கு 20 விழுக்காடு தீபாவளி போனஸ் - முதலமைச்சர் ஜெயலலிதா அறிவிப்பு” என்பதுதான்! இதைப் படித்தவுடன் சிரிப்புதான் வந்தது. அரசு அலுவலர்களுக்கு அம்மா அவர்கள் தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட அன்புப் பரிசாக 20 விழுக்காடு போனஸ் அறிவித்திருக்கிறார்களாம்! இந்தச் செய்தியைப் பார்த்தபோது, கடந்த காலத்தைப் பற்றிய நினைவுதான் வந்தது. அரசு அலுவலர்கள் பற்றியும், அவர்களுக்கு போனஸ் அளிப்பது பற்றியும் எப்படியெல்லாம் இதே ஜெயலலிதா விமர்சித்தார் என்று ஒருக்கணம் எண்ணிப்பார்த்தேன். அதைத் தவிர்த்திட இயலவில்லை.

போனஸ் பற்றி ஜெயலலிதா சட்டப்பேரவையில் 30-10-2002 அன்று உரையாற்றும்போது, “போனசைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசுகிறார்கள். போனஸ் என்பது என்ன? முதன் முதலாக போனஸ் என்பது எப்படி வந்தது? ஒரு நிறுவனம் நல்ல முறையில் இயங்கி லாபம் சம்பாதித்தால் அந்த லாபம் முழுவதுமே உரிமையாளர்களுக்குப் போவது நியாயம் அல்ல என்ற கருத்து இருந்தது. அந்த நிறுவனத்திற்கு அந்த லாபத்தை ஈட்டித் தருபவர்கள் யார்? அந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள். ஆகவே போனஸ் என்பது ஒரு நல்லெண்ணத்தின் அடையாள மாக அந்த நிறுவனத்தின் உரிமையாளர்கள், அவ்வளவு லாபத்தை ஈட்டித் தந்த ஊழியர்களுக்கு அந்த லாபத்தில் பங்கு தருவதுதான் போனஸ். ஆனால் அந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்கினாலும்

பரவாயில்லை; எங்களுக்கு போனஸ் தந்தே ஆக வேண்டுமென்று கேட்டால் அது எப்படி நியாயம் ஆகும்?" என்றெல்லாம் கடும் விமர்சனம் செய்தவர்தான் ஜெயலலிதா என்பதை மறந்துவிட முடியாது.

"அரசு அலுவலர்களும் அம்மையார் ஜெயலலிதாவும்" என்ற தலைப்பிலே அனைத்து விபரங்களையும் இணைத்து, ஒரு பெரிய புத்தகமே எழுதலாமே! இருந்தாலும் அவர் போனஸ் அறிவிப்பு செய்திருக்கின்ற இந்த நேரத்தில் ஒரு சிலவற்றை நினைவுபடுத்துகிறேன்.

தி.மு. கழக ஆட்சி 1989ஆம் ஆண்டு நடைபெற்றபோது வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களை மாதம் 750 ரூபாய் மதிப்பூதியத்தில் கழக அரசு அமர்த்தியது. ஆனால் 1991ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சர் ஆனதும் இந்த மக்கள் நலப் பணியாளர்களை யெல்லாம் டிஸ்மிஸ் செய்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார். ஆனால் 1996ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி மீண்டும் ஏற்பட்டதும், பதவியிழந்த மக்கள் நலப் பணியாளர்களுக்கெல்லாம் நான் மீண்டும் வேலை வாய்ப்பளித்து அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்தேன். ஆனால் 2011ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்றதும் அந்த மக்கள் நலப் பணியாளர்களையெல்லாம் இரக்கமேதுமின்றி மீண்டும் ஜெயலலிதா வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

அதைப்போல இளைஞர்களுக்கு மேலும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதற்காகப் பத்தாயிரம் இளைஞர்களுக்குச் சாலைப் பணியாளர்கள் வேலை அளித்தோம். 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சரானதும், 10 ஆயிரம் சாலைப் பணியாளர்களையும் கருணை சிறிதுமின்றிக் கல்நெஞ்சத்தோடு "டிஸ்மிஸ்" செய்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

பல ஆண்டுக் காலம் வேலை பார்த்து ஊதியம் பெற்று குடும்பம் நடத்திக் கொண்டிருந்தவர்களுக்குத் திடீரென வேலையில்லையென்றால் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வார்கள்? பலபேர் தற்கொலை செய்துகொண்டு மாண்டார்கள். பல பேர் திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் இருந்ததால் திருமணமும் நிறுத்தப்பட்டு, அவர்களை மணக்கவிருந்த

பெண்கள் நிர்க்கதிக்கு ஆளானார்கள். உதாரணமாக நாகை மாவட்டம், கீழையூர் அருகேயுள்ள வைரவன்கட்டளை "காமேஸ்வரம்" கிராமத்தைச் சேர்ந்த வீரப்பன் என்ற மக்கள் நலப் பணியாளர் 11-6-2001 அன்று விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றிய மக்கள் நலப்பணியாளர் சி. கந்தசாமியின் வேலை பறிபோன காரணத்தால் அவருடைய மனைவி பிரபா என்பவர்

11-6-2001 அன்று விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். 12-6-2001 அன்று நத்தம் ஒன்றிய மக்கள் நலப் பணியாளராகப் பணியாற்றி வந்த திலகர் என்பவரும் வேதனை தாங்காது தன் உயிரை மாய்த்துக் கொண்டார். இவர்களின் குடும்பத்திற்குத் தி.மு.கழகத்தின் சார்பில் தலா 25 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது. அருப்புக்கோட்டையைச் சேர்ந்த ராமமூர்த்தி பணி பறிபோனதும் சோகத்தில் உணவு உண்ணாமல் பட்டினி கிடந்தே மாண்டார். நாகை மாவட்டத்தில் தரங்கம்பாடியைச் சேர்ந்த இளங்கோவன் விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார். ராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் கபிலன் வேலை போன காரணத்தால் பட்டினி கிடந்து உயிர்துறந்தார். இப்படி ஜெயலலிதாவின் இரக்கமற்றத் தன்மையினால், சோக நிகழ்வுகள் தொடர்கதைகளாயின.

அரசு அலுவலர் வேலை நிறுத்தம் செய்தால் மூன்றாண்டு சிறைத் தண்டனையும் ஐந்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்று சர்வாதிகாரீதியில் ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. மேலும் அதே ஆணையில் போராட்ட நாட்களில் எந்தவிதமான விடுமுறையும் எடுக்கக் கூடாதென்றும், வேலைக்கு வராதவர்களின் பட்டியலை உடனடியாக அரசுக்கு அனுப்ப வேண்டும் என்றும், அந்த நாட்களுக்குச் சம்பளம் வழங்கப்படமாட்டாது என்றும் அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல; 2002 ஆம் ஆண்டு அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் "(எஸ்மா)" சட்டத்தின்கீழ், வேலை நிறுத்தம் செய்த அரசு ஊழியர்களின் தலைவர்களைக் கைது செய்ததோடு, தமிழ்நாடு அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு (டெஸ்மா) சட்டம் என்ற புதிய அவசரச் சட்டம் ஒன்றை அமல்படுத்திப் பணியாளர்களை வேலை நீக்கமும் (டிஸ்மிஸ்) செய்தார்கள்.

இந்த ஆட்சியின் டிஸ்மிஸ் பட்டியலைப் பார்த்துவிட்டு தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணிக்கு அருகே தலைமை ஆசிரியை ரேணுகா பெரியராசன், அந்தியூரைச் சேர்ந்த குமாரசாமி, கொடுமுடியில் உதவி தலைமை ஆசிரியை சரோஜினி, தொடக்கக் கல்வி உதவி அதிகாரி அழகம்மாள், டெங்கனிக்கோட்டை செங்கோட்ராஜ், கல்லூரிக் கல்வி இயக்கக ஊழியர் சோலையப்பன், வில்லிவாக்கம் பச்சையப்பன், புள்ளம்பாடி அஞ்சுகம் என்று உயிரைப் பறிகொடுத்தவர்களின் பட்டியல் நீண்டது.

அரசு அலுவலர்களை டிஸ்மிஸ் செய்ததை ரத்து செய்யக் கோரியும், கைது செய்யப்பட்ட அரசு அலுவலர்களை விடுவிக்கக்கோரியும், சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் 6-7-2003 அன்று நீதிபதி வழங்கிய தீர்ப்பில்,

“இந்தப் பிரச்சினையில் அரசு நல்ல முடிவெடுக்க இரண்டு நாட்கள் அவகாசம் கொடுத்தேன். அரசு எந்த முடிவும் அறிவிக்கவில்லை. மேலும் இதில் காலதாமதப் படுத்தியது. அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் என்றுதான் நீதிமன்றம் கேட்டுக்கொண்டது. ஆனால் அரசு அதைக்கூட செய்யத் தவறிவிட்டது. அரசு அலுவலர்கள் தானாக முன்வந்து போராட்டத்தை வாபஸ் பெறுவதாகக் கூறியுள்ளனர். எனவே அதை ஏற்று இந்த உத்தரவு பிறப்பிக்கிறேன். அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது துரதிருஷ்டவசமானது. அரசு இதில் காலதாமதப்படுத்துவது மிகவும் வருத்தமளிக்கிறது. வேதனை அளிக்கிறது. நியாயமான விசாரணையே இல்லாமல் அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்வது தவறானது, சட்ட விரோதமானது. அனைத்து அரசு ஊழியர்களையும் விடுதலை செய்கிறேன். “எஸ்மா” சட்டம் பிரிவு 4, 5இன்கீழ்க் கைதான அனைவரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும். போலீஸ் டி.ஜி.பி. இதை உடனே அமுல்படுத்த வேண்டும். அரசு ஊழியர்களை சஸ்பெண்ட், டிஸ்மிஸ் செய்த அனைத்து உத்தரவுகளையும் நிறுத்திவைக்கிறேன். அனைவரும் உடனடியாக வேலைக்குப் போக வேண்டும். புதிய ஆட்களைப் பணியில் நியமிக்கக் கூடாது ” என்றே நீதிபதி தெரிவித்தார்.

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு அரசு வழக்கறிஞர் இந்த உத்தரவை இரண்டு நாளைக்கு நிறுத்திவைக்க வேண்டுமென்று

கோரியபோது, நீதிபதி "இதை ஏற்க முடியாது, நள்ளிரவில் எதையும் செய்யாதவர்களைத் தூக்கத்தில் தட்டியெழுப்பிக் கைது செய்துள்ளது போல இன்று நள்ளிரவே விடுதலை செய்யுங்கள்'' என்றார்.

உயர்நீதிமன்ற நீதிபதி இந்த அளவிற்கு அரசு அலுவலர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்ததும், ஜெயலலிதா அரசு அதனையேற்காமல், இரவோடு இரவாகச் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் இல்லத்திற்கே சென்று மேல்முறையீடு செய்து, அன்றையதினம் மாலையில் உயர்நீதிமன்ற நீதிபதி அளித்த தீர்ப்புக்கு இடைக்காலத் தடை பெற்றது. அந்த அளவிற்கு அரசு அலுவலர்களிடம் விரோதமும் வெறுப்பும் பாராட்டிய ஜெயலலிதாதான் தற்போது அவர்களிடம் அன்பு கொண்டவர்களைப் போலத் திசை திருப்பும் வேடமிட்டு, தீபாவளி போனஸ் அறிவித்திருக்கிறார்.

மேலும் ஒரு கொடுமையாக அலுவலர்களை டிஸ்மிஸ் செய்துவிட்டு, அதுகுறித்த வழக்கிலே என்ன தீர்ப்பு வருமோ என்று கூடக் காத்திருக்காமல் புதிதாக 15,500 பேரை வேலைக்கு எடுப்பதாகக் கூறி, அதிலே பெரிய குழப்பம். அரசுப் பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் "பப்ளிக் சர்வீஸ் கமிஷன்" மூலமாகத் தேர்வு நடத்தித்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி எதுவும் முறைப்படி செய்யாமல் ஆளுங் கட்சிக்காரர்களின் பரிந்துரைப்படி தேர்வுசெய்தார்கள். பிறகு 2004ஆம் ஆண்டு ஜூன் திங்களில் திடீரென்று அ.தி.மு.க. அரசு அந்த அலுவலர்களையெல்லாம் நீக்குவதாக ஒரு ஆணை பிறப்பித்தது. உதவிக்கரம் நீட்டியவர்களின் வாழ்வைப் பறித்துப் பாழாக்குவது நல்லதல்ல என்று நான் ஒரு அறிக்கை விடுத்தேன். பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்களும் அவர்களை பணியிலிருந்து அகற்றக் கூடாதென்று கண்டன அறிக்கைகளை வெளியிட்டார்கள். அதன் பிறகு ஜெயலலிதா அரசு பணிந்து அவர்களைப் பணியிலிருந்து நீக்குவதற்காகப் பிறப்பித்த உத்தரவைத் திரும்பப் பெற்றது.

வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட 300க்கும் மேற்பட்ட அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் அங்கீகாரத்தை எல்லாம் 12-8-2003 அன்று அ.தி.மு.க.அரசு ரத்து செய்தது.

24-7-2001 அன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, "அரசுக்குக் கிடைக்கின்ற மொத்த வரி வருவாயில் 70 சதவிகிதம் அரசு ஊழியர்களின் ஊதியத்திற்கும், 24 சதவிகிதம் பென்ஷனுக்கும் செலவிடப்படுகிறது. ஆக மொத்தம் 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கே போய்விடுகிறது. வெறும் 6 சதவிகிதம்தான் வளர்ச்சித் திட்டங்களுக்கு மிஞ்சுகிறது" என்று விதண்டாவாதமான வியாக்கியானம் செய்தவர்தான் இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா.

தி.மு. கழக ஆட்சியில் 2000-2001ஆம் ஆண்டுவரை அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு "பொங்கல் பரிசு" என ஒரு தொகை வழங்கப்பட்டு வந்தது. 2001-2002 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றபிறகு இந்தப் பரிசு நிறுத்தப்பட்டு விட்டது. போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் கழக ஆட்சியில் வழங்கப்பட்ட 20 சதவிகித போனசை வழங்கிட, 2001இல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு மறுத்துவிட்டது. 8.33 சதவிகித குறைந்தபட்ச போனஸ் மட்டுமே வழங்க முடியுமென்று அறிவித்தது. பல முறை பேச்சுவார்த்தை நடத்தியும் அரசு ஒத்து வராததால், அனைத்துச் சங்கங்களையும் சேர்ந்த போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பேருந்துகள் ஓடாததால், தமிழகமே ஸ்தம்பித்தது.

2006ஆம் ஆண்டு மீண்டும் கழக அரசு அமைந்தவுடன், அ.தி.மு.க. ஆட்சி நிறுத்திய இச்சலுகையினை மீண்டும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைஏற்று, அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும்வண்ணம் மிகை ஊதியம், சிறப்பு மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு ஆகியன மீண்டும் வழங்கப்படும் என்று 28-12-2006 அன்று அரசின் சார்பில் நான் அறிவித்தேன். அதன் காரணமாகத் தமிழக அரசுக்கு அப்போதே 248 கோடியே 68 இலட்ச ரூபாய் செலவாகும் என்று அறிவிக்கப்பட்டது.

அதுபோலவே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு ஆகியவற்றில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த செயல்திறன் ஊக்கத்தொகை, முந்தைய அ.தி.மு.க.

ஆட்சியில் 2002 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டுவரை ஐந்தாண்டுகளிலும் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டிருந்தது.

2006இல் கழக ஆட்சி மலர்ந்த பிறகு தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு அதனை மீண்டும் வழங்குவதென்று முடிவுசெய்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்குச் செயல்திறன் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு, தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தனர். அந்த ஆணையின் காரணமாகப் போக்குவரத்துத் துறையில் பணியாற்றிய ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 89 பணியாளர்களுக்கு மொத்தம் 7 கோடியே 70 ஆயிரம் ரூபாய் செயல்திறன் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

இந்த ஊக்கத்தொகை போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு மட்டுமல்லாமல், தமிழ்நாடு மின்சாரவாரிய ஊழியர்களுக்கும், ஏனைய பொதுத்துறை நிறுவன ஊழியர்களான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள், அரசு இரப்பர் கார்பரேஷன், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஆகிய வற்றின் பணியாளர்கள், கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள் போன்றவர்களுக்கும் வழங்கப்பட்டது. அதைப்போலவே "டாஸ்மாக்" நிறுவனத்தின்கீழ்ப் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள், தற்காலிகப் பணியாளர்கள், "சி" மற்றும் "டி" பிரிவுகளைச் சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் தி.மு. கழக அரசு 2006இல் பொறுப்பேற்ற பிறகு, 8.33 சதவீதம் போனஸ் மற்றும் 11.67 சதவீதம் கருணைத் தொகை சேர்த்து மொத்தம் 20 சதவீதம் போனஸாக வழங்கிட ஆணையிடப்பட்டது.

எனவே தி.மு. கழக ஆட்சியில் எந்த அளவிற்குத் தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டதோ, அதே அளவிற்குத்தான் தற்போதும் 20 சதவிகிதம் என்ற அளவிற்கு இந்த ஆட்சியில் போனஸ் அறிவிக்கப் பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு கழக ஆட்சியில் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும், மற்ற துறைகளின் தொழிலாளர்களுக்கும், 18 சதவிகித போனசும், 1997 ஆம் ஆண்டு 19 சதவிகித போனசும்,

1998, 1999, 2000ஆம் ஆண்டுகளில் 20 சதவிகித போனசும் வழங்கப்பட்டது. அப்போது அ.தி.மு.க. சார்பில் 20 சதவிகித போனஸ் போதாதென்றும்,

25 சதவிகித போனஸ் வழங்க வேண்டுமென்றும் கோரி வேலை நிறுத்தம் செய்தனர். ஆனால் தற்போது அவர்களுடைய ஆட்சியில் கழக ஆட்சியில் வழங்கப்பட்ட 20 சதவிகித போனசைத்தான் வழங்குவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பினைக் கூட, உழைக்கும் வர்க்கத்தை மதித்திடும் வகையில் முக்கியமான தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு அறிவிக்காமல்; "அனைத்துப் புகழும் அம்மாவுக்கே" என்பதைப் போலத் தன்னிச்சையாக அறிவித்திருக்கிறார்கள். தாங்கள் ஆட்சியிலே இல்லாதபோது ஒன்றைப் பேசுவதும், ஆட்சிக்கு வந்துவிட்டால் முன்பு பேசியதை மறந்தும், மறைத்தும் வேறொன்றைச் செய்வதும்தான் இந்த ஆட்சியின் வழக்கமாக இருந்துவருகிறது. அதைத்தான் பொதுத் துறை நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு அறிவித்துள்ள போனஸ் பிரச்சினையிலும் பின்பற்றியிருக்கிறார்கள் என்பதே உண்மை.

அன்புள்ள,

மு.க.

24-10-2013

3821. அக்கறையின்மை, தொலைநோக்கற்ற பார்வை; யாருக்கு?

உடன்பிறப்பே,

25-10-2013 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் பொதுவுடைமைக் கட்சிகள் எழுப்பிய தொழில்களுக்கும், விவசாயிகளுக்கும் தடையில்லா மின்சாரம் வழங்கக் கோரும் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு; முதலமைச்சர் ஜெயலலிதா நீண்ட விளக்கம் அளித்துள்ளார். அந்தந்தத் துறையின் அமைச்சர்கள்தானே சிறப்புக் கவன ஈர்ப்புத் திர்மானத்திற்குப் பதிலளிக்க வேண்டும்; மின் துறை அமைச்சர் இல்லையா ? என்று யாரும் கேட்கக் கூடாது. ஏனென்றால் அந்தத் துறையின் அமைச்சருக்கு வேறு முக்கியமான பணிகள் இருப்பதால், அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு என்ற முறையில் முதலமைச்சர் பதிலளித்திருக்கிறார்

முதலமைச்சர் மின் தட்டுப்பாடு குறித்து நீண்ட விளக்கம் அளித்தது பற்றி நமக்குப் பிரச்சினை இல்லை ஆனால் விளக்கம் அளிக்க முன்வந்தவர் தேவையில்லாமல், "முந்தைய மைனாரிட்டி திமுக. கட்சியின் அக்கறையின்மை, தொலைநோக்கற்ற பார்வை, நிர்வாகத் திறமையின்மை காரணமாக ஒளியாக இருந்த தமிழகம் இருளில் மூழ்கியது" என்று நம்மைக் குற்றம் சாட்டிய காரணத்தால்தான் இதற்கு விளக்கமளிக்க வேண்டியவனாக நான் இருக்கிறேன்.

குறிப்பாக முதலமைச்சரின் நீண்ட உரையில், இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழகம் மின் மிகை மாநிலமாக மாறும்" என்று தெரிவித்திருக்கிறார். ஜெயலலிதா மூன்றாவது முறையாகப் பதவிப் பொறுப்பேற்ற ஒரு சில மாதங்களில், 4-8-2011 இன்று பேரவையில் வைத்த நிதிநிலை அறிக்கையில் மின்சக்தியின் உற்பத்திக்கேற்ப மின்வெட்டு படிப்படியாகத் தளர்த்தப்பட்டு,

2012 ஆகஸ்டு மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் முற்றிலுமாக நீக்கப்படும் என்று சொன்னார்கள். 28-3-2012 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப் போவையில், படிப்படியாக மின் வெட்டு நேரம் குறைக்கப்படும் என்று அறிவித்தது, ஜூன் மதத்திலிருந்து படிப்படியாகக் குறைக்கப்படு மென்றுதான் அறிவித்திருக்கிறோம். இப்போது மாச் மாதத்தில்தான் இருக்கிறோம். இன்னும் 3மாத காலம் பொறுத்திருங்கள்" என்று கூறினார். அந்தத் துறையின் அமைச்சர் "இந்தியா டுடே" இதழுக்கு பிப்ரவரி 2012இல் அளித்த பேட்டியில் 2012 மார்ச் முதல் மே மாதம் வரையில் மட்டும்தான் தமிழகம் மின் பற்றாக்குறையை அனுபவிக்கும். இந்த மூன்று மாதங்களை மட்டும் பொறுத்துக் கொண்டால் தமிழகத்தில் மின் பற்றாக்குறையே இருக்காது" என்று சொன்னார். 128-11-2012 தேதிய ஜூ.வி. இதழுக்கு இதே அமைச்சர் அளித்த பேட்டியில் "2013 ஜூனில் மின் வெட்டு சரியாகி விடும் என்ற நம்பிக்கை உள்ளது" என்றார். முதலமைச்சர் தற்போது இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக ஆகிவிடும் என்று சொல்லியிருக்கிறார்.

"ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே வரும் மின் தேவைக்கேற்ப புதிய மின் திட்டங்களை உரிய காலத்தில் தி.மு.க. அரசு தீட்டவில்லை" என்று ஒரு குற்றச்சாட்டினை முதலமைச்சர் கூறியிருக்கிறார். 2011இல் தி.மு.கழகம் ஆட்சியை விட்டு இறங்கிய போது, தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த மின் உற்பத்தித் திட்டங்கள்: 1. வட சென்னை (நிலை 2); 2 மேட்டூர்; 3. தூத்துக்குடி; 4. வல்லூர்: 5. பவானி கட்டளை; உடன்குடி; (இதனை Statistical Hand Book of Tamil Nadu 2011 என்ற புத்தகத்தில் பக்கம் 151இல் காணலாம்).

முதலமைச்சர் ஜெயலலிதா 2-11-2012 அன்று சட்டமன்றத்தில் விரைவில் மின் உற்பத்தி துவக்கப்படவுள்ள திட்டங்கள் என்று சிலவற்றைக் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்டதில், மேட்டூர் (600 மெகாவாட்) 25-6-2008 அன்றும்; வல்லூர் ஆம் அலகு (500 மெகாவாட்) 13-8-2007 அன்றும்; வல்லூர் 2ஆம் அலகு (500 மெகாவாட்) 13-8-2007 அன்றும்; வல்லூர் 3ஆம் அலகு (500 மெகாவாட்) 13-8-2007 அன்றும்; வடசென்னை (ஆம் அலகு) (600 மெகாவாட்) 18-2-2008 அன்றும், வடசென்னை (2ஆம் அலகு) (600 மெகாவாட்) 18-2-2008 அன்றும்; தூத்துக்குடி (இரண்டு அலகுகள் - 1000

மெகாவாட்) 28-1-2009 அன்றும், ஆக இந்த ஏழு திட்டங்களுமே தி.மு. கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டவைதான்.

ஜெயலலிதா நேற்று படித்த அறிக்கையில், தி.மு.க ஆட்சியில் புதிய மின் உற்பத்தித் திட்டங்களை உரிய காலத்தில் தீட்டவில்லை என்று கூறிவிட்டு, அவரே "600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டப் பணிகளைப் பொறுத்தவரையில், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலமான ஐந்து ஆண்டு காலத்தில் 55 விழுக்காடு பணிகளே முடிக்கப்பட்டிருந்தது" என்று கூறியிருக்கிறார். இதிலிருந்தே மேட்டூர் திட்டம் கழக ஆட்சியில் 55 விழுக்காடு முடிக்கப்பட்டதை அவரே ஒப்புக் கொள்வதுதானே? ஆனால் தி.மு.க. ஐந்தாண்டு காலத்தில் 55 விழுக்காடு பணிகளே முடிக்கப்பட்டிருந்தது என்று ஒரு குற்றச்சாட்டைக் கூறுகிறார். இதுவாவது சரியா? மேட்டூர் திட்டம் பணி தொடங்கப்பட்டதே 25-6-2008 அன்றுதான்! அதற்குப் பிறகு தி.மு.கழக ஆட்சி ஐந்தாண்டுகள் இல்லை, மூன்றாண்டுகள்தான்; இந்த விவரத்தைக் கூட மறைத்துவிட்டு ஐந்தாண்டு காலத்தில் 55 சதவிகிதப் பணிகளே முடிக்கப்பட்டிருந்தன என்று ஒரு முதலமைச்சர் தமிழகச் சட்டப் பேரவையில் உண்மைக்கு மாறான தகவலைக் கூறியிருப்பது நியாயம்தானா? 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் பேரவையில் வைத்த மானியக் கோரிக்கையில், இந்த மேட்டூர் திட்டம் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் செயல்பாட்டிற்கு வரும் என்று தெரிவித்தார்கள். அவர்களே தெரிவித்தவாறு 2012இல் இத்திட்டம் செயல் பாட்டிற்கு வராமல் மேலும் ஓராண்டு கால தாமதம் ஆனதற்கு எந்த ஆட்சி காரணம்?

அதைப்போலவேதான் வடசென்னை அனல் மின் நிலையத் திட்டங்கள் பற்றியும் ஜெயலலிதா குறிப்பிட்டிருக்கிறார். அந்தத் திட்டம் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டதை அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் இந்தத் திட்டங்களையெல்லாம் அவருடைய ஆட்சியில் முடுக்கி விடப்பட்டதன் காரணமாகத்தான் மின்சாரம் இப்போது கிடைக்கிறது என்றும் சொல்லியிருக் கிறார். வடசென்னை 2012ஆம் ஆண்டு ஜனவரியிலேயே மின் உற்பத்தி தொடங்குமென்று 2011ஆம் ஆண்டு பேரவையில் தெரிவித்து விட்டு, தற்போது தான் அங்கே மின் உற்பத்தி தொடங்குகிறது என்றால் இந்தத் தாமதத்திற்குயார் காரணம்? எந்த ஆட்சி காரணம்? இந்தத் திட்டங்களின் மின் உற்பத்திக்கு ஜெயலலிதாதான் காரணம் என்றால், இந்தத் திட்டங்களுக்காக

அவருடைய ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதைக் கூறுவாரா?

கழக ஆட்சியில் இந்தத் திட்டங்களைத் தொடங்காமல் இருந்திருந்தால், இப்போது இந்த மின்சாரமாவது கிடைத்திருக்குமா? கழக ஆட்சியில் தொடங்கப்பட்டதால்தானே இவரால் அந்தத் திட்டத்தை முடிக்க முடிந்திருக்கிறது. திட்டத்தை அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து நடத்தாமல் இருந்திருந்தால் மின்சாரம் கிடைத்திருக்குமா என்று ஜெயலலிதா கேட்கலாம். அப்படி இவர்கள் அந்தத் திட்டங்களைத் தொடராமல் இருந்திருந்தால், தி.மு.க. போன்ற எதிர்க்கட்சிகள் அது பற்றிக் கேள்வி கேட்காமல் இருந்திருக்குமா? எனவே தற்போது தமிழகத்திற்குக் கூடுதலாகக் கிடைக்கும் மின்சாரம் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களினால்தான் என்பதை ஜெயலலிதா மறைக்க முயற்சித்தாலும் தமிழ்நாட்டு மக்கள் நன்றாகவே அதனை அறிவார்கள்.

“எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வடசென்னை வல்லூரில் அமைந்துள்ள 3 ஒ 500 மெகாவாட் திறன் கொண்ட திட்டப் பணிகள் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆமை வேகத்தில் சென்று கொண்டிருந்தன. இந்தப் பணிகளை நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, துரிதப்படுத்தியதன் காரணமாகத் தற்போது இரண்டு அலகுகள் வணிக ரீதியாக மின் உற்பத்தியை முறையே 29-11-2012 அன்றும், 25-8-2013 அன்றும் துவங்கியுள்ளன” என்று ஜெயலலிதா நேற்று பேரவையில் சொல்லியிருக்கிறார். வல்லூர் மின் திட்டப் பணிகள் துவக்கப்பட்ட நாள் ஜெயலலிதா ஆட்சியிலே அல்ல. 13-8-2007 அன்று கழக ஆட்சியிலேதான் மத்திய மின் துறை அமைச்சராக இருந்த திரு. ஷிண்டே அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் தொடங்கிய போதே தோராயமாக மின் உற்பத்தி துவக்கம் முதல் அலகில் டிசம்பர் 202 என்றும், இரண்டாவது அலகில் மார்ச் 2013 என்றும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் தி.மு. கழக ஆட்சியில் இத்திட்டம் ஆமை வேகத்தில் நடைபெற்றதாக ஜெயலலிதா கூறுகிறார். மற்ற திட்டங்கள் எல்லாம் கழக ஆட்சியில் இத்தனை சதவிகிதம் நடந்ததாகக் கூறிய ஜெயலலிதா. இதற்கு மட்டும் ஏன் எத்தனை சதவிகிதப் பணிகள் நடைபெற்றன என்று கூறவில்லை? மேலும் அந்தத் திட்டத்தின் மூலமாக மின் உற்பத்தி 29-11-2012 அன்றே தொடங்கிவிட்டது

என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து கழக ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிதான் இதற்குக் காரணம் என்பதை யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

"மேற்கண்ட புதிய அனல் மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளதால் தற்போது கூடுதலாக 1700 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைத்து வருகிறது" என்று ஜெயலலிதா நேற்று பேசும்போது தெரிவித்திருக்கிறார். இந்த 1700 மெகாவாட் மின்சாரம் முழுவதும் தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களின் மூலமாகக் கிடைத்திருப்பதுதான். இதனை யாராவது மறுக்க முடியுமா? எனவே,

கழக ஆட்சியில் மின் திட்டங்களைத் தொடங்க வில்லை என்று முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் பேசியிருப்பது உண்மைக்கு மாறான அப்பட்டமான பொய்தானே?

"தமிழ்நாடு மின்சார வாரியமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் இணைந்து தூத்துக்குடியில் அமைத்து வரும் 2 ஒ 500 மெகாவாட் அனல் மின் திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன" என்று ஜெயலலிதா நேற்று கூறியிருக்கிறார். தூத்துக்குடியில் நடைபெறும் இந்தத் திட்டத்தின் பணிகள் துவக்கப்பட்ட நாள் 28-1-2009. அதுவும் தி.மு. கழக ஆட்சியிலேதான். அதி.மு.க. ஆட்சியிலே மின்சாரத்தைப் பெற எதுவுமே செய்யவில்லையா என்று யாராவது கேட்பீர்களேயானால், நான் உண்மையை மறைக்க விரும்பவில்லை. செய்திருக்கிறார்கள். என்னவென்றால், பிற மாநிலங்களிலே இருந்து 500 மெகாவாட் மின்சாரத்தை இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் வாங்குவதற்கு ஏற்பாடு (?) செய்து, அந்த மின்சாரம் பெறப்பட்டு வருகிறது. மேலும் நீண்ட கால அடிப்படையில் கூடுதல் மின்சாரத்தை இவ்வாறு பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்தை எடுத்து வர, தக்க மின் வழித் தடங்கள் உண்டா என்றால், தற்போதுதான் அதற்கான மின் வழித் தடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும், அது 2014 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டிற்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். மின்சாரத்தை வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வருவதற்கு வழிவகை இல்லை என்று 2012-2013 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே இவர்களே தெரிவித்துவிட்டு, இவர்களே இந்த அளவிற்கு வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை

வாங்குவதற்கு எப்படி முன் வந்தார்கள்? எப்படியோ, அது தற்போதைய பற்றாக்குறையை நீக்க உதவாது.

ஜெயலலிதா நேற்று பேசும்போது, 2001-2006இல் அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக இருந்ததாகச் சொல்லியிருக்கிறார். அதற்குக் காரணம் 2001ஆம் ஆண்டுக்கு முன்பு நடைபெற்ற தி.மு. கழக ஆட்சியில் மின் உற்பத்திக்காகப் போடப்பட்ட திட்டங்கள்தானே? தற்போது ஏற்பட்டுள்ள மின் தட்டுப்பாட்டிற்குக் காரணம், ஏற்கனவே இருந்த கழக ஆட்சியில் மின் உற்பத்திக்கான திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்று கூறுகின்ற ஜெயலலிதா, மின் மிகை மாநிலமாக தமிழகம் இருந்தது என்பதற்கு மட்டும், அதற்கு முந்தைய கழக ஆட்சி அல்லவா காரணம்? மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு நிர்வாகத் திறமை அப்போது இல்லை என்கிறார். தற்போது நிர்வாகத் திறமை அ.தி.மு.க. ஆட்சியினரிடம் இல்லாத காரணத்தால் கடந்த மூன்றாண்டுகளாக மின் தட்டுப்பாடு நிறைந்த மாநிலமாக, புதிதாக எந்தத் திட்டங்களையும் நிறைவேற்றாத மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

2008ஆம் ஆண்டிலேயே நீண்ட கால அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய தி.மு. கழக அரசு தவறிவிட்டது என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். 2011ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நிர்வாகத் திறமையற்ற ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அப்போது மின் தட்டுப்பாடு ஏற்படும் என்று 2008ஆம் ஆண்டிலேயே தெரிந்திருந்தால் அப்போதே நீண்ட கால அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருப்போம்எதற்கெடுத்தாலும் ஜெயலலிதா சொல்கின்ற ஒரு வார்த்தை, நிர்வாகத்திறமை இல்லை என்பதாகும். கடந்தகால தி.மு.க. ஆட்சியில் நிதித்துறைச் செயலாளராக இருந்து ஒவ்வொரு கூட்டத்திலும் ஆலோசனை கூறியவர்தான் தற்போது மின்வாரியத் தலைவராக இருக்கிறார். அப்போது நிதித்துறைச் செயலாளராக இருந்தவர்தான் தற்போதும் நிதித்துறைச் செயலாளராக இருக்கிறார். அப்படிப்பட்ட மூத்த அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றுத்தான் அப்போதும் ஆட்சி நடைபெற்றது, இப்போதும் ஆட்சி நடைபெறுகிறது. கழக ஆட்சியில் இந்த அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றுத்தான் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதே தவிர, எடுத்தேன், கவிழ்த்தேன்

என்று ஜெயலலிதா பாணியில் இப்போது போலக் கழக ஆட்சியில் நடைபெற்றதில்லை என்பதை அதிகாரிகளே நன்கறிவார்கள்.

தி.மு. கழக ஆட்சியில் மின் உற்பத்திக்கான திட்டங்கள் தொடங்கப்பட்டது பற்றி ஜெயலலிதா ஒப்புக்கொண்டிருப்பதை ஆதாரமாகக் காட்டி விளக்கியிருக்கிறேன். தற்போது நான் கேட்கிறேன். அ.தி.மு.க. ஆட்சி 2011இல் தொடங்கி இரண்டரை ஆண்டுகளாகிறதே, இதுவரை எத்தனை மின் உற்பத்தித் திட்டங் களுக்குப் பணி தொடங்கப்பட்டுள்ளது?

2011-2012ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பில், வடசென்னை நிலை 3, வட சென்னை நிலை 4, உடன்குடி, எண்ணூர் இணைப்பு, குந்தா நீரேற்று புனல் மின் நிலையத் திட்டங்கள் 28,800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2012ஆம் ஆண்டு பணி தொடங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தீர்களே? இதில் ஏதாவது ஒரு திட்டத்திற்குப் பணி தொடங்கப்பட்டுள்ளதா?

இதையன்னியில் அதே கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 12இல், உடன்குடி விரிவாக்கம், உப்பூர் அனல் மின்நிலையம், எண்ணூர் அனல் மின்நிலையம் - மாற்று, தூத்துக்குடி அனல் மின்நிலையம் - நிலை 4 ஆகிய 8000 மெகாவாட் உற்பத்திக்கான திட்டங்களை 22,800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்போவதாக அறிவித்திருந்தார்களே, இதில் ஏதாவது ஒரு திட்டமாவது இந்த இரண்டரை ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்திருக்கிறதா? சொல்லத் தயாரா?

முதலமைச்சர் இந்தத் திட்டங்களைப் பற்றி நேற்றையதினம் கூறும்போது, ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வில் உள்ளன, விரைவில் இத்திட்டம் அமைப்பதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுப் பணிகள் துவங்கும் என்றுதான் சொல்லியிருக்கிறாரே தவிர, எந்தத் திட்டமும் தொடங்கப்பட்டதாகக் கூறவே இல்லை. என்ன காரணம்? திட்டங்கள் அறிவிக்கப்பட்டது 2011ஆம் ஆண்டு. 2013ஆம் ஆண்டு முடிவில் ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வில் உள்ளன என்றால், இதுதான் இந்த அரசின் செயல்பாடா?

டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு 15-6-2013 முதல் தினசரி 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்று ஜெயலலிதா நேற்று பேசியிருக்கிறார். டெல்டா

மாவட்ட விவசாயிகளும், பொதுவுடைமைக் கட்சியினரும் இதனை ஒப்புக்கொண்டால் நமக்கு மகிழ்ச்சிதான்.

ஜெயலலிதா அடுத்து தன் உரையில், தி.மு.க. ஆட்சியில் மக்களை ஏமாற்றிக்கொண்டே இருந்ததாகவும், மின்வெட்டு என்று அறிவிக்காமலேயே மின்வெட்டு இருந்தது என்றும், ஆனால் தற்போது மின்வெட்டே இல்லாமல் மின்சாரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்றும் கூறியிருக்கிறார். தமிழ்நாட்டு மக்கள் அனுபவப்பூர்வமாக மின் தட்டுப்பாட்டை அறிவார்கள். ஒரு சில மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு எந்த அளவிற்கு மின் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டது, கோவை, திருப்பூர் போன்ற மாவட்டங்களில் சிறு தொழில் நிறுவனங்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டன என்பதையெல்லாம் அப்படியே முழுப் பூசனிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பதைப் போல மறைப்பதற்கு ஜெயலலிதா எண்ணுகிறார்.

“2001 முதல் 2006 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில் கூடுதல் மின் நிறுவுத்திறன் ஏற்படுத்தப்பட்டது” என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். 2001-2006ஆம் ஆண்டுகளில் மின் உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் 700 கோடிதான். ஆனால் 2006-2011ஆம் ஆண்டுகளில் மின் உற்பத்திக்காக தி.மு. கழக ஆட்சியில் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு தெரியுமா? 11,700 கோடி ரூபாய்.

“சென்ற சட்டமன்றத் தொடரில் நீலகிரி மாவட்டத்தில் 7000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2000 மெகாவாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின்திட்டம் உருவாக்கப்படும் என நான் அறிவித்திருந்தேன். இதற்கான ஆய்வுப் பணிகள் 22-8-2013 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன” என்று ஜெயலலிதா நேற்றுப் பேசியிருக்கிறார். எப்போது தெரியுமா? 25-4-2013 அன்று 110வது விதியின்கீழ் ஜெயலலிதா படித்த அறிக்கையிலே இதை தெரிவித்தார். ஆறு மாதங்கள் முடிந்த பிறகு, ஆய்வுப் பணி தொடங்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர் அவையில் தெரிவித்திருக்கிறார். 7000 கோடி ரூபாய் மதிப்பீடு என்று சொன்னீர்களே, இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? யாரை ஏமாற்ற இந்தத் திட்ட அறிவிப்புகள்?

5000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3572 கோடி ரூபாய் ஜப்பானிய நிதி உதவியுடன் ஒரு திட்டத்தை அறிவித்ததாக முதலமைச்சர் நேற்றுப் பேசியிருக்கிறார். இந்தத் திட்டத்தையும் ஜெயலலிதா எப்போது அறிவித்தார் என்று நான் கூறுகிறேன். 25-4-2013 அன்று ஜெயலலிதா படித்த 110வது விதியின் கீழான அறிக்கையிலேதான் இதைக் குறிப்பிட்டிருந்தார். அறிவித்து ஆறு மாதங்களுக்குப் பிறகு நேற்றையதினம் இதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளதாகப் பேரவையில் அறிவித்திருக்கிறார் என்றால் எவ்வளவு வேகமாக அ.தி.மு.க. ஆட்சி செயல்படுகிறது என்பதை நான் விளக்க வேண்டுமா?

அடுத்து, மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை மையமாகக் கொண்டு மின் உற்பத்தியைப் பெருக்கிட வேண்டுமென்ற நோக்கத்தில் "சூரிய எரிசக்திக் கொள்கை 2012"ஐ தான் வெளியிட்டதாகவும் அதன்படி மூன்றாண்டுகளில் சூரிய சக்தி மூலம் 3000 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படும் என்றும் ஜெயலலிதா கூறியிருந்தார். ஆனால் இதிலும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு முடிவெடுக்காத நிலைமைதான் உள்ளது.

இவ்வளவு நீளமாக மின் உற்பத்திபற்றிப் பேரவையில் தெரிவித்த முதல் அமைச்சர், காற்றாலை மின் உற்பத்தி பற்றி வாயே திறக்கவில்லை. 2011ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் 10000 மெகாவாட் காற்றாலை மின்சாரம் தனியார்களால் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சொன்னார்களே, தற்போது காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை வாங்க மறுப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா இல்லையா? தற்சமயம் மின்தேவை அதிகம் இருப்பதால், காற்றாலை மூலம் அதிக அளவு தனியாரிடம் வாங்கினால், மின்வெட்டு தாராளமாகக் குறையும். குறைந்த விலையில் கிடைக்கும் காற்றாலை மின்சாரத்தை வாங்க முன்வராமல், அதிக விலை கொடுத்து வேறு மாநிலங்களிலிருந்து அ.தி.மு.க. அரசு மின்சாரத்தை வாங்க முயற்சிக்கிறது என்ற தகவல் சரியா? தவறா?

அன்புள்ள,

மு.க.

27-10-2013

3822. இசைப்பிரியாவின் மறைவை எண்ணியாவது இந்தியா கண்ணீர் சிந்துமா?

உடன்பிறப்பே,

இசைப்பிரியா!

பெயரே அழகு! அவள் முகமோ, குழந்தை முகம்! கல்லூரி சென்று வரும் குழந்தை என்று கூடச் சொல்லலாம். 27 வயதே நிரம்பியவள்! அவர் உலகத்தில் பிறந்ததற்கு, செய்த பாவம் விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவில் அவளும் ஒருத்தியாக தன்னை இணைத்துக் கொண்டதுதான்!

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 12-வயது மகன், பாலச்சந்திரனைச் சுட்டுக் கொலை செய்தது உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கான சிறுவர்களையும், பெண்களையும், முதியோர்களையும் கொன்றழித்த சரித்திரம் காணாத கொடுமைகளுக்கு ராஜபக்சே சர்வதேசச் சட்டப்படி பொறுப்பேற்று, உலக நாடு களுக்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்;

பிரபாகரனின் மகனாகப் பிறந்த பச்சிளம் பாலகன், பாலச்சந்திரன் தன்னைக் கொலை செய்யப்போகிறார்கள் என்று புரிந்துகொள்ளக் கூட முடியாத பருவத்தில், அவன் மார்பிலே ஐந்து குண்டுகளைப் பாய்ச்சினார்களே, குலை நடுங்கும் அந்தக் கோரக் கொடுமைகளைக் கண்டோம்; கதறினோம்!

இலண்டனைத் தலைநகராகக் கொண்ட 'சேனல்-4' தொலைக்காட்சி நிறுவனம் எத்தனையோ ஆபத்துக்கிடையே படம் எடுத்து, தயாரித்த அந்தக் கொடுமையான காட்சிகள் தான் எத்தகையவை? பாலச்சந்திரன் கைக்கும் வாய்க்கும் இடையே ரொட்டித் துண்டுடன் இருந்ததையும், அடுத்த படத்தில் அவன் துப்பாக்கிக் குண்டுகளை நெஞ்சில் தாங்கிப் பிணமாகக் கிடந்ததையும் விளக்கிடும் காட்சி; தாயும் குழந்தையும் ஒன்றாகக்

கட்டிப் பிடித்துக் கொண்டு வீழ்ந்து கிடந்த காட்சி; அப்பாவிப் பெண்கள் ஆடைகள் நீக்கப்பட்டு, நிர்வாண நிலையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கும் காட்சி; ஆண்களை நிர்வாணமாக்கி, கண்களைக் கட்டி, கைகளைப் பின்னால் கட்டி, முதுகிலே சுட்டுக் கொல்கின்ற காட்சி; விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கர்னல் ரமேஷ் என்பவர் முகம் சிதைந்த நிலையில் கொல்லப்பட்டு பிணமாகக் கிடக்கின்ற காட்சி; அந்தக் கொடுமை களைக் கண்டோம்.

நேற்றையதினம், பெண்புலி "இசைப்பிரியா"வை - அவள் வயதையொத்த மற்ற பெண்கள் எல்லாம் எத்தனையோ கனவுகளில் மூழ்கித் திளைத் திருந்த நேரத்தில், "தமிழ் ஈழம்" எனும் தகத்தகாயக் கனவை நெஞ்சத்திலே தாங்கித் திரிந்த அந்தப் பெண் குயிலை, சிங்கள ராணுவம் சீரழித்து, படுகொலை செய்த காட்சியையும் காண வேண்டிய கொடுமைக்கு நாம் ஆளாக்கப்பட்டோம்.

இங்கிலாந்தின் சேனல் - 4 என்ற "டெலிவிஷன்" நிறுவனம்தான் இலங்கை ராணுவத்தின் இத்தகையப் போர்க்குற்ற நடவடிக்கைகள் குறித்து அவ்வப்போது இப்படிப்பட்ட நெஞ்சம் குலுங்குகின்ற வீடியோ காட்சிகளை வெளியிட்டு, சிங்களக் காடையர்களின் கொடுமைகளை உலகத்தின் கண்களுக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

இசைப்பிரியா போரின் போது கொல்லப்பட்டதாக ராஜபக்ஷே அரசு இதுவரை சொல்லி வந்த கதையை, ஏமாற்று வித்தையை வெளிப்படுத்து கின்ற வகையில் இசைப்பிரியா கொலை செய்யப் பட்ட காட்சிகள் இன்று ஆதாரத்தோடு வெளிவந்துள்ளன.

ஏற்கனவே பல தமிழ்ப் பெண்கள் சிங்கள ராணுவத்தினரால் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட காட்சிகளை வெளியிட்டுள்ள சேனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் தற்போது இசைப்பிரியா தொடர்பான காட்சிகளையும் படமாக்கி வெளியிட்டுள்ளது.

அந்தக் காட்சியில் வயல்வெளி போன்றதொரு பரந்த நிலப்பரப்பு வழியாக இசைப்பிரியா தப்பிச் செல்ல முயலும்போது, இலங்கை ராணுவ வீரர்கள் அவளைப் பிடித்து சித்திரவதை செய்திருக்கிறார்கள். ஈரமான தரையிலே அவளை உட்கார

வைக்கிறார்கள். அவளை நோக்கிச் செல்லும் ராணுவ வீரர்கள் ஒரு வெள்ளைத் துணியைக் கொடுத்து, அவளைப் போர்த்தி, அழைத்துச் செல்கின்ற காட்சியும் அதிலே இடம் பெற்றுள்ளது. அப்போது ராணுவ வீரன் ஒருவன், இசைப் பிரியாவைக் காட்டி, இவர்தான் பிரபாகரனின் மகள் என்று கூறுகிறான். இசைப்பிரியா அதனை மறுக்கும் குரல் அந்த வீடியோ காட்சியில் கேட்கிறது.

இசைப்பிரியா பாடுகின்ற காட்சி ஒன்றும் ஒளிபரப்பாகிறது. எப்போதும் பேனா, கேமராவுடன் சுறுசுறுப்பாகச் சுற்றி வரும் இசைப்பிரியா, தன்னுடைய தற்காப்புக்காக ஒரு துப்பாக்கியைக் கூட வைத்துக் கொள்ளமாட்டார் என்று அவருடைய நெருங்கிய தோழி ஒருத்தி ஏற்கனவே கூறியிருந்தார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில், தீர்மானம் விவாதத்திற்கு வந்தபோது, சேனல் - 4 நிறுவனம், பிரபாகரனின் மகன் செல்வன் பாலச்சந்திரன் பற்றிய வீடியோ காட்சிகளை ஒளிபரப்பியது. தற்போது இலங்கையிலேயே "காமன்வெல்த்" நாடுகளின் மாநாடு நடைபெறவிருக்கும் நேரத்தில், இசைப்பிரியா தொடர்பான காட்சிகளை, அதே "சேனல் - 4" நிறுவனம் உலகம் முழுவதிலும் வெளிக்கொணர்ந்து நம்மையெல்லாம் தேம்பிப் புலம்ப வைத்துள்ளது. இந்தக் கொடுமையான காட்சியை நம்முடைய நாட்டுப் பிரதமரும், வெளியுறவுத் துறை அமைச்சரும், ஏன் அந்தக் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ள வேண்டுமென்று இன்னமும் குரல் கொடுத்துக் கொண்டிருப்பவர்களும் கண்ட பிறகும், அந்த மாநாட்டிலே கலந்து கொள்ள வேண்டுமென்று எண்ணுகிறார்களா?

சிங்களவர்கள் ஆதிக்க வெறியோடு, ஈழத் தமிழர்களுக்குச் செய்திருக்கும் கொடுமைகள் ஒன்றா, இரண்டா?

திருவொற்றியூரைச் சேர்ந்த தனபதி ஒரு தொழிலாளி! அவருடன் சென்றவர்களும், அவரும் கதிர்காமம் சென்று திரும்பும் வழியில், அவர்களை ஏற்றி வந்த பேருந்து பழுது பட்டு விடுகிறது. அதைப் பழுது பார்க்க விட்டு விட்டு, தனபதியும் வேறு இருவரும் ஒரு முடியலங்காரக் கடைக்குச் செல்கிறார்கள். அப்போது சிங்கள வெறியர்கள், கையில் கோடரியுடன் கூட்டமாக வருகிறார்கள். தனபதியைக் கண்டதும், "ஆ! அதோ ஒரு தமிழன்!" என்று கூறிக் கொண்டே, மான் குட்டி மீது பாயும் ஓநாய்களைப் போலப்

பாய்கின்றனர்! இரத்தம் கொப்பளிக்கிறது. சிங்களர் கோடரிக்கு தமிழ்க் குருதியால் குளிப்பாட்டிக் குதூகலம் நடத்துகிறார்கள்.

இதோ மற்றொரு காட்சி! தமிழனுடைய உயிரைப் போக்கி, உடலைக் கூறுகூறாக்கி, அவனுடைய தசைகளைப்பாளம் பாளமாக்கி அவைகளைக் கூடையிலே போட்டு "இங்கே தமிழனுடைய மாமிசம் விற்பனைக்குக் கிடைக்கும்" என்று போர்டு எழுதி வைக்கப்பட்ட காட்சி!

இலங்கையில், கொழும்புச் சிறைச்சாலைக் குள்ளே சிங்கள வெறியர்கள் பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்து தமிழீழ விடுதலை வீரர்கள் 37 பேரைக் கொன்று குவித்த சம்பவம் மறக்கக் கூடியதா? தமிழீழ விடுதலை வீரர்களின் தானைத் தளபதியாக இருந்த தங்கதுரையும், தளகர்த்தர்களாம் குட்டிமணி என்ற யோகச்சந்திரனும், ஜெகனும் மற்றும் 34 தமிழீழ விடுதலைக் காளைகளும் சிங்களத்துச் சிறுநரிகளின் திடீர்த்தாக்கு தலால் சிறைச்சாலைக்குள்ளே கொலையுண்டிருக் கிறார்கள்.

அந்தக் குட்டிமணிக்கும், தங்கதுரைக்கும் நீதிமன்றத்தில் "உங்களுக்குத் தூக்கு தண்டனை வழங்கப்படுகிறது" என்று நீதிபதி தீர்ப்பளித்த நேரத்தில், தங்கதுரை, "நாங்கள் இறந்துபோய் விட்டால், எதிர்காலத்தில் உருவாக இருக்கின்ற தமிழ் ஈழத்தை உங்களுடைய சட்டதிட்டம் கட்டுப்படுத்த முடியாது" என்று சொன்னான். அதே நீதிமன்றத்தில்தான் குட்டிமணி, "நான் மரணத்திற்காகப் பயப்படுகின்ற கோழையில்லை; என்னைத் தூக்கு மாட்டிக் கொன்றுவிட்ட பிறகு, என்னுடைய கண்களை எடுத்து ஈழத்திலே இருக்கின்ற பார்வையற்ற ஓர் இளைஞனின் கண்ணுக்குப் பொருத்துங்கள். வருங்காலத்தில் மலர இருக்கின்ற சுதந்திர தமிழ் ஈழத்தை நான் காண முடியா விட்டாலும், அந்த இளைஞனுக்குப் பொருத்தப்படும் என் கண்ணால் பார்த்து மகிழ்வேன்" என்றான். அவர்களையெல்லாம் சிறைக் கொட்டடிக்குள் கொலை செய்து, "இந்தக் கண்களால்தானே ஈழத் தமிழகத்தைக் காணவிரும்பினாய்!" எனக் கேட்டு, அவர்களின் கண்களைப் பிடுங்கி, கீழே போட்டு மிதித்த கோரக் கொடுமை, இதே இலங்கையிலே தான் நடைபெற்றது. அந்த இலங்கையிலேதான் தற்போது காமன்வெல்த் மாநாடு நடத்தப் போகிறார்களாம்; அதிலே இந்தியா கலந்து கொள்ள

வேண்டுமென்று இங்கேயுள்ள தமிழர்கள் சிலரும் கூறுகிறார்கள். இரத்தம் கொதிக்காதா?

பாஸ்கரன் கதை மறந்து விட்டதா என்ன? பாஸ்கரன் யார்? அவன் ஒரு தமிழன்! போதாதா? அவனை ஒரு மரத்திலே கட்டி வைத்து விட்டு, நடுவீதியிலே அவனுடைய மனைவியை நிர்வாண மாக்கிக் கற்பழிக்கிறார்கள். அதோடு விட்டார்களா மாபாவிகள்? நிர்வாணமாக்கப்பட்ட அந்தப் பெண்ணை தலைகீழாக அருகருகே இருந்த இரண்டு பாக்கு மரங்களில், ஒரு காலை ஒரு பாக்கு மரத்திலும், இன்னொரு காலை அடுத்து இருந்த இன்னொரு பாக்கு மரத்திலும் கட்டி, பாக்கு மரத்தின் நுனிகளை ஒன்றாக இணைத்துக் கட்டி, பிறகு திடீரென பாக்கு மரத்தின் நுனிகளை வெட்டி விடுகிறார்கள். பாக்குமரம் இரண்டும் தனித்தனியாகப் பிரியும்போது, அந்தப் பெண்ணின் உடல் இரண்டாகப் பிளவுபட்டு கீழே விழுகிறது. அவ்வளவும், அவளுடைய கணவன் பாஸ்கரன் கண்ணுக்கு முன்பாக நடக்கிறது. பாஸ்கரன் செய்த குற்றம் என்ன? தமிழனாகப் பிறந்ததுதான்!

அவர்கள் வாழ்ந்த அந்த கொழும்பிலேதான் காமன்வெல்த் மாநாடு நடைபெறப் போகிறது. அதில் இந்தியா கலந்து கொண்டால், நாமெல்லாம் தமிழர்கள்தானா என்று சரித்திரம் சாபமிடாதா?

இப்படி இலங்கையின் பூர்வீகக் குடிமக்களாகிய தமிழ் மக்களை - இலங்கையை ஆண்ட இனத்தின் வம்சாவழிகளை - பொட்டுப் பூச்சி களாய், புன்மைத் தேரைகளாய், புழுதியில் புரளும் ஜீவராசிகளாய், ஆதரவேதுமற்ற அனாதைகளாய் எண்ணி, சிங்களப் பேரினவாதம் சித்திரவதை செய்து நசுக்கிச் சீரழித்து வருவதைக் கண்டு, தாய்த் தமிழகத்திலே உள்ள நாம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறோம். தமிழினப் படுகொலைக் குச் சாட்சிகளாய் இருக்கும் சர்வதேசச் சமூகத் திடம் நீதி கேட்கிறோம். ஈழத்தில் நடந்த இனத் துடைப்பு நடவடிக்கைக்கும், மனித உரிமை மீறல்களுக்கும், வரலாறு கண்டிராத போர்க் குற்றங்களுக்கும் சுதந்திரமானதும் - நம்பகமானதுமான - சர்வதேச விசாரணை வேண்டும்; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்; ஈழத் தமிழர்களுக்கு அவர்கள் விரும்பும் நியாயமான அரசியல் தீர்வை அவர்களே முடிவு செய்து கொள்ளும் வகையில், ஐ.நா. மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்;

என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இதற்காகச் சர்வதேசக் கருத்தை ஒன்று திரட்டிடும் முயற்சியைத் தொய்வின்றி முன்னெடுத்துச் செல்வோம்!

இசைப்பிரியா சின்னாபின்னப்படுத்தப்பட்ட சாட்சியங்களைக் கண்ணுற்ற பிறகாவது, அதற்குக் காரணமான சிங்கள அரசைக் கண்டித்திடும் வகையிலும், நெஞ்சை உலுக்கிடும் இந்த நிகழ்வுக்கு உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திடும் வகையிலும், இலங்கையிலே நடை பெறவுள்ள காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று இங்குள்ள தமிழர்களும், உலகெங்குமுள்ள தமிழர்களும் எதிர்பார்க்கிறார்கள்! என்ன செய்திடப் போகிறது இந்திய அரசு? இசைப்பிரியாவுக்கு நடைபெற்ற கொடூரத்திற்குப் பிறகும் இந்தியா இலங்கை செல்ல வேண்டுமா? இசைப்பிரியாவின் மறைவை எண்ணியாவது இந்தியா கண்ணீர் சிந்துமா?

அன்புள்ள,

மு.க.

4-11-2013

3823. "மோனோ" போய்; "மெட்ரோ" வந்தது!

உடன்பிறப்பே,

சென்னையில் "மெட்ரோ ரெயில்" சோதனை ஓட்டத்தை முதல் அமைச்சர் ஜெயலலிதா தொடங்கி வைத்திருக்கிறார். அனைத்து நாளேடுகளிலும் அதைப் பற்றி முதல் பக்கத்திலேயே பெரிதாக செய்திகள் வந்துள்ளன. 14,600 கோடி ரூபாய்க்கான திட்டம் அது. அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த முதலமைச்சர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அன்றாடம் தலைமைச் செயலகத்திலிருந்து "காணொலி காட்சிகள்" மூலமாக பல திட்டங்களைத் தொடங்கி வைப்பதைப் போல இல்லாமல், இந்தத் திட்டத்திற்கு நேரிலே வந்து தொடங்கி வைத்திருக்கிறார். அந்தத் திட்டத்தைப் பற்றி அதனைத் தொடங்கி வைக்கும் விழாவிலே பேசிட வேண்டுமென்றால், அந்தத் திட்டம் எந்த ஆட்சியில், எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் கூற வேண்டுமல்லவா? அதனால் அங்கே விழாப் பேருரை எதுவும் இல்லாமல் கொடி அசைத்து, மெட்ரோ ரெயிலின் சோதனையோட்டத்தைத் தொடங்கி வைத்துவிட்டார். அவர் அங்கே உரையாற்றா விட்டாலும், அந்தத் திட்டத்தைப் பற்றிய குறிப்பு தமிழக அரசினால் தரப்பட்டுள்ளது. அதிலே அந்தத் திட்டத்தைப் பற்றிய குறிப்புகள் விவரிக்கப்பட்ட போதிலும், கவனமாக அது எந்த ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது என்பதை மறைத்து விட்டார்கள். அந்தத் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், நான் முதலமைச்சராக இருந்தபோது, தொடங்கப்பட்ட திட்டம்.

சென்னையில் "மெட்ரோ ரெயில்" திட்டத்தைச் செயல்படுத்த தி.மு. கழகம் 2006 ஆம் ஆண்டு எனது தலைமையில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் தமிழக அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது. விரைவான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க, நவீன மற்றும் சிக்கனமான பொது போக்குவரத்து

அமைப்பாகவும், பெருகி வரும் போக்குவரத்துத் தேவைகளுக்கு ஒரு நீண்டகாலத் தீர்வாகவும் அமைந்த இத்திட்டம் குறித்து, ஒரு விரிவான திட்ட அறிக்கையினைத் தயாரிக்கக் கழக அரசு ஆணையிட்டதைத் தொடர்ந்து, இந்தப் பணி டெல்லி மெட்ரோ ரெயில் நிறுவனத்திடம் அளிக்கப்பட்டது. இத்திட்டம் என்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் "சிறப்பு முயற்சித்" திட்டமாக அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் இத்திட்டம் துணை முதலமைச்சராக இருந்த தம்பி ஸ்டாலின் பொறுப்பிற்கு மாற்றப்பட்டது. விரிவான திட்ட அறிக்கை 1-11-2007இல் கிடைக்கப் பெற்று 7-11-2007 அன்று தமிழக அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 'சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்' என்கிற சிறப்பு வகை பொதுத் துறை நிறுவனத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கி, இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 3-12-2007 அன்று பதிவு செய்தது.

இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 14,600 கோடி. திட்டச் செலவில் 59 சதவிகிதம் ஜப்பான் அரசின் அனைத்து நாடுகள் கூட்டுறவுக்கான அமைப்பின் நிதி உதவி மூலம் பெறப்படும். கடன் வழங்குவதற்கான ஒப்பந்தம் மத்திய அரசுக்கும் ஜப்பான் அரசுக்கும் இடையே 21-11-2008 அன்று டோக்கியோ நகரில் கையெழுத்தானது. மத்திய அரசு திட்டச் செலவில் 15 சதவீதத்தை பங்குத் தொகையாகவும், 5 சதவீதத்தைக் கடனாகவும் வழங்கும். மாநில அரசின் பங்கு 15 சதவிகிதம் மற்றும் 5.78 சதவிகித சார்நிலைக் கடனாகவும் வழங்கும். பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு, 28-1-2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மெட்ரோ ரெயில் திட்டம் 45.1 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2 வழித்தடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. வண்ணாரப்பேட்டை - சென்னை விமான நிலையம் இடையே 23.1 கிலோ மீட்டர் தூரத்திற்கு முதல் வழித்தடமும், சென்ட்ரல் - பரங்கிமலை இடையே 22 கிலோ மீட்டர் தொலைவிற்கு 2-வது வழித்தடமும் அமைக்கப்படுகிறது. மெட்ரோ ரெயிலானது 2 வழித் தடங்களிலும், செல்வதற்கு ஒன்றும், வருவதற்கு ஒன்றுமாக இரண்டு பாதைகள் நவீன முறையில் அமைக்கப்படுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இவ்வாறு முனைப்போடு முயற்சித்து தொடங்கப்பட்ட திட்டம்தான் "மெட்ரோ ரயில் " திட்டம். ஆனால் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் இதைப்பற்றி என்னவெல்லாம் பேசினார்?

2011ஆம் ஆண்டில், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அ.தி.மு.க. அரசு 3-6-2011 அன்று படித்த ஆளுநர் அறிக்கையிலேயே "சென்னை மாநகருக்கு தற்போதுள்ள போக்குவரத்து முறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட மோனோ ரெயில் திட்டத்தை அரசு செயல்படுத்தும். முதற்கட்டமாக 111 கிலோ மீட்டருக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக 300 கிலோ மீட்டர் வரை விரிவுபடுத்தப்படும். கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி போன்ற மாநகராட்சிகளிலும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க "மோனோ ரெயில்" திட்டம் செயல்படுத்த உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்" என்று அறிவித்தார்கள். அதற்குப்பிறகு 4-8-2011 அன்று படித்த நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், "மோனோ ரெயில்" திட்டத்தை விரைவில் தொடங்குவதற்குத் தேவையான நிதி ஆதாரம் இந்த ஆண்டிலேயே கண்டறியப்படும் என்றார். கண்டறிந்தார்களா? மீண்டும் 30-1-2012 அன்று ஆளுநர் உரையில் "மோனோ ரெயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் விரைவாக நடைபெற்று வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்" என்று சொன்னார்கள். அதன் பிறகு 26-3-2012 அன்று படித்த நிதிநிலை அறிக்கையில், மோனோ ரெயில் 4 வழித்தடங்களில் இயங்கும் என்றும், எந்தெந்த வழித்தடங்கள் என்றும் விரிவாகப் படித்தார்கள். அதைத்தான் மீண்டும் அந்தத் துறையின் அமைச்சர் ஏதோ புதிய அறிவிப்பு போலச் செய்தார். ஒப்பந்தப்புள்ளி கோரப் போவதாகச் சொல்லிக் கொண்டே வருகிறார்கள். ஆனால் ஏற்கனவே ஒரு முறை ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு அதிலே "நிபந்தனைகள்" சரியாக முடிவுக்கு வராத காரணத்தால், இடையிலே ஏற்பட்ட பிரச்சினையினால் வழங்கப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது! அதன் பிறகு 16-6-2012 தேதிய 'தினமணி'யில் 34 இடங்களில் மோனோ ரயில் நிலையங்கள் என்றும், அமைச்சர் தலைமையில் 2 மணி நேரத்திற்கு மேல் ஆலோசனை என்றும் செய்தி வந்தது. மொத்தத்தில் "மோனோ" ரெயில் திட்டமே, தி.மு. கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட

"மெட்ரோ" ரெயில் திட்டத்தினை ஏற்கக் கூடாது என்ற ஜெயலலிதாவின் வழக்கமான காழ்ப்புணர்ச்சி காரணமாக அறிவிக்கப்பட்ட போட்டித் திட்டம். கடந்த இரண்டரை ஆண்டுக் காலமாக இன்னமும் அந்தத் திட்டம் "ஒப்பந்தப் புள்ளிகளை"ப் பரிசீலிக்கும் நிலையிலேதான் உள்ளது. "மோனோ" ரெயில் திட்டத்தைவிட "மெட்ரோ ரெயில் திட்டம்தான் சிறந்தது என்று ஆதாரங்களோடு மத்திய அதிகாரி ஸ்ரீதரன் போன்றவர்கள், வல்லுநர்கள் எல்லாம் இரண்டு திட்டங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை அறிக்கையாக விடுத்தும்கூட ஜெயலலிதா அப்போது அதைக் கேட்கவில்லை.

சென்னையில் மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கத்தை இடையிலே அ.தி.மு.க. அரசு நிறுத்தி வைத்தது. அப்போதுதான் டெல்லி மெட்ரோ ரயில் கார்ப்பரேஷன் முதன்மை ஆலோசகரான திரு. இ.ஸ்ரீதரன் 11-4-2012 அன்று சென்னையில் அளித்த பேட்டியில், "சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தைக் கைவிட்டதன் மூலம் தமிழக அரசு மிக மோசமான தவறைச் செய்கிறது. மூன்று மாதங்களுக்கு முன்பு நான் இதுகுறித்து தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு எழுதிய கடிதத்திற்கு இதுவரை அரசிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கத்தைக் கைவிடும் தமிழக அரசின் முடிவு வருத்தம் அளிக்கிறது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மெட்ரோ ரயில் பணிகளை தொழில் ரீதியில் சிறப்பாகச் செய்து வருகிறது. விரிவாக்கத்தின் மதிப்பை அவர்கள் உணர்ந்துள்ளதால் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படவேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கம் நடைபெற வேண்டுமென்றால், அதுகுறித்த ஆய்வுகள் இப்போதே மேற்கொள்ளப்படவேண்டும். இந்த ஆய்வுப் பணி 18 மாதங்களை எடுத்துக் கொள்ளும். மத்திய அரசு, நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் மற்றும் தமிழக அரசு ஆகியவற்றின் அனுமதிகளைப் பெற மேலும் 18 மாதங்கள் ஆகும். இப்படி மூன்றாண்டுகளுக்கு மேலாகும். முதல்கட்டத்துக்கும், இரண்டாவது கட்டத்துக்கும் இடையில் இந்த அளவிற்கு இடைவெளி விழுவது நல்லதல்ல.

டெல்லி மெட்ரோ ரயில் முதல்கட்டத்தில் 65 கிலோமீட்டரும், இரண்டாவது கட்டத்தில் 124.63 கிலோமீட்டரும் செல்வதால் நல்ல வணிக முன் மாதிரியாக இருப்பதுடன் இதன்

அடிப்படையில் ஐந்து பெருநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டம் வடிவமைக்கப்படுகிறது. ஆனால், சென்னையில் தற்போதைய திட்டப்படி 45 கி.மீ. வரைதான் செல்லும். பல முக்கியமான பகுதிகளை மெட்ரோ ரயில் திட்டமுறையில் இணைக்காவிட்டால் இது வியாபார ரீதியில் கட்டுப்படியாகாது. திருவொற்றியூர் வரை விரிவாக்கம் செய்வது பற்றியும், மாநில அரசு மவுனமாக இருப்பது கவலை அளிக்கிறது.

திட்டமிடப்பட்ட காலத்திற்குள் பணிகள் முடிவடையாமல் தாமதம் ஆவதும், திட்டத்தை சீர்குலைப்பதாக ஆகிவிடும். மெட்ரோ திட்டத்தினைப் பொறுத்தவரையில் நேரம்தான் பணம். ஒருநாள் இழப்பு என்பது பல கோடி ரூபாய் இழப்பாகும். சென்னை தற்போது மிகப் பெரிய மாநகர் என்பதால் மெட்ரோ ரயில் போல வேறெந்த முறையும் திறமையாகவும், கட்டுப்படியாகவும் இயங்கமுடியாது. மெட்ரோ ரயிலின் நான்கில் ஒரு பங்குக்கு மட்டுமே மோனோ ரயில் பயன்படும். மேலும் மோனோ ரயிலை இயக்க மெட்ரோ ரயிலை இயக்குவதைப் போன்று 50 சதவீதம் அதிகமாகச் செலவாகும். அது மிகவும் அதிக செலவாகும் இணைப்பு சேவையாகும்.

பெருமளவு மக்கள் போக்குவரத்து முறையான மெட்ரோ ரயிலை நகர்ப்புற போக்குவரத்தின் முதுகெலும்பாகப் பார்க்க வேண்டும். மும்பையில் உருவாக்கப்படும் மோனோ ரயிலுக்கு கி.மீ.க்கு ரூ.170 கோடி செலவாகிறது. மெட்ரோ ரயிலில் பயணிகள் கொள்ளளவு அதைப்போல மேலும் மூன்று மடங்காகும். மெட்ரோ ரயில் போன்ற நகர்ப்புறப் போக்குவரத்து முறை மூலதனச் செரிவுடையவையாகும். மாநில அரசுகள் நீண்டகாலத் தேவைகளை மனதில் கொண்டு இவற்றில் முதலீடு செய்ய வேண்டும்.

தமிழக அரசு உடனடியாக மெட்ரோ ரயில் திட்டப் பணிகளின் இரண்டாவது கட்டம் மற்றும் மூன்றாவது கட்டம் என பணிகளை விரிவுபடுத்த வேண்டும். வளர்ந்த மெட்ரோ நகரங்களுக்கு மோனோ ரயில் திட்டம் மோசமான ஏற்பாடாகத்தான் இருக்கும். மெட்ரோ ரயில் மூலம் செல்லும் பயணிகளில் நான்கில் ஒரு பங்குதான் மோனோ ரயிலில் பயணம் செய்ய இயலும். பெரும்பாலான நகரங்களில் மோனோ ரயில் திட்டம் தோல்வி அடைந்திருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பெருவாரியாக மக்கள்

பயணம் செய்ய மெட்ரோ ரயில் திட்டம்தான் உகந்தது. மோனோ ரயில் சாதாரண ஒன்றுதான். அதில் அதிகம் பேர் பயணம் செய்யமுடியாது. மோனோ ரயில் திட்டம் வெற்றிகரமான திட்டம் இல்லை. தற்போது அந்த ரயில் பயன்படுத்தப்படும் ஜப்பானில்கூட, சிறு சிறு நகரங்களில்தான் பயன்படுத்தப்படுகிறது. சென்னை, மும்பை போன்ற பெருநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டம்தான் அவசியமாகும்.

அதேசமயம் மெட்ரோ ரயில் செலவும் குறைவாகும். மெட்ரோ ரயிலுடன் ஒப்பிடும்போது மோனோ ரயில் திட்டத்திற்கான செலவு 50 சதவிகிதம் அதிகமாகும்" என்று அனுபவத்தின் அடிப்படையில் திரு. இ. ஸ்ரீதரன் தெரிவித்த கருத்தை அ.தி.மு.க. அரசு காதில் போட்டுக் கொள்ளவில்லை.

சேது சமுத்திரத் திட்டத்தையும், மதுரவாயல் - துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டத்தையும் முடக்கி வைத்திருப்பதைப்போல, இந்த மெட்ரோ ரெயில் திட்டத்தின் விரிவாக்கத்தையும் முடக்கி வைத்தார்கள். அவர்கள்தான் தற்போது மெட்ரோ ரெயில் திட்டத்தின் சோதனை ஓட்டத்தைத் தொடங்கி வைத்து, தாங்கள்தான் அந்தத் திட்டத்திற்கே காரணகர்த்தா என்பதைப்போல பெருமை தேடிக் கொள்ள முயன்றிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்களுக்கு மெட்ரோ ரெயில் திட்டம் யாருடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது என்ற உண்மையும் யார் அந்த மெட்ரோ திட்டத்தை மறுத்து கருத்து வெளியிட்டார் என்ற உண்மையும் நன்றாகவே தெரியும்!

அன்புள்ள,

மு.க

08-11-2013

3824. இருகரம் கூப்பி அழைக்கின்றேன்!

உடன்பிறப்பே,

எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், இடைத்தேர்தல்கள் வருவதுண்டு. ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் இருக்கும் போது நடைபெறுவதைப் போல எந்த இடைத் தேர்தலிலும், வேட்பாளர் வேட்புமனுத் தாக்கல்செய்வதற்கு முன்பிருந்தே தேர்தல் விதிமுறைகளைக் காற்றில் பறக்கவிட்டு, அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் செயல்கள் நடைபெற்றதில்லை. ஏற்காடு தொகுதி இடைத் தேர்தலுக்கான வேட்பு மனுவே 9-11-2013 முதல்தான் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால் அதற்குள் அங்கே நடைபெறும் தேர்தல் விதிமுறை மீறல்கள்தான் எத்தனை? எத்தனை? எண்ணற்ற விதிமுறை மீறல்கள்; எல்லை மீறிய சேட்டைகள்!

நம்மைப் பொறுத்தவரையில், தேர்தல் தேதி அறிவித்த இரண்டு நாட்களிலேயே சேலத்திலே உள்ள கழக முன்னணியினரை எல்லாம் சென்னைக்கே அழைத்து, அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பிறகு, இந்த இடைத்தேர்தலில் தி.மு.கழகம் போட்டியிடுவதென்று முடிவெடுக்கப்பட்டது.

4-12-2013 அன்று நடைபெறவுள்ள ஏற்காடு சட்டப் பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு. கழக வேட்பாளரை நிறுத்த கழகத்தின் சார்பில் முடிவெடுக்கப்பட்டவுடன், முறைப்படி அதற்கு ஆதரவு கேட்டுத் தமிழகத்திலே உள்ள பெரும்பாலான கட்சித் தலைவர்களுக்கும் நான் நேரடியாகக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், “வருகிற 4-12-2013 அன்று நடைபெறவுள்ள ஏற்காடு (எஸ்.டி.) சட்டப் பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடுவதென முடிவெடுத்துள்ளோம். ஆளுங்கட்சியான அ.தி.மு.க. தொடர்ந்து தமிழகத்தில் நடத்தி

வரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எச்சரிக்கை செய்கின்ற வகையில், இந்த இடைத்தேர்தலில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து நல்கிடும் உறுதியான ஆதரவோடு போட்டியிடுவது ஆக்கப்பூர்வமானதென்று நினைத்து இந்த முடிவினை எடுத்துள்ளோம். தமிழகத்தில் ஜனநாயகத்தைக் காத்திடவும், சர்வாதிகார எண்ணத்தை வீழ்த்திடவும் மேற்கொள்ளப் பட்டுள்ள கழகத்தின் இந்த முடிவிற்கு உதவிடும்வகையில், இந்த இடைத்தேர்தலில் கழக வேட்பாளருக்குத் தங்கள் கட்சியின் ஆதரவினை வழங்கிட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று எழுதியிருந்தேன்.

இந்தக் கட்சிகளின் தலைவர்கள் பலர் கழக வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிப்பதாக எழுதியிருந்தார்கள். சில கட்சிகளின் தலைவர்கள் மேலிடத்தைக் கேட்டு முடிவு சொல்வதாகத் தெரிவித்திருந்தார்கள். சிலர் பதிலே தெரிவிக்கவில்லை.

இந்த ஏற்காடு தொகுதி இடைத்தேர்தலைப் பொறுத்தவரை, நமக்குள்ள ஒரே குறை, இந்த இடைத்தேர்தலை முன்னின்று நடத்தவேண்டிய என் அருமைத் தம்பி, "சேலத்துச் சிங்கம்" வீரபாண்டி ஆறுமுகம் இல்லையே என்பதுதான்! இந்த நேரம் அவர் மட்டும் இருந்திருந்தால், அவர் தலைமையில் அல்லவா பணிகள் நடைபெற்றிருக்கும்; எப்படியெல்லாம் பம்பரமாகச் சுற்றிச் சுழன்று பணியாற்றியிருப்பார் என்றெல்லாம் என்னால் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியவில்லை. என்ன செய்வது? இயற்கையை வெல்ல முடியுமா? அவர் இல்லாத நிலையில், அந்த மாவட்டக் கழகத்தின் பொறுப்பாளராக இருக்கும் சிவலிங்கமும், கழகத் தேர்தல் பணிச்செயலாளர் டி.எம். செல்வகணபதி, எம்.பி.யும், இளைஞர் அணித் துணைச்செயலாளர் ராஜேந்திரனும், வீரபாண்டியின் அன்பு மகன் ராஜாவும் திட்டமிட்டுச் சீரிய பணியாற்றத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் உற்ற துணையாகத் தலைமைக் கழகத்திலிருந்து பொன். முத்துராமலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரும் அங்கே சென்று இடைத்தேர்தல் பணிகளை ஆற்றத் தொடங்கிவிட்டார்.

இதற்கிடையே 11-10-2013 அன்று அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் என்னுடைய தலைமையில் வேட்பாளர்

தேர்வுக்கான நேர்காணல் நடைபெற்று, போட்டியிட மனுத் தாக்கல் செய்த உடன்பிறப்புகள் 42 பேரையும் அழைத்து, அவர்களிடம் பேசிய பிறகுதான், அந்த மாவட்டக் கழக முன்னணியினரையும் கலந்து கொண்டு கழக வேட்பாளராக திரு. வெ. மாறன், எம்.பி.ஏ., நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டார். நம்முடைய வேட்பாளர் இளைஞர். தொகுதிமக்களுக்காக ஓடியாடிப் பயனுள்ள பணியாற்றக்கூடிய நல்லவர். படித்தவர், பண்பு மிக்கவர், பழகுவதற்கும் அருமையானவர்.

15-10-2013 அன்று நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில், கழகப் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலினும், துணைப் பொதுச் செயலாளர் தம்பி துரைமுருகனும் கலந்து கொண்டதோடு, திரும்பி வந்து எந்த அளவிற்கு அந்தக் கூட்டம் எழுச்சியோடும் ஏற்றத்தோடும் நடைபெற்றது என்பதை என்னிடம் விளக்கினார்கள். தேர்தல் பணிமனைத் திறப்பு விழாவிலும் தம்பி துரைமுருகன் கலந்துகொண்டு திரும்பியிருக்கிறார். ஏற்காடு இடைத்தேர்தலைப் பொறுத்தவரை வேட்பாளர் நேர்காணலையும் உடனடியாக நடத்தி, இந்தத் தேர்தலில் யார் வேட்பாளர் என்பதையும் முதன்முதலாக அறிவித்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நாள் முதல், கழக வேட்பாளர் தொடர்ச்சியாகத் தொகுதி முழுவதும் நடைப்பயணம் செய்து, வீடுவீடாகச் சென்று வாக்காளர்களை நேரில் சந்தித்து வாக்குச் சேகரிக்கும் பணியிலே ஈடுபட்டுள்ளார். கழகத்தின் சார்பில் தேர்தல் பணிகளைத் தொய்வேதுமின்றி அங்கேயே தங்கிச் செய்வதற்காகத் தலைமைக் கழகத்தின் சார்பில், எஸ்.ஆர். சிவலிங்கம், டி.எம். செல்வகணபதி, எம்.பி., இரா. இராசேந்திரன், வீரபாண்டி ஆ. ராஜா, ஆதிசங்கர், எம்.பி., ஜி. சூடாமணி, க. சுந்தரம், பா. கோபால், சி. தமிழ்ச்செல்வன் ஆகிய ஒன்பது பேர் அடங்கிய "ஏற்காடு தொகுதி தேர்தல் பணிக் குழு" ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அ.தி.மு.க. சார்பாக ஏற்காடு தொகுதி இடைத்தேர்தலுக்காக, 52 பேரைக் கொண்ட தேர்தல் பணிக் குழு ஒன்றை முதலில் அமைத்தது. பின்னர் அவர்களும் போதாது என்று மேலும் 9 பேரை அதாவது மொத்தம் 61

பேரை (கூட்டு எண் 7 என்பதைப் பார்த்து) அந்தக் குழுவில் சேர்த்துள்ளது. அமைச்சரவையிலே உள்ள அத்தனை அமைச்சர்களும் தங்களுடைய ரத கஜ துரக பதாதிகளோடு அங்கே படையெடுத்திருக்கிறார்களாம். சென்னையில் அரசுத் தலைமைச் செயலகமே காலி என்று செய்திவந்துள்ளது. இத்தனை பேரைத் தேர்தல் பணிக்குழுப் பொறுப்பாளர்களாக அவர்கள் நியமித்ததில் இருந்தே, அவர்கள் எந்த அளவிற்கு இந்த இடைத்தேர்தலில் பயந்திருக்கிறார்கள் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் இத்தனை பேரும் இணைந்து கட்டவிழ்த்து விடும் அராஜகங்களையும் நம்மால் சமாளிக்க முடியுமா, எதிர்கொள்ள முடியுமா என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

இதற்கிடையே ஆளும் அ.தி.மு.க.வின் சார்பில், அந்தத் தொகுதியில் மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்போடு என்னவெல்லாம் நடைபெறுகிறது என்பதை உன் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தேர்தல் நடத்தை விதிகள் அந்தத் தொகுதிக்கு மட்டுமே பொருந்தும் என்று தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஆனால் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், தேர்தல் நடத்தை விதிகள் மாவட்டம் முழுமைக்கும் பொருந்தும் என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில் சேலம் மாவட்டம் முழுவதும் இருந்த கழகக் கொடிக் கம்பங்களை, எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் மாவட்ட தி.மு.க. நிர்வாகத்திற்கே தெரிவிக்காமல், அதிகாரிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டார்கள். ஆனால் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. கொடிக்கம்பங்களை அகற்ற அஞ்சி எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட அக்டோபர் 5ஆம் தேதி முதல் சேலம் மாவட்டம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்துவிட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்த பிறகும், ஏற்காடு தொகுதிக்கு உட்பட்ட தும்பல், பாப்பநாய்க்கன்பட்டி, வெள்ளாளப்பட்டி உட்பட பல கிராமங்களில் பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள், லேப்-டாப் போன்றவை வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியரின் அனுமதி இல்லாமலா இவை வழங்கப்பட்டன?

இதுபோலவே; தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்த பிறகும், மாநில அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டப் பணிகளை ஏற்காடு தொகுதி அமைந்துள்ள சேலம் மாவட்டம் முழுவதும் நடத்தினார்கள். இது குறித்துச் சேலம் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சிவலிங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்டக் காவல் துறை உயர் அதிகாரிகளுக்குப் புகார் கொடுத்தும் அந்தப் புகார் அலட்சியப் படுத்தப்பட்டதே தவிர, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் புகார் மனுவினைப் பெற்றுக்கொண்ட தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. பிரவின் குமார், ஐ.ஏ.எஸ்., ஏற்காடு தொகுதியைத் தவிர மாவட்டத்தின் எந்தப் பகுதிகளிலும் தி.மு.கழகக் கொடிக் கம்பங்களை அகற்றவே கூடாது என்று உத்தரவிட்டார்.

சேலம் மாவட்டத்திற்கு வரும் அமைச்சர்கள், அரசுக்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தக்கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் 14-10-2013 அன்று தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தமிழ்நாடு அரசு முத்திரை மற்றும் சிகப்பு விளக்கு பொருத்திய காரில் பந்தாவோடு பயணம் செய்திருக்கிறார். இதுபற்றியும் புகைப்படத்தோடுகூடிய புகாரைத் தேர்தல் ஆணையருக்குக் கழகத்தின் சார்பில் தரப்பட்டது.

டெல்லியிலே உள்ள இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையரை, நாடாளுமன்றக்கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு 28-10-2013 அன்று சந்தித்து, ஏற்காடு தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.க. அமைச்சர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும் தேர்தல் நடத்தை விதிகளுக்கு மாறாக எப்படியெல்லாம் அரசு இயந்திரத்தைத் தவறான வழியிலே பயன்படுத்துகிறார்கள் என்று மூன்று புகார் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்.

மாநிலத்தில் புதிய பேருந்துகளைத் தொடங்கிவைத்தல் என்ற போர்வையில் அரசுப் பணம், பொது நிர்வாக இயந்திரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி அந்தப் பேருந்தில் அ.தி.மு.க. சின்னத்தையும் வரைந்து மக்கள் மனங்களில் பதியவைத்துச் செல்வாக்குத்தேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கழக வேட்பாளருக்கு எதிராக வாழப்பாடி கிராம நிர்வாக அதிகாரி மூலம் கழக வேட்பாளர் தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்குப் புறம்பாக 22-10-2013 அன்று பத்து வாகனங்களுடன் சென்றார் என்று இட்டுக்கட்டிப் புகார் மனுவினைக் கொடுத்தார்கள். காவல் துறை அதிகாரியே அந்தப் புகார் மனு காலதாமதமாகக் கொடுக்கப்பட்டது என்றும், அதற்கான ஆதாரம் எதுவுமில்லை என்றும், வாகனங்களின் நம்பர்கள் எதையும் தரவில்லை என்றும், வீடியோ ஆதாரங்களும் இல்லை என்றும் "இந்து" பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே தெரிவித்தார்.

30-10-2013 தேதிய "தினமலர்" நாளேட்டிலேயே சேலம் கலெக்டர் அலுவலக வளாகத்திலேயே அ.தி.மு.க. அரசின் சாதனைகளையெல்லாம் தொகுத்து வாக்காளர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஏற்காடு தொகுதிக்குட்பட்ட பகுதியில் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ்க் கட்டப்பட்டுள்ள வீடுகளில் உள்ள ஜெயலலிதா படம் மறைக்கப்படவே இல்லை. மினரல் வாட்டரில் ஜெயலலிதாபடம், அரசு சார்பில் ஜெயலலிதாவுக்கு ஆதரவாக விளம்பரம் என எங்கும் ஜெயலலிதா போட்டோக்களைத் தாராளமாக அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள். அ.தி.மு.க. அரசின் இரண்டாண்டு சாதனை என்ற விளம்பரப் பலகைகள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் உட்பட, அனைத்து இடங்களிலும் மாவட்டம் முழுவதும் வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவரோ நடுநிலையோடு ஒரு தேர்தல் அதிகாரி போல நடக்காமல், அ.தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளரைப் போல வெளிப்படையாகவே நடப்பதாகப் புகார் கழகத்தின் சார்பில் கூறப்பட்டுவருகிறது. அந்த அதிகாரி, இன்னும் சில மாதங்களில் ஓய்வுபெற இருப்பதாகவும், மேலும் அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் உறவினர் என்றும் சொல்லப்படுகிறது. தேர்தல் நடத்தை விதிகளைச் சிறிதும் பிறழாமல் அனுசரித்து, அதன்படி கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய இந்த அதிகாரியே, வேலியே பயிரை மேய்வதைப் போல, சேலம் மாவட்டம், ஓமலூர் பழைய நீதிமன்றம் எதிரே, ஓமலூர் தாலுகா

அலுவலகத்திற்கு, 2 கோடியே 52 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டிடம் கட்ட 6-11-2013 அன்று காலை 10.45 மணிக்கு வைதீக முறைப்படி பூஜைகள் நடத்தி அடிக்கல் நாட்டியிருக்கிறார். இந்த நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட வருவாய் அதிகாரி, மேட்டூர் துணை ஆட்சியர், ஓமலூர் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அதிகாரி, பொதுப்பணித் துறை (கட்டுமானம்) உதவிச் செயற்பொறியாளர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். தேர்தல் நடத்தை விதிகளைப் பின்பற்றிப் பாதுகாத்திட வேண்டிய மாவட்ட முதன்மை அதிகாரியே, தேர்தல் நடத்தை விதிகளைத் துச்சமென நினைத்து, அவற்றை மீறி நடந்தால், அதை யாரிடம் சென்று முறையிடுவது?

இந்த மாவட்ட ஆட்சித் தலைவர்மீது கடந்த சில மாதங்களுக்கு முன்பு நீதிமன்றத்திலேயே ஒரு வழக்கு நடைபெற்றது. அதைப்பற்றிக்கூட நான் அப்போதே சுட்டிக் காட்டினேன். சேலம்-உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளுக்காக நிலம் கையகப்படுத்தும் பணி, 2009ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்தது. 136 கிலோ மீட்டர் நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளுக்காக 19 ஆயிரம் ஏக்கர் விளைநிலம் கையகப்படுத்தப்பட்டது. இதற்குரிய இழப்பீட்டுத் தொகையாக, நெடுஞ்சாலைத் துறை 250 கோடி ரூபாய் ஒதுக்கியது. சந்தை மதிப்பீட்டின்படி இழப்பீடு வழங்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை வைத்துச் சென்னை உயர்நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுத்தனர். 2012 டிசம்பர் மாதத்திற்குள் உரிய இழப்பீடு வழங்க சேலம், விழுப்புரம் மாவட்டக் கலெக்டர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாயிகள் தரப்பில் உயர்நீதிமன்றத்திலேயே சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் 30 சதவிகிதம் “கமிஷன்” கேட்பதாகப் புகார் கூறினார்கள். இந்த வழக்கில் மாவட்ட ஆட்சியருக்கு நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

இவ்வாறு தொடக்கத்திலிருந்தே ஜனநாயகத்திற்கு விரோதமான, சட்ட விதிமுறைகளுக்கு மாறான அத்தனை காரியங்களிலும் அடாவடியாக ஈடுபட்டுத்தான் ஆளுங்கட்சியினர் இந்தத் தேர்தலைச் சந்திக்கவிருக்கிறார்கள். தேர்தல் நடைபெற

இன்னும் இருபது நாட்களுக்கு மேல் இருக்கின்றன. அதற்குள் எத்தனை சேட்டைகள்? எத்தனை அராஜகங்கள்? அட்டூழியங்கள்? தேர்தல் பணிக் குழுவில் அத்தனை அமைச்சர்களையும், கட்சியின் தலைமைக் கழகச் செயலாளர்களையும் நியமித்திருக்கிறார்கள். "தடைக்கற்கள் உண்டெனினும், தடந்தோள்கள் உண்டு" என்ற முறையிலேதான், இவ்வளவையும் சந்திக்கின்ற தீரத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் இந்த இடைத்தேர்தலை எதிர்கொள்கின்றது. கழகத்தின் சார்பில் தேர்தல் பணிகளை ஆற்ற நம்முடைய கழகத்தின் மாவட்டச் செயலாளர்களும், முன்னாள் அமைச்சர்களும் அங்கே சென்று, தங்களால் இயன்ற அளவிற்கு இடைத் தேர்தல் பணிகளை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆளுங்கட்சி செய்கின்ற அளவிற்கு நம்மால் செலவழிக்க இயலாது. வாக்காளர்களிடம் சென்று இந்த ஆட்சியில் நடைபெறும் தவறுகளையும், முறைகேடுகளையும் மக்கள் விரோத நடவடிக்கைகளையும் ஆதாரப்பூர்வமாகத் தெரிவித்து வாக்காளர்களின் மனதிலே பதிய வைத்திடும் பணியிலே ஈடுபட வேண்டும்.

வழக்கமாக இடைத்தேர்தலில் ஏற்படும் வன்முறைகள் - வசைமாரிகள் - இவையனைத்துக்கும் செவி சாய்க்காமல் - இப்போது களத்தில் நிற்கும் உடன்பிறப்புக்காகக் கழகத் தோழர்கள் அமைதியான முறையில் வாக்கு சேகரித்து, எப்படியும் வென்றே தீரவேண்டும் என்று வெறிகொள்ளாமல்; ஜனநாயக ரீதியிலும் - தந்தை பெரியார் வலியுறுத்திய மனித நேய உணர்வுடனும் - பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோர் விரும்பிய அறவழி - அன்பு வழியை மறந்துவிடாமலும் பணி புரிந்து வெற்றியை ஈட்டி; நமது பண்பாட்டை நிலைநிறுத்திட வேண்டுகிறேன். எதிர்த்தரப்பினர் தாக்கிப் பேசித் தரக்குறைவான வார்த்தைகளை வீசிடும்போது; அதைச் சகோதரப் பாசத்துடன் சகித்துக் கொண்டு - களத்தில் தோற்காமல் என்றென்றும் தலை நிமிர்ந்து நிற்கப்போவது கடமை, கண்ணியம், கட்டுப்பாடுதான் என்றும் கவனப்படுத்தி, மக்களுக்கான கழகப் பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அனுபவத்தில் முதிர்ந்தவன் என்ற முறையில் உணர்வு கலந்து நான் விடுக்கும் வேண்டுகோள் இதுதான் :-

“இடைத்தேர்தலில் மோதும் இரு வரிசைகளில் ஜனநாயக மாமணிகள் கோர்க்கப்பட்டு உண்மையிலேயே கொள்கை உறுதியுடனும் - இலட்சியதாகத்துடனும் வெற்றிக் கேடயம் ஏந்தி வரும் கொள்கை வீரர் யார் - அவர் உலவும் கொள்கைப் பாசறை எது - என்பதையெல்லாம் ஆய்ந்து, அறிந்து, தெளிந்து - அவர்தம் கரங்களில் வெற்றிக்கனியைத் தரும்போது - அதைப் பெற்றுக் கொள்ளத்தாள் பணிந்து கழக அணியினர் தயாராக இருக்கும்போது “உரியவருக்கு உரியதைப் பெற்றுக்கொள்ள உரிமையுண்டு” என்பதை உணர்ந்து, அதற்கான ஆதரவை அளிப்பதுதான் அறநெறியாகும் என்பதையும் - அரசியலில் ஜனநாயக நெறி விரும்புவோரின் கட்டாயக் கடமை என்பதையும் கனிவுடன் நினைவுபடுத்தி - இன்றைய இடைத்தேர்தலில் ஜனநாயகக் கனியை அனைவரும் மகிழ்ந்து சுவைத்திடவும், கழக வேட்பாளர் தம்பி மாறன் வெற்றி பெறவும், வாக்காளப் பெருமக்கள் - கடமையாற்ற வாரீர் வாரீர் என்று கரம் கூப்பி அழைக்கின்றேன்!”

அன்புள்ள,

மு.க.

10-11-2013

3825. விளக்கமும்; நான் விடுக்கும் வினாக்களும்!

உடன்பிறப்பே,

"ஆத்திரம் அறிவுக்குப் பகை" என்பார்கள். அதுவும் முதலமைச்சர் போன்ற பதவிகளிலே இருப்போருக்கு ஆத்திரம் கூடாது. நான் தமிழக அரசின் மீது எத்தனையோ பிரச்சினைகளை எழுப்பி, கருத்துகளை வெளியிட்டு வருகிறேன். ஆனால் "மாதிரிப் பள்ளி"களைப் பற்றி தமிழக அரசின் மீது எந்தவிதமான குறைபாட்டையும் நான் தெரிவிக்கவில்லை. 31-10-2013 அன்று "கேள்வி-பதில்" பகுதியிலும், 5-11-2013 அன்று "உடன்பிறப்பு மடலி"லும் மத்திய அரசு திட்டமிட்டுள்ள மாதிரிப் பள்ளிகளைப் பற்றி, தமிழக அ.தி.மு.க. அரசைப் பற்றியோ, குறைகளைச் சுட்டிக்காட்டியோ எதையும் தெரிவிக்கவே இல்லை. 31-10-2013 தேதியன்று நான் குறிப்பிட்டது வருமாறு :-

> **"கேள்வி** :- தமிழகத்திலே பள்ளிக் கல்வியை வணிகமயமாக்கும் மத்திய அரசின் "ராஷ்டீரிய ஆதர்ஷ் வித்தியாலயா" திட்டத்தின்படி, மத்திய அரசும் தனியாரும் கூட்டுசேர்ந்து மாதிரிப் பள்ளிகளைத் தொடங்கிட முயற்சிப்பதாக செய்தி வந்திருக்கிறதே?
>
> **கலைஞர்** :- இது மாநில அரசின் அதிகாரத்தில் மத்திய அரசு தலையிடுவதற்கான மற்றொரு முயற்சியாகும். தமிழ்நாட்டில் மாதிரிப்பள்ளிகளைத் தனியாருடனான கூட்டு இல்லாமல், மாநில அரசே நேரடியாக கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் கல்வியில் பின்தங்கிய பகுதிகள் அல்லாத இடங்களில் மாதிரிப் பள்ளிகளைத் தொடங்க விண்ணப்பம் செய்யுமாறு தனியாரைக் கோரும் அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டு, அதன்மீது முடிவெடுக்கப் போவதாகத் தெரிகிறது. இதில் மாநில

அரசு முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் ஒப்புதலோ, ஆலோசனையோ இல்லாமல் மத்திய அரசே நேரடியாக "பி.பி.பி." என்ற பெயரில் கல்வியில் தனியார் மயத்தை அனுமதிப்பது தவறான முன்மாதிரியாகிவிடும். இந்தப் பிரச்சினையில் தனியாருக்குப் பள்ளி நடத்த இடம் ஏற்பாடு செய்துகொடுக்கும் பணியை மாத்திரம் மாநில அரசுகள் கவனிக்கலாமாம். மாநில அரசின் அதிகாரத்தில் மத்திய அரசு தலையிடுகின்ற இப்படிப்பட்ட போக்கினை மாநில அரசு அனுமதிக்கவே கூடாது. இதற்குத் தமிழக அரசு உடனடியாகத் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்."

என்னுடைய இந்தப் பதிலில் மாநில அரசைக் குறைகூறி எழுதியிருக்கிறேனா? மத்திய அரசு மாநில அதிகாரத்தில் தலையிடும் போக்கினை அனுமதிக்கக் கூடாது, மாநில அரசு எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்றுதான் எழுதியிருக்கிறேன். மாநில அரசு தனது எதிர்ப்பைத் தெரிவிக்குமா என்று ஒருசில நாட்கள் பொறுத்திருந்து பார்த்துவிட்டு, 5-11-2013 அன்று நான் எழுதிய உடன்பிறப்பு மடலில்,

இந்தத் திட்டம் பற்றி நான் கருத்து தெரிவித்த பிறகு, தமிழகத்திலே உள்ள வேறு கட்சிகளின் தலைவர்களும் மத்திய அரசின் மாதிரிப் பள்ளிகளுக்கு இடம் அளிக்கக்கூடாது என்று கூறியிருந்தார்கள். குறிப்பாக பா.ம.க. நிறுவனர், டாக்டர் ராமதாஸ், திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் கி.வீரமணி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் க.மீனாட்சிசுந்தரம், பொதுப்பள்ளிக்கான மாநில மேடை அமைப்பின் பொதுச் செயலாளர் பு.பா. கஜேந்திர பாபு ஆகியோர் விரிவாக அறிக்கை விட்டிருந்தார்கள். ஆனால் தமிழகப் பள்ளிக் கல்வித் துறை வாயே திறக்கவில்லை, இனியாவது எதிர்ப்பைத் தெரிவிக்க மாநில அரசு முன்வருமா என்றுதான் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் தமிழக முதலமைச்சர் நான் அக்டோபர் 31 அன்றும், நவம்பர் 5 அன்றும் எழுதியதற்கு நவம்பர் 10ஆம் தேதி பதிலளித்திருக்கிறார். பதிலா அது? அவருக்கே உரிய பண்பாடற்ற

- அநாகரிகமான வார்த்தைகளைக் கூச்சமேதுமின்றித் தாராளமாகப் பயன்படுத்திப் பதில் என்ற பெயரால் விடுத்திருக்கிறார்.

அவர் தனது அறிக்கையில், "தான் ஆட்சியில் இருந்தபோது, தன்னலத்திற்காக மத்திய அரசின் "ராஷ்டீரிய ஆதர்ஷ் வித்யாலயா" திட்டம் குறித்து வாய்மூடி மவுனியாக இருந்தது மட்டுமல்லாமல், அதற்கு ஆதரவு தெரிவித்து, அதை தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்திவிட்டு, இப்போது மத்திய அரசுக்கு மறுப்புத் தெரிவிக்க மாநில அரசு முன் வருமா? என்ற தலைப்பில் கருணாநிதி நீட்டி முழக்கி அறிக்கை வெளியிட்டிருப்பது பித்தலாட்டத்தின் உச்சகட்டம்" என்று சொல்லியிருக்கிறார்.

தி.மு. கழக ஆட்சியில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாதிரிப் பள்ளிகள் "ராஷ்டீரிய மத்யாமிக் சிக்ஷா அபியான்" என்கின்ற "அனைவருக்கும் இடைநிலைக் கல்வி" எனும் திட்டம் மூலமாகத் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மத்திய அரசு கொண்டுவரும் திட்டம், "ராஷ்டீரிய ஆதர்ஷ் வித்யாலயா" திட்டம். தி.மு. கழக ஆட்சியில், தமிழகத்தில் தொடங்கப்பட்ட திட்டத்தில் தனியாருக்கு வாய்ப்பு தரப்படவில்லை. தற்போது மத்திய அரசு நடைமுறைப்படுத்த முன்வந்துள்ள திட்டத்தில்தான் தனியாருக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வி தனியார் மயமாவதைத்தான் நான் குறிப்பிட்டிருந்தேன். டாக்டர் ராமதாஸ் அவர்களும் அதைத்தான் குறிப்பிட்டிருந்தார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் நேற்றைய அறிக்கையில், "19-11-2008 அன்று, மத்திய அரசு இதுபோன்ற திட்டம் பற்றித் தமிழக அரசுக்கு கடிதம் எழுதியது; அந்தக் கோப்பில் முதல்வராக இருந்த கருணாநிதி, அமைச்சரவையில் பேசலாம் என்று கைப்பட எழுதியிருந்தார்" என்று ஒப்புக் கொண்டுள்ளார். அதன் பிறகு அமைச்சரவைக் கூட்டத்தில், "விரிவான விவாதத்திற்குப் பின், தமிழ்நாட்டில் கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் 20 மாதிரிப் பள்ளிகளை, மைய அரசு உதவியுடன் ரூபாய் 75.40 கோடி மதிப்பீட்டில் தொடங்க விழையும் பள்ளிக்கல்வித் துறையின் கருத்துருவிற்கு, அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது என்று முடிவெடுக்கப்பட்டது" என்றும் ஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

ஜெயலலிதாவின் இந்தக் கூற்றிலேயிருந்து, மத்திய அரசு மாநில அரசைக் கலந்துகொள்ளாமல் இந்த மாடல் பள்ளிகளைத் திறக்க முடிவெடுக்கவில்லை என்பதையும்;

தனியார் பங்களிப்புடன் இந்தப் பள்ளிகள் தொடங்கப்பட கழக அரசு ஒப்புதல் வழங்கவில்லை என்பதையும் ஜெயலலிதாவின் அறிக்கையிலே இருந்தே புரிந்துகொள்ளலாம்.

தற்போது, நான் குறிப்பிட்டதெல்லாம், "மாநில அரசின் ஒப்புதலோ, ஆலோசனையோ இல்லாமல், மத்திய அரசே நேரடியாக பி.பி.பி. என்ற பெயரில் கல்வியில் தனியார் மயத்தை அனுமதிப்பது தவறான முன்மாதிரியாகிவிடும்" என்றுதானே தவிர, தமிழக அரசு மீது எந்தக் குற்றச்சாட்டையும் கூறாமல், தமிழக அரசு மத்திய அரசுக்குத் தனது எதிர்ப்பினைத் தெரிவிக்கவேண்டு மென்றுதான் சொல்லியிருந்தேன்.

தி.மு. கழக ஆட்சியில் இந்தப் பொருள் பற்றி அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டதையும் ஜெயலலிதா ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் அந்த அமைச்சரவைக்கான கூட்டக் குறிப்பின் இரண்டாவது பத்தியிலே உள்ளதை மட்டும் ஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். இதுதான் "நுனிப் புல் மேய்வது" என்பது! அந்த அமைச்சரவைக் கூட்டத்தின் குறிப்பில் மற்ற பத்திகளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதையும் பார்த்திருக்க வேண்டாமா? அந்த அமைச்சரவைக் குறிப்பின், முதல் பத்தியில், "The Government of India have launched a Scheme to open 6000 Model Schools in Educationally Backward Blocks in all the States during the 11th Five Year Plan. These Schools will be established with stipulations on pupil-teacher ratio, Information and Communi- cation Technology (ICT) usage, holistic educational environment, appropriate curriculum with infrastructure facilities of a standard as in Kendriya Vidyalaya. The salient features of scheme are as follows:

Locations : 2500 Model Schools will be set up in Educationally Backward Blocks.

Land : Land for these schools will be identified and provided by the State Governments" v‹W F¿¥ãl¥g£LŸsJ.

இதில் எந்த இடத்திலும் தனியார் ஊடுருவல் பற்றித் தெரிவிக்கப்படவே இல்லை. இந்த நிலையில், அதை தி.மு. கழக

ஆட்சியில் ஏற்றுக்கொள்ளும் பிரச்சினை என்பது எழவில்லை. அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் 20 மாதிரிப் பள்ளிகளை மத்திய அரசின் உதவியுடன் தமிழக அரசே தொடங்க கழக அரசு ஒப்புதல் அளித்தது. அப்போதுகூட முழு அதிகாரத்தை மத்திய அரசிடம் அன்றைய தமிழக அரசு ஒப்படைக்கவில்லை.

அதே அமைச்சரவைக் கூட்டத்தின் குறிப்பில் பத்தி 3இன்படி, "2009ஆம் ஆண்டு ஜனவரியில், தமிழகத்தில் கல்வியில் பின்தங்கிய பிளாக்கு களில், 20 மாதிரிப் பள்ளிகளைத் திறப்பதற்கான திட்டக் குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடு 75.40 கோடி ரூபாய். இதில் மத்திய அரசின் 75 சதவிகித பங்கு 65.65 கோடி ரூபாயும், மாநில அரசின் 25 சதவிகித பங்கு 18.85 கோடி ரூபாயும் அடங்கும்" என்றுதான் பதிவு செய்யப்பட்டதே தவிர, தனியாருக்கு ஒரு சதவிகித ஒதுக்கீடுகூட இல்லை என்பது தெளிவாக்கப்பட்டது. மேலும் அதே அமைச்சரவைக் குறிப்பில், "The Planning Commission was informed that the Model Schools to be opened in Tamil Nadu will follow State Syllabus and Curriculum and will be affiliated to the State Board of Examinations" - அதாவது தமிழகத்தில் திறக்கப்படும் மாடல் பள்ளிகளில் "மாநில பாடத் திட்டங்களே" நடைமுறைப்படுத்தப்படும் என்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. இதில் எந்த இடத்திலும் தனியார் பங்களிப்போ, மத்திய அரசின் பாடத்திட்டமோ நடைமுறைப் படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறதா? முதலமைச்சர் ஜெயலலிதா இதையெல்லாம் முழுமையாகப் படித்துவிட்டு அல்லவா என்னை வசைபாட முன்வந்திருக்க வேண்டும்? ஜெயலலிதாவின் அறிக்கையை முதல் பக்கத்தில் "கொட்டை எழுத்துக்களில்" வெளியிட்டுள்ள "ஜனசக்தி" நாளேடு, பத்திரிகாதர்மத்தைக் காப்பாற்றிடும் வகையில், இந்த என்னுடைய விளக்கத்தையும் வெளியிட முன்வருமா?

அடுத்து, ஜெயலலிதாவின் அறிக்கையில் "இந்தப் பள்ளிகளில் ஆங்கிலக் கல்வி மட்டுமே கற்பிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது ஆங்கில வழிக் கல்வி குறித்து வாய் கிழியப் பேசும் கருணாநிதி அப்போது ஏன் இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளித்தார் என்பதைக் கருணாநிதிதான் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டிருக்கிறார். என்னைப் பெற்ற "அம்மா"

கூட, என்னை இத்தனை முறை வாய் நிறைய "கருணாநிதி", "கருணாநிதி" என்று அழைத்திருக்கமாட்டார்!

மீண்டும் அந்த அமைச்சரவை குறிப்பில் தெரிவித்திருப்பதையே ஜெயலலிதாவுக்கு சுட்டிக்காட்டுகிறேன். முதலமைச்சர் பொறுப்பிலே இருப்பவர், தன் பெயரில் ஓர் அறிக்கை வெளியிடும்போது கவனமாக இருக்க வேண்டாமா? அவர் குறிப்பிட்ட அமைச்சரவைக் குறிப்பில் உள்ளதையாவது கொஞ்சம் அமைதியாக ஆத்திரப்படாமல் படித்திருந்தால், இந்த அளவிற்குத் தனது அறிக்கையில் என்னை வசைபாடியிருக்க மாட்டார். அமைச்சரவைக் குறிப்பில், "Medium of Instructions : The medium of instructions will be decided by the State Government. Classes : The schools will have classes from IX to XII if the medium of instruction is the regional language, or VI to XII, if the medium of instruction is English" என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. "ரீஜினல் லாங்குவேஜ்" என்றால் ஆங்கிலமா என்பதை ஆங்கிலப் பள்ளியில் படித்த ஜெயலலிதாதான் விளக்கவேண்டும். ஆங்கில வழிக் கல்வி மட்டுமே கற்பிக்கப்படும் என்று அந்த அமைச்சரவைக் குறிப்பில் எந்த இடத்திலும் கூறப்படவில்லை. எனவே முதலமைச்சர் தனது அறிக்கையில் ஆங்கிலம் மட்டுமே அந்த மாடல் பள்ளிகளில் கற்பிக்கப்படும் என்று கூறியிருப்பது உண்மைக்கு மாறானது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

நான் தெரிவித்த இந்தக் கருத்துக்களிலிருந்து தி.மு. கழக அரசு தனது மாநில அதிகாரம் எதையும் விட்டுக்கொடுத்து விடவில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம். தற்போதுகூட, மாநில அரசின் அதிகாரங்களை மத்திய அரசு பறிக்க அனுமதிக்கக்கூடாது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டியிருந்தேன். அதற்குத்தான் முதல் அமைச்சர் ஜெயலலிதா இப்படியெல்லாம் பாய்ந்து பிறாண்டியுள்ளார்.

முதலமைச்சர் ஜெயலலிதா மேலும் தனது அறிக்கையில் "மாநில சுயாட்சிக்கு எதிராக மாநிலத்தில் ஆட்சியில் இருந்தபோது செயல்பட்ட கருணாநிதி, தற்போது மாநில சுயாட்சி குறித்துப் பேசுவது "சாத்தான் வேதம் ஓதுவது" போல் உள்ளது" என்று சொல்லியிருக்கிறார். மாநில சுயாட்சிபற்றி நான் பேசுவது "சாத்தான் வேதம் ஓதுவதைப் போல்" இருக்கிறதாம். இதைச்

சொல்வது யார்? எந்த.....? அண்ணாவிடம் கற்றுக்கொண்ட கண்ணியம் என் பேனாவைத் தடுக்கிறது!

"மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி" என்று 1970ஆம் ஆண்டிலேயே திருச்சி மாநாட்டில் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக எழுப்பியவன் நான். மாநில அதிகாரங்களை மத்திய அரசு பறிக்கக்கூடாது என்று; 1972ஆம் ஆண்டிலேயே மாநாடு நடத்தியவன் நான்! மாநில சுயாட்சி பற்றி ஆய்வு செய்து அறிக்கை அளித்திட நீதிபதி ராஜமன்னார் தலைமையில் வல்லுநர் குழு ஒன்றைத் தி.மு. கழக ஆட்சியில் இந்தியாவிலேயே முதன் முறையாக அமைத்தவன் நான். "மாநில சுயாட்சி" என்ற தலைப்பில் அப்போதே புத்தகம் எழுதியவர், என் அருமைக் கண்மணி முரசொலி மாறன்.

இந்த மாடல் பள்ளிகள் குறித்து மத்திய அரசின் அறிவிப்பு வந்ததும் நான் மட்டுமல்ல; பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்களும், தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்களும், கல்வியாளர்கள் பலரும் அறிக்கை விடுத்தார்கள். டாக்டர் ராமதாஸ் அவர்கள் தனது அறிக்கையில், "இதற்கு முன் கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் இத்தகைய மாதிரிப் பள்ளிகளை மத்திய அரசு அறிவித்தபோது, தனியாரை அனுமதிக்காமல் தமிழக அரசே அந்தப் பள்ளிகளைத் தொடங்கி நடத்திவருகிறது. அதேபோல இப்போது அறிவிக்கப்பட்டுள்ள 356 மாதிரிப் பள்ளிகளைத் தமிழக அரசே தொடங்கி நடத்தவேண்டும்" என்று நல்ல எண்ணத்தோடுதான் சொல்லியிருக்கிறார். அவர் மீதும் முதலமைச்சர் ஜெயலலிதா குற்றம் சொல்லியிருக்கிறார்.

மேலும் ஜெயலலிதா தனது அறிக்கையில், "கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் மத்திய, மாநில அரசுப் பங்களிப்புடன் மாதிரிப் பள்ளிகள் துவங்கப்பட வேண்டும் என்பதுதான் மத்திய அரசின் திட்டம். அதன்படி தமிழக அரசே மாதிரிப் பள்ளிகளைத் துவங்கியது. ஆனால் தற்போது கல்வியில் பின் தங்கிய ஒன்றியங்கள் அல்லது பகுதிகளில் துவங்கப்படும் மாதிரிப்பள்ளிகளைப் பொது தனியார் முறையில் துவங்கப்பட வேண்டும் என்பதுதான் மத்திய அரசின் திட்டம்" என்று கூறியிருப்பதில் இருந்தே, ஏற்கனவே கழக ஆட்சியில் இருந்த திட்டத்தில் பொது, தனியார் முறையில் என்ற வார்த்தைகள்

இல்லை என்பதையும், தற்போதுள்ள திட்டத்தில் அந்த வார்த்தை கள் இருப்பதையும் புரிந்துகொள்ளலாம்.

"மத்திய அரசு இதுபோன்ற நடவடிக்கையை எடுத்திருப்பது மாநில சுயாட்சிக்கு எதிரான செயல் என்பதை நான் எனது அறிக்கை மூலமே நினைவூட்டியிருப்பதைக் கருணாநிதி மறந்து விட்டார் போலும்" என்று ஜெயலலிதா எழுதியிருக்கிறார். இந்த மாதிரிப் பள்ளிகள் குறித்து மத்திய அரசின் அறிக்கை வந்ததற்குப் பிறகு ஜெயலலிதா எப்போது, எந்தத் தேதியில் இதுபோன்ற நடவடிக்கையை எடுத்திருப்பது மாநில சுயாட்சிக்கு எதிரான செயல் என்று அறிக்கை விடுத்தார் என்று சொல்ல முடியுமா? ஜெயலலிதா அவ்வாறு அறிக்கைவிட்டிருந்தால் மத்திய அரசின் முடிவினைத் தமிழக அரசு எதிர்க்க வேண்டுமென்று நான் அறிக்கை விட வேண்டிய அவசியமே நேர்ந்திருக்காதே?

மேலும் ஜெயலலிதா அறிக்கையில், மத்திய அரசின் இந்தத் திட்டத்தின்கீழ்ப் பொது தனியார் பங்களிப்புடன் இந்தியாவில் முதற்கட்டமாகத் தொடங்கப்பட்டுள்ள 41 மாதிரிப் பள்ளிகளில் ஒன்றுகூடத் தமிழ்நாட்டில் இல்லை, தமிழ்நாட்டிலிருந்து யாரும் கலந்துகொள்ளவில்லை எனத் தெரியவருகிறது என்றும் சொல்லியிருக்கிறார். நாங்கள் விடுத்த அறிக்கைக்கு உடனடியாக முதலமைச்சர் ஜெயலலிதாவோ, அந்தத் துறையின் அமைச்சரோ இந்த ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தாலே போதுமானது. நமக்கு ஒன்றும் பாதகம் இல்லை என்ற முடிவுக்கு நாங்கள் வந்திருப்போம்.

ஆனால் தேவையே இல்லாமல் வீண் வம்புக்கும் கலாவணி பாடவும் தயாராகிறார் முதல் அமைச்சர். தமிழகம் பாதித்துவிடக் கூடாதே என்று அ.தி.மு.க. அரசுக்கும் சேர்த்து நான் அறிக்கை விடுத்தால், முதலமைச்சர் ஜெயலலிதா "நுணலும் தன் வாயால் கெடும்" என்ற பழமொழிக்கேற்ப கருணாநிதியின் அறிக்கை அமைந்துள்ளது" என்று பதிலளித்திருக்கிறார் என்றால், இதுவா அரசியல்! தி.மு. கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது தமிழகத்தின் திட்டங்களை மத்திய அரசிடம் பெறுவதற்காக, காங்கிரஸ் முதல் அமைச்சரைப் பார்த்து,

"முதல் அமைச்சர் அவர்களே, நான் குறை கூறுவதாக நினைக்காதீர்கள். மத்திய அரசிடம் என்னைச் சுட்டிக்காட்டி, தமிழகத்திற்குத் தேவையானதைப் பெற்று வாருங்கள்; எனக்கு

மகிழ்ச்சிதான்" என்று சட்டப்பேரவையிலே பேரறிஞர் அண்ணா தெரிவித்தார். அண்ணா அன்றைக்கு இப்படிக் கூறியது, இன்றைய முதலமைச்சருக்குத் தெரிந்திருக்காது.

தமிழக அரசுக்கு உதவியாக நான் விடுத்த அறிக்கைக்கு இவ்வளவு நீண்ட அறிக்கை விடுத்துள்ள முதலமைச்சரிடம் நான் ஏற்கனவே பல கேள்விகளைக் கேட்டிருந்தேனே, அதற்கெல்லாம் எப்போது பதில் அளிக்கப்போகிறார்?

சேது சமுத்திரத் திட்டம் முடக்கப்பட்டுக்கிடக்கிறதே, எப்போது அதற்கு விடிவு என்று கேட்டிருந்தேனே, அதற்கு என்ன பதில்?

மதுரவாயல் - துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டம் பற்றியும், தமிழகத்திலே உள்ள பல சாலைத் திட்டங்கள் பற்றியும் மத்திய அமைச்சரும், தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையமும் பக்கம் பக்கமாகத் தமிழக அரசின் தாமதம் குறித்துச் சொல்லிவருகிறார்களே, அவர்களுக்கு என்ன பதில்?

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் முறையாகத் தமிழகத்திலே நடைபெறவில்லை என்றும், அதிலே பல முறைகேடுகள் நடப்பதாகவும் மத்திய அமைச்சர் தமிழக அரசின் மீது சாட்டிய குற்றச்சாட்டிற்கு என்ன பதில்?

ஓய்வூதியதாரர்கள் இறக்கும்போது அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடும்பப் பாதுகாப்பு நிதி உயர்வை, கடந்த ஆண்டே பேரவையில் அறிவித்து, அரசாணையும் பிறப்பிக்கப்பட்டதை, புதிய அறிவிப்பு போல முதல் அமைச்சர் செய்ததைப் பற்றி நான் எடுத்துக்கூறி அந்தக் குழப்பத்திற்குப் பதில் என்ன என்று கேட்டிருந்தேனே? எங்கே அந்தப் பதில்?

தீவிரவாதிகள் போலீஸ் பக்ருதீன் போன்றவர்களைக் கைது செய்தது பற்றியும், காவல் துறையினருக்கு முதலமைச்சர் அறிவித்த பதவி உயர்வு, ரொக்கப் பரிசு பற்றியெல்லாம் எழுந்துள்ள பல கேள்விகளுக்கு என்ன பதில் என்று கேட்டிருந்தேனே; எங்கே பதில்?

கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல், சிமெண்ட் போன்றவை விலை உயர்ந்து கொண்டே போவது பற்றி விளக்கம் கேட்டு எத்தனை நாட்களாயிற்று; எங்கே பதில்?

மணல் கொள்ளை, கனிமக் கொள்ளை, தாது மணல் கொள்ளை இவற்றுக்கெல்லாம் எங்கே விளக்கம்?

வீட்டு வசதி வாரிய நிலபேரம் தொடர்பாக ஈரோட்டில் வீட்டு வசதி வாரிய அலுவலர் ஒருவர் பற்றி வீடியோ ஆதாரம் இருப்பதாக "தி இந்து" (தமிழ்) நாளேட்டில் முதல் நாள் செய்தி வந்ததும், அவர் தற்கொலை செய்துகொண்டு இறந்தாரே, என்னவாயிற்று அந்த வழக்கு?

மத்திய அரசு கொண்டு வந்த உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினால் தமிழகம் பாதிக்கப்படும் என்றும் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று முதல் அமைச்சரே தெரிவித்தார். ஆனால் மத்திய அமைச்சர் அந்தச் சட்டத்தினால் தமிழகத்திற்கு 600 கோடி ரூபாய் மிச்சமாகும் என்று பதிலளித்துப் பல நாட்கள் ஆகி விட்டனவே; அதற்கு எங்கே பதில்?

நெல்லுக்கும், கரும்புக்கும் கொள்முதல் விலை உயர்வு கேட்டு விவசாயிகள் குரலெழுப்பி வருகிறார்களே, அதற்கு என்ன பதில்?

விவசாயிகள் - மீனவர்கள் - நெசவாளர்கள் என்று அனைத்துத் தரப்பினரின் பிரச்சினைகளும் நாள்தோறும் அதிகமாகிக்கொண்டே வருகின்றனவே; அதற்கெல்லாம் எங்கே பதில்?

ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை நீதிமன்றம் சொல்லி வருகிறதே; கேட்பதற்கே வெட்கமாக இருக்கிறதே: எங்கே அதற்குப் பதில்?

அரசு அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு என்றார்கள்; ஆனால் பலருக்கு ஏற்கனவே வாங்கி வந்த ஊதியத்தைவிடக் குறைந்து விட்டதாகப் புகார் சொன்னார்களே; அதற்கு எங்கே விளக்கம்?

இந்த ஆட்சியில் தரப்படும் முழுப் பக்க விளம்பரங்கள் பற்றியும், இந்த ஆண்டு அதற்காகச் செய்யப்பட்ட ஒதுக்கீடு என்ன, உண்மையாகத் தரப்பட்டது எவ்வளவு என்றெல்லாம் கேட்டிருந்தேனே; அதற்கு ஏன் பதிலளிக்கவில்லை?

துணைக்கோள் நகரம் பற்றி அறிவிப்பு வந்து பல நாட்கள் ஆயிற்றே, எங்கே அந்த நகரம் என்று கேள்வி கேட்டு எத்தனையோ நாட்களாகி விட்டதே, அதற்கு என்ன பதில்?

போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு ஆகஸ்ட் மாதமே 12வது ஊதிய ஒப்பந்தம் போடப்பட்டிருக்க வேண்டுமே, மாதங்கள் பல கடந்து விட்டனவே; என்ன பதில்?

காவலர்களுக்காக அறிவித்த "உங்கள் சொந்த இல்லம்" திட்டம் என்னவாயிற்று? இதுவரை எத்தனை பேருக்கு இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளன? எங்கே விளக்கம்?

சென்னையில் ஒரு குடம் தண்ணீர் 5 ரூபாய் என்று தலைப்பிட்டு வந்த செய்திக்கு விளக்கம் அளித்திருக்க வேண்டாமா?

பணி நீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்களே, அவர்கள் மீது ஏன் பழிவாங்கும் நடவடிக்கை?

கொலை, கொள்ளை, வழிப்பறி, செயின் பறிப்பு என்று நாள்தோறும் அடுக்கடுக்காகச் செய்திகள் வருகின்றனவே; அதற்கெல்லாம் என்ன பதில்?

எங்கும் ஊழல் - எதிலும் ஊழல் - எல்லாவற்றிலும் பேரம் - கமிஷன் - என்றெல்லாம் செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றனவே; எங்கே பதில்? எப்போது விளக்கம்?

சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றம் சாற்றப்பட்டவர்களில் ஒருவரான ஜெயலலிதா, அந்த வழக்கிலே நீதிபதியாகக் குறிப்பிட்ட ஒருவர் தான் இருந்து விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டுமென்றும், அவருக்கு எதிராக வாதாட வேண்டிய அரசு வழக்கறிஞராகக் குறிப்பிட்ட இன்னார்தான் இருக்க வேண்டுமென்றும் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருப்பதைப் பற்றி, அகில இந்தியாவே கேள்வி கேட்கிறதே, அதற்கு அம்மையாரின் பதில் எங்கே?

முதலமைச்சர் இவற்றுக்கெல்லாம் எப்போது பதில் சொல்ல முயற்சிக்கப் போகிறார்? இதுதான் நான் தரும் விளக்கம்; இவைதான் நான் விடுக்கும் வினாக்கள்!

அன்புள்ள,

மு.க.

12-11-2013

3826. மக்கள் நலப் பணியாளர்களும், தமிழர்களே!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1989ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து, அவர்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்கித்தர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்கள் 2-7-1990 அன்று நியமனம் செய்யப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அவர்கள் நியமனம் பெற்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்கள் மீதும் சினம்கொண்டு, 1991ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களையும் பணிநீக்கம் செய்து வாழ்வாதாரத்தைப் பறித்து மே திங்களில் வீட்டுக்கு அனுப்பினார்கள். 1996ஆம் ஆண்டு மீண்டும் கழக ஆட்சி, என்னுடைய தலைமையில் அமைந்தபோது, வீட்டுக்கு அனுப்பப்பட்ட அந்த 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் 2001ஆம் ஆண்டு, மீண்டும் ஜெயலலிதா ஆட்சி அமைந்தபோது, மறுபடியும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு வேலை இல்லை என்று கூறி 31-5-2001 அன்று வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள்.

2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி என் தலைமையில் அமைந்த போது, 31-5-2006 அன்று மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலைதரப்பட்டு, அவர்களுடைய வாழ்வும், வாழ்வாதாரமும் மீட்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டனர். இவ்வாறு ஒவ்வொரு முறை தி.மு. கழக ஆட்சி என் தலைமையிலே அமைகிறபோது, மக்கள் நலப் பணியாளர்களுக்கு வேலை அளிக்கப்பட்டுக் காப்பாற்றப்படுவதும், ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் அவர்களைக் கைவிட்டு வீட்டிற்கு அனுப்புவதும் தொடர்ந்து மூன்று முறையாக நடந்து வருகிறது.

மக்கள் நலப் பணியாளர்கள் இவ்வாறு வேலை கொடுக்காமல் வீட்டிற்கு அனுப்பப்பட்ட காரணத்தால் 19 பேர் தற்கொலை செய்து கொண்டு இறந்த அதிர்ச்சியூட்டும் சம்பவங்களும் நடைபெற்றன.

உதாரணமாக ஒருசிலவற்றைக் கூற வேண்டுமேயானால், நாகை மாவட்டம், கீழையூர் அருகேயுள்ள வைரவன்கட்டளை காமேஸ்வரன் என்ற கிராமத்தைச் சேர்ந்த வீரப்பன் என்ற மக்கள் நலப் பணியாளர் வேலை பறிக்கப்பட்டதின் காரணமாக 11-6-2001 அன்று விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றிய மக்கள் நலப் பணியாளர் சி. கந்தசாமியின் வேலை பறிபோன காரணத்தால், அவருடைய மனைவி பிரபா என்பவர் 11-6-2001 அன்று விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார். 12-6-2001 அன்று நத்தம் ஒன்றிய மக்கள் நலப் பணியாளராகப் பணியாற்றி வந்த திலகர் என்பவரும் வேதனை தாங்காது தன் உயிரை மாய்த்துக் கொண்டார். இவர்களின் குடும்பத்திற்கு அப்போதே தி.மு. கழகத்தின் சார்பில் தலா 25 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்பட்டது. அருப்புக் கோட்டையைச் சேர்ந்த ராமமூர்த்தி பணி பறிபோனதும் அந்தச் சோகத்தில் பட்டினி கிடந்தே மாய்ந்து போனார். நாகை மாவட்டத்தில் தரங்கம் பாடியைச் சேர்ந்த இளங்கோவன் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். ராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் கபிலன் வேலை போன காரணத்தால் மனம் வெதும்பி, பட்டினி கிடந்து உயிர் துறந்தார் என்று பட்டியல் நீளுகிறது. பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்கள் நடத்திய எந்தப் போராட்டத்திற்கும் ஆட்சியாளர்கள் மனம் இரங்கவோ, செவி சாய்க்கவோ இல்லை.

2011ஆம் ஆண்டு மே திங்களில் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மக்கள் நலப் பணியாளர்கள், 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை, பணிநீக்கம் செய்து தமிழக அரசு, 8-11-2011 அன்று அரசாணை எண். 86ஐப் பிறப்பித்தது. மக்கள் நலப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் இழைக்கப்பட்ட அநீதியைத் துடைத்து, மீண்டும் பணி வழங்கக்கோரி 15-11-2011 அன்று தி.மு. கழக இளைஞர் அணியின் சார்பில், தளபதி தம்பி மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பணி நீக்க உத்தரவை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் வழக்கு அந்தச் சங்கத்தின் அலுவலர்கள் சார்பில் தொடரப்பட்டது. இதற்கான வழக்கில் நீதிபதி சுகுணா, பணி நீக்க உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தார். 21-11-2011 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, கோர்ட் உத்தரவு நிறைவேற்றப்படவில்லை; மக்கள் நலப் பணியாளர்களைப் பணியில் சேர்க்கவில்லை என்று கூறப்பட்டது. உடனடியாக அவர்களைப் பணியில் சேர்க்க அனுமதிக்க வேண்டுமென்றும், கோர்ட் உத்தரவை நிறைவேற்றியதற்கான அறிக்கையை 23-11-2011 அன்று தாக்கல் செய்ய வேண்டுமென்றும் நீதிபதி சுகுணா உத்தரவிட்டார்.

மக்கள் நலப் பணியாளர் சங்கத் தேர்தல் 3-4-2012 அன்று நடத்தப்பட்டு, மதிவாணன் தலைவராகவும், ராஜேந்திரன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தலில் ஏற்கனவே இருந்த பழனி நீக்கப்பட்ட போதிலும், இந்த வழக்குகுறித்த கோப்புகளையெல்லாம் புதிய சங்க நிர்வாகிகளிடம் கொடுக்கவில்லை. சங்கத்தின் சார்பில் எந்தவொரு முக்கிய முடிவு எடுக்கப்பட வேண்டுமென்றாலும், சங்கத்தின் செயற்குழுவைக் கூட்டித்தான் எடுக்கப்பட வேண்டும். ஆனால் அதன் சங்கத்தின் செயலாளராக ஏற்கனவே இருந்த பழனி என்பவர் நீக்கப்பட்டிருந்த நேரத்தில், யாருடனும் கலந்துகொள்ளாமல், அவர் மட்டும் ஒப்பந்தம் செய்துகொண்டு, ஐந்து மாதச் சம்பளம் கொடுத்தால் போதும், பணியிலிருந்து நீக்குவதற்கு ஒப்புக்கொள்வதாக ஒரு உடன்பாட்டினைச் செய்துகொண்டு, நீதிமன்றத்திலும் அதனைத் தெரிவித்துவிட்டனர். நீதிமன்றமும் அதனை உண்மை என்று ஏற்றுக்கொண்டு, மக்கள் நலப் பணியாளர்களை பணி நீக்கம் செய்த ஆணைக்கு ஒப்புதல் கொடுத்து உத்தரவிட்டது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க நிர்வாகிகளுக்கு அதன் பின்னர்தான் மக்கள் நலப் பணியாளர்களுக்கு எதிராகப் பழனி செய்த மோசடி தெரிய வந்திருக்கிறது.

அதற்குப் பிறகுதான் மக்கள் நலப் பணியாளர் சங்கத்தினர், “பழனி என்பவர் பொறுப்பிலேயே இல்லை, மதிவாணன்தான் பொறுப்பிலே இருக்கிறார், எனவே பழனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும்” என்று மக்கள் நலப்

பணியாளர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர் வில்சன் வாதம் செய்தார்.

நீதிபதி சுகுணா பிறப்பித்த உத்தரவை எதிர்த்துத் தமிழக அரசு மனுத்தாக்கல் செய்தது. அதனை விசாரித்த தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதல் பெஞ்ச், "மக்கள் நலப் பணியாளர்கள் நியமனம், நீக்கம் என அரசின் விருப்பத்துக்கு ஏற்ப நடந்துள்ளது தெரிகிறது. இவர்கள் அனைவரும் தற்காலிகப் பணியாளர்கள் என வாதத்துக்குக் கருதினாலும்கூட கடந்த 20 ஆண்டுகளாகப் பணியாற்றி உள்ளனர். ஒரு கையெழுத்தில் அவர்களை பணி நீக்கம் செய்ய வேண்டியிருந்தால் நீதியின் கொள்கைப்படியும், சட்டப்படியும் அவர்களை நீக்கும் முன்பு அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அரசு கருத்து கேட்கவில்லை. இதைக் கருத்தில் கொண்டுதான் தனி நீதிபதி சுகுணா இந்த வழக்கில் தடை உத்தரவைச் சரியாகப் பிறப்பித்துள்ளார். அதை நீக்க முடியாது. மக்கள் நலப் பணியாளர் களின் நிலையைப் பார்க்கும்போது கால்பந்து விளையாட்டு போல உள்ளது.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி சம்பளம் நிர்ணயம் செய்து ஒருவருக்கு அரசுப் பணி வழங்கிய பிறகு சரியான காரணம் இல்லாமல் அவரை நீக்குவது சட்ட விரோதமானது. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசு மாறும்போது மாறி மாறி உத்தரவு பிறப்பிப்பது கடும் கண்டனத்துக்குரியது, வேதனையானது, வருந்தத்தக்கது. எனவே அரசுக் கோரிக்கையை நிராகரிக்கிறோம். கடந்த ஆட்சியின் திட்டத்தில் மாற்றம் கொண்டு வந்தால் அந்த ஊழியர்களை வேறு பணியில் அமர்த்த வேண்டும்; அதை விட்டுவிட்டு அவர்களை டிஸ்மிஸ் செய்வது தவறு. இது எந்த விதத்தில் நியாயமானது? இது அரசியல் சார்புடையது என்பது தெரியும். இருந்தாலும் அதற்குள் நாங்கள் தலையிட விரும்பவில்லை" என்று கூறினார்கள்.

ஆனால் தமிழக அரசின் சார்பில் இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்கள். உச்சநீதிமன்றத்தில் 29-11-2011 அன்று நீதிபதிகள் டி.கே. ஜெயின், தவே ஆகியோர் இந்த மனுவை விசாரித்து, "தமிழகத்தில் என்னதான் நடக்கிறது? ஆட்சி மாறும்போது முந்தைய அரசின் திட்டங்களை ரத்து செய்வது ஏன்? இனிமேல் இதுபோன்ற

நிகழ்வுகள் தமிழகத்தில் நடக்கக்கூடாது" என்று கண்டனம் தெரிவித்தார்கள். இதனை அடுத்து இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டுமென்று தமிழக அரசு வழக்கறிஞர் விடுத்த கோரிக்கையை உச்ச நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் நீதிபதிகள் நிராகரித்தனர்.

இந்த வழக்குதான் தற்போது உச்சநீதிமன்றத்தில் 11-11-2013 அன்று விசாரணைக்கு வந்துள்ளது. நீதிபதிகள் அணில்தவே, தீபக் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வுதான் இதனை விசாரித்து அளித்த தீர்ப்பில், "மக்கள் நலப் பணியாளர்களைப் பணிநீக்கம் செய்யலாம் என்ற உயர்நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டனர். அனைத்து அம்சங்களையும் தகுதி அடிப்படையில் கணக்கிலே எடுத்துக்கொண்டு, வழக்கை மறுவிசாரணை செய்து, ஆறு மாதங்களுக்குள் முடிக்க வேண்டும். அதே நேரத்தில் தமிழக அரசு வழக்கை ஒத்திவைக்குமாறு கோரக்கூடாது. பொறுப்பில்லாத ஒருவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களின் வாழ்க்கையை அரசு பாழடித்துள்ளது, கண்டிக்கத்தக்கது. இருபது வருடம் அரசுக்காக அவர்கள் தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளனர் என்பதை அரசு கருத்தில்கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள்.

உடன்பிறப்பே, ஜனநாயகத்தில் ஒரு அரசுக்கு இதைவிடக் கடுமையான கண்டனம் தேவையா? அந்த 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்கள் யார்? என்னுடைய உறவினர்களா? எனக்குத் தெரிந்தவர்களா? என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களா? தமிழ்நாட்டில் பிறந்தவர்கள் தானே? அவர்கள் எல்லாம் தமிழர்கள்தானே? அந்த 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களின் ஊதியத்தை நம்பி அவர்களின் குடும்பங்களிலே வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தவர்கள் எத்தனை பேர்? அத்தனை பேரின் வயிற்றெரிச்சலைத் தனிப்பட்ட ஒரு பெண்மணி சம்பாதித்துக் கொள்வதில் என்ன பயன் இருக்கப்போகிறது? தி.மு. கழக ஆட்சியில் பணி வாய்ப்பினைப் பெற்றவர்கள் என்பதற்காக இவ்வளவு காழ்ப்புணர்ச்சி ஒரு பெண் முதலமைச்சருக்கு இருப்பது நல்லதா? எத்தனை நீதிபதிகள் எந்த அளவிற்கு இந்த வழக்கில் தீர்ப்பளித்திருக்கிறார்கள்? இதையெல்லாம் எண்ணிப் பார்த்து மனமாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டாமா? தி.மு. கழக

ஆட்சியில் இவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டதைப் போலவே, அ.தி.மு.க. ஆட்சியிலும் எவ்வளவோ பேர் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் தி.மு. கழக ஆட்சி அமைந்தபோது நீக்கப்பட்டு விட்டார்களா? அவர்கள் எல்லாம் இப்போது பணியிலே நீடித்திருக்கவில்லையா?

மாண்புக்குரிய நீதியரசர்கள், "தமிழகத்திலே என்னதான் நடக்கிறது?" என்றும், "மக்கள் நலப் பணியாளர்களைப் பந்துபோல் விளையாடுவது சரிதானா?" என்றும் கேட்டிருக்கிறார்களே, அது இந்த அரசுக்கு அவமானமாகத் தெரியவில்லையா? நடந்தது, நடந்தாக இருக்கட்டும். இனியாவது அ.தி.மு.க. அரசு தெளிவு பெற வேண்டும். யாரையும் பழிவாங்கும் நடவடிக்கைகளை விட்டுவிட வேண்டும். மக்கள் நலப் பணியாளர்களின் வழக்கிலே உச்சநீதிமன்றம் இன்னும் ஆறு மாதங்களில் உயர்நீதிமன்றம் விசாரித்து முடிக்கவேண்டுமென்று தீர்ப்பு அளித்திருந்த போதிலும், அந்த விசாரணை நடைபெறும்வரை காத்திருக்காமல், தமிழக அரசே முன்வந்து, வழக்கினைத் திரும்பப் பெற்று, அந்த 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களுக்கும் உடனடியாக மீண்டும் வேலை அளித்திட, முன்வர வேண்டும்.

"ஆறுவது சினம்" என்பது பழமொழி. ஆறிவிடாமல் சினத்தை அப்படியே வைத்திருப்பது, அதளபாதாளத்திற்கே இட்டுச்சென்று விடும் என்பதை மறந்து விடக்கூடாது. தி.மு. கழக ஆட்சியில் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்பதால், மக்கள் நலப் பணியாளர்கள்மீது அ.தி.மு.க. அரசு கொண்டிருக்கும் கோபத்தைத் தணித்துக்கொண்டு, அவர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும் காப்பாற்றிட அரசே முன்வர வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

14-11-2013

3827. நாளை “டெசோ” கூடுகிறது!

உடன்பிறப்பே,

இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் நாட்டில் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் கலந்து கொள்ளாத நிலையில், இந்தியாவின் சார்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு சல்மான் குர்ஷித் அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருக்கிறார். இதுகுறித்துச் செய்தியாளர்கள் என்னிடம் கேட்ட போது, “அது தவறு என்பதுதான் என்னுடைய கருத்து தமிழ் மக்களின் உணர்வுகளை இப்படியெல்லாம் மத்திய அரசு புறக்கணிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு” என்று 13-11-2013 அன்று பதில் அளித்திருந்தேன். என்னுடைய இந்த உணர்வையே தமிழகத்திலுள்ள வேறு சில கட்சிகளும் பிரதிபலித்தன.

திரு சல்மான் குர்ஷித் காமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கச் செல்வதை நியாயப்படுத்திச் சில காரணங்களை வெளியிட்டிருக்கிறார். 1.ஈழத் தமிழர் பிரச்சினைகள் உள்பட பல்வேறு பிரச்சினைகளை இலங்கை அரசுடன் பேச வேண்டியுள்ளது. 2. ஈழத் தமிழர்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குவது பற்றியும், இந்திய மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்கிறபோது எதிர்கொள்கிற தாக்குதல்கள் குறித்தும், இந்தியாவின் கருத்துக்களை இலங்கை அரசிடம் எடுத்துச் சொல்கிற வாய்ப்புக் கிடைக்கும் 3. இலங்கையில் வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களில் ஈடுபட்டுள்ளோம் 4. இலங்கை வடக்கு மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசை, அரசியல் ரீதியிலும் - பொருளாதார ரீதியிலும் வெற்றியடையச் செய்வதில் உறுதி கொண்டுள்ளோம். 5. தமிழர்களுக்கு அரசியல் சட்டத்தின்படியும், இந்திய - இலங்கை உடன்பாட்டின்படியும் கூடுதல் அதிகாரம் வழங்குவதை உறுதி செய்யும் கடமையும் இந்தியாவுக்கு உண்டு;

என்பவையே சல்மான் குர்ஷித் வெளியிட்டிருக்கும் காரணங்கள் ஆகும்.

தன்னுடைய இலங்கைப் பயணத்தை நியாயப்படுத்தி இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் வெளியிட்டிருக்கும் காரணங்கள் அனைத்தும் வரலாற்று ரீதியாகவும் - அரசியல் ரீதியாகவும் சிங்களப் பேரினவாத அரசால் முறியடிக்கப்பட்டுள்ளவை ஆகும். தந்தை செல்வா காலம் தொட்டு, ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் வரை பல்வேறு காலக்கட்டங்களில் தமிழினத்தோடு சிங்கள அரசு செய்து கொண்ட ஒப்பந்தம் எதுவும் சிங்கள அரசால் நிறைவேற்றப்படவில்லை; மாறாக, மீறப்பட்டிருக்கிறது என்பதே வரலாறு ஆகும். சிங்கள அரசு, தமிழர்களை இலங்கையின் குடிமக்களாகக் கருதி, அரசியல் சட்டப்படி அவர்களுக்குள்ள உரிமைகளைத் தருவதற்கே தயக்கம் காட்டி வருவதை அனைவரும் அறிவர். எந்த நாட்டிலாவது தங்கள் குடிமக்கள் மீதே ஓர் அரசு தன்னுடைய இராணுவத்தின் துணையோடு படையெடுத்து போர்புரிந்து பேரழிவு ஏற்படுத்திய சோக நிகழ்வு நடந்ததுண்டா? சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழும் இனம் வேறெங்கும் உண்டா? ஈழத்தில் நடந்திருக்கிறதே!

இலங்கை 1948ல் விடுதலை பெற்ற காலம் முதலே, தமிழர்களின் உரிமைப் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. தந்தை செல்வா அவர்களின் தலைமையில் 30 ஆண்டுக் காலம் அறவழிப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது. அறவழிப் போராட்டத்தின் மூலம் சிங்கள அரசின் கவனத்தை நீதி - நேர்மையின் பக்கம் திருப்ப முடியவில்லை என்பதால் 25 ஆண்டுக் காலம் ஆயுதம் தாங்கிய போராட்டம் நடைபெற்றது. அதில் 5 இலட்சம் தமிழ் மக்கள் பலியாகி இருக்கிறார்கள். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கை வடக்கு மாகாணத்தில் ஜனநாயகத் தேர்தல் களம் அமைக்கப்பட்டு 39 இடங்களில் 30 இடங்களை தமிழர் தேசியக் கூட்டமைப்பு வென்று ஆட்சி அமைத்த பிறகும், தமிழர்களுக்கு நியாயமாகக் கிடைத்திட வேண்டிய உரிமைகள் நீர்த்துப் போனவையாகவே இருக்கின்றன

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளருமான அரேஷ் பிரேமச்சந்திரன் தற்போது தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் எடுத்து இயம்பியிருக்கும் விவரங்கள் அனைத்தையும்

ஈழப் போரின்போது, ராஜபக்சே அரசு கட்டவிழ்த்துவிட்ட மனித உரிமை மீறல்கள், சர்வதேசச் சட்டங்களைக் காலில் போட்டு மிதித்துவிட்டுப் புரிந்த போர்க் குற்றங்கள் பற்றியும், போருக்குப் பிறகு திட்டமிட்டு நடத்தப்பட்டு வரும் தமிழ் இன அழிப்புச் செயல்கள் குறிக்கும் விளக்கும் போது நான் ஏற்கனவே பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிறேன்; 'டெசோ' அமைப்பின் தீர்மானங்கள் மூலமாகவும் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

2009ஆம் ஆண்டு ஈழத்தின் இறுதிக் கட்டப் போர் முற்றுப் பெற்றதற்குப் பிறகு இலங்கை அரசின் சிங்களமயமாக்கல் கொள்கை வெகு தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இலங்கை அரசின் 2 இலட்சம் இராணுவப் படையினரில் சுமார் ஒன்றரை இலட்சம் பேர், தமிழர்கள் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முகாமிட்டுள்ளனர். அமைதியை நிலைநாட்டுதல், கண்ணிவெடிகளை அகற்றுதல் என்ற போர்வையில், தமிழர்கள் வாழும் பகுதிகள் அனைத்தும் இராணுவமயமாக்கப்பட்டுள்ளன. 10 இலட்சம் தமிழர்கள் வாழும் வடக்கு மாகாணத்தில், தமிழர்களுக்குச் சொந்தமான 6.500 ஏக்கர் நிலங்களை சிங்கள இராணுவம் தன்வயப்படுத்தி உள்ளது. போரின் போது வெளியேறி பிறகு முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டு முடக்கப்பட்ட தமிழ் மக்களின் சொந்த வீடுகளை சிங்கள இராணுவ வீரர்கள் ஆக்கிரமித்துப் பயன்படுத்தி வருகின்றனர்.

போரினால் விதவைகள் ஆக்கப்பட்ட 84 ஆயிரம் பேரில் 54 ஆயிரம் பேர் இலங்கை வடக்கு மாகாணத்தில் மட்டும் வாழ்கின்றனர். 12 ஆயிரம் அனாதைக் குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் 2 ஆயிரம் பேர், கதியற்று வாழவழியற்று வாடி வருகின்றனர்.

பெரும்பான்மையினராகத் தமிழர்கள் வாழ்ந்து வரும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 7 சதவிகிதமாக இருந்த தமிழ் மக்களின் எண்ணிக்கை இன்று 48 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. 10 இலட்சம் தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறி பல்வேறு நாடுகளில் குடியேறி, புலம்பெயர்ந்தவர்களாகிவிட்டனர். இந்த இரண்டு மாகாணங்களிலும் தற்போது சுமார் 18 இலட்சம் தமிழர்கள்தான் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களையும் அகற்றி முழுவதும் சிங்களமயமாக்கும் முயற்சிகளே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழர்கள் பூர்வீகமாக

வாழ்ந்து வரும் பகுதிகளின் பூகோள அமைப்பே - மக்கள் தொகைக் குறைப்பு எல்லைகள் மாற்றம் ஆகியவற்றின் காரணமாக - மூல அடையாளங்களை முழுவதுமாய் இழந்து வருகின்றது.

தமிழர் பகுதிகளில் உள்ள இந்துக் கோயில்கள், இஸ்லாமியப் பள்ளி வாசல்கள் உடைத்துத் தகர்க்கப்பட்டு, அவை அனைத்தும் புத்தமத வழிபாட்டு இடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

சிங்கள அரசின் இத்தகைய எதேச்சாதிகார, பாசிச நடவடிக்கைகளை எதிர்ப்பவர்களை பயங்கரவாதிகளாகக் குற்றம் சாட்டி, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மூலம் கைது செய்து விசாரணையின்றி ஒன்றரை ஆண்டு சிறையில் வைத்திருக்க முடியும். இந்த அச்சுறுத்தல்களின் காரணமாக, தமிழர்கள் தமது சொந்த நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளுக்குச் சென்று வாழ்வாதாரம் தேடவே முயற்சிக்கின்றனர், மேலும், ஒரு பெருங்கொடுமையாக 18 வயதிற்குட்பட்ட தமிழ்ப் பெண்களைக் கட்டாயக் கருத்தடை செய்து, இலங்கை அரசு இன வளர்ச்சித் தடுப்புச் செயலில் இரக்கமின்றி ஈடுபடுகிறது.

பேச்சுவார்த்தைகள் மூலம் அமைதிவழி தேடும் அணுகுமுறையே அற்றுப்போய், இலங்கையில் இத்தகைய கடுமையான நிலைமைகள், பதற்றமான சூழ்நிலைகள் உருவானதற்குப் பிறகு, சல்மான் போன்றவர்கள் பிரச்சினைகளைப் பேச முற்படுவதால் என்ன உருப்படியான பலன் விளைந்துவிடப் போகிறது என்று தெரியவில்லை. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இதுதான் முதல்முறையாக நடைபெறப் போகும் பேச்சுவார்த்தையா? போருக்குப் பின்னர் எண்ணற்ற முறைகள், டெல்லியிலும் கொழும்பிலும் அதிகாரிகள் மட்டத்திலும், அமைச்சர்கள் மட்டத்திலும், பிரதமர்களிடையேயும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றனவே! என்ன முடிவு ஏற்பட்டது? மனித உரிமை மீறல்கள் குறைந்து விட்டனவா? தமிழர் பகுதிகளில் ஆக்கிரமித்துள்ள இராணுவம் திரும்ப பெறப்பட்டு விட்டதா? இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகளும், நிலங்களும் தமிழர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டு விட்டனவா?

இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகளினால் சாத் தமிழர்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் கிடைத்து விட்டனவா?

13 பிளாஸ்" அதாவது 13வது திருத்துத்திற்கு அதிகமாகவே அதிகாரங்கள் அளிப்பேன் என்று ராஜபக்சே வாக்குறுதி அளித்தாரே! அதை நிறைவேற்றினாரா? நிலம் மற்றும் காவல் துறை தொடர்பான அதிகாரங்கள் இல்லாமல், பெரும்பான்மைத் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு ஒன்று அங்கே நடை பெற்றுக் கொண்டிருக்கிறதே! அதைப் பற்றிக் கிஞ்சிற்றேனும் கருத்தில் கொண்டாரா ராஜபக்சே? ஆட்சி அதிகாரம் எதும் இல்லாமல், தமிழர்களின் ஆட்சி, சிங்கள அரசின் கடும் கட்டுப்பாட்டு வளையத்திற்குள் சிக்கிக் கொண்டு மக்கள் நலனை முறையாகப் பேண முடியாமல், வீழ்ச்சி அடைந்து தமிழ் மக்களின் வெறுப்புக்கு இலக்காகிவிட வேண்டுமென்பதுதானே ராஜபக்சேயின் விருப்பம்

சிங்களர்களும் இலங்கைக் கடலோரக் காவல்படையினரும் இணைந்து தமிழ் மீனவர்கள் மீது நடத்தும் தாக்குதல்கள், ஏற்படுத்தும் சேதாரங்கள், துப்பாக்கிச் சூடு நிகழ்வுகள், நீதிமன்றத்தில் நிறுத்திச் சிறைக்கு அனுப்பும் நடவடிக்கைகள் போருக்கு முன்பு இருந்ததைவிட, போருக்குப் பின்னர் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகின்றனவே அல்லாமல், சிறிதும் குறைந்தபாடில்லையே!

இலங்கை வடக்கு மாகாணத்தில் தமிழர் நலனுக்காக இந்தியா பல்வேறு திட்டங்களில் ஈடுபட்டுள்ளதாக சல்மான் குர்ஷித் சொல்லி இருக்கிறார். அந்தத் திட்டங்களின் பலன் பெரும்பாலும் சிங்களவர்களுக்கே செல்கிறது. குறைந்தது நான்கு பேருக்கும் அதிகமாக இருக்கும் குடும்பத்தினருக்கு மட்டும் வீடு ஒதுக்கப்படும் என்று ஒரு சட்டம் இயற்றி புதிதாகக் கட்டப்படும் வீடுகளில் பெரும்பாலானவை சிங்களவர்களுக்கே ஒதுக்கப்பட்டு வருகின்றன என்ற செய்தி தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

ஐ.நா. அவைப் பொதுச்செயலாளர் பான் கி மூன் அவர்களால் அமைக்கப்பெற்ற இந்தோனேஷியாவைச் சேர்ந்த தரூஸ்மான் தலைமையிலான மூவர் குழு 2011 ஏப்ரல் மாதம் அளித்த அறிக்கையில், ராஜபக்சே அரசின் போர்க் குற்றங்கள் வெளி உலகுக்குத் தெரிந்து விடாமல், தடயங்கள் அனைத்தையும் அழிக்கும் முயற்சிகளைப் பற்றித் தெரிவிக்கப்பட்டிருந்த. அந்த அறிக்கை வெளிவந்த பிறகாவது, இலங்கை அரசு விழிப்புணர்ச்சியைப் பெற்றதா?

ஐ.நா. அவையின் மனித உரிமைக் குழுவின் சார்பில் சர்வதேசக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் கண்டறியப்பட்டு போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அதன் பிறகாவது இலங்கை அரசு தனது மனசாட்சியின்படி நடந்து கொண்டதா? இலங்கை அரசே கற்ற பாடங்கள் மற்றும் சமாதான நடவடிக்கைகள் குழு ஒன்றை அமைத்து அந்தக் குழுவும் பல்வேறு வகையான பரிந்துரைகளைச் செய்து அறிக்கை அளித்தது. அந்தப் பரிந்துரைகளை எற்றுச் செயல்படுத்துவது பற்றி ராஜபக்சே அரசு சிந்தித்துப் பார்த்ததுண்டா?

கடந்த செப்டம்பர் மாதம் ஒருவார காலம் இலங்கையிலே சுற்றுப்பயணம் செய்து மனித உரிமைகள் அமைப்பின் ஆணையாளர் திருமதி. நவநீதம் பிள்ளை அவர்கள் பயணத்தை முடித்து செய்தியாளர்களிடம் பேசும்போது "இலங்கையின் பாதுகாப்புப் படைகளால் மனித உரிமை ஆர்வலர்கள் துன்புறுத்தப்படுவது அதிகரித்துள்ளது. இலங்கை சர்வாதிகாரப் பாதையில் செல்வதற்கான அறிகுறிகள் அதிகரித்துள்ளன. போரினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். காணாமற்போனவர்கள் குறித்த இலங்கை அரசின் விவரணைக்குழு ஏமாற்றம் தருகிறுது" என்று சர்வதேச சமூகத்தின் முன் வெளிப்படையாகவே சொன்னதற் பிறகாவது இலங்கை அரசு தன்னைத் திருத்திக் கொள்ள முயற்சி செய்ததா?

இலங்கையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கே இரண்டு மாதங்களுக்கு முன் பேசும்போது, ''யாழ்ப்பாணத்தில் எல்லா இடங்களிலும் சிங்கள இராணுவக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருவதால், இன்னும் ஐந்து ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் வாழ்வதற்குக்கூட இடம் இல்லாமல் போகலாம்" என்று குற்றம் சாட்டியதற்குப் பிறகாவது இலங்கை அரசு தனது குறைகளை போக்கும் நடவடிக்கை எதையும் மேற்கொண்டதா?

இங்கிலாந்து பிரதமர் டேவிட் கேமரூன் இரண்டு நாட்களுக்கு முன்பு வெளியிட்ட அறிக்கையில் "இலங்கையில் உள்நாட்டு போர் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகியும், போர்க்குற்றம், பாலியல் பலாத்காரக் குற்றச்சாட்டுகளின் பேரில் யாரும் கைது செய்யப்படவில்லை. பத்திரிகையாளர்கள் தொடர்ந்து

மிரட்டப்படுகின்றனர்" என்று சுட்டிக்காட்டியுள்ளதை எண்ணி இலங்கை சிங்கள அரசு வெட்கி தலைகுனிந்திருக்க வேண்டாமா?

"இலங்கையில் நீதிநெறிமுறைகளுக்கு அப்பால் நடந்துள்ள மனிதப் படுகொலைகள், சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து காமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டேன்" என்று கனடா பிரதமர் ஸ். மார்யா அறிவித்ததையும், இலங்கையில் நடை பெற்று வந்த மனித உரிமை நிலைமைகளை உன்னிப்பாகக் கவனித்து வந்ததாலேயே அவற்றைக் கண்டித்திடும் வகையில், "இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கமாட்டேன்" என்று மொரீஷியஸ் பிரதமர் நவீன் சந்திரா ராம்கலம் அறிவித்ததையும் எண்ணி இலங்கைச் சிங்கள அரசு வாட்டமடைந்து வருந்தியிருக்க வேண்டாமா?

"இலங்கையில் நடக்கும் காமன்வெல்த் மாநாட்டை இந்தியா மற்றும் அனைத்து உறுப்பு நாடுகளும் புறக்கணிக்க வேண்டும். இதன் மூலம் அங்கு சிறுபான்மை இனமாக வாழும் தமிழர்களுக்கும் அவர்கள் மீது நடத்தப்பட்ட மனிதத் தன்மையற்ற செயல்களுக்கும் நீதி கிடைக்கும்" என் தென்னாப்பிரிக்க அமைதிப் பிரச்சாரகரும், நோபல் பரிசு பெற்றவருமான ஆர்ச் பிஷப் டெல்மாண்ட்டுட்டு சொல்லியிருப்பதைச் சிங்கள அரசு சிறிதேனும் சிந்தித்துப்பார்த்தா?

உலக நாடுகளும், சர்வதேச சமூகமும், ஒரு ஐ.நா. அவை போன்ற உலக நாடுகளின் அமைப்புகளும் இலங்கைச் சிங்கள அரசின் மனக்கதவைத் திறந்து நீதியையும் நியாயத்தையும் உணர்ந்து நடந்து கொள்ள வழிவகை செய்ய வேண்டும். இலங்கையிலே நடைபெற்ற தமிழ் இனப் படுகொலை, மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்கள், சர்வதேச சட்ட மீறல்கள் ஆகியவை குறித்து சுதந்திரமானதுமான நம்பகமானது விசாரணை நடைபெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதும், ஈழத் தமிழர்கள், அவர்கள் விரும்பும் அரசியல் தீர்வினை அவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு ஏதுவாக, ஐ.நா, அவையின் மேற்பார்வையில், ஈழத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதும், இவையே ஈழத் தமிழர்களுக்கு பன்னெடுங்காலமாக உருவாக்கப்பட்டு வரும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வாக அமைந்திடும் என்பதும்தான்,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் - டெசோ அமைப்பின் சார்பிலும் முன்வைக்கப்படும் கோரிக்கை ஆகும்.

எனினும் இப்போதைக்கு இலங்கை சென்றிருக்கும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குல்ஷித் அவர்கள், அவரே சுட்டிக்காட்டியுள்ளபடி இலங்கை அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி;

தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவத்தை முழுமையாவிலக்கிக் கொள்ளவும், 13வது திருத்தத்தின்படி அனைத்து உரிமைகளையும் தமிழர்களுக்கு வழங்கிடவும், வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள புதிய அரசுக்கு நிதி, போலீஸ், நிலம் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் கிடைத்திடவும், தமிழக மீனவர்களின் பிரச்சினைகள் ஓய்ந்திடவும், ஆக்கப்பூர்வமான ஏற்பாடுகளை செய்வதோடு, சிங்கள அரசின் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், இராணுவத்தினர் நடத்தியுள்ள பாலியல் கொடுமைகள் குறித்து காமன்வெல்த் மாநாட்டில் குரல் கொடுத்திடவும் முன் வருவாரா? என்பதே தமிழ் மக்களிடையே கேள்விக்குறியாக எழுந்துள்ளது. இந்த பிரச்சினைகளைப் பற்றி விவாவித்து அடுத்து செய்ய வேண்டியது குறித்து முடிவெடுக்கவே, நாளை (17-11-2013) டெசோ அமைப்பின் கூட்டம்.

அன்புள்ள.

மு.க.

16-11-2013

3828. தொழிலாளர்கள் ஊதியம் உயர்வு; இன்னுமா கேள்விக்குறி!

உடன்பிறப்பே,

போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றும் அலுவலர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் இன்னும் முடிவுக்கு வராததைத் தொடர்ந்து, மின்வாரியத்தில் ஊதிய உயர்வு என்ன நிலைமை என்பதைப் பற்றியும் விளக்குகிறேன். மின்வாரியத்தில் மின்வெட்டு எவ்வாறு அதிகரித்து வருகிறது என்பது குறித்துக் கடந்த இரண்டு மூன்று நாட்களாகத் தொடர்ந்து பத்திரிகைகள் எல்லாம் எழுதி வருகின்றன. ஆளுங்கட்சியின் ஆதரவு ஏடுகள் அதனை மறைக்க முயற்சித்த போதிலும், பத்திரிகாதர்மம் போற்றும் ஒருசில நாளேடுகள் மின்வெட்டு நிலை குறித்து வெளிப்படையாகவே எழுதித்தான் வருகின்றன.

போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய உயர்வு குறித்து ஒப்பந்தம் போடப்படுவதைப் போல, மின்வாரியத் தொழிலாளர்களுக்கு நான்காண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய உயர்வு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும். மின்வாரிய தொ.மு.ச. பொதுச் செயலாளர் சிங்கார இரத்தினசபாபதி இதற்காக ஓர் அறிக்கையே இரண்டு நாட்களுக்கு முன்பு விடுத்திருந்தார். ஆனால் அ.தி.மு.க. அரசின் சார்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஊதிய உயர்வு என்பதே முதன் முதலில் 1969ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான் வழங்கப்பட்டது. மின்வாரிய தொழிற்சங்கத் தலைவர்களை 25-5-1970 அன்று முதல்வராக இருந்த நானே அழைத்துப் பேசினேன். அதற்கு பிறகுதான் 27-5-1970 அன்று முதல் ஊதிய உயர்வுக்கான ஒப்பந்தம் போடப்பட்டு, ஊதிய உயர்வு 1-12-1969 முதல் வழங்கப்பட்டது.

இரண்டாவது ஊதிய உயர்வு ஒப்பந்த நாள் 18-2-1977. நெருக்கடி கால நிலையில் அந்த ஒப்பந்தம் போடப்பட்டது. ஊதிய உயர்வு 1-12-1975 முதல் வழங்கப்பட்டது. மூன்றாவது ஊதிய உயர்வும், நான்காவது ஊதிய உயர்வும் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது போடப்பட்டது. ஐந்தாவது ஊதிய உயர்வும், ஏழாவது ஊதிய உயர்வும், நான் முதலமைச்சராக இருந்தபோது போடப்பட்டது. ஏழாவது ஊதிய உயர்வு 1-12-1996 முதல் வழங்கப்பட்டது. ஒப்பந்த நாள் 8-7-1998. அப்போது 40 சதவிகிதம் ஊதிய உயர்வு தரப்பட்டது. மேலும் 1-12-1996 அன்று 7 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வும் வழங்கப்பட்டது. அதுபோலவே 17 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு இரண்டு ஆண்டுயர்வும், 27 ஆண்டுகள் முடித்தவர்களுக்கு மூன்று ஆண்டுயர்வும், 37 ஆண்டுகள் முடித்தவர்களுக்கு நான்கு ஆண்டுயர்வும் வழங்க ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. எட்டாவது ஊதிய உயர்வு அ.தி.மு.க. ஆட்சியில் 1-12-2000 முதல் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் 24 மாதங்கள் தள்ளி வைக்கப்பட்டது. 15-10-2005 அன்றுதான் ஒப்பந்த நாள். தலா மாதம் 100 ரூபாய் வீதம் 24 மாதங்களுக்கு 2400 ரூபாய் மட்டும் வழங்கப்பட்டது.

ஒன்பதாவது ஊதிய உயர்வுதான் தி.மு. கழக ஆட்சியில் 1-12-2007 முதல் வழங்கப்பட்டது. ஒப்பந்த காலம் நான்காண்டுகள். ஊதிய உயர்வு ஏற்கனவே கழக ஆட்சியில் வழங்கப்பட்டதைப் போலவே 40 சதவிகிதம் வழங்கப்பட்டது.

15 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு ஒரு ஆண்டுயர்வு.

அந்த ஒப்பந்தம் 2011ஆம் ஆண்டோடு முடிவடைந்த பிறகு, இரண்டாண்டுகளாகிவிட்டது. மின்வாரியத்தில் பணியாற்றும் இந்த 80 ஆயிரம் பேருக்கும் 1-12-2011 முதல் மின் வாரியம் புதிய ஊதிய உயர்வு வழங்கியிருக்க வேண்டும்.

இது தொடர்பாக மின் வாரியம் 16-12-2011 அன்று; வாரியத்தின் இயக்குநர் (நிதி) தலைமையிலே ஒரு குழுவினை நியமித்தது. அந்தக் குழுவினர், 1-9-2012 அன்றும், 28-2-2013 அன்றும், 27-7-2013 அன்றும் என மூன்று முறை அனைத்துத் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றனர். இவ்வாறு மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்திய பிறகும்,

ஊதிய உயர்வு எவ்வளவு வழங்கப்படும் என்று அறிவிப்பதற்குப் பதிலாக, தொழிலாளர்களின் பணி அளவினைச் சுமார் நாற்பது சதவிகிதம் உயர்த்தி, அதைச் செய்திட தொழிலாளர்கள் முன்வர வேண்டுமென்று, அதற்கான முன்மொழிவினை 23-7-2013 அன்று வழங்கியது. அந்த முன்மொழிவினைத் தொழிற்சங்கத்தினர் ஏற்க மறுத்தனர்.

14-11-2013 அன்று காலை 11 மணி அளவில் அனைத்துத் தொழிற் சங்கங்களையும் மின்வாரியத்தின் பேச்சுவார்த்தைக் குழுவினர் அழைத்துப் பேசினர். அப்போது வாரியம், பணிச்சுமையினைத் தற்சமயம் 40 சதவிகித உயர்விலிருந்து 20 சதவிகிதமாகக் குறைத்துவிட்டது என்றும், மேலும் 1-12-2011 முதல் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வாக அடிப்படைச் சம்பளத்தில் அனைவருக்கும் 5 சதவிகித உயர்வினை வழங்குவதுடன், யாரெல்லாம் 30-11-2011 அன்று 15 ஆண்டுப் பணியினை முடித்துள்ளார்களோ, அவர்களுக்கு ஓராண்டு உயர்வாக 3 சதவிகித உயர்வும் வழங்கப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்கு மின்கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், மற்றும் பண்டகச் சாலைப் பணியாளர் சங்கம், ஊர்தி ஓட்டுனர் சங்கம் என்று அனைத்துச் சங்கங்களும் எதிர்ப்புத் தெரிவித்து, "அதனை ஏற்க மாட்டோம்" என்று கூறியிருக்கிறார்கள். மேலும் கடைசியாக 2007 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, நான் முதலமைச்சராக இருந்த நிலையில், 40 சதவிகித ஊதிய உயர்வு வழங்கப்பட்டதையும், 15 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு ஒரு ஆண்டுயர்வு வழங்கப்பட்டதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

ஊதிய உயர்வு ஒப்பந்தம் என்பதை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என்றிருந்ததை தி.மு. கழக ஆட்சியில்தான் 1989 ஆம் ஆண்டு நான்காண்டுகளுக்கு ஒரு முறை என்று மாற்றப்பட்டது. ஆனால் இதனை அ.தி.மு.க. ஆட்சியில் 1-12-2002 முதல் ஊதிய உயர்வாக 6 சதவிகிதம் அடிப்படை சம்பளத்தில் வழங்கப்பட்டபோது, ஒப்பந்தக் காலம் 5 ஆண்டுகள் என்று மீண்டும் உயர்த்தினார்கள். ஆனால் 2007 ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் இந்த ஒப்பந்தக் காலம் நான்காண்டுகளுக்கு ஒரு முறை என்றும் மீண்டும் அறிவிக்கப்பட்டது.

அதுமாத்திரமல்ல; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஏறத்தாழ 75,720 ஊழியர்களும், 68,518 ஓய்வூதியதாரர்களும் பயன்பெறும் வகையில் 125 கோடி ரூபாய்ச் செலவில் 1.8.2006 முதல் 50 சதவீத அகவிலைப்படி; அடிப்படை ஊதியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2-7-2007 அன்று தி.மு. கழக ஆட்சியில் மின்வாரியப் பொன்விழா சென்னை, நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது. தமிழ்நாடு மின் வாரியப் பொன்விழாவை முன்னிட்டுத் தமிழ்நாடு மின் வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் ஆக மொத்தம் 1,45,813 தொழிலாளர் களுக்குத் தலா 1000 ரூபாய் வீதம் மொத்தம் 14,58,13,000 ரூபாய் ரொக்கப் பரிசு அளிக்கப்பட்டது.

இவ்வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் தொழிலாளர்கள் அனைவருக்கும் சிறப்புப் பரிசாக ஒரு ஊக்க ஊதிய உயர்வு (Incentive Increment) 1.7.2007 முதல் வழங்கப்பட்டது.

இவ்வாரியத்தில் பணியாற்றும் 21,401 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும், 5,646 பகுதி நேரத் தொழிலாளர்களுக்கும் ஆக மொத்தம் 27,047 தொழிலாளர்களுக்குத் தலா 500 ரூபாய் வீதம் 1,35,23,500 ரூபாய் ரொக்கப் பரிசாக அளிக்கப்பட்டதும் தி.மு. கழக ஆட்சியிலேதான்.

2006-2007ஆம் ஆண்டிற்கு, தி.மு.க. ஆட்சியில் 66,066 மின்சார வாரிய ஊழியர்கள் 20 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத்தொகை (போனஸ் - 8.33 சதவீதம் மற்றும் கருணைத் தொகை 11.67 சதவீதம்) பெற்றனர். மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஏறத்தாழ 25,065 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் மற்றும் பகுதிநேர ஊழியர்களுக்கும் ரூ.1,000 கருணைத் தொகையாக வழங்கப்பட்டது. இதனால் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட கூடுதல் செலவு ரூபாய் 57.95 கோடி ஆகும். மேலும் 9,190 அலுவலர்களுக்கு ரூ.1,000 வீதம் கருணைத் தொகையாக வழங்கப்பட்டது. இதனால், மின்சார வாரியத்திற்கு ரூ.91.90 லட்சம் செலவானது.

2007-2008ஆம் ஆண்டிற்கு 69,556 மின்சார வாரிய ஊழியர்கள் 20 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத்தொகை (போனஸ் - 8.33 சதவீதம் மற்றும் கருணைத்தொகை 11.67 சதவீதம்) பெற்றனர். இதனால் வாரியத்திற்கு ரூ.58.43 கோடி செலவு ஏற்பட்டது. மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஏறத்தாழ 20,387 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கும் ரூ.1,000 கருணைத் தொகையாக வழங்கப்பட்டது.

2008-09 ஆம் ஆண்டிற்கு 64,772 மின்சார வாரிய ஊழியர்கள் 20 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத் தொகை (போனஸ் - 8.33 சதவீதம் மற்றும் கருணைத்தொகை 11.67 சதவீதம்) பெற்றனர். இதனால் வாரியத்திற்கு ரூ.54.41 கோடி செலவு ஏற்பட்டது. மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஏறத்தாழ 22,018 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கும் ரூ.1,500 கருணைத் தொகையாக வழங்கப்பட்டது.

வாரியப் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு 2009-10ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கியதில் வாரியத்திற்கு ரூ.60.75 கோடி கூடுதல் செலவானது.

ஊதிய மாற்றக் குழு அமைக்கப்பட்டதன்பேரில் அக்குழு தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின், இறுதியாக அன்றைய மின்துறை அமைச்சர், ஆர்க்காடு வீராசாமி, 9.11.2009 அன்று தொழிற் சங்கங்களின் நிர்வாகிகளைச் சந்தித்து இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளத்தக்க வகையில் அறிவிப்புகளை வெளியிட்டார். இந்த அறிவிப்பின்படி ஊதிய மாற்றம் 1.12.2007 முதல் அமல்படுத்தப்படும்; அகவிலைப்படி, வீட்டுவாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படிகளின் விகிதமானது தமிழக அரசைப் பின்பற்றியே இருக்கும்; பணியாளர்கள் ஏற்கெனவே பெற்று வரும் இதர சிறப்பு ஊதியம் மற்றும் படிகளின் வீதமானது 1.9.2009 முதற்கொண்டு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட அறிவிப்பின்படி, தமிழ்நாடு அரசு அதன் பணியாளர்களுக்கு அகவிலைப்படியை ஒவ்வொரு முறை மாற்றி அமைக்கும்போதும் அதே விகிதத்தில் வாரியப் பணியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா 2005 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது, மின்வாரியத் தொழிலாளர்களுக்கு 6 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கியதையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தி.மு. கழக ஆட்சியிலே 40 சதவிகித ஊதிய உயர்வு வழங்கப்பட்டதற்கு மாறாக - தற்போது 5 சதவிகித ஊதிய உயர்வு என்று கூறுவதை தொ.மு.ச. ஏற்காது என்றும், அதனை உயர்த்திட வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். ஏனென்றால், தொ.மு.ச. சார்பாக ஏற்கனவே ஊதிய உயர்வாக 30 சதவிகிதமும், மற்ற அலவன்ஸ்களில் 20 சதவிகித உயர்வையும் வழங்கிட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஆனால் மின்வாரியம், 5 சதவிகித ஊதிய உயர்வை மட்டும் அறிவித்துவிட்டு, மற்ற அலவன்ஸ்களில் ஒரு ரூபாய் கூட ஏற்கமாட்டோம் என்று தெரிவித்திருப்பது மின்வாரியத் தொழிலாளர்களுக்கு அதிர்ச்சியையும், பெருத்த ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மின் வாரியத் தொழிலாளர்களுக்குரிய ஊதிய உயர்வினைத் தர மறுக்கின்ற அ.தி.மு.க. அரசு அதேநேரத்தில், வீட்டு மின் இணைப்புகளுக்கு முன் அறிவிப்பு இல்லாமல், வைப்புத் தொகை வசூலிப்பதாகவும், மின் கட்டணத்தைப் பல மடங்கு உயர்த்தப்பட்டிருப்பதாகவும் குடும்பத்துப் பெண்களிடம் பேட்டிகண்டு ஏடுகளிலே செய்தி வந்துள்ளது. குடியிருப்பு வீடுகளில் ஏற்கனவே இரண்டு மாதத்திற்கு ஒரு முறை 100 ரூபாய் கட்டியவர்கள் தற்போது சப்தமின்றி உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தால் 300 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை மின் கட்டணம் செலுத்துவதாகவும் - 5000 ரூபாய் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மின் கட்டணம் செலுத்தினால், கூடுதல் வைப்புத் தொகை 2,500 ரூபாய் செலுத்த வலியுறுத்தப்படுவதாகவும் அவர்கள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். அரசு விதிக்கும் இந்தக் கூடுதல் தொகையை நுகர்வோரிடமிருந்து வசூலித்துக் கொடுக்கும் மின்வாரிய அலுவலர்களுக்குத் தரப்பட வேண்டிய ஊதிய உயர்வினைத் தருவதற்கு மட்டும் அரசு மறுப்பது ஏன்?

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுக்காகவும், பக்கம் பக்கமாக விளம்பரங்களைத் தருவதற்காகவும், அரசாங்கப் பணத்தைக் கோடிகோடியாக அள்ளி வீசிச் செலவழிக்கும் அ.தி.மு.க. அரசு, உண்மையாகப் பாடுபடும் தொழிலாளர்களின்

வயிற்றில் இப்படி அடிக்கிறதே என்று மின்வாரியப் பணியாளர்கள் குமுறுகிறார்கள். குறைந்தபட்சம் 25 சதவிகித அளவிற்காவது அடிப்படை ஊதியத்தை உயர்த்திடவும், அலவன்ஸ்களைக் கணிசமாக உயர்த்திட வேண்டுமென்றும் தொழிலாளர்கள் வலியுறுத்துகின்றனர். விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் தொல். திருமாவளவன் நேற்றையதினம் 25 சதவிகித அளவிற்கு ஊதிய உயர்வினை அளிக்க வேண்டுமென்று அறிக்கை கொடுத்துள்ளார்.

பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட எந்தச் சங்கமும் அ.தி.மு.க. அரசால் வழங்கப்படுவதாகக் கூறப்படும் 5 சதவிகித ஊதிய உயர்வினை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த நிலையில் தமிழக அரசு மின்வாரிய அலுவலர்களும் நம்மவர்கள் தான் என்ற எண்ணத்தோடு, விரைவில் அவர்களுடன் ஊதிய உயர்வுக்கான ஒப்பந்தத்தை இறுதி செய்து, குறைந்தபட்சம் 25 சதவிகித அளவிற்காவது உயர்த்திட முன்வர வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

19-11-2013

3829. இங்கிலாந்து பிரதமரும்; நமது இந்தியப் பிரதமரும்!

உடன்பிறப்பே,

உலகத் தமிழர்களும், கனடா, பிரிட்டன், மொரீஷியஸ், ட்ரினிடாட் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பியதற்குப் பிறகு, "காமன்வெல்த்" மாநாடு இலங்கையில் நடைபெற்று முடிந்துவிட்டது. அந்த மாநாட்டின் ஒரே சிறப்பு, அந்த மாநாட்டினை நடத்திய இலங்கை அதிபருக்கு ஏற்பட்ட நெருக்கடியான நிலை; இங்கிலாந்து நாட்டின் பிரதமர் டேவிட் கேமரூன் அவர்களுக்குக் கிடைத்த சர்வதேச கவனம். ஈழத் தமிழர்கள் - இலங்கையிலே வாழ்வோர் மற்றும் உலகமெங்கும் வாழ்வோர், ஏன் தமிழ்நாட்டில் வாழும் அத்தனை தமிழர்களின் நெஞ்சங்களிலும், பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரூன் இடம் பெற்றுவிட்டார். இந்தப் புகழும், பெருமையும் நம்முடைய இந்தியப் பிரதமருக்கும் கிடைத்திருக்கும். எப்போது தெரியுமா? இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில், நமது வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையிலான குழுவும், ஈழத் தமிழர்களுக்கு இலங்கை இழைத்திருக்கும் கொடுமைகளையும், மனித உரிமை மீறல்கள் - போர்க் குற்றங்கள் - இனப்படுகொலை ஆகியவற்றையும் கண்டிக்கும் வகையில் இந்தியா அந்த மாநாட்டில் கலந்துகொள்ளாது; இந்தியாவிலிருந்து பிரதமர் அல்ல, ஒரு "துரும்பு" கூட அந்த மாநாட்டில் கலந்துகொள்ளாது என்று அறிவித்திருக்குமானால், தமிழகமே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருக்கும். தமிழர்கள் ஒருமனதாக அதைப் பாராட்டி மகிழ்ந் திருப்பார்கள்; பிரதமரும் சர்வதேச கவனத்தை ஈர்த்திருப்பார்!

அதுமாத்திரமல்ல; இலங்கை அதிபருக்குத் தலையையும், தமிழர்களுக்கு வாலையும் காட்டி ஏமாற்ற நினைத்ததைப் போல, இரண்டுங் கெட்டான் நிலையில், இந்தியப் பிரதமர் இலங்கைக்குச் செல்லாமல், அதேநேரத்தில் மத்திய அமைச்சரை மட்டும் அனுப்ப முன்வந்த சூழலில், அந்தச் செய்தியையாவது

பிரதமர் ஓர் அறிக்கையாக இலங்கை அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராக அங்கே நடத்திய வன்கொடுமைகளைக் கண்டிக்கின்ற வகையில்தான் இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்ளவில்லை என்று வெளிப்படையாகத் தெரிவித்திருந்தாலோ - அல்லது இலங்கைக்குச் சென்ற மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித், இங்கிலாந்து பிரதமர் செய்ததைப்போல, ஈழத் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று, தொடர்ந்து துன்ப துயரங்களை மட்டுமே அனுபவித்துவரும் தமிழர்களுக் கெல்லாம் இந்தியா சார்பில் ஆறுதல் தெரிவித்து, நெஞ்சைக் கலக்கும் அவர்களின் நிலைமைகளை; இலங்கை அதிபரைச் சந்தித்து எடுத்துக்கூறி, ஈழத் தமிழர்களுக்கு இலங்கை ராணுவம் இன்னமும் செய்துவரும் கொடுமைகளைக் கண்டிக்கும் வகையில் விசாரணைக் குழு ஒன்றை உடனடியாக அமைக்க வேண்டும், தவறினால் ஐ.நா. மன்றத்திலும், மனித உரிமைகள் ஆணையத்திலும் இந்தியா முறையிட்டுத் தீர்மானம் கொண்டு வருவோம் என்று சொல்லியிருந்தாலே, இன்றைக்கு கேமரூன் அவர்களுக்குக் கிடைத்துள்ள அத்தனைப் பெருமைகளும் இந்திய அரசுக்குக் கிடைத்திருக்கும். உலகத் தமிழ்ச் சமுதாயம் நமக்காக இந்திய அரசு துணைபுரிய முன்வந்திருக்கிறது என்றெண்ணி நன்றி செலுத்தியிருக்கும்.

இந்திய அரசின் செயல்பாட்டினைக் கண்டித்து, நேற்றையதினம் அண்ணா அறிவாலயத்தில் கூடிய "டெசோ" கூட்டத்தில் நிறைவேற்றிய முதல் தீர்மானத்தில், "ஈழத் தமிழர் பிரச்சினையிலே நெருக்கமான தொடர்பு இல்லாத இங்கிலாந்து நாட்டின் பிரதமரே, இந்த அளவிற்கு கருத்துக்களை வெளியிட்டிருக்கும்போது, ஈழத் தமிழர்களுக்காக உண்மையிலேயே குரல்கொடுத்து உதவிக்கு வந்திருக்க வேண்டிய உரிமையும், கடமையும், பொறுப்பும் உள்ள சகோதர நாடான இந்தியா, தமிழர்களின் ஒட்டுமொத்த வேண்டுகோளைப் புறக்கணித்து, இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. சல்மான் குர்ஷித் அவர்களை அந்த மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்ததை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது" என்று ஒரு பத்தியில் குறிப்பிட்டிருப்பதோடு, இரண்டாவது தீர்மானத்தில் "பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கும் கருத்துக்களையும், உலகத் தமிழர்களின் உணர்வுகளையும் புரிந்துகொண்டு, இனியாவது

மத்திய அரசு, இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை குறித்து, சர்வ தேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்" என்றும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் செயல்பாடுகள் பற்றி உள்நாட்டு - வெளிநாட்டுப் பத்திரிகைகள் என்ன எழுதியிருக்கின்றன தெரியுமா? இதோ உதாரணத்திற்கு ஒன்றிரண்டு!

The New York Times, in an editorial appearing in the Thursday edition, accused

Sri Lanka of committing "serious human rights violations" and of failing "to provide accountability for war-time abuses." Under the Rajapaksa Government, the paper said, journalists have been systematically threatened, harassed, killed or forced into exile in what amounts to a war on the press, adding, that Colombo did everything it could to sabotage a free and fair outcome (in the Northern elections), including publishing a fake edition of the local newspaper Uthayan. The editorial urged the leaders attending the Commonwealth Heads of Government Meeting to insist that Colombo show meaningful progress in addressing human rights abuses abiding by international standards and to restore constitutional protection for freedom of expression"

●

The Hindu - Editorial - "Manmohan Singh's decision not to attend the summit has brought no political or diplomatic advantage. By comparison, British Prime Minister David Cameron showed far more nous. He silenced political opposition to his participation by using the occasion to publicly criticise Sri Lanka's rights record, issuing an ultimatum to President Rajapaksa to institute by March a credible inquiry into allegations of rights violations. How useful such ultimatums are as a diplomatic strategy is questionable going by the Sri Lankan leader's defiant stance, but the British Prime Minister achieved his stated aim of "focus(ing) the eyes of the world on Sri Lanka". He also did what the Indian Prime Minister should have done - visited Jaffna, connecting with the Tamil people and their problems first-hand. New

Delhi will face its next Sri Lanka test in March 2014 at the U.N. Human Rights Council, but its timing right before the elections means it may blunder through again"

●

இதோ; ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில், ஒருவரின் குரல் : "Lee Rhiannon, a Greens Party Senator from New South Wales, during a debate in the Australian Parliament following her return from Sri Lanka on the eve of the Commonwealth Meeting, said that the situation in the North East under Mahinda Rajapakse regime is dire, that the Sri Lanka army's involvement in civilian life is pervasive and Australia is turning a blind eye to credible allegations of continuing torture, rape and crimes against humanity reported by respected Rights groups and by several video documentaries from Channel-4. Rhiannon pointed out the increasingly voiced broad consensus from several countries for an international investigations into the war-crimes by the Rajapakse regime, and praised the CHOGM boycott of several Prime Ministers in spotlighting the Sri Lanka's continuing dismal rights record and lack of accountability for war-crimes. She added a Catholic father who has documented the details of more than 2000 people disappeared after being arrested alive had told her that crimes that have been committed and those that continue to be perpetrated amount to genecide against the Tamils."

★

The New Indian Express - Editorial - "Rajapaksa needs to remember that nobody trusts his Government when it says there were no violations and the end of the war has brought peace and tranquility to Sri Lanka.

★

"நழுவியது வாய்ப்பு" என்ற தலைப்பிலே "தினமணி" - "இலங்கையில் நடந்த இனப்படு கொலையையும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடந்த போரின் போது அரங்கேற்றப்பட்ட மனித உரிமை மீறலையும் கண்டித்து, அதற்காக காமன் வெல்த் மாநாட்டைப் புறக்கணிப்பதாக வெளிப்படையாகவே அறிவித்தனர்

கனடா, மொரிஷியஸ் பிரதமர்கள். இந்தியப் பிரதமர் அப்படி அறிக்கை எதுவுமே வெளியிடாமல், தனக்குப் பதிலாக வெளியுறவுத் துறை அமைச்சரைப் பங்கேற்க அனுப்பி வைத்து, தமிழக அரசியல் கட்சிகளுக்குத் தலையையும், இலங்கை அரசுக்கு வாலையும் காட்டி நழுவியிருக்கிறார். ஒன்று, புறக்கணித்த ஏனைய இரண்டு பிரதமர்களையும் போல, துணிவுடன் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறலுக்குக் கண்டனம் தெரிவித்து, சர்வதேச விசாரணை கோரியிருக்க வேண்டும். அல்லது, உள்நாட்டு எதிர்ப்பையும் மீறி, இலங்கைக்குச் சென்றிருக்க வேண்டும். பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரூனைப் போல, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திரிகோணமலை பகுதிகளுக்குச் சென்று, அங்கேயுள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, கொழும்பில் நடந்த காமன்வெல்த் மாநாட்டிலும், இலங்கை அதிபர் ராஜபக்ஷேவிடம் நேரிலும் பிரச்சினைகளை எழுப்பி, அதை விவாதப் பொருளாக்கி இருக்க வேண்டும்" என்றெல்லாம் எழுதிய "தினமணி" தலையங்கத்தை முடிக்கும் போது, "அதிபர் ராஜபக்ஷேக்கு ஒரு ஆலோசனை - இலங்கைக்கு என்று தனியாக ஒரு வெளிவிவகார அமைச்சர் தேவையில்லை, அந்த வேலையை சல்மான் குர்ஷித் திறம்படச் செய்கிறார்" என்று கூறியுள்ளது.

★

இலங்கையின் நட்பு நாடு என்பதால், ஏராளமான உதவிகளை இலங்கைக்குச் செய்து வரும் சீனாவேகூட, "பல்வேறு நாடுகளில் உள்ள பொருளாதாரம், சமூக மேம்பாடு ஆகியவற்றோடு ஒப்பிடும்போது, இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாப்பு மாறுபட்டதாக இருக்கிறது; இலங்கை மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், ஊக்கப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று சீனாவின் வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் கியின்காங் நிருபர்களிடம் கூறியிருக்கிறார். ஆனால் இலங்கை சென்ற நம்முடைய வெளியுறவுத் துறை அமைச்சர் வாயைத் திறந்தாரா?

★

ராஜபக்ஷே அரசின் நடவடிக்கைகளைப் பற்றியும், காமன்வெல்த் மாநாடு பற்றியும், இந்தியாவின் அணுகுமுறை

பற்றியும் பலரும் தெரிவித்த கருத்துகளை இங்கே தொகுத்திருக்கிறேன்.

உலகத் தமிழ்ச் சமூகத்தின் ஒன்றுபட்ட பாராட்டினைப் பெறுகின்ற அளவிற்கு, பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரூன், மாநாட்டின் முதல் நாளன்றே, அதாவது 15-11-2013 அன்றே யாழ்ப்பாணத்தில் உருக்குலைந்த பகுதிகளுக்கெல்லாம் சென்று அங்கே பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களையெல்லாம் நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளையெல்லாம் கேட்டிருக்கிறார். அதற்குப் பிறகுதான் அவர் கொழும்பு திரும்பி, அன்றிரவே அதிபர் மகிந்த ராஜபக்ஷேயைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். 1948ல் பிரிட்டனிடமிருந்து இலங்கை விடுதலை பெற்ற பிறகு, யாழ்ப்பாணம் சென்ற முதல் வெளிநாட்டுப் பிரதமரே டேவிட் கேமரூன்தான். 16-11-2013 அன்று டேவிட் கேமரூன் அவர்கள் அளித்த பேட்டியில், "இறுதிக்கட்ட போரின் போது நடைபெற்ற சம்பவங்கள் குறித்துத் தனியாக இலங்கைக்குள் வெளிப்படைத் தன்மை வாய்ந்த விசாரணை நடத்த மார்ச் மாதத்துக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்; கெடு தவறினால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தை அணுகி, சுயேச்சையான விசாரணைக்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவேன். போரின் போது தாக்குதலிலிருந்து தப்பிக்கலாம் என வரவழைத்து, பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு முகாம்களில் என்ன நடந்தது என்பதை அறிய சர்வதேச விசாரணை அவசியம்" என்று சொல்லியிருக்கிறார். மேலும் அவர், "யாழ்ப்பாணத்துக்குச் சில சர்வதேச அமைப்புகளுடன் நான் சென்றதற்குக் காரணம், அங்கு நடந்த மனதை உறையவைக்கும் சம்பவங்களை வெளிச்சம் போட்டு உலகுக்குக் காட்டுவதற்காகத்தான். காமன்வெல்த் குடும்பத்தின் உறுப்பினர் என்ற முறையில் இதைச் செய்தேன்" என்றும் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டன் பிரதமர் செய்ததைத்தான் இந்தியாவும், இந்தியப் பிரதமரும் செய்ய வேண்டுமென்று தமிழ்ச் சமுதாயம் எதிர்பார்த்தது. ஆனால் பிரிட்டன் பிரதமர் தமிழ்ச் சமுதாயத்தின் மீது காட்டுகின்ற அக்கறையையும், பரிதாபத்தையும், இந்தியா காட்டுகிறதா? பிரதமர் மாநாட்டில் கலந்து கொள்ளாதது பற்றி கருத்துத் தெரிவிக்கும் போது, அவர் உண்மையிலே தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்திற்கிணங்க அதிலே கலந்து கொள்ளவில்லை

என்றால், இலங்கைப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் அதற்கான காரணத்தை வெளிப்படையாகவே தெரிவித்திருக்கலாம் அல்லவா? ஈழத் தமிழர்களுக்கு இன்னின்ன கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன, அதற்காக ஒளிவுமறைவற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும், உண்மை உலகத்திற்குத் தெரிய வேண்டும் என்று அந்தக் கடிதத்திலே தெரிவித்திருக்கலாம் அல்லவா? தமிழர்களின் கோரிக்கைகளை யெல்லாம் புறக்கணித்துவிட்டு, பிரதமருக்குப் பதிலாக அந்த மாநாட்டில் கலந்துகொள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இலங்கைக்குச் சென்றாரே, அவர் அங்கே செய்தது என்ன? இங்கிலாந்துப் பிரதமர் மாநாட்டின் முதல் நாள் அன்றே யாழ்ப்பாணத்திற்கு ஓடோடிச் சென்று, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையெல்லாம் பார்த்து ஆறுதல் வழங்கினாரே; அதைப் போலச் செய்தாரா? விசாரணை நடத்தப்பட வேண்டு மென்று அவரைப் போல பேட்டி அளித்தாரா? காமன்வெல்த் மாநாட்டிலே இலங்கையிலே நடைபெற்ற கொடுமைகளைப் பற்றியெல்லாம் கர்ஜித்தாரா? பிரதமர் ஏன் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்று காரணங்களை அடுக்கினாரா? எதுவுமே செய்யவில்லை; சல்மானுக்கென்ன; மாண்டு மடிந்தது நமது தமிழ் இன மக்கள்தானே?

அன்புள்ள,

மு.க.

20-11-2013

3830. ஏவுதளம் இங்கே வந்திட ஏன் வீண் தயக்கம்?

உடன்பிறப்பே,

மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழியிடம், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மகேந்திரகிரியைச் சேர்ந்த திரவ எரிவாயு மையத்தில் பணிபுரிவோர் அனுப்பிய வேண்டுகோளினைப் பரிந்துரை செய்து நான் கடந்த 19-8-2013 அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியிருந்தேன். கனிமொழி என்னிடம் வேண்டுகோள் கடிதத்தைக் கொடுத்ததோடு, மாநிலங்கள் அவையிலும் அதைப்பற்றி எழுப்பிய கேள்விக்கு, அளிக்கப்பட்ட பதிலில், "ISRO has two operational launching pads located at Satish Dhawan Space Centre, Sriharikota - the First Launch Pad and the Second Launch Pad, with necessary infra structure to support eight launches per year. The launching infra structure at Sriharikota will be strengthened with the addition of Second Vehicle Assembly Building at SLP, which will enhance the launch frequency to twelve launches per year by 2017" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

நெல்லை மாவட்டம், மகேந்திரகிரியில் இந்திய விண்வெளி மற்றும் திரவ எரிவாயு தொழில்நுட்ப மையம் அமைக்க வேண்டும் என்றும், தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் "இஸ்ரோ"வின் சார்பில் இரண்டாவது ராக்கெட் ஏவுதளத்தை அமைக்க வேண்டும் என்றும்தான் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

கேரளாவில் உள்ள திருவனந்தபுரத்தில் "இஸ்ரோ" சார்பில் அமைக்கப்பட்டுள்ள இந்திய வானியல் தொழில் நுட்பப் பயிலகம், வான்வெளி தொடர்பான நுட்பவியல்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆனால் வானியல் மற்றும் திரவ எரிவாயு தொடர்பானவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துப்

பயிலகம் அமைக்கப்பட வேண்டுமென்பது தற்போதைய நிலையில் மிக அவசரமும், முக்கியத்துவமும் வாய்ந்ததாகும்.

நமது நாட்டில் வான்வெளி மற்றும் திரவ எரிவாயு தொடர்பான நிபுணத்துவம் மிக்கவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே இருப்பதாக எனக்குத் தகவல் தரப்பட்டுள்ளது. விமானங்கள் வடிவமைப்பு, கெலிகாப்டர் வடிவமைப்பு, அதிவேக விமானங்கள் உருவாக்கம், வான்வெளி தொழில்நுட்ப ஆய்வுகள் ஆகியவை சார்ந்த படிப்புகளுக்கு மகேந்திரகிரியில் ஏற்படவிருக்கும் திரவ எரிவாயு மையம் தகுதி வாய்ந்த ஒரு சிறப்பு நிறுவனமாக இருக்கும் என்பதால், அதனை ஏற்படுத்திட நான் பரிந்துரை செய்ய விரும்புகிறேன். அந்தப் புதிய மையத்திற்குத் தேவையான அளவு நிலமும், நடைமுறைப்படுத்திட ஆலோசனை வழங்கும் தொழில் நுட்ப நிபுணத்துவமும் உள்ளன என்பதையும் தெரிவித்திட விரும்புகிறேன்.

வானியல் துறையில் "இஸ்ரோ" தனது இரண்டாவது ஏவுதளத்தை அமைக்கும் திட்டம் 12வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. அதற்காகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுப் புதிய ஏவுதளம் அமைக்க இடம் தேர்வு செய்வது தொடர்பாக அந்தக் குழு ஆய்வு செய்தும் வருகிறது.

எதிர்பார்த்த அளவிற்குத் தென்தமிழ்நாடு தொழிற் துறையில் முன்னேற்றம் அடையாமல் இருக்கிறது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து அடிப்படை அம்சங்களும் பூகோள ரீதியாகத் தென் தமிழகத்தில் அமைந்திருப்பதோடு, திறன்மிக்க மனித ஆற்றல் மிகுதியாகவே அங்கே இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதி மத்திய அரசின் உரிய கவனத்திற்கும், தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்கும் தேர்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

நெல்லை மாவட்டம், மகேந்திரகிரியில் "இந்திய வான்வெளி - திரவ எரிவாயு மையம்" மற்றும் தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினத்தில் "இரண்டாவது ராக்கெட் ஏவுதளம்" அமைப்பதன் மூலம் அந்த மண்டலமே வளர்ச்சி பெற்ற மண்டலமாக நிச்சயம் மாற்றமடையும் என்பதோடு நமது நாட்டில் தொழில்நுட்பப் புரட்சிக்கு வித்திடும் பகுதியாகவும் அது உருவாகும்.

எனவே இந்த இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களை அமைப்பது குறித்து உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று என்னுடைய அந்தக் கடிதத்தில் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

இந்த நிலையில்தான், கடந்த வாரத்தில் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து "மங்கல்யான்" விண்கலம், முதன்முறையாகச் செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டுள்ளது. 450 கோடி ரூபாய்ச் செலவில், இந்திய விஞ்ஞானிகளால், உருவாக்கப்பட்ட விண்கலம் ஆகும் அது. செவ்வாய்க் கிரகத்துக்கான இந்த விண்கலத்தைத் திட்டமிட்ட பாதையில் தொழில் நுட்ப ரீதியாகத் துல்லியமாக நிலைநிறுத்தியதன் மூலம் நமது இந்திய விஞ்ஞானிகள் உலகத்தின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளனர். பூமியிலிருந்து சுமார் 300 நாட்களில் 44 கோடி கிலோ மீட்டர் தூரம் பயணித்துச் செவ்வாய்க் கிரகத்துக்கு அருகில் 2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் செல்லவிருக்கும் இந்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளும். அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய யூனியன் வரிசையில் நான்காவதாக இந்தியா இந்த முயற்சியில் இடம்பெற்றுள்ளது என்பது ஒவ்வொரு இந்தியரும் பெருமைகொள்ளத்தக்க செய்தியாகும்.

இதற்குக் காரணமாக இருந்த இஸ்ரோ தலைவர் கே. ராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் அரும்பணியாற்றியிருக்கும் அனைத்து விஞ்ஞானிகளுக்கும் எனது இதயபூர்வமான பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். இந்தியாவுக்குப் பெருமையையும், மகிழ்ச்சியையும் தேடித் தந்துள்ள "இஸ்ரோ", தமிழகத்தைப் பொறுத்தவரை தொடர்ந்து கசப்புணர்வோடும் பாராமுகமாகவும் நடந்துகொள்கிறதோ என்ற ஒரு அய்யப்பாடு நிலவுகிறது.

12வது ஐந்தாண்டுத் திட்டத்தில் விண்வெளி ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காக ஆண்டுக்கு 60 திட்டங்கள் என வகுக்கப்பட்டன. இதற்காகக் கணிசமான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளிமையத்தில் இரண்டு ராக்கெட்

ஏவு தளங்கள் ஏற்கனவே உள்ளன. பல செயற்கைக்கோள் திட்டங்கள் செயல்பாட்டில் இருப்பதாலும், பல நாடுகள் செயற்கைக்கோள்களை ஏவிட இந்தியாவை அணுகுவதாலும் மேலும் ஒரு ராக்கெட் ஏவுதளத்தை அங்கேயே அமைக்க "இஸ்ரோ" முடிவெடுத்தது. ஆனால் அதற்கு மிகவும் பொருத்தமான இடம், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினமே என்றுதான் "இஸ்ரோ"வைச் சேர்ந்த பல நிபுணர்கள் வலியுறுத்தினார்கள். எனினும் அதனைப் பரிசீலனைக்கே எடுத்துக்கொள்ளாமல், ஸ்ரீஹரி கோட்டாவிலேயே தொடர்ந்து மூன்றாவது தளத்தையும் அமைக்கும் பணிகளை "இஸ்ரோ" தொடங்கிவிட்டது என்கிறார்கள்.

அறிவியல் அடிப்படையிலும், பூகோள ரீதியாகவும், பாதுகாப்புக் கோணத்திலும் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ள குலசேகரப்பட்டினத்தில் ஏவுதளம் அமைத்தால், வழக்கமாக ஆகும் செலவில் பல கோடி ரூபாயை மீதப்படுத்த வாய்ப்பு இருந்தும், சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய இந்தத் திட்டத்தைச் சிலர் திசை மாற்றி விட்டதாக அதிகாரிகளே வருந்துகிறார்கள்.

இதைப்பற்றித் திரவ இயக்க உந்து மைய ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. எம். மனோகரன் கூறும்போது, "ஸ்ரீஹரிகோட்டாவைவிட ராக்கெட் ஏவுதளம் அமைக்க மிகச் சிறந்த இடம் குலசேகரப்பட்டினம். இதனைத் தொழில் நுட்ப விபரங்கள் மூலமே உறுதிப்படுத்திட முடியும். பி.எஸ்.எல்.வி. செயற்கைக்கோள்களைத் தெற்கு நோக்கி ஏவி 450 முதல் 1000 கி.மீ. தூரத்தில் நிலை நிறுத்த வேண்டும். ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட்டுகளைப் பூமத்திய ரேகைக்கு மேலாகக் கிழக்கு நோக்கி ஏவி 36 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் நிலைநிறுத்த வேண்டும்.

உலக விண்வெளி விதிமுறைப்படி ஒரு நாடு ஏவும் ராக்கெட்டுகள், இன்னொரு நாட்டின் மீது பறக்கக்கூடாது. ஆனால் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து நேரடியாக ராக்கெட்டுகளை ஏவினால், அது இலங்கை, இந்தோனேசியா நாடுகள் மீது பறக்க வாய்ப்பு உண்டு. அதற்காக தென்கிழக்காக அனுப்பி, மீண்டும் திசை திருப்பி, சுற்றுப்பாதைக்கு இப்போது கொண்டுவர வேண்டியிருக்கிறது. இதனால் பல கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகிறது.

பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டின் எரிபொருள் நிரப்பும் பகுதி நான்கு பாகங்களை உள்ளடக்கியது. இலங்கையைச் சுற்ற கூடுதல் எரிபொருள் நிரப்புவதற்காக மட்டுமே நான்காவது பாகம் இணைக்கப்படுகிறது. இதற்கு மட்டுமே செலவாகும் தொகை சுமார் இருபது கோடி ரூபாயாகும். குலசேகரப்பட்டினத்தில் இருந்து ராக்கெட்டை அனுப்பினால், இதனைத் தவிர்க்க முடியும்.

செயற்கைக்கோளின் பயன்பாடு அதன் எடையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. கூடுதல் எடையுள்ள செயற்கைக்கோளில் கூடுதலாக டிரான்ஸ்பாண்டர்கள், ஆராய்ச்சிக் கருவிகள் எடுத்துச் செல்ல முடியும். ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டின் மூலம் 1600 கிலோ எடை கொண்ட செயற்கைக்கோளை 650 கி.மீ. தூரத்தில் நிலைநிறுத்த முடியும். ஆனால் குலசேகரப்பட்டினத்தில் இருந்து ஏவும் போது 2200 கிலோ எடையுள்ள செயற்கைக்கோளை அனுப்புவது சாத்தியம். 600 கிலோ கூடுதல் எடை கிடைக்கும். இன்றைக்கு சர்வதேச மார்க்கெட்டில் 1 கிலோ எடையை விண்ணில் அனுப்ப பன்னிரண்டு இலட்சம் ரூபாய் முதல் பதினெட்டு இலட்சம் ரூபாய் வரை செலவாகும். அப்படிப் பார்த்தால் 600 கிலோ கூடுதல் எடைக்கான செலவு 90 கோடி ரூபாய். எனவே குலசேகரப்பட்டினத்திலிருந்து ஏவும்போது, கூடுதல் எடையும் செலவை மீதப்படுத்தும் நன்மைகளும் ஏற்படும்.

குலசேகரப்பட்டினத்திலிருந்து ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட் மூலம் செயற்கைக்கோள்களை ஏவினால் 36 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தைக் குறைவான பயண நேரத்தில் கடந்துவிட முடியும். இலக்கைத் தொட்ட பிறகு, மிஞ்சியுள்ள எரிபொருளை வைத்தே செயற்கைக்கோளின் ஆயுள் நிச்சயிக்கப்படும். பயண நேரம் குறைவதால், எரிபொருள் மீதமாகி, செயற்கைக்கோளின் ஆயுள் இரண்டு ஆண்டுகள்வரை கூடுதலாகும். எனவே குலசேகரப்பட்டினத்திலிருந்து ஒரு பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டை ஏவுவதன் மூலம் குறைந்தபட்சம் 110 கோடி ரூபாய் மீதப்படும்.

மூன்றாவது ஏவுதளம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை 12 ஆயிரம் கோடி ரூபாய். இந்தத் தொகையை 109 பி.எஸ்.எல்.வி. ராக்கெட் அனுப்புவதால் மிச்சமாகும் தொகையை வைத்தே ஈட்டிவிடலாம். ஒரே இடத்தில் கூடுதல் ஏவுதளங்களை அமைப்பதில் பல பிரச்சினைகள் உண்டு.

ஸ்ரீஹரிகோட்டா புயல் பாதிப்பு அதிகமுள்ள பகுதி என்பதால், ஆண்டுக்கு இரண்டு மாதங்கள் பணி நடப்பதில்லை. அதனால் உற்பத்தித்திறன் குறைகிறது. எதிர்பாராத விதமாக ஒரு ஏவுதளத்தில் விபத்துகள் நடந்தால் மற்ற ராக்கெட் தளங்களும் பாதிக்கப்படும். இயற்கைச் சீற்றங்களாலும், அந்நிய சக்திகளாலும் ஆபத்து வரும்போது ஒட்டுமொத்தத் தொழில் நுட்பமும் சிதைய வாய்ப்புண்டு" என்று புள்ளி விபரங்களோடு திரு. மனோகரன் விவரித்திருக்கிறார்.

குலசேகரப்பட்டினம் புறக்கணிக்கப்படுவதற்குச் சில காரணங்கள் கூறப்படுகிறது. கேரளா மற்றும் ஆந்திர மாநிலங்களின் செல்வாக்குதான் "இஸ்ரோ"வில் அதிகமாக உள்ளது. தனக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, தமிழ்நாட்டிற்குக் கிடைத்து விடக்கூடாது என்ற பிடிவாத மனநிலையில் சிலர் செயல்படுகிறார்கள். ராக்கெட் தயாரிப்பில் அறுபது சதவிகிதப் பணிகள் தமிழகத்தில் உள்ள மகேந்திரகிரியில்தான் நடக்கின்றன. ஆனால் அதற்கான ஆளெடுப்புப் பணிகளோ திருவனந்தபுரத்தில் நடக்கிறது. இதனால் சில குறிப்பிட்ட மாநிலங்களைச் சேர்ந்தவர்களே பணிக்கு வருகிறார்கள்.

புதிய ராக்கெட் ஏவுதளம் அமைக்க முடிவெடுத்த உடனேயே அவசரக் கோலத்தில் ஆந்திர மாநிலம், கிருஷ்ணா மாவட்டத்தில் 300 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி விட்டார்கள். தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்த பிறகு, பேராசிரியர் நாராயணா தலைமையில் ஒரு குழு அமைத்தார்கள். 2013 பிப்ரவரிக்குள் இடத்தைத் தேர்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அந்தக் குழுவில் இடம்பெற்றவர்களில் நான்கு பேர் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள். இரண்டு பேர் கேரளாவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மட்டுமே தமிழர். இந்தக் குழு குலசேகரப் பட்டினத்தை ஆய்வு செய்யவே இல்லை. இடத்திற்காக ஆந்திர முதல்வரைச் சந்தித்த "இஸ்ரோ" அதிகாரிகள், தமிழக முதல்வரைச் சந்திக்கவே இல்லை என்கிறார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட அரிய தொழில் வளர்ச்சிக்கான தேவைகளைப்பற்றியெல்லாம் சிந்தித்துச் செயல்படுவதற்குத் தமிழ்நாட்டில் மக்கள் நலனைத் தலையானதெனக் கருதும் ஓர் அரசு வேண்டும்; அது செயல் ஊக்கம் மிக்கதாக இருந்திட வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் இதைப் பற்றியெல்லாமா சிந்திக்கிறார்கள்!

இந்தக் குலசேகரப்பட்டினம் ஏவுதளத்திற்காக நான் பிரதமருக்குக் கடந்த ஆகஸ்ட் மாதமே கடிதம் எழுதி, அந்தச் செய்தி ஏடுகளிலும் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினையில் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன? என்னதான் நாம் பிரதமருக்கு எழுதினாலும், தமிழக அரசின் சார்பில் கோரிக்கை வைத்தால்தானே அந்த வேண்டுகோள் முக்கியத்துவம் பெறும். இதற்குத் தமிழக அரசு ஏன் முன்வரவில்லை?

ராக்கெட் ஏவுதளம் குலசேகரப்பட்டினத்தில் அமைந்தால் நேரடியாக 4000 பேருக்கும், மறைமுகமாக 10 ஆயிரம் பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அதிகப்பட்சமாக 3 லட்சம் கோடி ரூபாய் வரை முதலீடுகள் வரும். அவற்றின் மூலம் 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பும், சுமார் ஒரு இலட்சம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

திரவ உந்துவிசை கல்வி நிறுவனம் ஏற்படுத்தப்படுவதால், இதன்மூலம் தமிழகத்திலிருந்து ஏராளமான விஞ்ஞானிகள் உருவாக வாய்ப்புகள் ஏற்படும்.

ரயில் வசதிகள் மேம்படுத்தப்படும். சாலைகள் விரிவாக்கப்படும். தூத்துக்குடி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றப்படும்.

இந்த நன்மைகளெல்லாம் விளைந்திட குலசேகரப்பட்டினத்தில் ஏவுதளம் அமைய வேண்டும். அந்த ஏவுதளம் அமைய, அதனை அமைத்தே ஆக வேண்டுமென்ற முனைப்போடு செயல்படுகின்ற ஒரு அரசு தமிழகத்திலே அமைய வேண்டும். அதுவே நாட்டிற்கும் நல்லது! நாட்டு மக்களுக்கும் நல்லது!

அன்புள்ள,

மு.க.

21-11-2013

3831. அராஜகத்தின் முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது!

உடன்பிறப்பே,

ஏற்கனவே முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, இரண்டு தொகுதிகளுக்கு மேல் ஒருவர் ஒரு தேர்தலில் போட்டியிட முடியாது என்பது முன்பே தெரிந்திருந்த நிலையிலும், 2001ஆம் ஆண்டு தேர்தலில் நான்கு இடங்களில் போட்டியிட்ட வழக்கில், உச்ச நீதிமன்றம் அவருக்கு "நோட்டீஸ்" அனுப்பியிருப்பது பற்றி இன்று அனைத்து நாளேடுகளிலும் செய்தி வந்துள்ளது.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு எப்படி 14 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டதோ, பிறந்த நாள் விழாவுக்கான பரிசை முதல்வராக இருந்த நிலையில் தன் சொந்தக் கணக்கில் வரவு வைத்துக்கொண்ட வழக்கு எப்படி 13 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டதோ, அதுபோலவே நான்கு தொகுதிகளில் அவர் போட்டியிட்ட வழக்கு 12 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட "மாமாங்க" வழக்காகும்.

12 ஆண்டுகள் ஆகிவிட்டதால், இந்த வழக்கு பற்றிய விவரத்தைச் சுருக்கமாக நினைவூட்டுகிறேன். 2001ஆம் ஆண்டு நடைபெற்ற அந்தத் தேர்தலில் ஜெயலலிதா; மக்களின் அனுதாபத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நான்கு தொகுதிகளிலே போட்டியிட, வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த காரணத்தால், நான்கு வேட்பு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. தேர்தலுக்கான மனுத் தாக்கல் 2001ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் தேதி தொடங்கியது. அன்றைய தினமே கிருஷ்ணகிரி தொகுதியில் தேர்தல் அதிகாரி எம்.மதிவாணனிடம் தனது வேட்பு மனுவை ஜெயலலிதா தாக்கல் செய்தார். ஏப்ரல் 18ஆம் தேதி ஆண்டிப்பட்டி தொகுதியில் தனது வேட்பு மனுவை ஜெயா என்ற தேர்தல் அதிகாரியிடம் தாக்கல் செய்தார். வேட்புமனு தாக்கல் செய்ய இறுதி நாளான ஏப்ரல் 23ஆம் தேதி ஜெயலலிதா

சார்பில் புவனகிரி, புதுக்கோட்டை ஆகிய தொகுதிகளிலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

வேட்பு மனுக்களின் பரிசீலனை 24ஆம் தேதி நடந்தது. கிருஷ்ணகிரி தொகுதி தேர்தல் அதிகாரி மதிவாணன் வேட்புமனுவைப் பரிசீலித்துவிட்டு, ஜெயலலிதாவுக்கு 2 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாலும், அவர் இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருப்பதாலும் அவரது வேட்புமனு நிராகரிக்கப்படுவதாக அறிவித்தார். டான்சி நில பேர வழக்கில் ஜெயலலிதாவுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஒருவருக்கு இரண்டாண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், அவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8வது பிரிவு கூறுகிறது. (மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 8 (3)ன்படி நீதிமன்றத்தால் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட நாள் முதல் தேர்தலில் போட்டியிடத் தகுதியை இழந்தவராக ஆகிறார். இந்தத் தகுதி இழப்பு அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்கும். இது தேர்தல் ஆணையத்தின் சட்டம்) இந்தச் சுற்றறிக்கையை 1997இல் இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்டது. மேற்கு வங்க மாநில முன்னாள் முதல்வரும், பிரபல வழக்கறிஞருமான சித்தார்த்த சங்கர் ராய் ஜெயலலிதாவுக்காக ஆஜராகி, அவருக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனை உயர் நீதிமன்றத்தால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், எனவே அவரது மனுவை ஏற்க வேண்டுமென்றும் வாதாடினார். ஆனால் தேர்தல் அதிகாரி, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் தேர்தல் ஆணையத்தின் 1997ஆம் வருஷத்திய சுற்றறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் ஜெயலலிதாவின் வேட்பு மனுவைத் தள்ளுபடி செய்தார். ஆண்டிப்பட்டியிலும் இதே காரணங்கள் கூறப்பட்டு வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. புவனகிரியிலும், புதுக்கோட்டையிலும் 2 தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த காரணத்தால் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. (அந்தத்

தேர்தல் விதிமுறை என்னவென்றால், "If it is found at the time of scrutiny that a candidate has been nominated from more than two constituencies of the same class of a general election or the simultaneous by-elections, his nomination paper will be rejected. A candidate who has been nominated from more than two constituencies will also be guilty of making a false declaration that in his nomination paper which contains a categorical declaration that he has not been nominated from more than two constituencies" - வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்படும்போது ஒரு வேட்பாளர் பொதுத் தேர்தலிலோ இடைத்தேர்தலிலோ இரண்டு இடங்களுக்கு மேல் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தால் அவருடைய வேட்புமனு தள்ளுபடி செய்யப்படும். இரண்டு இடங்களுக்கு மேல் வேட்பு மனுத் தாக்கல் செய்பவர், அவரது வேட்பு மனுவிலே இரண்டு இடங்களுக்கு மேல் போட்டியிடவில்லை என்ற திட்டவட்டமான உறுதிமொழிக்கு மாறாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டிற்கும் உரியவர் ஆவார்)

ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது குறித்து 2001ஆம் ஆண்டு ஏப்ரல் 26ந்தேதியன்று "எக்ஸ்பிரஸ்" நாளிதழும், "இந்து" நாளிதழும் எழுதிய தலையங்கங்கள் முக்கியமாகக் கருதப்பட வேண்டியவைகளாகும்.

"எக்ஸ்பிரஸ்" நாளிதழ், "அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா நான்கு இடங்களிலே தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. தேர்தல் ஆணையம் 1997இல் பிறப்பித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற ஒருவர் தேர்தலிலே நிற்க முடியாது என்ற ஆணையைத் தேர்தல் அதிகாரிகள் கண்டிப்பாகப் பின்பற்றியிருக்கிறார்கள். இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்யக் கூடாது என்று சட்டத்திலே இருந்த போதிலும், நான்கு தொகுதிகளிலே தனது அதிர்ஷ்டத்தை ஜெயலலிதா சோதிக்க முயற்சித்தார். பொது மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காத ஜெயலலிதா வேட்பு மனு தள்ளுபடி செய்வதின் காரணமாகத் தனக்கு ஏற்படும் அனுதாப அலையை வைத்து ஆட்சிக்கு வந்துவிடலாம் என்று கணக்கிட்டுள்ளார்" என்று எழுதியது.

ஆனாலும் ஜெயலலிதா தனது தேர்தல் பிரச்சாரத்தில் அவரது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு தி.மு.க. தான் காரணம் என்றும் தன்னைத் தேர்தலில் நிற்க விடாமல் செய்துவிட்டார்கள் என்றும் பிரச்சாரம் செய்து பொது மக்களின் அனுதாபத்தைப் பெற்றிட முயற்சித்து, மக்களைத் திசை திருப்பி அதன் காரணமாக அ.தி.மு.க. வெற்றி பெற்றது.

6-5-2001 தேதிய "ஆனந்தவிகடன்" வார இதழ் தனது தலையங்கத்தில், "இந்தத் தேர்தலில் ஜெயலலிதாவின் அணுகுமுறை நியாய தர்மங்களையெல்லாம் மீறிய ஒன்றாக இருந்து வருகிறது. வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரும், சட்டசபை உறுப்பினராகத் தேர்வு செய்யப்படுவதற்கான தகுதியைத் தான் இழந்துவிட்ட பிறகும் தன்னுடைய திட்டத்தை ஜெயலலிதா மாற்றிக் கொண்டதாகவே தெரியவில்லை. அ.தி.மு.க. கூட்டணி ஜெயித்தால் நானே முதல்வராக இருப்பேன் என்று போகும் இடமெல்லாம் அவர் பறைசாற்றி வருகிறார். அரசியல் மரபுகள் பற்றியெல்லாம் மக்களுக்கு என்ன தெரியும் என்ற நினைப்பில் தன்னை முதல்வராக முன்னிறுத்திப் பேசினால்தான் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற சிந்தனையில் மக்களையே முட்டாளாக்கத் துணிந்திருப்பது வேதனைக்குரிய விஷயம். போட்டியிடுவதற்குத் தடை ஏற்பட்ட பிறகு, அந்தத் தீர்ப்பை முழுமனதோடு ஏற்று "எங்கள் கூட்டணியை வெற்றி பெறச் செய்யுங்கள். அப்படிச் செய்தால், என் சார்பாக உங்களுக்கு ஏற்புடைய ஒரு தலைவரை முதல்வர் பதவியில் அமர்த்துவேன், நல்லாட்சி வழங்கப் பாடுபடுவேன்" என்று ஜெயலலிதா சொல்லியிருந்தால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்கும்" என்று "ஆனந்தவிகடன்" எழுதியது.

தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த 14ஆம் தேதி அன்றே அவசர அவசரமாக அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டம் கூட்டப்பெற்றது. ஜெயலலிதா சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனடியாக 14ஆம் தேதி மாலையிலேயே அவருக்கு, கவர்னர் பாத்திமா பீவி அவசர அவசரமாகப் பதவிப் பிரமாணமும் செய்து வைத்தார். பதவியேற்கத் தடை கோரி யாராவது வழக்கு தொடுத்து

விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அவசர அவசரமாகப் பதவியேற்றதாக அப்போது ஏடுகள் எல்லாம் கூறின.

15-5-2001 "இந்து" தலையங்கத்தில், "சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து உறுதியாகத் தடை செய்யப்பட்ட ஒருவர் முதலமைச்சராவது இதுவே முதல் முறை என்றும், சட்டப்படி நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவர் இத்தகைய பதவியில் அமர்வதும் இதுவே முதல் முறை என்றும் இரு நிலைகளிலும் அவருடைய செயல் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வையே மீறுவதோடு சட்ட ரீதியாகவும், நியாயபூர்வமாகவும் வேதனையளிக்கும் வினாக்களை எழுப்பியுள்ளது" என்றும் எழுதியது. மேலும் சில பிரபல ஆங்கில ஏடுகள் ஊழல் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டவர் முதல்வர் பதவியேற்றுத் தார்மீக நெறியை மீறிவிட்டார் என்றும் எழுதின.

கவர்னர் இவ்வாறு அவசர அவசரமாகப் பதவியேற்பு செய்துவைத்ததையொட்டி கவர்னர் மீது வழக்கு தொடரப்படும் என்று ஒரு கருத்து கூறப்பட்டபோது, ஜெயலலிதா; "கவர்னரின் செயல்களை எதிர்த்து, கோர்ட்டில் வழக்கு தொடர முடியாது, கவர்னர் முடிவை யாரும் கேள்வி கேட்க முடியாது" என்று கூறினார். ஆனால் 1995ஆம் ஆண்டு டான்சி ஊழல் தொடர்பான வழக்கில் ஜெயலலிதாமீது வழக்கு தொடர அன்றைய ஆளுநர் சென்னாரெட்டி அனுமதியளித்தபோது, கவர்னருக்கு எதிராக ஜெயலலிதா உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமல்ல, "கவர்னர் சென்னாரெட்டி அவர்களை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்று மத்திய அரசை பேரவை கோருகிறது" என்ற தீர்மானத்தையும் பேரவையிலே நிறைவேற்றினார்.

24-4-2001 அன்றே ஜெயலலிதா இரண்டு வேட்பு மனுக்களுக்கு மேல் தாக்கல் செய்து விட்டு, அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்று பொய்யான உறுதி மொழிகளைத் தெரிவித்ததற்காகக் குற்ற வழக்குகளை அவர்மீது தொடரக் கேட்டுக் கொண்டு திரு. செ.குப்புசாமி தேர்தல் ஆணையத்திடம் கடிதம் கொடுத்தார். பிறகு தேர்தலுக்குப் பிறகு குப்புசாமி மற்றும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேர்தல் ஆணையத்திற்கு

ஜெயலலிதாமீது வழக்குத் தொடரக் கேட்டுக்கொண்டனர். 9-8-2001 அன்று தேர்தல் ஆணையம், தமிழகத் தேர்தல் அதிகாரிக்கு வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்து இந்தியத் தண்டனைச் சட்டம் 177, ஐ.பி.சி.யின்கீழ் வழக்குத் தாக்கல் செய்ய அறிவுரை வழங்கியது.

8-3-2002 அன்று செ.குப்புசாமி சென்னை உயர் நீதி மன்றத்தில் தேர்தல் ஆணையம் தகுந்த நடவடிக்கை இந்தப் பிரச்சினையில் எடுக்க வேண்டுமென்று ரிட் மனு ஒன்றினைத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு 2012ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், "தேர்தலில் போட்டியிடும் ஒருவர் இரண்டு தொகுதிக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்யக் கூடாது என்று சட்டம் கூறும்போது, ஏன் நான்கு தொகுதிகளில் போட்டியிட ஜெயலலிதா வேட்பு மனு தாக்கல் செய்தார்? முதல்வராக இருந்த ஒருவர் இப்படி மனு தாக்கல் செய்தது ஏன்? கட்சியின் தலைவராக இருப்பவர், பொது ஊழியராக இருக்கும் ஒருவர் இப்படி வேட்பு மனு தாக்கல் செய்தது தவறானது. இதுபோல செய்திருப்பது நியாயமா? சரியா?" என்றெல்லாம் கேட்டனர்.

மீண்டும் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 21-12-2012 அன்று விசாரணைக்கு வந்தபோது, ஜெயலலிதா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஆஜரான வழக்கறிஞர் லலித், ஜெயலலிதாவின் மனுக்களைத் தேர்தல் ஆணையம் தள்ளுபடி செய்துவிட்டதால், இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தலையிட முடியாது என்று வாதிட்டபோது, குறுக்கிட்ட நீதிபதிகள், "தேர்தல் அதிகாரிகள், ஜெயலலிதாவின் ரசிகர்களாக இருந்திருக்கலாம், அதன் அடிப்படையில் நடவடிக்கை தேவையில்லை என்று முடிவு செய்திருக்கலாம்" என்று குறிப்பிட்டதோடு, "பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர் என்பதற்காக ஜெயலலிதா தேர்தல் விதிகளை மீறலாமா, சட்டம் அமைதியாக இருக்க வேண்டுமா" என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள்.

இறுதியாக, "புவனகிரி, புதுக்கோட்டை தொகுதிகளின் தேர்தல் அதிகாரிகள் அளித்த அறிக்கைகளை, சென்னை உயர்

நீதிமன்றம் முறையாகப் பரிசீலிக்காததால், அந்த அறிக்கைகளின் அடிப்படையில், உயர் நீதிமன்றமே மீண்டும் விசாரித்து, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று உத்தரவிட்ட நீதிபதிகள், "இந்தக் குற்றம் ஆறு மாத சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய குற்றம்" என்றும் தெரிவித்துள்ளார்கள்.

இந்த அடிப்படையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், வழக்கைத் தொடுத்த செ.குப்புசாமி மறைந்துவிட்ட காரணத்தால், அதையே ஒரு காரணமாகக் கூறி, சென்னை உயர் நீதிமன்றம் இந்த வழக்கினைத் தள்ளுபடி செய்தது. செ.குப்புசாமி மறைந்து விட்டார் என்ற போதிலும், அந்த வழக்கினைத் தொடுத்த ஏனைய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஏ.கே.எஸ்.விஜயன் இந்த வழக்கினைத் தள்ளுபடி செய்தது தவறு என்று உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

இந்த மேல்முறையீட்டு மனுவின் மீதுதான் நேற்றையதினம் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் எச்.எல். தத்து மற்றும் மதன் லோக்கூர் ஆகியோர் அடங்கிய அமர்வின் முன் விசாரணை நடந்திருக்கிறது. அப்போது ஏ.கே.எஸ்.விஜயன் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், அந்தி அர்ஜுனா அவர்கள் "ஒருவர் காலமாகி விட்டதாலேயே, அவர் தொடர்ந்த பொது நல வழக்கைத் தள்ளுபடி செய்துவிட முடியாது" என்று வாதிட்டிருக்கிறார். செ.குப்புசாமியோடு சேர்ந்து அப்போதே ஏ.கே.எஸ். விஜயனும் தேர்தல் அதிகாரிகளிடம் புகார் செய்திருப்பதை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இதனையெல்லாம் ஏற்றுக் கொண்ட உச்சநீதி மன்ற நீதிபதிகள், ஜெயலலிதாவுக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் பதில் அளிக்குமாறு "நோட்டீஸ்" அனுப்பிட ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

இதுபோன்ற "மாமாங்கமாக" இழுத்தடிக்கும் வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள், தற்போது பதவியில் இருக்கிறோம் என்ற இறுமாப்பில் எதிர்க் கட்சியினர்மீது எதற்கெடுத்தாலும் "அவதூறு வழக்கு"களைத் தொடுத்து நீதிமன்றத்திற்கு இழுத்தடிக்கப் பார்க்கிறார்கள். நீதிமன்றத்திற்கு வரத்தயார் என்று

கூறி, அங்கே செல்ல முற்பட்டால், அதற்கும் இடைஞ்சல் செய்ய எண்ணுகிறார்கள். உதாரணமாக நேற்றையதினம் திண்டுக்கல் நகருக்கு அவதூறு வழக்கு ஒன்றில் ஆஜராக கழகப் பொருளாளர் தம்பி மு.க.ஸ்டாலின் வருவதையொட்டி, கழகத் தோழர்கள் அவரை வரவேற்று "ப்ளக்ஸ் போர்டு"கள் சிலவற்றை வைத்திருக்கிறார்கள். அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல், அ.தி.மு.க.வினர் நீதிமன்றம் வரை சென்று கழக வழக்கறிஞர்களையும், பொதுமக்களையும் பயங்கரமாகத் தாக்கிக் காயப்படுத்தி, அந்தச் செய்தி புகைப்படங்களோடு அனைத்து நாளேடுகளிலும் வெளி வந்துள்ளது. அதிகாரத்தில் இருக்கும் திமிரில் ஆட்டம் போடலாம் என்று அராஜக சேட்டைகளில் ஈடுபட்டால், அதற்கு முடிவு கட்டும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை ஆளும் தரப்பில் இருப்போர் மறந்துவிட வேண்டாம்!

அன்புள்ள,

மு.க.

24-11-2013

3832. உரிமை கேட்கிற நேரத்தில் கடமை மறந்து விடலாமா?

உடன்பிறப்பே,

தமிழகத்தின் தேவைகளை மத்திய அரசு புறக்கணிப்பதாக அ.தி.மு.க. அரசு குறை கூறுகின்ற நேரத்தில், மத்திய அரசு, தமிழகத்திற்காக ஒதுக்குகின்ற நிதியையாவது முறையாகச் செலவிடுவதற்குத் தமிழக அரசு முன்வர வேண்டாமா? தமிழகத்தில் மத்திய அரசின் நெடுஞ்சாலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முறைகேடு தலைவிரித்தாடுகிறது என்றும், தமிழக அரசின் ஒத்துழைப்பு இல்லாததால், தமிழகத்தில் பத்தாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள தேசிய நெடுஞ்சாலைத் திட்டப்பணிகள் முடங்கிக் கிடக்கின்றன என்றும் நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தின் சென்னை மண்டல தலைமைப் பொது மேலாளர் ஐ.ஜி. ரெட்டி வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

இதே குற்றச்சாட்டினை மத்திய அரசின் அமைச்சர் வெளிப்படையாகவே தெரிவித்து, அதைப்பற்றி விரைவில் தமிழக முதல்வரைச் சந்திக்கத் தான் நேரம் கேட்டிருப்பதாகவும், அப்போது இந்தத் திட்டங்களைப் பற்றியெல்லாம் உரையாடவிருக்கிறேன் என்றும் குறிப்பிட் டிருந்தார். அதன் பிறகு அந்தப் பேச்சுவார்த்தை நடந்ததாகவே செய்திகள் வரவில்லை.

திரு. ஐ.ஜி. ரெட்டி கூறும்போது, “தேசிய நெடுஞ்சாலை ஆணையம், ஒவ்வொரு மாநிலத்திலும் தேசிய நெடுஞ்சாலைகள் விரிவாக்கம், மேம்பாடு என்று பல்வேறு அபிவிருத்திப் பணிகளைச் செய்து தருகிறது. இதற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில், மாநில அரசுகள் கையெழுத்திட வேண்டும். புதிய திட்டங்களுக்கான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தமிழக அரசு மறுக்கிறது. ஏற்கெனவே போடப்பட்ட பழைய ஒப்பந்தங்களையும் மதிக்க மறுக்கிறது. அதனால் தமிழகத்தில் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு அதிகமான திட்டப் பணிகள் முடங்கிக்கிடக்கின்றன.

நில ஆக்கிரமிப்புகளை அகற்றி நிலம் ஒப்படைத்தலில் தாமதம், ஜல்லி, மண் உள்பட பல்வேறு கனிமப் பொருள்களுக்கான அனுமதியை வழங்காமல் இழுத்தடித்தல், பொதுப்பணித் துறையினால் வழங்கப்பட்ட தடையில்லாச் சான்றினைத் திரும்பப் பெறுதல், தடையில்லாச் சான்றிதழ் தராமல் இழுத்தடித்தல் என்று மாநில அரசின் ஒத்துழையாமை நீடிக்கிறது. தமிழக அரசிடம் பலமுறை இந்தப் பிரச்சினைகளை எடுத்துச்சென்றோம். ஆனால், பயன் இல்லை. மற்ற மாநிலங்களில் மாநில அரசுகளே முன்வந்து ஒப்பந்தம் செய்து கொண்டு, நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளைச் செயல்படுத்துகின்றன. ஆனால் இங்கே ஒத்துழைப்பு ஒப்பந்தமே கிடையாது. இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்ற ஒப்பந்தம் செய்து கொள்வது முக்கியமானது. உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமென்றால், தேசிய நெடுஞ் சாலை விரிவாக்கத் திட்டப் பணிகளுக்கு 2,614 ஹெக்டேர் நிலம் தேவைப்படுகிறது. ஆனால் இதற்கான ஆணை இன்னும் தமிழக அரசால் பிறப்பிக்கப்படவில்லை.

திண்டுக்கல் - தேனி - குமுளி சாலையை அகலப்படுத்தும் திட்டம் இன்னும் முடியவில்லை. 135 கிலோ மீட்டர் நீளம் உள்ள இந்தச் சாலைத் திட்டத்தைக் கடந்த ஆகஸ்ட் மாதத்துக்குள் முடித்திருக்க வேண்டும். ஆனால், 80 கிலோ மீட்டர் நீளத்துக்கு மட்டுமே சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது. இதுதான் மாநில அரசு, ஒவ்வொரு திட்டங்களுக்கும் எங்களுக்குக் கொடுக்கும் ஒத்துழைப்பின் யதார்த்தம்" என்று தமிழக அரசின் மீது பயங்கரக் குற்றச்சாட்டினை, திரு. ரெட்டி சுமத்தியிருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்குத் தமிழக அரசின் சார்பில் எந்தப் பதிலும் இதுவரை சொல்லப்படவில்லை. அதிலிருந்து அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை என்றாகி விடுகிறது. தேசிய நெடுஞ் சாலை ஆணையத்தின் பொது மேலாளர் தனிப்பட்ட முறையில் இந்தக் குறைகளைச் சொல்லவில்லை. தமிழக அரசு ஒத்துழையாமை காரணத்தால், தமிழகத்திற்கு வர வேண்டிய 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலான திட்டங்கள் வரவில்லை என்கிறார்.

திரு. ரெட்டி அவர்கள் வேறு சில குற்றச்சாட்டுகளையும் கூறி, அவை ஜி.வி. இதழில் பட்டியலிடப்பட்டுள்ளது. அவற்றில் சில :-

"நெடுஞ்சாலைப் பணி ஒப்பந்தம் எடுத்தவருக்கு அந்த வேலைக்குத் தேவையான மண், ஜல்லி உள்ளிட்ட பொருள்களின் தேவைப் பட்டியலையும், "ஒர்க் ஆர்டரை"யும் கொடுத்து விடுவோம். அவர்கள், சாலைகள் அமைப்பதற்கான கருங்கல், ஜல்லிகளை வாங்க, மாவட்ட நிலவியம் மற்றும் சுரங்கத் துறையின் அனுமதி பெற வேண்டும். இந்த அனுமதியைப் பெறுவதற்காக ஒரு கன மீட்டருக்கு 100 ரூபாய் வீதம் தங்களுக்குக் கையூட்டுத் தர வேண்டுமென்று ஆளுங்கட்சியினர் மற்றும் அதிகாரிகள் அடங்கிய கூட்டணி கட்டாயப்படுத்துகிறது. இதற்காக, பெருமளவில் கையூட்டுத் தரவேண்டியுள்ளது. மாநில அரசின் மூலம் செயல்படுத்தப்படும் நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கும் இதே நிலைதான். நெடுஞ்சாலைத் துறைகளில் நடக்கும் இந்த ஊழல்கள் குறித்துத் தமிழக அரசிடமும் காவல் துறையினரிடமும் புகார் அளித்தும் அதை அவர்கள் பதிவு செய்யவில்லை. காவல் துறையினர் எங்கள் ஒப்பந்தக்காரர் அளிக்கும் புகாரை வாங்காமல், அதிகாரமிக்க ஒருவர் கொடுக்கும் புகார்களை எங்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராகப் பதிவு செய்கிறார்கள். தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளுக்கு ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டைகளை விளக்கி, தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்குக் கடிதம் எழுதியுள்ளோம்.

கிடப்பில் போடப்பட்டுள்ள திட்டங்கள் என்று எடுத்துக் கொண்டால், சென்னை - திருப்பதி சாலையை அகலப்படுத்தும் திட்டம் - ஆந்திர மாநிலப் பகுதியில் பணி முழுமை பெற்று விட்டது. ஆனால், தமிழகத்தில் அதற்கான அனுமதி கிடைக்காத காரணத்தால், பணி இன்னும் தொடங்கப்படவே இல்லை.

மாநில அரசின் ஒத்துழைப்பு இல்லாததால், தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையப் பணிகளைச் செய்வதற்கு எந்த ஒப்பந்தக்காரரும் முன்வரவில்லை. ஏற்கெனவே பெற்ற ஒப்பந்தங்களையும் வேண்டாம் என்கிறார்கள்.

2013ஆம் ஆண்டு அக்டோபரில் முடிவடைந்திருக்க வேண்டிய சென்னை - திருப்பதி சாலை, சென்னை தடா சாலை, ஜூனில் முடிவடைந்திருக்க வேண்டிய எண்ணூர் - மணலி சாலை அபிவிருத்தித் திட்டம், மே மாதமே முடிவடைந்திருக்க வேண்டிய திருச்சி - காரைக்குடி சாலைத் திட்டம், டிசம்பரில் முடிவடைய வேண்டிய கிருஷ்ணகிரி - வாலாஜாபாத் சாலைத்

திட்டம், செப்டம்பரில் முடிந்திருக்க வேண்டிய சென்னை துறைமுகம் - மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம் ஆகியவை பாதிக்கப்பட்டிருக்கின்றன”

- என்றெல்லாம் அந்த மூத்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம் பற்றி நானே பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் இந்த ஆட்சியினர் எதற்கும் பதிலளிக்கவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்தத் திட்டம் குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கே தொடுத்துவிட்டது.

கடந்த வாரம் இந்த வழக்கில் ஆஜரான மத்திய அரசின் வழக்கறிஞர் வில்சன் தாக்கல் செய்த மனுவில், “மதுவாயல் பறக்கும் சாலை அமைக்கும் திட்டத்துக்கு, தமிழக அரசு விதித்த தடை தொடர்ந்து நீடித்தால், திட்டத்தை மத்திய அரசு உடனே வாபஸ் பெறும். மத்திய அரசு திட்டத்தைக் கை விட்டால் தமிழகத்துக்கு இழப்பு ஏற்படும். சென்னைத் துறைமுகத்துக்கு வரும் சரக்குகளில் 80 சதவிகிதம் சாலை மார்க்கமாகத்தான் வருகின்றன.

மெட்ரோ ரெயில் திட்டம் நடப்பதால், இப்போது சென்னை துறைமுகத்துக்குச் சரக்கு வாகனங்கள் அனுமதிக்கப்பட்ட நேரத்தில்கூட வருவதில் சிக்கல் உள்ளது. தென் பகுதி வழியாக இரவில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் சரக்கு வாகனங்கள் அனுமதிக்கப்படுகின்றன. துறைமுகத்துக்கு வரும் சுமார் 70 சதவிகித சரக்குகள் தென் பகுதியிலிருந்து வருகின்றன. இந்தச் சாலை அமைக்கப்பட்டால், துறைமுகம் மேலும் வளர்ச்சி அடையும். இந்தச் சாலையை நம்பி திருப்பெரும்புதூரில் ரூ. 3000 கோடி செலவில் கன்டெய்னர் டெர்மினல் அமைக்க 121 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. நிலங்களின் உரிமையாளர்களுக்கு இழப்பீடாக 235 கோடி ரூபாய் தர முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சென்னை பெங்களூரு சாலையில் மப்பேட்டில் உலர் துறைமுகம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் சாலைப்பணிகளைத் தொடருமாறு உத்தரவிடவேண்டும். தேசிய நெடுஞ்சாலை ஆணையம், கடல், ஆறுகள், ஏரிகள் மீது பல்வேறு இடங்களில் பாலம் அமைத்துச் சாலைகள் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் கூவம் ஆற்றில் மட்டும் பாலம் கட்டி ஏன் சாலை

அமைக்கக்கூடாது? இந்தத் திட்டத்தில் 1800 கோடி ரூபாய்ச் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 900 கோடி ரூபாய் வரை இதுவரை செலவிடப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் பில்லர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சாலை திட்டம் பொதுமக்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டது. தனி நபரின் நலனுக்காக அல்ல. எனவே இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த உத்தரவிட வேண்டும். தற்போது சென்னைத் துறைமுகத்திலிருந்து மதுரவாயல் செல்ல ஒன்றரை மணி நேரம் ஆகிறது. இந்தத் திட்டம் வந்த பிறகு துறைமுகத்தில் இருந்து பறக்கும் சாலை வழியாக 25 நிமிடத்தில் மதுரவாயல் சென்று விடலாம்." என்றெல்லாம் நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். உயர்நீதி மன்ற நீதிபதிகள் இந்த வழக்கு விசாரணையை மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைத்திருக்கிறார்கள்.

இந்தத் துறைக்கான மத்திய அமைச்சரும், இந்தத் துறையின் உயர் அதிகாரியும் வெளிப்படையாக இவ்வளவு குற்றச்சாட்டுகளைத் தமிழக அரசின் மீது சுமத்தியிருக்கிறார்களே, இதற்குத் தமிழக முதலமைச்சரோ, அந்தத் துறையின் அமைச்சரோ பொறுப்புணர்வோடு பதில் சொல்ல வேண்டாமா? கேவலம் ஏதோ ஒரு காரணம் சொல்லி, 1885 கோடி ரூபாய் மதிப்பிலான மதுரவாயல்-துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டத்தை, சுமார் 900 கோடி ரூபாய் செலவு செய்த பிறகு, ஓராண்டு காலமாகக் கிடப்பிலே போட்டிருப்பது சரியானதுதானா? இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தம் செய்துகொண்ட நிறுவனம், ஏற்பட்ட கால தாமதத்திற்காகச் சுமார் 900 கோடி ரூபாயை இழப்பீட்டுத் தொகையாகத் தர வேண்டுமென்று வழக்குத் தொடுத்திருக்கிறதே; அந்தத் தொகையை யாருடைய கணக்கிலே சேர்ப்பது? ஆளுங்கட்சி, முதலமைச்சர் என்றால் எதை வேண்டுமானாலும் செய்யலாமா? மக்களின் வரிப்பணம் அல்லவா வீணடிக்கப்படுகிறது.

இதோ; "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில இதழில், 23-11-2013 அன்று, "Some of the biggest road projects in the city have been hit by a severe staff shortage in the State Highways Department's metro wing, which is functioning at just 50% of the sanctioned strength. 63 projects, including grade separators at Anna Nagar, Moolakadai, Porur, and Thirumangalam, as well as rail over-bridges and foot over-bridges

worth more than Rs. 1,325.8 crore, are being inordinately delayed because of this, say officials. There are only 14 assistant engineers against the 20 sanctioned, and they have their hands full. There are 152 new projects, including those for upgrading Inner Ring Road, EVR Salai and Anna Salai to "world standards", for which "detailed project reports" need to be prepared. Several proposals seeking Japanese International Corporation Agency funding for projects worth Rs. 2,000 crore also need to be processed" என்றெல்லாம் எழுதிக் கொண்டே போகிறது. இதற்கெல்லாம் அரசுத் தரப்பில் அளிக்கப்படும் பதில் என்ன? இந்தக் குற்றச்சாட்டினைத் தி.மு.கழகமா சொல்கிறது?

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நானோ, திராவிட முன்னேற்றக் கழகமோ, அல்லது தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரோ, அல்லது வேறு எதிர்க் கட்சிகளின் தலைவர்களோ தெரிவிக்கவில்லை. பொறுப்பான மத்திய அமைச்சர், மத்திய அரசின் மூத்த அதிகாரி ஆகியோர் வெளிப்படையாகத் தெரிவித்து, ஏடுகளில் வெளிவந்திருக்கும் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு முறையான பதில்களை உடனடியாக முதலமைச்சர் தெரிவிப்பதுதான் பொருத்தமாக இருக்கும்! மத்திய அரசு நாம் கோரிய உதவித் தொகையை முறையாக வழங்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் போது, ஒதுக்கப்பட்ட நிதியை மாநில அரசு முறையாகச் செலவழிக்கவில்லை என்ற கேள்விக்கு இடம் தந்துவிடக் கூடாது அல்லவா? மாநில அரசுக்குத் தேவையான நிதியைக் கேட்பது நமது உரிமை! ஒதுக்கப்பட்ட நிதியை முறையாகச் செலவழிக்க வேண்டியது நம்முடைய கடமை! உரிமை கேட்கிற நேரத்தில் கடமை மறந்து விடலாமா?

அன்புள்ள,

மு.க.

28-11-2013

3833. வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசுவதா?

உடன்பிறப்பே,

ஏற்காடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில், 31 அமைச்சர்கள், 61 பேர் கொண்ட தேர்தல் பணிக்குழு ஆகியோர் செய்துள்ள பிரச்சாரம் (?) போதாதென்று, 28ஆம் தேதி காலை 8.30 மணிக்கு சென்னையில் கிளம்பி, விமானத்தில் திருச்சி சென்று, அங்கிருந்து கெலிகாப்டரில் ஏற்காடு சென்று, சுமார் 5 மணி நேரத்தில் 9 இடங்களில் பேசிவிட்டு, அல்ல, அல்ல, தயாரித்து வைக்கப்பட்டிருந்த உரையைப் படித்து முடித்து விட்டு, அன்று மாலையிலேயே சென்னை திரும்பிவிட்டார், முதலமைச்சர் ஜெயலலிதா!

அவர் தனது பேச்சில், ஏற்காடு தொகுதிக்கு உட்பட்ட வாழப்பாடியில் அரசு ஆஸ்பத்திரி, அரசு கலைக் கல்லூரி, தான்தோன்றீஸ்வரர் கோவிலில் கிரிவலத்துக்கு 3.5 மீட்டருக்கு தார்ச்சாலை, எம். பெருமாபாளையம், வெள்ளாள குண்டம், சிங்கிபுரம் ஊராட்சி, அயோத்தியாப்பட்டணம் மற்றும் கூட்டாத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல், மின்னாம்பள்ளி, அனுப்பூர், அயோத்தியாப்பட்டணம் மற்றும் ஏ.என். மங்கலம் ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனைகள் அமைத்தல், நெய்யமலை ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைத்தல் என்பன போன்றவை அமைக்கப்படும் என்று வாக்குறுதியளித்துப் பேசி, அந்தப் பேச்சு நாளேடுகளில் வந்துள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியிலே இருக்கும்போது நடைபெறும் இடைத்தேர்தல்களில் முதலமைச்சர் பிரச்சாரத்திற்குச் செல்லும்போதெல்லாம் இப்படிப்பட்ட வாக்குறுதிகளை வாரியிறைப்பதைத் தமிழ்நாடு பலமுறை கண்டிருக்கின்றது.

2001ஆம் ஆண்டு அக்டோபர் 16, 18 ஆகிய நாட்களில் தமிழகத்தில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றபோது அ.தி.மு.க. நடத்திய அராஜகம் கொஞ்ச நஞ்சமல்ல. சென்னை மாநகராட்சி மேயர் பதவிக்கு மு.க. ஸ்டாலின் போட்டியிட்டதால் ஆளுங்கட்சியினர் எப்படியும் அவரைத் தோற்கடிக்க வேண்டுமென்பதற்காகப் படாதபாடுபட்டனர். வாக்கு எண்ணிக்கையின் போதும் போலீசாரின் துணையோடு அ.தி.மு.க.வினர் அத்துமீறி நுழைந்து ரகளையில் ஈடுபட்டனர். ஆனால் இவ்வளவு சூதுக்களையும் தாண்டிச் சென்னை மாநகரில் மேயர் பொறுப்புக்குப் போட்டியிட்ட தம்பி மு.க. ஸ்டாலின் 12 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இரண்டு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டியவர் வெறும் 12 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. மதுரை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் தம்பி செ.இராமச்சந்திரன் சுமார் 28 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மேயராக வெற்றி பெற்றார். தமிழகம் முழுவதும் இவ்வளவு அராஜகங்களும், வன்முறைகளும் ஆளுங்கட்சியினரால் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் நடைபெற்றதற்குப் பிறகும், 45 நகராட்சிகளிலும், 100க்கும் மேற்பட்ட பேரூராட்சிகளிலும் கழகக் கூட்டணி வெற்றி பெற்றது.

2002ஆம் ஆண்டு பிப்ரவரியில் சைதாப் பேட்டை, வாணியம்பாடி, ஆண்டிப்பட்டி ஆகிய மூன்று தொகுதிகளிலும் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் ஆளுங்கட்சியின் அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் இருந்தது. தேர்தல் அதிகாரி அந்தத் தொகுதியைச் சுற்றிப்பார்த்து விட்டு, தாக்கல் செய்த அறிக்கையில், “Mr. Rao returned to the Capital on Sunday night and in his report submitted to the Commission yesterday observed that large scale rigging and malpractices had been done in the revision of the rolls” என்று கூறியிருந்தார். முறைகேடுகளைக் கண்ட இந்தியத் தேர்தல் ஆணையம் சைதாப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய இரண்டு தொகுதிகளில் இடைத் தேர்தலை ஒத்திவைத்து அறிவித்தது.

ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலைத் தொடர்ந்து வாணியம்பாடி, சைதாப்பேட்டை, அச்சரப்பாக்கம் ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் 2002ஆம் ஆண்டு மே திங்கள் 31ஆம் தேதி நடைபெற்றது. அ.தி.மு.க.வினர் வழக்கம்போல

இடைத்தேர்தல்களை எப்படி நடத்துவார்களோ அதே பாணியில் நடத்தினர்.

சாத்தான்குளம் தொகுதி இடைத் தேர்தல் குறித்து 2-2-2003 தேதிய "கல்கி" எழுதிய தலையங்கத்தில் ஒரு பகுதி வருமாறு :-

"ஆட்சியாளர்கள் ஏற்கனவே சாத்தான்குள மக்களை 'மகிழ்விக்கும்' பணிகளில் இறங்கியிருப்பதாகக் கருணாநிதி வெளிப்படையாகவே பேசியிருக்கிறார். பத்திரிகைச் செய்திகளும் இதை உறுதிசெய்கின்றன. தேர்தல் நன்னடத்தை விதிகளை மீறவும், அதேசமயம் அவற்றுக்குள் சிக்காமல் தப்பவும் ஆளுங் கட்சிக்கு நன்றாகவே தெரியும். தமிழகத்தில் அ.தி.மு.க. அல்லாத அனைத்துக் கட்சிகளுமே தங்களுக்கிடையேயான வேறுபாடுகளை மறந்து மாநிலத்தின் நன்மை குறித்து யோசிக்க வேண்டிய கட்டம் இது. இன்றைய அ.தி.மு.க. ஆட்சியின் போக்கை மக்கள் விரும்பவில்லை; லஞ்சம் கொடுத்துக்கூட அ.தி.மு.க.வால் வாக்குகளைப் பெறமுடியவில்லை என்பது நிரூபணமாக வேண்டும். இம்முறை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகம் என்ன நன்மை கண்டது? அல்லது முன்னேற்றம் கண்டது? ஜெயலலிதா பேரிலான வழக்குகள் நீக்கப்படவும் நீர்த்துப் போகவும் செய்தது நீங்கலாக என்ன சாதனை நடந்தேறியிருக்கிறது? ஜனநாயக மரபுகளும், பத்திரிகைச் சுதந்திரமும் எப்படியெல்லாம் புறக்கணிக்கப்பட்டு அவமதிக்கப்பட்டன? இவற்றையும், இன்னும் பலவற்றையும் எடுத்துச் சொல்லி அ.தி.மு.க.வைத் தோற்கடிப்பது முக்கியம்; ஜனநாயகத்தை ஜெயிக்கவைப்பது அதனினும் முக்கியம்!" என்று "கல்கி" எழுதியிருந்தது.

அப்போது அந்தத் தொகுதியில் பிரச்சாரம் செய்த முதலமைச்சர் ஜெயலலிதா, சாத்தான் குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கப்படும் என்றும், மகளிர்கல்லூரி தொடங்கப்படும் என்றும், பாலிடெக்னிக் தொடங்கப்படும் என்றும் பேசினார். சாத்தான்குளம் தொகுதி மக்களுக்கு இலவசமாக வேட்டி, சேலை, குத்து விளக்கு, கைக் கடிகாரம், கிரிக்கெட் மட்டை, கைப்பந்து போன்றவற்றை ஆளுங்கட்சி வழங்குவதாக "இந்து" ஏடு எழுதியது. உடனே அந்த ஏட்டின் மீதும், செய்தியாளர் மீதும் 50 லட்ச ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு அரசு வழக்குத் தொடர்ந்தது. உயர்நீதிமன்றத்தில் அந்தச் செய்தியாளர், தான் சாத்தான்குளம் சென்று சுற்றிப் பார்த்துத்தான்

செய்திகளைச் சேகரித்து வெளியிட்டதாகவும், அந்த ஏட்டிலே வந்த செய்திகள் அனைத்தும் உண்மை என்றும், அதற்கான ஆதாரங்களைத்தான் வைத்துள்ளதாகவும் மனுத் தாக்கல் செய்த பிறகு, அரசு தான் தொடுத்த வழக்கை வலியுறுத்தாமல் விட்டு விட்டது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த தலைமை தேர்தல் ஆணையம் முறைகேடுகளையெல்லாம் தமிழக அரசுக்குச் சுட்டிக்காட்டி விளக்கம் தருமாறு தலைமைச் செயலாளரிடம் கோரிப் பெற்றது. அந்தப் பதிலை ஆணையம் ஆய்ந்த பிறகு தமிழக அரசுக்கு ஒரு கண்டனக் கடிதத்தையே அனுப்பியது. அதில் தலைமைச் செயலாளரின் விளக்கம் திருப்தி அளிக்க வில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வதாகவும், தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ஆளுங்கட்சி அரசு சார்பிலான முன்னறிவிப்புகளைச் செய்து ஆதாயம் தேடக் கூடாது என்று தேர்தல் விதி உள்ளது என்றும், ஆட்சி கையில் இருக்கிறது என்பதற்காக ஆளுங்கட்சி எவ்விதச் சலுகைகளையும் பெற முடியாது என்றும் குறிப்பிட்டது. மேலும் அந்தக் கடிதத்தில், "தமிழக முதலமைச்சர் சாத்தான் குளம் தேர்தல் பிரச்சாரத்தில் புதிய திட்டங்களை அறிவித்தது சம்பந்தமான அவரது செயல்பாடுகளை தேர்தல் கமிஷன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். முதலமைச்சர் தனது பிரச்சாரத்தில் புதிய திட்டங்களை அறிவித்தது தேர்தல் ஆதாயம் பெறுவதற்காகத்தான் என்று தேர்தல் கமிஷன் உறுதியாகக் கருதுகிறது. ஜெயலலிதாவின் பிரச்சார முறை ஏற்கத்தக்கதல்ல என்று நிராகரிக்கிறோம். அவர் உறுதிமொழிகளை அளித்தது, தேர்தல் விதிகளை மீறிய குற்றமே என்று தேர்தல் கமிஷன் முடிவுக்கு வருகிறது" என்று கடிதம் எழுதியது.

சாத்தான்குளம் இடைத்தேர்தல் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையம் எழுப்பிய கேள்விக்குத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் எழுதிய பதிலில் சாத்தான்குளம் தொகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை, பெண்கள் கல்லூரி, விளையாட்டுமையம் ஆகியவைகளை அமைப்பது குறித்து பரிசீலிப்பதாகத்தான் முதலமைச்சர் பேசினார் என்று எழுதினார். ஆனால் ஆளுங்கட்சியின் அதிகாரபூர்வமான "நமது எம்.ஜி.ஆர்" நாளேட்டில் வெளிவந்த ஜெயலலிதாவின் பேச்சு வருமாறு :-

"தேர்தல் முடிந்தவுடன் மகளிர் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் ஆகிய இரண்டையும் சாத்தான்குளத்தில் நிறுவுவதற்கு அனைத்து உதவிகளையும் செய்வேன். உடன்குடி சாத்தான்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து முடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் தொகுதியில் உள்ள இளைஞர்களின் சாதனைக் கனவுகளை நனவாக்க அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட ஒரு விளையாட்டு மையம் இங்குத் தொடங்கப்படும்."

இந்தப் பேச்சில் "பரிசீலிக்கப்படும்" என்று பேசியிருக்கிறாரா என்பதை இதைப் படிப்பவர்களே நினைத்துப் பார்க்கட்டும். ஆனால் நேர்மையாக நடக்க வேண்டிய ஐ.ஏ.எஸ்., மூத்த அதிகாரியான தலைமைச் செயலாளர் தேர்தல் ஆணையத்திற்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டியவர், தன் கடிதத்தில் தவறான தகவலை அப்போது தெரிவித்தார். ஆனால் அதற்குத் தேர்தல் ஆணையம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான் வேதனையிலும் வேதனை.

தேர்தல் ஆணையம் தலைமைச் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்காவிட்டாலும், சாத்தான் குளம் தொகுதியிலே அமைச்சர்களின் ஆணைகள் அத்தனைகளையும் உடனுக்குடன் விரைந்து நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் முன்வரத் தயங்கினார் என்பதற்காகத் தமிழக அரசு தேர்தல் முடிவு வெளிவந்த அடுத்த நாளே; அந்த மாவட்ட ஆட்சித் தலைவரை வேறெந்தப் பதவியும் கொடுக்காமல் அவசர அவசரமாக மாற்றி ஆணை பிறப்பித்தது. தேர்தல் ஆணையம் ஜெயலலிதா மீது நடவடிக்கை எடுக்காவிட்டாலும், தலைமைத் தேர்தல் ஆணையர் லிங்டோ டெல்லியில் செய்தியாளர்கள் பேட்டியில், "கண்டனம் தெரிவித்த பிறகும் அரசியல்வாதிகள் வேதனைப்படாதது வருத்தத்திற் குரியது" என்று கூறியதோடு, ஜெயலலிதா அரசு எப்படிப்பட்டது என்பதற்கு ஆணையர் லிங்டோ அவர்கள் 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அளித்த ஒரு பேட்டியில், "The unusually candid Lyngdoh said that the worst States in terms of Electoral Malpractices were U.P., Bihar and Tamil Nadu. - உத்தரப்பிரதேசம், பீகார் மற்றும் தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்களும்தான் தேர்தல் முறைகேடுகளுக்குப் பெயர் பெற்ற மாநிலங்களாகும்'' என்றும் தெரிவித்தார்.

இப்படிப்பட்ட பாராட்டுரைகளைப் பெற்ற அ.தி.மு.க. ஆட்சியில்தான் தற்போது ஏற்காடு இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இந்த இடைத்தேர்தலில் அந்தத் தொகுதியில் என்னென்ன நடைபெறுகிறது என்பதை; தொடர்ந்து செய்திகளைத் தொலைக்காட்சிகளில் பார்ப்பவர்களும், ஏடுகளில் படிப்பவர்களும் நன்றாகவே அறிந்து கொள்ளலாம்.

முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றையதினம் அவருடைய உரையில் முக்கியமாகப் பேசியிருப்பது மின்வெட்டு பற்றியது என்பதும், நில அபகரிப்பு என்ற பேச்சுக்கே தன் ஆட்சியில் இடமில்லை என்பதும்தான்! சிரிப்புதான் வருகிறது! நில அபகரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று முதலமைச்சர் பேசிய அன்று காலையில் வெளிவந்த "தி இந்து" நாளிதழிலேயே அ.தி.மு.க. அமைச்சர்களில் ஒருவர் செய்த நில அபகரிப்பு பற்றி ஈரோடு காவல் துறை அதிகாரியிடம் புகார் மனு தரப்பட்டு, அதைப்பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சாங்கோபாங்கமாகச் செய்தி வந்திருக்கிறது. ஒரு சில மாதங்களுக்கு முன்புதான் கரூரைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் செய்த நில அபகரிப்பு பற்றியும், நீதிமன்றம் வரை அந்த வழக்கு சென்றது பற்றியும் விரிவாகச் செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால் முதல் அமைச்சர் ஏற்காட்டில், நில அபகரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பேசியிருக்கிறார்.

நில அபகரிப்புத் தொந்தரவின்றி மக்கள் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று முதலமைச்சர் பேசிய அன்றுதான் ஈரோட்டைச் சேர்ந்த 76 வயது நிறைந்த முதியவர் முத்துச்சாமி என்பவர், தனது நிலத்தை அமைச்சர் தரப்பினர் அபகரித்துக் கொண்ட காரணத்தால், தன் மனைவி இறந்தே போய்விட்டது பற்றியும், அவரின் இறுதிச் சடங்கிற்குத் தன்னால் செல்ல முடியவில்லை என்பது பற்றியும் செய்தியாளர்களிடம் கண்ணீரோடு கதறியிருக்கிறார்.

முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்காட்டில் பேசும்போது, "மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் மின் நிலையங்கள் எல்லாம் எப்பொழுதும் போலத் தொடர்ந்து நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறார். இது உண்மையா?

28-11-2013 தேதிய "தினமலர்" இதழில், "தூத்துக்குடி மாவட்டத்தில், தமிழக அரசுக்குச் சொந்தமாக அனல் மின் நிலையம் உள்ளது. இங்கு தலா, 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட, ஐந்து அலகுகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மூன்றாவது அலகில் அடிக்கடி பாய்லர் ட்யூப் பஞ்சர் ஏற்பட்டு வருவதால், அவ்வப்போது மின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இதையடுத்து, இந்த அலகில், 30 நாட்களுக்குத் தொடர்ச்சியாக மின் உற்பத்தியை நிறுத்தி, பராமரிப்பு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதன்படி மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது" என்று செய்தி வந்துள்ளது. இதுதான் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் மின் நிலையங்கள் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருப்பதற்கான அடையாளமா?

22-11-2013 தேதிய "தினமலர்" இதழில், "ஏற்கனவே, தமிழக மின் வாரியத்திற்குச் சொந்தமான மேட்டூர் விரிவாக்கம், வடசென்னை விரிவாக்க அலகுகளில் இருந்து, 1,200 மெகாவாட் அளவிற்கு, மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில்" என்று எழுதப்பட் டிருக்கிறதே, இதுதான் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் மின் நிலையங்கள் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருப்பதற்கான அடையாளமா?

மேலும் முதலமைச்சர் பேசும்போது, "மத்திய அரசு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் அனல் மின் நிலையத்தில் மின்சார இழப்பு ஏற்பட்டுள்ளது" என்று கூறியிருக்கிறார். அதற்கு உதாரணமாக,

"கல்பாக்கம், நெய்வேலி உள்ளிட்ட மத்திய அரசு நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மின் உற்பத்தி நிலையங்களில்தான் சொல்லி வைத்தாற்போல் ஒரே சமயத்தில் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன" என்றும் முதல் அமைச்சர் ஏற்காட்டில் பேசியிருக்கிறார்.

மத்திய அரசு நிறுவனங்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டிருப்பது உண்மைதான். அது முதல் அமைச்சர் கூறியிருப் பதைப் போல மத்திய அரசின் சதியினால் அல்ல. "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதைப் போல, முன்பெல்லாம் சொல்வாரே, சாலையில் ஏதாவது விபத்து

என்றால், அது தன்னைக் கொல்வதற்காக நடத்தப்பட்ட சதிகள் என்றெல்லாம் அபாண்டமாகச் சொல்வாரே, அதைப்போலச் சொல்லியிருப்பதாகும். ஒரு முதல் அமைச்சராக இருப்பவர் பொறுப்புணர்ந்து பேச வேண்டும். சதி செய்து, மின் உற்பத்தியை எந்த அரசும் குறைக்க முன்வராது. அதற்கு யாரும் துணை போக மாட்டார்கள். முதலமைச்சர் இப்படியெல்லாம் குறை சொன்னால், அவரைப் பற்றி ஒரு மாதிரியாகக் கருதிடுவார்கள். ஒரு அரசுப் பொறுப்பிலே இருப்போர் முன்வந்து, தன்னுடைய கட்டுப்பாட்டிலே உள்ள பொது நிறுவனங்களில் உற்பத்தியைக் குறை என்று சொன்னால், அந்த நிறுவனத்திலே உள்ள அதிகாரிகள் கேட்டு விடுவார்களா? அவ்வாறு குறைக்க வேண்டுமென்று தான் யாராவது போய் மத்திய அரசிடம் கேட்க முடியுமா? இதெல்லாம் சிறுபிள்ளைத்தனமாக முதலமைச்சருக்குத் தோன்றவில்லையா?

மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி குறைந்ததற்குக் காரணம், ஆண்டுதோறும் மின் தேவை குறைவாக உள்ள மழைக் காலங்களில், மின் உற்பத்தி நிலையங்களில் மேற்கொள்ளப்படும் வழக்கமான பராமரிப்புப் பணிகள்தான். ஏடுகளை முறையாகப் படித்திருந்தால்கூட இதனைத் தெரிந்து கொண்டிருக்க முடியும்.

22-11-2013 அன்று வெளிவந்த “தினமலர்” நாளேட்டில், “மத்திய அரசுக்குச் சொந்தமாக நெய்வேலியில் உள்ள என்.எல்.சி. நிறுவனத்தில் மூன்று அனல் மின் நிலையங்கள் உள்ளன. இவற்றின் மொத்த மின் உற்பத்தித் திறன் 2,500 மெகாவாட். இதில் தமிழகத்திற்கு 1,000 மெகாவாட் மின்சாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது, என்.எல்.சி. அனல் மின் நிலையத்தில், மொத்தம் 570 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட அலகுகளில் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், 1,900 மெகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் என்.எல்.சி. அனல் மின் நிலையத்தில் இருந்து தமிழகத்திற்கு 750 மெகாவாட் மின்சாரம் மட்டுமே கிடைக்கிறது” என்று செய்தி வந்திருப்பதைப் படித்திருந்தால் முதல் அமைச்சருக்கு உண்மை புரிந்திருக்கும். “பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது” என்று தெளிவாகச்

சொல்லப்பட்டிருக்கிறது. சதி செய்து உற்பத்தியைக் குறைத்து விடவில்லை.

அந்தச் செய்தியிலேயே "தற்போது, கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் ஒரு அணு உலையின் பராமரிப்புப் பணி காரணமாக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது" என்று திட்டவட்டமாகக் கடந்த வாரத்திலேயே கூறிய பிறகும், மத்திய அரசு சதி என்றெல்லாம் ஒரு முதலமைச்சர் கடிதம் எழுதியிருப்பதைப் பார்த்து என்ன நினைப்பார்கள்?

இந்தப் பராமரிப்புப் பணி என்பது தற்போது திடீர் என்று செய்யப்படுவதல்ல; ஒவ்வொரு ஆண்டும், குறைந்தபட்சம் 20 நாட்களுக்கு, பராமரிப்புப் பணி மேற்கொள்வதற்காகவே மின் உற்பத்தி நிறுத்தப்படும். இனியாவது முதல் அமைச்சர் இது உண்மையா என்பதை அதிகாரிகளிடம் கேட்டுத் தெரிந்து தெளிவு பெறட்டும்!

"மின்சாரம் தயாரிக்கத் தேவையான நிலக்கரி மற்றும் நாப்தா ஆகியவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது" என்று முதலமைச்சர் ஏற்காட்டில் பேசியிருக்கிறார். தமிழக அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை மத்திய அரசு வழங்கவில்லை என்று சட்டப்பேரவையிலேயே முதலமைச்சர் தெரிவித்தார். வடசென்னை, மேட்டூர் மின் நிலையங்களுக்கு 90 இலட்சம் டன் நிலக்கரி தேவை. மத்திய அரசு 37 இலட்சம் டன் நிலக்கரிதான் வழங்க வாக்குறுதி அளித்துள்ளது. மத்திய அரசு, தமிழகத்திற்குத் தேவையான நிலக்கரியை வெட்டி எடுத்துக் கொள்ள வட இந்தியாவில் இரண்டு சுரங்கங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் (1) சத்தீஸ்கர் மாநிலத்தில் சுரங்கப் பணி நடைபெற்று வருகிறது. (2) ஆனால் ஒடிசா மாநிலத்தில் மந்தாகினி சுரங்கப் பணியின் முன்னேற்றத்தில் தமிழக அரசு அதிக அக்கறை காட்டாததால்தான் நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

மின் வெட்டு குறித்து விரிவாகப் பேசிய முதலமைச்சர், மின் உற்பத்தியில் காங்கிரஸ் கட்சியும், தி.மு. கழகமும் கைகோர்த்துக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களைப் பழிவாங்குவதாக ஒரு பெரிய குற்றச்சாட்டினை ஏற்காட்டிலே முழங்கியிருக்கிறார். நான் முதலமைச்சருக்குச் சவால் விட்டுக் கேட்கிறேன். இந்த

மின் உற்பத்தி நிறுவனங்களைப் பற்றி நானோ, என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களோ, மத்திய அரசிலே உள்ளவர்களிடமோ, மத்திய அரசுக்குச் சொந்தமான மின் உற்பத்தி நிறுவனங்களிடமோ பேசியதாகவோ, தொடர்பு கொண்டதாகவோ முதலமைச்சரால் நிரூபிக்க முடியுமா? அவர் தயார்தானா? வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று முதலமைச்சர் பொறுப்பிலே இருப்பவர் பேசியிருப்பது சரிதானா?

அன்புள்ள,

மு.க.

30-11-2013

3834. நல்ல செய்தி தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

உடன்பிறப்பே,

நாளை டிசம்பர் 4! ஏற்காடு சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல்! நேற்றோடு தேர்தல் பிரச்சாரம் முடிந்துவிட்டது. தேர்தல் பிரச்சாரத்திற்காக அந்தத் தொகுதியிலே முகாமிட்டவர்கள் எல்லாம் சொந்த ஊர் திரும்பி விட்டார்கள். கழகத்தின் சார்பில் நானும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் உடல்நிலை காரணமாகத் தேர்தல் பிரச்சாரத்திற்காக வர இயலவில்லை என்ற போதிலும், கழகப் பொருளாளர் தளபதி தம்பி மு.க. ஸ்டாலின் இரண்டு மூன்று முறை அங்கே வந்ததோடு, தற்போதும் நான்கு நாட்கள் அங்கேயே தங்கி கிராமம் கிராமமாகச் சுற்றி வந்திருக்கிறார். மேலும் கழகத் துணைப் பொதுச் செயலாளர் தம்பிகள் துரைமுருகன், வி.பி. துரைசாமி, தலைமைக் கழக மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணியினர், பல்வேறு அணிகளைச் சார்ந்தவர்கள் ஏற்காட்டில் கடந்த சில வாரங்களாக வாக்கு சேகரிக்கும் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி இரண்டு நாட்கள் அங்கே பிரச்சாரத்தில் கலந்து கொண்டிருக்கிறார். தலைமைக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தம்பி எஸ்.ஆர். சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, பனமரத்துப்பட்டி இரா. ராசேந்திரன், வீரபாண்டியாரின் மகன் வீரபாண்டி ஆ. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆதி சங்கர் மற்றும் ஜி. சூடாமணி, க. சுந்தரம், பா. கோபால் சி. தமிழ்ச்செல்வன் ஆகியோர் அடங்கிய தேர்தல் பணிக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, அவர்களும் திறம்பட செயல்பட்டிருக்கிறார்கள்.

மேலும் தலைமைக் கழகத்தின் தீர்மானக் குழுத் தலைவரான தம்பி பொன்முத்துராமலிங்கம் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டு அவரும் அங்கேயே தங்கிப் பணியாற்றி வருகிறார்.

ஆளுங்கட்சியான அ.தி.மு.க. ஏற்காடு தொகுதி இடைத்தேர்தலுக்காக 61 பேரைக் கொண்ட தேர்தல் பணிக் குழுவினை நியமித்தது. அமைச்சர்கள் அத்தனைப் பேரும் அந்தத் தொகுதியில் முகாமிட்டார்கள். அ.தி.மு.க. தேர்தல் பணிக் குழுவின் முக்கிய தலைவராகச் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவில் ஓய்வு பெறவிருப்பதால், தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற எண்ணத்தோடு, இந்தத் தேர்தலில் அ.தி.மு.க.விற்காகப் பம்பரமாகச் சுற்றிப் பணியாற்றியிருக்கிறார். எந்தவொரு ஆட்சியிலாவது ஒரு சட்டப்பேரவை இடைத் தேர்தலுக்காக அத்தனை அமைச்சர்களும் தலைமைச் செயலகத்தையே காலி செய்துவிட்டுச் சென்ற நிகழ்ச்சி எப்போதாவது நடைபெற்றிருக்கிறதா? வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாகவே, தேர்தல் விதிமுறைகளை மீறி அங்கே என்னென்ன நடவடிக்கைகள் நடைபெற்றன என்பதை 10-11-2013 தேதிய "முரசொலி"யில் "கரம் கூப்பி அழைக்கின்றேன்" என்ற தலைப்பில் விரிவாகவே எழுதியிருக்கிறேன். அதன் பின்னரும், அங்கே எந்த அளவிற்கு வரம்பு மீறல்கள் நடைபெற்றன என்பதையும் சுட்டிக் காட்டுகிறேன்.

- வாக்காளர் துணைப் பட்டியலில் புதிதாக 18 வயது நிரம்பியவர்களை மட்டுமே சேர்க்க முடியுமென்ற நிலையில், தொகுதிக்கே சம்மந்தம் இல்லாத 40 வயது நிரம்பியவர்களை அ.தி.மு.க. வினரின் வீட்டு முகவரியில் வசிப்பதாகக் கூறி, அதுபோல 15 ஆயிரம் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டு அறிவிக்கப்பட்டார்கள்.
- போலி வாக்காளர்களை உடனடியாக நீக்க வேண்டுமென்று இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு தி.மு.க. சார்பில் கடிதம் எழுதப்பட்டது.
- தேர்தல் அதிகாரி அறிவித்த குறிப்பிட்ட நேரத்திற்கு வந்த தி.மு. கழக வேட்பாளரின் வேட்பு மனுவினைப் பெறாமல், சுயேச்சை வேட்பாளரின் மனுவினைத் தேர்தல் அதிகாரி பெற்றார்.
- தேர்தல் பிரச்சாரத்தின்போது அரசு வாகனங்களைப் பயன்படுத்தக்கூடாது, அரசு விருந்தினர் விடுதியில்

தங்கக்கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ள போதிலும், ஒரு சில அமைச்சர்களும், வாரியத் தலைவர்களும் இவற்றை மீறி நடந்து கொண்டார்கள்.

- அமைச்சர்கள் தேர்தல் பணிக் குழுவில் இடம் பெற்றதால், அந்தந்த அமைச்சர்களின் கீழ்ப் பணியாற்றும், அரசு அதிகாரிகளை, ஆளுங்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாகச் செயல்பட வைத்தார்கள்.

- ஏற்காடு தொகுதிக்கு உட்பட்ட வாழப்பாடி, காரிப்பட்டி பகுதிகளில் அ.தி.மு.க. ஆட்சியின் இலவசப் பொருள்களான விலையில்லா கிரைண்டர், மிக்ஸி, மின்விசிறி போன்றவற்றை ரகசியமாக வழங்கியதை புகைப்படத்தோடு ஏடுகளே வெளியிட்டன.

- ஏற்காடு தொகுதி வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக அரசின் இலவச உதவிப் பொருள்களான மிக்ஸிகள், கிரைண்டர்கள், மின் விசிறிகள் போன்றவை அந்தத் தொகுதிக்குள் கொண்டு சென்றதை 11-11-2013 தேதிய "தினமலர்" நாளேடே வெளியிட்டிருந்தது.

- ஏற்காடு தொகுதி தேசிய நெடுஞ்சாலைகளில், வாகனச் சோதனை என்ற பெயரில் பொது மக்களின் பணத்தைப் பறிமுதல் செய்த அதிகாரிகள், அமைச்சர்கள் செல்லும் கிராமச் சாலைகளில் சோதனையிடுவதே இல்லை.

- அ.தி.மு.க. வேட்பாளர் வேட்பு மனுதாக்கல் செய்ய வந்தபோது, அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் காவல்துறையினரோடு உள்ளே செல்ல வேண்டுமென்று வம்பு செய்தனர்.

- தமிழக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், வேட்பு மனு தாக்கல் செய்ய அ.தி.மு.க. கொடி கட்டிய காரில் வந்த போது, அமைச்சருக்குப் பாதுகாப்பாகக் காவல் துறையினர் தேர்தல் விதிமுறைகளை மீறி, தமிழ்நாடு அரசு ஜீப் வாகனத்தைப் பயன்படுத்தினர்.

- அ.தி.மு.க. வேட்பாளர், வேட்பு மனு தாக்கல் செய்ய வந்தபோது, நாற்பதுக்கும் மேற்பட்ட அ.தி.மு.க. கொடி கட்டிய கார்கள் தேர்தல் விதிமுறைகளை மீறி வந்தன.
- 13-11-2013 அன்று பகல் 12 மணியளவில் அனைத்து அமைச்சர்களும், அ.தி.மு.க. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அயோத்தியாப்பட்டணத்தில் அ.தி.மு.க. கட்சி அலுவலக திறப்பு விழாவிற்கு நூறுக்கும் மேற்பட்ட அ.தி.மு.க. கொடி கட்டிய வாகனங்களில் வந்ததோடு, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தின் பாதுகாப்பு வேலியை அகற்றி விட்டு, வாகன நிறுத்தத்திற்குப் பயன்படுத்தி உள்ளனர்.
- அமைச்சர்களுடன் சென்று வாக்குச் சேகரித்த அரசு அலுவலர், சத்துணவு அமைப்பாளர் ஒருவரின் புகைப்படமே ஏடுகளில் வெளிவந்தது.
- அமைச்சர்கள் கடந்த பல வாரங்களாக ஏற்காடு தொகுதியிலேயே இருப்பதால் முக்கிய கோப்புகள் அதிகாரிகளால் அங்கே எடுத்துச் செல்லப்பட்டு கையெழுத்தாகின்றன. அரசு அதிகாரிகள் அங்கே செல்வதால், அந்தத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அங்கே செல்கிறார்கள்.
- தேர்தல் நடத்தை விதிமுறை தொடர்பான விதி எண். 7இன்படி, மாநிலத்தை ஆளுகின்ற கட்சி தேர்தல் பணிக்காக அதிகாரிகளை எந்தவகையிலும் பயன் படுத்துவது தொடர்பான புகார்கள் இருக்கக் கூடாது என்பதாகும்.
- விதிமுறைகளை மீறிச் சேலம் மாவட்டம் முழுவதும் முதலமைச்சர் படத்துடன் அம்மா உணவகம், இரட்டை இலைச் சின்னம் பொறித்த அம்மா குடிநீர் விற்பனைகடை, தொகுப்பு வீடுகளில் முதலமைச்சர் படம் ஆகியவை அகற்றப்படாமல் இருந்தன.
- ஓமலூர் தாலுக்கா அலுவலகத்திற்கு விதியை மீறி 2 கோடியே 52 லட்சம் செலவில் அடிக்கல்லை, மாவட்ட ஆட்சித் தலைவரே நாட்டியிருக்கிறார்.

- தேர்தல் விதிகளை மீறி அமைச்சர் வீட்டில் வட்டார வளர்ச்சி அலுவலர் என்ற அரசு அதிகாரி சென்று ஆலோசனை நடத்தினார். அவருடன் மற்றொரு அதிகாரியும், 2 உதவியாளர்களும் தமிழக அரசு வாகனத்தில் சென்றிருக்கிறார்கள்.

- மின்னாம்பள்ளி கிராமத்தில் விவசாயக் கூலித் தொழிலாளர்களை மினி பேருந்து மூலமாக அமைச்சர்கள் அழைத்து வந்து உப்புமா, பொங்கல் வழங்கியதோடு, அனைவரையும் வரிசையாக நிற்கவைத்து ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் வீதம் வழங்கியிருக்கிறார்கள். இதைப் படம் எடுக்கச் சென்ற பறக்கும் படையினரை, விரட்டியடித்திருக்கிறார்கள்.

இதுபோன்ற நடவடிக்கைகளுக்கெல்லாம் உச்சக்கட்டமாக ஒவ்வொரு வாக்காளருக்கும் தலா 2000 ரூபாயும் வழங்கப்பட்டதாக ஏடுகளிலேயே வெளிப்படையாகச் செய்திகள் வந்துள்ளன. நடைபெறுவது பொதுத் தேர்தல் அல்ல. ஒரு தொகுதியிலே நடைபெறும் இடைத்தேர்தல்தான். அதற்குத்தான் ஆளுங்கட்சி இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இடைத்தேர்தல் என்றாலே, அ.தி.மு.க. இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதையும், தேர்தல் ஆணையமே அதனைக் கண்டித்த சம்பவங்களையும் நான் சில நாட்களுக்கு முன்பே எழுதியிருந்தேன்.

நடைபெறும் காட்டாட்சிக்கு, தொடர்ந்து நடத்தி வரும் அராஜகங்களுக்கு, ஓர் எச்சரிக்கை செய்ய வேண்டாமா? அதற்குத்தான் இந்த இடைத் தேர்தல்! இந்தத் தேர்தலிலும், ஆளுங்கட்சியை வெற்றிபெறச் செய்துவிட்டால், அவர்கள் மேலும் மேலும் அராஜகங்களிலே ஈடுபட வழி ஏற்பட்டு விடும். தங்களை எதிர்க்க யாருமே கிடையாது என்ற நினைப்பு அவர்களுக்குத் தோன்றிவிடும். நடைபெறும் ஆட்சியில் எந்தத்தரப்பினரும் நிம்மதியாக இல்லை.

விவசாயிகளின் வேதனையோ கேட்கவே வேண்டியதில்லை. மின்வெட்டு மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. தொழில் நிறுவனங்கள் திணறுகின்றன. தேர்வு வாரியங்கள் நடத்தும் தேர்வுகளில் ஏராளமான குளறுபடிகள். ஏற்கனவே தி.மு. கழக அரசு தீட்டிய

திட்டங்களுக்கெல்லாம் மூடு விழா நடத்துகிறார்கள். இவர்களாகவும் எதுவும் செய்வதில்லை, செய்ததையும் தொடருவதில்லை. அரசின் நிதி நிலைமையோ மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கின்றது. எந்த அதிகாரி முதலமைச்சரைச் சந்திக்க வேண்டு மென்றாலும், அவர்கள் எதற்காக முதல்வரைச் சந்திக்க விரும்புகிறார்கள் என்பதைப் பற்றி முதலிலேயே எழுதி ஒப்புதல் கிடைத்தால்தான் முதலமைச்சரைப் பார்க்க முடியும். முறைப்படி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திட்டப்படி, இறந்து போகும் காவலர்களுக்கு வழங்க வேண்டிய நிதியினை முதலமைச்சர் வழங்குவதும், அதைச் செய்தியாக்கி முதல்வர் இன்று இத்தனை பேருக்கு நிதி வழங்கினார் என்று அன்றாடம் ஏடுகளுக்கு வழங்குவதும்தான் நடக்கிறது. கழக ஆட்சியில் தீட்டப்பட்ட திட்டங்கள் முடிவடைந்த நிலையில் அவைகளையும் காணொலி காட்சிகள் மூலமாக திறந்து வைக்கின்ற செய்திகளும்தான் வருகின்றன. நாட்டிலே எந்தக் குறை ஏற்பட்டாலும், உடனே பிரதமருக்கு அவசர அவசரமாக கடிதம் எழுதுகிறார்கள். அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

எதிர்க்கட்சிகள் யாராவது இந்த ஆட்சிக்கு எதிராகவோ, முதல் அமைச்சருக்கு எதிராகவோ பேசினால் போதும், உடனே "அவதூறு வழக்கு" தான். ஏடுகளோ அரசுக்கு எதிர்ப்பான கருத்துகளை வெளியிட முடிவதில்லை. துணிந்து வெளியிட்டால் அவர்கள் மீதும் வழக்கு.

விலைவாசியோ ஏறிக் கொண்டே போகிறது. மின் கட்டணம், பால் கட்டணம், பேருந்துக் கட்டணம் என்று எதுவும் பாக்கியில்லை, எல்லாவற்றையும் உயர்த்தி விட்டார்கள். இந்த மாநிலத்தை மின் மிகை மாநிலமாக ஆக்கிவிட்டேன், பாருங்கள் எங்கள் சாதனையை என்று பேரவையில் முதலமைச்சர் முழங்கினார். அவ்வளவுதான், அடுத்த மாதமே மின்வெட்டு ஆரம்பமாகி விட்டது. பொதுமக்கள் அதைப்பற்றி முறையிட்டால் மத்திய அரசும், தி.மு.க.வும் கைகோர்த்துக் கொண்டு, சதி செய்து விட்டார்கள் என்று முதலமைச்சர் கடிதம் எழுதுகிறார்.

இவற்றுக்கெல்லாம் பாடம் கற்பிக்க வேண்டாமா? அதற்கொரு வாய்ப்பாக நாளை நடைபெறவிருப்பதுதான் ஏற்காடு தொகுதி இடைத்தேர்தல். நல்லவேளையாக இந்தத் தேர்தலில் முக்கிய எதிர்க்கட்சிகள் எல்லாம் போட்டியிடவில்லை. அவர்களின்

ஆதரவினைக் கோரி நான் கடிதம் எழுதியது அனைவருக்கும் தெரியும். ஒரு சில கட்சிகள் அதற்குப்பதில் எழுதவில்லை. மௌனம் சம்மதத்திற்கு அடையாளம் என்பார்கள். அதனை அந்தந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அறிந்திருப்பார்கள். எனவே நாளை நடைபெறும் தேர்தலில் தமிழக ஆளுங்கட்சிக்குப் பாடம் கற்பிக்க, அவர்களும் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பினை வழங்கிட, கழக வேட்பாளர் தம்பி வெ.மாறனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றியினைத் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்காடு இடைத் தேர்தலில் தி.மு.கழகம் வெற்றி என்ற நல்ல செய்தியினைத் தெரிவித்திடுவீர்கள் என்ற நம்பிக்கை பெறுகிறேன்!

அன்புள்ள,

மு.க.

3-12-2013

3835. தேர்தல் கமிஷனுக்கும் "பெப்பே" தானா?

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் யார்? எப்படிப்பட்டவர்?

ஏற்காடு தொகுதி சட்டப்பேரவை இடைத் தேர்தல் 4ஆம் தேதி நடந்ததையொட்டி அ.தி.மு.க. சார்பில் 31 அமைச்சர்கள், அ.தி.மு.க.வின் தலைமைக் கழகச் செயலாளர்கள், முன்னணியினர் என்று 61 பேரைக் கொண்ட "மெகா" தேர்தல் பணிக் குழு ஒன்றை நியமித்து, அத்தனை அமைச்சர்களும் அங்கே முகாமிட்டு, வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்தது பற்றியும், முதலமைச்சரே கடந்த 28ஆம் தேதியன்று விமானத்திலும், கெலிகாப்டரிலுமாகப் பயணம் செய்து ஒரே நாளில் 9 இடங்களில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டதைப் பற்றியும் நாளேடுகள் செய்திகள் வெளியிட்டன. அப்போது முதலமைச்சர் அந்த ஒரு தொகுதியில் மட்டும் என்னென்ன திட்டங்களைக் கொண்டு வருவதாகச் செய்த அறிவிப்புகளையும் அனைத்து நாளேடுகளும் விரிவாக வெளியிட்டிருந்தன.

ஜெயலலிதா தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் செய்த அறிவிப்புகளைப் பற்றி நான் 29ஆம் தேதியன்றே சுட்டிக்காட்டி, 30ஆம் தேதிய முரசொலியில் வெளிவந்த "உடன்பிறப்பு" மடலில், கடந்த காலத்தில் அ.தி.மு.க. எவ்வாறு இடைத் தேர்தல்களைச் சந்தித்தது என்பது பற்றியும், முதலமைச்சர் ஏற்காடு தொகுதியில் என்னென்ன வாக்குறுதிகளை வழங்கினார் என்பது பற்றியும் விளக்கியிருந்தேன். மேலும் 29ஆம் தேதியன்றே, என்னுடைய அறிவுரையின்படி, கழக அமைப்புச் செயலாளர் தம்பிகள் டி.கே. எஸ். இளங்கோவனும், தலைமைக் கழக வழக்கறிஞர் பரந்தாமனும் மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீண் குமார், ஐ.ஏ.எஸ்., அவர்களிடம் ஜெயலலிதா அளித்த வாக்குறுதிகள் பற்றியும், அங்கே நடைபெற்ற தேர்தல் நடத்தை விதி மீறல்கள் பற்றியும் புகார் அளித்தனர்.

இது தொடர்பாக ஜெயலலிதா கூட்டத்துப் பட்டியில் பேசிய பேச்சுக்களின் சி.டி. பதிவுகளை ஆய்வு செய்ததில், முதலமைச்சர் இடைத்தேர்தல் பிரச்சாரத்தின் போது வாக்குறுதிகள் அளித்துப் பேசியிருப்பது உறுதி செய்யப்பட்டு, ஜெயலலிதா மீதான புகாருக்கு முகாந்திரம் உள்ளதால், அதுபற்றி 3-12-2013 மாலை 5 மணிக்குள் பதில் அளிக்கும்படி தேர்தல் ஆணையம் முதல் அமைச் சருக்கு நோட்டீஸ் அனுப்பியது.

தேர்தல் ஆணையத்தின் இந்தக் கடிதத்திற்கு முதலமைச்சர் ஜெயலலிதா அளித்த பதிலில், தான் எந்த வாக்குறுதியோ அல்லது அறிவிப்போ 28ஆம் தேதி ஆற்றிய எந்த உரையிலும் வெளியிட வில்லை என்றும், புதிய திட்டங்கள் எதையும் அறிவித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டினை வன்மையாக மறுப்பதாகவும் எழுதியிருந்தார். முதலமைச்சர் ஜெயலலிதா தேர்தல் ஆணையத் திற்கு அளித்த விளக்கத்தை, அனைத்து நாளேடுகளுக்கும் கொடுத்து அதுவும் ஏடுகளில் வெளிவந்தது.

முதலமைச்சரின் அந்த விளக்கத்திற்குக்கூட, "தேர்தல் ஆணையத்தை முதல்வர் ஏமாற்றலாமா?" என்ற தலைப்பில் நான் "கேள்வி-பதில்" பகுதியில் விளக்கியபோது, அவர் அளித்த வாக்குறுதிகள் என்னென்ன? எந்தெந்த ஏடுகளில் எவ்வாறு அது வெளியிடப்பட்டிருந்தது என்ற விவரங்களை யெல்லாம் தொகுத்து வெளியிட்டதோடு, தேர்தல் ஆணையத்திற்கு முதலமைச்சர் பதவியிலே இருப்பவர்கள் உண்மைக்கு மாறான தகவலை இவ்வாறு எழுத்து மூலமாகத் தெரிவிப்பதே பெரிய தவறாகும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

முதலமைச்சர் தேர்தல் ஆணையத்திற்கு அளித்த விளக்கம் பற்றித்தான், மத்திய தலைமைத் தேர்தல் ஆணையம் நேற்று (6-12-2013) உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த உத்தரவில், "தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு, தேர்தல் நடைபெறும் மாநிலத்தில் உள்ள அமைச்சர்களோ, அதிகாரிகளோ நிதியுதவி தொடர்பான எவ்வித வாக்குறுதியையும் வாக்காளர்களுக்கு அளிக்கக்கூடாது; சாலை, குடிநீர் வசதி போன்ற வாக்காளர்களை ஈர்க்கும் திட்டங்களை நிறைவேற்றுவோம் என்பது தொடர்பான வாக்குறுதிகளை அளிக்கக்கூடாது என்று தேர்தல் ஆணையம் ஒவ்வொரு கால கட்டத்திலும் கூறிவருகிறது. தேர்தலில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் போட்டியிட சமமான வாய்ப்பையும்,

சூழலையும் உருவாக்கித் தர வேண்டும். தேர்தலின் புனிதத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றமும் ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளது. அந்த அடிப்படையில், அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், முக்கியத் தலைவர்கள் உள்ளிட்டோர் தேர்தல் நடத்தை விதிகளை முழு மனதுடன் பின்பற்ற வேண்டும். எனவே, விதிகளை மீறியதாக விளக்கம் கேட்டு அனுப்பப்பட்ட நோட்டீசுக்கு நீங்கள் அனுப்பிய விளக்கத்தைத் தேர்தல் ஆணையம் நிராகரிக்கிறது. எதிர்காலத்தில் எச்சரிக்கையுடன் இருந்து, வாக்காளர்களை ஈர்க்கும் வகையில் இதுபோன்ற அறிவிப்புகளை வெளியிட வேண்டாம் எனத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்துகிறது" என்று தேர்தல் ஆணையம் ஜெயலலிதாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதைவிட ஒரு முதலமைச்சருக்குத் தேர்தல் ஆணையம் எவ்வாறு "சான்றிதழ்" கொடுக்க முடியும்? ஜெயலலிதாவுக்கு இதுதான் முதல் சான்றிதழா?

2003ஆம் ஆண்டு சாத்தான்குளம் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்ற போது, அங்கே பிரச்சாரம் செய்த முதலமைச்சர் ஜெயலலிதா சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கப்படும் என்றும், மகளிர் கல்லூரி தொடங்கப்படும் என்றும், பாலிடெக்னிக் தொடங்கப்படும் என்றும் பேசினார். இதுபற்றி ஏராளமான புகார்கள் கூறப்பட்ட நேரத்தில், தலைமைத் தேர்தல் ஆணையம், முறைகேடுகளைச் சுட்டிக்காட்டி, தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடம் விளக்கம் அளிக்குமாறு கோரிப் பெற்றது. அதன் பிறகு தலைமைத் தேர்தல் ஆணையம், இப்போது போலவே, ஒரு கண்டனக் கடிதம் அனுப்பியது. அதில் தலைமைச் செயலாளரின் விளக்கம் திருப்தி அளிக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வதாகவும், தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ஆளுங்கட்சி அரசு சார்பிலான முன்னறிவிப்புகளைச் செய்து ஆதாயம் தேடக் கூடாது என்று தேர்தல் விதி உள்ளது என்றும், ஆட்சி கையில் இருக்கிறது என்பதற்காக ஆளுங்கட்சி எவ்விதச் சலுகைகளையும் பெற முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தது.

மேலும் அந்தக் கடிதத்தில், "தமிழக முதலமைச்சர் சாத்தான்குளம் தேர்தல் பிரச்சாரத்தில் புதிய திட்டங்களை அறிவித்தது சம்பந்தமான அவரது செயல்பாடுகளைத் தேர்தல்

கமிஷன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். முதலமைச்சர் தனது பிரச்சாரத்தில் புதிய திட்டங்களை அறிவித்தது தேர்தல் ஆதாயம் பெறுவதற்காகத்தான் என்று தேர்தல் கமிஷன் உறுதியாகக் கருதுகிறது. ஜெயலலிதாவின் பிரச்சார முறை ஏற்கத்தக்கதல்ல என்று நிராகரிக்கிறோம். அவர் உறுதிமொழிகளை அளித்தது, தேர்தல் விதிகளை மீறிய குற்றமே என்று தேர்தல் கமிஷன் முடிவுக்கு வருகிறது'' என்று ஜெயலலிதாவுக்கு அப்போது கடிதம் எழுதியது.

ஆனால் துரதிருஷ்டவசமாக, கடிதத்தோடு தேர்தல் ஆணையம் தனது கண்டனத்தை அப்போதும் நிறுத்திக் கொண்டது. அதை அலட்சியப்படுத்தி நடந்து கொண்ட ஜெயலலிதாவுக்கு இப்போதும் எதிர்காலத்தில் எச்சரிக்கையோடு இருக்குமாறு கூறியுள்ளது. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா இவ்வாறு நடந்து கொண்டது இந்த நிகழ்ச்சிகளில் மட்டும்தானா?

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்றதே அப்போது இதே முதல் அமைச்சர் ஜெயலலிதா என்ன செய்தார்? ஒரு வேட்பாளர், இரண்டு தொகுதிகளுக்கு மேல் போட்டியிடக்கூடாது என்பது அனைவருக்கும் தெரிந்த அடிப்படையான விதி முறை. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா அந்தத் தேர்தலில் நான்கு இடங்களில் போட்டியிட்டார். அந்த நேரத்தில் டான்சி நில பேர வழக்கில் ஜெயலலிதாவுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஒருவருக்கு இரண்டாண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை நீதிபதியால் விதிக்கப்பட்டிருந்தால், அவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8வது பிரிவு கூறுகிறது. இந்த விதிமுறையை முதலமைச்சர் நன்றாக அறிந்திருந்தும், அந்தத் தேர்தலில் வேண்டுமென்றே நான்கு இடங்களிலே போட்டியிட்டார். அதுமாத்திரமல்ல; அவரது வேட்பு மனுவிலே "இரண்டு இடங்களுக்கு மேல் போட்டியிடவில்லை" என்று ஒரு முதலமைச்சர் உண்மைக்கு மாறான தகவலையும் தேர்தல் அதிகாரிக்குத் தந்தார். இதன் காரணமாக அவருடைய வேட்பு மனுக்கள் நான்கு இடங்களிலும் தள்ளுபடி செய்யப்பட்டன. இவ்வாறு தனது வேட்பு மனுவினைத் தள்ளுபடி செய்யும் நிலையை அவரே திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டதோடு, தேர்தல் பிரச்சாரங்களில் அவருடைய

வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதற்குத் தி.மு.கழகம்தான் காரணம் என்றும், அவரைத் தேர்தலில் நிற்க விடாமல் தி.மு.க. செய்து விட்டது என்றும் திசை திருப்பும் பிரச்சாரம் செய்து பொதுமக்களின் அனுதாபத்தைப் பெற்றார்.

2001 ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கும்போதே, அவசர அவசரமாக அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டி, தேர்தலில் போட்டியிடாத, நீதிமன்றத்தினால் மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஜெயலலிதா, தன்னை முதல் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். 'இந்து' போன்ற நாளேடுகள் எல்லாம் அதனை வெகுவாகக் கண்டித்தன. பின்னர் இந்தப் பிரச்சினையும் நீதிமன்றம் வரை சென்று, முதலமைச்சராக அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று தீர்ப்பு கூறப்பட்டு, இவர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலைக்கு ஆளானார். இதுவும் முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்குக் கிடைத்த "சான்றிதழ்"தான்!

தீர்ப்புக்குப் பிறகு, ஜெயலலிதா ஆண்டிப்பட்டி தொகுதியில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. உறுப்பினரை பதவி விலகச் செய்து, அந்தத் தொகுதியில் இடைத்தேர்தலில் நிற்க முடிவெடுத்தபோது, அ.தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்ட பல விலை உயர்வுகளை யெல்லாம் ரத்து செய்திடச்செய்தார். குறிப்பாக பேருந்துக் கட்டணத்தைக் குறைத்தார்; அரிசி விலை உயர்வு ரத்து செய்யப்பட்டது. ஆண்டிப் பட்டியில் நடைபெற்ற அந்த இடைத் தேர்தலில் அராஜகம் கொடி கட்டிப் பறந்தது. தேர்தல் அதிகாரியே அந்தத் தொகுதியைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் தாக்கல் செய்த அறிக்கையில்,

"Mr. Rao returned to the Capital and in his report submitted to the Commission observed that large scale rigging and malpractices had been done in the revision of the rolls" என்று கூறியிருந்தார். ஆண்டிப்பட்டியில் மட்டுமல்லாமல், அப்போது இடைத்தேர்தல் நடைபெற்ற மூன்று தொகுதிகளிலும் முறைகேடுகளும், மோசடிகளும் நடைபெற்றதால், இரண்டு இடைத்தேர்தல்களை தேர்தல் ஆணையமே ஒத்திவைத்தது. இதுவும் அ.தி.மு.க.

ஆட்சிக்கும், முதலமைச்சர் ஜெய லலிதாவுக்கும் கிடைத்த "புகழ்" தான்!

ஏன், டான்சி வழக்கிலே உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பிலேயே, முதல் அமைச்சராக இருந்த ஜெயலலிதா, அரசுக்குச் சொந்தமான "டான்சி" நிலத்தைக் குறைந்த விலைக்கு வாங்கியது தவறு என்றும்; அவர் நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும், அவர் தான் செய்த குற்றத்திற்கு மனச்சாட்சிப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் தீர்ப்பளித்தது. இதைவிடப் பெரிய "சான்றிதழ்" எந்தவொரு முதல் அமைச்சருக்கும் கிடைத்தது இல்லைதானே?

இப்படிப்பட்ட முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் விளக்கத்தை ஏற்க முடியாது என்றுதான் தற்போது நேற்றையதினம் தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்து, எதிர்காலத்தில் எச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டுமென்று கண்டனம் தெரிவித்திருக்கிறது.

இதுபோல ஒரு சம்பவம் தி.மு.கழக ஆட்சியில் நடைபெற்றிருக்குமானால் ஜெயலலிதா என்ன செய்திருப்பார்? உடனடியாகக் கருணாநிதி பதவிவிலக வேண்டும் என்று எந்த அளவிற்கு ஆத்திரத்தோடு எகிறிக் குதித்திருப்பார்? நான் அவரைப் போல ஆத்திரப்பட்டு அறிக்கை வெளியிட விரும்பவில்லை. ஆனால் ஒன்று நினைவுக்கு வருகிறது. இன்றையதினம் நாளேடுகளில் ஒரு செய்தி வந்துள்ளது. அதாவது அவருடைய அமைச்சரவையில் உள்ள ஒருவர், சில குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள காரணத்தால், அவரை மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து ஜெயலலிதா நீக்கி வைத்திருக்கிறார் என்ற செய்திதான் அது! ஆனால் அந்த அமைச்சர், பழத்தின் சுளையைத் தின்ற எனக்கே இந்தத் தண்டனை என்றால், முழுப் பழத்தையும் சாப்பிட்ட முதலமைச்சருக்கு என்ன தண்டனை என்று கேட்க மாட்டாரா?

இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கும், இந்திய நாட்டின் நீதி பரிபாலன முறைக்கு அடிப்படையான சட்டங்களுக்கும், தான் மேலானவர் என்று கற்பனை செய்து கொண்டு, அனைத்து வகையான விதி மீறல்களையும் செய்து, நீதிமன்றங்களின் கண்டனங்களுக்கும் இந்திய தேர்தல் ஆணையத்தின் கண்டனங்களுக்கும் தொடர்ந்து ஆளாகி வரும் ஜெயலலிதா,

“மனச்சாட்சியை” மதிப்பாரா? “எச்சரிக்கைகளை” ஏற்று நடந்து கொள்வாரா? இதுவே இன்று நாட்டு மக்களின் இதயத்தில் எழும் கேள்வி! “உனக்கும் பெப்பே, உங்க அப்பனுக்கும் பெப்பே” என்பது கிராமியப் பழமொழி; முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சியில் “தேர்தல் கமிஷனுக்கும் பெப்பேதானா?”

அன்புள்ள,

மு.க.

8-12-2013

3836. தோல்வி கண்டு துவளாமல் தொடர்ந்து பணியாற்றுவோம்!

உடன்பிறப்பே,

ஏற்காடு சட்டப்பேரவை இடைத்தேர்தல் நடைபெற்று முடிந்துவிட்டது. இந்தத் தேர்தலில் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாகவே, ஆளுங்கட்சியான அ.தி.மு.க. எப்படிப்பட்ட அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடத் தயாராகிவிட்டது என்பது பற்றி 27-10-2013 அன்றே நான் ஒரு அறிக்கை விடுத்திருந்தேன்.

இதுவரை நடைபெற்ற எந்தவொரு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்காவது; தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களாக முதலில் 52 பேரையும், அதற்குப் பிறகு மேலும் 9 பேர்களைச் சேர்த்து மொத்தம் 61 பேரை நியமித்த வரலாற்றைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதிலும் தனது அமைச்சரவையிலே உள்ள 31 அமைச்சர்களையும் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களாக நியமித்தார்கள். மேலும் கட்சியின் அவைத் தலைவர், அமைப்புச் செயலாளர்கள், வாரியத் தலைவர்கள், அணிகளின் செயலாளர்கள் என்று மொத்தம் 61 பேர் தேர்தல் பணிக் குழு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்போதே நான் எழுதிய "உடன்பிறப்பு" மடலில் இத்தனை பேரும் இணைந்து கட்டவிழ்த்து விடும் அராஜகங்களையும் நம்மால் சமாளிக்க முடியுமா, எதிர் கொள்ள முடியுமா என்பதும் கேள்விக் குறியாக உள்ளது என்றே எழுதியிருந்தேன். அது தற்போது உண்மையாகி விட்டது. அவ்வளவுதான்!

ஏற்காடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில் தி.மு. கழக வேட்பாளரை நிறுத்த கழகத்தின் சார்பில் முடிவெடுக்கப்பட்டவுடன், முறைப்படி அதற்கு ஆதரவு கேட்டு தமிழகத்திலே உள்ள பெரும்பாலான கட்சித் தலைவர்களுக்கும் நான் நேரடியாகக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில்,

“வருகிற 4-12-2013 அன்று நடைபெறவுள்ள ஏற்காடு (எஸ்.டி.) சட்டப் பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டி யிடுவதென முடிவெடுத்துள்ளோம். ஆளுங்கட்சியான அ.தி.மு.க. தொடர்ந்து தமிழகத்தில் நடத்தி வரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எச்சரிக்கை செய்கின்ற வகையில், இந்த இடைத்தேர்தலில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து நல்கிடும் உறுதியான ஆதரவோடு போட்டியிடுவது ஆக்கபூர்வமானதென்று நினைத்து இந்த முடிவினை எடுத்துள்ளோம். தமிழகத்தில் ஜனநாயகத்தைக் காத்திடவும், சர்வாதிகார எண்ணத்தை வீழ்த்திடவும் மேற்கொள்ளப்பட்டுள்ள கழகத்தின் இந்த முடிவிற்கு உதவிடும் வகையில், இந்த இடைத் தேர்தலில் கழக வேட்பாளருக்குத் தங்கள் கட்சியின் ஆதரவினை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்” என்று எழுதியிருந்தேன்.

இந்தக் கடிதத்திற்கு காங்கிரஸ் கட்சியும், பா.ஜ.க.வும் தங்கள் மேலிடத்தைக் கலந்து கொண்டு முடிவு தெரிவிப்பதாகக் கடிதம் எழுதினார்கள். கடைசி வரை ஆதரவைத் தெரிவிக்கவில்லை. மேலும் சிலர் பதிலே தெரிவிக்கவில்லை. ஆனால் நம்முடைய கட்சியின் முன்னணியினரும், பல்வேறு மாவட்டக் கழகத்தின் செயலாளர்களும், கழக உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சியின் தோழர்களும் இந்தத் தேர்தலில் இரவுப் பகல் பாராது அரும்பாடுபட்டார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் ஆளுங்கட்சியின் அராஜகம், வாக்குகளுக்காக வாரி வழங்கிய தொகை, அமைச்சர்களின் அதிகார துஷ்பிரயோகங் கள் ஆகியவற்றுக்கு முன்னால் நம்மால் எதுவும் செய்ய முடியவில்லை என்பதுதான் உண்மை.

இதற்கிடையே ஆளும் அ.தி.மு.க.வின் சார்பில், அந்தத் தொகுதியில் மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்போடு என்னவெல்லாம் நடைபெற்றது என்பதை ஏடுகளே தொடர்ந்து எழுதியிருந்தன.

தேர்தல் நடத்தை விதிகள் அந்தத் தொகுதிக்கு மட்டுமே பொருந்தும் என்று தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஆனால் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், தேர்தல் நடத்தை விதிகள் மாவட்டம் முழுமைக்கும் பொருந்தும் என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில் சேலம்

மாவட்டம் முழுவதும் இருந்த கழகக் கொடிக் கம்பங்களை, எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் மாவட்ட தி.மு.க. நிர்வாகத்திற்கே தெரிவிக்காமல், அதிகாரிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டார்கள். ஆனால் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. கொடிக் கம்பங்களை அகற்ற எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட அக்டோபர் 5ஆம் தேதி முதல் சேலம் மாவட்டம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்துவிட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்த பிறகும், ஏற்காடு தொகுதிக்கு உட்பட்ட தும்பல், பாப்பநாய்க்கன்பட்டி, வெள்ளாளப்பட்டி உட்பட பல கிராமங்களில் பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள், லேப்டாப் போன்றவை வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியரின் அனுமதி இல்லாமலா இவை வழங்கப்பட்டன?

தேர்தல் விதிமுறைகளை மீறியதாக வாழப்பாடி காவல் நிலையத்தில் கழக வேட்பாளர் வி.மாறனுக்கு எதிராக ஒரு புகாரினைத் கொடுத்தார்கள். இதைப்பற்றி காவல் துறை கண்காணிப்பாளர் கூறும்போது, வாழப்பாடி கிராம நிர்வாக அதிகாரி புகாரினைக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார். கிராம நிர்வாக அதிகாரி கொடுத்த புகார் மனுவில், தி.மு. கழக வேட்பாளர் வாழப்பாடியிலிருந்து ஆத்தூருக்கு 22-10-2013 அன்று பிரச்சாரத்திற்காகச் சென்ற போது பத்து வாகனங்களுக்கு மேல் சென்றதாக கூறப்பட்டது. ஆனால் அந்தப் புகாரை மூன்று நாட்கள் கழித்து தாக்கல் செய்வதற்கான காரணத்தை கிராம நிர்வாக அதிகாரி தெரிவிக்கவில்லை என்றும், அந்த கிராம நிர்வாக அதிகாரி கழக வேட்பாளருடன் பத்து வாகனங்கள் சென்றதற்கான எந்த ஆதாரத்தையோ, அதாவது கார்களின் பதிவு எண் என்ன என்பதற்கான "வீடியோ" தொகுப்பையோ சாட்சியமாகத் தாக்கல் செய்யவில்லை என்றும் காவல் துறை கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

இதுபோலவே; தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்த பிறகும், அ.தி.மு.க. அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டப் பணிகளை ஏற்காடு தொகுதி அமைந்துள்ள சேலம் மாவட்டம் முழுவதும் நடத்தினார்கள். இதுகுறித்து சேலம் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சிவலிங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்டக் காவல் துறை உயர் அதிகாரிகளுக்குப்

புகார் கொடுத்தும் அந்தப் புகார் அலட்சியப்படுத்தப்பட்டதே தவிர, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சேலம் மாவட்டத்திற்கு வரும் அமைச்சர்கள், அரசுக்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் 14-10-2013 அன்று தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தமிழ்நாடு அரசு முத்திரை மற்றும் சிகப்பு விளக்கு பொருத்திய காரில் பந்தாவோடு பயணம் செய்திருக்கிறார். இதுபற்றியும் புகைப்படத்தோடு கூடிய புகாரை தேர்தல் ஆணையருக்கு கழகத்தின் சார்பில் தரப்பட்டது.

மாநிலத்தில் புதிய பேருந்துகளைத் தொடங்கி வைத்தல் என்ற போர்வையில் அரசுப் பணம், பொது நிர்வாக இயந்திரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி அந்தப் பேருந்தில் அ.தி.மு.க. தேர்தல் சின்னத்தையும் வரைந்து மக்கள் மனங்களில் பதிய வைத்துச் செல்வாக்கு தேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

30-10-2013 தேதிய "தினமலர்" நாளேட்டிலேயே சேலம் கலெக்டர் அலுவலக வளாகத்திலேயே அ.தி.மு.க. அரசின் சாதனைகளையெல்லாம் தொகுத்து வாக்காளர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஏற்காடு தொகுதிக்குட்பட்ட பகுதியில் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளில் உள்ள ஜெயலலிதா படம் மறைக்கப்படவே இல்லை. மினரல் வாட்டரில் ஜெயலலிதா படம், அரசு சார்பில் ஜெயலலிதாவுக்கு ஆதரவாக விளம்பரம் என எங்கும் ஜெயலலிதா படங்களைத் தாராளமாக அனுமதித்தார்கள். அ.தி.மு.க. அரசின் இரண்டாண்டு சாதனை என்ற விளம்பரப் பலகைகள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் உட்பட, அனைத்து இடங்களிலும் மாவட்டம் முழுவதும் வைக்கப்பட்டன.

மாவட்ட ஆட்சித் தலைவரோ நடுநிலையோடு ஒரு தேர்தல் அதிகாரி போல நடக்காமல், அ.தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளரைப் போல வெளிப்படையாகவே நடப்பதாக புகார் கழகத்தின் சார்பில் கூறப்பட்டது. தேர்தல் நடத்தை விதிகளைச் சிறிதும் பிறழாமல் அனுசரித்து, அதன்படிக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய இந்த அதிகாரியே, வேலியே பயிரை மேய்வதைப் போல, சேலம் மாவட்டம், ஓமலூர் பழைய நீதிமன்றம் எதிரே, ஓமலூர் தாலுகா அலுவலகத்திற்கு, 2 கோடியே 52 இலட்சம்

ரூபாய்ச் செலவில் கட்டிடம் கட்ட 6-11-2013 அன்று காலை 10.45 மணிக்கு வைதீக முறைப்படி பூஜைகள் நடத்தி அடிக்கல் நாட்டியிருக்கிறார். இந்த நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட வருவாய் அதிகாரி, மேட்டூர் துணை ஆட்சியர், ஓமலூர் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அதிகாரி, பொதுப்பணித் துறை (கட்டுமானம்) உதவிச் செயற் பொறியாளர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். தேர்தல் நடத்தை விதிகளைப் பின்பற்றிப் பாதுகாத்திட வேண்டிய மாவட்ட முதன்மை அதிகாரியே, தேர்தல் நடத்தை விதிகளைத் துச்சமென நினைத்து, அவற்றை மீறி நடந்தால், அதை யாரிடம் சென்று முறையிடுவது?

வாக்காளர் துணைப் பட்டியலில் புதிதாக 18 வயது நிரம்பியவர்களை மட்டுமே சேர்க்க முடியுமென்ற நிலையில், தொகுதிக்கே சம்பந்தம் இல்லாத 40 வயது நிரம்பியவர்களை அ.தி.மு.க. வினரின் வீட்டு முகவரியில் வசிப்பதாகக் கூறி, அதுபோல 15 ஆயிரம் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டு அறிவிக்கப்பட்டார்கள்.

போலி வாக்காளர்களை உடனடியாக நீக்க வேண்டுமென்று இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு தி.மு.க. சார்பில் கடிதம் எழுதப்பட்டது.

தேர்தல் பிரச்சாரத்தின் போது அரசு வாகனங்களைப் பயன்படுத்தக் கூடாது, அரசு விருந்தினர் விடுதியில் தங்கக் கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ள போதிலும், ஒரு சில அமைச்சர்களும், வாரியத் தலைவர்களும் இவற்றை மீறி நடந்து கொண்டார்கள்.

அமைச்சர்கள் தேர்தல் பணிக் குழுவில் இடம் பெற்றதால், அந்தந்த அமைச்சர்களின் கீழ் பணியாற்றும், அரசு அதிகாரிகளை, ஆளுங்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக செயல்பட வைத்தார்கள்.

ஏற்காடு தொகுதி வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக அரசின் இலவச உதவிப் பொருள்களான மிக்ஸிகள், கிரைண்டர்கள், மின் விசிறிகள் போன்றவை அந்தத் தொகுதிக்குள் கொண்டு சென்றதை 11-11-2013 தேதிய "தினமலர்" நாளேடே வெளியிட்டிருந்தது.

ஏற்காடு தொகுதி தேசிய நெடுஞ்சாலைகளில், வாகனச் சோதனை என்ற பெயரில் பொதுமக்களின் பணத்தைப் பறிமுதல்

செய்த அதிகாரிகள், அமைச்சர்கள் செல்லும் கிராமச் சாலைகளில் சோதனையிடவே இல்லை.

தமிழக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், வேட்பு மனு தாக்கல் செய்ய அ.தி.மு.க. கொடி கட்டிய காரில் வந்தபோது, அமைச்சருக்குப் பாதுகாப்பாக காவல் துறையினர் தேர்தல் விதிமுறைகளை மீறி, தமிழ்நாடு அரசு ஜீப் வாகனத்தைப் பயன்படுத்தினர்.

அ.தி.மு.க. வேட்பாளர், வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த போது, நாற்பதுக்கும் மேற்பட்ட அ.தி.மு.க. கொடி கட்டிய கார்கள் தேர்தல் விதிமுறைகளை மீறி வந்தன. 13-11-2013 அன்று பகல் 12 மணியளவில் அனைத்து அமைச்சர்களும், அ.தி.மு.க. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அயோத்தியாப்பட்டணத்தில் அ.தி.மு.க. கட்சி அலுவலகத் திறப்பு விழாவிற்கு நூறுக்கும் மேற்பட்ட அ.தி.மு.க. கொடி கட்டிய வாகனங்களில் வந்ததோடு, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தின் பாதுகாப்பு வேலியை அகற்றி விட்டு, வாகன நிறுத்தத்திற்குப் பயன்படுத்தி உள்ளனர். அமைச்சர்களுடன் சென்று வாக்குச் சேகரித்த அரசு அலுவலர், சத்துணவு அமைப்பாளர் ஒருவரின் புகைப்படமே ஏடுகளில் வெளிவந்தது.

விதிமுறைகளை மீறி சேலம் மாவட்டம் முழுவதும் முதலமைச்சர் படத்துடன் அம்மா உணவகம், இரட்டை இலைச் சின்னம் பொறித்த அம்மா குடிநீர் விற்பனைக் கடை, தொகுப்பு வீடு களில் முதலமைச்சர் படம் ஆகியவை அகற்றப்படாமல் இருந்தன.

தேர்தல் விதிகளை மீறி அமைச்சர் வீட்டில் வட்டார வளர்ச்சி அலுவலர் என்ற அரசு அதிகாரி சென்று ஆலோசனை நடத்தினார். அவருடன் மற்றொரு அதிகாரியும், 2 உதவியாளர்களும் தமிழக அரசு வாகனத்தில் சென்றிருக்கிறார்கள்.

மின்னாம்பள்ளி கிராமத்தில் விவசாயக் கூலித் தொழிலாளர்களை மினி பேருந்து மூலமாக அமைச்சர்கள் அழைத்து வந்து உப்புமா, பொங்கல் வழங்கியதோடு, அனைவரையும் வரிசையாக நிற்க வைத்து ஒவ்வொருவருக்கும் 2000 ரூபாய் வீதம் வழங்கியிருக்கிறார்கள். இதை படம் எடுக்கச் சென்ற பறக்கும் படையினரை, விரட்டியடித்திருக்கிறார்கள்.

இதுபோன்ற நடவடிக்கைகளுக்கெல்லாம் உச்சக்கட்டமாக ஒவ்வொரு வாக்காளருக்கும் தலா 2000 ரூபாயும் வழங்கப்பட்டதாக ஏடுகளிலேயே வெளிப்படையாக செய்திகள் வந்தன. தொலைக்காட்சியிலே அந்தக் காட்சிகள் காட்டப்பட்டன.

முதலமைச்சர் அந்தத் தொகுதியிலே பிரச்சாரம் செய்து ஏராளமான வாக்குறுதிகளையெல்லாம் வாரி வழங்கினார். தேர்தல் விதிமுறைப்படி அவ்வாறு வாக்குறுதிகளை ஆட்சியில் இருப்போர் வழங்குவது தவறு என்று கழகத்தின் சார்பில் புகார் தரப்பட்டு, அதனை விசாரித்த தலைமைத் தேர்தல் ஆணையம் முதல் அமைச்சர் ஜெயலலிதா அளித்த விளக்கம் ஏற்கத்தக்கதல்ல என்று எச்சரிக்கையை மாத்திரம் செய்ததே தவிர, முதலமைச்சரே வாக்குறுதிகளை அளித்ததும், அவ்வாறு வாக்குறுதி அளிக்கவில்லை என்று தேர்தல் ஆணையத்திற்கு உண்மைக்கு மாறான தகவலை விளக்கத்திலே எழுதிக் கொடுத்ததும் எவ்வளவு பெரிய தவறு என்ற போதிலும், அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இத்தனையையும் மீறித்தான் இந்தத் தேர்தலில் கழகம் போட்டியிட்டது. ஆனால் பணநாயகம், அராஜகம், அதிகாரம் ஆகியவற்றுக்கு முன்னால் கழக வேட்பாளர் வெற்றி வாய்ப்பினை இழக்கக் கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. பென்னாகரத்தில் "டெபாசிட்" தொகையை இழந்து மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்ட அ.தி.மு.க.தான் தற்போது தமிழகத்தின் ஆளுங்கட்சி! எனவே நான் நேற்று கூறியதைப் போல இது வாக்காளர்களுக்கு ஏராளமாக பணம் வழங்கி, அ.தி.மு.க. பெற்ற வெற்றியாகும்; இதுபோன்ற தோல்விகளை எதிர்கால வெற்றிக்கு ஏணிப்படிகளாக ஆக்கிக் கொண்டு, தோல்வியைக் கண்டு துவளாமல், தொடர்ந்து பணியாற்றிடுவோம்!

அன்புள்ள,

மு.க.

10-12-2013

3837. சொத்துக்குவிப்பு வழக்கும்; கோடநாடு வழக்கும்!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் தொடர்புடைய சென்னையில் உள்ள அசையும் சொத்துக்களை, வழக்கு விசாரணை நடந்து வரும் பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்துக்கு வரும் 21ஆம் தேதிக்குள் கொண்டு வர வேண்டுமென்று நேற்று (12-12-2013) தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

சொத்துக் குவிப்பு வழக்கு பற்றி நான் 14-9-2013 அன்று வெளியிட்ட "உடன்பிறப்பு" மடலில், "இந்த முக்கியமான வழக்கின் சான்றுப் பொருள்களாக உள்ள கைப்பற்றப்பட்ட நகைகள் சென்னை ரிசர்வ் வங்கியின் கருவூலத்தில் உள்ளன. சொத்துக் குவிப்பு வழக்கின் விசாரணையின்போது, ஏற்கனவே கைப்பற்றப் பட்ட நகைகள் அனைத்தும் சிறப்பு நீதிமன்றத்தின் பொறுப்பிற்குக் கொண்டு வரப்பட வேண்டும். அவ்வாறு இதுவரை கொண்டு வரப்படவில்லை. இறுதி வாதம் நடைபெறுவதற்கு முன்பாக, அந்த நகைகளை நீதிமன்றத்தில் ஒப்படைப்பது பற்றி சிறப்பு நீதிமன்றம் எந்த விதமான உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அந்த நகைகளைக் கொண்டு வந்து சிறப்பு நீதிமன்றத்தில் ஒப்படைத்து, விசாரணை நடத்துவதற்கு முன்பாகவே, இந்த வழக்கில் தீர்ப்பளித்து விட வேண்டுமென்று நீதிபதி அவசரப்படுவது, அவர் தன் பதவி ஓய்வு பெற்றுச் செல்வதற்கு முன்பாகவே தீர்ப்பளித்திட வேண்டும் என்று கருதித்தான் போலும்! நகைகளை பெங்களூரு நீதிமன்றத்திற்கே கொண்டு வந்து பார்வை யிடாமல், சட்ட விதிமுறைகளின்படி இந்த வழக்கில் தீர்ப்பளிக்க முடியாது'' என்று சுட்டிக்காட்டியிருந்தேன்.

அதன்படி, பேராசிரியர் அவர்களுக்காக கழக நாடாளுமன்ற உறுப்பினரும், வழக்கறிஞருமான தம்பி இரா. தாமரைச்செல்வன் பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில்,

“ஜெயலலிதா, சசிகலா வீடுகளில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் கடந்த 1997ஆம் ஆண்டு சோதனை நடத்தியபோது, தங்கம், வைரம், வெள்ளி ஆபரணங்கள், பட்டுச் சேலைகள், விலை உயர்ந்த கடிகாரங்கள் என்று 1066 அசையும் சொத்துக்களைப் பறிமுதல் செய்தனர். அந்தச் சொத்துக்கள், சென்னையில் உள்ள ரிசர்வ் வங்கி மற்றும் அரசுக் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளன. வழக்கு விசாரணை முடியும் நிலையில், சென்னையில் உள்ள அசையும் பொருள்கள் எதையும் பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்துக்குக் கொண்டு வரவில்லை. என்னென்ன பொருள்கள் உள்ளன என்ற விவரங்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் தீர்ப்புக் கூறுவது சரியாக இருக்காது. ஆகவே, சென்னையில் உள்ள அசையும் சொத்துக்களை பெங்களூரு கொண்டு வரவேண்டும்” என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு 6-12-2013 அன்று நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா முன் விசாரணைக்கு வந்த போது, வழக்கறிஞர் தாமரைச்செல்வன், “குற்றவியல் நடைமுறைச் சட்டங்களின்படி நகைகளை பெங்களூரு நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதே சரியாக இருக்கும்” என்றார். ஜெயலலிதாவின் வழக்கறிஞர் திரு. பி. குமார், “வழக்கில் தொடர்புடைய அசையும் சொத்துக்களை சென்னையிலிருந்து கொண்டு வரத் தேவையில்லை” என்று வாதாடினார். பொதுச் செயலாளர் பேராசிரியர் சார்பில் வாதாடிய கழக வழக்கறிஞர் பி. குமரேசன் கூறும்போது, “நாங்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த மனுவைத் தாக்கல் செய்யவில்லை. அரசு வழக்கறிஞர் தமது கடமையை முறையாகச் செய்யாத காரணத்தால், வழக்குகள் நடைபெறும் இந்த நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குள், வழக்கு விசாரணை தொடர்பான நகைகள் அனைத்தும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த மனுவினைக் கொடுத்திருக்கிறோம். மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 452இன் கீழ் இந்த நீதிமன்றம், இந்த வழக்குத் தொடர்பான பொருள்களைத் தன் வசம் பெற்றுக் கொண்ட பின்னர்தான், இந்த வழக்கில் தீர்ப்புச் சொல்ல வேண்டும்” என்று தெரிவித்திருக்கிறார்.

அதற்கிணங்க 12ஆம் தேதியன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, கழகத்தின் சார்பில் வழக்கறிஞர்கள் பி. குமரேசன், தாமரைச்செல்வன், சரவணன் ஆகியோர்

ஆஜராகியிருக்கிறார்கள். அப்போது நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா அளித்த தீர்ப்பில், "இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம், வெள்ளி, வைர நகைகள் உள்ளிட்ட 1066 அசையும் சொத்துக்களை பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்துக்குக் கொண்டு வர வேண்டுமென இந்த நீதிமன்றத்தைக் கோரிட மனுதாரருக்கு அதிகாரமில்லை என்று ஜெயலலிதா தரப்பு கூறுவதை நீதிமன்றம் ஏற்க முடியாது. ஏனென்றால் ஏற்கனவே இவ்வழக்கில் உச்சநீதிமன்றமும், கர்நாடக உயர் நீதிமன்றமும் மனுதாரருக்கு உள்ள உரிமையை அங்கீகரித்துள்ளன. இந்த மனுதாரருக்கு இந்த வழக்கில் அக்கறை இருக்கிறது என்பது நிரூபணமாகிறது. இந்த வழக்கை நடத்தும் அரசு வழக்கறிஞரைத் தவிர்த்து விட்டு, நாங்களே இந்த வழக்கை நடத்த வேண்டுமென மனுதாரர் கோரவில்லை. மாறாக, அரசு வழக்கறிஞர் சுட்டிக்காட்ட வேண்டிய செயலை, சுட்டிக்காட்டத் தவறியதால், அதனை இந்த மனுதாரர், இந்த மனு மூலமாக இந்த நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வருகிறார் என்றுதான் கொள்ள வேண்டுமேதவிர, இதனை வேறு நோக்கத்தில் பார்ப்பது நல்லதல்ல; அவ்வாறு பார்க்கவும் கூடாது. மேலும் இதே சிறப்பு நீதிமன்றம், அரசு வழக்கறிஞருடன், இந்த வழக்கை நடத்துவதற்கு உதவி செய்யலாம் என்று ஏற்கனவே இந்த மனுதாரருக்கு அனுமதி வழங்கியுள்ளது. அந்த அடிப்படையில் மனுதாரர், இந்த மனுவினை அரசு வழக்கறிஞர் சார்பாகத்தான் தாக்கல் செய்துள்ளார் என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நீதிமன்றம் கருத்தில் கொள்வதால், மனுதாரரின் (பேராசிரியரின்) மனு ஏற்றுக் கொள்ளப்படுகிறது" என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் "இந்த வழக்குப் பொருள்கள், எந்த நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறதோ, அங்கேதான் இருக்க வேண்டும். முதலில் சென்னை நீதிமன்றம், வழக்குப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு, அவற்றைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வழக்கினை நடத்திக் கொண்டிருந்த போதுதான், வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. வழக்கை இந்த நீதிமன்றத்துக்கு மாற்றிய சென்னை நீதிமன்றம், இந்தப் பொருள்களை மாற்றியதற்கான எந்தவிதமான ஆதாரமும் தற்போது இல்லை. இந்த வழக்குக்கான சொத்துக்களை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வழக்கை நடத்துவதுதான் சட்டப்படியான முறையாகும். ஆகவே இந்த வழக்குக்கான சொத்துக்களை சென்னை உயர்

நீதிமன்றத்திலிருந்து இந்த நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும். இந்தப் பொருள்களைப் பற்றி தொலைக்காட்சிகளிலோ, நாளிதழ்களிலோ செய்திகள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்" என்று தனி நீதிபதி விளக்கமாகத் தெரிவித்து விட்டார்.

இந்தப் பிரச்சினையில் அரசு வழக்கறிஞர் பவானிசிங்கும் நீதிபதிக்குக் கொடுத்த மனுவில், "தி.மு. கழக வழக்கறிஞர்களின் கோரிக்கை நியாயமானது" என்று தெரிவித்திருக்கிறார். இந்த வழக்கறிஞர் பவானிசிங்தான் இதுவரை ஜெயலலிதா தரப்பினருக்கு ஆதரவாக இருந்தார். எனவே இவரை மாற்ற வேண்டுமென்று தி.மு. கழகம் கோரியபோது, இந்த வழக்கறிஞர்தான் அரசு வழக்கறிஞராக, அதாவது ஜெயலலிதா தரப்பினருக்கு விரோதமாக ஆஜராக வேண்டுமென்று உச்சநீதிமன்றம் வரை, குற்றம் சாட்டப் பட்டோர் வழக்காடினர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அரசு வழக்கறிஞராக திரு. பவானி சிங் அவர்களே இந்த வழக்கில் தொடர வேண்டு மென்று ஜெயலலிதா உச்சநீதிமன்றத்தில் வைத்த விநோதமான கோரிக்கையோடு மற்றொரு விசித்திரமான கோரிக்கையையும் வைத்திருந்தார். அதுதான் இந்த வழக்கை விசாரித்து வந்த நீதிபதி திரு. பாலகிருஷ்ணா அவர்கள் ஓய்வு பெற்ற பிறகும், தொடர்ந்து இந்த வழக்கினை விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கையாகும். ஆனால் நீதிபதி பாலகிருஷ்ணா அவர்களே, தொடர்ந்து நீதிபதியாக நீடிக்க விரும்பாத காரணத்தால், தற்போது இந்த வழக்கினை நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா விசாரித்து இந்தத் தீர்ப்பினை வழங்கியிருக்கிறார். ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள், ஒரு குறிப்பிட்ட வழக்கறிஞர்தான் தங்களுக்கு எதிராக வாதாடும் அரசு வழக்கறிஞராக இருக்க வேண்டும்; ஒரு குறிப்பிட்ட நீதிபதிதான் ஓய்வு பெற்ற பிறகும் அந்த வழக்கினை விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் கோரிக்கை வைத்ததைப் பார்த்து அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

நீதிபதி பாலகிருஷ்ணா அவர்களே இந்த வழக்கினைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதிமன்றம் வரை சென்ற நேரத்தில் எனக்கொன்று நினைவுக்கு வந்தது.

"கோடநாடு எஸ்டேட்" பற்றி உச்சநீதி மன்றத்தில் 4-4-2008 அன்று சொல்லப்பட்ட ஒரு தீர்ப்பு அப்போதே "இந்து" நாளிதழில் வெளி வந்தது. நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்த சாலையில் தடுப்பு (கேட்) ஒன்றை அமைத்து, அந்த வழியாக யாரும் செல்ல முடியாத அளவிற்கு கோடநாடு எஸ்டேட் மானேஜர் தடுப்பதாகக் கூறியும், அந்தத் தடுப்பினை நீக்கிட வேண்டுமென்று கூறியும், பொதுமக்கள், கோட்ட வருவாய் அலுவலரிடம் (சப்-டிவிஷனல் மேஜிஸ்திரேட்) முறையிட்டு; அவர் அப்போது பிறப்பித்த ஆணையில், சாலையில் உள்ள அந்தத் தடுப்பினை அகற்றவும், அதையும் 24 மணி நேரத்திற்குள் நிறைவேற்றிட வேண்டுமென்றும், தவறினால் இந்திய தண்டனைச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உத்தரவிட்டார்.

அந்த உத்தரவை எதிர்த்து கோடநாடு எஸ்டேட் நிர்வாகத்தின் சார்பில், அதன் மேலாளர், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடுத்தார். அந்த வழக்கு விசாரணைக்காக முதலில் ஒரு நீதிபதியிடம் போடப்பட்டு, அவர் அந்தக் குறிப்பிட்ட வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு, பின்னர் அந்த வழக்கு வேறொரு நீதிபதிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

இவ்வாறு வழக்கு மாற்றப்பட்டதை எதிர்த்து, ஜெயலலிதா, சசிகலா தரப்பினர் அப்போதே உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் முறையிட்ட போது, "நீதிபதியை நிர்ணயம் செய்வது என்பது தலைமை நீதிபதியின் தனிப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்" என்று உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆணையிட்டார். அத்துடன் விட்டார்களா என்ன?

அந்த ஆணையை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்திற்கு கோடநாடு எஸ்டேட் மேலாளர் மேல் முறையீடு செய்தார். அந்த வழக்கு தான் 4-4-2008 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் முன்பு வந்தது. அப்போது உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி, கோடநாடு எஸ்டேட் மேலாளருடைய கோரிக்கை நியாயம் அற்றது என்றும், இதுபோன்ற வழக்குகளை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் கூறினார். (When Counsel said that it was a bonafide petition, the Chief Justice of India said, "It is bereft of bonafide, we will not entertain such matters")

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, கோடநாடு எஸ்டேட் வழக்கறிஞரைப் பார்த்து,

"உங்களுக்கு என்ன வேண்டும்? உங்களுக்கு எந்த நீதிபதி வேண்டுமென்று வேட்டை ஆடுகிறீர்களா? உங்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட நீதிபதிதான் உங்களுடைய வழக்கை விசாரிக்க வேண்டுமென்று கோருவதற்கு உங்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது" என்றும் சொல்லியிருக்கிறார்.) (The Chief Justice of India asked : "What do you want? You are Bench hunting. The Chief Justice of the High Court knows many things which you may not know. You have absolutely no right to say that your matter should be heard by a particular Judge")

என்றென்றும் நினைவில் நிலைத்திருக்கக் கூடிய சட்ட நீதி தோய்ந்த இந்த வார்த்தைகளை யெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் மறந்திருக்கக் கூடுமென்றுதான் சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் பெங்களூரு சொத்துக்குவிப்பு வழக்கில் குறிப்பிட்ட நீதிபதிதான் அந்த வழக்கினைத் தொடர்ந்து விசாரிக்க வேண்டுமென்று வைக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டு, புதிய நீதிபதி ஒருவர் அங்கே விசாரணையை மேற்கொண்டு, நேற்றையதினம் ஒரு முடிவினை வழங்கியிருக்கிறார். இதுவே இந்த வழக்கில் முழுமையான தீர்ப்பல்ல. நீதிபதி பாலகிருஷ்ணா தான் இந்த வழக்கினைத் தொடர்ந்து விசாரிக்க வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பினர் கோரிக்கை வைத்து, அது நிறைவேறாமல் போனபோதே சட்டம் தன் கடமையைச் சிறப்பாகச் செய்கிறது என்றுதான் கருதப்பட்டது. அதே வரிசையில் முழுமையான நிறைவான தீர்ப்பு உரிய நேரத்தில் வரும் என்றே தமிழ்நாடு எதிர்பார்க்கிறது.

அன்புள்ள,

மு.க.

14-12-2013

3838. எத்தனை கொலைகள்? எத்தனை கொள்ளைகள்?

உடன்பிறப்பே,

கடந்த வாரம் சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகளின் மாநாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மூன்று நாட்கள் நடைபெற்றிருக்கிறது. மூன்று நாட்களிலும் முதலமைச்சர் ஜெயலலிதா உரையாற்றியிருக்கிறார். முதல் நாளன்று அவருடைய தொடக்கவுரையில், பத்திரிகைகள் எல்லாம் பெரிதாக வெளியிட்டிருப்பது சட்டம், ஒழுங்கு பற்றித்தான்! "சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரை இங்குள்ளோர் அனைவரும் பெருமையும், திருப்தியும் கொள்ளும் நிலையில்தான் உள்ளது. வகுப்புவாத, தீவிரவாத, மத அடிப்படையிலான மோதல்கள் இல்லாத மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. காவல் துறைக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் எந்தத் தடைகளையும் விதிக்காமல் சுதந்திரமாகச் செயல்பட நான் அனுமதி அளித்ததால் மட்டுமே இது சாத்தியமானது" என்று முதல் அமைச்சர் பேசியிருக்கிறார்.

கடந்த ஆண்டும் இதே டிசம்பர் மாதத்தில் 17 ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நடைபெற்று, அப்போது முதலமைச்சர் பேசிய போதும் என்ன பேசினார் என்றால், "எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழ்நாட்டிலே சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன. தீவிரவாதம் தமிழகத்தில் இல்லை; மதவாதம் தலையெடுக்க அனுமதிக்கப்படவில்லை" என்று குறிப்பிட்டார்.

அதற்கு மறுநாளே நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட நான், அ.தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பிறகு, அது வரை நடைபெற்ற கொலைகள் எத்தனை, கொள்ளைகள் எத்தனை, செயின் பறிப்புகள் எத்தனை, வழிப்பறி மோசடிகள் எத்தனை என்றெல்லாம் புள்ளி விபரங்களோடு பட்டியலிட்டுக் காட்டினேன்.

சட்டம், ஒழுங்கு இந்த ஆட்சியில் எவ்வாறு இருக்கிறது என்பதற்கு ஒருசில சம்பவங்களை நினைவுபடுத்தினாலே புரிந்துகொள்ள முடியுமென்று நம்புகிறேன்.

வாடிப்பட்டி அருகே உருட்டுக்கட்டையால் தாக்க வந்த அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் தலைமையிலான கும்பலுக்குப் பயந்து சோழவந்தான் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கருப்பையா, ஓட்டல் அறைக்குள் வைத்துப் பூட்டியதால் உயிர் தப்பினார். கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற நிகழ்ச்சி. அ.தி.மு.க. ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருப்பதற்கான அடையாளங்களில் இதுவும் ஒன்றோ?

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஐகோர்ட் நீதிபதிகள் ஜெயசந்திரன், நாகமுத்து ஆகியோர், கொலை வழக்கு ஒன்றில் அளித்த தீர்ப்பில், "கொலைக்குப் பயன்படுத்திய அரிவாளை போலீசார் பறிமுதல் செய்துள்ளனர். அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அதில் படிந்திருந்த ரத்தக் கறையை டி.என்.ஏ. சோதனைக்கு அனுப்பி, அந்த அரிவாள்தான் கொலையாளிகள் பயன்படுத்தினர் என்பதை நிரூபிக்கவில்லை. விசாரணையில் பல்வேறு குறைபாடுகள் இருந்தன. அந்தக் குறைபாடுகளைக் களைய போலீசாருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அதைப் போலீசார் சரியாகப் பயன்படுத்தவில்லை. இந்த வழக்கில் போலீசாரின் பல்வேறு குறைபாடுகள், தவறுகள், திறமையின்மை வெளிப்பட்டுள்ளது. இதற்குமேல் விசாரணை அமைப்பை எப்படி விமர்சனம் செய்யவேண்டும் எனத் தெரியவில்லை. கல்நெஞ்சம் படைத்த கொலையாளிகள்; நான்கு பேரைக் கொடூரமாகக் கொலை செய்துள்ளனர். போலீசாரின் விசாரணை முழுவதும் வீணாகிவிட்டது. ஐகோர்ட் வைத்திருந்த நம்பிக்கையைப் போலீசார் தகர்த்துவிட்டனர். தகுந்த ஆதாரங்கள் சாட்சியங்களின் அடிப்படையில் நிரூபிக்க போலீசார் தவறி விட்டனர். போலீசார் பொறுப்பு, கடமைகளில் தவறியதை உணர வேண்டும். விசாரணையில் போலீசார் அலட்சியம் காட்டுவது, நீதி, நியாயம் தோற்கக் காரணமாக அமைகிறது. இந்த வழக்கில் நீதி தோற்றதை கனத்த இதயத்துடன் சொல்கிறோம்" என்று காவல் துறை பற்றி நீதிபதிகள் விமர்சித்திருக்கிறார்கள். ஜெயலலிதா ஆட்சியில் அவர் பொறுப்பில் உள்ள காவல் துறையினரை இதைவிட வேறு யாரால் இப்படிப் பாராட்ட முடியும்?

கடந்த நவம்பர் முதல் வாரத்தில், திருச்சி, தஞ்சை, நாகையில் மட்டும் ஒரே நாளில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டதாகச் செய்தி வந்தது. அதுவும் இந்த ஆட்சியின் சட்டம், ஒழுங்குக்கு ஒரு பாராட்டுத்தான்?

மதுரை நெல்பேட்டை, "போலீஸ் - அவுட்போஸ்ட்"க்கு எதிரே, ஆட்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில், கடந்த நவம்பர் 20ஆம் தேதி, உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அக்பர் அலியின் காரில் மர்ம நபர்கள் வைத்த குண்டு வெடித்தது. நல்லவேளையாக கார் அப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் யாரும் சாகவில்லை. இதுவும் சட்டம், ஒழுங்கு சீராக உள்ளது என்பதற்கான அடையாளம்தான்!

புழல் சிறையிலே மொத்தம் 1,250 கைதிகளை வைக்க முடியும். ஆனால் அங்கே இப்போது இருக்கும் கைதிகளின் எண்ணிக்கை 2,381. அதிலே குண்டர்கள் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டுத் தற்போது சிறையில் இருப்போர் 1,061 பேர். தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருப்பதற்கு இதுவும் ஓர் உதாரணம் அல்லவா?

தே.மு.தி.க. சார்பில் கடலூரில் கடந்த நவம்பர் மாதத்தில் பொதுக்குழு தீர்மானங்களை விளக்குவதற்காகப் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கோரியபோது போலீசார் சட்டம், ஒழுங்கைக் காரணமாகக் காட்டி அனுமதி மறுத்துவிட்டனர். அதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்த நேரத்தில், நீதிபதி சசிதரன் சட்டம், ஒழுங்கைக் காரணம் காட்டிப் பொதுக் கூட்டத்திற்கு போலீசார் அனுமதி மறுத்தது தவறானது. பொதுக் கூட்டத்திற்குப் பாதுகாப்பு தருவது போலீசாரின் கடமை; எனவே பொதுக்கூட்டம் நடத்த அனுமதி தரவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.

வகுப்புவாத மோதல்கள் இல்லாத மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது என்கிறார் ஜெயலலிதா. ஆனால் இவர் ஆட்சிக்கு வந்த பிறகுதான் 2011 செப்டம்பர் 11ஆம் தேதியன்று பரமக்குடியில் துப்பாக்கிச் சூடு சம்பவமே நடைபெற்று 6 பேர் கொல்லப்பட்டார்கள். இந்தச் சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்த உயர்நீதிமன்றம் 23-12-2011 அன்றே உத்தரவிட்டும் கூட, சி.பி.ஐ. இதனை விசாரிக்கவில்லை.

மதுரை மாவட்டத்திற்குள் டாக்டர் ராமதாஸ் அவர்களை நுழையக்கூடாது என்று அந்த மாவட்ட ஆட்சியர் ஓர் உத்தரவு பிறப்பித்தார்; கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்த மாவட்டத்திற்குள் அவரை நுழையக் கூடாது என்று ஆணை பிறப்பித்தார்; விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவர் தொல். திருமாவளவனை விழுப்புரம் மாவட்டத்திற்குள் நுழையக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; அதுபோலவே தர்மபுரி மாவட்டத்திற்கே 144 தடை என்றெல்லாம் இந்த ஆட்சியில் உத்தரவிடப்பட்டு, ஜனநாயக நடவடிக்கைகள் நசுக்கப்பட்டதும், சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருப்பதற்கான அடையாளங்கள்தானா?

கடந்த சில மாதங்களில் நடைபெற்ற பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கப்பட்ட பெண்களின் பட்டியலைப் பார்த்தால்; வேலூர் மாவட்டம், திருப்பத்தூரை அடுத்து ஆண்டியப்பன் கிராமத்தில் ஒன்பது வயது சிறுமி காயத்ரி, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுப் படுகொலை; சிவகிரியில் நந்தினி என்ற பெண் கற்பழிக்கப்பட்டுக் கொலை; சைதாப்பேட்டையில் விஜயா என்ற பெண்ணின் சடலம்; தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டத்தில் 13 வயது சிறுமி, பள்ளி மாணவி புனிதா கற்பழிக் கப்பட்டுக் கொலை; நாகை மாவட்டத்தில் 11 வயது தலித் இனத்தைச் சேர்ந்த சிறுமியை இரண்டு பேர் சேர்ந்து கற்பழிப்பு; விருத்தாசலத்தில் மணிமுத்தாறு நதிக்கரையில் சுகந்தி என்கிற இளம் பெண் கற்பழிப்பு; சிதம்பரம் அருகில் மஞ்சக்குழி கிராமத்தில், சந்தியா என்கிற இளம்பெண் கற்பழிக்கப்பட்டு 3வது மாடியிலிருந்து வீதியிலே எறியப்பட்டாள்; தர்மபுரியில் அரூர் தாலுக்காவில் தாதராவலசை கிராமத்தில் மேனகா என்கிற இளம்பெண் திருமணமானவர், கற்பழிக்கப்பட்டுப் படுகொலை; தூத்துக்குடி மாநகரில், மாதாநகர் 2வது தெருவில் மாரியம்மாள் என்கிற இளம்பெண் கணவனைப் பிரிந்து 3 குழந்தைகளுடன் தந்தை வீட்டில் வசித்து வந்தார், விடியற்காலையில் வீடு புகுந்து மாரியம்மாள் கற்பழிப்பு; விழுப்புரம் வானூர்

ருக்மணிபுரம் பள்ளி மாணவி கல்கி என்பவள் கற்பழிக்கப்பட்டுச் சவுக்குத்தோப்பில் பிணமாகத் தொங்கவிடப்பட்டாள்; உடுமலையில் 12 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்; சிறுமி அவமானம் தாங்க முடியாமல் தீக்குளித்தாள்; நாமக்கல்லில் 18 வயது இளம்பெண், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நான்கு பேர் கொண்ட கும்பலால் கற்பழிப்பு; வேலூர் மாவட்டம், ஆர்க்காடு அருகில் திமிரி என்கிற ஊரில் அபிநயா என்கிற 17 வயது பெண், அச்சுறுத்தல், மிரட்டல் காரணமாக, கற்பைக் காப்பாற்றிக் கொள்ள தீக்குளித்துத் தற்கொலை; சென்னை, பொழிச்சலூரில் பிரேமலதா என்ற பெண் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு காட்டில் பிணமாக வீசப்பட்டுக் கிடந்தாள்; திருச்சி மாவட்டம், தொட்டியம் அருகில் திருமணமான மீனா என்கிற இளம்பெண் தன் உறவினர் வீட்டுத் திருமண நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தபோது 4 பேர் கொண்ட கும்பலால் காரில் கடத்திச் செல்லப்பட்டுக் கற்பழிப்பு; ஓரத்தநாடு, புதூரில் 6ஆம் வகுப்பு படித்துவந்த 11 வயது சிறுமி, ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது கற்பழிப்பு; ராணிப்பேட்டை அருகில் சுடுகாட்டில் சிறுமி கொலை செய்யப்பட்டு, எரிந்த நிலையில் பிணமாகக் கிடந்தார்;

என்று தொடர்ந்து கட்டுக்கடங்காமல், பெண்கள் மீதான கொடுமைகள் நடைபெற்று வருகின்றன. இதுதான் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் பெருமைமிகு தமிழ் மாநிலமா?

16.2.2013 அன்று சேலம் நாடாளுமன்ற கழகச் செயல்வீரர்கள் கூட்டம் நடத்துவதற்காகவும், இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிடவும், காவல்துறை அனுமதி வேண்டி 30.1.2013 அன்று மனு கொடுக்கப்பட்டது. அனுமதி கொடுக்கவில்லை. தி.மு.க. சார்பில் சேலம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி புவனேஸ்வரி, "தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தை யாரும் தடுக்கக்கூடாது" என உத்தர விட்டார். செயல்வீரர்கள் கூட்டம் நடத்துவதற்கான முறையான

அனுமதி பெறப்பட்டு விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதால், கூட்டத்திற்குத் தடை விதிக்க வேண்டும் என்ற காவல்துறையின் கோரிக்கையையும் நீதிபதி தள்ளுபடி செய்தார். இது முதல் நிகழ்ச்சியல்ல; 15-12-2012 அன்று கரூரில் கழகப் பொருளாளர் தம்பி ஸ்டாலின் பங்கேற்கவிருந்த கூட்டத்திற்கும் அ.தி.மு.க. அரசு தடை விதித்து, அதனை எதிர்த்து 11-12-2012 அன்று மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. மனுவினை விசாரித்த நீதியரசர் சு. சுப்பையா அவர்கள் அதே இடத்தில் கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பித்தார். 28-12-2012 அன்று தூத்துக்குடியில் நாடாளுமன்றத் தொகுதிச் செயல்வீரர்கள் கூட்டத்தில் தளபதி ஸ்டாலின் கலந்து கொள்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கேயும் ஆளும் கட்சியினரின் தூண்டுதலால், கூட்டம் நடத்துவதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் நீதிமன்றத்தில் முறையிட்டு, நீதியரசர் ரவிச்சந்திர பாபு அவர்கள் அளித்த தீர்ப்பில், "அனுமதி கோரிய இடத்தில் ஏற்கனவே பல பொதுக்கூட்டங்கள் நடத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த இடம் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு மட்டுமே என மாநகராட்சியால் ஒதுக்கப்பட்ட இடம். மனுதாரரின் கோரிக்கையினை மறுப்பதற்கான எந்த முகாந்திரமும் இல்லை" என்று தெரிவித்து; குறிப்பிட்ட இடத்தில் செயல்வீரர்கள் கூட்டம் நடத்திட அனுமதி அளித்தார். ஜனநாயகத்தின் அடிப்படையான பேச்சுரிமையையும், கூட்டம் கூடும் உரிமையையும் மறுக்கும் இந்த நிகழ்வுகளெல்லாம் சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கின்ற இலட்சணமா?

கழக நிகழ்ச்சிகள் மாத்திரமல்ல; சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பிறந்த நாள் நிகழ்ச்சிக்கு அனுமதி தரப்பட்டதா? நடிகர் விஜய் பிறந்த நாள் கூட்டத்திற்கு அனுமதி தரப்பட்டாதா? ஏன்? "டெசோ" மாநாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டதா? கிடையாது. நீதிமன்றம் சென்றுதான் அனுமதி பெற முடிந்தது. இதுதான் சட்டம், ஒழுங்கு சீராக இருப்பதற்கான ஆதாரங்களா?

திருக்கோவிலூர் அருகில் பழங்குடியினப் பெண்கள் நான்கு பேரை, பாலியல் பலாத்காரம் செய்ததாக, போலீசார் மீது புகார் கூறப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண் ஒருவர், விழுப்புரம் மாவட்ட எஸ்.பி. இடம் புகார் அளித்தார். "பாலியல் பலாத்காரம் செய்த போலீசார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை, இந்த வழக்கை சி.பி.ஐ.

விசாரணைக்கு மாற்ற வேண்டு"மென்று உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் புகழேந்தி மனு தாக்கல் செய்தார். இந்த மனு தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் அடங்கிய முதல் பெஞ்ச் முன் விசாரணைக்கு வந்தது. "சாதாரண மக்களுக்குப் பொருந்தக்கூடிய சட்டத்தை, போலீசாருக்கு மட்டும் ஏன் அமல்படுத்தவில்லை? நஷ்ட ஈடு கொடுப்பதன் மூலம், இழந்த கற்பைத் திரும்பப் பெற முடியாது, சம்பந்தப்பட்டவர்கள்மீது சட்டப்படி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று முதல் பெஞ்ச் தெரிவித்தது. சட்டம், ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டதற்கு மற்றுமோர் உதாரணம் இது.

"தினத்தந்தி" செய்தி - "சென்னையில் ஒரே மாதத்தில் 16 கொலைகள்" என்ற தலைப்பில் "சென்னையில் ஒரே மாதத்தில் 16 கொலைகள் நடந்துள்ளன. இதில் 5 கொலையில் குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை. பெரும்பரபரப்பை ஏற்படுத்திய நுங்கம்பாக்கம் வங்கிப் பெண் அதிகாரி கொலையில் துப்புத்துலக்க முடியாமல் போலீசார் திணறி வருகின்றனர்" என்றெல்லாம் செய்தி வந்ததும், சட்டம், ஒழுங்கைச் சிறப்பாகப் பராமரிப்பதற்கான அடையாளம்தான் போலும்!

ஜெயலலிதாவின் பொறுப்பிலுள்ள போலீசாருக்கு நீதிமன்றம் அளித்த மற்றொரு சான்றிதழ் இதோ :- The Madras High Court Bench here came down heavily on police officers "who think they are a law unto themselves just because they are vested with certain powers under the Code of Criminal Procedure and that the common people are at their mercy" (The Hindu 14-2-2012)

காவல் துறை எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்பதற்கு "போலீஸ் பக்ருதீன்" கைதை பெருமையாக முதலமைச்சர் பேசியிருக்கிறார். ஆனால் பக்ருதீன் யாரைக் கொன்றதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார் என்று காவல் துறை சொல்கிறதோ, அதே காவல் துறை கடந்த சில மாதங்களுக்கு முன் அந்தக் குறிப்பிட்ட நபரைக் கொலை செய்தது வேறு சிலர் என்று கூறி, அவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுத்துச் சிறையிலே தள்ளியதே, அதுவும் ஜெயலலிதா தலைமையிலே உள்ள காவல் துறைதானே? இந்த முரண்பாட்டுக்கு யார் பாராட்டுரை வழங்குவது? அந்தத் தவறுக்காக காவல் துறையிலே பணியாற்றும் கீழ்மட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கிறார்களே; இதில் அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் அல்லவா

விளக்கம் தரவேண்டும்? பாராட்டு மட்டும் முதல் அமைச்சருக்கு; தண்டனை என்றால் கீழே உள்ள அதிகாரிகளுக்கா?

மேலும் முதலமைச்சர், காவல் துறையும், மாவட்ட நிர்வாகமும் சமூக விரோத சக்திகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க முழு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஆனால் உண்மையில் காவல் துறையும், மாவட்ட நிர்வாகமும் சமூக விரோத சக்திகளை அல்ல, தங்களுக்குப் பிடிக்காதவர்களையும், பிடிக்காத அரசியல் கட்சிகளின் தலைவர்களையும்தான் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குகிறார்கள். அதற்கான அடையாளம் தான் கணக்கற்ற "அவதூறு வழக்குகள்"!

இந்த ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சரியாகவோ, முறையாகவோ பராமரிக்கப்படவில்லை என்பதற்கான சம்பவங்களை எழுத வேண்டுமேயானால் நேரமும் போதாது, பத்திரிகையில் இடமும் இருக்காது. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா, அது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு என்றாலும் - ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதில் அளிப்பதாக இருந்தாலும் தனது ஆட்சியில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் தமிழகம் பெருமைமிகு மாநிலமாகத் திகழ்கிறது என்று சொல்லிக் கொள்வதும், அதைத் தமிழக நாளேடுகள் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் வெளியிடுவதும் வழக்கமாக இருந்து வருகிறது. ஒரே பொய்யை, திரும்பத் திரும்பச் சொல்லி விளம்பரப்படுத்திக் கொள்வதாலேயே, அந்தப் பொய் மெய்யாகிவிடுமா?

ஒட்டுமொத்தமாக ஜெயலலிதா ஆட்சியில் சட்டம், ஒழுங்கு எவ்வாறு இருந்தது என்பதற்கு ஆதாரபூர்வமாக விளக்கம் கூற வேண்டுமேயானால், இந்த இரண்டரை ஆண்டுகளில் ஏடுகளிலே வெளிவந்த கொலைகள் மாத்திரம் 3,231 - கொள்ளைகள் 1,170 - வழிப்பறி மோசடிகள் 691 - செயின் பறிப்புகள் 652! இதுதான் ஜெயலலிதா ஆட்சியில் சட்டம், ஒழுங்கு நன்கு பராமரிக்கப்படுவதற்கான இலட்சணம்!

அன்புள்ள,

மு.க.

18-12-2013

3839. நிதிக் குழு உரையா? நிந்தனை உரையா?

உடன்பிறப்பே,

மத்திய அரசின் 14வது நிதிக்குழுக் கூட்டம் 16-12-2013 அன்று சென்னையில் நடைபெற்றிருக்கிறது. அதில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா எவ்விதக் குறிப்பும் இல்லாமல் தமிழக மின் பற்றாக்குறைக்குக் காரணம் என்ன என்பதை ஆதாரங்களுடன் விளக்கிக் கூறினாராம். குறிப்பும், ஆதாரமும் கையில் இல்லாத காரணத்தாலோ என்னவோ, சில அபத்தமான கருத்துக்களை ஏதோ ஆணித்தரமான உண்மைகளென்று அனைவரும் நம்ப வேண்டுமென எண்ணிப் பேசியிருக்கிறார்.

ஏற்காடு இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்ற போதும் மின்சாரம் பற்றித்தான் பேசினார். அப்போது தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மின் பற்றாக் குறைக்குக் காரணம், தமிழ்நாட்டில் மத்திய அரசின் சார்பில் நடைபெறும் மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தியை வேண்டுமென்றே மத்திய அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் சதி செய்து குறைத்து விட்டதாக ஒரு குற்றச்சாற்றினைச் சுமத்தியிருந்தார். மத்திய அரசின் மின் உற்பத்தி நிறுவனங்களில் பராமரிப்புப் பணி நடைபெறுவதால், உற்பத்தி குறைந்திருக்கிறது, அதைப்பற்றி ஏற்கனவே ஏடுகளில் எந்தெந்தத் தேதிகளில் செய்தி வந்துள்ளது, அதற்கும் தி.மு. கழகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது, மத்திய அரசோ, ஒரு கட்சியோ இது போன்ற விஷயங்களில் சதி செய்து மின் உற்பத்தியைக் குறைக்க மாட்டார்கள், எனவே சிறு பிள்ளைத்தனமாக முதலமைச்சர் பதவியில் இருப்பவர் குற்றச்சாற்றுகளைக் கூறக்கூடாது என்று யாரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விளக்கியிருந்தேன். அதற்குப் பிறகு எப்போதும் போல வசதியாக அந்தப் பிரச்சினையை அப்படியே முதலமைச்சர் விட்டுவிட்டார்.

ஆனால் 16ஆம் தேதி மத்திய அரசின் 14வது நிதிக் குழுக் கூட்டத்தில் தமிழக அரசின் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை என்றும், அரசியல் காரணங்களுக்காக வேண்டுமென்றே அனுமதி மறுக்கப்பட்டது என்றும், உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பிறகுதான் அனுமதி வழங்கப்பட்டது என்றும் கூறியிருக்கிறார். இந்தக் குற்றச்சாற்றுக்கு மத்திய அரசு பதிலளிக்கும் என்று கருதுகிறேன். 27-12-2012 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட முதல்வர் ஜெயலலிதா அவசர அவசரமாகப் பேசிவிட்டு வெளிநடப்பு செய்தபோது தமிழக அரசு மின் கட்டணத்தை உயர்த்தியது பற்றித் துணிவாக முடிவெடுத்தேன் என்று பேசினாரே, அப்போது இந்த மின் திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்று வீர தீரத்திற்கும் அதிரடிக்கும் பெயர் பெற்றவர் நேருக்கு நேராகவே கேட்டிருக்க வேண்டாமா? அங்கே அதைக் கேட்டுவிட்டு வெளி நடப்பு செய்திருக்கலாம் அல்லவா? அந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளப் பயந்து, விட்டு விட்டு, இங்கே வந்து காற்றில் கத்தியைச் சுழற்றுவதைப் போல மத்திய அரசு மீது குறை கூறுவதால் என்ன பயன்?

கழக ஆட்சியில் ஒரு முறை மின் பற்றாக்குறை ஏற்பட்ட போது, நான் உடனடியாக துறையின் அமைச்சரையும், தலைமைச் செயலாளரையும், துறையின் அதிகாரிகளையும் கலந்தாலோசித்து, அப்போது மத்திய அமைச்சராக இருந்த டி.ஆர்.பாலுவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனடியாகப் பிரதமரைச் சந்திக்க வைத்து, அவர் பிரதமரைச் சந்தித்து அதன் விளைவாகப் பிரதமர் மத்திய எரிசக்தித் துறை அமைச்சரை அழைத்துப் பேசி, 1,000 மெகாவாட் மின்சாரம் 2008ஆம் ஆண்டு டிசம்பர் 1ஆம் தேதியிலிருந்து ஏப்ரல் மாதம் 30ஆம் தேதி வரையிலும் கொடுப்பதற்கு மத்திய அரசு முன்வந்தது.

முதலமைச்சர் ஜெயலலிதா மின் பற்றாக்குறைக்கு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை என்பதோடு விடவில்லை. தி.மு. கழக அரசு மீதும் வழக்கம்போல புகார் புராணம் படித்திருக்கிறார். அதில் “2001 முதல் 2006 வரை பல புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் தொடங்கினேன். அந்தத் திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தால், இன்று கூடத் தமிழ்நாடு மின்மிகை மாநிலமாகத் திகழ்ந்திருக்க முடியும்.

ஆனால், முந்தைய அரசு புதிய மின் திட்டங்களைப் புழுதியில் தள்ளிவிட்டதுடன், அவற்றை முற்றிலுமாகப் புறந்தள்ளி விட்டார்கள். அந்தத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவோ, நிறைவேற்றவோ அக்கறை காட்டவில்லை" என்றெல்லாம் பேசியிருக்கிறார். ஜெயலலிதாவின் இந்தக் குற்றச்சாற்றுக்கு நான் பலமுறை பதிலளித்து விட்டேன். ஆனாலும் தொடர்ந்து கிளிப்பிள்ளை போல அதே குற்றச்சாற்றினை, திரும்பத் திரும்பச் சொல்லிவருகிறார். முதலமைச்சர் பொறுப்பில் இருப்பவர் சொல்கிற குற்றச்சாற்றுகளுக்கு எதிர்த் தரப்பிலே இருந்து பதில் வருகிற போது, அதைப் படித்து உண்மை என்ன என்பதைத் தெளிவாக்கிப் புரிந்து கொள்ள வேண்டாமா?

2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் ஜூன் மாதத்தில், ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்த தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா நீண்ட நேரம் மின் தட்டுப்பாட்டைப் பற்றித்தான் பேசினார். தான் ஆட்சியில் இருந்தபோது மேற்கொண்ட முயற்சிகளைத் தி.மு.கழக அரசு தொடர்ந்திருந்தால் தமிழகத்தில் மின் தட்டுப்பாட்டைத் தவிர்த்திருக்கலாம் என்றும், ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் தற்போதுள்ள 3 மணி நேர மின் வெட்டினை 2 மணி நேரமாகக் குறைப்போம் என்றும், கழக ஆட்சிக் காலத்தில் மின் உற்பத்தியை அதிகப்படுத்த எதுவுமே செய்யவில்லை என்றும் குறிப்பிட்டு, அதற்கு நான் 18-6-2011 அன்றே "முரசொலி"யில் விரிவாகப் பதிலளித்திருந்தேன்.

மீண்டும், 2012ஆம் ஆண்டு பிப்ரவரி 4ஆம் தேதியன்று, ஜெயலலிதா ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு ஒன்றரை மணி நேரம் பதிலளித்து உரையாற்றிய போதே, கடந்த ஐந்தாண்டுகளில் தி.மு.க. அரசு மின் திட்டங்களைச் செயற்படுத்தியிருந்தால் மின் பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது என்றார். அதற்கு 6-2-2012 தேதிய "முரசொலி"யிலேயே விரிவாக நான் பதில் எழுதிவிட்டேன். ஆனால் எனது பதிலை அவர் மறந்துவிட்டோ, அல்லது மக்கள் மறந்திருப்பார்கள் என்ற எண்ணத்தோடோ, நிதிக்குழு முன்பாகத் தற்போது திசை திருப்பும் வகையில் சொல்லியிருக்கிறார்.

2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு மின் உற்பத்திக்காக என்னென்ன செய்யப்பட்டது என்பதை மீண்டும் ஒரு முறை விளக்குகிறேன்.

எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று 8-12-2006இல் 3 ஆயிரத்து 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது;

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 3 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு திட்டம் 2-5-2007இல் தொடங்கப்பட்டது;

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய வகையில் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் 26-6-2007இல் தொடங்கப்பட்டது;

உடன்குடியில் பி.எச்.ஈ.எல்., மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் இணைந்து கூட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொன்றும் 800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக் கூடிய இரண்டு திட்டங்கள் 15-10-2007இல் 8 ஆயிரத்து 362 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டன.

வடசென்னை அனல் மின் நிலையத்திலேயே மேலும் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு திட்டம் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 14-7-2008இல் தொடங்கப்பட்டது.

ஆயிரத்து 126 கோடி ரூபாய் செலவில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலிருந்து, 183 மெகாவாட் இணை மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டம், 14-12-2009இல் தொடங்கப்பட்டது. மொத்தம் 4183 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களுக்குரிய பணிகள் தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்டன. இவ்வாறு கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களில் ஒன்றிரண்டு அதற்கு முன்னர் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டிருக்கலாம். ஆனால் அவையனைத்தையும் நடைமுறைப்படுத்தியது தி.மு.கழக அரசுதான். அ.தி.மு.க. அரசு திட்டமிட்டது ஆயிற்றே, காழ்ப்புணர்ச்சியோடு அதற்கு மூடு விழா நடத்துவோம் என்ற "சின்னப்புத்தி"; தற்போது அ.தி.மு.க. அரசுக்கு இருப்பதைப் போல, தி.மு.கழக அரசுக்கு எப்போதும் கிடையாது என்பதற்கான ஆதாரம்தான், மேலே கூறப்பட்ட திட்டங்கள்.

2006இல் தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு, வருங்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு

எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக

2010-2011இல் 1400 மெகாவாட் மின்சாரமும்,

2011-2012இல் 3316 மெகாவாட் மின்சாரமும்,

2012-2013இல் 1222 மெகாவாட் மின்சாரமும்,

2013-2014இல் 1860 மெகாவாட் மின்சாரமும் - ஆக மொத்தம் 7798 மெகாவாட் மின்சாரம் பல்வேறு மின் திட்டங்களின் மூலமாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

இந்தப் புள்ளி விவரங்கள், தி.மு. கழக ஆட்சியில் புதிதாக மின்சாரத்தை உற்பத்திச் செய்யக்கூடிய திட்டங்கள் எதையும் தொடங்கவில்லை என்று நிதிக் குழுவிற்கு முன்னால் ஜெயலலிதா கூறிய குற்றச்சாட்டிற்குத் தேவையான திடமான ஆதாரப்பூர்வமான விளக்கமாக அமையுமென்று கருதுகிறேன்.

நிதிக்குழு முன்பாக முதலமைச்சர் பேசும்போது, "நான் (ஜெயலலிதா) முதல் முறையாக 1991 முதல் 1996 வரை முதலமைச்சராக இருந்த போது, தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக இருந்தது. அப்போது மின்சாரத் தடை என்பதே இல்லை" என்று பேசியிருக்கிறார்.

1991 முதல் 1996ஆம் ஆண்டு வரை ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே 1991 செப்டம்பர் மாதம் 1ஆம் தேதியிலிருந்து 20 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதம்வரை தமிழ்நாட்டில் மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா? இல்லையா? முதலமைச்சர் இதற்குப் பதில் சொல்லாவிட்டாலும், அந்தத் துறையின் அதிகாரிகள் இதற்குப் பதில் சொல்வார்களா?

ஏன் அதற்கு முன்பே, 3-10-1982 முதல் 26-7-1984 வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா இல்லையா? 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளைத் தமிழகத்திலே தொடங்காமல் இருந்திருந்தால் மின் கட்டுப்பாட்டு முறை வந்திருக்காதுதான். அதற்காக தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்காமல் ஓர் அரசு இருக்க முடியுமா?

அ.தி.மு.க. ஆட்சியிலே மின் உற்பத்தித் திட்டங்களை அதிகமாகத் தொடங்காத காரணத்தால்; கழக ஆட்சியிலே மின்

பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால் தி.மு.கழக ஆட்சியில் மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கியதன் காரணமாகத்தான், ஓரளவிற்காவது மின் உற்பத்தி அதிகமாகி வருகிறது. மத்திய அரசு மீதும், ஏற்கனவே மாநிலத்தை ஆண்ட கட்சி மீதும் வீண் பழி சுமத்தாமல், இன்றைய முதலமைச்சர் கடந்த காலத் தி.மு.கழக ஆட்சியில் திட்டமிட்ட மின் உற்பத்தித் திட்டங்களுக்குச் சரியான முறையில் ஊக்கமளித்தால், மேலும் மின் உற்பத்தி அதிகமாகும்.

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆண்டு முழுவதும் மின்சாரப் பற்றாக்குறை நிலவியது" என்று அதாவது தி.மு.கழக ஆட்சியிலே மின் பற்றாக்குறை இருந்ததாக முதல்வர் ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். அவர் கூறியது எந்த அளவிற்கு உண்மை என்பதை விளக்க, தி.மு.கழக ஆட்சியில் மின் துறை அமைச்சராக இருந்த ஆற்காடு வீராசாமி, 3-4-2007 அன்று சட்டப் பேரவையில் பேசியதை மட்டும் நினைவூட்டுகிறேன்.

"..... நாம் மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாகத்தான் இருக்கிறோம். இந்தியாவிலேயே மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாக இருப்பது தமிழ்நாடு மட்டும்தான். இப்போது மராட்டிய மாநிலத்திற்கு உபரி மின்சாரத்தை விற்பனை செய்கிறோம். பஞ்சாப் மாநிலத்திற்கு விற்பனை செய்கின்றோம்" என்றெல்லாம் அவர் பேசியிருப்பதிலிருந்தே, 2007 இல் தமிழ்நாடு மின் பற்றாக்குறை மாநிலமா என்பதைப் புரிந்து கொள்ளலாம். தி.மு.கழக ஆட்சியில் 2007 ஆம் ஆண்டு தமிழகத்தில் மின்பற்றாக்குறை இருந்திருந்தால், மராட்டியத்திற்கும் பஞ்சாப்பிற்கும் உபரி மின்சாரத்தை விற்பனை செய்திருக்க முடியுமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும், நேற்றையதினம் பேசிய முதலமைச்சர் "அடுத்த ஆறு மாதங்களில் தமிழ்நாடு முழுமையாக மின்மிகை மாநிலமாக இருக்கும், மின் தடை இல்லாத மாநிலமாக இருக்கும்" என்று கூறியிருக்கிறார். தமிழ்நாட்டின் நன்மை கருதி, அவர் இத்தகைய வெற்று வாக்குறுதிகளை அடிக்கடி அளிக்காமல் இருப்பது நல்லது. ஏன் தெரியுமா?

2011 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஆளுநர் உரைக்குப் பதிலளித்த ஜெயலலிதா, "ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில்

தற்போதுள்ள 3 மணி நேர மின் வெட்டினை 2 மணி நேரமாகக் குறைப்போம்" என்றார்.

2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4ஆம் தேதி சட்டப் பேரவையில் படிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையில் "மின்சக்தியின் உற்பத்திக்கு ஏற்ப, மின்வெட்டு படிப்படியாகத் தளர்த்தப்பட்டு 2012 ஆகஸ்ட் மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் முற்றிலுமாக நீக்கப்படும்" என்று படிக்கப்பட்டது.

4-2-2012 அன்று ஆளுநர் உரைக்குப் பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் பேச்சுக்கு 5-2-2012 அன்று அவருடைய அதிகாரப்பூர்வ ஏட்டில் வெளியிடப்பட்ட தலைப்பு என்ன தெரியுமா? "2012 ஜூன் மாதம் முதல் மின் பற்றாக்குறை படிப்படியாகக் குறைக்கப் பட்டு, 2013 மத்தியில் மின் பற்றாக்குறை முழுவதுமாக நீக்கப்படும்" என்பதாகும். ஆளுங்கட்சியினர் யாருக்காவது சந்தேகம் இருந்தால், அந்தப் பழைய பத்திரிகையைத் தேடி எடுத்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்!

தமிழக மின் துறை அமைச்சர் "இந்தியா டுடே" இதழுக்கு 2012 பிப்ரவரி மாதம் அளித்த பேட்டியில், "இந்த மார்ச் முதல் மே மாதம் வரையில் மட்டும்தான் தமிழகம் மின் பற்றாக்குறையை அனுபவிக்கும். இந்த மூன்று மாதங்களை மட்டும் பொறுத்துக் கொண்டால், தமிழகத்தில் மின் பற்றாக்குறையே இருக்காது" என்றார்.

அதே 2012ஆம் ஆண்டு டிசம்பரில் சட்டப் பேரவையில், "வரும் ஜூன் மாதம் முதல் மின்வெட்டு நேரம் படிப்படியாகக் குறைக்கப்படும்" என்று அறிவித்தார்கள்.

இப்படியெல்லாம் பல தவணை உறுதிமொழி கூறியவர்கள், தற்போது அடுத்த ஆறு மாதங்களில் தமிழ்நாடு முழுமையாக மின்மிகை மாநிலமாக இருக்கும் என்றும், மின் தடை இல்லாத மாநிலமாக இருக்கும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே பலமுறை உறுதிமொழி அளித்து நிறைவேற்றாத நிலையில், தற்போது அ.தி.மு.க.வினர் அளித்திருக்கும் உறுதிமொழியை யாராவது நம்புவார்களா?

இன்னும் சொல்லப்போனால், 2011ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் என்னவெல்லாம் சொன்னார்கள் தெரியுமா?

"இருண்ட தமிழகம் ஒளிமயமாக்கப்படும். வீடு, தொழில் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் தடையின்றி வழங்கத் துரிதநடவடிக்கை எடுக்கப்படும். அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இதற்கான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். 2012ஆம் ஆண்டுக்குள், அதாவது இரண்டு வருடங்களுக்குள் 151 நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில், நகராட்சிக் கழிவைக் கொண்டு 1000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். 2013ஆம் ஆண்டுக்குள் பத்து 300 மெகாவாட் "சோலார் எனர்ஜி பார்க்ஸ்" உருவாக்கப்பட்டு 3000 மெகாவாட் மின்சாரம் அதன் மூலம் தயாரிக்கப்படும். தெரிந்தெடுக்கப்பட்ட 160 கிராமப் பஞ்சாயத்துக்களில் 200 கிலோ வாட் உயிரிதிரள் இயற்கை எரிபொருள் மின்சாரம் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் கிராமப்புறங்களில் 64 ஆயிரம் பேருக்குப் புதிய வேலைவாய்ப்பு கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்" என்று தேர்தல் அறிக்கையிலே படித்து, அதை உண்மையென நம்பி தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் வாக்களித்து ஆட்சிக்கு வந்தார்களே, இதில் ஏதாவது ஒன்றையாவது நிறைவேற்றியிருக்கிறார்களா? தமிழ்நாட்டு வாக்காளர்களே, தயவு செய்து ஒரு நிமிடம் எண்ணிப் பாருங்கள்! அ.தி.மு.க.வினர் வாக்குறுதிகள் அளிப்பதே, வாக்குகளைப் பெறுவதற்காகவே அன்றி, நிறைவேற்றுவதற்காக அல்ல!

"சீனி சர்க்கரை சித்தப்பா; ஏட்டில் எழுதி நக்கப்பா!" என்று கிராமத்தில்தான் சொல்வார்கள். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையையும், "அம்மா"வின் உரைகளையும் படிக்கின்ற நேரத்தில் இந்தக் கிராமிய மொழிதான் நினைவுக்கு வருகிறது. மேலும் ஜெயலலிதா ஆற்றிய உரை, நிதிக்குழு உரையா? நிந்தனை உரையா? என்ற கேள்வியும் எழுகிறது!

அன்புள்ள,

மு.க.

19-12-2013

3840. ஒப்பிட்டுப் பார்த்து தெளிவடைய வேண்டுகிறேன்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு 15-12-2013 அன்று காலை 10 மணிக்குத் தொடங்கி இரவு 8 மணி வரை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இரங்கல் தீர்மானம் அன்னியில், 24 தீர்மானங்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் ஒப்புதலோடு நிறைவேற்றப்பட்டன. நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள் என்று 15 பேர் உரையாற்றினார்கள். இறுதியாக பொருளாளர், பொதுச் செயலாளர் உரையாற்றிய பிறகு நான் பேசினேன். இது திராவிட முன்னேற்றக் கழகம்.

19-12-2013 அன்று அ.தி.மு.க.வின் செயற் குழு, பொதுக்குழு இரண்டும் நடைபெற்றன.

3 மணிக்குச் செயற்குழுக் கூட்டம் தொடங்கி, ஐந்து நிமிடங்களில் செயற்குழுக் கூட்டம் முடிந்தது. அதன் பிறகு பொதுக்குழுக் கூட்டம் தொடங்கி 6.25 மணிக்கு முடிவடைந்தது. இதற்கிடையே 16 தீர்மானங்கள் படிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

தி.மு. கழகம் நிறைவேற்றிய 24 தீர்மானங்களில் நெல்சன் மண்டேலாவுக்கு இரங்கல் தீர்மானம் ஒன்று. ஏற்காடு இடைத்தேர்தலில் பலியான ராஜமுருகனுக்கு வீர வணக்கம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று. நெஞ்சுக்கு நீதி ஆறாம் பாகம் எழுதியதற்காக அடியேனுக்கு ஒரு பாராட்டுத் தீர்மானம். ஏற்காடு தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி அறிவிக்கும் ஒரு தீர்மானம். தேர்தல் கூட்டணி அமைப்பதற்கு தலைவருக்கும், பொதுச் செயலாளருக்கும் அதிகாரம் அளிக்கும் ஒரு தீர்மானம். கழக

அமைப்புத் தேர்தல்கள் குறித்து ஒரு தீர்மானம். ஈழத் தமிழர் பிரச்சினை, இந்திய மீனவர்கள் பிரச்சினை உட்பட, மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் தீர்மானங்கள் எட்டு. தமிழக அ.தி.மு.க. அரசுக்கு வேண்டுகோள் மற்றும் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானங்கள் பத்து. ஆக மொத்தம் 24 தீர்மானங்கள். எந்தவொரு தீர்மானத்திலும் பண்பாடு - நாகரிகம் ஆகியவற்றுக்குப் புறம்பான ஒரு வார்த்தையைக் கூட யாராலும் சுட்டிக் காட்ட முடியாது. அரசியல் தீர்மானத்திற்குரிய இலக்கணத்தோடு இந்த 24 தீர்மானங்களும் வடிவமைக்கப்பட்டிருப்பதை, அதைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆனால் அ.தி.மு.க. நிறைவேற்றிய தீர்மானங்கள் எப்படி? மொத்தம் 16 தீர்மானங்களில்,

4 தீர்மானங்கள் மத்திய அரசுக்கு எதிராக கண்டனத் தீர்மானங்கள். அமைப்புத் தேர்தல்கள் குறித்து ஒரு தீர்மானம். "அம்மா"வுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தும், கூட்டணியை முடிவு செய்ய அதிகாரம் அளித்தும், பல்வேறு காரணங்களுக்காகப் பாராட்டு தெரிவித்தும் பத்து தீர்மானங்கள். மீதம் ஒரு தீர்மானம், எனக்காக! அங்கே நிறைவேற்றப்பட்ட

16 தீர்மானங்களிலேயே மிக நீண்ட தீர்மானம் என்னை "அர்ச்சனை" செய்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம்தான்! அந்தத் தீர்மானத்தை, ஆளுங்கட்சியின் அதிகாரப்பூர்வ ஏட்டினைத் தவிர வேறு எதிலும் முழுமையாக வெளியிட வில்லை. ஏனென்றால், வெளியிடக் கூடிய அளவிற்கு அந்தத் தீர்மானம் நாகரிகமானதாக இல்லை. அந்தத் தீர்மானத்திற்குத் தலைப்பு "மத்திய ஆட்சிப் பொறுப்பில் தொடர்ந்து பல ஆண்டுகள் பங்கேற்றபோதும், எந்த ஒரு நற்செயலையும் செய்யாமல் உலகத் தமிழர்களின் உள்ளமெல்லாம் வேதனை கொள்ளும் வகையில் துரோகம் இழைத்த தீய சக்தி கருணாநிதியை, வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் முற்றிலுமாகப் புறக்கணிக்க தமிழக வாக்காளர்களுக்கு அன்பு வேண்டுகோள்" என்பதாகும்.

அந்த நீண்ட தீர்மானத்தில் என்னை "இனத் துரோகி" என்றும், "மாபாதகன்" என்றும், "சுயநலவாதி" என்றும், "தீயசக்தி" என்றும், "தமிழ் இனத் துரோகி" என்றும் கடும் விமர்சனம் செய்திருக்கிறார்கள். நான் செய்த குற்றம், மத்திய ஆட்சிப்

பொறுப்பில் தி.மு.க. பங்கேற்ற போது எந்த ஒரு நற்செயலையும் செய்யவில்லையாம்! இதோ பட்டியல்!

சமூக நீதிக் காவலர், திரு. வி.பி. சிங் அவர்கள் தலைமையில் தேசிய முன்னணி ஆட்சியில்

தி.மு.கழகம் பங்கேற்றிருந்தபோதுதான், மண்டல் பரிந்துரை ஏற்கப்பட்டு, மத்திய அரசின் வேலை வாய்ப்புகளில் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு கிடைத்தது; காவிரி நதி நீர் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது; சென்னை விமான நிலையத்தில் பன்னாட்டு முனையத்திற்கு அறிஞர் அண்ணா அவர்களின்

திருப்பெயரும், உள்நாட்டு முனையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருப்பெயரும் சூட்டப்பட்டன.

ஐக்கிய முன்னணி ஆட்சியில், குஜ்ரால் தலைமையிலான அமைச்சரவையில், மறைந்த தம்பி முரசொலி மாறன், மத்திய அரசின் தொழில் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது, சிறந்த ஒன்பது பொதுத் துறை நிறுவனங்களை "நவரத்தினங்கள்" என்று பெயரிட்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கே ஊக்கமளித்தார்.

திரு. வாஜ்பாய் அவர்கள் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில்தான் சேது சமுத்திரத் திட்டம் வடிவம் பெற்றது; கன்னியாகுமரி கடற்கரை ஓரத்தில் பெருந்தலைவர் காமராஜருக்கு மணி மண்டபம் அமைக்க அனுமதி கிடைத்தது.

திருமதி சோனியா காந்தி அம்மையார் தலைமையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் கழகம் பொறுப்பேற்றிருந்த காலத்தில்தான் தமிழ், செம்மொழி என்ற தகுதியைப் பெற்றது; சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைந்தது;

கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலம்

56 ஆயிரத்து 664 கோடியே 21 இலட்சம் ரூபாய்ச் செலவில், 4,676 கிலோ மீட்டர் நீள தேசிய நெடுஞ்சாலைகளில், 3,276 கிலோ மீட்டர் சாலைகள், நான்கு வழிச் சாலைகளாக மேம்பாடு; மிகப் பெரிய மேம்பாலங்கள், துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர்வழிப் போக்குவரத்து வசதிகள் அமைந்தன.

சென்னைக்கருகில் ஓரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் மத்திய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் அமைத்தது.

1553 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் உருட்டாலை சர்வதேச அளவுக்கு உயர்த்தப்பட்டு, புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம்.

தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்.

சேலத்தில் புதிய இரயில்வே மண்டலம்.

120 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனை

"சூப்பர் ஸ்பெஷாலிட்டி" மருத்துவமனையாக மேம்பாடு.

1650 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமுகம்-மதுரவாயல் இடையே பறக்கும் சாலைக்கான துவக்கம்.

2427 கோடி ரூபாய்ச் செலவில் சேது சமுத்திரத் திட்டப்பணிகள் தொடக்கம்.

நெசவாளர் சமுதாயத்தினர் பெரும்பயன் எய்திட சென்வாட் வரி நீக்கம்.

908 கோடி ரூபாய்ச் செலவில் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றொரு திட்டம்.

"பொடா சட்டம்" ரத்து.

அனைத்து கிராமங்களிலும் முழு கணினி நிர்வாகத்தை ஏற்படுத்தும் வகையில் தேசிய கணினி நிர்வாகத் திட்டம் அறிமுகம்; (National E.Governance Programme).

50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி.

மாதம் ஒன்றுக்கு 120 இலட்சம் புதிய தொலைபேசி இணைப்புகள்.

செல்போன் கட்டணங்கள் குறைப்பு.

தமிழகத்திலுள்ள மீட்டர்கேஜ் இரயில் பாதைகள் அனைத்தும் அகல இரயில் பாதைகளாக மாற்றிட அனுமதி.

1828 கோடி ரூபாய்ச் செலவில் 90 இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி.

சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

மத்திய அரசு கல்வி நிறுவனங்களில்

27 சதவீத இடஒதுக்கீடு.

திருச்சி, கோவை, மதுரை விமான நிலையங்கள் விரிவாக்கம்.

சென்னைக்கருகில் பன்னாட்டுத் தரம் வாய்ந்த கடல்சார் தேசிய பல்கலைக்கழகம், திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம், கோவையில் உலகத் தரத்திலான மத்தியப் பல்கலைக் கழகம், திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம்.

ஆசியாவிலேயே முதலாவதாக சென்னைக்கு அருகில் ஒன்றுக்கு மேற்பட்ட உடல் ஊனமுற்றோர்க்கான தேசிய நிறுவனம்.

சென்னையில் மத்திய அதிரடிப்படை மையம் (என்.எஸ்.ஜி.)

இந்தியா முழுவதும் விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளில், வங்கியில் பெற்றிருந்த ரூ.72,000 கோடி மதிப்பிலான கடனும் வட்டியும் மத்திய அரசால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்தியா முழுவதும் மாணவர்களுக்கு

பல நூறு கோடி ரூபாய் கல்விக் கடன் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வழியாக வழங்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசில் இடம் பெற்ற தமிழகத்தின் 13 அமைச்சர்களும் பல்வேறு செயல் திட்டங்களை இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் நிறைவேற்றி உள்ளனர். இந்திய அளவில் கடந்த காலங்களில் பெறமுடியாத அளவிற்குத் திட்டங்களின் மொத்த செலவுத் தொகையான ரூ.3,70,000 கோடியில், தமிழ்நாடு 11 விழுக்காட்டுப் பங்கினைப் பெற்றுள்ளது. இதுவரை தமிழ்நாடு பெறாத அளவில் அதிக நிதியினைப் பெற்று தமிழ்நாட்டில் 69 மத்திய அரசுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மத்திய ஆட்சிப் பொறுப்பில் தி.மு. கழகம் பங்கேற்றிருந்தபோது செய்யப்பட்ட நற்செயல்கள் பற்றிய பட்டியலைத் தந்துள்ளேன். அதேநேரத்தில் அ.தி.மு.க.வின் இலட்சணம் என்ன?

1998ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், பா.ஜ.க. தலைமையில் கூட்டணி ஆட்சி அமைந்தபோது, அந்தக் கூட்டணியின் சார்பில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா, குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டிய ஆதரவுக் கடிதத்தைக்கூட வேண்டுமென்றே அனுப்பி வைக்காமல் தாமதம் செய்து முரண்டு பிடித்தார்.

ஜெயலலிதாவின் அப்போதைய முக்கிய கோரிக்கையே தமிழக தி.மு.கழக அரசைக் கலைக்க வேண்டும் என்பதுதான். மேலும் அவர் மீதிருந்த வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்.

பா.ஜ.க. கூட்டணி அரசில் இடம் பெற்றிருந்த ஜெயலலிதா, பா.ஜ.க. அரசின் முன்னால் வைத்த கோரிக்கைகள் - முன்னாள் தலைமைச் செயலாளர் அரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ்., அவர்களின் தற்காலிக வேலை நீக்கம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்; சி.ராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்களின் தற்காலிக வேலை நீக்கம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்; தூத்துக்குடி துறைமுகக் கழகத் தலைவர்

எஸ்.மச்சேந்திரநாதன், பாரதீப் துறைமுகத்திற்கு மாற்றப்பட வேண்டும்; ஏற்கனவே அளித்த பட்டியலின் அடிப்படையில், பெங்களூரில் கம்பெனிப் பதிவாளராக உள்ள பி.கே.பன்சால் மும்பையில் இணை இயக்குநராக நியமிக்கப்பட வேண்டும் என்பன போன்ற பல சிபாரிசுகளை தன் கைப்படவே எழுதிக் கொடுத்திருந்தார்.

தனது சொந்த நலனுக்காக எண்ணியதெல்லாம் முழுமையாக நிறைவேறவில்லை என்பதால் ஆத்திரப்பட்ட ஜெயலலிதா, குடியரசுத் தலைவரைச் சந்தித்து, பா.ஜ.க. ஆட்சிக்கு அளித்து வந்த ஆதரவைத் திரும்பப் பெற்று, வாஜ்பாய் அவர்கள் தலைமையில் இருந்த மத்திய ஆட்சியையே கலைக்க முழு முதல் காரணமாக இருந்தார். அவரைப் பற்றி அன்றைய பிரதமர் வாஜ்பாய் அளித்த சான்றிதழ் 22-8-1999 தேதிய "தினமணி"யில்

வெளிவந்திருந்தது என்ன தெரியுமா? "அ.தி.மு.க.வுடன் கூட்டணி இருந்த காலம்தான் எனது அரசியல் வாழ்க்கையிலேயே மிகவும் வேதனையான காலமாகும். அரசை கவிழ்க்கப் போவதாக சுதந்திர தினத்திற்கு முந்தைய நாளன்றுகூட அவர் அச்சுறுத்தினார். ஆனால் அவரது "பிளாக் மெயில்" தந்திரத்திற்கு நாங்கள் அடிபணியவில்லை". நான் இதை எழுதியதால், பா.ஜ.க.வுடன் கூட்டணி சேருவதற்காகத்தான் இதையெல்லாம் எழுதியிருப்பதாக யாரும் கற்பனைப் பிரச்சாரத்தில் இறங்கிட வேண்டாம்.

தி.மு. கழகம் மத்திய ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது எவ்வாறு செயல்பட்டது என்பதையும், அ.தி.மு.க. மத்திய ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது எவ்வாறு செயல்பட்டது என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்து உணர வேண்டும் என்பதற்காகவே இவற்றை விளக்கியிருக்கிறேன். அ.தி.மு.க. தீர்மானத்தில் மத்திய ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது எந்தவொரு நற்செயலையும் செய்யாமல் இருந்த "தீயசக்தி", "சுயநலவாதி", "தமிழினத் துரோகி" யார் என்பது இந்த விளக்கங்களிலிருந்து எல்லோருக்கும் தெளிவாகிறதா இல்லையா? இன்னும் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டுமேயானால், தி.மு.கழகப் பொதுக் குழுத் தீர்மானங்களையும், அ.தி.மு.க. பொதுக்குழு தீர்மானங்களையும் நடுநிலை விரும்புவோர் ஒரு முறை முழுமையாகப் படித்துப் பார்த்து தெளிவடைய வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

22-12-2013

3841. கரும்பு, நெல் விவசாயிகள் மீது காழ்ப்பு ஏன்?

உடன்பிறப்பே,

2011ஆம் ஆண்டு மே திங்களில் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு, தமிழகத்திலே உள்ள விவசாயிகள் - பயிர்கள் பொய்த்துப்போனது, வறட்சி, போதிய கடனுதவி அளிக்காதது, பயிர்க் காப்பீட்டில் முறைகேடுகள், வறட்சி நிவாரணத்தில் பாரபட்சம், கோமாரி நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகள் என வரிசையாகப் பிரச்சினைகள் பாய்ந்து, பட்ட காலிலேயே படும் என்பதைப் போல அவர்கள் தொடர்ந்து படுகின்ற இன்னல்களுக்கு அளவே இல்லாமல் போகிறது. ஆளும் அ.தி.மு.க.வினரோ விவசாயிகளிடம் பாராமுகத்தோடும், கேளாக் காதினராகவும் நடந்து கொள்கிறார்கள். வேளாண்மைத் துறை என்று ஒன்று இருக்கிறதா? அந்தத் துறை இந்த ஆட்சியிலே செயல்படுகிறதா? 2005-2006ஆம் ஆண்டு, ஜெயலலிதா ஆட்சியில், தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தி 61.46 இலட்சம் டன்.

2009-2010ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் உணவு தானிய உற்பத்தி 95.60 இலட்சம் டன். விவசாயிகள் வாங்கிய சுமார் 7,000 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்து, அதன் மூலம் 22 இலட்சத்து 40 ஆயிரத்து, 739 விவசாயக் குடும்பங்கள் பயனடைய வழிவகை செய்த ஆட்சிதான் தி.மு.கழக ஆட்சி.

தமிழகத்தில் சுமார் 22 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் சாகுபடி செய்யப்படும் காவிரி டெல்டா மாவட்டங்கள் என்று பார்த்தால், திருவாரூர், நாகை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் முழுமையாகவும், திருச்சி, புதுக்கோட்டை, கடலூர் மாவட்டங்கள் பகுதி பகுதியாகவும் நெல் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்த டெல்டா மாவட்டங்களில் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயத் தொழிலாளர்கள், தற்போது தங்களுடைய வாழ்வாதாரத்திற்காகப்

பல இலட்சக்கணக்கானவர்கள் செங்கல் சூளை, திருப்பூர் ஏற்றுமதி நிறுவனங்கள், கட்டிடக் கட்டுமானப் பணிகள் என வேறு தொழில்களிலே ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள். இதனால் டெல்டா மாவட்டங்களில் விவசாயப் பணிகளைச் செய்வதற்கான தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. 1981ஆம் ஆண்டில் இந்த டெல்டா மாவட்டங்களில் ஒரு குவிண்டால் நெல் விலை ரூ. 120. அப்போது ஒரு கணவனும், மனைவியும் விவசாய வேலைக்கு வருவார்களானால், அவர்களுக்குத் தரப்பட்ட கூலி ரூ. 12. அப்போது ஒரு குவிண்டால் நெல்லை விற்பனை செய்தால், பத்து இணைத் தொழிலாளர்களுக்கு அந்தத் தொகையைக் கொண்டு கூலி வழங்கிட இயலும். ஆனால் தற்போது என்ன நிலை? தற்போது ஒரு குவிண்டால் நெல் விலை ரூ. 1,360. ஒரு குவிண்டால் நெல்லை விற்பனை செய்தால் அதைக் கொண்டு 3 இணைத் தொழிலாளர்களுக்குக்கூட கூலி வழங்க முடியாது என்ற நிலை இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

வயலை உழவு செய்யும் டிராக்டர், நடவு செய்ய, மற்றும் அறுவடை செய்யப் பயன்படும் இயந்திரங்களுக்குக் கூடுதல் வாடகை கேட்கிறார்கள். கேட்டால் டீசல் விலை ஏற்றம் என்கிறார்கள். இடுபொருள்களான விதை நெல், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் விலையும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து உள்ளது. விவசாயம் செய்வதற்கான செலவுகளும், வேளாண் இடு பொருள்களின் விலையும் மிகவும் அதிகமாகிவிட்ட இந்த நிலையில்தான் நெல்லுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பும், ஏக்கமும் விவசாயிகள் மத்தியிலே ஏற்பட்டுள்ளது.

2006-2007இல் தி.மு.கழகம் ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்தபோது சன்ன ரக நெல் குவிண்டால் 650 ரூபாய் என்றும், சாதாரண ரக நெல் 620 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டது, இது படிப்படியாக உயர்ந்து 2009-2010ஆம் ஆண்டில் சன்ன ரக நெல் விலையை 1,100 ரூபாய் என்றும், சாதாரண ரக நெல் விலையை 1,050 ரூபாய் என்றும் உயர்த்தியிருந்தது.

இந்த ஆண்டு நெல் கொள்முதல் விலை, மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையோடு தமிழக அரசின் மானியம் முறையே ரூ. 70, ரூ. 50 சேர்த்து, சன்ன ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 1,415, மற்றும் பொது ரக நெல்லுக்கு ரூ.

1,360 என்று விலை நிர்ணயித்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அறிவித்துள்ளது. இந்த நிலை குறித்து தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், ஆறுபாதி கல்யாணம் செய்தியாளர்களிடம் கூறும்போது, "கடந்த ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டுச் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் அனைத்தும் காய்ந்து, கருகி விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தியது. இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் குறுவைச் சாகுபடிக்கு உரிய காலத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் சம்பா சாகுபடியை முழு நம்பிக்கையோடு மேற்கொண்டுள்ளனர். ஆனால் நெல்லுக்கான விலை போதுமானதாக இல்லை என்பது விவசாயிகளுக்குக் கவலை அளிப்பதாக உள்ளது. குறைந்தபட்சம் கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ. 2,000 என்று தமிழக அரசு வழங்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்.

இதுபோலவேதான் கரும்பு விவசாயிகளும் போதுமான உரிய கொள்முதல் விலை கிடைக்கவில்லை என்று தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் டன் ஒன்றுக்கு 1014 ரூபாய் என்று விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதை 2010-2011ஆம் ஆண்டு, தி.மு. கழக ஆட்சியில் டன் ஒன்றுக்கு ரூ. 2,000 என உயர்த்தப்பட்டது. ஆனால் இப்போது என்ன நிலைமை? தமிழகத்தில் ஆண்டு தோறும் 8.65 இலட்சம் ஏக்கரில் கரும்பு சாகுபடி நடக்கிறது. இந்த ஆண்டு கரும்பு உற்பத்தியை 500 லட்சம் டன்னாக உயர்த்த, அரசு இலக்கு நிர்ணயித்திருக்கிறது. தமிழகத்தில், கூட்டுறவுத் துறையில் 16 - பொதுத் துறையில் 3 - தனியார் துறையில் 27 என்று மொத்தம் 46 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில் மூன்று ஆலைகளைத் தவிர மற்றவை இயங்கித்தான் வருகின்றன.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், தமிழகத்தில் விவசாயிகள், வேளாண் துறை அதிகாரிகள், சர்க்கரை ஆலை நிர்வாகம் ஆகியோர் பங்கேற்கும் முத்தரப்புக் கூட்டம் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின்படி, கரும்புக்குக் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படும். ஆனால் இப்போது நடைபெறும் ஆட்சியில் ஜனநாயக ரீதியிலான

கலந்தாலோசனைக்கு இடமில்லாததால் முத்தரப்புக் கூட்டமே நடத்தப்படுவதில்லை. ஒருதலைப்பட்சமாக அரசின் அதிகாரப்படிதான் கரும்புக்குக் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

தமிழகத்தில் ஒரு டன் கரும்புக்குக் கொள்முதல் விலையாக 2,350 ரூபாய் என்று கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. இதில் 150 ரூபாய் வாகன வாடகையாகப் பிடித்தம் செய்யப்பட்டுவிடும். மீதமுள்ள 2,200 ரூபாயைத்தான் விவசாயிகளின் வங்கிக் கணக்கிலே கரும்பாலை நிர்வாகங்கள் வரவு வைக்கும். இடுபொருட்கள் விலை உயர்வு, கூலி ஆட்கள் பற்றாக்குறை, தண்ணீர் தட்டுப்பாட்டால் கரும்புக்குத் தரப்படும் கொள்முதல் விலை கட்டுப்படியாகவில்லை என்று கரும்பு விவசாயிகள் கடந்த ஆண்டிலிருந்து புலம்பி வருகின்றனர். அதுபோலவே நெல்லுக்குக் கட்டுமான விலை போதவில்லை என்று நெல் விவசாயிகள் கண்ணீர் விடுகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தில் கரும்பு பருவம் தொடங்கும். அந்த நேரத்தில்தான் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று கரும்பு விவசாயிகள் கோரிக்கை வைப்பது வழக்கம். கடந்த பருவம் வரை, ஒரு டன் கரும்புக்கு வயல் விலையாக 3,500 ரூபாய் வழங்கப்பட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கோரிக்கையை அரசு கண்டுகொள்ளவே இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவித்ததைப் போல, குறைந்தபட்சம் டன் ஒன்றுக்கு 2,500 ரூபாயாவது வழங்க வேண்டுமென்று கடந்த ஆண்டு கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் இதைக்கூடச் செயல்படுத்த தமிழக அரசு முன்வரவில்லை.

தற்போது கரும்பு பருவம் தொடங்கிவிட்டதால், ஒரு டன்னுக்கு 4,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் கேட்கிறார்கள். ஆனால் தமிழக அரசு நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் வரவிருப்பதால், நேற்றைய தினம் கரும்பு விலையை டன் ஒன்றுக்கு 2,650 ரூபாய் என்று நிர்ணயித்து அறிவித்திருக்கிறது.

மேலும் மத்திய அரசிடம் போதுமான அளவுக்குச் சர்க்கரை கையிருப்பு உள்ளது என்ற போதிலும், சர்க்கரை இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதிக்காமல் உள்ளது. சர்க்கரை இறக்குமதிக்கான வரியையும் உயர்த்த முன்வராமல் உள்ளது. உத்தரப் பிரதேச மாநிலத்தில் கரும்புக்கான விலை, டன்னுக்கு 2,800 ரூபாய்; இந்த விலையையே உயர்த்தக்கோரி, அங்குள்ள விவசாயிகள் போராடி வருகின்றனர். ஆனால், தமிழகத்தில், அதற்கும் குறைவாகவே விலை வழங்கப்படுகிறது. கரும்பு பருவம் தொடங்கி நான்கு மாதங்கள் ஆகின்றன. தற்போதுதான் இங்கே கொள்முதல் விலையை வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலை மனதிலே கொண்டு அவசர அவசரமாக அறிவித்திருக்கிறார்கள்.

அரசின் ஆதரவு பத்திரிகைகளில் எல்லாம், குறிப்பாக "தினத்தந்தி" நாளேடு "விவசாயிகளின் நலன் கருதி கரும்புக்கான பரிந்துரை விலை டன்னுக்கு ரூ. 550 உயர்வு-ஜெயலலிதா அறிவிப்பு" என்று தலைப்பிலேயே வெளியிட்டிருக்கிறார்கள். இதுவரை கரும்பு டன் ஒன்றுக்கு 2,350 ரூபாய் என்று விலை நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இப்போது அரசின் செய்திப்படி டன் ஒன்றுக்கு 550 ரூபாய் உயர்வு என்றால், என்ன விலை நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும். 2,350 ரூபாயுடன், 550 ரூபாயைச் சேர்த்து 2,900 ரூபாய் என்றுதானே அனைவரும் எண்ணுவார்கள். ஆனால் மத்திய அரசு விலையுடன் சேர்த்து ரூ. 2,650 ரூபாய் என்றுதான் தமிழக அரசு தற்போது விலை நிர்ணயித்துள்ளது. அதாவது கடந்த ஆண்டு இருந்த விலையை விட வெறும் 300 ரூபாயை மட்டுமே உயர்த்தி விட்டு, 550 ரூபாய் உயர்த்துவதாகக் கரும்பு விவசாயிகளை ஏமாற்ற நினைக்கிறார்கள்.

இன்னும் கூறப்போனால், 2011-2012ஆம் ஆண்டுக்கான கரும்பு பருவத்துக்கு மத்திய அரசு ரூ. 1,450 ரூபாய் என்று டன் ஒன்றுக்கு விலை நிர்ணயித்தபோது, தமிழக அரசு 650 ரூபாய் உயர்த்தி டன் ஒன்றுக்கு ரூ. 2,100 என்று விலை நிர்ணயம் செய்தது. அதுபோல 2012-2013ஆம் ஆண்டுக்கான கரும்பு விலையை டன் ஒன்றுக்கு ரூ. 1,700 என்று மத்திய அரசு நிர்ணயித்தபோது, தமிழக அரசு அப்போதும் டன் ஒன்றுக்கு 650 ரூபாய் உயர்த்தி, ரூ. 2,350 என்று விலை நிர்ணயம் செய்தது.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த இரண்டாண்டுகளாக டன் ஒன்றுக்கு 650 ரூபாய் என்று உயர்த்திவிட்டு, இந்த

ஆண்டு கரும்பு விவசாயிகளை மேலும் நசுக்குவதைப் போல, அந்த 650 ரூபாய் அளவிற்குக் கூட விலையை உயர்த்தாமல் அதிலும் 100 ரூபாய் குறைத்து, 550 ரூபாய் என்று மட்டுமே அறிவித்திருக்கிறார்கள். இந்த 550 ரூபாய் என்பதிலே கூட, மத்திய அரசின் நிர்ணய விலையில்தான் 550 ரூபாய் அதிகமே தவிர, மாநில அரசு கடந்த ஆண்டு 2,350 ரூபாய் என்று நிர்ணயித்ததிலிருந்து இந்த ஆண்டு வெறும் 300 ரூபாய் மட்டுமே உயர்த்தியிருக்கிறது என்பதுதான் உண்மை. ஆனால் இதை மறைத்து விட்டு, இந்த ஆண்டு 550 ரூபாய் உயர்த்தியிருப்பதைப் போல செய்தி வெளியிட்டுக் கரும்பு விவசாயிகளை ஏமாற்ற எண்ணுகிறார்கள். இந்த உண்மையை அ.தி.மு.க.விற்கு ஆதரவாகச் செயல்படும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடான "தீக்கதிர்" பத்திரிகையில் கரும்பு விலை ரூ. 100 குறைப்பு - விவசாயிகள் எதிர்ப்பு என்ற தலைப்பில் இன்று (23-12-2013) வெளியிட்டுள்ளார்கள். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பெ. சண்முகம், விவசாயிகளை ஏமாற்றும் தமிழக அரசின் கரும்பு விலை குறித்த அறிவிப்புக்கு எதிராக வலுவான கண்டன இயக்கங்களை நடத்த முன்வருமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார். அதுபோலவே தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் என். பழனிச்சாமி, பொதுச் செயலாளர் டி. ரவீந்தரன் ஆகியோரும் தமிழக அரசு தற்போது நிர்ணயித்துள்ள விலை கட்டுப்படியாகாத விலை என்று கண்டன அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

இந்த உயர்வு பற்றி, தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கச் செயல் தலைவர் ராஜ்குமார் செய்தியாளர்களிடம் கூறும்போது, "தமிழக அரசு அறிவித்துள்ள கரும்பு கொள்முதல் விலை, எங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த, 3 வருடத்தில் தமிழகத்தில் விலைவாசி, மின் தட்டுப்பாடு ஆகியவற்றால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் வகையில், தமிழக அரசு கரும்பு விலையை அறிவித்துள்ளது. எனவே கரும்பு விலையை அரசு மறு பரிசீலனை செய்து டன் ஒன்றுக்கு ரூ. 3,500 என உயர்த்தி வழங்க வேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார். மேலும் இந்திய விவசாயிகள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், விருதகிரி, "கரும்பு கொள்முதல் விலையை எதிர்பார்த்த அளவிற்கு அரசு உயர்த்தவில்லை, சர்க்கரை ஆலை நிர்வாகங்களின்

நெருக்கடிக்குப் பணிந்து விவசாயிகளை அரசு ஏமாற்றிவிட்டது" என்று தன் வேதனையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

நெல் பயிரிடும் விவசாயிகள் மற்றும் கரும்பு விவசாயிகளின் சிரமங்களை உணர்ந்துதான் அண்மையில் கூடிய தி.மு.கழகப் பொதுக் குழுவிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றாக, நெல் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய வகையில், உற்பத்திச் செலவைவிடக் கூடுதலாகக் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு 2,000 ரூபாய் என்று நிர்ணயித்து வழங்கிட இந்த அரசு முன்வர வேண்டுமென்றும்;

கரும்பு கொள்முதல் விலையைக் குறைந்தபட்சம் டன் ஒன்றுக்கு 3,500 ரூபாயாவது வழங்கிட இந்த அரசு முன்வர வேண்டுமென்றும், இப்பொதுக் குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை நிறைவேற்றினோம். ஆனால் யார் சொன்னால் என்ன? யார் கேட்டால் என்ன? என்ற ரீதியில் விவசாய சங்கத் தலைவர்கள் சொன்னதையும் கேட்காமல், எதிர்க்கட்சிகள் கூறுவதையும் கேட்காமல், முத்தரப்புக் கூட்டத்தையும் கூட்டாமல் தன்னிச்சையாக விலையை நிர்ணயித்து அறிவித் திருக்கிறார்கள். தன்னிச்சையாக ஆளுங்கட்சியினர் இவ்வாறு நடந்து கொள்வதற்கு வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு வாக்காளர்களும், நெல், கரும்பு விவசாயிகளும் தக்கதோர் பாடத்தை அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

24-12-2013

3842. நெம்மேலித் திட்டம்; யாரால், எப்பொழுது?

உடன்பிறப்பே,

23-12-2013 அன்று நாளேடுகள் வெளியிட்ட செய்திகளில் ஒன்று - "நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தில் 101 சதவீதம் குடிநீர் உற்பத்தி செய்து புதிய சாதனை" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள செய்தியில் - "சென்னை நகரில் தண்ணீர்த் தேவை குறித்து முதல்வர் ஜெயலலிதா சமீபத்தில் ஆய்வு செய்தார். அதையடுத்து குடிநீர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கையை சென்னை குடிநீர் வாரியம் மேற்கொண்டது. சென்னை குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை முதல்வர் ஜெயலலிதா தொடங்கிவைத்தார். அப்போதிருந்தே இந்த நிலையத்தில் சென்னை குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையம், இப்போது 101 சதவீதம் குடிநீர் உற்பத்தி செய்து, அதன் உற்பத்தித் திறனில் புதிய சாதனை படைத்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியைப் படித்தவுடன் நமக்கு மகிழ்ச்சிதான் ஏற்பட்டது. இந்தச் செய்தியில் முதலமைச்சர் ஆய்வு செய்ததை அடுத்து குடிநீர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கையை சென்னை குடிநீர் வாரியம் மேற்கொண்டது என்றுள்ளது. அப்படியானால், முதலமைச்சர் ஆய்வு செய்திருக்காவிட்டால், குடிநீர் வாரியம் குடிநீர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்காதா?

இந்த நெம்மேலி குடிநீர்த் திட்டம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மத்திய அரசின் நிதி உதவியோடு தொடங்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு துவக்கத்தில் 22-2-2013 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்தார். இந்த

நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் வரலாற்றைப் பற்றி இந்த நேரத்தில் சுருக்கமாக விளக்கிட விரும்புகிறேன்.

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கிட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒன்றைச் சென்னைக்கு அருகே அமைத்திட வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தது. 2004இல் மத்தியில் அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தக் கோரிக்கையை உடனடியாக ஏற்றுக் கொண்டது. அதன் பயனாக, 2004-2005ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் அளித்து உரையாற்றிய மத்திய நிதியமைச்சர், திரு.ப.சிதம்பரம் அவர்கள்,

> "சென்னை மற்றும் கொரமண்டல் கடற்கரை நெடுகிலும் உள்ள நகரங்களுக்கு நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறனுடைய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு 1000 கோடிரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்"

- என அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, மத்திய அரசின் நிதி உதவியைப் பெற்று சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமாறு அன்றைய அ.தி.மு.க. அரசுக்குப் பலமுறை கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. எனினும், இத்திட்டத்தைச் செயல்படுத்தாமல் இறுதிவரை அ.தி.மு.க. அரசு அலட்சியமாக இருந்து விட்டது. அந்நிலையில், 2006இல் நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், இதனைச் சுட்டிக்காட்டி, தேர்தலில் வென்று ஆட்சி அமைத்தபிறகு,

> "இந்த மாபெரும் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்"

- என வாக்குறுதி அளிக்கப்பட்டது.

அந்த வாக்குறுதிப்படி, 2006இல் தமிழகத்தில் கழக அரசு அமைந்தபின், தென்சென்னைப் பகுதியில் நெம்மேலியில்

கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான திட்ட அறிக்கையைத் தயார் செய்து அந்த அறிக்கையை, 27.1.2008 அன்று மத்திய நிதியமைச்சர் அவர்களிடம் நானே நேரில் வழங்கி இத்திட்டத்திற்கான அனுமதியையும், நிதியுதவியையும் உடனே வழங்குமாறு கேட்டுக்கொண்டேன்.

தொடர்ந்து இந்தத் துறையின் அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் இருந்த தம்பி ஸ்டாலினையும், அரசு அதிகாரிகளையும் டெல்லிக்கு அனுப்பி, இந்தத் திட்டம் பற்றி துரிதப்படுத்தியதன் அடிப்படையில், இத்திட்டத்திற்கு மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் 908 கோடியே 28 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திடப் பரிந்துரை செய்தது.

அதன்மீது, மத்திய அரசின் பொருளாதார விவகாரத் துறை அமைச்சர் குழு 2.1.2009 அன்று இத்திட்டத்திற்கு 871 கோடியே 24 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்க ஒப்புதல் அளித்தது. அத்துடன், 2009 மார்ச் திங்களில் இத்திட்டத்திற்குரிய நிதியில் மத்திய அரசு தமிழக அரசுக்கு முதல் தவணையாக 300 கோடி ரூபாயை வழங்கியது. அதன்பின்னர், இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளை 23.2.2010 அன்று துணை முதலமைச்சராக இருந்த தம்பி ஸ்டாலின் தொடங்கிவைத்தார். அதனையடுத்து, இத்திட்டத்திற்காக நிலத்தை மேம்படுத்தும் பணிகளில் 60 விழுக்காடு பணிகளும், கட்டுமானத் தாங்கிகளை அமைப்பதில் 85 விழுக்காடு பணிகளும், மற்ற பணிகள் அனைத்தும் முழு வீச்சில் வேகமாக கழக ஆட்சிக் காலத்தில் நடைபெற்றன. இத்திட்டத்தின் மூலம், கிடைக்கும் குடிநீரைக் கொண்டு செல்ல 66 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் பதிக்கும் வேலைகள் விரைவாக நடந்தன.

இதே வேகத்தைக் கடைப்பிடித்து இத்திட்டத்திற்கான பணிகள் அனைத்தையும் 2011 டிசம்பருக்குள் நிறைவேற்றி முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பணிகள் முடுக்கி விடப்பட்டன. 2011 டிசம்பருக்குள் முடிந்திருக்க வேண்டிய பணிகள் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அக்கறையின்மையால் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக 2013ஆம் ஆண்டு பிப்ரவரியில்தான் தொடக்க விழா நடை பெற்றது.

இந்த நெம்மேலித் திட்டத்தில்தான் தற்போது 101 சதவிகிதம் உற்பத்தி கிட்டியிருப்பதாக குடிநீர் வாரியம் செய்தி வெளியிட்டுள்ளது. அதைப் படிக்கும்போது, அந்தத் திட்டத்திற்குப் பெரிதும் காரணமானவன் என்ற முறையில் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஆனால் இந்த நெம்மேலி குடிநீர்த் திட்டம் பற்றி, இந்த மாதத் தொடக்கத்தில் ஒரு செய்தி ஏடுகளில் வெளிவந்தது. அந்தச் செய்தியில் "தற்போது நெம்மேலி குடிநீர் நிலையத்தில் பராமரிப்புப் பணி என்ற பெயரில், பல நாட்களாக குடிநீர் உற்பத்தி நிறுத்தப்பட்டதால், தென் சென்னையில் பல பகுதிகளில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது" என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தது. நெம்மேலி குடிநீர்த் திட்டத்தில் உள்ள இயந்திரத்தில் சவ்வூடு மென் படலங்களில் பழுது ஏற்பட்டதாகவும், அதன் காரணமாக தென் சென்னையில் அக்கரை, ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, வெட்டுவாங்கேணி, பாலவாக்கம், கொட்டிவாக்கம், திருவான்மியூர் மற்றும் பெசன்ட் நகர் பகுதிகளுக்கு குடிநீர் சரிவர வினியோகிக்கப்படவில்லை என்றும், 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அப்போது செய்தி வந்ததையொட்டி நான் "முரசொலி" "கேள்வி-பதில்" பகுதியிலே சுட்டிக்காட்டியிருந்தேன். அவ்வாறு நான் கூறியதற்குப் பிறகுதான், முதலமைச்சர் ஜெயலலிதா குடிநீர்ப் பிரச்சினை குறித்து ஒரு ஆய்வுக் கூட்டத்தை நடத்தியிருக்கிறார்.

அண்மைக் காலத்தில் முதலமைச்சர் அன்றாடம் ஒரு ஆய்வுக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, அதிலே குறிப்பிட்ட நான்கு அமைச்சர்களை முன் வரிசையிலே அமரச் செய்து, அதிகாரிகளைக் கொண்டு கலந்தாலோசனை செய்வதுபோல புகைப்படம் எடுத்து ஏடுகளில் வெளியிடச் செய்வதும் நாம் தொடர்ந்து கண்டு வருகின்ற காட்சிகளாகும். அந்தப் புகைப்படங்களைப் பார்க்கும்போது சிரிப்பு தான் வரும்! பள்ளியில் மாணவர்கள் கூட சற்று கைகால்களை அசைந்து கொடுப்பதற்கு ஏதுவாக, வசதியாக உட்கார்ந்திருப்பார்கள்; ஆனால் இந்தப் புகைப்படங்களில் அமைச்சர்கள் இறுக்கமாக அமர்ந்திருக்கும் "பவ்யம்" இருக்கிறதே, ஏயப்பா? முதல் அமைச்சருக்கு இந்த அமைச்சர்கள் காட்டும் அபரிமிதமான மரியாதை - அப்படியே இடுப்பு முழுவதும் வளைந்து கொடுத்து, அவர்கள் கூனிக் குறுகி பரிதாபமாக வணக்கம்

செலுத்துவதை ஏடுகளிலே பார்க்கும் போது, பதவி எந்த அளவிற்கு மனிதனைக் கூனிக்குறுகி குனிய வைக்கிறது என்பதைத்தான் புரிந்துகொள்ள முடிகிறது. எப்படியோ போகட்டும்; அது அவர்கள் கட்சி விவகாரம்!

தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் இந்த அளவிற்குச் சீராகி, தற்போது 101 சதவிகிதம் குடிநீர் உற்பத்தி செய்து புதிய சாதனை படைத்திருப்பதாக சென்னை குடிநீர் வாரியமே செய்திக்குறிப்பு அனுப்பியிருக்கிறது என்றால், அந்தத் திட்டத்தினைத் தொடங்க முழு முதல் முயற்சி எடுத்தவன் என்ற வகையில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படாதா?

இந்த நேரத்தில் மற்றொரு சந்தேகம்! முதலமைச்சர் சட்டப்பேரவை நடைபெறும் போது, அன்றாடம் 110வது விதியின்கீழ் அறிக்கை படிப்பார் அல்லவா; அப்படி படித்த போது 16-4-2013 அன்று, அதாவது சுமார் 8 மாதங்களுக்கு முன்பு பேரவையில் ஓர் அறிக்கை படித்தார். அந்த அறிக்கையில், "பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில், நெம்மேலியில் தற்போது நிறுவப்பட்டுள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் காலியாக உள்ள 10.50 ஏக்கர் நிலத்தில், 1000 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதலாக நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன்மூலம், விரிவாக்கப்பட்ட சென்னை மாநகரின் தென்பகுதியில் அமைந்துள்ள ஆலந்தூர், பெருங்குடி, கொட்டிவாக்கம், புழுதிவாக்கம், பள்ளிக் கரணை, மடிப்பாக்கம், சோழிங்க நல்லூர், காரப்பாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி மற்றும் ஒக்கியம் துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் குடியிருக்கும் சுமார் 6.46 இலட்சம் மக்கள் பயனடைவர்" என்று வேறு சில திட்டங்களையும் சேர்த்து பேரவையில் பலத்த வரவேற்புடன் முதலமைச்சர் ஜெயலலிதா படித்து, அவருக்கு வேண்டிய தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் அதனைப் பாராட்டி மகிழ்ந்தார்களே; அதற்குப் பிறகு 8 மாதங்கள் ஓடிவிட்டதே; அதன் கதி தற்போது என்ன? முதலமைச்சர் மற்ற அமைச்சர்களோடு குடிநீர்

வாரிய அதிகாரிகளை யெல்லாம் அழைத்துக் கலந்தாலோசனை செய்தபோது அந்தப் புதிய திட்டத்தைப் பற்றி பேசப்பட வில்லையா? பேசப்பட்டிருந்தால் அரசு செய்திக் குறிப்பில், அதைப் பற்றியும் பேசப்பட்டது, அது எந்த நிலையில் உள்ளது என்பதைத் தெரிவிக்க மறந்து விட்டதா? அல்லது அவசரப் பணி காரணமாக கொடநாடு செல்ல வேண்டிய நெருக்கடியில் இந்தத் திட்டம் பற்றிப் பேசுவதற்கு ஒருவேளை நேரம் இல்லாமல் போய் விட்டதா? கேட்பதற்கு யார் இருக்கிறார்கள்? கை தட்டுவதற்கும், காலில் விழுவதற்கும்தானே இருக்கிறார்கள்!

கொடநாட்டில் அப்படி என்னதான் இருக்கிறதோ? ஆனால் அமைச்சர்கள் எல்லாம் "அப்பாடா" என்று பெருமூச்சு விட்டார்களாம்! ஏன் தெரியுமா? "அம்மா" திரும்பி வரும்வரை நாம் அமைச்சர்கள்தான் என்ற நம்பிக்கைதான் காரணமாம்!

அன்புள்ள,

மு.க.

26-12-2013

3843. கொடநாட்டிலிருந்து ஆட்சி பரிபாலனம்?

உடன்பிறப்பே,

15.12.2013 அன்று நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்ட 9வது தீர்மானம் - பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்; கோமாரி நோய்க்கு நிவாரணம் வேண்டும் என்ற தலைப்பில் அமைந்ததாகும். அந்தத் தீர்மானத்தில் விவசாயிகளின் மோசமான நிலைமை குறித்து சொல்லியிருந்தோம். குறிப்பாக,

"கடந்த ஆண்டு சம்பா சாகுபடி பாதிக்கப் படும் என்று கணித்த அரசு, பயிர்க் காப்பீடு திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தது. வேளாண் துறை, வருவாய்த் துறை, மாவட்ட நிர்வாகம் மூலம் விவசாயிகளின் பயிர்களுக்குக் காப்பீடு செய்யப்பட்டது. இதற்கான விவசாயிகளின் பங்களிப்புத் தொகையை அரசே வழங்கியது. ஆனால் இந்த ஆண்டு சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு குறித்த விழிப்புணர்வு வேளாண் துறையில் ஏற்படுத்தப்படவே இல்லை. இனியாவது தமிழக அரசின் வேளாண் துறையினர், தொடர்ந்து பாதிப்புக்காளாகி விரக்தியில் இருக்கும் விவசாயிகளை ஊக்குவித்து, முறைகேடுகள் எதுவும் செய்யாமல் பயிர்க் காப்பீடு செய்ய முன்வர வேண்டுமென்று இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது" என்று கூறியிருந்தோம்.

ஆனால் இந்தக் கோரிக்கையைப் பற்றித் தமிழக அரசு இதுவரை அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. அதே தீர்மானத்தில் தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென்றும், கோமாரி நோய் தாக்கிப் பலியான கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்குக் கர்நாடக அரசு வழங்குவதைப் போல இழப்பீட்டுத் தொகை தமிழக அரசின் சார்பில் உடனடியாகத் தரப்பட வேண்டும் என்றும் விடுத்த வேண்டுகோளும் இந்த அரசின் காதுகளிலே விழுந்ததாகத் தெரியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 2007-2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே பத்தி 10இல், "இந்த ஆண்டு முதல், விவசாயிகளுக்கான சிறப்புத் திட்டமாக, வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் வரும் நிதியாண்டில், பத்து இலட்சம் விவசாயிகளுக்கு, பயிர்க் காப்பீடு செய்துகொள்ள நிதி உதவி அளிக்கப்படும். இதற்காக ரூபாய் பதினைந்து கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும், 2010-2011ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பத்தி 5இல், "இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்குப் பயிர் இழப்பீடு வழங்கும், காப்பீட்டுத் திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகையில், 50சதவிகிதம், அரசே மானியமாக வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி, அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, 2005-2006இல் காப்பீடு செய்த விவசாயிகளின் எண்ணிக்கையான ஒரு இலட்சம் என்பது, 2009-2010இல் 7 இலட்சத்து 80 ஆயிரமாக உயர்ந்துள்ளது. கடந்த நான்காண்டுகளில் (கழக ஆட்சியில்) இவ்வகையில் ரூபாய் 891 கோடி இழப்பீட்டுத் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்திலும் காப்பீட்டுத் தொகை மானியமாக ரூபாய் 40 கோடியும், இழப்பீட்டுத் தொகைக்கான தமிழக அரசின் பங்காக ரூபாய் 200 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தோம்.

2011-2012ஆம் ஆண்டு, அ.தி.மு.க. பொறுப்பேற்றதும், படிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், "பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் பொருட்டு, தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் தீவிரமாகச் செயல்படுத்தப்படும். தற்போது இத்திட்டத்தில் பயன்பெறும் எட்டு இலட்சம் விவசாயிகளின் எண்ணிக்கை நடப்பாண்டில் இரு மடங்காக உயர்த்தப்படும்" என்று இன்றைய நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அவையில் படித்தார்.

2005-2006ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சியில் காப்பீடு செய்த விவசாயிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சம் என்பதை,

2009-2010ஆம் ஆண்டு, தி.மு. கழக ஆட்சியில் 7.80 இலட்சம் விவசாயிகள் என்றும், 2010-2011ஆம் ஆண்டில் 8.18 இலட்சம் விவசாயிகள் என்றும் உயர்த்தினோம்.

இந்த எண்ணிக்கையைத்தான் 2011ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இரண்டு மடங்காக உயர்த்தப்போவதாக, அதாவது 16 லட்சம் விவசாயிகளாக உயர்த்தப் போவதாக ஓ. பன்னீர்செல்வம் அவையில் படித்தார். ஆனால் நடந்தது என்ன?

அதையும் 2012-2013ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். பத்தி 32இல், "2010-2011ஆம் ஆண்டில் 8.18 இலட்சமாக இருந்த பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளின் எண்ணிக்கையானது, 2011-2012ஆம் ஆண்டில் 8.48 இலட்சமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்" என்று சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் 16 லட்சம் விவசாயிகளாக எண்ணிக்கையை உயர்த்தப் போவதாகச் சொன்னார்களே தவிர, உயர்த்தியது வெறும் 30 ஆயிரம் மட்டுமே!

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 2009-2010 ஆண்டில் காப்பீட்டுத் தொகை மானியமாக 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், அ.தி.மு.க. ஆட்சியில், கடந்த 2012-2013ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 11இல், விவசாயிகளுக்குக் காப்பீட்டுத் தொகை மானியமாக ரூ. 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 5.32 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும்போது, காப்பீட்டுத் தொகை மானியம் பத்து கோடி ரூபாய் குறைந்தது என்பது மட்டுமல்லாமல், பயன்பெற்ற விவசாயிகள் கழக ஆட்சியில் 8.18 இலட்சம் என்றால், கடந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 5.32 லட்சம் என்ற அளவிற்குக் குறைந்து விட்டது என்பதையும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். இதிலிருந்து எந்த அளவிற்கு இந்த ஆட்சியில் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது என்பதற்கு அ.தி.மு.க. அமைச்சர்களும், கொடநாட்டில் அரசுப் பணிகளை அங்கிருந்தவாறே ஆற்றிக் கொண்டிருக்கும் முதலமைச்சரும்தான் பதிலளிக்க வேண்டும்!

விவசாயிகளுக்கான இந்தக் காப்பீட்டுத் தொகை உதவி வழங்குவதைப் பற்றிக் கடந்த நவம்பர் திங்களிலேயே நான்

சுட்டிக் காட்டியிருந்தேன். அப்போது மத்திய அரசின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை, தமிழக அரசின் வேளாண்துறை புறக்கணிப்பதாகச் செய்தி வந்தது. அந்தச் செய்தி வந்ததும், வடகிழக்குப் பருவமழை சரியில்லாத காரணத்தால், சம்பா சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். கடந்த ஆண்டு ஒழுங்காக நீர்வரத்து இல்லாத காரணத்தால், குறுவை, சம்பா சாகுபடி நடைபெறவில்லை. இந்த ஆண்டும் குறுவை பொய்த்து விட்டது. இந்த நிலையில்தான் சம்பா சாகுபடி நடைபெறத் தொடங்கியுள்ளது. இந்த ஆண்டு சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குப் பயிர்க்காப்பீடு குறித்த விழிப்புணர்வு வேளாண் துறையில் ஏற்படுத்தப்படவே இல்லையாம். இனியாவது தமிழக அரசின் வேளாண் துறையினர், தொடர்ந்து பாதிப்புக்காளாகி விரக்தியில் இருக்கும் விவசாயிகளை ஊக்குவித்து, பயிர்க் காப்பீடு செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தேன்.

என்னைத் தொடர்ந்து வேறு சில அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இதுபற்றி வேண்டுகோள் விடுத்திருந்தனர். இன்றைய "முரசொலி" நாளேட்டில் வெளிவந்துள்ள நாகை மாவட்டக் கழகக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில்கூட, "கடந்த ஆண்டு பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு உடன் பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்காததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய காப்பீட்டுத் தொகையை மத்திய அரசும், காப்பீட்டு நிறுவனமும் வழங்காத நிலையில், தமிழக அரசு தனது பங்குத் தொகையை வழங்காததற்கு இந்தச் செயற்குழு கண்டனத்தைத் தெரிவிப்பதோடு, உடனே வழங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். கேட்டுக் கொண்டதோடு, நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பு தமிழக அரசைக் கண்டித்து, நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழகச் செயலாளருமான தம்பி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் ஆர்ப்பாட்டமும் நடத்தியிருக்கிறார்கள்.

அதுபோலவே ராமனாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டப்பேரவை உறுப்பினருமான தம்பி சுப. தங்கவேலன், பொதுக் குழுத் தீர்மானங்களை விளக்கி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போது, "இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கடந்த ஆண்டு

பயிர் இன்சூரன்சுக்காக 144 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசும், இன்சூரன்சு நிறுவனமும் தங்கள் பங்கீட்டை வழங்கி 3 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், அ.தி.மு.க. அரசு தனது பங்குத் தொகையை வழங்காமல் காலதாமதம் செய்கிறது. உடனடியாக அ.தி.மு.க. அரசு பங்குத் தொகையைச் செலுத்தி, விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீட்டுத் தொகை கிடைத்திட அ.தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார்.

எனவே, இந்தப் பிரச்சினை என்பது ஒன்றிரண்டு மாவட்டங்களில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் விவசாயிகளுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்துவருகிறது. ஆனால் இந்தப் பிரச்சினை மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய அ.தி.மு.க. அரசோ கேளாக் காதுடன் இருந்து வருகிறது. விவசாயிகள் பிரச்சினை இவ்வாறிருக்க, பால் கொள்முதல் விலையைத் தமிழக அரசு ஏற்றியிருப்பது போதாது என்று அவர்கள் போராடப் போவதாக ஒரு மாதம் கெடு என்று அறிவித் திருக்கிறார்கள். அதைப் போலவே கரும்பு விவசாயிகளுக்காக அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலை மிகவும் குறைவு என்றும் டன் ஒன்றுக்கு அதனை 3,500 ரூபாயாக அறிவிக்க வேண்டுமென்றும் அவர்கள் குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

குடிநீர்ப் பிரச்சினையோ கேட்க வேண்டியதில்லை. கிருஷ்ணா நதி நீரும் நிறுத்தப்பட்டு விட்டதாம்! மதுரை மாவட்டத்தில் வரலாறு காணாத வறட்சியாம்! மேட்டூர் அனல் மின் நிலையத்திலும், வல்லூர் மின் உற்பத்தி நிலையத்திலும், உற்பத்தி பாதிக்கப்பட்டுவிட்டதாம்! சட்டம் ஒழுங்கு பற்றிக் கூறவே வேண்டியதில்லை. நாள் தவறாமல் கொலை, கொள்ளைகள்! கோமாரி நோய் கால்நடைகளைப் பலிவாங்கிக் கொண்டே இருக்கிறது. தங்கள் கால்நடைகளைப் பறிகொடுத்தவர்கள், அரசு எப்போதுதான் நிவாரணத் தொகை வழங்குமோ என்று ஏக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றனர். இதிலே அ.தி.மு.க. வினர் சார்பில் பொதுக் குழு விளக்கப் பொதுக் கூட்டமாம்; ஆனால் கட்சியின் தலைவி கலந்து கொள்ளமாட்டாராம்! அன்றாடம் இறந்து போகின்றவர்களுக்கு, அம்மா வழங்கும் குடும்ப நிதி உதவியை எப்படி வழங்கப் போகிறார்கள்?

நாகப்பட்டினத்தில் மீனவர்கள் உண்ணா விரதம் தொடங்கி, அதைக் கேள்விப்பட்ட நான் உடனடியாக நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர், தம்பி டி.ஆர். பாலுவை அனுப்பி, மீனவர்களின் உண்ணாவிரதத்தை நிறுத்தச் செய்திருக்கிறேன். அவர்கள் உண்ணா விரதத்தை நிறுத்திய போதிலும், வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மீனவர்கள் பிரச்சினை முடிந்தபாடில்லை. மத்திய அரசு, இலங்கை மீனவர்களின் பிரதிநிதிகளும், தமிழக மீனவர்களின் பிரதிநிதிகளும் கலந்து பேசுவதற்கான தேதியைத் தமிழக அரசு நிர்ணயிக்க வேண்டுமென்று கூறி மாதங்கள் பலவாகிவிட்டது. அந்தக் கூட்டத்தை தமிழக அரசு எப்போதுதான் நடத்தப் போகிறதோ? இந்தப் பிரச்சினைகள் பற்றியெல்லாம் முடிவுகாண வேண்டிய முதல் அமைச்சரோ, கொடநாட்டிலிருந்து ஆட்சிப் பரிபாலனம் செய்யப் போகிறாராம்!

அன்புள்ள,

மு.க.

27-12-2013

3844. தமிழ்வழிக் கல்வியின் தலையிலும் கைவைப்பதால்?

உடன்பிறப்பே,

2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோது, அனைத்துப் பள்ளிகளிலும், தமிழை கட்டாயப் பாடமாகக் கற்பிக்க தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டத்தை அறிமுகப்படுத்தி, நிறைவேற்றியதோடு; இளங்கலை மற்றும் இளம் அறிவியல் பட்டப் படிப்புகளில் தமிழை ஒரு பாடப் பிரிவாகப் படிக்காமலேயே பட்டங்களைப் பெற முடியும் என இருந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்திடும் வகையில் இளங்கலைப் பட்டப்படிப்பில் தமிழைக் கட்டாயமாக ஒரு பாடமாக எடுத்து அதில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற ஆணையும் பிறப்பித்து நடைமுறைப்படுத்தி வந்தது.

மேலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2009-2010ஆம் கல்வி ஆண்டு வரையில், பொறியியல் பட்டப்படிப்புக்கான பல்கலைக்கழக வினாத்தாள்கள் ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்பட்டு; விடைகளும் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டுமென்றிருந்த நிலையை மாற்றி, 2010-2011ஆம் ஆண்டு முதல் ஆங்கிலம் அல்லது தமிழில் வினாத்தாள் வழங்கவும், விடைகளை ஆங்கிலம் மற்றும் தமிழில் எழுதும் முறையை அறிமுகப்படுத்தவும் பல்கலைக்கழகங்களுக்கு அறிவுரைகள் அரசின் சார்பில் வழங்கப்பட்டன. குறிப்பாக இந்தத் திட்டம், 12ஆம் வகுப்பினை தமிழ் வழியில் படித்து பொறியியல் கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவர்களுக்கு நல்ல பயனை அளிப்பதாக அமைந்தது.

இதன் தொடர்ச்சியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2010-2011ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பத்தி 114இல், "அண்ணா பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு மாணவர்கள்

பொறியியல் பட்டப் படிப்பு பயிலும் வசதி, வரும் கல்வி ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும்" என்று அறிவிக்கப்பட்டு, அவ்வாறே ஆணையும் பிறப்பிக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஜூன் மாதத்தில், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் நடைபெற்ற சிறப்பு வாய்ந்த தருணத்தில், அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களில் கட்டுமானவியல், இயந்திரவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் மாணவர்கள் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக; தாய்மொழியில் கற்க - தமிழ்மொழி மூலமாகக் கற்க வகை செய்யப்பட்டு, அந்த ஆண்டில் மட்டும் அதாவது தமிழ் வழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட முதலாம் ஆண்டிலேயே, இந்தப் பொறியியல் பாடப்பிரிவுகளில் 2010-2011இல் 1,378 மாணவர்கள் தமிழ் வழிப் பொறியியல் வகுப்புகளில் சேர்ந்தனர். படிப்படியாக இப்போது தமிழ்வழிப் பொறியியல் வகுப்புகளில் சுமார் 4,000 மாணவ, மாணவியர் படித்து வருகிறார்கள். தமிழ்வழிப் பொறியியல் வகுப்புகளைத் தொடங்கியதோடு, நின்றுவிடாமல் கழக ஆட்சிக் காலத்திலேயே தமிழ் வழியில் பொறியியல் படிப்பு முடித்தவுடன் அவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் 20 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கப்படும் எனவும் அரசாணை அப்போதே வெளியிடப்பட்டது.

ஆனால் 2011ஆம் ஆண்டு முதல், அதாவது தி.மு.கழக ஆட்சிக்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் இந்தத் தமிழ் வழிப் பொறியியல் வகுப்புகளுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை . கழக ஆட்சிக் காலத்தில் முதல் முறையாக தமிழ்வழி பொறியியல் படிப்புகளில், சேர்ந்த மாணவர்கள் 1,378 பேர் இப்போது இறுதியாண்டு பொறியியல் பட்டப் படிப்பை நிறைவு செய்யவுள்ளனர். பல்கலைக்கழகக் கல்லூரிகளில் தனியார் நிறுவனங்கள் நடத்தும் நேர்முகத் தேர்வில் தமிழ் வழியில் பயின்ற இந்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரப்படாதது மட்டுமல்லாமல், அவர்கள் அலட்சியப் படுத்தப்படுகின்றனர் என்ற புகார் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் எழுந்துள்ளது. அதன் காரணமாக அந்த மாணவர்கள் கொதித்துப் போயுள்ளனர். தனியார் நிறுவனங்கள் ஆங்கில வழியில் படித்த மாணவர்களையே தேர்வு செய்ய முன் வருகிறார்கள்.

தற்போது எழுந்துள்ள இந்த நிலை குறித்து, தமிழ்வழியில் பொறியியல் படிக்கும் மாணவர்கள், "பொறியியல் கல்லூரிகளில் தனியார் நிறுவனங்கள் நடத்தும் தேர்வுகளில் ஆங்கில வழி மாணவர்களை மட்டுமே தேர்வு செய்கின்றனர். இந்தப் பாகுபாடு குறித்து, தனியார் நிறுவனங்களிடம் கேட்டால், எங்கள் நிறுவனம் வெளிநாட்டு நிறுவனம் ஆகையால், ஆங்கில வழியில் படித்தவர்களை மட்டுமே தேர்வு செய்ய முடியும் என்று கூறுகின்றனர். எங்களுக்கு திறமை இருந்தும், நாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம். மத்திய அரசு நிறுவனமான "பவர் க்ரிட்" கூட, தனியார் நிறுவனம் பின்பற்றி வரும் அணுகுமுறையையே பின்பற்றி, தமிழ்வழியில் பொறியியல் படிப்பு முடித்தவர்களை பின்னுக்குத் தள்ளி விடுகின்றனர். தமிழ்வழியில் பொறியியல் படித்த மாணவர்களுக்காக வேலை வாய்ப்பில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட 20 சதவிகித இட ஒதுக்கீட்டை வலியுறுத்திட வேண்டிய அ.தி.மு.க. அரசும் இதில் தலையிடாமல் அமைதி காத்து வருகிறது. பல்கலைக்கழக நிர்வாகமும், தனியார் நிறுவனங்களின் தேர்வு முறையில் தலையிட முடியாது என்று கைவிரித்து விட்டனர்" என்றெல்லாம் குமுறுகின்றனர்.

மேலும் அந்த மாணவர்கள், "தமிழ் வழியில் பொறியியல் படித்தவுடன் தமிழக அரசு உடனடியாக எங்களுக்கு வேலை வழங்க வேண்டும். அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் எங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். இது குறித்து தமிழக அரசு தன்னுடைய நிலையை எங்களுக்கு விளக்கிட வேண்டும். இல்லையென்றால், நாங்கள் போராட்டம் நடத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு விடுவோம். முதல் முறையாக தமிழ் வழியில் பொறியியல் பட்டப் படிப்பை நிறைவு செய்து வெளியே வரும் எங்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டால்தான், தொடர்ந்து மாணவர்கள் தமிழ்வழிப் பொறியியல் பட்டப்படிப்பில் சேருவதை ஊக்குவிப்பதாக இருக்கும். இல்லா விட்டால் பொறியியல் பட்டப்படிப்பில் தமிழ் வழிக் கல்வி என்பது வெறும் கனவாகிவிடும்" என்றெல்லாம் தங்களுடைய வேதனையை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

ஆனால் அ.தி.மு.க. அரசு இந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமா என்பது கேள்விக்குறிதான்!

ஏனென்றால் இந்த ஆட்சியினருக்கு தமிழ், செம்மொழி, தமிழ் வழிக் கல்வி, சமச்சீர் கல்வி-என்ற பொருளும், அழகும் நிறைந்த வார்த்தைகள் எல்லாம் அவர்களுக்கு "ஒவ்வாமை" இனத்தைச் சேர்ந்தவையாகும்.

"கடந்த கல்வி ஆண்டில், 320 அரசுப் பள்ளிகளில், முதல் மற்றும் ஆறாம் வகுப்புகளில் தலா இரண்டு ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்பட்டன. 640 பிரிவுகள் தொடங்கப்பட்டு அதில் 22,400 மாணவர்கள் படித்து வருகின்றனர். அதனைத் தொடர்ந்து, வரும் கல்வி ஆண்டு முதல் தேவைப் படும் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்படும். இதனால் ஆண்டுக்கு 1.5 இலட்சம் மாணவ - மாணவியர் பயன் பெறுவர்" என்று அ.தி.மு.க. அரசின் பள்ளிக் கல்வி அமைச்சர் 10-5-2013 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் பள்ளிக் கல்வி மானியக் கோரிக்கையின்போது அறிவித்தார். தமிழ் பயிற்று மொழி பற்றிய நீண்ட நெடிய திராவிட இயக்க வரலாற்றின் அரிச்சுவடியைக் கூடத் தெரிந்து கொள்ளாமலேயே, அ.தி.மு.க.வின் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் இந்த அறிவிப்பினைச் செய்தார்.

ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றால்தான் அறிவு மேம்படும் என்பது ஒருவித மனநிலையே தவிர, அதில் எள்ளளவும் உண்மை இல்லை. தாய் மொழியில் கல்வி பயில்வதுதான் சுயசிந்தனை செழுமை அடைவதற்கு வாய்ப்பாகும். பிறமொழியில் கல்வி கற்பது என்பது சுயசிந்தனைக்கு பெரும் தடையாக அமைந்துவிடும். தாய்மொழியில் கல்வி பயில்வதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் அண்ணல் காந்தி அடிகள், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட சமுதாய அக்கறை கொண்ட தலைவர்கள் அனைவரும், கல்வி இயல் மேதைகளும், சிந்தனையாளர்களும் வலியுறுத்தி இருக்கின்றனர்.

உலகின் பல்வேறு நாடுகளில் வழக்கு மொழியாகக்கூட இல்லை. ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான், சீனா போன்ற பல நாடுகளில் அந்த நாட்டு மொழிகள்தான் ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் விளங்குகின்றன.

வணிக நோக்கில் நடைபெறும் தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளிகள் மாணவர்களை ஈர்க்க வேண்டும் என்பதற்காக, ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக அறிவிப்பது ஏற்கத்தக்க நடைமுறை ஆகாது. சமச்சீர் கல்வி நடைமுறைக்கு வந்ததற்குப் பிறகு, பாடத் திட்டத்தைப் பொறுத்தவரை தனியார் பள்ளிகளும், அரசுப் பள்ளிகளும் சமநிலையிலேயே உள்ளன. எனவே அரசுப் பள்ளிகளை மேம்பாடுடைய கல்வி மையங்களாக மாற்றிட, சிறந்த தனியார் பள்ளிகளைப் போல, அரசுப் பள்ளிகளிலும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, வளர்த்து, தரமான கல்வி வழங்குவது ஒன்றே நல்ல ஏற்பாடாக இருந்திட முடியும். மேலும் பொறியியல் பட்டப் படிப்புகளிலும் தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டதே என்று காழ்ப்புணர்ச்சியோடு ஒதுக்கி விடாமல் தொடர்ந்து தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிப்பது ஒன்றே எதிர்காலத்தில் சிறந்த சமுதாயம் உருவாவதற்கான அடிப்படையை ஏற்படுத்தும். ஆங்கில வழிக் கல்வி என்பது ஆங்கில மோகமாக மாறி, அதுவே படிப்படியாக கல்வியை தனியார் மயமாக்குவதற்கான கதவுகளைத் தாராள மாகத் திறந்து விடும் பிற்போக்கு நடவடிக்கையாக ஆகிவிடும்.

தி.மு.கழக அரசு தமிழ்ப் பயிற்று மொழி தொடர்பாக மேற்கொண்டு வந்த அரிய முயற்சிகளை மேலும் முன்னெடுத்துச் செல்லாமல், அந்த முயற்சிகள் அனைத்தையும் குழி தோண்டிப் புதைக்கும் வகையில் அ.தி.மு.க. அரசின் அமைச்சர் பேரவை யிலே அறிவிப்பை வெளியிட்டார். தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவித்துச் செயல்படுத்த வேண்டும்; மத்திய அரசு நடத்தும் வேலை வாய்ப்புக்கான தேர்வுகள் அனைத்தையும் தமிழிலும் நடத்திட வேண்டும்; சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு மொழியாக தமிழ் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற முற்போக்குக் கொள்கைகள் வலிவு பெற்று வரும் இந்தக் கால கட்டத்தில் திடீரென்று அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி என்பதும், தமிழ்வழிப் பொறியியல் பட்டப்படிப்பு மாணவர்களை உதாசீனப்படுத்துவது என்பதும் தூங்குகின்ற புலியை வீண் வம்புக்கு இழுக்க இடறி விடுவதைப் போன்றதாகும்.

ஆங்கிலம் ஒரு மொழி என்பதற்கு அப்பால், ஆங்கிலமே அறிவுக்கு ஒரே வழி என்ற போக்கு அ.தி.மு.க. அரசால்

உருவாக்கப்படுவது கண்டு தாய்மொழிப் பற்றாளர்கள் மிகுந்த வேதனையில் ஆழ்ந்திருக்கிறார்கள். பள்ளிக் கல்வி ஆயினும், உயர் நிலைக் கல்வி ஆயினும் தாய்மொழியில் கற்பிப்பதை எந்த அளவுக்கு நீட்டித்தாலும், அது ஒரு சமுதாயத்திற்கு மிகுந்த நன்மைகளையே ஏற்படுத்தும். பயிற்று மொழி குறித்து எப்படிப்பட்ட அணுகுமுறை சரியானதாகவும், பொருத்தமானதாகவும், அறிவியல் பூர்வமானதாகவும் இருக்கும் என்பது பற்றி உலகெங்கிலும் ஏராளமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான ஆய்வு முடிவுகள் தாய்மொழி வழிக் கல்வியே தலை சிறந்தது என்றே எடுத்துக் காட்டியிருக்கின்றன. 1951இல் வடிவமைக்கப்பட்ட ஐ.நா. மன்றத்தின் கல்வி மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ) தாய்மொழி வழிக் கல்வியையே வலியுறுத்தியிருக்கின்றது. இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளால் அமைக்கப்பட்ட அனைத்து கல்விக் குழுக்களும் தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது என நிரூபித்திருக்கின்றன.

தமிழகத்தின் முக்கியமான இந்தப் பிரச்சினை குறித்து வாயைத் திறந்தால், எங்கே முதலமைச்சரின் கோபத்திற்கு ஆளாகிட நேரிடுமோ என்று, தமிழகத்திலே தமிழுக்காகத் தாங்கள்தான் பிறவியெடுத்திருக்கிறோம் என்பதைப்போல எண்ணிக் கொண்டு செயல்படும் சில அரசியல்வாதிகள் தங்கள் வாயைத் திறக்காமல் இருப்பதைப் பார்க்கும்போது வேதனையாகத்தான் உள்ளது.

இதையெல்லாம் திரைபோட்டு மறைத்து திசை திருப்பிடும் நோக்கத்தோடுதான், முதலமைச்சர் ஜெயலலிதா கொடநாடு செல்வதற்கு முன்பு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய கட்டிடத்திற்கு தலைமைச் செயலகத்தில் இருந்தவாறே அடிக்கல் நாட்டிய செய்தியும், பத்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தை முதலமைச்சர் திறந்து வைத்திருக்கிறார் என்ற செய்தியும் ஏடுகளுக்கு தமிழக அரசின் செய்தித் துறையினரால் மூன்று நாட்களுக்குப் பிறகு தரப்பட்டுள்ளது. இதிலிருந்தே இந்தச் செய்திக்கு அ.தி.மு.க. அரசின் செய்தித் துறை எந்த அளவிற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கும், திருக்குறளுக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இந்தச் செய்தியைப் பார்ப்பவர்கள், இந்த ஆட்சியில் வள்ளுவர்கோட்டம்

எந்த அளவிற்கு புறக்கணிக்கப்பட்டு, அங்கே சமூக விரோத நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்பதையும், கன்னியாகுமரியில் வைக்கப்பட்டுள்ள 133 அடி உயரமுள்ள திருவள்ளுவரின் சிலை இந்த ஆட்சியினரால் எப்படியெல்லாம் பராமரிப்பின்றி இருந்தது என்பதையும், கழக ஆட்சியில் திறக்கப்பட்ட "செம்மொழிப் பூங்கா", "தொல்காப்பியப் பூங்கா", "பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகம்", "செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்" போன்றவை எந்த அளவுக்குச் சீரழிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்! தி.மு. கழக ஆட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் "திருவள்ளுவர் படிப்பகம்" என்ற பெயரில் தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்து 680 ஊராட்சிகளிலும் கொண்டுவரப்பட்ட அத்தனை நூலகங்களின் கதி என்ன? "அம்மா" ஆட்சியில் "திருவள்ளுவர்" பெயரில் நூலகம் இருக்கலாமா? தமிழ் வழி பொறியியல் பட்டப்படிப்பு பயிலும் ஆயிரக்கணக்கான மாணவ-மாணவியர்க்கு, அரசு சார்பில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இட ஒதுக்கீட்டை அனுசரித்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர அ.தி.மு.க. அரசு முன் வரவேண்டும்; தமிழ்வழிப்பொறியியல் பட்டப்படிப்பு, தி.மு. கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்டது என்பதற்காக எப்போதும் போல "காழ்ப்புணர்ச்சியோடு", அந்த மாணவர்களுக்கு உடனடியாக அரசு வேலை வாய்ப்பு அளிக்க முன்வராவிட்டால் அந்த மாணவர்கள் அறிவித்தவாறு, அவர்கள் அனைவரையும் போராட்டக்காரர்களாக மாற்றிய பழிக்கு அரசு ஆளாக நேரிடும் என்பதை அரசு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

28-12-2013

3845. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (1)

உடன்பிறப்பே,

நம்முடைய கழகப் பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்களின் 92வது பிறந்த நாளை வடசென்னையில் நாம் கொண்டாடிய போதுதான் கழகத்தின் மாநில மாநாட்டினை 2014ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15, 16ஆம் நாட்களில் திருச்சியில் நடத்துவதென்ற அறிவிப்பினை அலைகடலெனத் திரண்டிருந்த அந்த மக்கள் வெள்ளத்திற்கு மத்தியில் செய்தேன். அந்த அறிவிப்பைத் தொடர்ந்து எழுந்த மக்களின் கரவொலி அடங்கவே நீண்ட நேரமாயிற்று.

திருச்சியிலே மாநில மாநாடு என்று அறிவித்த மறுநாளே திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி கே.என். நேரு சென்னைக்கு வந்து விட்டார். எப்படித்தான் வந்தாரோ அவ்வளவு விரைவில்? நேருவைப் பற்றி நான் கூறவே வேண்டியதில்லை. நிற்கவே மாட்டார்; ஓட்டமும் நடையுமாக இயங்கிக் கொண்டே இருக்கும் சிறந்த செயல் வீரர் அவர்; அதுவும் மாநில மாநாடு என்றால் கேட்கவா வேண்டும்? மாநாட்டினை நான் அறிவித்தது 19ஆம் தேதிதான். அதற்குப் பிறகு இரண்டு முறை சென்னை வந்து சென்று விட்டார். மாநாட்டிற்கு இடத்தைத் தேர்வு செய்வது எங்கே என்பது பற்றி யோசனை கேட்கவும், பந்தலுக்கு யார் பெயரை வைப்பது என்பது பற்றி முடிவெடுக்கவும் இரண்டு முறை வந்து சென்றிருக்கிறார். ஏன், இன்றைய "முரசொலி"யில் கூட, வரவேற்புக் குழுத் தலைவரான, தம்பி கே.என். நேரு, திருச்சி "கலைஞர் அறிவாலயத்தில்" பக்கத்து மாவட்டக் கழகச் செயலாளர்களான தம்பிகள் பெரியண்ணன் அரசு, நன்னியூர் ராஜேந்திரன், ப.துரைசாமி, எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் தம்பிகள் ஆ. ராசா, எம்.பி., என்.செல்வராஜ், என்.சிவா, திருச்சி செல்வேந்திரன், அன்பில் பெரியசாமி, கே.என். சேகரன், மாநகரச் செயலாளர்

அன்பழகன், ஆகியோரையெல்லாம் அழைத்து கூட்டம் நடத்தி கலந்தாலோசனை செய்ததோடு, மாநில மாநாட்டுப் பந்தல், சுமார் 15 இலட்சம் பேர் பங்கேற்கக்கூடிய வகையில், 100 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படும் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்த செய்தி வந்துள்ளது.

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதியன்று சென்னை ராபின்சன் பூங்காவில் கழகம் தோன்றிய நாள்தொட்டு இதுவரை நாம் ஒன்பது மாநில மாநாடுகளை இந்த 64 ஆண்டு களில் அகிலமே வியந்திடும் வண்ணம் நடத்தி முடித்திருக்கிறோம். தற்போது திருச்சியில் நடைபெறவிருப்பது பத்தாவது மாநில மாநாடாகும். அதுவே ஒரு தனிச் சிறப்புத் தானே? இந்த பத்து மாநில மாநாடுகளில் ஐந்து மாநில மாநாடுகள் திருச்சியில்தான்! அதுவும் திருச்சிக்கு ஒரு பெருமைதான்! பொதுவாக மாநில மாநாட்டிற்குத் தலைவர், கழகத் தலைவர்தான். அந்த வகையில், இந்தப் பத்து மாநில மாநாடுகளில், 6 மாநில மாநாட்டிற்குத் தலைமை அடியேன்தான். அதுவும் எனக்கு சிறப்பு சேர்ப்பதுதானே? பேரறிஞர் அண்ணா அவர்கள் 3 மாநில மாநாட்டிற்கும், நாவலர் அவர்கள் ஒரு மாநாட்டிற்கும் தலைமை தாங்கியிருக்கிறார்கள். இந்த பத்து மாநில மாநாடுகளைத் தவிர, சிறப்பு மாநில மாநாடு இரண்டு முறை நடைபெற்றிருக்கிறது. 1997ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27, 28, 29 ஆகிய நாட்களில் சேலத்திலும், 1998ஆம் ஆண்டு செப்டம்பர் 17, 18 ஆகிய நாட்களில் திருநெல்வேலியில் தி.மு.கழகப் பொன்விழா தொடக்கச் சிறப்பு மாநாடும் என்னுடைய தலைமையிலே நடைபெற் றுள்ளன.

மாநில மாநாடுகள் எவ்வெப்போது என்ற விவரத்தைக் கூற வேண்டுமேயானால், 1951ஆம் ஆண்டு டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் சென்னையில் முதல் மாநில மாநாடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும்; 1956ஆம் ஆண்டு, மே 17, 18, 19, 20 ஆகிய நாட்களில் திருச்சியில் 2வது மாநில மாநாடு, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையிலும்; 1961ஆம் ஆண்டு , ஜூலை 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் மதுரையில், மூன்றாவது மாநில மாநாடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும்; 1966-1967இல் டிசம்பர் 29, 30, 31, ஜனவரி 1 ஆகிய நாட்களில் சென்னையில், நான்காவது மாநில மாநாடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும்; 1975ஆம்

ஆண்டு டிசம்பர் 25, 26, 27, 28 ஆகிய நாட்களில், கோவையில் ஐந்தாவது மாநில மாநாடு என் தலைமையிலும்; 1990ஆம் ஆண்டு பிப்ரவரி 9, 10, 11 ஆகிய நாட்களில் திருச்சியில், ஆறாவது மாநில மாநாடு, என் தலைமையிலும்; 1993ஆம் ஆண்டு மார்ச் 26, 27, 28 ஆகிய நாட்களில், கோவையில் ஏழாவது மாநில மாநாடு, என் தலைமையிலும்; 1996ஆம் ஆண்டு ஜனவரி 26, 27, 28 ஆகிய நாட்களில், திருச்சியில் எட்டாவது மாநில மாநாடு, என் தலைமையிலும்; 2006ஆம் ஆண்டு மார்ச் 3, 4, 5 ஆகிய நாட்களில், திருச்சியில் ஒன்பதாவது மாநில மாநாடும், இளைஞர் அணி வெள்ளி விழா மாநாடும் இணைந்து என் தலைமையிலும் நடைபெற்றிருக்கின்றன. இவை தவிர 1997ஆம் ஆண்டு ஜூன் 27, 28, 29 ஆகிய நாட்களில் சிறப்பு மாநில மாநாடு சேலத்திலும், 1998 செப்டம்பர் 17, 18 ஆகிய நாட்களில் தி.மு.க. பொன்விழா தொடக்கச் சிறப்பு மாநாடு, திருநெல்வேலியிலும் என் தலைமையிலே நடைபெற்றன.

மேலும், இதுவரை 56 மாவட்ட மாநாடுகள், கழகத்தின் முன்னணித் தலைவர்கள், கழகத்திற்காக நாளும் உழைத்த நல்லவர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளன. தேர்தல் சிறப்பு மாநாடு என்றும், இந்தி எதிர்ப்பு மாநாடு என்றும், வட்டார மாநாடு என்றும், மகளிர் மாநில மாநாடு என்றும் விவசாயிகள் அணி மாநில மாநாடு என்றும், மாநில சுயாட்சி மாநாடு என்றும், திராவிட இயக்க 75வது ஆண்டு நிறைவு பவள விழா மாநாடு என்றும், மண்டல மாநாடு என்றும், முத்தமிழ் மாநாடு என்றும் 19 முறை மாநாடுகளை நடத்தியிருக்கிறோம்.

தி.மு. கழக மாநாடுகள் என்ற நீண்ட வரலாற்று வரிசையில்தான் 2014 பிப்ரவரி 15, 16 ஆகிய நாட்களில் திருச்சியில் பத்தாவது மாநில மாநாடு நடைபெறவுள்ளது. இந்த முறை மாநாடு நடைபெறுகின்ற நேரம், நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்பாக வருகின்ற காரணத்தால் இதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

திருச்சியிலே நடைபெற்ற மாநாட்டிலேதான், அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே போட்டியிடலாமா? வேண்டாமா? என்ற ஒரு கேள்வியை எழுப்பி கூடியிருந்த மாநில மாநாட்டு மக்களிடத்திலே, 'மக்கள் வாக்களிப்பது பிறகு இருக்கட்டும் நாம் தேர்தலில்

நிற்கலாமா, வேண்டாமா என்பதற்கு, இந்த மாநாட்டிலே இருக்கின்ற கழகத் தோழர்களே! நீங்கள் உங்களுடைய முடிவை அறிவியுங்கள்' என்று மாநாட்டுப் பந்தலிலே பெட்டிகளை வைத்து வாக்களிக்கச் செய்த அப்பெட்டிகளிலே விழுந்த வாக்குகளிலே, "தேர்தலில் நிற்கலாம் - தேர்தலிலே ஈடுபடலாம்" என்பதற்காக விழுந்த வாக்குகள்தான் அதிகமாக இருந்த காரணத்தால், திருச்சியில் நடந்த அந்த மாநில மாநாட்டிலேதான், அண்ணா இருந்து நடத்திய அந்த மாநாட்டிலேதான், திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே நிற்கலாம் என்ற ஜனநாயக ரீதியான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

திருச்சி மாநாட்டில் எடுத்த அந்த முடிவின்படி, மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு அதே திருச்சியில் நம்முடைய கழகத்தினுடைய மாநில மாநாட்டை நடத்த எண்ணியிருக்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, இதே திருச்சியில்தான் 1970ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்களில் "திருச்சி மாவட்ட ஐந்தாவது மாநாடு" நடத்தினோம். அந்த மாநாட்டிலேதான் இறுதியாக நான் உரையாற்றிய நேரத்தில், கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களை வெளியிட்டேன் அந்த முழக்கங்கள்தான்,

1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்!
2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!
3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!
4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!
5. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி!

1970 பெப்ரவரி 22ஆம் நாள் திருச்சியில் எழுப்பப்பட்ட அந்த ஐம்பெரும் முழக்கம் தான் இன்றைக்கும் தி.மு. கழகத்தின் இதய கீதமாக இருந்து நம்மையெல்லாம் இயக்கி வருகிறது. அந்த மாநாட்டிற்கு திருச்சி தந்த தீரர், நண்பர் அன்பில் தான் வரவேற்புக் குழுத் தலைவர் - மாநாட்டுத் தலைவர் சிந்தனைச் சிற்பி அண்ணன் சி.பி. சிற்றரசு - திறப்பாளர் கழகப் பொருளாளராக இருந்த அருமை நண்பர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மாநில மாநாட்டைப் போல விளங்கிய அந்த மாவட்ட மாநாட்டின் ஊர்வலச் சிறப்பு குறித்து "முரசொலி"யில் அப்போது தம்பி

முரசொலி மாறன் அருமையானதொரு சொல்லோவியத்தையே தீட்டியிருந்தார். அதில் ஒரு சிறு பகுதியை மட்டும் - அது சாலப் பொருத்தம் என்பதால் இப்போது நினைவுபடுத்துகிறேன்.

"ஒரு மாநில மாநாட்டை நடத்தி விட்டு மாவட்ட மாநாடு என்று அன்பிலார் பொய் கூறிவிட்டார். திருச்சி மாநாடு பல விதங்களில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது. அண்ணாவிற்குப் பிறகு, கழக வரலாற்றில் இந்த மாநாடு ஒரு குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியாகும். சொற்பொழிவு - நாடகம் - கலை நிகழ்ச்சி - பத்திரிகை - சுவரொட்டி ஆகியவற்றை பலமான பிரச்சார ஆயுதங்களாக தி.மு.கழகம் பயன்படுத்தி வருவது போல உலகத் தில் எந்த அரசியல் கட்சியும் பயன்படுத்துவதில்லை என்று நமது இயக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி நடத்தும் ஒரு அமெரிக்க மாணவர் என்னிடம் (முரசொலி மாறனிடம்) குறிப்பிட்டார். அந்தப் பட்டியலிலே நாம் ஊர்வலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்று தொடங்கும் முரசொலி மாறனின் அந்தக் கட்டுரையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பல்வேறு ஊர்வலங்களின் பெருமைகளையெல்லாம் தொகுத்திருப்பார்!

அந்த மாவட்ட மாநாட்டின் ஊர்வலத்தின் தொடக்கத்திலேயே நான் ஒரு பெரும் ஆபத்திலே இருந்து தப்பிப் பிழைத்தேன். ஊர்வலத்தில் தலைவர்கள் அமர்வதற்காக அலங்கரிக்கப்பட்ட பரதம், திருச்சி சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்குப் பின்புறமாக இருந்தது. அதில் நாங்கள் அமர்ந்திருந்தோம். ஊர்வலத்தின் முகப்பு கண்ணுக்கெட்டிய தொலைவு வரையில் நீடித்திருந்தது.

ஊர்வலம் புறப்படுவதற்கு முன்பு, அங்கேயிருக்கும், அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க என்னை அன்பிலும், பராங்குசமும், எம்.எஸ்.மணியும், ராபியும் அழைத்தார்கள். அப்போது நான், இப்போது மாதிரி இல்லையே! இன்றைக்கு நம் கழகப் பொருளாளர், தம்பி மு.க.ஸ்டாலின் எங்கே கழக நிகழ்ச்சிக்கு அழைத்தாலும், ஓடோடிச் செல்கிறாரே, அதைப் போலத்தான், ஏன் இதைவிட அதிகமாகத்தான் நான் அப்போதிருந்தேன். எனவே அண்ணா சிலைக்கு மாலை என்றதும், ரதத்திலிருந்து குதித்து, அண்ணா சிலை நோக்கி வேகமாகச் சென்றேன். சிலை அருகே நின்று

கொண்டு, மிகப் பெரிய மாலை ஒன்றை அண்ணா சிலையின் கழுத்திலே அணிவித்தேன். ஒரு இமைப் பொழுதுதான். என்ன நடந்தது என்றே தெரியவில்லை! என் கையை வேகமாக நான் இழுத்துக் கொள்ளாமல் இருந்திருந்தால், அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்த நிலையிலேயே, அவரது சிலையைக் கட்டித் தழுவியபடியே மின்சார "ஷாக்"கிற்குப் பலியாகி, அன்றைக்கே போய்ச் சேர்ந்திருப்பேன். ஆம், மாநாட்டை முன்னிட்டு அண்ணா சிலைக்கு மின் விளக்கு அலங்காரம் செய்திருந்தார்கள். மிக நுண்ணிய மின் கம்பிகள் அந்தச் சிலை மீதும், பீடத்திலும் சுற்றப்பட்டிருந்திருக்கின்றன. ஈரமான மாலையை நான் அணிவித்த மாத்திரத்தில் பயங்கரமான "ஷாக் " அடித்து, என்னை வேகமாக இழுத்த போது, நான் வெடுக்கென்று கையை இழுத்துக் கொண்டதால் தப்பிப் பிழைத்தேன் என்பதைப் புரிந்து கொண்டேன். அன்பில் போன்றவர்கள் அதிர்ச்சியால் என்னவோ நடந்து விட்டது என்பதைப் புரிந்து கொண்டு வாயடைத்து வருந்தித் தவித்தார்கள்.

ஒரு நிமிட நேரம்தான்! பிறகு நான் ரதத்தில் அமர்ந்து ஊர்வலத்தைப் புறப்படச் சொன்னேன். மக்கள் வெள்ளம் என்னை ஊர்வலப் பந்தலுக்கு இட்டுச் சென்றது.

அன்று நடைபெற்றது மாவட்ட மாநாடா? மாநில மாநாட்டைப் போல அல்லவா மக்கள் குழுமியிருந்தார்கள்! மாநாட்டின் பொருளாளர், கழகப் பொருளாளராக இருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல் நாளே மாநாட்டுத் திறப்பு விழா உரையை நிகழ்த்தி விட்டு, மறுநாள் காலையில் அவசரப் படப்பிடிப்புக்காக வெளியூர் சென்று விட்டார். மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக நான் ஆற்றிய நிறைவுரை இன்னமும் என் நினைவில் நிற்கிறது. அடுத்த கடிதத்தில் அதைத் தொடங்குகிறேன்.

அந்தத் திருச்சியில்தான் தற்போது மாநில மாநாடு நடைபெறவிருக்கிறது. பெப்ரவரி திங்கள் 15, 16இல் மாநாடு! அதற்குள் இந்த மாநாடு குறித்து மேலும் சில விவரங்களை நான் தொடர்ந்து உனக்கு ஒவ்வொரு வாரமும் ஞாயிறு தோறும் வழங்கிட இருக்கிறேன். அதனால்தான் சற்று விரிவாகவே இந்தக் கடிதத்தில் கூறத் தொடங்கியிருக்கிறேன். மாநாட்டிற்குப்

புறப்பட இன்னும் ஒன்றரை மாதங்கள் இருக்கிறதே என்று எண்ண வேண்டாம்; இப்போதே பயண ஏற்பாட்டினைத் தொடங்கி விடு! வாகனங்களுக்கு முன்பணம் கொடுத்து விடு! குடும்பத்தோடு மாநாட்டிற்கு வருவதுதானே நமது வழக்கம். அதற்கும் தகுந்தாற்போல சொல்லிவைத்து விடு! திருச்சியில் மாநாடு என்றால் எப்போதும் அது திருப்பு முனை மாநாடுதான்!

அன்புள்ள,

மு.க.

29-12-2013

(தொடரும்)

3846. மேயருக்கும், மக்களுக்கும் ஒரு விளக்கம்!

உடன்பிறப்பே,

‘‘அறிவாலயத்திற்குள் இருக்கும் ஓ.எஸ்.ஆர். (திறந்தவெளி நிலம்) நிலம், இதுவரை தானப் பத்திரம் மூலம் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப் படவில்லை. சூடு, சொரணை இருக்குமானால், நிலத்தை மாநகராட்சி வசம் ஒப்படைக்க உங்கள் மேலிடத்தில் சொல்லுங்கள்” என்று சென்னை மாநகராட்சி மேயர் சைதை துரைசாமி மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் சாடியிருப்பதாக, “தினத்தந்தி” உட்பட எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வந்துள்ளது.

மாநகராட்சி மன்றத்தின் மேயரை நான் நீண்ட நாட்களாக அறிவேன். அவர் இந்த அளவிற்கு தரம் தாழ்ந்து பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் அவரின் உரையைப் படித்துவிட்டுச் சென்னைவாழ் மக்கள் குழப்பத்திற்கு ஆளாகி விடக்கூடாது என்பதற்காக, இந்த விளக்கத்தை நான் அளிப்பது தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது. அண்ணா அறிவாலயத்திற்குள் இருக்கும் இந்தத் திறந்த வெளி நிலம் பற்றி இதுவரை எத்தனை முறை பேசப்பட்டு, அதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பதிலளிக்கப்பட்டுள்ளது என்பது அனைவருக்குமே தெரியும். இருந்தாலும் ஆறு மாதத்திற்கு ஒரு முறை இதுபற்றி அ.தி.மு.க.வினர் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

மேயர் சைதை துரைசாமி பேசும்போது, அறிவாலயத்திற்குள் இருக்கும் ஓ.எஸ்.ஆர். நிலம், கடந்த ஆட்சியில், சிறப்புச் சலுகையாக தானப் பத்திரம் பதிவு செய்ய வேண்டாம் என்று அரசாணை வெளியிட்டு, மாநகராட்சியில் தனித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர் என்று அவரே தெரிவித்திருக்கிறார். இவ்வாறு அவரே குறிப்பிட்டுவிட்டு, தானப்பத்திரம் மூலமாக

மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று பேசினால் என்ன அர்த்தம்?

1988ஆம் ஆண்டு தி.மு.க. அறக்கட்டளையின் சார்பாக அண்ணா அறிவாலயக் கட்டிட வரைபட அனுமதியின்போது, சுமார் 10 சதவீத திறந்த வெளி ஒதுக்கீடு நிலத்தைத் தி.மு.க. அறக் கட்டளையே பராமரித்திட மனு செய்யப்பட்டது. அம்மனு தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த திறந்தவெளி ஒதுக்கீட்டு இடத்தை, அண்ணாப் பூங்காவாகப் பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு வரைபட அனுமதி அளிக்கப்பட்டு, அது தொடர்பாக அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது.

தி.மு.க. அறக்கட்டளைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது போலவே, 1988ல் காங்கிரஸ் அறக்கட்டளைக்குச் சொந்தமான காமராஜர் அரங்கத்திற்கு முன்னால் உள்ள திறந்தவெளி ஒதுக்கீட்டு இடத்தை, அந்த அறக்கட்டளையே பராமரித்துக் கொள்ள அனுமதி அளித்து, அரசாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இப்போது கூறியுள்ள குற்றச்சாட்டில் காங்கிரஸ் அறக்கட்டளையைக் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணா அறிவாலயத்துக்கு என்று ஒரு சரித்திரம் உண்டு. அது, தி.மு. கழகத்தினுடைய அறக்கட்டளையின் சார்பில் கட்டப்பட்டதாகும். அந்தக் கட்டிடம் கட்டுவதற்கு முறைப்படி அனுமதி கோரி; 11-8-1980இல் அனுமதி கிடைத்த பிறகு கட்டிடம் கட்டத் தொடங்கிய போது, சிமெண்ட் பற்றாக்குறை, தண்ணீர்த் தட்டுப்பாடு, மின்வெட்டு போன்ற காரணங்களால் பணிகளை விரைவாக முடிக்க முடியாமல் சற்றுச்சுணக்கம் ஏற்பட்டது. கட்டிடத்திற்குப் பக்கத்தில், அதற்குரிய பொருள்கள், கருவிகளை வைக்க சாதாரண "ஷெட்" ஒன்றும் கட்டத் தொடங்கினோம்.

அப்போது திடீரென்று 28.10.1985 அன்று அ.தி.மு.க. ஆட்சியில், எம்.எம்.டி.ஏ. அதிகாரிகள் சிலர் கட்டிடத்தை நேரில் பார்த்து விட்டு, 30.10.1985 அன்று, குறித்த காலத்திற்குள் பணிகளை ஏன் முடிக்கவில்லை என்றும், உடனடியாகப் பணிகளை நிறுத்த வேண்டுமென்றும் கடிதம் அனுப்பினார்கள். அதற்கு 2.11.1985 அன்று எழுதிய பதிலில், அனுமதியினைப் புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்வதாகவும், பக்கத்தில் உள்ள ஷெட் கட்டுவதற்கான அனுமதியையும் பெறுவதற்கு

முயற்சிகள் எடுப்பதாகவும் தெரிவித்தோம். இதற்கு 5.11.1985 அன்று எம்.எம்.டி.ஏ. எழுதிய பதில் கடிதத்தில், கட்டிடப் பணிகள் நிறுத்தப்பட்டதா என்பது பற்றி 12.11.1985ஆம் தேதிக்குள் பதில் கிடைக்காவிட்டால், எம்.எம்.டி.ஏ. கடும் நடவடிக்கை எடுக்கு மென்று தெரிவித்தார்கள். அதற்கு 7.11.1985 அன்று எழுதிய பதில் கடிதத்தில் கட்டிடப் பணிகளை நிறுத்திவிட்டதற்கு உறுதி அளிக்கிறோம் என்று எழுதினோம். அதே நாளில் எழுதிய மற்றொரு கடிதத்தில், அனுமதியைப் புதுப்பித்து, பணிகளைத் தொடர்ந்திட அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம்.

19.12.1985 தேதியன்று எம்.எம்.டி.ஏ. எழுதிய கடிதத்தில், கட்டிடத்திற்கு ஓரப் பகுதிகளில் போதுமான இடம் ஒதுக்கப்படவில்லை, பத்து சதவிகிதம் திறந்த வெளி ஒதுக்கப்படவில்லை என்ற காரணங்களைக் கூறி, எங்கள் கோரிக்கை மறுக்கப்படுவதாகத் தெரிவித்தது. அந்தக் கடிதத்தின் கீழே "குறிப்பு" என்று போட்டு, தேவைப்பட்டால் இரண்டு மாதத்திற்குள் அரசுக்கு மேல் முறையீடு செய்யலாம் என்றும் தெரிவித்திருந்தார்கள். உடனடியாக, அவர்கள் குறிப்பிட்டதைப் போல தவறுகள் களையப்படுவதாகவும், 6 மீட்டர் அளவிற்கு இடம் ஒதுக்கிவிடுவதாகவும், கண் சிகிச்சை முகாமிற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தைத் திறந்தவெளித் தேவைக்காக ஒதுக்குவதாகவும் தெரிவித்துப் பதில் எழுதினோம். 7.1.1986 அன்று எம்.எம்.டி.ஏ. எழுதிய கடிதத்தில், கட்டிடப் பணிகளை மேற்பார்வையிட ஒரு "ஆர்க்கிடெக்ட்" நியமிக்கப்பட வேண்டும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பணிகளின் முன்னேற்றம் குறித்துத் தகவல் தெரிவிக்க வேண்டும், மரம் நட வேண்டும், பணிகள் முற்றுப் பெற்றவுடன் தெரிவிக்க வேண்டும் என்றெல்லாம் கூறிவிட்டு, "திறந்த வெளித் தேவைக்காக ஒதுக்கப்படும் இடத்தைச் சென்னை மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு "ரிஜிஸ்டர்டு கிப்ட் டீட்" மூலமாகப் பதிவு செய்து ஒப்படைப்பதோடு, பத்து நாட்களுக்குள் ரூ.50,200 கட்ட வேண்டும் என்றும், அதற்குப் பிறகுதான் கட்டிட அனுமதி வழங்க முடியும் என்றும்'' குறிப்பிட்டிருந்தார்கள்.

9.1.1986 அன்று நாங்கள் எழுதிய கடிதத்தில், நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதாகவும், 50,200 ரூபாய்க்கான காசோலையை அனுப்புவதாகவும் தெரிவித்துவிட்டு,

"1980ஆம் ஆண்டு முதன்முதலில் இதற்கான அனுமதி குறித்து அரசாங்கத்திற்கு நாங்கள் விண்ணப்பித்துக் கொண்டபோது, எங்களுடைய அறக்கட்டளையின் நலத் திட்டங்களை மனதில் கொண்டு அரசு எங்களுக்கு அனுமதி வழங்கியது. அப்போது இந்தத் திறந்த வெளி இடத்தினை ஒதுக்குவது பற்றிப் பிரச்சினையே எழவில்லை. இப்போது எம்.எம்.டி.ஏ. தெரிவித்த கருத்துப்படி திறந்தவெளிக்கான இடத்தைப் பொதுமக்கள் உபயோகத்திற்காக "அறிஞர் அண்ணா பூங்கா" என்ற பெயரில் ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறோம். இருந்தாலும், அறக் கட்டளையின் முக்கிய நல்ல நோக்கங்களைக் கருதி, இந்தத் திறந்தவெளி இடத்தினை நிர்வகிக்கும் பொறுப்பினை அறக்கட்டளையே வைத்துக் கொள்ளவும் - பத்திரம் மூலமாக மாநகராட்சிக்குத் தானம் செய்து தர வேண்டுமென்ற நிபந்தனையை வலியுறுத்தாமல் விரைவில் அனுமதியினை வழங்கவும் வேண்டும்" என்று கேட்டுக் கொண்டோம்.

எம்.எம்.டி.ஏ.விற்கு இவ்வாறு எழுதியதோடு, 10.1.1986 அன்று அனைத்து விவரங்களையும் அரசாங்கத்திற்கும் எழுதி, விரைவில் கட்டிடப் பணிகளைத் தொடர அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். கடிதம் எழுதியதோடு கழகத்தின் சார்பில் அன்பில் தர்மலிங்கம் அவர்களையும், டி.ஆர். பாலு அவர்களையும் வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சரிடம் அனுப்பியபோது, விரைவில் முடிவு செய்வதாகக் கூறினார். அப்போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக இருந்த தோழர் மாணிக்கம், முதல் அமைச்சருக்கே இது பற்றிக் கடிதம் எழுதுமாறு கூறியதற்கேற்ப, 5.3.1986 அன்று முதல்வராக இருந்த நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எழுதினேன். அதற்கு எம்.ஜி.ஆர். உடனடியாக எழுதிய பதிலில், என் கடிதத்தில் குறிப்பிட்ட வேண்டுகோளைக் கனிவுடன் பரிசீலனை செய்து ஆவன செய்கிறேன் என்று தெரிவித்திருந்தார். மீண்டும் 19.3.1986 அன்றும், 22.3.1986 அன்றும் முதலமைச்சருக்கு நினைவூட்டல் கடிதங்கள் எழுதினேன். மேலவையிலும் பேசினேன். எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

அதற்குப் பிறகு ஆளுநர் ஆட்சியில், 5.8.1988 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையில்தான் "The Government, after careful consideration of the appeal received from the Chairman and Managing

Trustee, D.M.K. Charitable Trust in the reference first read above and the remarks offered by the Member Secretary, M.M.D.A., in the matter in his letter have decided to allow the appeal and to exempt the construction of office, Kalyanamandapam and Anathai Illam by the D.M.K. Charitable Trust from the provisions of rule 19 (b) (ii) of Development Control Rules relating to provision of 10% of the site extent as O.S.R., subject to the condition that the Trust should maintain the Open Space Reservation as Aringar Anna Recreation Park for the public and that no construction should be made in future at the Open Space Reservation place" என்றெல்லாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது இந்த இடத்திற்கான விதிவிலக்கு ஆளுநர் ஆட்சியிலேயே அரசாணை மூலமாகவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 7.9.1988 அன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு கெஜட்டிலும் இந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்குப்பின்னரும் 2004ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில், அறக்கட்டளைக்கு அரசு அனுப்பிய கடிதத்தில், திறந்தவெளி இடம் முறையாகப் பராமரிக்கப்படவில்லை என்று மாநகராட்சி ஆணையர் தெரிவித்திருப்பதாகவும், அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்றும் கோரியிருந்தது. 4.7.2004 அன்று அரசுக்கு அறக்கட்டளை சார்பில் விளக்கமாகப் பதில் எழுதப்பட்டது. அதேநேரத்தில், சென்னை உயர் நீதிமன்றத்திலும் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. உயர்நீதிமன்ற நீதிபதி தி.மு.க. அறக்கட்டளையின் ஆட்சேபனை மனுவைப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசுக்கு உத்தரவிட்டார்.

அதற்கு 7.12.2007 அன்று அரசின் சார்பில் வந்த பதிலில் ; எம்.எம்.டி.ஏ. யின் தலைமை திட்ட அலுவலரும், சென்னை மாநகராட்சி சார்பில் தலைமைப் பொறியாளரும் 2.11.2007 அன்று திறந்தவெளிப் பூங்காவினை நேரில் பார்வையிட்டு, அந்த இடம் முறைப்படியும், விதிப்படியும் பூங்காவாகப் பராமரிக்கப்படுவதாகவும், இதில் எந்தவிதமான விதி மீறல்களும் இல்லை என்றும் தெரிவித்ததின் அடிப்படையில், அரசு விளக்கம் கேட்டு அனுப்பிய கடிதத்தை முடித்துக் கொள்வதாகவும், அந்தக் கடிதத்தின் மேல் நடவடிக்கையை விட்டுவிடுவதாகவும், அந்த இடத்தில் எவ்விதமான கட்டுமானப் பணியும் மேற்கொள்ளாமல், திறந்தவெளி இடமாகவே பராமரிக்க வேண்டுமென்றும் தெரிவித்து 7.12.2007 அன்று தெளிவாகக் கடிதம் எழுதியிருக்கின்றது.

இவை அனைத்தும் முறைப்படி செய்யப்பட்டு, அதற்கான ஆவணங்கள், அரசாணைகள் உள்ளன. இந்த நிலையில் ஒரு மாநகராட்சியின் மேயராக இருப்பவர் இந்த அளவிற்குப் பேசுவது எந்த நியாயத்தின்பாற்பட்டது? இவ்வாறெல்லாம் பேசுவதை இனியாவது அவர் நிறுத்திக்கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் எவ்வளவோ பிரச்சினைகள் அடுக்கடுக்காக ஏடுகளில் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. முன்னாள் மேயர் தம்பி மா. சுப்பிரமணியன் ஜூ.வி. இதழுக்குக் கடந்த வாரம் அளித்த பேட்டி ஒன்றில், சென்னை மாநகராட்சியின் இலட்சணம், சென்னைத் தெருக்களைப் பார்த்தாலே தெரிகிறது என்றும், கழக ஆட்சியில் சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஒன்பது மேம்பாலங்களைக் கட்டியது குறித்தும், மாநகராட்சிப் பள்ளிகளின் கல்வித்தரம் கழகம் பொறுப்பிலே இருந்தபோது 50 சதவிகிதத்திலிருந்து 80 சதவிகிதமாக உயர்ந்தது குறித்தும், புதிய பூங்காக்களை உருவாக்கியது குறித்தும், மாநகராட்சிக்குச் சொந்தமான 4 ஆயிரம் கோடி சொத்துகளை மீட்டது குறித்தும், மாநகராட்சிக்குச் சொந்தமான திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களில் பூங்காக்களை அமைத்துப் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு விட்டது குறித்தும், ஆனால் தற்போது மாநகராட்சிக்குச் சேர வேண்டிய ஓ.எஸ்.ஆர். நிலங்களைத் திரும்பவும் அந்த நிறுவனங்களுக்கே தரப்படுகிறதே ஏன் என்பது குறித்தும், தி.மு. கழக ஆட்சியில் ஒரு டன் குப்பை எடுக்க 642 ரூபாய் கொடுக்கப்பட்டது, இப்போது ஐதராபாத் நிறுவனத்துக்கு ஒரு டன் குப்பை எடுக்க 1,542 ரூபாய் கொடுக்கப்படுகிறது, இடைப்பட்ட பணம் எங்கே என்பது குறித்தும் அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டிருந்தாரே, இதற்கெல்லாம் மேயர் பதில் சொல்லியிருந்தால் நான் மகிழ்ச்சியடைந்து இருப்பேன். ஆனால் அதற்குப் பதில் சொல்லாமல் என் மீது ஏற்கனவே எரிச்சல் கொண்டவர்களின் பாராட்டினைத் தொடர்ந்து பெறலாம் என்ற நம்பிக்கையில் மேயர் நடந்து கொள்வதும், பேசுவதும் அவர் ஏற்றுள்ள பதவிக்கு அழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

30-12-2013

3847. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (2)

உடன்பிறப்பே,

கடந்த ஞாயிறு அன்று கழகத்தின் மாநிலமாநாடுகள் எவ்வெப்போது நடைபெற்றன என்பது குறித்தும், அந்த மாநாடுகள் எங்கே, யார் தலைமையில் நடைபெற்றன என்பது குறித்தும், திருச்சியில் நடைபெறவிருக்கும் பத்தாவது மாநில மாநாடு பற்றியும் எழுதத் தொடங்கியதைப் படித்திருப்பாய்! திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில் கழகம் தேர்தல்களில் போட்டியிடலாமா, வேண்டாமா என்று மாநாட்டில் வாக்குப் பெட்டிகள் வைத்து, மாநாட்டிற்கு வந்திருந்தோரின் கருத்து அறிந்து ஜனநாயகரீதியாக முடிவெடுக்கப்பட்ட கழக வரலாற்று நிகழ்வு பற்றியும், தற்போது அதே திருச்சியில் நடைபெறவிருக்கின்ற பத்தாவது மாநில மாநாடு, நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வருவதற்கு முன்பு நடைபெறவிருப்பது பற்றியும் விளக்கியிருந்தேன்.

1949ஆம் ஆண்டு பிறந்த கழகம் தன்னுடைய முதல் மாநில மாநாட்டை 1951ஆம் ஆண்டு டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் சென்னையில் பேரறிஞர் அண்ணா தலைமையில் நடத்தியது என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன் அல்லவா; அதற்கு முன்பு 1951 நவம்பர் 17ஆம் தேதியன்று காலையில் மதுரையில் பொதுக்குழு உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. தற்போது சில கட்சிகளின் செயற்குழுவும், பொதுக்குழுவும் மாலை 3 மணிக்குத் தொடங்கி 6 மணிக்கெல்லாம் முடிந்து விடுகிறதல்லவா? அப்போது முதல்நாள் காலையில் கூடிய தி.மு.கழகத்தின் பொதுக்குழு மறுநாள் காலையிலேதான் முடிவுற்றது. இடைவேளை என்பதே இல்லாமல் பலரும் கருத்துரை வழங்கிட வாய்ப்பளிக்கப்பட்டுத் தொடர்ந்து விவாதங்கள்

நடைபெற்றன. சென்னையில் டிசம்பரில் நடைபெறவிருந்த முதல் மாநில மாநாட்டின் திறப்பாளராகத் தோழர் ஈ.வி.கே.சம்பத் அவர்களின் பெயரைக் குடந்தை கே.கே.நீலமேகம் முன்மொழிந்தார். நாவலர் நெடுஞ்செழியன் பெயரை நான் முன் மொழிந்தேன். அதற்கிடையே அண்ணா அவர்கள் மாநாட்டுத் திறப்பாளராக கே.கே.நீலமேகம் அவர்களே இருக்கட்டும் என்று முடிவினை அறிவித்தார். மாநாட்டுத் தலைவராக, பேரறிஞர் அண்ணா அவர்களும், திறப்பாளராகப் பெரியவர் கே.கே.நீலமேகம் அவர்களும், கண்காட்சித் திறப்பாளராக அண்ணன் சி.பி. சிற்றரசு அவர்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

முதல் மாநில மாநாடு பற்றி எத்தனை எத்தனை நினைவுகள்? சென்னையில் மாநில மாநாட்டிற்கான வேலைகள் இரவும் பகலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அண்ணாவும், நாங்களும் இரவு பகலாக மாநாட்டுப் பந்தலிலேயே அமர்ந்து மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தோம். ஒருநாள் இரவு 11 மணி. பந்தலில் பரப்புவதற்காகக் கொட்டப்பட்டிருந்த மணல் மேட்டில் அண்ணா அவர்களும் நானும், வேறு சில நண்பர்களும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். மாநில மாநாட்டிற்கு முன்பு நாகர்கோவிலில் நடைபெற்ற குமரி மாவட்ட மாநாட்டில், கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களை உள்ளூர் நண்பர்கள் அனுமதிக்காமல் தடுத்துவிட்டதால், அவர் மனம் புண் அடைந்திருப்பதை அண்ணாவிடம் தெரிவித்து, மாநில மாநாட்டிற்குக் கலைவாணரையும் அழைக்க வேண்டுமென்று கூறினேன். உடனே அண்ணா,

“நீ இப்போதே சென்று அவரை அழைத்துவா” என்றார். இப்போது போல் அப்போது “செல்போன்” எல்லாம் கிடையாது. நான் காரை எடுத்துக் கொண்டு, கலைவாணர் இல்லத்திற்கே சென்று, அண்ணா அழைப்பதாகச் சொன்னவுடன், கலைவாணர் அருவி போல கண்களில் நீரைப் பொழிந்துகொண்டு காரிலே ஏறி உட்கார்ந்தார். மாநாட்டுப் பந்தலுக்கருகே அண்ணா அமர்ந்திருந்த மணல் மேட்டிற்கருகே கலைவாணர் வந்து அண்ணாவைக் கட்டிப்பிடித்துக் கொண்ட காட்சியும், அண்ணா தழுதழுத்த குரலில் அவரை வரவேற்றக் காட்சியும் மறக்க முடியாத காட்சி அல்லவா? “என்ன அண்ணா? இந்த மாநாட்டில் நான் கிடையாதா?” என்று கலைவாணர் கேட்டதும், “மாநாடே உங்கள்

வில்லுப்பாட்டோடுதானே துவங்குகிறது" என்று அண்ணா பதில் கூறினார்.

1951ஆம் ஆண்டு மதுரைப் பொதுக்குழுவில் முதல் மாநில மாநாட்டின் திறப்பாளரை முன்மொழிந்த நான்; தற்போது பிப்ரவரியில் திருச்சியில் நடைபெறவுள்ள பத்தாவது மாநில மாநாட்டிற்கு, தலைமையேற்றுக் கொடியேற்றுபவனாகவும், நம்முடைய பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்கள் திறப்பாளராகவும், கழகப்பொருளாளர் தளபதி தம்பி மு.க.ஸ்டாலின் மாநாட்டின் பொருளாளராகவும், திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி கே.என்.நேரு, வரவேற்புக் குழுவின் தலைவராகவும் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலம் முழுதும் கழகமும், நானும் மறக்க முடியாத திருச்சி தந்த திராவிடத்துத் தீரர் அன்பில் அவர்களின் பெயர் ஏற்கனவே பலமுறை அறிவிக்கப்பட்டு விட்ட காரணத்தால், நடைபெறவுள்ள பத்தாவது மாநில மாநாட்டின் பந்தலுக்கு, திருச்சி மாவட்டத்திற்கு அருகே உள்ள சேலம் மாவட்டத்தில் கழகம் வளர்த்த "சேலத்துச் சிங்கம்" என் அருமைத் தம்பி, வீரபாண்டி எஸ்.ஆறுமுகத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. வீரபாண்டி ஆறுமுகத்தின் அருமை மகன்கள் ராஜாவும், பிரபுவும் மற்றும் அந்த மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சிவலிங்கம், பனமரத்துப்பட்டி ராஜேந்திரன் மற்றும் கழக உடன்பிறப்புகளும் என்னைச் சந்தித்து அதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். இளம் வயதிலேயே கரூர் மாவட்டக் கழகச் செயலாளராகி, மகளிரால் மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்பையும் திறம்பட வகிக்க முடியுமென்பதை எடுத்துக்காட்டிய வீராங்கனை, அற்புதமாகப் பணியாற்றி, சாலை விபத்து ஒன்றில் சிக்கி மறைந்த சகோதரி வாசுகி முருகேசனின் பெயர் மேடைக்கு வைக்கப்பட்டுள்ளது. அதற்காக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நன்னியூர் ராஜேந்திரன், குளித்தலை சிவராமன், வாசுகியின் கணவர் முருகேசன், தம்பி ரவிக்குமார் மற்றும் நண்பர்கள் என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். அதுபோலவே இளம் வயதிலேயே இயக்கப் பணி தொடங்கி, படுகிழமாக ஆன பிறகும் தொய்வில்லாமல் தொடர்பணியாற்றிய மூதாட்டி, குளித்தலை தந்த பெருமாட்டி பொற்செல்வி இளமுருகு பெயரால் அரங்கம் - ஆங்கிலத்திலும், தமிழிலும் அற்புதமாகப் பேசவும், எழுதவும் திறமையை வளர்த்துக் கொண்டு,

அண்ணாவின் அன்பைப் பெற்று அவர் அருகிலேயே இருந்து பணியாற்றி, மறைந்த எம்.எஸ்.வெங்கடாசலம் பெயரில் முன் முகப்பு - திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக, மேயராக சிறப்பாகப் பணியாற்றி மறைந்த மா.பாலகிருஷ்ணன் பெயரில் உள் முகப்பு - திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி, கொடியோரால் கொலை செய்யப்பட்ட கழகக்காளை, பூண்டி கே.கலைச்செல்வன் பெயரால் நுழைவுவாயில் - திருச்சியில் கழகம் வளர்த்திட நீண்ட காலம் உழைத்திடுவான் என்று நான் எண்ணியிருந்த அடலேறு, மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி நேருவின் உடன்பிறப்பு, தம்பி கே.என். ராமஜெயம் பெயரால் கொடி மேடை என்று பெயர்கள் அறிவிக்கப்பட்டு மாநாட்டுப் பணிகள் முறையாக நடைபெற்று வருகின்றன. மா.பாலகிருஷ்ணன் அவர்களின் மகன் பரணிகுமார் மற்றும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள், திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் கலைவாணன் ஆகியோரும் நன்றி தெரிவித்தார்கள்.

இந்த பத்தாவது மாநில மாநாட்டிற்குப் பிறகு, நாம் இந்திய நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைச் சந்திக்க விருக்கிறோம். முதல் மாநில மாநாட்டிலேயே பொதுத் தேர்தலில் கலந்து கொள்வது என்றும்; பிறகு மதுரைப் பொதுக்குழுவில் நீண்ட நேரம் விவாதித்து, 1952இல் நடைபெறும் பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் தன் வேட்பாளர்களை நிறுத்துவதில்லை என்றும்; கம்யூனிஸ்டுகளையும், கழகத்தின் ஆதரவுகோரி தலைமை நிலையத்திற்கு வேட்பு மனுக்களை அனுப்பி, தி.மு.க. குறிப்பிடும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, பொதுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றவர்களை மட்டுமே ஆதரிப்பது என்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

1951 டிசம்பர் 13ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாகச் சென்னை அறிவகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, பந்தலை அடைந்தது. கழகப் பொதுச் செயலாளர், மாநாட்டுத் தலைவர் அண்ணா கழகத்தின் இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்தார். மறுநாள் கே.கே. நீலமேகம் மாநாட்டைத் திறந்துவைத்து உரையாற்றிய பிறகு, மாநாட்டைத் தலைமையேற்று நடத்தித் தருமாறு அண்ணா அவர்களை என்.வி.நடராசன் முன்மொழிந்தார். அதனை வழிமொழிந்து பேசுபவர் பட்டியலில் நாவலர், ஈ.வி.கே.

சம்பத், சி.பி.சிற்றரசு, டாக்டர் தர்மாம்பாள், கே.ஏ. மதியழகன், தில்லை வில்லாளன், பராங்குசம், சத்தியவாணி முத்து, அன்பில் தர்மலிங்கம், எம்.எஸ். சிவசாமி, பழனிச்சாமி, எஸ்.ஏ. ராசமாணிக்கம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, முல்லை வடிவேலு, நாஞ்சிலார், சி.வி.எம். அண்ணாமலை ஆகியோர் பெயர்களும், என் பெயரும் இருந்தன.

அண்ணா அவர்களை வழிமொழிந்து நான் அப்போது பேசியது-

"வாழ்வு மூன்று எழுத்து;
வாழ்விற்குத் தேவையான பண்பு மூன்று எழுத்து;
பண்பிலே பிறக்கும் அன்பு மூன்று எழுத்து;
அன்பிலே சுரக்கும் காதல் மூன்று எழுத்து;
காதல் விளைவிக்கும் வீரம் மூன்று எழுத்து;
வீரர் செல்லும் களம் மூன்று எழுத்து;
களத்திலே பெறும் வெற்றி மூன்று எழுத்து;
அந்த வெற்றிப் பாதைக்கு நம்மை அழைத்துச் செல்லும்
"அண்ணா" மூன்று எழுத்து,
அந்த அண்ணனைத் தலைமையேற்க வழிமொழிகிறேன்"

62 ஆண்டுகளுக்கு முன்பு என் அண்ணனைத் தலைமையேற்க நான் வழிமொழிந்து பேசியதை நானும் மறக்க வில்லை; என்னை அறிந்த எவரும் மறக்கவில்லை! ஆனால் அந்த என் அண்ணன், என்னை இந்தக் கழகத்திற்குத் தலைமையேற்க, சொல்லாமல் சொல்லிக் கட்டளை வழங்கிவிட்டு, மறைந்து 43 ஆண்டுகளாகிவிட்டன! இல்லையில்லை; அவர் மறையவும் இல்லை; அவர் மறைந்ததாக நாம் நினைக்கவும் இல்லை; நம் சொல்லில், செயலில், உயிர்த் துடிப்பில் கலந்து வருகிறார்!

அந்த முதல் மாநாட்டில் உரையாற்றியபோதுதான் அண்ணா "நமது இலட்சியத்தை நோக்கி, அமைதிப் பாதையிலே நடந்து செல்கின்றோம். அந்தப் பயணத்தின் இடையிலே வரும் பிரச்சினைகள், பாதையிலே வரும் நண்பர்களைப் போல; பேசிக் கொண்டே செல்வோம், பிரிவோம் - ஆனால் பாதையை விட மாட்டோம், மழை பெய்தால் ஒதுங்கி நிற்போம், சிறிது நேரம் - ஓய்ந்து விடமாட்டோம். தொடர்ந்து நடப்போம். பனி, மழை, வெய்யில், குளிர், இரவு, பகல் என்ற எதுவும் பயணத்தை நிறுத்தாது - பாதையை மாற்றாது. பாதையில் பிணங்கள் கிடக்கலாம்.

எலும்புக் கூடுகள் இருக்கக்கூடும். அவைகளைச் சுற்றிக் கழுகுகள் வட்டமிடலாம். நரிகளின் ஊளை கேட்கலாம். ஆனால் நாம் பாதையைத் தவறவிடோம். பிணமும், பிறவும் நமக்கு முன்னால் வீரர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதின் சின்னங்கள் என்றே கருதி நடப்போம். இடையிலே வரும் பிரச்சினைகளுக்காக நாம் எதற்காக உருவாகி, உழைத்து வருகின்றோமோ அந்த அடிப்படை இலட்சியத்தை இழந்துவிட மாட்டோம்" என்றெல்லாம் நமக்குப் பாடம் நடத்தினார்.

1951ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் மாநில மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களை நான் வழிமொழிந்தேன். 1956ஆம் ஆண்டு மே திங்கள் 17, 18, 19, 20 ஆகிய நாட்களில் இதே திருச்சி மாநகரில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில், மாநாட்டுத் தலைவராக நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை வழிமொழிந்து அண்ணா அவர்களே பேசினார். ஆம்; வரலாற்றுப் புகழ் பெற்ற அந்த வார்த்தைகளை யார்தான் மறப்பார்கள்? "தம்பீ, வா! தலைமை ஏற்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம்! வா!" - இதுதான் அண்ணா அவர்கள், நாவலரை வழிமொழிந்து பேசிய வைர வரிகளாகும். ஆனால் அதற்குப் பிறகு, அந்தப் பேச்சுக்கான விளக்கத்தை மாநாட்டு இறுதி உரையில், அண்ணா தந்தார். "எனக்குத் தம்பியாக இருந்தாலும், நாமெல்லாம் பார்த்து ஒருவரைப் பொதுச் செயலாளராக ஆக்கி விட்டு, பிறகு அவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பதும், அந்தத் தலைமையை மதிப்பதும்தான், கட்சிக் கட்டுப்பாட்டை வளர்க்கும். அப்படி தலைமைக்கு மதிப்பளித்து நடக்கும் பழக்கத்தை நான் என் அரசியல் வாழ்க்கையில் பல ஆண்டுகளாக மேற்கொண்டிருக்கிறேன்" என்று அண்ணா அவர்கள் "கட்டுப்பாடு" என்பதற்கு விளக்கமளித்துப் பேசினார்கள்.

இப்படியெல்லாம் "கட்டுப்பாடு" பற்றி நமக்குப் போதித்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு நம்மை இலட்சியப் பயணத்தில் வழிநடத்திய மாநாடுகள், பொதுக் குழுக்கள், செயற்குழுக்கள்தான் எத்தனை எத்தனை? இன்றைக்கு அவர் இல்லை, ஆனால் அவர் உருவாக்கிய நமது உயிர்மூச்சான கழகம் இருக்கிறது. ஆல் போல் தழைத்து ஆகாயமளவுக்கு உயர்ந்து நிற்கின்றது. அந்தக் கழகத்தின் பத்தாவது மாநில மாநாடுதான் திருச்சியில் பாங்குற நடைபெறவுள்ளது. மாநாடு

பற்றி இன்றைய (4-1-2014) "தினமணி" நாளேட்டில் பந்தல் பணி நடைபெறுகின்ற புகைப்படத்தோடு பெரிதாகச் செய்தி வெளிவந்துள்ளது. திண்டுக்கல் சாலையில் தீரன்நகர் பகுதியில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் இடம் தேர்வு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெறுவதாகவும், ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு மாநாட்டுப் பந்தல் அமைவதாகவும், மழை பெய்தாலும் மாநாடு தடைபடாத வகையில் தகரக் கூரைகளால் பந்தல் அமைக்கப்படுவதாகவும், இந்த மாத இறுதிக்குள் பந்தல் அமைக்கும் பணி நிறைவடையும் என்றும், மாநாட்டுப் பகுதியில் 20 இடங்களில் "போர்வெல்" அமைக்கும் பணி தொடங்கப்பட்டிருப்பதாகவும், சுவர் விளம்பரப் பணிகள் தொடங்கிவிட்டதாகவும் வரவேற்புக் குழுத் தலைவர் கே.என்.நேரு தெரிவித்திருக்கிறார்.

கழகத்திலே இரண்டறக் கலந்து காலமெல்லாம் பணியாற்றும் உன்னைப் போன்ற உடன்பிறப்புகளில் ஒருசிலர்தான் இந்தப் பத்து மாநில மாநாடுகளிலும் கலந்து கொண்டவர்களாக இருப்பீர்கள்! முதல் மாநில மாநாட்டிலும், இரண்டாவது மாநில மாநாட்டிலும் கலந்து கொண்டவர்கள் ஒருசிலர் தான் இருப்பீர்கள். பத்தாவது மாநில மாநாட்டைத் தவறவிடலாமா? ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் சொல்வதற்காக, காரிலேயே புறப்பட்டு வந்த வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி கே.என்.நேரு இரவு 8.30 மணியளவில் எனக்கு வாழ்த்துத் தெரிவித்துவிட்டு, அன்றிரவே காரிலேயே திருச்சிக்குப் புறப்பட்டார். இந்த இரவிலா பயணம்? என்ற போது, காலையிலே வேலை இருக்கிற தண்ணா என்று பாசத்தோடு கெஞ்சிவிட்டுச் சென்றார். அவர் சென்றுவிட்டார், ஆனால் அவர் பத்திரமாக ஊர் சென்று திரும்ப வேண்டுமே என்று நான் கவலைப்பட்டேன். உடன்பிறப்புகள் மீது இவ்வாறு நான் கொண்ட பாசம்தானே, இத்தனை வயதிலும் கழகம், கழகம், கழகம் என்று கவலைப்பட வைக்கிறது. என்னுடைய கவலை இருக்கட்டும்; இதோ ஜனவரி பிறந்து விட்டது; அடுத்த வாரம் பொங்கல்; பின்னர் பிப்ரவரி திங்கள் முதல் வாரத்தில் நம் அண்ணனின் நினைவு நாள்; இப்படியே நாட்கள் ஓடி விடும். பயணம் புறப்படு; பத்திரமாக வந்திடு; உன் வரவுக்காக என் விழிகள் காத்திருக்கும்!

அன்புள்ள,

மு.க.

5-1-2014

3848. தை திங்கள் முதல் நாளே, தமிழர் புத்தாண்டுத் திருநாள்!

உடன்பிறப்பே,

23-1-2008 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையிலே செய்த அறிவிப்பில், திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாகத் தமிழ் அறிஞர்கள் அனைவரும் ஒருமனதாக ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட தி.மு.கழக அரசு முடிவு செய்துள்ளது என்றும், எனவே, பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகப் போற்றிக் கொண்டாடி வரும் தமிழ்நாட்டு மக்கள்; இனி - தமிழ்ப் புத்தாண்டு பிறந்த நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடனும், எழுச்சியுடனும் கொண்டாடும் வகையில், வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி; வண்ண வண்ணக் கோலங்களிட்டு; வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட; புத்தாடை புனைந்து தமிழ் மானம், தன் மானம் போற்றிப் பாடியும், ஆடியும்; சமத்துவ உணர்வு பரப்பியும்; தமிழ்ப்புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிய வேண்டுமென்றும் வெளியிட்டார்.

1939ஆம் ஆண்டு திருச்சியில் அகில இந்தியத் தமிழர் மாநாடு சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. அதில், தந்தை பெரியார், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் உமாமகேசுவரனார், மறைமலை அடிகளார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தமிழ்த் தென்றல் திரு.வி.க., பேராசிரியர் கா.சுப்பிரமணியம், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழவேள் பி.டி.இராஜன், ஆற்காடு ராமசாமி முதலியார், பட்டுக்கோட்டை அழகிரி உட்பட பலரும் பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் அறிவித்தது.

திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர், இளவல் வீரமணி அவர்களோ "தைத் திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்ற நமது நீண்ட நாள் கோரிக்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது. தமிழர் பண்பாட்டு வரலாற்றுத் திசையில் புதியதோர் மறுமலர்ச்சி அத்தியாயம் இது. பாராட்டுகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆளுநரின் அறிவிப்பு வெளிவந்த மறுநாளே தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் விடுத்த அறிக்கையில் "தொன்மைக் காலம் தொட்டே சமயம் சார்ந்தும், இயற்கை வாழ்வு சார்ந்தும், மண்ணும் மனிதர்களும் சார்ந்தும் விவசாய வாழ்வு சார்ந்தும் தைத் திங்கள் முதல்நாளே தமிழர் வாழ்வு சார்ந்த எழுச்சியும் மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற திருநாளாகும். மறைமலை அடிகளார் போன்ற மூத்த தனிப்பெரும் தமிழ் அறிஞர்கள் தைத் திங்கள் முதல் நாளைத் தொடக்கமாய்க் கொண்டு அய்யன் திருவள்ளுவர் பெயரில் தமிழ்ப் புத்தாண்டாய் அறிவித்ததை நடைமுறைப்படுத்த உள்ள முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி, பாராட்டுக்கள்" என்று தெரிவித்திருந்தார்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் விடுத்த அறிக்கையில், "தைத்திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாள் என்று ஆளுநர் உரையில் கலைஞர் அரசு அறிவித்திருப்பது கண்டு உணர்வுமிக்க தமிழர்கள் கொண்டாடிக் கூத்தாடுகிறார்கள். எல்லா தேசிய இனங்களுக்கும் அழிக்க முடியாத சில அடையாளங்கள் உண்டு. தமிழர்களுக்கு நில அடையாளம் இருக்கிறது; இன அடையாளம் இருக்கிறது; ஆனால் கால அடையாளம் மட்டும் குழப்பத்தில் இருந்தது. அந்தக் குழப்ப இருள் உடைந்து விடிந்து இன்று வெளிச்சம் வந்திருக்கிறது. அய்யன் திருவள்ளுவரை கருத்துலகத்தின் அளவுகோலாய்க் காட்டியது திராவிட இயக்கம். இன்று காலத்தின் அளவுகோலாகவும் திருவள்ளுவரைக் கருதச் செய்திருக்கிறது கலைஞர் அரசு. இது சரித்திரத்தைச் சரி செய்யும் சரித்திரமாகும்" என்று எழுதியிருந்தார்.'

கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட இந்த நல் முயற்சிக்கு அ.தி.மு.க. ஆட்சியில் தற்போது ஒரு பெரும் ஆபத்து ஏற்பட்டது. தமிழ்நாட்டுச் சரித்திரத்திலே தமிழையே பகைத்துக் கொள்கிற - செம்மொழி என்றாலே வெறுக்கிற - ஒதுக்குகிற - புறக்கணிக்கிற

ஒரு பிற்போக்குக் கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் காலத்திலும் இப்படி தமிழையே வெறுக்கின்ற புலவர்கள் ஓரிருவர் இருந்திருக்கிறார்கள். இதோ ஒரு கதை!

நக்கீரன் காலத்திலே குயக்கொண்டான் என்று ஒருவர் தமிழ்ச் சங்கத்திலே நடைபெற்ற ஒரு பட்டிமன்றத்திலே "ஆரியம் நன்று, தமிழ் தீது" என்று சொல்ல - உடனே நக்கீரனுக்குக் கோபம் வந்து, "தமிழ் தீதென்றும், வடமொழி நன்று என்றும் சொன்ன நீ, சாகக் கடவாய்" என்று அறம் பாடினாராம். உடனே குயக் கொண்டான் கீழே விழுந்து இறந்து விடுகிறார். உடனே அங்கேயிருந்த சிலர் நக்கீரனைப் பார்த்துக் குயக்கொண்டாரைப் பிழைக்க வைக்கக் கேட்டுக் கொண்டார்கள். அதைக் கேட்ட நக்கீரன், "ஆரியம் நன்று தமிழ் தீ தென்றுரைத்த காரியத்தால் காலன் கோட்பட்டானைச் - சீரிய அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையினால் செந்தமிழை தீர்க்க சுவாகா!" என்று பாட, குயக்கொண்டான் உயிர் பெற்று எழுந்தானாம்.

ஆளுநர் உரையிலே செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அதே ஆண்டில் 29-1-2008 அன்று தமிழ்ப் புத்தாண்டு சட்ட முன் வடிவை பேரவை முன் நான் அறிமுகம் செய்தேன்.

1-2-2008 அன்று இச்சட்ட மசோதா மீதான விவாதம் நடைபெற்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஈ.எஸ்.எஸ்.ராமனும், பா.ம.க. சார்பில் கி.ஆறுமுகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் என்.நன்மாறனும், இந்தியக் கம்யூ னிஸ்ட் சார்பில் வை.சிவபுண்ணியமும், ம.தி.மு.க. சார்பில் மு.கண்ணப்பனும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கு.செல்வமும் அந்த மசோதாவினை மனமார வரவேற்றுப் பேசி அது நிறைவேறியது.

மலேசியா நாட்டில் தமிழர்கள் தை முதல் நாளையே புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்கள். டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், "முன் காலத்தில் வருடப் பிறப்பு சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல் நாளைத்தான் வருடப் பிறப்பாகப் பெரியோர் கொண்டாடினர். அந்த நாளில் புதிய ஆடைகளை வாங்கி உடுப்பார்கள். தெருவில் புது மண் போட்டு, செம்மண் இட்டு, ஒழுங்கு செய்வார்கள். ஊரெல்லாம் திருவிழா நடத்து வார்கள். இப்படி நகரங்களில் புத்தாண்டு பிறப்பாகப் பொங்கல் கொண்டாடுகிறார்கள்" என்று விளக்கியுள்ளார்.

இப்படியெல்லாம் போற்றப்பட்ட, பாராட்டப்பட்ட ஒரு முடிவு நடைமுறைப்படுத்தப்பட தி.மு. கழக ஆட்சியிலே சட்டமாகக் கொண்டு வரப்பட்டு 2008ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தது. தி.மு. கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது என்றால் இருக்கலாமா என்று ஆத்திரத்தோடு அதற்கு முடிவு கட்ட அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு மசோதா பேரவையிலே அறிமுகப்படுத்தப்பட்டது. மசோதாவை அவையிலேயே இரண்டு கம்யூனிஸ்ட்களும் எதிர்த்தார்கள் என்ற தகவலைச் செய்தியாளர்கள் என்னிடம் தெரிவித்து அதுபற்றிக் கருத்துக் கேட்டபோது "அவர்களின் தமிழ் உணர்வுக்குத் தலை வணங்குகிறேன்" என்று பதில் கூறினேன். பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் விடுத்த அறிக்கையில் அ.தி.மு.க. அரசின் அந்த முடிவு தமிழ் உணர்வாளர்களை வேதனைப் படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்றும் திடீரென்று தமிழ்ப் புத்தாண்டை மீண்டும் சித்திரை மாதத்துக்கு மாற்றுவது முறையல்ல என்றும் அது மிகப் பெரிய வரலாற்றுப் பிழையாக அமைந்துவிடும் என்று கூறினார். தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்களும் இந்த முடிவினை வன்மையாகக் கண்டித்துச் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்திருக்கிறார்.

இன்னும் சொல்ல வேண்டுமேயானால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களே,

"நித்திரையில் இருக்கும் தமிழா!
சித்திரையல்ல உனக்குத் தமிழ்ப் புத்தாண்டு
தரணியாண்ட தமிழருக்கு
தைம்முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு!"

என்று பாடியதையும் நினைவுகூர விரும்புகிறேன்.

தைத் திங்கள் முதல் நாளை - தமிழர் திருநாளாக - தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கழக ஆட்சியில் ஆர்வத்தோடு சிறப்பாகச் செய்தோம். ஆனால் 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், கழக அரசின் மற்ற திட்டங்களுக்கு காழ்ப்புணர்வு மிகக் கொண்டு மூடுவிழா நடத்தியதைப் போல, தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தினம் என்பதை மாற்றிவிட்டு, சித்திரைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று

புரட்டிப் போட்டு மாற்றுகின்ற வகையில் மசோதா ஒன்றினைச் சட்டப்பேரவையிலே கொண்டு வந்து நிறைவேற்றினார்கள்.

அதன் மூலமாகத் தி.மு. கழகத்திற்கோ அது நடத்திய ஆட்சிக்கோ அவமானமா என்றால் இல்லை. அ.தி.மு.க. அரசின் திரிபுவாத மசோதாவினால் தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்ற பழம் பெரும் வரலாறு பொய்த்துப் போய்விடுமா? நம்மைப் பொறுத்த வரையில் பொங்கல் திருநாளை "தமிழர் திருநாள்" என்று நாம் கொண்டாடுகிறோம். இனியும் கொண்டாடுவோம். ஆண்டுக் கணக்கிலே ஆங்கிலேயர்களுடைய முதல் நாளை அவர்கள் கொண்டாடுவதைப் போல, நாமும் நம்முடைய ஆண்டு முதல் நாளை, விழா எடுத்துக் கொண்டாட வேண்டும். தமிழ் இனப் பகைவர் எப்படி வேண்டுமானாலும் செய்து விட்டுப் போகட்டும். நம்மைப் பொறுத்த வரையில், உண்மையான உணர்வுமிக்க தமிழர்களைப் பொறுத்தவரையில், தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு தொடங்கும் நாள். அதேநேரத்தில், நான் ஏற்கனவே தெரிவித்தவாறு, சித்திரைத் திங்கள் முதல் நாளில் விழா கொண்டாடுவோரை, நாம் வேண்டாமென்று தடுக்க மாட்டோம். நம்மைப் பொறுத்தவரையில் தைத்திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடிடுவோம். அன்றையதினம் ஆங்காங்கு மின் விளக்குகளைத் தோரணமாக்கி, மின்மினி மின்னுவதைப் போல எல்லா மரங்களிலும் விளக்குகளைத் தொங்க விட்டு, கடைகளின் முகப்புகளில் எல்லாம் கண்கவர் அலங்காரம் செய்து, ஒவ்வொரு வீட்டிலும், எழில் குலுங்கச் சிங்காரித்து இந்நாளை ஏற்றமுடன் கொண்டாடிடுவோம். ஏழை, பணக்காரர் வேறுபாடு ஏதுமின்றி அனைவரும் சமத்துவம் கமழ்ந்திட இந்நாளைத் தமிழர் திருநாளாகப் புத்தாடை உடுத்திப் புத்துணர்வுடன் விழா எடுத்திடுவோம். தைத் திங்கள் முதல் நாளே, தமிழர் புத்தாண்டுத் திருநாள் என்பதைத் தரணி அறிய நிலைநாட்டிடுவோம்.

அன்புள்ள,

மு.க.

11-1-2014

3849. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (3)

உடன்பிறப்பே,

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17இல் கழகம் பிறந்த பிறகு, அதற்கும் 1951ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் தேதி முதல் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்ற தற்கும் இடையில் இரண்டாண்டு காலத்தில் மட்டும் 12 கழக மாநாடுகள் நடைபெற்றன. மாவட்ட மாநாடுகள் என்ற வகையில் பார்த்தாலும் கூட, தி.மு. கழகத்தின் முதல் மாநாடு, திருச்சி மாவட்ட தி.மு.கழக மாநாடு 1950ஆம் ஆண்டு இதே ஜனவரி முதல் நாள் அன்று திருச்சியிலே தான் நடைபெற்றது. எனவே தி.மு. கழகத்தின் முதல் மாநாட்டினை, கழகம் மூன்று மாதக் குழந்தையாகத் தவழ்ந்து கொண்டிருந்தபோதே, நடத்திய பெருமையும் திருச்சிக்குத்தான் உண்டு. தற்போது கழகம் 64 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில், பத்தாவது மாநில மாநாட்டை நடத்துகின்ற பட்டொளி வீசிடும் பெருமையும் திருச்சிக்கே கிடைத்துள்ளது. மேலும் திருச்சியில் நடைபெற்ற அந்த முதல் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய “சந்திரமோகன்” நாடகம் நடைபெற்றது. அண்ணா அவர்களே அதில் நடித்தார் என்பது சரித்திரம்.

1951ஆம் ஆண்டு சென்னையில் முதல் மாநில மாநாட்டை அண்ணா முன்னின்று நடத்திய போது, மாநாட்டை நடத்துவதற்கு செலவுக்குப் பணம் திரட்ட வேண்டிய பெரும் பணி அண்ணா அவர்களுக்கும், எங்களுக்கும் ஏற்பட்டது. அப்போது ஒவ்வொரு நாளும் அண்ணா அவர்கள் சென்னையிலே தோழர்களோடு அமர்ந்து மாநாட்டுப் பந்தல் வேலைகளை அவரே நேரடியாகக் கவனித்துக் கொண்டிருக்கிறபோது, சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு செங்கற்பட்டு

மாவட்டத்தில் கூட்டங்களுக்குத் தேதி தந்து, ஒவ்வொரு கூட்டத்திலும் இருநூறு ரூபாய் மாநாட்டு நிதியாக அன்றைக்கு வாங்கித் தருவார். ஒரு நாளைக்கு ஏழு கூட்டம், எட்டு கூட்டம் இருக்கும். கூட்ட முடிவில் மொத்தமாகக் கிடைப்பது ஆயிரத்து அறுநூறு அல்லது ஆயிரத்து எண்ணூறு ரூபாய் என்ற அளவில் நிதி திரளும். விடியற்காலை இரண்டு அல்லது மூன்று மணிக்குத் தான் இரவு சாப்பாடு போடுவார். நானும், சி.வி.எம். அவர்களும் அந்தக் கூட்டங்களையெல்லாம் முடித்து விட்டு ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் பணத்தோடு நேராக எஸ்.ஐ.ஏ.ஏ. திடலுக்குத்தான் வருவோம். அங்கே மாநாட்டுக்காகக் குவிக்கப்பட்டிருந்த மணலிலே அண்ணா அமர்ந்திருப்பார். தோழர்கள் சுற்றிலும் அமர்ந்திருப்பார்கள்; நாவலர், பேராசிரியர், ஈ.வி.கே. சம்பத், நாஞ்சிலார் என்று இவர்கள் எல்லாம் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். அண்ணாவிடம் பெருமையோடு பணத்தைக் கொடுப்போம். அண்ணா பணத்தை வாங்கிக் கொண்டு; "எங்கே உணவருந்தினீர்கள்?" என்று கேட்பார். "உத்திர மேரூரில் அண்ணா" என்று சொல்வேன். "என்ன சாப்பாடு?" என்று கேட்டு விட்டு, நான் பதில் கூறுவதற்குள் அண்ணாவே, "அண்ணா மலைக்கு வேண்டியதையெல்லாம் உன் பெயரைச் சொல்லி தயாரித்து வைக்கச் சொல்லி யிருப்பாரே?" என்று வேடிக்கையாகச் சொல்வார்.

1950ஆம் ஆண்டு ஜனவரியில் திருச்சியில் முதல் மாநாட்டினை நடத்திய தி.மு. கழகம், அதே ஜனவரி 21ஆம் தேதி சென்னையில் மாவட்ட முதல் மாநாட்டினையும், 29ஆம் தேதி கோவையில் அந்த மாவட்ட முதல் மாநாட்டினையும் நடத்தியது. 1950ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் தேதியன்று தி.மு. கழக மகளிர் மாநாடு ஒன்று சென்னையில் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் தலைமையில் நடைபெற்றது. அதே ஆண்டு சூன் 10ஆம் தேதியன்று மதுரை மாவட்ட முதல் மாநாடும், ஆகஸ்ட் 26, 27 ஆகிய நாட்களில் நெல்லை மாவட்ட முதல் மாநாடும், நவம்பர் 8ஆம் தேதியன்று சென்னை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடும், டிசம்பர் 23, 24 ஆகிய நாட்களில் செங்கை மாவட்ட முதல் மாநாடும், டிசம்பர் 29, 30 ஆகிய நாட்களில் குமரி மாவட்ட முதல் மாநாடும், 1951ஆம் ஆண்டு

மார்ச் 3, 4 ஆகிய நாட்களில் தஞ்சை மாவட்ட முதல் மாநாடும், அதே ஆண்டு மே 5, 6 ஆகிய நாட்களில் சேலம் மாவட்ட முதல் மாநாடும், அதே ஆண்டு ஜூலை 29ஆம் தேதியன்று திண்டுக்கல்லில் எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாடும் நடைபெற்ற பிறகு தான் டிசம்பரில் சென்னையில் முதல் மாநில பொது மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாடுகளில் 1950ஆம் ஆண்டு ஆகஸ்டு 26, 27 ஆகிய நாட்களில் நடைபெற்ற நெல்லை மாவட்ட முதல் மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பொறுப்பினை அண்ணா அவர்கள் எனக்கு வழங்கினார். இன்றைய அமைப்புச் செயலாளர் தம்பி டி.கே.எஸ். இளங்கோவன், எம்.பி.யின் அருமைத் தந்தையாரும், தொலைவிலிருந்து ஒலி பெருக்கியில் பேச்சைக் கேட்டால், அண்ணா அவர்கள் பேசுவதைப் போலவே தெரிகின்ற அளவிற்கு பேசக்கூடிய ஆற்றலாளருமான தத்துவமேதை டி.கே. சீனிவாசன்தான் அந்த மாநாட்டின் திறப்பாளர். நான் தலைமையேற்று நடைபெற்ற முதல் மாநாடும் அதுதான். அப்போது என்னுடைய வயது 26 தான்.

எனது தலைமை உரையில், "என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதன் நோக்கம், இயக்கம் இளைஞர்களின் சொத்து, உழைப்பாளிகள் அமைத்த மாளிகை, அதில் உல்லாசபுரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும், நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக் கருத்துக்களை நடமாட விடுபவர்களுக்கும் எடுத்துக் காட்டத்தான் என்றே நான் கருதுகிறேன். நாடு நம்மைத்தான் எதிர்பார்த்து நம்பிக் கிடக்கிறது. நாம் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையையும் காதைத் தீட்டிக் கொண்டு நாடு கவனிக்கிறது. இந்திய உபகண்டத்திலேயே நாம் பெரிய கட்சிகளில் ஒன்றாகி விட்டோம். வேறு எந்தக் கட்சிக்கும் இளைத்தவரல்ல நாம்; காங்கிரஸ் கட்சிக்கு இருக்கும் மதிப்பை விட, சோஷியலிஸ்டுகளைப் பற்றிய அபிப்பிராயத்தை விட, இந்து மகா சபைக்குக் காட்டப்படும் ஆதரவை விட, கம்யூனிஸ்டுகளிடம் காட்டப்படும் அக்கறையை விட, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதிகமாகவே வரவேற்பு இருக்கிறது தென்னாட்டில்! இன்னும் சொல்ல வேண்டுமானால் தென்னாட்டிலேயே சிறந்த

பேச்சு வீரர்களையும், சிந்தனையை அள்ளி வீசும் புத்துலகச் சிற்பிகளையும் கொண்டு, கடமை ஆர்வத்துடன் ஓயாது பாடுபடும் கழகம் நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று மட்டுந்தான்.

நாம் வளர்ந்திருக்கிறோம், வளர்ந்து கொண்டே இருக்கிறோம். நாம் நீதி, நேர்மைக்காகப் போராடுபவர்கள். கஷ்டங்களைப் புன்சிரிப்போடு ஏற்று, பொதுப்பணி புரிந்து வருபவர்கள். நமது கொள்கைகள் நாட்டின் நலிவைத் தீர்ப்பவை, நல்வாழ்வு தருபவை. கல்லடியும் சொல்லடியும் பட்ட காலத்திலே கரையாதது நமது இயக்கம்-பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்திலே இறந்து போகாத இயக்கம்-மடாதிபதிகளின் எதிர்ப்பு, மகந்துகள் ஜீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டு போகாத இயக்கம்-பதவியும் பட்டமுமே தேவை என்பவர்களின் பாசக் கயிற்றிலிருந்து விடுபட்ட இயக்கம் - சொந்த வாழ்வும் சுயநலமுமே பெரிதென்போரின் பேய்ப் பிடியிலிருந்து தப்பிய இயக்கம் - கொள்கைக்காக வாழ்ந்த நாகை மணியை, மாயவரம் நடராசனை, ஆரூர் வி.எஸ். இராமனை, அழகிரிசாமியை அணைத்திருந்த இயக்கம் - மொழிக்காக உயிர் விட்ட தாளமுத்து நடராசன்களைக் கொண்டிருந்த இயக்கம் - கொள்கைக்காக மரத்திலே பிணமாக ஊஞ்சலாட்டப்பட்ட உடையார்பாளையம் வேலாயுதங்களை உற்பத்தி செய்யும் இயக்கம் - மதுரை மாநாட்டுத் தீயைக் கண்டு மனங் கலங்காத இயக்கம் - குடந்தைத் தெருவினிலே குருதி வெள்ளத்தைக் கண்டு குலை நடுங்காத இயக்கம் - இராம காவியம் இழுக்குடையது என்பதை எடுத்துக்காட்டி பாரதியார்களை, சேதுப் பிள்ளைகளை சொற்போரிலே வெற்றி கண்ட இயக்கம் - ஆறிலும் சாவுதான், நூறிலும் சாவுதான், ஆனது ஆகட்டும் என்று பாடிவரும் ஆயிரமாயிரம் தம்பிகளைப் பெற்றுள்ள இயக்கம் - தம்பிகளின் நெஞ்சைத் தட்டிப் பார்த்து "உறுதியானதுதானா இது" என்று உணர்ந்து அறப்போருக்கு உரிய காலம் பார்த்திருக்கும் உலக அறிஞர்களில் ஒருவராம் அண்ணாவைப் பெற்றிருக்கும் இயக்கம் - குள்ளநரிக் கூட்டத்தின் குடல் கிழிக்கும் கூற்றம் - குமுறும் எரிமலை புதுவைக் கவிஞர் பாரதிதாசனைப் பெற்றுள்ள இயக்கம் - அன்று முதல் இன்று வரை அடுக்கடுக்கான ஆபத்துக் களைத் தாங்கி, அவைகளைத் தாண்டி, நாம் வளர்ந்து வந்துள்ளோம். இந்தப் பதினொரு மாதங்களிலே ஐநூறுக்கு மேற்பட்ட கிளைக்

கழகங்கள் - ஆறு மாவட்ட மாநாடுகள் - தினசரி நம் கொள்கைகளை அக்கறையோடு கேட்கிற பல்லாயிரக்கணக்கான மக்கள், யாரால் எந்தக் கட்சியால் இதுபோல முடிந்தது என்கிறார்கள். நம் வளர்ச்சி கண்டு நாமே பூரிக்கிறோம்" என்றெல்லாம் இயக்கத்தின் வளர்ச்சி பற்றி கோவில்பட்டி மாநாட்டில் என் தலைமையுரை யில் குறிப்பிட்டேன். நீண்ட பேச்சு, முழுவதும் வெளியிட இதில் இடம் போதாது.

மாநாட்டுத் தலைவன் என்ற முறையில் கழகத்தின் அமைப்புகள், சிற்றூர்க் கிளை, நகரக் கிளை, வட்டக் கிளை, மாவட்டக் கிளை, தலைமைக் கழகம் என்கிற அளவில் பரவலாக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு அமைப்புக்கும் தொடர்பு இருக்க வேண்டுமென்றும், தலைமைக் கழகத்தின் தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்ட உடனேயே அவைகள் சிற்றூர்க் கிளைகளுக்குச் சென்றடைகிற அளவிற்கு எல்லா மட்டத்திலும் உள்ள அமைப்புகளுக்கு இடையே ஒரு சங்கிலித் தொடர்பு இருக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டேன். மேலும் தமிழகம் புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக் காட்டி, இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதன் அடையாளமாக கழகம் போராட்டங்களை வகுக்க வேண்டுமென்றும் எடுத்துச் சொன்னேன். இறுதியாகப் பேசிய அண்ணா அவர்கள் என் தலைமை உரையில் குறிப்பிட்ட குறைபாடுகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு, நான் கேட்டுக் கொண்டவாறு போராட்டத் திட்டங்களை அந்த மாநாட்டிலேயே வெளியிட்டார். 26 வயதிலே நான் ஆற்றிய என் உரையை பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய "திராவிட நாடு" இதழில், முதல் பக்கத்தில் என்னுடைய புகைப்படத்தோடு சேர்த்து வெளியிட்டார். அந்த இதழில் வெளிவந்த என் படம்தான் இந்தக் கடிதத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில் "திராவிடத்தின் உலகத் தொடர்புகள்" என்று தலைப்பு கொடுக்கப்பட்டு, அந்தத் தலைப்பின் மீது நான் பேசினேன். அந்தக் காலத்திலேயே நம்முடைய கழக மாநாடுகளில்தான் இவ்வாறு தலைப்புகள் தரப்பட்டு பேசப்படும். எனக்குத் தந்த தலைப்பின் மீது நான் பேசும் போது, "மலேயா ரப்பர் தோட்டங்களில், சிலோன் தேயிலைக் காடுகளில், ஆப்பிரிக்கச் சுரங்கங்களில் திராவிடர்கள்

அவதியுறுகிறார்கள்; விலங்குகளைப் போல் நடத்தப்படுகிறார்கள்; சாக்கடை ஓரங்களில் வசிக்கிறார்கள்; மாடுகளைப் போல் உழைக்கும் கூலிகளாயிருக்கிறார்கள்; அந்தந்த நாடுகளில், கேவலமான நிலைகளுக்கு ஆளாக்கப்பட்டு, உரிமை யிழந்து தவிக்கிறார்கள்; கண்ணீர் வடிக்கிறார்கள்; இதுதான் திராவிடத்தின் இன்றைய உலகத் தொடர்பு" என்பதுதான் என் பேச்சின் துவக்கம்.

மேலும் அந்தப் பேச்சில், "நேற்று வாழ்ந்தோம் - இன்று தாழ்ந்தோம் - நாளை வாழ்வோம் - அதற்காக வாளெடுப்போம்! சூளுரைப்போம்! அதற்காகவே இங்கு திருச்சிதனில் - தீரர்கள் உலவும் பூமியில் - மாநில மாநாட்டில் கூடியிருக்கிறோம்" என்றெல்லாம் இரண்டா வது மாநில மாநாட்டில் குறிப்பிட்டேன். இப்போது

மாநாடு நடைபெறும் இடம் அதே திருச்சி. அப்போது 1956இல் நான் பேசியது, இப்போதும் பொருந்தி வருவதைப் போல் என் பேச்சு அமைந்திருக்கிற தல்லவா? எனவேதான் இதை நினைவுபடுத்துகிறேன்.

திருச்சியில் நடைபெறும் இந்தப் பத்தாவது மாநில மாநாடு பற்றி தம்பி கவிதைப்பித்தன் எழுதிய அருமையான கவிதை ஒன்றில்,

"மனம் நிறைந்த கழகத்தின் மாநாட்டு வரலாற்றில்
நினைவுகளின் கல்வெட்டாய் நிலைக்கவரும்
மாநாடு!
முனைமழுங்கிப் போய்விட்ட மூளை மடிப்புகளில்
இனஉணர்வுக் கனல்மூட்டும் எழுச்சிமிகு மாநாடு!
காடுகளாம் முட்புதராய் கள்ளிமண்டிக் கிடந்த மணல்
மேடுகளைச் சீராக்கி, மிகப் புதிய ஊராக்கிப்
பீடு மிகும் "இரட்டைமலைப்" பின்னணியில்,
மலைகளுக்கும்
ஈடுதந்தே எழுந்துநின்று எழில்குலுங்கும் மாநாடு!
இருள்மண்ட பம்போல இடர்சூழ்ந்த தமிழ்நாட்டில்

மருள்மண்டும் நிலைமாற்றி மயக்கம்ஒழித்தே,

திருச்சிக்

“கருமண்ட பம்” அருகில் கதிரவனின் ஒளியேற்றிப்

“பிராட்டியூர் பெருமையினைப் பெறப் போகும்

மாநாடு”

என்றெல்லாம் வளஞ்செறிந்த வார்த்தைகளால் இந்த மாநாட்டிற்கு மாலை தொடுத்திருக்கிறார்.

இதே திருச்சி மாநகரில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில், அண்ணா அவர்கள் உரையாற்றும் போது, “இந்த மாநில மாநாட்டில் கூடியிருக்கிற நீங்கள், 4000 அடி உயரத்திலே இருக்கிற வால்பாறையிலே இருந்தும், நெடுந்தொலைவிலே இருக்கிற தூத்துக்குடித் துறைமுகப்பட்டினத்திலே இருந்தும், தலைநகரம் என்று கருதப்படும் சென்னை நகரத்திலே இருந்தும், இவை எல்லாவற்றிலும் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய சிற்றூர்களிலேயிருந்தும் இலட்சக்கணக்கில் இங்கே திரண்டிருக்கிறீர்கள். நான், நாட்டைப் பார்த்தும், நாட்டை ஆளுகிற ஆட்சியாளர்களைப் பார்த்தும் கொஞ்சம் ஆணவத்தோடு கூட நினைவுபடுத்த விரும்புகிறேன். “சென்னையில் நாங்கள் கூட்டிய மாநில மாநாட்டில் ஒரு இலட்சம் மக்கள் கூடினார்கள்; நாங்கள் இப்போது அடைந் திருக்கிற வளர்ச்சியை நீங்கள் காண வேண்டு மானால், திருச்சியில் நடைபெறவிருக்கிற மாநில மாநாட்டில் மூன்று இலட்சம் மக்களை நாங்கள் கூட்டிக் காட்டுகிறோம்” என்று நான் அப்போதே கூறினேன். சொல்லிவிட்ட பிறகு, எனக்கே கூடக் கொஞ்சம் சந்தேகம் வந்தது “சற்று அதிகமாகக் கூறி விட்டோமோ” - என்று! இன்று நாம் பார்க்கிற இடங்களில் எல்லாம் தி.மு.க. தோழர்களைத்தான் பார்க்கிறோம். “இந்த மாநில மாநாட்டுப் பெருந்திடலில் மட்டுமல்ல, திடலில் இருந்து திருச்சி கோடி வரை ஆறு; ஏழு மைல் தொலைவில் உள்ள இடங்களில் எல்லாம் - நெடுஞ்சாலைகளில் எல்லாம் நம்முடைய தோழர்கள் நிரம்பியிருப்பதை நாம் காண்கிறோம்” என்று குறிப்பிட்டார்.

இரண்டாவது மாநில மாநாட்டிலேயே மூன்று இலட்சம் பேரைக் கூட்டிக் காட்டுகிறோம் என்று நம்முடைய தலைவர்

அண்ணா அவர்கள் அப்போதே தெரிவித்துவிட்ட பிறகு, இது பத்தாவது மாநில மாநாடு அல்லவா? பத்து இலட்சம் போராவது நாம் திரண்டிட வேண்டாமா? நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர்கள் மாவட்டக் கழகக் கூட்டங்களை நடத்திய பிறகு "முரசொலி"யில் தந்திருக்கின்ற செய்தியில் "இந்த மாநாட்டில் எங்கள் மாவட்டத்தின் சார்பில் இத்தனை ஆயிரம் பேர் கலந்து கொள்வோம்" என்கிறார்கள்; ஒவ்வொரு அணியின் சார்பிலும் அவ்வாறே தெரிவிக்கிறார்கள். அந்தக் கணக்கையெல்லாம் சேர்த்தால் பத்து இலட்சம் பேர் திரண்டிட மாட்டீர்களா?

பந்தல் வேலையில் முனைப்பாக ஈடுபட்டிருக்கிற வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி கே.என்.நேரு, "தலைவர் பத்து இலட்சம் பேர் என்று சொல்லி விட்டாரே, அதற்கான பந்தலை நாம் அமைக்க வேண்டாமா?" என்று முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டாமா? அதற்காகத்தான் அண்ணா கூறியதை எடுத்துக்காட்டிக் குறிப்பிட்டேன். மேலும் நம்முடைய பொருளாளர் தம்பி ஸ்டாலின், பந்தல் வேலை நடக்கிறபோதே, திருத்தங்களைச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே இடத்தைப் பார்வையிட்டுவிட்டு, செய்தியாளர்களிடம் கூறும்போது "மாநாட்டின் பந்தல் 1100 அடி நீளமும், அகலம்

600 அடியிலும் அமையும். மேடை அமைப்பு 200 அடிக்கு 80 அடியில்! ஓலை முகப்பு ஒன்று அமைக்கப்படவுள்ளது. கொடிக்கம்பம் தலைவர் கலைஞர் அவர்களின் வயதையொட்டி 90 அடி உயரத்தில் அமைக்கப்பட வுள்ளது. கழகத் தோழர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியாக 100 ஏக்கர் நிலம் தயார் செய்யப்பட்டு வருகிறது. மொத்த மாநாட்டின் பரப்பளவு 200 ஏக்கர். தொண்டர்கள் வருவதற்கு வசதியாக மூன்று பெரிய பாதைகளும், அவர்கள் தங்குவதற்கு 100க்கும் மேற்பட்ட திருமண மண்டபங்களும் ஏற்பாடு செய்யப் பட்டு வருகின்றன. இந்த மாநாட்டுப் பந்தலுக்குள் குறைந்தபட்சம் 5 லட்சம் பேரும், பந்தலைச் சுற்றி 5 லட்சம் பேரும் ஆக மொத்தம் இந்த வெற்றி மாநாட்டிற்கு பத்து இலட்சம் பேர் வந்து செல்லும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்றெல்லாம் அவரே தெரிவித்துவிட்ட பிறகு நான் அந்த எண்ணிக்கையைக் குறைக்கலாமா? எனவே பத்து இலட்சம் பேர் திருச்சி மாநாட்டில்

திரண்டிடுவர் என்பதில் ஐயமில்லை. அந்த பத்து இலட்சம் பேரில் நீயும் ஒருவனாக இடம் பெற வேண்டாமா? அதற்கு ஆயத்தமாகி விட்டாயா என்பதை நினைவூட்டுவது என் கடமை அல்லவா? இன்று ஜனவரி 12ஆம் தேதி! அடுத்த பிப்ரவரி 15ஆம் தேதி மாநாடு! இன்னும் ஒரே திங்கள்தான்!

அனபுள்ள,

மு.க.

12-01-2014

(தொடரும்)

3850. அம்மாவின் வார்த்தைகள்; “அம்மா”வுக்கே வெளிச்சம்!

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கொடநாட்டிலிருந்து ஆட்சிப் பணி நடத்தத் தொடங்கி இன்றுடன் 20 நாட்களாகிறது. இன்னும் எத்தனை நாட்களோ? எப்படியும் ஜனவரி 26ஆம் தேதியன்று குடியரசு தின விழாவில் கலந்துகொள்ள தலைநகருக்குத் திரும்பி விடுவார் என்று எதிர்பார்க்கலாம். 23ஆம் தேதி ஆளுனர் உரை என்று செய்தி வந்துள்ளது. ஒருவேளை தமிழகச் சட்டப்பேரவை ஓமந்தூரார் வளாகத்திலே உள்ள புதிய இடத்திலே நடந்ததை, பழைய இடத்திற்கு மாற்றியதைப் போல, ஆளுநர் உரையைக்கூட கொட நாட்டிற்கு மாற்றுவார்களோ என்னவோ?

இந்த நிலையில் “சென்னை”யிலிருந்து வெளிவந்ததைப் போலக் குறிப்பிட்டு, முதலமைச்சர் பெயரால் ஓர் அறிக்கை வெளிவந்துள்ளது. அதில் வரும் 20ஆம் தேதி இந்திய மீனவர்களும், இலங்கை மீனவர்களும் சந்தித்துப் பேசுவார்கள் என்றும், இலங்கைச் சிறையில் வாடும் தமிழக மீனவர்கள் 275 பேரும் ஓரிரு நாளில் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அறிவித்திருக்கிறார். இந்தச் செய்தியை; நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, நான் சொன்னதின் பேரில், கடந்த மாதம் தமிழக மீனவர்களின் பிரதிநிதிகளை டெல்லியில் பிரதமரை 27.12.2013 அன்று சந்திக்க வைத்தபோதே, பிரதமர் ; மீனவர் பிரதிநிதிகளிடமும், டி.ஆர். பாலுவிடமும் ஜனவரி மாதம் 20ஆம் தேதி வாக்கில் இரண்டு நாட்டின் மீனவர்களின் பிரதிநிதிகளும் சந்திப்பார்கள் என்று பிரதமர் உறுதி கூறி, அந்தச் செய்தி அனைத்து ஏடுகளிலும் அப்போதே வெளிவந்து விட்டது. அந்தச் செய்தியைத்தான் பதினைந்து நாட்கள் கழித்துத் தமிழக முதலமைச்சர் அறிக்கையாகத் தெரிவித்திருக்கிறார். ஒருவேளை

பிரதமர் அறிவித்த செய்தியைத் தமிழக முதல்வர் கொடநாட்டில் இருந்த காரணத்தால் படிக்க வில்லையோ என்னவோ?

எப்படியோ அந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்று, நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு ஏற்பட்டாக வேண்டும். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன்பாக, இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டு, தொடர்ந்து காவல் நீடிக்கப்பட்டு, அங்கே சிறையில் இருக்கும் அனைத்து இந்திய மீனவர்களும் அந்த அரசினால் விடுதலை செய்யப்பட வேண்டும். பேச்சுவார்த்தையின்போது ஒரு சுமூகமான முடிவுக்கு வர அது மிகவும் உதவியாக இருக்கும். தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர், நிச்சயமாக அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று இன்றைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். இந்தத் தகவல் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை. மத்திய அரசிடமிருந்து வந்ததா? அல்லது இலங்கை அதிபர் ராஜபக்ஷேவிடமிருந்து நேரடியாக வந்ததா?

முதலமைச்சர் ஜெயலலிதா தனது அறிக்கையில் மீனவர்களுக்கு அ.தி.மு.க. அரசு செய்த உதவிகளையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். அவ்வாறு மீனவர்களுக்குச் செய்த உதவிகளை நினைவூட்ட வேண்டுமேயானால், கழக ஆட்சியில், மே 2006 முதல் ஜனவரி 2011 வரை 88 கோடியே 57 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் நிவாரணம் - நிவாரணத் தொகை 1,200 ரூபாயிலிருந்து 1,800 ரூபாயாக உயர்வு - மீனவ மகளிருக்கு 61 கோடியே 57 லட்சம் ரூபாய் நிவாரணம் - மீன் பிடிப்பு தடைக் காலத்தில் 14 கோடியே 33 இலட்ச ரூபாய் நிவாரணம் - உயிரிழக்க நேரிடும் மீனவர் குடும்பத்திற்கு நிவாரணம் 3 லட்சம் ரூபாயாக உயர்வு - மா. சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 21 கோடியே 12 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு - 27 கோடி ரூபாய்ச் செலவில் குளச்சல் மற்றும் தேங்காய்பட்டினத்தில் மீன் பிடித் துறைமுகங்கள் - 50 கோடி ரூபாய்ச் செலவில் நாகை மாவட்டம் பூம்புகாரில் மீன் பிடித் துறைமுகம் - தமிழ்நாடு மீனவர் நல வாரியம் உருவாக்கப்பட்டு, 4 கோடியே 52 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி என்று நான் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஆனால் முதலமைச்சர் விடுத்த அறிக்கையில் வழக்கம்போல என்னைப் பற்றியும் பல கண்டன விமர்சனங்களைத்

தேவையில்லாமல் செய்திருக்கிறார். மீனவர் பிரச்சினை பற்றி 7-1-2014 அன்று முதலமைச்சர், இந்தியப் பிரதமருக்கு கடிதம் வாயிலாக விடுத்த வேண்டுகோளைப் பற்றி நான் குறிப்பிடும்போது; **"மத்திய அரசின் சார்பில், இரண்டு நாடுகளின் மீனவர் பிரதிநிதிகளைச் சந்திக்க வைக்க நாள் குறிப்பிட வேண்டு மென்று தமிழக அரசுக்குக் கடிதம் எழுதி யிருப்பதாகவும், தமிழக அரசிடமிருந்து பதில் வரவில்லை" என்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறாரே, அதற்கு முதல் அமைச்சரின் பதில் என்ன** என்று நான் கேட்டதற்கு, "குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதுபோல" என்ற பழமொழி அம்மையாருக்கு நினைவிற்கு வருவதாகத் தெரிவித்திருக்கிறார். இது குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கின்ற பிரச்சினை அல்ல, நடுக் கடலிலே மீன் பிடிக்கின்ற பிரச்சினை என்பதை முதல்அமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும்.

குழம்பிய குட்டையில் நான் மீன் பிடிக்கவில்லை; 7-1-2014 அன்று "Headlines Today" என்ற தொலைக்காட்சி நிறுவனம், "தமிழக மீனவர் பிரச்சினையை வாக்குகள் பெறுவதற்காக ஜெயலலிதா பயன்படுத்திக் கொள்கிறார்" என்ற தலைப்பிலே வெளியிட்டுள்ள செய்திக்கு ஏன் பதில் கூறவில்லை? அந்தத் தொலைக்காட்சி நிறுவனம் தி.மு.க. சார்பிலே நடத்தப்படுகின்ற நிறுவனமா? பொதுவாக நடக்கின்ற தனியார் நிறுவனம்தானே! அந்த நிறுவனம் சாட்டியுள்ள குற்றச்சாட்டினை எடுத்து நான் தெரிவித்தேனே தவிர, உண்மையில் குற்றம் கூறியது அந்தத் தொலைக்காட்சி நிறுவனம் அல்லவா? முதலமைச்சர் அதற்கு அல்லவா பதில் கூற வேண்டும்! அதற்குப் பதில் கூறாமல் நான் ஏதோ மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்குவதாக ஜெயலலிதாதன் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். நான் மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்கவில்லை. தாமதத்திற்குக் காரணம் தமிழக அரசுதான் என்று எடுத்துக்காட்டினேனே தவிர வேறல்ல.

மீனவர் பிரச்சினையில் தான் ஏதோ செய்து கிழித்துவிட்டதாக முதல்அமைச்சர் அறிக்கை விட்டிருக்கிறாரே, இரண்டு நாடுகளின் மீனவப் பிரதிநிதிகள் கூட்டத்தைத் தாமதம் செய்தது யார்? அதைத்தானே அந்தத் தொலைக்காட்சி நிறுவனம் கேட்டிருக்கிறது. "மத்திய அரசு மீது ஜெயலலிதா குறை சொல்லி வருகிறார், ஆனால் அதே நேரத்தில் ஜெயலலிதாவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் காலதாமதம் செய்து வருகிறார். 16.3.2013 லிருந்து

இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், மீனவர் பிரச்சினை குறித்து, தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு 11 கடிதங்கள் எழுதியிருக்கிறார். இந்திய மீனவர் பிரதிநிதிகளும், இலங்கை மீனவர் பிரதிநிதிகளும் சந்தித்து, இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதுவாகக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு, தமிழக முதலமைச்சர் ஒத்துழைத்திட வேண்டுமென்று, தான் எழுதிய பெரும்பாலான கடிதங்களில் பிரதமர் வலியுறுத்தியிருக்கிறார்" என்றெல்லாம் அந்தத் தொலைக்காட்சி நிறுவனம் சுட்டிக்காட்டியிருக்கிறதே, இது உண்மையா? அல்லவா? உண்மை என்றால், மீனவர் பிரச்சினையில் இவ்வளவு காலதாமதம் செய்தது யாருடைய குற்றம்? குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது யார்? ஜெயலலிதா கூறத் தயாரா?

16.3.2013 அன்றே பிரதமர் கடிதம் எழுதியிருக்கிறார். ஏன் அதற்குப்பதில் எழுதவில்லை? ஆறு மாதங்கள் கழித்து 20.9.2013 அன்றுதான் தமிழக முதல்அமைச்சர் இருநாட்டு மீனவர்களின் பிரதிநிதிகள் சந்திப்பதற்கான தமிழக அரசின் ஒப்புதலைத் தெரிவித்துப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருப்பதாக, பிரதமரே 9.11.2013 தேதிய கடிதத்தில் நன்றி தெரிவித்திருக்கிறார். உண்மையிலேயே தமிழக மீனவர்களின் துன்பங்களில் ஜெயலலிதாவுக்கு அக்கறை இருக்குமானால், பிரதமரின் கடிதத்திற்கு ஆறு மாதங்கள் தாமதம் செய்திருப்பாரா? மீனவர்கள் சிறை பிடிக்கும் போதெல்லாம் பிரதமருக்கு ஒரு கடிதத்தை எழுதி விட்டு, அதை அவசர அவசரமாக ஏடுகளிலே விளம்பரப்படுத்திக் கொண்டால், இந்திய மீனவர்களைப் பாதுகாப்பதாக அர்த்தம் ஆகிவிடுமா?

இதைத்தான் நான் சுட்டிக்காட்டி, "ஹெட்லைன்ஸ் டுடே" தொலைக்காட்சி இவ்வாறெல்லாம் செய்தி வெளியிட்டிருக்கிறதே என்று கேட்டிருந்தேன். அதற்குப் பதில்சொல்ல வக்கற்ற முதலமைச்சர், என்மீது வழக்கம்போலக் குற்றஞ்சாட்ட முனைந் திருக்கிறார். ஆட்சியில் இருந்தால் ஒரு நிலை, ஆட்சியில் இல்லாவிட்டால் ஒரு நிலை என்று நான் இரட்டை வேடம் போடுவதாக ஜெயலலிதா சொல்லியிருக்கிறார்.

"விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு வர வேண்டும்" என்று சட்டப் பேரவையில் 16.4.2002 அன்று தீர்மானம் நிறைவேற்றி விட்டு,

தற்போது இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேரவையில் தீர்மானங்களை நிறைவேற்றுகிறாரே, இதற்குப் பெயர்தான் இரட்டை நிலை! இப்படிப் பட்டவர்தான் என்னைப் பற்றி நேற்றைய அறிக்கையில் நான் "பச்சோந்தி" போல அடிக்கடி நிலையை மாற்றிக் கொள்கிறேன் என்று தெரிவித்திருக்கிறார்.

இலங்கையிலே அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது, "போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான்" என்று இதே ஜெயலலிதா முழங்கியது உண்டா இல்லையா? அது சிங்கள அரசை ஆதரித்து ஜெயலலிதா தெரிவித்த கருத்து அல்லவா? யார் போடுவது இரட்டை நாடகம்? "பச்சோந்தி" வேடம் போடுவது யார்? தமிழ்நாட்டு மக்களே புரிந்து கொள்ளுங்கள்!

என்னைத் தாக்கி அறிக்கை விடும் போதெல்லாம் ஜெயலலிதா பயன்படுத்துவது கச்சத் தீவினை நான் தாரைவார்த்துக் கொடுத்து விட்டேன் என்ற குற்றச்சாட்டாகும். அதற்குப் பல முறை பதில் சொல்லியும் ஜெயலலிதா விடுவதாக இல்லை. 30.9.1994இல் தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, அப்போது பிரதமராக இருந்த திரு. நரசிம்மராவ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், "The ceding of this tiny island to the Island Nation had been done by the Government of India in the interest of better bilateral relations" அதாவது **தீவு நாடான இலங்கைக்கு, இந்தச் சின்னஞ் சிறிய தீவினை (கச்சத்தீவை) இந்திய அரசு பிரித்துக் கொடுத்தது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகத்தான்** என்று அப்போது முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுவிட்டு, தற்போது என்மீது பாய்ந்து விழுவது ஏன்? அரசியல்தான் காரணமா?

இதுமாத்திரமல்ல; 23.7.2003 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், இந்தியா, இலங்கை ஆகிய இருநாடுகளுக் கிடையே நல்லுறவு பேணவும், தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வரும் உரிமைகளைக் காப்பாற்றவும் உள்ள ஒரேவழி என்று குறிப்பிட்டுவிட்டு மேலும், "The best possible solution is to get the island of Katcha Theevu and adjacent seas on lease in perpetuity solely for fishing, drying of nets and pilgrimage. Sri

Lanka's Sovereignty over Katcha Theevu could be upheld at the same time" - **அதாவது கச்சத் தீவையும், அதற்கு அருகிலே உள்ள கடல் பகுதிகளையும் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், வலைகளைக் காய வைப்பதற்கும், யாத்திரை செல்வதற்கும் நிரந்தரக் குத்தகைக்குப் பெறலாம்; அதே நேரத்தில் கச்சத் தீவில் இலங்கை நாட்டுக்குள்ள இறையாண்மையை ஏற்றுக்கொள்ளலாம்"** என்று பிரதமருக்குக் கடிதமே எழுதிய ஜெயலலிதாதான், கச்சத் தீவை நான் விட்டுக் கொடுத்துவிட்டேன் என்று சொல்கிறார். பிரதமருக்கு அவ்வாறு கடிதம் எழுதிவிட்டு, தற்போது என்னைக் குற்றஞ்சாட்டுவதுதான் இரட்டை வேடம்.

20.4.1992 அன்று சட்டப் பேரவையில் பேசும்போது "கச்சத் தீவை மீட்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஆனால், கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக் கூடிய, நடைபெறக் கூடிய ஒன்றாகத் தெரியவில்லை" என்று கூறினாரே, அதை அப்படியே மறைத்துவிட்டு நேற்றைய அறிக்கையில் கச்சத் தீவினை மீட்டே தீருவேன் என்று குறிப்பிட்டிருக்கிறாரே, அது யாரை ஏமாற்றுவதற்காக? யார் போடுவது இரட்டை நாடகம்?

"இலங்கை காமன்வெல்த் மாநாட்டில், இந்தியா கலந்து கொள்ளக்கூடாது" - "இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்" எனச் சட்டமன்றத்தில் தீர்மானங்களை இயற்றிய ஜெயலலிதாதான், தஞ்சையில் விடுதலைப் புலிகள் நிகழ்த்திய போர் நினைவாக எழுப்பப்பட்ட முள்ளிவாய்க்கால் முற்றத்தின் சுவரை இடித்தாரே, அதுதான் ஜெயலலிதாவின் கபட நாடகம்; பச்சோந்தித்தனம்! ஜெயலலிதா தற்போது முதலமைச்சர் - இனியாவது இந்தக் கபட நாடகம், இரட்டை வேடம், பச்சோந்தி என்பனபோன்ற வார்த்தைகளைக் கைவிட்டு நாகரிகமாக அறிக்கை விடவும், எதிர்க்கட்சிகளை விமர்சிக்கவும் முயற்சிப்பார் என்று நம்புகிறேன். இல்லையேல், "அம்மா" அறிக்கையில் குறிப்பிடும் இந்த வார்த்தைகள் "அம்மா"வுக்கே பொருந்தும்.

அன்புள்ள,

மு.க.

13-1-2014

3851. மீனவர் பிரச்சினைக்கு விடிவு ஏற்படுமா?

உடன்பிறப்பே,

இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை விடுதலை செய்வது குறித்தும், தொடர்ந்து தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்தும், மீன் பிடிப்பதில் உள்ள மற்ற முக்கியமான பிரச்சினைகள் குறித்து தீர்வு காண்பது குறித்தும், இரண்டு நாடுகளின் மீனவப் பிரதிநிதிகள் சந்திப்பது பற்றி மத்திய அரசு, தமிழக அரசுக்குக் கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதி, அது பற்றி அனைவரும் அழுத்தம் கொடுத்த நிலையில் தமிழக அ.தி.மு.க. அரசு இந்த மாதம் 20ஆம் தேதி அந்தச் சந்திப்பினை நடத்த முன்வந்துள்ளது. ஆனால் அந்தச் சந்திப்பு எங்கே நடைபெறப் போகிறது? கலந்தாலோசனையில் யார் யார் கலந்து கொள்ளப் போகிறார்கள்? இந்த முக்கியமான பிரச்சினை பேசப்படும் போது, தமிழக மீனவர்களுக்காக, தமிழக முதலமைச்சர் அதிலே கலந்து கொள்ள வேண்டாமா? முதலமைச்சர் கொடநாட்டில் இருப்பதால் அவர் இல்லாமல் அந்தப் பேச்சுவார்த்தை நடைபெறப் போகிறதா? மீனவர்கள் பிரச்சினை பற்றி, தமிழக முதலமைச்சருக்கு உள்ள அக்கறை அவ்வளவுதானா? மீனவர்களின் பிரதிநிதிகள் கலந்து பேசும் கூட்டம் டெல்லியில் நடக்கப்போவதாக ஒரு செய்தி வருகிறது; சென்னையில் நடைபெறப்போவதாக மற்றொரு செய்தி வருகிறது! எது உண்மை என்று யாரும் இன்னமும் தெளிவுபடுத்தவில்லை.

இதற்கிடையே இந்தச் செய்தியை வெளியிட்டுள்ள 'தினத்தந்தி' நாளேடு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முயற்சியின் பேரில், மீனவர்கள் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசப் போவதாக செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்தியப் பிரதமர் இந்தச் சந்திப்புக்காக கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதி, அந்தக் கூட்டம் இந்த அளவிற்கு தாமதமாகக் காரணமே தமிழக முதலமைச்சரும், தமிழக அரசும்தான் என்று செய்திகள் வந்த பிறகும், தினத்தந்தி

நாளேடு முதலமைச்சரைக் காப்பாற்றுகின்ற வகையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் முயற்சியின் பேரில் இந்தக் கூட்டம் நடை பெறப்போவதாக, அவருக்கு வக்காலத்து வாங்கு வதைப்போல செய்தி வெளியிட்டிருப்பதுதான் விந்தையாக உள்ளது. மேலும் இன்றைய "தினத்தந்தி" நாளேட்டில், மீனவர்கள் பிரச்சினைக்காக, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 33 கடிதங்கள் எழுதியிருப்பதாகவும், அவருடைய கடுமையான முயற்சியின் விளைவாக தற்போது இலங்கைச் சிறையிலே உள்ள அனைத்து தமிழக மீனவர்களும் இன்றுமுதல் அடுத்தடுத்த நாட்களில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது என்றும் பெட்டிச் செய்தி வெளியிட்டு, முதலமைச்சரை புகழ்ச்சியின் உச்சியிலே கொண்டு போய் நிறுத்த படாதபாடு பட்டிருக்கிறது. இந்திய மீனவர்களின் நலனுக்காக நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலுவை நாகைக்கே அனுப்பி, மீனவர்களின் உண்ணாவிரதத்தை நிறுத்தச் செய்ததோடு, மீனவர்களின் பிரதிநிதிகளை டெல்லிக்கே அழைத்துச் சென்று, பிரதமரையும், வெளியுறவுத் துறை அமைச்சரையும் சந்திக்க வைத்து, அந்த நேரத்தில்தான் பிரதமர் அவர்கள், அந்த மீனவர்களிடம் ஜனவரி 20ஆம் தேதி வாக்கில் இரு நாட்டின் மீனவர் பிரதிநிதிகளையும் சந்திக்க ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தார் என்ற செய்திகளையும் "தினத்தந்தி" நாளேடு வசதியாக மறைத்து விட்டு, "அம்மா" புகழ் பாடியிருக்கிறது. பாவம்! அவர்களுக்கு என்ன நெருக்கடியோ?

அனைத்துத் தரப்பிலிருந்தும் தொடர்ந்து தரப்பட்ட அழுத்தத்தின் காரணமாக மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து இந்தியஇலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர்கள் அண்மையில் தொலைபேசி வாயிலாகப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து இலங்கை மீன் வளத்துறை அமைச்சர் ரஜிதா சேனரத்னே தலைமையிலான அதிகாரிகள் குழு வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. சல்மான் குர்ஷித் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கி றார்கள். அத்துடன் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர், சரத்பவார் அவர்களையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். பேச்சுவார்த்தைக்குப் பிறகு இலங்கை அமைச்சர் சேனரத்னே அளித்திருக்கும் பேட்டியில், "இருநாட்டுச் சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் உடனடியாக விடுதலை

செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்தியச் சிறைகளில் உள்ள 160 இலங்கை மீனவர்களையும், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நான்கு மீன்பிடி படகுகளையும், இந்திய அரசு படிப்படியாக விடுதலை செய்யும். அதைப்போலவே இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 236 இந்திய மீனவர்களையும், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 90 படகுகளையும் இலங்கை அரசு படிப்படியாக விடுவிக்கும். விடுவிக்கும் பணி நாளை முதலே தொடங்கும். தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்குவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் உண்மை இல்லை" என்றெல்லாம் கூறியிருக்கிறார்.

ஆனால் இதே இலங்கை அமைச்சர், இரண்டு நாட்களுக்கு முன்பு, இலங்கையில் கூறிய செய்தி என்ன தெரியுமா? "இரு தரப்பு பேச்சுவார்த்தைக்கு முன்பு இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட மாட்டார்கள். இரு தரப்பிலும் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை ஒரே நேரத்தில் விடுவிக்க தீர்வு காண வேண்டும். தமிழக மீனவர்கள் சட்ட விரோதமாக, இலங்கைப் பகுதியில் நுழைந்து மீன் பிடிப்பதால், எங்களின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது" என்றெல்லாம் கூறியிருக்கிறார்.

அதுமாத்திரமல்ல; இலங்கை அமைச்சர் டெல்லி வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் அதே நேரத்தில், நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகே, கோடியக்கரைக்கு தென் கிழக்கு பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ரோந்துப் படகு அங்கே வந்து, நமது மீனவர்கள் மீது சரமாரிக் கற்களை வீசியிருக்கிறார்கள். பின்னர் தமிழக மீனவர்கள் விரித்திருந்த மீன்பிடி வலைகளை யெல்லாம் வெட்டி வீசியிருக்கிறார்கள். இரண்டு நாட்டு மீனவர்களுக்கிடையே ஒரு சுமுகமான முடிவுக்காக முயற்சிகள் மேற்கொண்டிருக்கும் நேரத்தில், இலங்கை கடற்படை தாக்குதலிலே ஈடுபட்டுள்ளது. ஆனால் இலங்கை அமைச்சர் டெல்லியில் அளித்த பேட்டியில் இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் உண்மையில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

14ஆம் தேதி வெளிவந்த தமிழக நாளேடுகளில் இலங்கைச் சிறையிலே உள்ள 275 தமிழக மீனவர்களில், 163 பேர் 13ஆம் தேதியன்று விடுவிக்கப்பட்டார்கள் என்றும் அதேபோல் தமிழகச்

சிறைகளிலே உள்ள இலங்கை மீனவர்கள் 52 பேர் அதே 13ஆம் தேதியன்று விடுவிக்கப்பட்டார்கள் என்றும் செய்தி வந்தது. ஆனால் பின்னர் வந்த செய்தியில்,

தமிழகத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 52 பேர் சில நாட்களுக்கு முன்பு விடுதலை செய்யப்பட்டதாகவும்; அதைப்போலவே இலங்கை சிறைகளிலே இருந்த காரைக்கால், நாகை மற்றும் புதுக்கோட்டையைச் சேர்ந்த மீனவர்கள் 52 பேர் இலங்கை அரசால் விடுதலை செய்யப்பட்டதாகவும்; 162 இந்திய மீனவர்களை விடுவித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டபோதும், தமிழகத்தில் 52 இலங்கை மீனவர்கள் மட்டுமே விடுதலை செய்யப்பட்டதால், இலங்கை அரசும் முதற்கட்டமாக 52 மீனவர்களை விடுதலை செய்துள்ளது என்று செய்திகள் வந்தனவே, அந்தச் செய்திகளை இலங்கை அமைச்சர் தற்போது வெளியிட்டிருக்கும் தகவல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எந்த அளவுக்கு உண்மை என்பது புதிராகவே இருக்கிறது. ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு, தமிழக மீனவர்களின் நலன் கருதி உண்மை நிலை என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்திய - இலங்கை மீனவர்கள் மீன் பிடிப்பதில் உள்ள முக்கியமான பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்காக ஆறு அதிகாரிகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும்; இந்தக் குழுவில் இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த தலா மூன்று அதிகாரிகள் இடம் பெறுவர் என்றும்; இந்தியக் குழுவுக்கு மத்திய வேளாண்மைத் துறை செயலாளரும், இலங்கைக் குழுவுக்கு அந்த நாட்டின் மீன்வளத் துறை தலைமை இயக்குநரும் தலைமை வகிக்க உள்ளதாகவும்; இந்தக் குழுவின் முதல் பேச்சுவார்த்தை இன்று (16-1-2014) நடக்க விருப்பதாகவும் நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன. நடக்கவிருப்பதாகச் சொல்லப்படும் இந்தப் பேச்சுவார்த்தையில் தமிழக அரசின் பங்கு என்ன என்பதைப் பற்றி எந்த விளக்கமும் இல்லை. அதையும் அ.தி.மு.க. அரசுதான் தமிழக மீனவர்களுக்கு விளக்க வேண்டும்.

மீனவர் பிரச்சினை குறித்து நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது மத்திய அரசும், மாநில அரசும் மிகுந்த எச்சரிக்கை உணர்வோடும், கவனமாகவும் செயல்பட வேண்டும். ஏனெனில் இலங்கைச் சிங்கள அரசு தொடர்ந்து பேசுவது

ஒன்றாகவும், செய்வது வேறொன்றாகவும் முரண்பாடுகளின் மொத்த உருவமாகக் காட்சியளிப்பதை யாரும் மறந்துவிட முடியாது. 2009ஆம் ஆண்டு இலங்கைப் போரின்போது, போரை நிறுத்திவிட்டதாக உலக நாடுகளையும், இந்திய அரசையும் நம்ப வைத்துவிட்டு, அதற்கு மாறாக போரைத் தொடர்ந்து நடத்தி விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்ததை நம்மால் என்றைக்கும் மறக்கவும் முடியாது, மன்னிக்கவும் முடியாது.

போருக்குப் பிறகு 13வது சட்டத் திருத்தத்தைப் பற்றி பேசியபோதெல்லாம் இலங்கை அதிபர் ராஜபக்ஷே, 13வது சட்டத் திருத்தத்திற்கு கூடுதலாகவும், அதிகாரங்கள் அங்கேயுள்ள தமிழர்களுக்கு வழங்கப்படும் என்று உத்தரவாதம் அளித்தார். ஆனால் நடந்தது அதற்கு எதிர்மாறான நடவடிக்கைதான்.

வடக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்தி ஜனநாயக ரீதியாக ஆட்சி நடப்பதற்கு ஏற்பாடு செய்வேன் என்று நம்பிக்கை அளித்த ராஜபக்ஷே, தேர்தலை நடத்தியதோடு சரி; அவர் கனவு கண்டபடி சிங்கள அரசியல் கட்சிகள் வெற்றிபெற முடிய வில்லை; படுதோல்வி அடைந்து தமிழ்த் தேசிய முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்று, ஆட்சி அமைத்த போதிலும், அவர்கள் எதிர்பார்த்த குறைந்தபட்ச அதிகாரங்கள்கூட வழங்கப்பட வில்லை என்பதுதான் உண்மை.

இலங்கை வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் சென்ற வெள்ளிக்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் பேசும்போது, “வடக்கு மாகாண நிர்வாகத்திற்கு குறுக்கீடாக இருப்பது ராணுவம்தான். வடக்கு மாகாணம், ராணுவ முகாம்கள் நிறைந்த பகுதியாகி விட்டது. உள்நாட்டுப் போரின்போது இடம் பெயர்ந்த பல குடும்பங்கள் இன்னும் சொந்த இடம் திரும்ப முடியாமல் தவிக்கின்றன. தனியார் நிலங்களையும், சில இடங்களில் விவசாய நிலங்களையும் இலங்கை ராணுவம் கையகப்படுத்திக் கொண்டுள்ளது. நிலம் தமக்கே சொந்தமான தாக இருந்தாலும் அதில் முகாமிட்டுள்ள ராணுவத்தினர் பயிரிடும் விளைபொருள்களை உள்ளூர்ப் பகுதி விவசாயிகள் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கின்றனர். பெண்களும், குழந்தைகளும் ராணுவத்தினரின் மிரட்டலுக்கு உள்ளாகி வேதனைப்படுகிறார்கள். கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லை. ஆளுநராக உள்ள இலங்கை

முன்னாள் ராணுவ மேஜர் ஜெனரலுடன் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. பணிபுரியும் ஊழியர்கள் ஆளுநர் சொல்வதை மட்டும் கேட்டு நடந்து கொள்கிறார்கள்" என்றெல்லாம் மனம் நொந்து கூறியிருக்கிறார்.

அதைப்போலவே இலங்கை யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், "உதயன்" நாளேட்டின் உரிமையாளருமான சரவணபவன், சென்னையில் அளித்திருக்கும் பேட்டியில், "இலங்கையில் போருக்குப் பிறகும் நிலைமை அப்படியே உள்ளது. ராணுவத்தின் தலையீடு குறையவில்லை. போராளிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதாகக் கூறினார்கள். அவர்களுக்கு சரியான வேலைவாய்ப்போ, வாழ்வாதாரமோ உருவாக்கப்படவில்லை. முள்வேலி முகாம்களில் இருந்த இரண்டு இலட்சம் பேரை வெளியேற்றினார்கள். ஆனால் அவர்கள் இப்போது சரியான வீடுகள் இல்லாமல், வாழ்க்கை நடத்த வழியின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றெல்லாம் வேதனைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆனால் நம்முடைய இந்திய அரசின் வேளாண்மைத் துறை அமைச்சர், நண்பர், திரு. சரத்பவார் 15-1-2014 அன்று அளித்துள்ள பேட்டியில், "இரு நாட்டு அரசாலும் கைது செய்யப் படும் மீனவர்களின் விவகாரத்தைக் கவனிப்பதற்காக துறை ரீதியான குழு அமைத்திட இந்தியாவும் இலங்கையும் முடிவு செய்துள்ளன. இதன் மூலம் அடுத்த வாரமே சில பலன்களைக் காண முடியும் என்று நம்புகிறேன். அப்படிப் பலன் ஏற்படவில்லை என்றால், அடுத்த கட்ட வாய்ப்புகள் பற்றி ஆலோசிக்கப்படும்" என்று கூறியிருக்கிறார். அடுத்த கட்ட நடவடிக்கைகள் அவர் கூறியபடி அமைந்தால் அனைத்துத் தரப்பினருக்கும் மகிழ்ச்சியே!

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப்பினர் சரவண பவன் ஆகியோர் தெரிவித்திருக்கும் கருத்துகள் ஏற்கனவே இலங்கை அதிபர் ராஜபக்ஷே அளித்த உறுதிமொழிகளுக்கு நேர்மாறானவை என்பதையும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இரண்டு முறை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகும், அதற்கு முரணான காரியங்களே இலங்கையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் இந்திய அரசு மனதிலே கொண்டு, தற்போது நடத்தவிருக்கும் பேச்சு வார்த்தைகளின்

போது மிகுந்த எச்சரிக்கையாக இருந்து தமிழக மீனவர்களின் நல்வாழ்வுக்கு வழிவகுத்து, அவர்கள் இனியும் இலங்கைக் கடற்படையினரின் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படாமல் நிம்மதியாக வாழ்க்கையை நடத்திட உதவ வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

17-01-2014

3852. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (4)

உடன்பிறப்பே,

கழகம் நடத்திய மாநாடுகளை - ஒவ்வொரு மாநாட்டிற்கும் தலைமையேற்று நடத்தியவர்களை, மாநாட்டுத் திறப்பாளர்களை, அவர்கள் ஆற்றிய எழுச்சிமிகு உரைகளைத் தொகுத்தாலே கழக மாநாடுகளின் வரலாறு குறித்த மிகப் பெரிய நூலாகும். திருச்சியில் இரண்டாவது மாநில மாநாட்டை 1956இல் நடத்திய கழகம், மூன்றாவது மாநில மாநாட்டை மதுரையில் 1961ஆம் ஆண்டு ஜூலை 13, 14, 15, 16 ஆகிய நாட்களிலும், நான்காவது மாநில மாநாட்டை சென்னையில் 1966ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30, 31 ஜனவரி 1 ஆகிய நாட்களிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நடத்தியது.

மதுரையில் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற மூன்றாவது மாநில மாநாட்டை அருமை நண்பர் முத்து அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடத்தினார். மாநாட்டின் திறப்பாளர் திரு. கே.ஏ. மதியழகன். கழகத்தின் பொருளாளர் என்ற முறையில் நான் அந்த மாநாட்டின் பொருளாளராக இருந்தேன். மாநாட்டின் முதல் நாள் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் நடித்த "தென் பாண்டி வீரன்" நாடகமும், இரண்டாம் நாள் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி நடித்த "தமிழ் வாழத் தலை கொடுத்தான்" நாடகமும், மூன்றாம் நாள் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த "சுமை தாங்கி" நாடகமும் நடைபெற்றன.

மதுரையில் நடைபெற்ற அந்த மூன்றாவது மாநில மாநாட்டில், "விடுதலை வேட்கை" என்ற தலைப்பில் நான் உரையாற்றினேன். அந்த மாநாட்டிற்குச் சிறப்புப் பார்வையாளராக வந்திருந்த கர்நாடக மாநில உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. மேடப்பா அவர்கள் தி.மு. கழகத்தைப் பற்றி ஆங்கிலத்திலே

சிறப்பானதோர் உரையாற்றினார். அந்த மாநாட்டில் கழகப் பொருளாளர் என்ற முறையில் நிதி வசூல் பற்றித் தெரிவித்து எனக்குத் தரப்பட்ட தலைப்பின் மீது உரையாற்றினேன். அண்ணா அவர்கள் பேசும்போது, தேர்தல்கள் பற்றியும் கூட்டணி பற்றியும் குறிப்பிட்டது முக்கியமானதாகும். அது வருமாறு :-

"தேர்தல்கள், மிக முக்கியமானவைதான்; அதற்காகத் தேர்தல் நன்மையைக் கருதி எந்தக் கட்சியும், தனது அடிப்படைக் கொள்கைகளை விட்டுவிட முடியாது. 1956ஆம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டில் கூடியிருந்த மக்கள், தி.மு.கழகம் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும் என முடிவு செய்தனர். கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, 17 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று, 15 உறுப்பினர்களைச் சட்டசபையில் வீற்றிருக்கச் செய்தது. தி.மு. கழகம் எதிர்க்கட்சியாக இருந்து ஆற்றி வந்திருக்கும் அரும்பணிகள் அனைத்தையும், நடுநிலையாளர் அனைவரும் நன்குணர்வர். சட்டமன்றத்தில் நம்மவர் ஆற்றியுள்ள பணிகள் மக்களின் நன் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. கழகம், தனது பாராளுமன்றப் பணியைத் தொடர்ந்து நடத்துவது என்ற முடிவுக்கு வந்துள்ளது. அடுத்துவரும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தனது கொள்கையை முன் வைத்துப் போட்டியிடும்"

என்றெல்லாம் அந்த மாநாட்டின் முன்னுரையாகத் தெரிவித்ததோடு, "நீண்ட நேரம் இன்று உங்களுக்கு நல்லுரையாற்றும் நிலையில் நான் இல்லை. நான் இங்கு உங்கள் முன் நின்று பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால், என் உள்ளமும் நினைப்பும் அண்மையில் திருச்சி - தஞ்சை மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றிய நினைவாகவே இருக்கிறது. நான் விரைவில் அங்குச் செல்ல வேண்டியவனாக இருக்கிறேன். எனவே, எனது உரையை முடிப்பதற்கு முன்பு நீங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன கொடுக்கப் போகிறீர்களோ, அதைப் பெற்றுக் கொண்டுதான் அங்கு செல்லப்போகிறேன். அது நாம் அளிக்கும் முதல் உதவியாக இருக்கக்கூடும். மக்களின் இன்பதுன்பமே நமது நோக்கமாகவும், கவலையாகவும் இருந்து வருகிறது. தஞ்சைப் புயல் நிவாரண நிதிக்குத் தம்பி கருணாநிதி எடுத்துக் கொண்ட முயற்சியை நாம் மறக்க முடியாது. இருபத்து ஐயாயிரம்

ரூபாய் திரட்டித் தந்தார். வேட்டி, புடவையாக இவைகளை அளித்தோம். இப்பொழுதும் நாம் நமது கடமையை நமது மக்களுக்காகச் செய்ய வேண்டி வந்துள்ளது. வெள்ள நிதிக்கு நிதி அளிப்பவர்கள் உடன்வந்து என்னிடம் அளிக்கலாம்" என்றெல்லாம் உரையாற்றினார். (பூம்புகார் பதிப்பகம் வெளியிட்டுள்ள பேரறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள் என்ற நூலில் அண்ணா அவர்களின் இந்தப் பேச்சு இடம் பெற்றுள்ளது).

மதுரை, திருப்பரங்குன்றத்தில் 1961ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது மாநில பொது மாநாட்டிற்கும், 1966ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது மாநில பொது மாநாட்டிற்கும் இடையில் தி.மு. கழகத்தின் சார்பில் 20 மாநாடுகள் - 8 மாவட்ட மாநாடுகள்; 5 இந்தி எதிர்ப்பு மாநாடுகள்; 3 மாணவர் தி.மு.க. மாநாடுகள்; 3 வட்டார தி.மு.க. மாநாடுகள்; 1 தேர்தல் சிறப்பு மாநாடு என்ற பெயர்களில் நடைபெற்றன. நான்காவது மாநில பொது மாநாடுதான் விருகம்பாக்கத்தில் நடைபெற்ற மாநாடு. 1967 சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்பாக நடைபெற்ற மாநாடு அது. திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு மிகச் சிறப்பான இடம் உண்டு. அண்ணா அவர்கள் தலைமை தாங்கிய அந்த மாநாட்டினைத் திறந்து வைத்து உரையாற்றிடும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டிருந்தது. கொடியேற்றிடும் பொறுப்பு காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. கழகத்தின் வளர்ச்சிக்கென தங்கள் உயிரையே காணிக்கையாக்கிய தீரமறவர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட தியாகிகள் கோட்டத்தினைச் சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு திறந்து வைத்தார். கலைக் கண்காட்சியினைத் திறந்து வைத்திடும் பொறுப்பை திரு. ஏ. கோவிந்தசாமி ஏற்றிருந்தார். அந்தப் பொது மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாகச் சென்னைத் தீவுத்திடலை விட்டுப் புறப்பட்ட அன்றைய ஊர்வலத்தில் ஏறத்தாழ மூன்று இலட்சம் பேராவது கலந்துகொண்டிருப்பர். அது சென்றிட்ட பாதையின் இரு மருங்கிலும் மாடிக் கட்டிடங்களிலும் மரக்கிளைகளிலும் அமர்ந்த வண்ணம் அதன் அணிவகுப்பு மாட்சியைப் பார்த்துக் களித்திட்டோர் எண்ணிக்கையோ பல இலட்சம் இருக்கும்.

மாநாட்டின் பொறுப்பாளர் நாவலர்; வரவேற்புக் குழுத் தலைவர் - நான் அன்பொழுக "நீலம்" என்று அழைக்கின்ற

நீலநாராயணன் - செயலாளர்கள் மன்னை ப.நாராயணசாமி, ஈ.ஆர். கிருஷ்ணன், சி.வி.எம். அண்ணாமலை, கோ. செங்குட்டுவன் (இவர் யார் தெரியுமா? தற்போது நாடாளுமன்றக் கழகக் குழுவின் தலைவராக இருக்கும் தம்பி டி.ஆர். பாலுவின் மாமனார் தான் இவர்) - தொண்டர் படைத் தலைவர் கே.எம். கண்ணபிரான் (கவிஞர் வேழவேந்தனின் மாமனார்) - தொண்டர் படைத் தலைவர்கள் சு. பாலன், எஸ்.வி. வேலு, நல்லதம்பி, சாகுல் அமீது, அலமேலு அப்பாதுரை.

பிற்பகல் 3.30 மணிக்குத் தொடங்கிய ஊர்வலம் இரவு 9.30 மணிக்குத்தான் போளூர் சுப்பிரமணியம் பெயரில் அமைந்த மாநாட்டுப் பந்தலை அடைந்தது. "தினமணி" நாளேடு அப்போதெல்லாம் நடுநிலை நாளிதழாக இருந்தது. அது அந்த ஊர்வலத்தைப் பற்றி எழுதும்போது, "சென்னை நகரில் தி.மு.க.வின் செல்வாக்கு எவ்வளவு என்பதைப் பற்றி வாக்குப் பெட்டிகள்தான் தீர்ப்பளிக்க முடியும். பிப்ரவரி (1967) கடைசி வாரத்தில் அந்தத் தீர்ப்பு தெரிந்து விடும். ஆனால் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு தீர்ப்பளிக்க முடியுமென்றால் நகரில், தி.மு.க. வெற்றி பெற்றுவிட்டது என்று சொல்லி விடலாம். அவ்வளவு பிரும்மாண்டமான முறையில் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது" என்று தெரிவித்திருந்தது.

அந்த மாநாடு நடைபெறுவதற்கு ஒரு திங்களுக்கு முன்பு, மாவட்டங்கள் தோறும் நடைபெற்ற தேர்தல் நிதியளிப்புக் கூட்டங்களில் பகல், இரவு பாராது, ஊன் உறக்கத்தை அறவே மறந்து சுற்றிக் கொண்டிருந்தேன். அப்போது எனக்கு அந்த அலைச்சலோ அதனால் சாதாரணமாக ஏற்படும் களைப்போ சிறிதும் தெரியவில்லை. ஆனால் தற்போது நம்முடைய பொருளாளர் தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது, "அய்யோ! இப்படி அலைகிறானே" என்றுதான் நினைக்கத் தோன்றும். அந்தக் கூட்டங்களை முடித்துவிட்டு நான் சென்னைக்குத் திரும்பினால், திரும்பிய அரைமணி நேரத்திற்குள்ளாக அண்ணாவின் அருகிலே இருப்பேன். ஒரு முறை அப்படித்தான். அவரைச் சந்திக்கச் சென்ற என்னிடம் "ஏறு, காரிலே" என்றார். "எங்கே அண்ணா, எதற்கு அண்ணா?" என்றெல்லாம் கேட்கவில்லை, அப்படிக் கேட்டுப் பழக்கமும் இல்லை. அண்ணாவே தொடர்ந்தார். "மாநாட்டுக்காக ஓர் இடத்தைப் பார்த்து வைத்திருக்கிறேன். அதை உனக்குக்

காட்டிவிட வேண்டும் என்று நினைத்தேன். அங்கேதான் இப்போது நாம் போகிறோம்" என்றார் அண்ணா. மாநாட்டிற்காகப் பார்த்து அண்ணாவே தேர்ந்தெடுத்த இடத்தை என்னிடம் கொண்டு போய்க் காட்ட வேண்டும் என்பதற்காக அண்ணா என்னை அழைத்துச் சென்றாரே, அந்த நினைவே தற்போது என்னைக் கலங்கவைக்கிறது; கதறி அழ வேண்டும் போலத் தோன்றுகிறது!

காரில் சில மைல்கள் கடந்த பிறகு, நின்றது. அண்ணா இறங்கினார். அது ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு பரந்த வெளி. அதைக்காட்டி, "இதுதான் மாநாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம்" என்றார். எனக்கே சற்று மலைப்பாக, திகைப்பாக இருந்தது. பார்க்கும் இடம் எல்லாம் பள்ளங்கள், மேடுகள், குன்றின் முகடுகள் போல் கற்களின் குவியல்கள். இடையிடையே மரம், செடி, கொடி, கள்ளிப் புதர்கள்! "இங்குதான் மாநாட்டை நடத்தியாக வேண்டும். இந்த இடம் மாநாடு நடைபெறுவதற்குரிய எழிலான பூமியாக மாற வேண்டும்" என்றார் அண்ணா. பிறகென்ன? அண்ணா ஆணையிட்டுவிட்ட பிறகு, அதற்கு அட்டியேது? தயக்கம் ஏது? கழகத் தோழர்களின் கடின உழைப்பால், அந்த இடம் ஒரு சில நாட்களில் "நீலமேகம் நகர்" ஆகியது. அதுபற்றி மாநாட்டில் நான் குறிப்பிடும்போது, "நண்பர்களே! காடாகக் கிடந்த இந்த இடத்தை - கருநாகங்கள் ஊர்ந்து கொண்டிருந்த இந்த இடத்தை - தொட்டால் தேளும், தீண்டினால் நட்டுவாக்கிளியும் வரவேற்றுக் கொண்டிருந்த இந்த இடத்தைப் பதினைந்தே நாட்களில் எழில் மிக்க பூமியாக, நீங்கள் எல்லோரும் அமர்ந்து களிக்கும் இடமாக, மாநாட்டுப் பந்தலாக மாற்றியிருக்கிறோம்.

இதே நேரத்தில் அறிஞர் அண்ணா ஆணையிட்டால் நடைபெறும் ஆட்சியினால் காடாகிப் போய்விட்ட இந்த நாட்டை, ஏன் எழில் மிக்க பூமியாக மாற்ற முடியாது என்று என்னரும் நண்பர்களே, நீங்களே ஒரு முறை கேட்டுப் பாருங்கள்! நீங்கள் கேட்கின்ற அந்தக் கேள்விகளின் எதிரொலி நாடாளுவோரின் செவிப் பறைகளைத் தட்டட்டும், அவர்கள் எல்லாம் நம் காலம் முடிவடைந்து விட்டது என்ற கணக்கைப் பார்த்துக் கொள்ளட்டும், பிரிவுபசாரப் பத்திரத்தைத் தமிழ்நாட்டு மக்களிடமிருந்து வாங்கிக் கொள்ள அவர்கள் தயாராகிக் கொள்ளட்டும்" என்றெல்லாம் குறிப்பிட்டேன்.

தி.மு. கழக மாநாடு என்ற போதிலும், அதில் மூதறிஞர் இராஜாஜி, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., கேரள மாநிலத் தலைவர்களான முகமது கோயா, தங்கல் ஆகியோரும் கலந்து கொண்டு பெருமை சேர்த்தனர். அந்த மாநாட்டில் ராஜாஜி பேசும்போது, "இந்த அணி நிச்சயம் வெற்றி பெறும். எனது வாழ்நாளில் எனது கட்சியை அல்லது கூட்டத்தைச் சேராத மக்கள் என்னிடம் இவ்வளவு பற்று வைத்திருப்பதை நான் பார்த்ததே கிடையாது. அதை நான் இப்போது என் கண் முன்னால் காண்கிறேன். தி.மு.க. தம்பிகளுக்கும் அவர்களது பேரன்மார்களுக்கும் எனது மனப்பூர்வமான ஆசி" என்றார்.

அந்த விருகம்பாக்கம் மாநாட்டில்தான், கழகப் பொருளாளர் என்ற முறையில் பொதுமக்களிடமிருந்து திரட்டிய தேர்தல் நிதி பதினொரு இலட்சம் ரூபாயை அண்ணா அவர்களிடம் அளித்திடும் பெரும் பேற்றினைப் பெற்றேன். இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில், தேர்தல் நிதிக்கென வகுத்துக் கொள்ளப்பட்ட இலக்கு பத்து இலட்சம் ரூபாய்தான். அதனையே முழுமையாகத் திரட்டிட முடியுமா என்று நானே நெஞ்சம் குழம்பிய நேரங்களும் உண்டு. ஆனால் அந்த இலக்கையும் தாண்டி ஒரு இலட்சம் கூடுதலாகவே அண்ணாவிடம் சேர்த்தேன். அதைப்பற்றி அண்ணா அவர்களே மாநாட்டில் வேட்பாளர்களை அறிவிக்கும்போது குறிப்பிட்டார்.

"..... பதினொரு இலட்சம் ரூபாயை, தம்பி கருணாநிதி என்னிடம் தந்தார். அவர் பேசும்போது, "அந்தத் தொகையைச் சேர்க்க முடியுமா?" என்று தன் விழிகள் வியப்பால் விரிந்தன என்றார். "தம்பீ! உனக்கு "நிதி" என்று பெயரிட்டார்களே உன் தாயார், சும்மாவா வைத்தார்கள்? தமிழ் மொழியில் உள்ள சொற்கள் பொருள் உள்ளவை என்பதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன். உன் தாயார் உனக்கு "நிதி" என்று பெயரிட்டதே, உன்னை நாட்டு மக்கள் "நிதி"யாகப் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்றுதான். இன்றைக்கு இந்தக் காட்சியைப் பார்க்க நேர்ந்திருந்தால், உனக்கு இட்ட பெயர் வீணாகி விடவில்லை என்று உன் தாயார் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார்? பத்து லட்சம் ரூபாய் கேட்டதற்குப் பதினொரு இலட்சமே கொடுத்திருக்கிறாய்! ஆனால் மக்கள் சிக்க வேண்டிய நேரத்தில் உன்னிடம் சிக்கியிருந்தால் நீ

இன்னமும் அதிகம் சேர்த்திருப்பாய்" என்று அண்ணா அவர்கள் கூறியதோடு நின்றிடவில்லை.

1967 பிப்ரவரி திங்களில் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்ட போது, மற்ற வேட்பாளர்களைப் பொறுத்தமட்டில் அந்தந்தத் தொகுதிகளைக் குறிப்பிட்டு, அவைகளுக்குரிய வேட்பாளர்களின் பெயர்களைச் சொல்லி வந்த அண்ணா, "சைதாப்பேட்டை. . ." என்று சொல்லி விட்டுக் கணப் பொழுது அமைதியாக இருந்தார். பின்னர் "பதினொரு இலட்சம்" என்றார். அந்த மாநாட்டுப் பந்தலிலே இருந்த அத்தனைப் பேரும் எழுந்து கரவொலி எழுப்பினர். அது நான் திரட்டிய நிதிக்காக அல்ல, அதை பேரறிஞர் அண்ணா அவர்கள் தன் நெஞ்சார அவருக்கே உரிய தனித் தன்மையோடு பாராட்டியதற்காக! இப்படி எத்தனை எத்தனையோ நினைவுகள் அலைஅலையாக வந்து என்னை நெகிழச் செய்கின்றன! அனைத்தையும் விவரித்திட இங்கே இடம் போதுமா?

கழகம் நடத்திய அந்த நான்காவது பொது மாநில மாநாடே மாபெரும் வெற்றி மாநாடாக மாறியது. தேர்தலில் தி.மு. கழகம் மாபெரும் வெற்றியைப் பெற்று, தமிழகத்தில் மாற்றத்திற்கு வித்திட்டு, ஆட்சிக் கட்டிலில் ஏறிடக் காரணமான மாநாடாகவும் அமைந்தது. ஆனால் அந்த நான்காவது மாநில மாநாடுதான் அண்ணா அவர்கள் கலந்து கொண்ட கடைசி மாநாடு என்பது எங்களுக்கு அப்போது தெரியாமல்தான் போய்விட்டது.

நடைபெற்ற நான்காவது மாநில மாநாட்டைப் பற்றியே கூறிக் கொண்டிருந்தால், நடைபெற வேண்டிய பத்தாவது மாநில மாநாடு என்ன ஆவது? பத்தாவது மாநில மாநாட்டின் பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டுதான் உள்ளன. தம்பி நேரு கடந்த வாரம் சனிக்கிழமை அன்று பந்தல் சிவாவையும், ஓவியர் ஜெ.பி. கிருஷ்ணாவையும் நேரிலேயே அழைத்துக் கொண்டு என்னிடம் வந்துவிட்டார். பந்தலைப் பல்வேறு கோணங்களில் புகைப்படங்களாக எடுத்து "ஆல்பம்" தயாரித்துக் கொண்டு வந்து காட்டினார். காலையிலேயே வந்து விட்டதாகவும், பொருளாளருடன் அமர்ந்து மாநாட்டில் பணியாற்றிடுவதற்கான பல்வேறு குழுக்களில் யார் யாரை இடம்பெறச் செய்யலாம் என்பதற்கான பட்டியலையும் என்னிடம் காட்டி ஒப்புதல் பெற்றார்.

வரவேற்புக் குழு என்றும், நிதிக் குழு என்றும், தீர்மானக் குழு என்றும், மலர்க் குழு என்றும், உபசரிப்புக் குழு என்றும், பிரச்சாரக் குழு என்றும், பந்தல் குழு என்றும், மேடைக் குழு என்றும், அலங்காரக் குழு என்றும், விளம்பரக் குழு என்றும், தொண்டர் அணி என்றும், மகளிர் அணி என்றும், மகளிர் தொண்டர் அணி என்றும், மாநாட்டு அலுவலகப் பொறுப்பாளர்கள் என்றும் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு "முரசொலி"யில் வெளியிடப்பட்டுள்ளன. அந்தந்தக் குழுக்களிலே இடம் பெற்றவர்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்திடுவர் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

மாநாட்டு ஏற்பாடுகள் எல்லாம் நான் செய்தியாளர்களிடம் கூறியது போல, சிறப்பாகவும், முறையாகவும் நடைபெற்று வருகின்றன. வரவேற்புக் குழுத் தலைவர் கே.என்.நேரு பந்தலைச் சுற்றிப்பார்த்து வர, மோட்டார்சைக்கிளில் புறப்படுவதைப் பத்திரிகைகளில் வெளிவந்த படங்களிலேயே பார்த்திருப்பாயே; அந்த அளவிற்குப் பந்தல் நீளமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். மாநாட்டிற்கு முன்பாக என்னை ஒரு முறை ஏற்பாடுகளைப் பார்க்க திருச்சிக்கு வரவேண்டுமென்றார்! அண்ணனுக்கு அறுபது வயது என்று அவருக்கு நினைப்பு? தம்பிகளின் பணியிலே சந்தேகம் இருந்தால்தானே முன்கூட்டிச் சென்று பார்க்க வேண்டும்!

மாநாட்டு ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெறும் நேரத்தில் உன்னுடைய வருகையை நம்பி, பத்து இலட்சம் பேர் திரளுவார்கள் என்று அறிவித்திருக்கிறோம். எனவே உன் பயணத்தில் எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் பார்த்துக்கொள்! திருமண அழைப்பிதழ்களில்தான், "குடும்பத்தினரோடும், உற்றார் உறவினர்களோடும், நண்பர்களோடும் முன்கூட்டியே வந்திருந்து சிறப்பிக்க வேண்டும்" என்றெல்லாம் குறிப்பிட்டு அழைப்பார்கள். நான் மாநாட்டிற்காக அழைக்கிறேன், குடும்பத்தினரோடும், உற்றார் உறவினர்களோடும், நண்பர்களோடும் முன் கூட்டியே வந்திருந்து இரண்டு நாள் மாநாட்டினையும் வெற்றிகரமாக நடத்திடப் பெரிதும் விரும்பி அழைக்கிறேன்!

அன்புள்ள,

மு.க.

19-1-2014

3853. இடஒதுக்கீட்டில் நீதிமன்றத்தின் மீது பழி சுமத்துவதா?

உடன்பிறப்பே,

சென்னை - அண்ணா சாலையில் தி.மு. கழக ஆட்சியில் ஓமந்தூரார் பெயரில் வளாகம் அமைத்து, சட்டப்பேரவைக்காகவும், தலைமைச் செயலகத்துக்காகவும் கட்டப்பட்ட கட்டடத்தின் நோக்கத்தையும், பெயரையும் மாற்றி, பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையினைத் தொடங்கப்போவதாக ஜெயலலிதா அறிவித்து, அந்த மருத்துவமனையிலே பணிபுரிவதற்காகச் சுமார் 100 உயர் அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அறிவிக்கை ஒன்று 27-12-2013 அன்று மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தினால் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

அந்தப் பணி நியமனங்கள் ஒப்பந்த அடிப்படையில் செய்யப்படும் என்றும், இட ஒதுக்கீடு அறவேகிடையாது என்றும் அந்த விளம்பரத்திலே தெரிவிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் தமிழகத்திலே உள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் அது பற்றி கண்டன அறிக்கைகள் விடுத்திருந்தன. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா 12-1-2014 அன்று இதுபற்றி ஒரு பதில் அறிக்கை கொடநாட்டிலிருந்து விடுத்திருந்தார். அதிலேகூட மற்றவர்களுக்குப் பதில் சொல்வதைத் தவிர்த்து விட்டு, என்னைப்பற்றி மட்டும் அநாகரிகமான முறையில் விமர்சனம் செய்து அவருக்கே உரிய பண்பாடற்ற பாணியில் வசைபாடியிருந்தார். இருந்த போதிலும், முதலமைச்சர் ஆயிற்றே என்பதற்காக, அவருடைய பதில் அறிக்கைக்கு மதிப்பளித்து 13-1-2014 அன்று சென்னைப் பெரியார் திடலில், தமிழர் தலைவர், கி.வீரமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நான் விரிவாகப் பதிலளித்திருந்தேன்.

உச்சநீதிமன்றம் 18-7-2013 அன்று அளித்த தீர்ப்பின்படி தான் இட ஒதுக்கீட்டினைப் பின்பற்றவில்லை என்றும், தற்போதுள்ள மத்திய அரசு, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் நிச்சயமாக உரிய திருத்தங்களைக் கொண்டுவராது என்றும் ஜெயலலிதா சொல்லியிருந்தார்.

உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு வந்தது - 18-7-2013 அன்றுதான்; உச்சநீதிமன்றத் தீர்ப்பு வெளியானவுடன் நாடாளுமன்றத்திலே இதுபற்றி மிகப் பெரிய விவாதமே (13-8-2013) அன்று நடைபெற்றிருக்கிறது. அப்போது, "மத்திய அரசின் சார்பில் உடனடியாக இந்தத் தீர்ப்பினை எதிர்த்து மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்படும்" என்று சட்டத் துறை அமைச்சர் திரு. கபில்சிபல் அவர்கள் அவையிலே உறுதி அளித்ததோடு, "தேவைப்பட்டால் அரசியல் சட்டத்திருத்தமே கொண்டுவரப்படும்" என்றும் கூறியிருக்கிறார். அப்படிக் கூறியதை அடுத்து, உச்சநீதிமன்றத்தில் மறு ஆய்வு மனுவினையும் மத்திய அரசின் சார்பில் தாக்கல் செய்தார்கள். ஆனால் ஜெயலலிதா மத்திய அரசு எதுவுமே செய்யவில்லை என்று குறைபட்டிருக்கிறார்.

மேலும் மத்திய அரசின் சார்பில் உச்ச நீதி மன்றத் தீர்ப்பிற்கு மாறாகவே மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் அனுப்பிய கடிதத்தில் வருங்காலத்தில் செய்யப்படும் நியமனங்களில் இட ஒதுக்கீட்டினைப் பின்பற்ற வேண்டும் என்றே தெரிவித்திருந்தார்கள்.

இதிலிருந்து மத்திய அரசு உச்சநீதிமன்றத் தீர்ப்பினையொட்டி இட ஒதுக்கீட்டில் கை வைத்து விடவில்லை என்பதும், ஜெயலலிதாதான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை, தனக்குக் கவசமாக வைத்துக்கொண்டு, சமூக நீதிக் கொள்கைக்கு எதிராகச் செயல்பட்டிருக்கிறார் என்பதையும் குறிப்பிட்டு, ஜெயலலிதாவிடம் சில கேள்விகளையும் கேட்டிருந்தேன். அதாவது, 22-11-1993 அன்று உச்ச நீதி மன்றத்தில் ஜெயலலிதா அரசின் சார்பாக 69 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்த மாட்டோம், 50 சதவிகிதத்தையே அமல்படுத்துகிறோம் என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டதா இல்லையா?

இடஒதுக்கீட்டில் சாதி அடிப்படை கூடாது என்றும், பொருளாதார அளவுகோலே வேண்டும் என்றும் இந்தியன்

எக்ஸ்பிரஸ் நாளேட்டிற்கு ஜெயலலிதா பேட்டி கொடுத்தது உண்டா இல்லையா?

அந்தப் பேட்டியில், "பிற்படுத்தப்பட்ட வகுப்புகளிலும் சிலர், நல்ல நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் இட ஒதுக்கீட்டுச் சலுகையைப் பெறுவது என்பது இட ஒதுக்கீட்டுக் கொள்கையையே கேலிக் கூத்தாக்கிவிடும். எனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்குச் சலுகைகள் கிடைக்குமாறு செய்ய வேண்டும். அப்போதுதான் அதைச் சமூக நீதி என்று கூறலாம். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகிதம் என மத்திய அரசு முடிவெடுத்துள்ள நிலையில் முன்னேறிய வகுப்பினரில் கூட பொருளாதாரரீதியாக நலிந்த பிரிவினருக்கு 5 அல்லது 10 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்வது தவறில்லை" என்று ஜெயலலிதா சமூக நீதியின் அடிப்படையையே தகர்த்திடும் வகையில் கூறியது உண்டா? இல்லையா?

என்றெல்லாம் பெரியார் திடல் கூட்டத்திலே நான் கேட்டிருந்தேன். இதில் எந்தக் கேள்விக்கும் முதலமைச்சர் ஜெயலலிதா இதுவரை பதில் கூறவில்லை. பதில் கூறுவதற்கு வழி இருந்தால் அல்லவா பதில் கூறுவார்? அதனால்தான், பதில் கூறாமல் ஆத்திரப்பட்டு என் மீது பாய்ந்து பிறாண்டுகிறார்.

இதற்கிடையே மத்திய அரசு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்த மறுஆய்வு மனுமீது 16-1-2014 அன்று விசாரணை நடைபெற்றபோது, அதை விசாரித்து உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அளித்த தீர்ப்பில், "It is for the Centre to take a decision whether there should be reservation in super-speciality Posts" (உயர் சிறப்புப் பதவிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமா என்பது குறித்து மத்திய அரசே முடிவு செய்து கொள்ளலாம்) என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த விசாரணையின்போது மத்திய அரசு சார்பில் ஆஜரான அடிஷனல் சொலிசிட்டர் ஜெனரல்களான எல். நாகேஸ்வர் ராவ் மற்றும் கே.வி. விஸ்வநாதன் ஆகியோர், "Indira Sawhney Judgment did not restrain the Government from providing Reservation in Super-Speciality Faculty Posts" (இந்திரா சஹானி வழக்கில் வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பு உயர் சிறப்புப் பதவிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்படுவதற்கு அரசை தடை செய்யவில்லை) என்று வாதிட்டிருக்கிறார்கள். மத்திய அரசுப் பணிகளில், பிற்படுத்தப்பட்டோர்க்கு 27 சதவிகித இட

ஒதுக்கீட்டினை ஏற்றுக் கொண்டு அளித்த இந்திரா சஹானி வழக்கின் தீர்ப்பிலிருந்து உச்சநீதிமன்றம் மேற்கோள்காட்டி,. "In certain services in respect of certain posts, application of rule of reservation may not be advisable in regard to various technical posts, including posts in super-speciality medicine, engineering and other scientific and technical posts" (மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் தொடர்பான உயர் சிறப்புப் பதவிகளில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று பரிந்துரைத்திட இயலாது) என்று கடந்த ஆண்டு சுட்டிக்காட்டியிருந்தது என்பதையும் இது தீர்ப்புரை (VERDICT) அல்ல - கருத்துரையே (OBSERVATION) என்பதையும் கவனத்திலே கொள்ள வேண்டும்.

இந்தச் செய்தியை வெளியிட்டுள்ள 17 ஆம் தேதிய "டைம்ஸ் ஆப் இந்தியா", "This will open the window for the Government to provide Reservation as a criteria for appointment to AIIMS Faculty Positions" (அகில இந்திய மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தின் உயர் சிறப்புப் பதவிகளுக்கு நியமனம் செய்யும்போது இட ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொண்டு நியமனம் செய்வதற்கான பலகணி அரசுக்கு திறந்துவிடப்பட்டிருக்கிறது) என்றே எழுதியுள்ளது.

உயர் சிறப்புப் பதவிகளில் நியமனம் செய்யும் போது, இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை என்பதற்கு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புதான் காரணம் என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஆனால் உச்சநீதிமன்றம் இடஒதுக்கீட்டினைப் பின்பற்றுவது என்பது மத்திய அரசின் முடிவாகும் என்று திட்டவட்டமாகத் தனது தீர்ப்பில் தெரிவித்துவிட்டது. இட ஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என்பதைப் பரிந்துரைத்திட இயலாது என்று கூறியதோடு, மத்திய அரசிடம்தான் "பந்து" தற்போது உள்ளது என்றும் தெளிவாக உச்சநீதிமன்றம் தெரிவித்துவிட்டது. மேலும் மத்திய அரசின் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ள கருத்திலும், உச்சநீதிமன்றத் தீர்ப்பு இத்தகைய உயர் பதவிகளில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதைத் தடைசெய்யவில்லை என்றே கூறிவிட்டார்கள். எனவே, தமிழகத்தில் உச்ச நீதி மன்றத் தீர்ப்பு காரணமாகத்தான், இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை என்று ஜெயலலிதா கூறியிருக்கும் காரணம், மக்களை ஏமாற்றுவதற்கும், சமூகநீதியைக் குழி தோண்டிப் புதைப்பதற்குமான ஒன்றே தவிர வேறல்ல.

உச்சநீதிமன்றம் 18-7-2013 அன்று தீர்ப்பளித்த பிறகு, ஜூலை 31ஆம் தேதி புதுவை ஜிப்மர் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில் 114 மருத்துவ அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பு வெளி வந்தபோது, உச்சநீதிமன்றத் தீர்ப்பைக் காரணம் காட்டி இட ஒதுக்கீடு கிடையாது என்று மத்திய அரசு கூறவில்லை. இட ஒதுக்கீட்டின்படி பிற்படுத்தப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும் டெல்லி எய்ம்ஸ் மருத்துவக் கல்வி நிறுவனத்திலேயே இட ஒதுக்கீடு தொடர்கிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக, சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இட ஒதுக்கீட்டைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தும்படி, மத்திய சுகாதாரத்துறை கூறியதன் அடிப்படையில், 148 உதவி மருத்துவப் பேராசிரியர் பணி இடங்கள் இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடித்துத்தான் நிரப்பப்பட்டுள்ளன. எனவே உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும், மத்திய அரசின் நிறுவனங்களில், இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் தமிழக அரசு அதனை அமல்படுத்தாது, உச்ச நீதி மன்றத் தீர்ப்பின் மீதும், மத்திய அரசின் மீதும் பழிபோடுவது என்பது எத்தகைய மோசடி வித்தை என்பதை இங்குள்ள தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும் ஜெயலலிதா 12-1-2014 தேதிய அவருடைய அறிக்கையில், "நடைமுறையில் உள்ள விதியினையும், முன்மாதிரியையும் கருத்தில் கொண்டே ஓமந்தூரார் உயர் சிறப்பு மருத்துவமனையில் மருத்துவர்கள் நியமிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் திரு. கருணாநிதிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். நடைமுறையில் உள்ள விதியினையும், முன்மாதிரியையும் கருத்தில் கொண்டுதான் இட ஒதுக்கீடு இல்லாமல் தற்போது பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதாக ஜெயலலிதா கூறுகிறார். ஆனால் 31-3-2013 அன்று தமிழக அரசின் மருத்துவப் பணிகள் தேர்வு வாரியத்தின் சார்பில் வெளியிட்ட அறிவிக்கையில் "The Rule of Reservation is applicable as per the Rules in force" அதாவது "தற்போது விதிகளில் உள்ள இட ஒதுக்கீடு பொருந்தும்" என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்போது 27-12-2013 அன்று அதே தமிழக அரசின் மருத்துவப் பணிகள் தேர்வு வாரியத்தின் சார்பில் வெளியிட்ட அறிவிக்கையில், "There is no

Reservation for these posts" அதாவது இந்தப் பதவிகளுக்கு இட ஒதுக்கீடு பொருந்தாது - என்று மாற்றப்பட்டுள்ளது. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா தனது அறிக்கையில் நடைமுறையில் உள்ள விதியினையும், முன்மாதிரியையும் கருத்தில் கொண்டுதான் அறிவிக்கை வெளியிடப்பட்டதாக அப்பட்டமாகப் பொய் சொல்லியிருக்கிறார்.

அடுத்துத் தற்போது தேர்ந்தெடுக்கப்படும் பல்வேறு மருத்துவர்களுக்கான மாதாந்திர ஊதியம் இரண்டரை இலட்சம் ரூபாய் என்றும், ஒன்றரை இலட்சம் ரூபாய் என்றும், ஒரு இலட்சம் ரூபாய் என்றும் உயர் அளவில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதே என்று நான் கேட்டதற்கு, பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் பணிபுரிய இருப்பதால், இந்த அளவிற்கு ஊதியம் என்று ஜெயலலிதா அவருக்கே உரிய மேல் தட்டுப் பாணியில் பதில் சொல்லியிருந்தார். ஆனால் கடந்த மார்ச் மாதம் 31-3-2013 அன்று அரசு சார்பில் வெளியிட்ட அறிவிக்கையில் மருத்துவர்களுக்கு எவ்வளவு மாதாந்திர ஊதியம் என்று கூறியிருந்தார்கள் தெரியுமா? Scale of Pay : Rs. 15,600 - 39,100 + Grade Pay 5,400/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கில் ஊதியம் என்பது இலட்சக் கணக்கில் உயர்த்தப்பட்டது ஏன்? எதற்காக? எப்படி? இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினை நடுநிலையாளர்கள் புரிந்து கொண்டால் போதும்!

இடஒதுக்கீடு கொள்கைக்கு எதிராகச் செயல்படும் ஜெயலலிதா அரசைக்கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவர் அணி சார்பில், ஜனவரி 21 அன்று மாநில மாணவர் அணிச் செயலாளர், தம்பி கடலூர் இள. புகழேந்தி தலைமையில் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி ஜெ.அன்பழகன், எம்.எல்.ஏ., மாணவர் அணியின் துணைச் செயலாளர்கள் தம்பிகள் கோவி.செழியன், எம்.எல்.ஏ., குத்தாலம் க.அன்பழகன், கோவை கணேஷ்குமார், பூவை சி. ஜெரால்டு, மதுரை க.மகிழன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழக மாணவர் அணியும் பங்கேற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இடஒதுக்கீடு என்பது திராவிட இயக்கங்களின் மூலாதாரக் கொள்கை என்பதை மனதிலே கொண்டு 21ஆம் தேதி நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தை

வெற்றிகரமாக ஆக்கிட வேண்டும். இந்த ஆட்சி யினர் இனியாவது மனம் திருந்தி அறிவிக்கப்பட்டுள்ள மருத்துவர் தேர்வில், இட ஒதுக்கீடு கொள்கை கடைப்பிடிக்கப்படும் என்ற அறிவிப்பினைச் செய்ய முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதற்குப் பதிலாக நாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான் என்று பிடிவாதம் காட்டுவார்களேயானால், அதன் விளைவுகளை அவர்கள் சந்திக்கத்தான் வேண்டியிருக்கும்!

அன்புள்ள,

மு.க.

20-1-2014

3854. மனிதநேயத் தீர்ப்பு!

உடன்பிறப்பே,

உச்சநீதிமன்றம் நேற்றையதினம் (21-1-2014) மனித நேயம் நிறைந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்ப்பினை வழங்கியுள்ளது. சந்தனக் கடத்தல் வீரப்பன் வழக்கில் 7 பேருக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனையும், மேலும் 7 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனைகளை எதிர்த்து அவர்கள் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்கள். உச்சநீதிமன்றம், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஏ.சைமன், எம்.பிலவேந்திரன், ஜே.ஞானப்பிரகாஷ், மீசை மாதையன் ஆகியோருக்கு, தண்டனையை தூக்குத் தண்டனையாக அதிகரித்து தீர்ப்புக் கூறியது. இந்த நான்கு பேரும் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பினார்கள். அது காலதாமதத்தோடு நிராகரிக்கப்பட்டது. கருணை மனு மீதான முடிவை கால தாமதமாக எடுத்ததால், தண்டனையைக் குறைக்கக்கோரி, உச்சநீதிமன்றத்தில் "ரிட்" மனுவும், வழக்கை மீண்டும் விசாரிக்கக் கேட்டு, மறு சீராய்வு மனுவும் தாக்கல் செய்தார்கள். இதில் உச்சநீதிமன்றம் சீராய்வு மனுவினைத் தள்ளுபடி செய்தது. ஒரு வழக்கை விசாரித்து தீர்ப்புச் சொன்ன பிறகு, மீண்டும் அந்த வழக்கை விசாரிப்பது முறையானதல்ல, முன் உதாரணமும் அல்ல என்று தலைமை நீதிபதி சதாசிவம் அப்போது தெரிவித்தார்.

இதற்கிடையே தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேரும் தாக்கல் செய்த "ரிட்" மனு மீதான தீர்ப்புதான் உச்சநீதிமன்றத்தில் தற்போது வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பில், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேரின் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது. தலைமை நீதிபதி சதாசிவம், நீதிபதி ரஞ்சன் கோகாய் ஆகியோர் இந்தத் தீர்ப்பினைக் கூறியுள்ளார்கள்.

நாடு முழுவதும், குடியரசுத் தலைவரால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின்னரும், தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாமல் 15 தூக்குத் தண்டனைக் கைதிகள் உள்ளார்கள். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 14 கைதிகளின் கருணை மனுக்கள் குடியரசுத் தலைவரின் பரிசீலனையிலே உள்ளன. தற்போது கூறப்பட்டுள்ள தீர்ப்பின் மூலமாக, கருணை மனு தாமதம் என்ற காரணத்தைக்கூறி, இதுபோன்ற மற்ற கைதிகளின் தண்டனையும் குறைக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரும் இடம் பெறும் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் மூவரையும் விடுவிக்க வேண்டுமென்று தி.மு.கழகம் உட்பட பலர் கோரி வருகின்றனர். 25-7-2013 அன்று "இந்து" நாளிதழில் வந்த செய்தியில், "A large section of India's voters - constituting the dominant view - is in favour of abolishing the death penalty, as per the CSDS survey" என்று கூறப்பட்டிருந்தது. அதாவது இந்திய வாக்காளர்களில் பெரும்பாலோரின் கருத்து மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்பதாகும் என்று ஒரு ஆய்விலே கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கருத்தினை நான் எடுத்துக்காட்டி, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவரையும் விடுவிக்க வேண்டுமென்று "முரசொலி" மூலம் கேட்டுக் கொண்டிருந்தேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எஸ். பிட்டாவைக் கொலை செய்வதற்காக, 1993ஆம் ஆண்டு டெல்லியில் கார் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் பிட்டா உயிர் தப்பிய போதிலும், ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலை நடத்திய, தேவேந்தர்பால் சிங் புல்லார் என்பவர், ஜெர்மனி நாட்டிற்குத் தப்பிச் சென்றுவிட்டார். 1995ஆம் ஆண்டு, புல்லார் ஜெர்மனியில் இருந்து நாடு கடத்தப்பட்ட பிறகு, 2001ஆம் ஆண்டு விசாரணை நீதிமன்றம், புல்லாருக்குத் தூக்குத் தண்டனை விதித்தது. டெல்லி செஷன்ஸ் நீதிமன்றம் 2002ஆம் ஆண்டு அந்தத் தண்டனையை உறுதி செய்தது. இதற்கிடையே புல்லாருக்கு மனநிலை பாதிக்கப்பட்டது. கருணை அடிப்படையில் தன்னை விடுதலை செய்ய வேண்டுமென்று புல்லார், 2003ஆம் ஆண்டு குடியரசுத்

தலைவருக்குக் கருணை மனு அனுப்பிட, 2011ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவராக இருந்த பிரதிபா பாட்டீல் அதனை நிராகரித்தார்.

கருணை மனுவின் மீது முடிவெடுக்கக் கால தாமதமானதால், தனக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையைக் குறைக்க வேண்டுமென புல்லார், உச்சநீதிமன்றத்தில் 2011 செப்டம்பரில் மனு தாக்கல் செய்து, கடந்த 12-4-2013 அன்று அந்த மனு நிராகரிக்கப்பட்டது. இதனையடுத்து பஞ்சாப் மாநிலம் முழுவதிலும் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. மனநிலை பாதிக்கப்பட்ட புல்லாருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கக்கூடாதென சில மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை எழுப்பின. பஞ்சாப் மாநில ஆளுங் கட்சியான சிரோன்மணி அகாலி தளம் சார்பில் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டது. அந்த மாநில முதலமைச்சர் பிரகாஷ் சிங் பாதல் அவர்களும், அவர் மகனும் துணை முதலமைச்சருமான சுக்பிர் சிங் அவர்களும் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களை யும், மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே அவர்களையும் நேரில் சந்தித்து, புல்லாருக்குக் கருணை காட்டும்படி வலியுறுத்தினர். இந்தப் பிரச்சினை காரணமாக பஞ்சாபில் கொந்தளிப்பான நிலை நிலவுவதாகவும், புல்லாருக்குக் கருணை காட்டுமாறும், அதன் மூலம் மாநிலத்தில் அமைதியை நிலைநாட்ட உதவிடுமாறும் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

மத்திய உள்துறை அமைச்சர் ஷிண்டே அவர்களிடம் செய்தியாளர்கள் இதைப்பற்றிக் கேட்டபோது, - "பஞ்சாப் முதல் அமைச்சரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்" என்று கூறினார். அதனைக் குறிப்பிட்டுக்காட்டி, "பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற முதலமைச்சர் முதல் அந்த மாநில மக்கள் அனைவரும் ஒருமனதாகக் குரல் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே என்ன நிலைமை?" என்று நான் வேதனையை வெளிப்படுத்தியிருந்தேன்.

அதுமாத்திரமல்ல; 29-8-2011 அன்று நான் விடுத்த அறிக்கையில், "மனித உரிமைக்கும், மனிதாபிமானத்திற்கும் எதிரான தூக்குத் தண்டனை தேவையில்லை என்றும், அதனை எல்லா நாடுகளும் ரத்து செய்து விடலாமென்றும் கருத்துத் தெரிவிக்காதோர் யாரும் இல்லை. உயர்ந்தபட்சத் தண்டனை

யான தூக்குத் தண்டனைக்குப் பதிலாக - கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு கைதி - எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும் அந்தக் குற்றத்தை எண்ணி யெண்ணி தனக்குத்தானே வருந்துவதை விட தூக்குத் தண்டனையால் பெரிய பயன் ஒன்றும் விளைந்துவிடப் போவதில்லை என்பதால்; ஆயுள் தண்டனையாக மாற்றி அமைத்திட வேண்டும். கொலைக் குற்றத்தில் ஒரு மனிதன் ஈடுபட்டிருப்பானேயானால், அவன் அதற்காக ஆயுள் முழுவதும் வருந்தி வாடுவதுதான்; தூக்குத் தண்டனையை விடக் கடுமையானது என்பது மட்டுமல்ல - அந்த மனிதன் திருந்தி வாழ்வதற்கான வாய்ப்பினை வழங்கி, வழிவகுத்திடக் கூடியதுமாகும். மத்தியப் பேரரசுக்கு நாம் எழுதிய மனமுருக்கும் கடிதங்களும் - பிரதமர் மற்றும் இந்தியத் தலைவர்கள் அனைவரிடமும் நேரில் எடுத்துவைத்த கோரிக்கைகளும் யாரும் அறியாதது அல்ல.

தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்போவதாகக் கூறப்படும் சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகிய மூவரின் உயிர்களைக் காத்தருள வேண்டுமென்றும் - இளந்தலைவர் ராஜீவ் காந்தியே இருந்தால்கூட; இந்தச் சூழலில் உண்மைத் தமிழர்களின் குரலுக்கு மதிப்பளித்து, “மறப்போம்; மன்னிப்போம்” எனும் அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப இந்த மூவரின் உயிரையும் அந்த மாமனிதர் காப்பாற்றியிருப்பார் என்பதை எண்ணி - மரண தண்டனையை மாற்றியமைத்து; அவர்கள் உள்ளபடியே குற்றம் புரிந்திருந்தால்; அதற்காக மனம் வருந்தும் நிலையில் அவர்கள் இருபதாண்டு காலத்திற்குமேல் சிறையில் இருந்ததையே ஆயுள் தண்டனையைவிட அதிகமானதெனக் கருதி - தூக்குத் தண்டனையை ரத்து செய்தால் - இந்த மனித நேயச் செயலை மனமாரப் புகழ்ந்து மகிழக் கூடிய இனமாக தமிழினம் இருக்கும் என்று எடுத்துக் கூறி இந்த மூவரையும் மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று; தூக்கு மேடையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்; அதன் பிறகு எத்தகைய தூய வாழ்வினை மேற்கொண்டு அதனைத் தொடருகிறார்கள் என்பதை அறிந்தவன் என்ற முறையிலும், அவர்களின் விடுதலைக்குக் காரணமாக இருந்தவர்களில் ஒருவன் என்ற அடிப்படையிலும்; மத்திய, மாநில அரசுகளை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதன்பின்னர், இதே பிரச்சினைக்காக நான் விடுத்த அறிக்கை ஒன்றில், "இந்த மூவரையும் விடுவிப்பதற்கான தீர்மானத்தை பேரவையில் நிறைவேற்றியபோது ஜெயலலிதா தனது உரையில், அரசியல் அமைப்புச் சட்ட விதி 161இன் கீழ் மாநில முதலமைச்சருக்கு இதில் அதிகாரம் இல்லை என்றும், மாநில கவர்னருக்கும் அதிகாரம் இல்லை என்றும் சொல்லியிருக்கிறார். இன்றுவரை ஜெயலலிதா அதே கருத்தைத்தான், அதாவது இதிலே மாநில முதல் அமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்பதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார். ஆனால் தமிழகச் சட்டப்பேரவையில் 30-8-2011 அன்று அவர் 110வது விதியின்கீழ் படித்த அறிக்கையில், "கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவினை ஏற்று மேதகு ஆளுநர் அவர்கள் 21-4-2000 அன்று ஒப்புதல் அளித்தார்" என்று சொல்லியிருக்கிறார். அதே முறையில்தான் இந்த மூன்று பேரின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற அக்கறையுடன் தமிழக அரசும், ஜெயலலிதாவும் தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநரின் பரிந்துரைக்கு அனுப்ப வேண்டுமென்று நானும், தமிழகத்திலே உள்ள வேறு சில கட்சிகளும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறோம்.

அதைப்போலவே, வீரப்பனின் நண்பர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நால்வருக்கும் கருணை காட்டி, தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி அமைத்திட வேண்டுமென்றும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறோம்.

ஞானப்பிரகாசம், சைமன், மீசை மாதையன், பிலவேந்திரன் ஆகிய நான்கு பேர் மீது வழக்கு விசாரணை நடத்திய மைசூர் தடா நீதிமன்றம் ஆயுள் தண்டனைதான் அவர்களுக்கு விதித்தது. ஆனால் இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்த காரணத்தால்தான், உச்சநீதிமன்றம் இந்த நான்கு பேருக்கும் விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை, தூக்குத் தண்டனையாக மாற்றி 2004ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. தீர்ப்பளித்து ஒன்பதாண்டு காலமாக இந்தத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவில்லை. இதற்கிடையே அவர்கள் நான்கு பேரும் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பினார்கள். அந்தக் கருணை மனுவினை இந்தியக் குடியரசுத்

தலைவர் நீண்டகால நிலுவைக்குப் பிறகு, கடந்த 11-2-2013 அன்று நிராகரித்துவிட்டார்.

அந்த நான்கு பேரின் சார்பாக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தண்டனையை நிறைவேற்றத் தடை விதிக்கக் கோரியும் உச்சநீதிமன்றத்தில் 16-2-2013 அன்று மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். மேலும் அந்த மனுவில் தங்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் சார்பில் வழக்கறிஞர்கள் காலின் கன்சால்வஸ், சமிக் நாராயண் ஆகியோர் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. அல்டமாஸ் கபீர் அவர்களின் இல்லத்திற்கே சென்று இந்த மனுவினைத் தாக்கல் செய்து, உடனடியாக அதன்மீது விசாரணை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். உச்சநீதிமன்றம் இந்த நால்வர் மீதான முடிவையும் தள்ளி வைத்துள்ளது.

2007 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மன்றம் தூக்குத்தண்டனைக்கு எதிரான ஒரு தீர்மானத்தை முன்வைத்த போது, அதை 104 நாடுகள் ஆதரித்துக் கையெழுத்திட்டன; இந்தியா உட்பட 39 நாடுகள் தான் அதை எதிர்த்து வாக்களித்தன; ஐ.நா. தீர்மானத்தையொட்டி உலகின் 90 சதவிகித நாடுகள் தூக்குத் தண்டனையை ரத்து செய்து விட்டன. அந்தப் பெரும்பான்மையுடன் இந்தியாவும் இணைய வேண்டாமா?

‘குற்றவாளிகள் தப்பித்தாலும், நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதை பொறுப்பிலே உள்ளவர்கள் மனதிலே கொண்டு இந்த நால்வரின் தூக்குத் தண்டனையையும், மற்றும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்குத் தண்டனையையும் புல்லாரின் தண்டனையை மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்போது; இணைத்துப் பரிசீலித்து, தண்டனையை மாற்றி அமைத்திட வேண்டும் என்றும், பொதுவாக தூக்குத் தண்டனையையே அறவே ரத்து செய்ய வேண்டுமென்றும் மீண்டும் ஒரு முறை வலியுறுத்தி அதற்கு வழிகாண மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக் கொள்கிறேன்’ என்று விளக்கமாகத் தெரிவித்திருந்தேன்.

இவ்வாறு நான் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்ததற்கு, மத்திய, மாநில அரசுகளிடமிருந்து எந்தவிதமான பதிலும்

கிடைக்காத நிலையில், உச்சநீதிமன்றம் என்னைப் போன்றவர்களின் உள்ளக் கிடக்கையை ஏற்கும் வகையில் இந்த வரலாற்றுப் புகழ் மிக்கத் தீர்ப்பினை அளித்துள்ளது.

இந்தத் தீர்ப்பினால் பயன்பெறுவோருக்கும், அவர்களின் குடும்பத்தாருக்கும் என் மகிழ்ச்சியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதோடு, இந்தத் தீர்ப்பினை அளித்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களுக்கும், அவரோடு இணைந்து உதவி புரிந்த நீதிபதி அவர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

23-01-2014

3855. பொம்மலாட்ட ஆட்சியைப் புரிந்து கொள்ளுங்கள்!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவு என்ற தலைப்பில் தமிழக அரசு 21-1-2014 அன்று "செய்தி வெளியீடு" ஒன்றினை வெளியிட்டுள்ளது. அதில் மக்கள் நல் வாழ்வுத் துறை சார்பில் இந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக் கைகள் என்று இரண்டு மூன்று திட்டங்கள் முதல் பத்தியிலேயே கூறப்பட்டுள்ளன. "108" அவசர கால மருத்துவ ஊர்தி இலவசச் சேவைத் திட்டம் - உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டம் - டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் - வருமுன் காப்போம் திட்டம் - கண்ணொளி வழங்கும் திட்டம் - இளம்சிறார் மற்றும் பள்ளிச் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம் - இருதய நோய்த் தடுப்புத் திட்டம் - பச்சிளங் குழந்தைகளின் உயிர் காக்கும் அவசர கால சிகிச்சைத் திட்டம் - பள்ளி சுகாதாரத் திட்டம் போன்ற இத்தனைத் திட்டங்களும் தி.மு. கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் அல்லவா? "சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முன்மாதிரியாக விளங்குகிறது" என்று கழக அரசை மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் வெளிப்படையாகப் பாராட்டவில்லையா? கழக ஆட்சியில் 12-4-2010 அன்று டெல்லியில் நடைபெற்ற விழாவில் நல்வாழ்வுத் திட்டங்களைத் தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக, மத்திய அரசு தமிழ்நாட்டை முதல் மாநிலமாகத் தேர்ந்தெடுத்து, அதற்கான விருதினை அளித்ததை மறந்து விட முடியுமா? இதெல்லாம் தி.மு.கழக ஆட்சியின் சாதனைகள் அல்லவா?

அரசின் செய்திக் குறிப்பில் இவற்றையெல்லாம் மறைத்து விட்டதோடு, இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், தி.மு. கழக ஆட்சியில் தலைமைச் செயலகம், சட்டப் பேரவை ஆகியவை இயங்குவதற்காக மிகவும் நேர்த்தியாகக்

கட்டப்பட்ட கட்டிடத்தில் பல்துறை உயர் சிறப்பு மருத்துவமனை தொடங்க முடிவெடுத்தது பற்றியும், அந்தக் கட்டிடத்தை மருத்துவமனையாக மாற்றுவதற்காக சுமார் 27 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு வருவது பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு. கழக ஆட்சியில் கட்டப்பட்டு, தலைமைச் செயலகமாகவும், சட்டப்பேரவையாகவும் பல மாதங்களாக இயங்கி வந்த கட்டிடத்தை, மருத்துவமனையாக மாற்றுவதற்குக் காரணம் என்ன என்பது பற்றி அந்த அறிக்கையில் முதலமைச்சரோ, அல்லது அரசின் சார்பில் வேறு யாருமோ கூறவில்லை. அங்கே கட்டடப் பணிகள் முழுவதும் முடிவு பெறாமல், அதற்கான திறப்பு விழா 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவசர கதியில் நடத்தப்பட்டது என்று அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற பெரிய கட்டிடங்களின் திறப்பு விழா நடைபெறும் போது சிறு சிறு பணிகள் முடிவடையாமல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் திறப்பு விழா நடைபெறுவது என்பது ஒரு குறை அல்ல. 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் திறக்கப்பட்ட பிறகு 2011ஆம் ஆண்டு மே திங்கள் வரை அங்கே தலைமைச் செயலகமும், சட்டப்பேரவையும் முறையாகத்தானே செயல்பட்டு வந்தன. அதிலே ஏதாவது சுணக்கமோ அல்லது பிரச்சினையோ ஏற்பட்டதா? எந்தப் பணியாவது நடைபெற முடியாமல் போய்விட்டதா? ஆனால் அந்தத் தலைமைச் செயலகத்தை ஜெயலலிதா மாற்றுவதற்குக் காரணமாக என்ன சொன்னாரென்றால், புதிய தலைமைச் செயலகத்தில் ஒரு சில துறைகள்தான் உள்ளன; மற்ற துறைகளுக்கான கட்டிடம் கட்டப்படும் நிலையிலே இருந்தன; எனவே இடத்தை மாற்றினால் கோப்புகளையெல்லாம் தற்போதுள்ள செயலகத்திலிருந்து கொண்டு வருவதற்கு அதிக தூரமாகும் என்று சொன்னார். ஆனால் தற்போது ஒரு மாத காலமாக முதல் அமைச்சர் ஜெயலலிதா, சென்னையிலிருந்து 600 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள கொடநாட்டிலிருந்து ஆட்சிப் பணிபுரிகிறாரே, அந்த இடத்திற்குக் கோப்புகளைக் கொண்டு செல்வதற்கும், அமைச்சர்களும் அதிகாரிகளும் சென்று வருவதற்கும் மட்டும் நிர்வாக வசதி எப்படி ஏற்பட்டுள்ளது என்று முதல் அமைச்சர்தான் கூற வேண்டும்.

முதல் அமைச்சருக்கு பல்துறை உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்றினை சென்னையிலே அமைக்க வேண்டுமென்ற விருப்பம்

இருந்தால், சென்னையில் வேறு எங்கெங்கோ இடங்கள் இருக்கின்றனவே, அங்கே ஒரு கட்டிடத்தை, மருத்துவமனைக்கே உகந்த வகையில் திட்டமிட்டு, எழுப்பி உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்றினைத் தொடங்கினால், வருங்காலத் தமிழகம், ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது இந்த மருத்துவமனையைக் கட்டித் திறந்தார் என்று நினைக்கும். ஆனால் தற்போது என்ன சொல்வார்கள்? முதல் அமைச்சர் கருணாநிதி மிகுந்த சிரமப்பட்டு எழுப்பிய தலைமைச் செயலகத்தை, அடுத்து வந்த அம்மையார் மருத்துவமனையாக மாற்றினார் என்றுதானே பொதுமக்கள் சொல்வார்கள்!

தலைமைச் செயலகத்திற்காக - சட்டப்பேரவைக்காக கழக ஆட்சியில் எழுப்பப்பட்ட அந்தக் கட்டிடத்தை, முதலமைச்சர் ஜெயலலிதாவின் காழ்ப்புணர்ச்சி காரணமாக மருத்துவமனையாக மாற்று வதற்காக மட்டும் அ.தி.மு.க. அரசு 26 கோடியே 93 இலட்ச ரூபாயும், மற்றும் உபகரணங்கள், மரச்சாமான்கள் வாங்குவதற்காக முதற்கட்டமாக 76 கோடியே 4 லட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்ததோடு, மேலும் முடிவு பெறாத மாட விதானத்தின் கட்டிடப் பணிகளை முடிப்பதற்காகவும், எஞ்சியுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் 6 கோடியே 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதற்காக ஒரு அறிவிப்பினை முதல் அமைச்சர் உத்தரவு என்று அனைத்து ஏடுகளிலும் வெளியிடச் செய்திருக் கிறார்கள். இந்தச் செலவுகள் எல்லாம் எப்படி ஏற்பட்டன? இவ்வளவு ரூபாய் அந்தக் கட்டிடத்தை மாற்றுவதற்காகச் செலவு செய்ததற்குப் பதிலாக வேறொரு கட்டிடத்தைப் புதிதாக வேறு ஒரு இடத்தில் உருவாக்கி, அங்கே உயர் மருத்துவமனையை நடத்தியிருக்கலாம் அல்லவா? செலவழிக்கப்பட்ட இந்தத் தொகை யாருடைய வீட்டுப் பணம்? தமிழ்நாட்டு மக்கள் கொடுத்த வரிப் பணம் இப்படியெல்லாம் வீணே செலவழிக்கப்படலாமா? இதற் கெல்லாம் யார் பொறுப்பு? விசாரணை நடத்தப்பட வேண்டாமா?

இதுபற்றி அப்போதே 16-5-2011 அன்று, அ.தி.மு.க. ஆட்சி அமைந்து இரண்டொரு நாட்களிலேயே இந்தக் கட்டிடத்தை மாற்றுவதற்கான முயற்சி எடுத்த நேரத்தில், ஆங்கில நாளேடான "இந்து" வெளியிட்ட தலையங்கத்தில் என்ன எழுதியிருந்தார்கள் தெரியுமா?

"1917ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியின் போது புரட்சியாளர்களில் சிலர் ஜார் மன்னனின் அரண்மனையை முற்றுகையிட்டனர். பிரமாண்டமான அந்த அரண்மனையில் ஜார் மன்னன் விலை மதிப்புமிக்க கலைப் பொருள்களை சேமித்து வைத்திருந்தான். கலா ரசனையுள்ள ஜார் மன்னன் பல்வேறு நாடுகளிலிருந்து அழகிய சிற்பங்களையும் எழிலோர்ந்த ஓவியங்களையும் பழங்கால நினைவுச் சின்னங்களையும் கொண்டு வந்து வைத்திருந்தான். உள்ளே புகுந்த புரட்சியாளர்கள் ஜார் மன்னன் மீது இருந்த கோபத்தால் அந்த அரிய கலைப் பொக்கிஷங்களை உடைத்து நொறுக்கத் துவங்கினர். தகவல் அறிந்த தோழர் லெனின், உடனடியாக அனைத்துப் புரட்சி யாளர்களும் அரண்மனையை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார். ஏனெனில், "அரண்மனையில் உள்ள கலைச் செல்வங்கள் அனைத்தும் பன்னெடுங்கால பன்னாட்டுச் சின்னங்கள், மனித உழைப்பினால் உருவானவை. அவற்றை உடைத்து நொறுக்குவது என்பது நமது பாரம்பரியப் பெருமை கொண்ட அடையாளங்களை நாமே அழிப்பதாகும்" என்று லெனின் குறிப்பிட்டார். இதை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம், முதல்வர் ஜெயலலிதா தலைமைச் செயலகத்தையும், சட்டமன்றத்தையும் ஓமந்தூரார் தோட்டத்திலிருந்து பழைய புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றுகின்ற சம்பவம் நினைவுக்கு வருகிறது.

ஓமந்தூரார் தோட்டத்தில் உள்ள புதிய சட்ட மன்றக் கட்டிடம் சுமார் 400 கோடி ரூபாயில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இரவு பகலாக தங்களது ரத்தத்தையும் வியர்வையையும் சிந்தி பல மாதங்கள் அதை உருவாக்கினார்கள். அரசின் பல முக்கிய இலாக்காக்கள் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டன. இந்நிலையில் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்ற மூன்றாவது நாளே தலைமைச் செயலகத்தையும், சட்டமன்றத்தையும் கோட்டைக்கே மாற்றுவது என்று முடிவு செய்து அதற்கான பணிகள் தற்போது நடந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புதிய சட்டமன்றக் கட்டிடம் என்பது கலைஞருக்கு தனிப்பட்ட முறையில் உரிமை உள்ளதல்ல. தமிழக மக்களின் வரிப் பணத்தால் உருவாக்கப்பட்டது. தனிப்பட்ட முறையில் கலைஞர் மீதுள்ள கோபத்தால் இவ்வளவு பெரிய கட்டிடத்தைப் புறக்கணிப்பது உசிதமானதாகத் தெரியவில்லை. ஜெயலலிதா அமோக வெற்றி

பெற்றுள்ளார். அவரிடமிருந்து ஏராளமான உதவிகளையும் திட்டங்களையும் தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை பொதுப் பிரச்சினையில் காட்டுவது பரந்த மனப்பான்மைக்கு உரியது அல்ல. மேலும் இந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்குள் மூன்று நான்கு தொழிலாளர்கள் விபத்தில் பலியானதாகச் சொல்லப்படுகிறது. மனித உயிர்களைப் பணயமாக வைத்து பிற மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான ஊழியர்களின் கடும் உழைப்பைக் கொண்டு கட்டப்பட்டுள்ள இந்த பிரம்மாண்டமான கட்டிடத்தைப் புறக்கணிப்பது வருத்தமளிக்கிறது. இந்தத் தேசத்தின் பிரதமரே திறந்து வைத்த ஒரு கட்டிடத்தை ஒரு மாநில முதலமைச்சர் புறக்கணிப்பது என்பது பிரதமருக்கு இழைக்கப்படும் அவமானமாகவே கருத முடிகிறது. நகருக்குப் பெருமை சேர்க்கும் இந்த எழிலார்ந்த கட்டிடத்தை தனிப்பட்ட ஒருவருக்காக ஒரு முதலமைச்சரே நிராகரிப்பது வருத்தம் அளிக்கிறது" என்று "இந்து" நாளேடு தலையங்கம் தீட்டி வேதனையை வெளியிட்டது.

"இந்து" நாளேடு இவ்வாறு எழுதியதற்குப் பிறகாவது, அத்தகைய கருத்துகளுக்கு மதிப்பளித்திடும் வகையில் முதலமைச்சர் தன்னைத் திருத்திக் கொண்டு விட்டாரா? தி.மு.கழக ஆட்சியில் கட்டப்பட்ட கட்டிடம் என்பதற்காக, அங்கே செல்லமாட்டேன் என்று வறட்டுப் பிடிவாதத்திற்காகச் செய்யப்பட்ட அரசுப் பணம் எவ்வளவு? தி.மு.கழக ஆட்சியில் கட்டப்பட்டதைப் பயன்படுத்திக் கொள்ள மாட்டேன் என்றால், முதலமைச்சர் ஜெயலலிதா அன்றாடம் தலைமைச் செயலகத்திற்குச் செல்கிறாரே "மியூசிக் அகாடமி" பக்கத்திலே உள்ள பாலம் வழியாக! அது தி.மு.கழக ஆட்சியிலே கட்டப்பட்டது தானே? அதிலே மட்டும் பயணம் செல்லலாமா?

நேற்றையதினம் அந்த அறிவிப்பிலேயே மற்றொரு அறிவிப்பாக கொசுக்களை ஒழிப்பதற்காக களப்பணியாளர்களை நியமனம் செய்தல், கொசுப் புழுக் கொல்லி மருந்துகளை வாங்குதல் ஆகியவற்றுக்காக இரண்டு கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்து முதல் அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறாராம்! கொசுக்களை ஒழிக்க இரண்டு கோடி ரூபாயா? சென்னை மாநகரத் தெருக்களிலே கிடக்கும் குப்பைகளை ஒழுங்காக அகற்றினாலே, கொசுக்கள் தாமாகவே ஒழிந்து விடும். சென்னையிலே மக்கள்

இரவில் தூங்க முடிகிறதா? கொசுக்களின் தொல்லை! இதோ குளிர் காலம் முடியப் போகிறது; தானாகவே கொசுக்களும் ஒழிந்துவிடும். முறையாகச் செய்ய வேண்டுமேயானால், இரண்டு மாதங்களுக்கு முன்பே செய்திருக்க வேண்டிய பணியை தாமதமாகத் தற்போது செய்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் தலைநகரிலே இல்லாததால் அவருக்கு கொசுத் தொல்லை தெரியவில்லை போலும்!

தமிழ்நாட்டு மக்களே! தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள்! நீங்கள் வாக்குகளை அளித்து எப்படிப்பட்ட ஆட்சியைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இதோ; முதலமைச்சர் கொடநாட்டிற்குச் சென்று ஒரு மாதமாகிறது! கேட்டால் அங்கிருந்து ஆட்சிப்பணி புரிகிறாராம். இன்றைக்குத்தான் திரும்புகிறாராம். இதோ 30ஆம் தேதி தமிழகச் சட்டப்பேரவை கூடப் போகிறதாம்! ஆளுநர் உரையாற்றப் போகிறாராம்! அந்த ஆளுநர் உரை என்றால், அரசின் கொள்கை களையெல்லாம் அறிவிக்கின்ற உரையாகும். அரசின் முதல் அமைச்சர், தலைமைச் செயலாளரோடும், நிதித் துறை, பொதுத் துறைச் செயலாளர்களோடும் கலந்தாலோசித்து, விவாதித்து சுமார் ஒரு மாத காலமாவது முயற்சித்து தயாரிக்கப்பட வேண்டிய உரை அது. அந்த உரை பற்றி யாருக்குக் கவலை?

திருமணப் பத்திரிகை கொடுப்பதற்காக சிறுபான்மை வாரியத் தலைவர் தன் குடும்பத்தோடு உதகைக்குச் சென்றிருக்கிறார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் ஜி.ராம கிருஷ்ணன், ஏ.சவுந்தரராசன், கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் கொடநாடு சென்று முகாம் அலுவலகத்திலே முதல் அமைச்சரைச் சந்தித்து மாநிலங்கள் அவைத் தேர்தலிலே ஆதரவு கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ள கவலை, வேறென்ன செய்வார்கள்? மற்றொரு கட்சியான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒவ்வொரு நாளும், அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் நாங்கள் கூட்டணியிலே இருக்கிறோம் என்று இவர்கள்தான் கட்டியம் கூறிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் பொதுக் குழுவில் நாற்பது இடங்களிலும் நாங்களே நிற்போம் என்று முழங்கி விட்டுச் சென்றுவிட்டார். மீனவர்கள் பிரச்சினை ஓய்ந்தபாடில்லை. இன்று கூட 25 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 20ஆம் தேதி நடைபெற வேண்டிய பேச்சுவார்த்தை

27ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இவர்களைக் கேட்டால் மத்திய அரசின் விருப்பப்படி பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். மத்திய அமைச்சர்களோ ஒன்றரை ஆண்டுத் தாமதத்திற்குக் காரணம் தமிழக அரசுதான் என்கிறார்கள். பேச்சுவார்த்தை நடந்தாலும், தமிழக மீனவர்களைக் கைது செய்வதை நிறுத்த மாட்டோம் என்று இலங்கை அமைச்சர் ரஜிதா சேனரத்னா சூளுரைக்கிறார்; இன்று வரை கைது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. மீனவர்களோ உண்ணாவிரதம் இருந்து பார்த்து விட்டு தற்போது தீக்குளிப்போம் என்கிறார்கள். குடிநீர்ப் பஞ்சம் எப்போது வரலாம் என்று மிரட்டிக் கொண்டிருக்கிறது. ஆட்சி என்றால் இதைப் பற்றியெல்லாம் ஒவ்வொரு நாளும் கவனித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சட்டம், ஒழுங்கோ கேட்க வேண்டியதில்லை. சந்திக்குச் சந்தி சிரியாய்ச் சிரிக்கிறது.! இந்த ஆட்சியில் கொலை நடக்காத நாள் உண்டா? கொள்ளை நடக்காத நாள் உண்டா? முன்பெல்லாம் செயின் பறிப்பு அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும். இப்போதே ஏடுகளிலேயே, "இந்த வட்டாரத்தில் இத்தனை செயின் பறிப்பு சம்பவங்கள் நடைபெற்றன" என்று தொகுத்து வெளியிடு கிறார்கள். அன்றாடம் அரசு செய்திக் குறிப்புகள் வாயிலாகவும், காணொலிக் காட்சி வாயிலாகவும் "ரிமோட் கண்ட்ரோல்" மூலமாக இந்த ஆட்சி நடைபெறுகிறதே தவிர வேறென்ன? ஜனநாயகம் வெறும் காட்சிப் பொருளாகிவிட்டது. "துக்ளக் ஆட்சி" என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லையென்றால் இப்போது இந்தப் பொம்மலாட்ட ஆட்சியைப் பார்த்துப் புரிந்து கொள்ளுங்கள்!

அன்புள்ள,

மு.க.

24-01-2014

3856. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (5)

உடன்பிறப்பே,

அண்ணா அவர்கள் இருந்து மிகவும் வெற்றிகரமாக நடத்திய விருகம்பாக்கம் மாநாட்டினைப் பற்றிக் கடந்த வாரம் விரிவாக விளக்கியிருந்தேன் அல்லவா? அண்ணா அவர்கள் நம்மை விட்டு மறைந்த பிறகு 1970ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்களில் - இதே திருச்சியில்தான் திருச்சி மாவட்ட ஐந்தாவது தி.மு.க. மாநாடு சிறப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டில் நான் ஆற்றிய உரையின் தொடக்கம் இப்படித்தான் அமைந்தது!

“கழகக் கண்மணிகளே! அருமைத் தாய்மார்களே! பெரியோர்களே! பேரறிஞர் அண்ணா அவர்களே!... என்று அழைத்துப் பேச்சைத் தொடங்கிட வேண்டிய நான், இன்று அந்த அண்ணன் எங்கே? எங்கே? என்று தேடுகிற நிலைமையில் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

“தம்பீ வா! தலைமையேற்க வா!” என்று அழைத்து ஆணையிட்டதும், கேட்டு ஓடிவந்த நாவலர், இங்கே அமர்ந்திருக்கிறார், அழைத்து ஆணையிட்ட நீ எங்கே போய்விட்டாய்?

மதியழகனுக்கு எப்போதுமே பிடிவாதக் குணம் அதிகம்; ஆனாலும் தான் நினைத்ததைப் பேசி நம்மைக் கவர்ந்து தன் பக்கம் இழுக்கத் தவறமாட்டார் என்று அடிக்கடி புகழ்வீர்களே அண்ணா! அந்தப் பிடிவாதக்கார மதியழகன் இங்கே அமர்ந்திருக்கிறார்; அவரைப் பிரிந்து எங்கே அண்ணா சென்று விட்டீர்கள்?

சிற்றரசு பேசினால் நான் குலுங்கக் குலுங்கச் சிரித்து விடுகிறேனடா தம்பீ! என்று சிரிப்பீர்களே அண்ணா; அந்தச் சிற்றரசு

இங்கே எங்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தபோது, அதை ரசிக்காமல் எங்கே போய்விட்டீர்கள் அண்ணா?

பக்கத்தில் என்.வி.என். அமர்ந்து, வெற்றிலை மடித்துத் தர, அதை வாங்கி வெற்றிச் சிரிப்போடு வாய் குழையக் குழையப் போட்டுக் கொள்வீர்களே, அண்ணா! வெற்றிலை மடித்துத் தர இங்கே என்.வி.என். இருக்கிறார், வெற்றிகளைத் தந்த எங்கள் அண்ணனே, நீ எங்கே போய்விட்டாய்?

ஆழமாகச் சிந்திப்பதும் - அமைதியாக இருப்பதும் - ஆணித்தரமாக வாதிடுவதும் அன்பழகனின் இயல்பு எனப் பாராட்டுவீர்களே அண்ணா - அந்தப் பேராசிரியர் இங்குள்ளார்; பெருமை மிகு அண்ணனே! நீ எங்கே போய்விட்டாய்?

“என்ன முத்து? கோபமாக வருகிறாயா? உட்கார்!” என்று புன்னகை தவழச் சொன்னதும், கோபத்தை எல்லாம் மறந்துவிட்டுக் குளிர்ந்த முகத்தோடு எதிரே அமர்வாரே; அந்த மதுரை முத்து இந்த மாநாட்டிலே இருக்கிறார்; ஆனால் அவரைக் குளிரவைக்கும் அண்ணனே; நீ எங்கே போய்விட்டாய்?

“மன்னை, மன்னார்குடிக்கு வர வேண்டாமென்று கருணாநிதிதான் சொல்கிறான், என் மேல் குற்றமில்லை யப்பா” என்று குறும்பு செய்வீர்களே, அந்தக் குறும்பைத் தாங்கிக் கொள்கிற மன்னை நாராயணசாமி இங்கே இருக்கிறார், அண்ணனே, எங்கே போய்விட்டாய்?

“அன்பில்! எங்கே கொஞ்சம் கண்ணைக்காட்டு” என்று கண்ணைக் காட்டச் சொல்லிக் குமிழ்க் கண்களைப் பார்த்து ரசிப்பீர்களே, அந்தக் கண்ணைக் காட்ட நம்முடைய அன்பில் இங்கே இருக்கிறார். அண்ணனே, கண்மூடி நீ எங்கே போய்விட்டாய்?

“சென்று வா தம்பீ; வென்று வா தம்பீ” என்று கல்லக்குடிப் போராட்டத்திற்குச் சிதம்பரத்திலே என்னை வழியனுப்பி வைத்தீர்களே, அண்ணா! சென்று வந்திருக்கிறேன்; வென்று வா என்று சொன்ன நீங்கள் எங்கே போய் விட்டீர்கள்? எங்கே போய்விட்டீர்கள்? என்று கேட்டுத்தான் இந்த மாநாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்களே என்று நான் அழைக்கிறேன்.

எனக்கு நம்பிக்கை உண்டு. இங்கேயிருக்கிற எங்களுக்கெல்லாம் நம்பிக்கை உண்டு. அண்ணா நீ இங்கேதானிருக்கிறாய். இந்தப் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறாய். இந்த ஆரவாரத்தைக் காணுகிறாய். இங்கே இருக்கின்ற உன்னுடைய அருமைத் தங்கைகளையெல்லாம் பார்க்கிறாய். தம்பிகளின் பட்டாளங்களைக் காணுகிறாய். மலர் போன்ற மழலைக் குழந்தைகளின் இதழ் ஓரத்தில் முத்தமிடுகிற அண்ணனே, நீ எங்கும் போகவில்லை, இங்கேதான் இருக்கிறாய்! இங்கேதான் இருக்கிறாய்! எங்களுடைய நெஞ்சங்களில்தான் இருக்கிறாய் அண்ணனே! இங்கே தான் இருக்கிறாய்!"

ஒவ்வொரு மாநாட்டிலும் கழகத்தினுடைய பொருளாளர் என்கிற முறையில் நான் கணக்குகளை எல்லாம் ஒப்படைக்க மாநாட்டு மேடைக்கு வர; எவ்வளவு வசூல் என்று அண்ணா கேட்க - சொல்ல முடியாது, அது "சஸ்பென்ஸ்" என்று அவரிடத்தில் நான் சொல்ல - "சும்மா சொல், நான் வெளியே சொல்ல மாட்டேன்" என்று அவர் வேடிக்கை பேச - பக்கத்தில் இருக்கிற ப.உ. சண்முகம் வசூலை அவரிடம் சொல்லிவிட - "பார்த்தாயா, பார்த்தாயா, உன்னுடைய நண்பனே சொல்லிவிட்டான்" என்றெல்லாம் கேலி பேசுவாரே, அந்த அண்ணன் மேடையில் நின்று பேசுகின்ற அந்த எழில் ஓவியத்தைக் கண்டு கண்டுகளித்து வந்த நான் இன்றையதினம் அந்த இடத்திலே நின்று பேசுவது என்றால் என்னுடைய உடல் எல்லாம் நடுங்குகிறது! என்னுடைய உள்ளமெல்லாம் குமுறுகிறது! என் கண்கள் குளமாகின்றன! தாயை இழந்த நேரத்திலே - தந்தையை இழந்த நேரத்திலே எனக்கு ஏற்படாத கவலையை நான் கல்லறைக்குச் செல்கிற வரையில் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார் என்னுடைய அண்ணன்! அண்ணாவிற்குப் பிறகு இந்தப் பெரிய பொறுப்பினை என்னுடைய தோள்களிலே சுமத்தி வைத்திருக்கின்ற கழகத்தின் தங்கங்களே! உங்களை யெல்லாம் நம்பித்தான் நான் இங்கே அமர்ந்திருக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு அண்ணனாகத் தெரிகிறீர்கள். அண்ணன் ஒருவன் இருந்து எனக்கு வழங்க வேண்டிய ஆறுதலை - எனக்குத் தர வேண்டிய அறிவுரையை நான்கு கோடித் தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நீங்கள் எனக்குத் தந்து கொண்டிருக் கிறீர்கள்."

இப்படித்தான் கண்ணீரோடும் கவலையோடும் கனத்த இதயத்தோடும் அந்தத் திருச்சி மாவட்ட மாநாட்டிலே என்னுடைய பேச்சினைத் தொடங்கினேன். அதன் பின்பு, 1971ஆம் ஆண்டு ஜனவரி 24 அன்று சென்னை அசோக்நகரில் கழகத்தின் தேர்தல் சிறப்பு மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் நான் பேசுவதற்கு முன்பு வரை, இந்திரா காங்கிரசுடன் தேர்தல் கூட்டணி வருமென்று எதிர்பார்த்திருந்து, பேச்சுவார்த்தை வெற்றி பெறாத நிலையில் இந்திரா காங்கிரஸ் சார்பில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட காரணத்தால், நானும் என் பேச்சின்போது கழகத்தின் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுவிட்டேன். ஆனால் இரவு பன்னிரெண்டு மணி அளவில் டெல்லியிலிருந்து பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரும், திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களும் பேசிய பிறகு, காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதில்லை என்றும், பத்து நாடாளுமன்றத் தொகுதிகளில் மட்டும் போட்டியிடுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது. அந்தத் தேர்தலில் தி.மு. கழகம் 184 இடங்களிலும், தோழமைக் கட்சிகளான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 8 இடங்களிலும், பார்வார்டு பிளாக் 7 இடங்களிலும், பி.சோ. கட்சி 4 இடங்களிலும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் 6 இடங்களிலும், தமிழரசுக் கழகம் ஒரு இடத்திலும் வெற்றிபெற்றது. தி.மு.கழகம் பெற்ற இந்த வெற்றி தமிழகச் சட்டப்பேரவைத் தேர்தலில் இதுவரை எந்தக் கட்சியும் பெறமுடியாத மாபெரும் வரலாற்றுச் சாதனையாகும்.

தி.மு. கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு 1975ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெறுவதற்கு முன்பாக அதே ஆண்டு நவம்பர் 15, 16 ஆகிய நாட்களில் தி.மு. கழக மகளிர் மாநில மாநாடு மதுரை தமுக்கம் திடலில், வெற்றிச் செல்வி அன்பழகன் பந்தலில், சரஸ்வதி கந்தசாமி அரங்கில், பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி இராணி அண்ணா அவர்கள் தலைமையிலே நடைபெற்றது. மாநாட்டினை பொற்செல்வி இளமுருகு துவக்கி வைத்தார். மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் படத்தினை ஈ.வெ.ரா. மணியம்மையார் அவர்களும், டாக்டர் தர்மாம்பாள் படத்தினைத் திருமதி பூங்கோதை அவர்களும் திறந்து வைத்தார்கள். வரவேற்புக்குழுத் தலைவர் அலமேலு அப்பாதுரை; மாநாட்டுப் பொருளாளர் தமிழரசி, எம்.எல்.சி. ; மாநாட்டுச் செயலாளர்கள் தேவகி பாண்டியன், சக்தி

கோதண்டம், அமுதா ராகவன், எஸ்.பி. சற்குணம்; தொண்டர் படைத் தலைவி மதுரை அனுசுயா.

மகளிர் மாநாட்டினைத் தொடர்ந்து கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு கோவை மாநகரில் 75ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வாரத்தில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுத் திறப்பாளர், பொதுச் செயலாளர் நாவலர். கழகத் தியாகிகளின் படத் திறப்பாளர் பேராசிரியர் அன்பழகன். அந்த மாநாட்டில் தம்பி மு.க. ஸ்டாலின் நடித்த "வெற்றி நமதே" நாடகமும், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். நடித்த "சந்திரமோகன்" நாடகமும், கழகப் பேச்சாளர்கள் நடித்த "அவன்தான் எங்கள் இறைவன்" என்ற நாடகமும் நடைபெற்றன. இப்படி மாநாடு என்றாலே தி.மு. கழகத்திற்கு என்று ஒரு நீண்ட பண்பாட்டு - கலாச்சாரப் பின்னணி உண்டு.

திருச்சியிலே தற்போது பிப்ரவரித் திங்களில் நடைபெறவுள்ள பத்தாவது மாநில மாநாட்டினையொட்டி ஒன்றரை மாதங்களுக்கு முன்பே மாநாடு நடைபெறுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, பந்தல் அமைக்கின்ற வேலையும் தொடங்கி நடைபெற்று வருகிறது. மாநாட்டுப் பணிகளைக் கழகப் பொருளாளர் நேரில் சென்று பார்வையிட்டது பற்றி நான் ஏற்கனவே எழுதியிருந்தேன். அதைத் தொடர்ந்து அன்றாடம் திருச்சியைச் சுற்றியுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள் எல்லாம் திருச்சி சென்று மாநாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு உணர்வுபூர்வமான ஒத்துழைப்பினை நல்கி வருகின்ற புகைப்படங்கள் எல்லாம் நம்முடைய ஏடுகளிலே வெளிவருவதைக் கண்டிருப்பாய்! தஞ்சை மாவட்டக் கழகத்தின் தளகர்த்தர், முன்னாள் அமைச்சர் தம்பி கோ.சி. மணி நடக்க முடியாத நிலையிலேகூட மற்றவர்களின் துணையோடு வந்து மாநாட்டுப் பந்தலைப் பார்த்திருக்கிறார்.

அந்த அளவுக்கு அடக்க முடியாத ஆர்வம் அவருக்கு! அதுபோலவே மற்ற மாவட்டக் கழகங்களின் செயலாளர்கள் - குறிப்பாகத் திண்டுக்கல் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி ஐ. பெரியசாமி, தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளர், "முரட்டுப் பக்தர்" தம்பி என்.பெரியசாமி, கோவை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பொங்கலூர் பழனிசாமி, கடலூர் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி மூர்த்தி, தேனி மாவட்டக் கழகச் செயலாளர்

தம்பி எல்.மூக்கையா மற்றும் அவர்களோடு எல்.கணேசன், அறந்தாங்கி ராஜன், சேடப்பட்டி முத்தையா, அர. சக்கரபாணி, குத்தாலம் கல்யாணம், செ.ராமலிங்கம் ஆகியோர் பரவசத்தோடு சென்று பார்த்து வந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் வரவேற்று தம்பி நேருவும், திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு.அன்பழகன், அன்பில் பெரியசாமி, காஜாமலை விஜய், ஆர்.சி. கணேசன், குடமுருட்டி சேகர், மதிவாணன், கொ. தங்கமணி, கே.என்.சேகரன், துரை.கந்தசாமி, என்.டி.ஆர். சிங்காரம், துரை, நவல்பட்டு விஜி, தியாகராஜன், ரகுபதி, கென்னடி, பாஸ்கர், மோகன் மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் பந்தலைச் சுற்றிக் காட்டி உவகையோடு உபசரித்திருக்கிறார்கள்.

மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று தோழமைக் கட்சித் தலைவர்களுக்கெல்லாம் நானே கடிதம் எழுதி, அவற்றைப் பொருளாளர் தம்பி மு.க.ஸ்டாலின் நேரில் கொண்டுபோய்க் கொடுத்ததோடு அந்தக் கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டிலே தவறாமல் கலந்து கொள்வதாகப் பதில் கடிதமும் எழுதியிருக்கிறார்கள்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களையெல்லாம் தொகுத்திடும் பணியிலே தீர்மானக்குழுத் தலைவர் தம்பி பொன் முத்துராமலிங்கம் அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும் கடிதம் எழுதி, ஆங்காங்குள்ள பிரச்சினைகள் பற்றி அறிந்து, தீர்மானக் குழு உறுப்பினர்கள் குழந்தை தமிழரசன், புதுக்கோட்டை சி.முத்துசாமி, மீ.அ.வைத்திலிங்கம், கோவை க.ரா.சுப்பையன், வ.சத்தியமூர்த்தி, ஆதிசங்கர் ஆகியோரின் உதவியோடு என்னிடமும் கலந்தாலோசித்து, மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களையெல்லாம் முறையாகத் தயாரித்து வருகிறார்கள்.

மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி, பிரச்சாரக் குழு சார்பில் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம் 20-1-2014 அன்று திருச்சி, கலைஞர் அறிவாலயத்தில், தம்பி கே.என்.நேரு தலைமையில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் எஸ்.பி.சற்குணப் பாண்டியன், கழக மகளிரணித் தலைவர் நூர்ஜகான் பேகம் முன்னிலையில் நடைபெற்றுத் தமிழகம் முழுவதிலுமிருந்து மகளிர் அணியினர் மாநாட்டில் கலந்துகொள்வது பற்றித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். மாநில மகளிரணிச் செயலாளர்

புதுக்கோட்டை விஜயா, மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் காரல்மார்க்ஸ், காஞ்சனா கமலநாதன், விஜயா தாயன்பன், திருப்பூர் சுலக்சனா, திருவாரூர் விஜயகுமாரி, பவானி ராசேந்திரன், வசந்தி ஸ்டான்லி, சங்கரி நாராயணன், நளினி சாரங்கள், சித்திரமுகி சத்தியவாணி முத்து ஆகியோர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்னையில் என்னைச் சந்திக்கும் மாவட்டக் கழகச் செயலாளர்கள், எங்கள் மாவட்டத்திலிருந்து இத்தனை பேருந்துகளும், வேன்களும் புறப்படுவதற்கு முன்தொகை கட்டியிருக்கிறோம். என்றைக்குப் புறப்படுகிறோம் என்ற விவரங்களையெல்லாம் என்னிடம் பெருமிதத்தோடு கூறி வருகிறார்கள். இதற்கிடையே மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல், நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் பணிகளும் வந்துவிட்டன. அதிலும் தேவையான கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட பெரும் நிதி வேண்டும். அதற்காக தலைமைக் கழகத்தின் சார்பில் “டிக்கெட்” புத்தகம் முறைப்படி, கணக்குப்படி அச்சடிக்கப்பட்டு வரவேற்புக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரும் ஒன்றியக் கழகங்களுக்கும், நகரக் கழகங்களுக்கு அந்த டிக்கெட்டுகளைப் பகிர்ந்து விநியோகித்திருக்கிறார். தூத்துக்குடி மாவட்டக் கழகத்தின் சார்பில் 15 லட்சமும், அரியலூர், பெரம்பலூர் மாவட்டக் கழகங்களின் சார்பில் 25 லட்சமும், திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தின் சார்பில் 25 லட்சமும், கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் 10 லட்சமும், “பெல்” தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் ஐந்து இலட்ச ரூபாயும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் திருச்சி மண்டலத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக ஒரு இலட்ச ரூபாயும், மதுரை மாவட்ட தி.மு.க. சார்பாக ஐந்து இலட்ச ரூபாயும் முதல் தவணையாக நிதியளித்த புகைப்படங்கள் “முரசொலி”யில் வெளிவந்ததையும் கண்டிருப்பாய். மற்ற அமைப்புகளின் சார்பில் நிதியினை வசூலித்து வழங்கத் தயாராக இருப்பவர்களும், மாநாட்டுத் தேதி நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்து அவற்றை வழங்கிட முன்வரவேண்டும்.

இதற்கிடையே நம்முடைய கட்சியினரும், தோழமைக் கட்சியினரும் மாநாட்டுப் பணிகளை ஆற்றினால் போதாதென்று தமிழகத்தை ஆளும் கட்சியின் சார்பிலும் நமக்காக மாநாட்டுப் பணிகளை அவர்களுடைய பாணியில் ஆற்ற முன் வந்திருக்கிறார்கள். என்ன குழப்பமாக இருக்கிறதா? நம்முடைய கட்சியினரை உசுப்பி விட்டால்தானே மேலும் மேலும் எழுச்சி பெறுவார்கள்; அதற்கு உதவிடுவது போலத் திருச்சி மாநகரில், இந்த மாநாட்டினையொட்டி நாம் வைத்திருந்த "ப்ளக்ஸ்" போர்டுகளையெல்லாம் எங்கிருந்தோ வந்த அறிவுரையின்படி காவல் துறையினரே முன்வந்து, அந்தத் தட்டிகளை யெல்லாம் அகற்றியிருக்கிறார்கள். கட்சி சார்பில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்போது, அதற்கு முன் "ப்ளக்ஸ்" போர்டுகளை வைக்கவும், நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் அவற்றை எடுத்துவிடவும் நீதிமன்றமே அனுமதி கொடுத்திருக்கின்ற நிலையில் அ.தி.மு.க. அரசின் காவல் துறை, மாநாடு நடைபெறுவதற்கு முன்பாகவே, மாநாடு பற்றிக் கழகத்தின் சார்பில் வைக்கப்பட்டிருந்த போர்டுகளையெல்லாம் அகற்றியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய கழக போர்டுகளுக்குப் பக்கத்திலேயே முதலமைச்சர், ஜெயலலிதாவின் பிறந்த நாளினையொட்டி அ.தி.மு.க. சார்பில் வைக்கப்பட்டுள்ள பிறந்த நாள் வாழ்த்துப் "பேனர்"களை அகற்றாமல் விட்டுவைத்திருக்கிறார்கள். அந்த இரண்டு காட்சிகளையும் புகைப்படம் எடுத்து "முரசொலி"யிலேயே வெளியிட்டிருக்கிறார்கள். மாநாடு நெருங்க நெருங்க இன்னும் என்னென்ன வகையில் "திருப்பணி" செய்யவிருக்கிறார்களோ? இதுபோன்ற எத்தனையோ தடைகளையெல்லாம் தாண்டி வென்று வளர்ந்ததுதானே நம்முடைய கழகம்!

"சீப்பை ஒளித்துவிட்டால் திருமணமே நின்று விடும்" என்று நினைக்கிறார்கள்! ஆனால் கழகத்தைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட எதிர்ப்புகளையெல்லாம் புறங்கண்டு, திருச்சி மாநாடு கழக வரலாற்றில் மீண்டும் ஒரு சிறப்பான இடத்தைப் பெறும் என்பதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை. "வெட்டி வா என்றால், கட்டி வரும்" காளைகளாம் என்னுடைய அருமை உடன்பிறப்புக்களே, கழகத்தின் மாநாடுகளையெல்லாம் வெற்றி மாநாடுகளாக்கி கழகத்தின் தலைமையை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திடும் தோழர்களே, இதோ கழகத்தின் பத்தாவது மாநில

மாநாட்டையும் வெற்றி மாநாடுகளின் பட்டியலிலே பொன்னெழுத்துக்களால் பொறித்திடப் புறப்படுவீர்! பத்தாவது மாநில மாநாடு - பாரினில் பார்த்தது உண்டோ இதுபோல் இன்னொரு மாநாடு - என்று நாட்டார் வியக்குமளவுக்கு இதனை நடத்திக் காட்டிடுவீர் என்ற நம்பிக்கையோடு நாளும் காத்திருக்கும் உங்கள் அன்பு அண்ணன்; உங்களின் உடன்பிறப்பு!

அன்புள்ள,

மு.க.

26-1-2014

3857. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி - அன்றும், இன்றும்!

தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய தொழில்கள் எல்லாம் பிற மாநிலங்களுக்குப் படையெடுத்துச் செல்வதாகப் பரவலாகச் சொல்லப்படுகிறது; ஏடுகளிலும் அதுபற்றிச் செய்தி வந்துள்ளது. கொங்கு மண்டலத் தொழிலதிபர்களின், 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் கர்நாடகாவிற்குச் செல்ல உள்ளன என்றும், தமிழகத்தில் மோசமாகி வரும் முதலீட்டுச் சூழல்தான் அதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது என்றும், இந்த நிலை தொடர்ந்தால் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இருந்தும், வேறு மாநிலங்களுக்குத் தொழில்கள் இடம்பெயர வாய்ப்புள்ளது என்றும் செய்தி வந்துள்ளது.

தமிழக, கர்நாடக எல்லையில் உள்ள சாம்ராஜ் நகர் மாவட்டத்தில், 1,400 ஏக்கரில் தொழில் மண்டலம் கர்நாடக அரசால் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு முதலீட்டாளர்களை இழுக்கும் வகையில், கோவையில் கடந்த 20 ஆம் தேதியன்று "சாம்ராஜ் நகர் முதலீட்டாளர்கள் மாநாடு " ஒன்று நடத்தப்பட்டுள்ளது. கர்நாடகா தொழில் வர்த்தக சபைக் கூட்டமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட அந்த மாநாடு, தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் உள்ள பல தொழில் முனைவோரின் கவனத்தையும், ஆர்வத்தையும் ஈர்த்துள்ளது. அந்த மாநாட்டில், கர்நாடக முதலமைச்சர், தொழில் துறை அமைச்சர் மற்றும் கர்நாடக மாநில அரசின் உயர் அதிகாரிகள் எல்லாம் பங்கேற்றதோடு, தொழிலதிபர்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை எல்லாம் வாரி வழங்கியுள்ளனர். மாநாட்டில் பேசிய கர்நாடக முதலமைச்சர், "கர்நாடகாவில் தொழில் தொடங்க வாருங்கள், அனைத்து வசதிகளையும் செய்து தருகிறோம்' என்று தமிழகத் தொழில் அதிபர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். ஆனால் அந்த அழைப்பை எதிர்கொள்ள நம்முடைய முதலமைச்சர்

ஜெயலலிதாவும், அதே கோவை மாநகருக்கு அருகில் கொடைநாட்டில் தங்கியிருந்தவாறே கர்நாடகத் தொழில் அதிபர்களுக்கு ஒரு வேளை "காணொலிக் காட்சி" வாயிலாக அழைப்பு விடுத்து வருகிறாரோ என்னவோ?

கோவையில் கர்நாடக மாநிலத்தின் சார்பில் நடைபெற்ற அந்த மாநாட்டின் விளைவாக, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட கொங்கு மண்டலப் பகுதிகளிலே தொழில் நடத்துகின்ற கமார் 200 தொழிலதிபர்கள், 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கு சாம்ராஜ் நகரில் முதலீடுகளைச் செய்து தொழில் தொடங்கிட முன்வந்துள்ளனர்.

இந்த மாநாடு பற்றி, கர்நாடகா தொழில் வர்த்தக சபைக் கூட்டமைப்பின் உதவிச் செயலாளர், திரு. விஜயகுமார் கூறுகையில், கோவையில் நடத்தப்பட்ட மாநாடு, மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. ஒரே நாளில், 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான அளவுக்கு, சாம்ராஜ் நகர் தொழில் மண்டலத்தில் முதலீடு செய்யத் தமிழகத் தொழிலதிபர்கள் முன்வந்திருப்பது பெரிதும் மகிழ்ச்சியை அளித்துள்ளது'' என்று பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறார். மேலும் அவர், "குறிப்பாக, திருப்பூரைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவனம் ஒன்று, 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு முதலீடு செய்வதாக ஒப்புக் கொண்டுள்ளது. கோவையைச் சேர்ந்த பெண் தொழிலதிபர் ஒருவர், அந்தத் தொழில் மண்டலத்தில் ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார். கர்நாடகாவில் தொழில் செய்ய முன்வந்துள்ள அனைவருக்கும் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, தொழில் மேம்பாட்டுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்வோம்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டிலிருந்து, கர்நாடகாவிற்கு முதலீடுகள் போகக் காரணம், தமிழகத்திலே உள்ள மின்வெட்டு, அரசு நிர்வாகக் கோளாறு, உள்கட்டமைப்புப் பற்றாக்குறை, ஆட்சியாளர்களைச் சந்திக்க முடியாத சூழல், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்காத அணுகுமுறை போன்றவைதான் என்கிறார்கள். அ.தி.மு.க., ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழகத்தில் நூற்றுக்கணக்கான தொழில் நிறுவனங்கள், மூடப்பட்டு, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வாழ்வாதாரம் தேடி அண்டை மாநிலங்களுக்குச்

சென்று விட்டார்கள். இப்போது மீதமுள்ள தொழில் நிறுவனங்களும் வெளி மாநிலத்திற்குச் செல்லத் தொடங்கிவிட்டன.

ஆனால் கடந்த ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் தொழில் துறை மானியம் விவாதிக்கப்பட்டு, அதற்கு இரண்டொரு நாட்களுக்குப் பிறகு அந்தத்துறை சார்பில் முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின் கீழ் சில அறிவிப்புகளைச் செய்த போது "முதல்வரின் அறிவிப்புகளால் தமிழகம் இந்தியாவின் மான்செஸ்டர் ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஜெயலலிதாவின் மனம் குளிரும் வகையில் பாராட்டுரை வழங்கப்பட்டது. அந்தத் துறையின் அமைச்சர் மோகன், "செயற்கரிய செயல்களைச் செய்யக் கூடியவர் நம்முடைய அம்மா. அவர் சுனாமியையே விரட்டி அடித்தவர். தமிழகம் முதல் மாநிலம் என்கிற பெயர் பெற வேண்டும் என்பதற்காக இதுபோன்ற நல்ல திட்டங்களை அறிவிக்கிறார். வெளிச்சத்தைத் தருகிறார்" என்று கூறினார். அமைச்சரின் கூற்று எப்படி? முதலமைச்சர் எப்படி யெல்லாம் அரும்பாடுபட்டு தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்குகிறார் என்பதற்குக் கோவையில் நடைபெற்றுள்ள கர்நாடக மாநிலத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டமே தக்க சான்றுதானே?

பேரவைத் தலைவரோ, "தமிழகம் ஏற்றம் பெற வேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் உழைக்கின்ற நம் அம்மா இப்போது தொழில் துறையில் தமிழகத்தை மேலும் முன்னேற்றுவதற்காக இந்தப் புதிய அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார். விடி வெள்ளியாக வந்து அவர் தமிழகத்திற்கு வெளிச்சத்தைத் தந்து கொண்டிருக்கிறார்" என்று முற்றுப் புள்ளி வைத்தார்.

அன்றையதினம் தொழிற்துறை குறித்து முதலமைச்சர் அறிவித்துள்ள திட்டங்கள் என்ன தெரியுமா?

"நாகை மாவட்டத்தில் ஓர் ஆழ்கடல் துறைமுகம், ஒரு மிதக்கும் திரவ நிலை எரிவாயு முனையம், 500 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவைப் பயன்படுத்தும் மின் உற்பத்தி ஆலை ஆகியவை 3,500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும்; ஒன்பது மாவட்டங்களில் ஒன்பது புதிய தொழிற் பூங்காக்கள் ஏற்படுத்தப்படும்; திருமழிசையில் அடுக்குமாடித் தொழில் வளாகம் ஒன்று சிட்கோ நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும்."

இப்படி அறிவிப்புகள் தொடருகின்றன. இதிலே திருமழிசையில் அடுக்குமாடித் தொழில் வளாகம் பற்றிய அறிவிப்பினைப் படித்த போது எனக்கொரு சந்தேகம் ஏற்பட்டது!

2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் 9-9-2011 அன்று முதலமைச்சர் இதே 110வது விதியின் கீழ் ஓர் அறிக்கை படித்தார். அது திருமழிசையில் 311 ஏக்கரில் குடியிருப்புகளை அமைக்கப் போவதாகவும், சென்னை அருகே துணை நகர் அமைக்கப் போவதாகவும் அறிவித்து, அனைத்து ஏடுகளிலும் பெரிதாகச் செய்தி வெளியிட்டிருந்தார்கள். ஆனால் அந்தத் திட்டம் முதலமைச்சர் அவ்வாறு அறிவிப்பதற்கு முன்பே 25-8-2011 அன்று பேரவையில் வீட்டு வசதித் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இடம்பெற்றிருந்தது. அதையேதான் பின்னர் முதலமைச்சர் 110வது விதியின் கீழ் அறிவிப்பாகப் படித்தார். இதுபற்றி நான் கடந்த ஆண்டே விளக்கம் கோரியிருந்தேன். விளக்கம் இன்னமும் தயாராகிக் கொண்டிருக்கிறது! இதுதான் அ.தி.மு.க. ஆட்சியிலே தொழில் வளருகின்ற நிலை. இதே நேரத்தில் கழக ஆட்சியில் இந்தத் துறை எவ்வாறு செயல்பட்டது என்பதையும் கூறுகிறேன்.

தமிழக தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சிக்கு உதவிட முதலமைச்சர் தலைமையில் தொழில் வர்த்தகக் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட, "சிறப்புத் தொழில் முனைப்புக் குழு" (Special Task Force) 8.11.2006 அன்று அமைக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் போட்டியிடும் தன்மையை அதிகரித்து அவற்றின் செயல் திறனைப் படிப்படியாக மேம்படுத்துதல்; விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்திட, வேளாண் சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 10 சதவீதத்திற்கும் அதிகமாக நிர்ணயித்தல் போன்றவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக 2008ஆம் ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான தனிக் கொள்கை உருவாக்கப்பட்டது.

2009-2010ஆம் ஆண்டிற்கான தொழில்துறை மானியக் கோரிக்கை தயாரிப்பதற்கு முன்பாக துணை முதலமைச்சராக

இருந்த தம்பி மு.க.ஸ்டாலின் 13.6.2009 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர மற்றும் பெரும் தொழில் முனைவோர் கூட்டமைப்புகளின் கூட்டத்தைக் கூட்டி, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்தாலோசித்தார். அதன்பின் அத்தகைய கூட்டங்கள் நெல்லை, கோவை, திருச்சி, ஈரோடு ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டன.

மைய அரசின் மத்திய புள்ளிவிவர நிறுவனம் (Central Statistical Organisation) 2011இல், தனது 2008-09இல் தொழிற்சாலைகள் குறித்த ஆண்டு ஆய்வினை வெளியிட்டது. அந்த ஆய்வின்படி; "தமிழ்நாடு மொத்தம் 26,122 தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது; இதன் மூலம் தொழிற்சாலைகள் எண்ணிக் கையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது; தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதாவது தமிழ்நாட்டில் 17 இலட்சத்து 74 ஆயிரத்து 19 பேர் தொழிற்சாலைகளில் மட்டும் பணிபுரிகின்றனர்; "மொத்த முதலீட்டின்" வரிசையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது; "மொத்த தொழில் உற்பத்தியில்" தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது; மேலும் "நிகர மதிப்பு கூடுதல்" அளவில் தொழிற்சாலை வரிசையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது" என்றெல்லாம் எழுதியிருந்தது.

"Wall Street Journal" தனது 2010, ஜூலை 8ஆம் நாளிட்ட இதழில் தமிழக அரசின் செயல்பாடுகளை மிகவும் புகழ்ந்து கூறியிருந்தது. மேலும், அந்த இதழில் "தமிழ்நாடு; வாகன உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான நிலங்கள், சாலைகள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றை வழங்குவதில் மற்ற இந்திய மாநிலங்களைவிடச் சிறப்பாகச் செயல்படுகிறது. மேலும், தொழில் தொடங்கவும், விரிவாக்கம் செய்யவும் 12க்கும் மேற்பட்ட அரசுத்துறை சார்ந்த அனுமதிகளை ஒற்றைச் சாளர முறையில் ஒரே இடத்தில் வழங்குகிறது" என்றும் கூறிப் பாராட்டியது.

இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் (Centre for Monitoring Indian Economy) 2010 அக்டோபர்-டிசம்பர் காலாண்டிற்கான அறிக்கையில் தமிழகம் இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் மூன்றாவது மாநிலமாகத் திகழ்கிறது எனக் குறிப்பிட்டது. அதன்படி,

2001இல் அ.தி.மு.க. ஆட்சியின் தொடக்கத்தில் அதாவது, 2001 மே திங்கள் வரை தமிழகத்தில் செய்யக் கருதப்பட்ட தொழில் முதலீடு 1 இலட்சத்து 83 ஆயிரத்து 49 கோடியே 37 இலட்ச ரூபாய்; அ.தி.மு.க. ஆட்சி முடிவடைந்த 2006 மே திங்கள் வரை 5 ஆண்டுகளில் இந்த முதலீடு ஏறத்தாழ 8 ஆயிரத்து 742 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே உயர்ந்து 1 இலட்சத்து 91 ஆயிரத்து 791 கோடியே 98 இலட்ச ரூபாய் என இருந்தது.

ஆனால், 2006இல் கழக ஆட்சி அமைந்த பிறகு புதிய தொழில் கொள்கையை வகுத்துத் தொழில் வளர்ச்சிக்கு அளித்துவந்த ஊக்கம், தொழில் முதலீட்டாளர்களுடன் தொழில் நேயத்துடன் கொண்டுள்ள வெளிப்படையான அணுகுமுறை, உலகத்தரத்திற்கு இணையாக மேம்படுத்தப்பட்டுள்ள தொழில் கட்டமைப்புகள் முதலியவற்றின் பயனாக ஐந்தாண்டுகளில் 5 இலட்சத்து 73 ஆயிரத்து 765 கோடியே 94 இலட்ச ரூபாய் அதிகரித்து மொத்த முதலீடு 2010 டிசம்பர்த் திங்களில் 7 இலட்சத்து 65 ஆயிரத்து 557 கோடியே 92 இலட்ச ரூபாய் என - ஏறத்தாழ நான்கு மடங்கு உயர்ந்து, தொழில் வளர்ச்சியில் ஓர் அமைதிப் புரட்சி ஏற்பட்டது.

தி.மு. கழக ஆட்சியிலே தொழில் எவ்வாறு வளர்ந்தது, தற்போது எவ்வாறு வளருகிறது என்பதற்கான விளக்கத்தைத்தான் இங்கே தொகுத்துத் தந்திருக்கிறேன். ஓர் உதாரணம் கூறுகிறேன்.

கடந்த வாரத்தில் மத்திய அரசின் கயிறு வாரிய துணைத் தலைவராக உள்ள கா. ராயர் சென்னையிலே செய்தியாளர்களைச் சந்தித்த போது, "மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சகம் சார்பில், மத்திய கயிறு வாரியத்தின் (காயர் போர்டு) மூலமாக மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் தமிழகத்தில் 100 கோடி ரூபாய் முதலீட்டில் கயிறு தொழில் பூங்கா அமைக்கும் திட்டம் உள்ளது. இதற்கு மத்திய அரசு 70 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கத் தயாராக உள்ளது. மாநில அரசு 10 கோடி ரூபாய் மட்டுமே வழங்க வேண்டும். கதர், கிராம சர்வோதய சங்கத்தின் மூலமாக 20 கோடி ரூபாய் வழங்கினால் விழுப்புரத்தில் வழுதரெட்டி கிராமத்தில் 200 ஏக்கர் இடத்தில் இந்தத் தொழில்பூங்கா உருவாகும். ஆனால் தமிழக அரசு இதுவரை பூங்கா அமைக்க அனுமதி அளிக்கவில்லை. இது சம்பந்தமாகத் தமிழக ஊரகத் தொழில்துறை அமைச்சர் மோகனைச் சந்திக்க

கடந்த இரண்டு மாதங்களாக முயன்றும் பார்க்க முடியவில்லை. நமது நாட்டின் குடியரசுத் தலைவரைக் கூட எளிதில் பார்க்க முடியும், அவருடன் புகைப்படம் எடுக்க முடியும். ஆனால் தமிழக அமைச்சரை மத்திய அரசு அதிகாரியான என்னால் கூடச் சந்திக்க முடியவில்லை. தமிழகத்தில் ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் மதிப்பிலான தென்னை மட்டையும், நாறும் தீயிட்டுக் கொளுத்தி வீணாக்கப்படுகிறது" என்று தமிழக அரசுமீது குற்றஞ்சாட்டிய மத்திய அரசு அதிகாரியின் பேட்டி ஏடுகளில் வெளிவந்திருக்கிறது. ஒரு வாரம் ஆகிறது; இதற்குத் தமிழக அரசின் பதில் என்ன?

அன்புள்ள,

மு.க.

29-1-2014

3558. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (6)

உடன்பிறப்பே,

1975ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்ற கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு பற்றிக் கடந்த வாரம் வரை குறிப்பிட்டிருந்தேன். அதற்குப் பிறகு 1977ஆம் ஆண்டு மே திங்களில் மதுரையில் கழகத்தின் சிறப்பு மாநாடும், 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சென்னையில் திராவிடர் கழக இந்தி எதிர்ப்பு மாநாடும், அதே ஆண்டு டிசம்பரில் திருச்சியில் தி.மு.க. இந்தி எதிர்ப்பு மாநில மாநாடும், 1980ஆம் ஆண்டு நெல்லையில் மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடு, அதே ஆண்டு டிசம்பரில் பெரியார் மாவட்ட தி.மு.க. முதல் மாநாடு ஈரோட்டிலும், 1981ஆம் ஆண்டு ஜனவரி கடைசி வாரத்தில் வட ஆர்க்காடு மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும், அதே ஆண்டு ஜூலையில் தென் ஆர்க்காடு மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடு கடலூரிலும், அதே ஆண்டு ஆகஸ்டில் தி.மு.க. மகளிர் மாநில இரண்டாவது மாநாடு திருச்சி தேவர் மன்றத்திலும், 1982ஆம் ஆண்டு மே திங்களில் தஞ்சை மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும், 1983ஆம் ஆண்டு ஜூலையில் கிழக்கு முகவை மாவட்ட தி.மு.க. மாநாடும், 1984ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் புதுவை மாநில தி.மு.க. மாநாடும், 1984ஆம் ஆண்டு ஜனவரியில் திருச்சி மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடு கரூரிலும், அந்த மாத இறுதியில் மதுரை மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும், அந்த ஆண்டு பெப்ரவரியில் சேலம் மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும், அதே ஆண்டு செப்டம்பரில் அண்ணா மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும், 1986ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தி.மு.க. விவசாயிகள் அணி சார்பில் மாநில மாநாடும், நவம்பரில் கோவை மாநகரில் இந்தி ஆதிக்க எதிர்ப்பு தி.மு.க. மாநில மாநாடும் சிறப்பாக நடைபெற்ற பிறகு, கழகத்தின் ஆறாவது

பொது மாநில மாநாடு இதே திருச்சி அண்ணா நகரில், இன்றைய கடலூர் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி எம்.ஆர்.கே. பன்னீர் செல்வத்தின் அருமைத் தந்தையும், சுயமரியாதைச் சுடருமான எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி பந்தலில், தமிழக அரசின் தலைமைக் கொறடாவாகச் சிறப்பாகப் பணியாற்றிய, நான் அன்புடன் "ஜமீன்தார்" என்று அழைக்கின்ற து.ப. அழகமுத்து பெயரால் அமைந்த அரங்கில் 1990ஆம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 9, 10, 11 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

இந்த மாநாட்டோடு இணைந்து, இளைஞர் அணி சமதர்ம சமுதாய சீர்திருத்த மறுமலர்ச்சி மாநாடாக இரண்டாவது நாள் காலை முதல் இரவு வரை நடைபெற்றது. முதல் நாள் மாபெரும் அணிவகுப்புப் பேரணி நடந்தது. திருச்சியில் நடைபெற்ற இந்த 6வது பொது மாநில மாநாட்டிற்கு முன்புதான் இந்த "திருப்பு முனை" என்ற பெயரே எழுந்தது. திருப்புமுனை, திருப்புமுனை என்று சொல்கிறீர்களே, அது என்ன திருப்புமுனை என்று பத்திரிகைக்காரர்கள்கூட என்னைக் கேட்டார்கள்.

அதே திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டிற்கு அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் "அன்பில் அழைக்கிறார்" என்ற தலைப்பிலே பாசத்தையும் பைந்தமிழையும் குழைத்துத் தொடர்ந்து எழுதி, கழகத் தோழர்களையெல்லாம் எழுச்சி கொள்ளச் செய்து அந்த மாநாட்டிற்கு வரவழைத்தார்கள். அதுபோல "திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே" என்ற தலைப்பில் மாநில மாநாடு ஒரு திருப்புமுனை என்று அறுதியிட்டுக் கூறிட என்ன காரணம் என்று கேட்பவர்களுக்கு நான் கூறுகின்ற பதில், நான் ஆறாவது மாநில மாநாட்டிலேயே தெரிவித்ததுதான்.

"திருச்சியிலிருந்து சேலத்திற்குச் செல்ல வேண்டுமென்று நாம் புறப்படுகிறோம். சேலத்திற்குச் செல்ல வேண்டுமென்று புறப்பட்டால், நாம் வழியிலே இடது பக்கம் முசிறி வழியாகத் திரும்பி, நாமக்கல் வழியாகச் சேலத்திற்குச் சென்றிடலாம். முசிறிப் பகுதியில் திரும்ப வேண்டிய பாதையை தவற விட்டு விட்டு, உளுந்தூர்பேட்டை வரை சென்ற பிறகு, அடடா, உளுந்தூர்பேட்டை வரை வந்து விட்டோமே, சேலத்திற்கு அல்லவா செல்ல வேண்டும், பரவாயில்லை, இங்கிருந்து சேலத்திற்குச் செல்ல சாலை இருக்கிறதே, அந்த வழியாகச்

செல்லலாம், என்று உளுந்தூர் பேட்டையிலிருந்து சேலத்திற்குச் செல்லலாம். அதைப்போல திருச்சியில் அரசியல்ரீதியாக நாம் நடைபோடுவோம் என்று ஆரம்பித்த இயக்கம், முசிறியில் திரும்பாமல், நம்முடைய சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பற்றிய கவலையை விட்டுவிட்டு, நேராக உளுந்தூர்பேட்டை வரை சென்றுவிட்ட காரணத்தால், மறுபடியும் சேலத்திற்கு அல்லவா செல்ல வேண்டும், சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளை விட்டுவிடக்கூடாது என்று செயல்படுவதுதான் திருப்புமுனை!" இதைத்தான் அந்த ஆறாவது பொது மாநில மாநாட்டிலும் விளக்கினேன். இப்போதும் திரும்பக் கூறுகிறேன்.

தி.மு. கழகத்தினுடைய அரசியல் பயணத்தில் சமுதாயச் சீர்திருத்தம், சமுதாய மறுமலர்ச்சி இவை கைவிடப்பட்ட ஒன்றல்ல. நீதிக் கட்சிக் காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு, லண்டன் மாநகரில் மன்னருடைய அரண்மனை. அதிலே ஒரு விருந்து. செல்வந்தர்களும், சீமான்களும் கூடியிருக்கிறார்கள். அனைவரும் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் எப்போது நுழைவார் என்று அவர் வருகின்ற வழியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மன்னர் வருகிறார் - அனைவரும் கைதட்டி வரவேற்கிறார்கள். மன்னர் ஒவ்வொருவரிடமும் வந்து கை குலுக்குகிறார். சர் ஏ.டி. பன்னீர்செல்வம், சர் ஏ. ராமசாமி முதலியார், ஜெயகர், முகமது உஸ்மான் போன்றவர்களிடம் கை குலுக்கியவாறு வந்தவர், முறுக்கு மீசையும், அகன்ற நெற்றியும், தெளிவான மார்பையும் கொண்ட ஒருவர், மன்னர் கை குலுக்க வந்தபோது, கையை நீட்டாமல் இழுத்துக் கொண்டார்.

மன்னர் அதிர்ச்சியோடு, அவரைப் பார்த்த போது, "மாட்சிமை பொருந்திய மன்னர் அவர்களே! நீங்கள் என்னைத் தீண்டக் கூடாது, தீண்டினால் மன்னருக்குத் தீங்கு நேரும். ஏனென்றால் நான் இந்தியாவில் உள்ள தீண்டத்தகாத வகுப்புகளில் ஒன்றான பறையர் இனத்தைச் சேர்ந்தவன்" என்று கணீரென்று ஆங்கிலத்தில் சொன்னார். உடனே மன்னர் ஆச்சரியமடைந்து, "மனிதனை மனிதன் தீண்டுவது கூடாது என்பது என்ன நியாயம்?" என்று கேட்டு அந்த மனிதரை உற்றுப் பார்த்தபோது, அந்த மனிதருடைய கோட்டில் இணைக்கப்பட் டிருந்த அட்டை ஒன்றில், "ராவ் பகதூர் ஆர். சீனிவாசன் - பறையன் - நான் ஒரு தீண்டத்தகாதவன்"

என்று எழுதப்பட்டிருந்தது. அப்போது மன்னர், "பரவாயில்லை, மிஸ்டர் ராவ் பகதூர் சீனிவாசன் அவர்களே" என்று கூறியவாறு, அவருடைய கையை அழுத்திப் பிடித்துக் குலுக்கினார். இது நடந்த சம்பவம். யார் அந்த சீனிவாசன்? செங்கற்பட்டு மாவட்டத்தில் இரட்டைமலை என்ற ஒருவருடைய பிள்ளையாகப் பிறந்து - தந்தையின் பெயரைத் தன் பெயரோடு இணைத்துக் கொண்டு "இரட்டைமலை சீனிவாசன்" என்று சூட்டிக் கொண்ட - நீதிக் கட்சியின் தலைவர்களிலே ஒருவர்தான் அந்த மாபெரும் மனிதர்! அந்த அளவிற்கு அந்தக் காலத்தில் "தீண்டாமை" தமிழகத்தில் கொடிகட்டி ஆட்சிபுரிந்தது.

அந்த இரட்டை மலை சீனிவாசன்தான் 1924ஆம் ஆண்டு சென்னை சட்டமன்றத்திலே "தீண்டாமை எதிர்ப்புத் தீர்மானத்தைக்" கொண்டு வந்து நிறைவேற்றினார். அரசு அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. அந்தத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட அந்த 1924ஆம் ஆண்டு சூன் திங்கள் 3ஆம் தேதியன்றுதான் நான் பிறந்தேன். இப்போது 90 வயதைக் கடந்து விட்டேன்.

இந்த மாநாட்டுக்கான மாபெரும் ஏற்பாடுகளை முன்கூட்டியே என்னை அழைத்து வந்து காட்டிட வேண்டுமென்று வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி நேருவுக்கு கட்டுக்கடங்காத ஆசை. நான் அவர் வயதிலே இருந்தால், இந்த மாநாட்டு ஏற்பாடுகளைக் காண அவர் அழைக்காமலேயே வந்திருப்பேனே? 1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டிற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு வார காலத்திற்கு முன்பே வந்து தங்கிக் கொண்டு, திருச்சி நகரத் தோழர்களையெல்லாம் திரட்டி அன்பெனும் நூலால் இணைத்து வேலை வாங்கிய காட்சியை இன்னமும் மறக்காதவன்தான் நான். அதனால்தான் நான் வராவிட்டாலும், நான் வருவதைப் போன்ற ஊக்கத்தை நீங்கள் பெற வேண்டுமென்பதற்காக கழகத்தின் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலினை இரண்டு முறை அனுப்பிவைத்து, ஏற்பாடுகள் எப்படியெல்லாம் நடக்கின்றன என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

திருச்சியில் நடைபெறும் இந்தப் பத்தாவது மாநில மாநாட்டிற்கு பல்வேறு மாவட்டக் கழகங்கள் தாங்களாகவே முன்வந்து அளித்துள்ள நிதியினைப் பற்றியெல்லாம் கடந்த வாரம்

தெரிவித்திருந்தேன். நான் கடந்த வாரம் எழுதியதைத் தொடர்ந்து மேலும் பல்வேறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் திருச்சி சென்று மாநாட்டு ஏற்பாடுகளையெல்லாம் கண்டு களிப்புற்ற தோடு, நிதி உதவிகளையும் செய்திருக்கிறார்கள்.

திருச்சி மாநில மாநாட்டிற்காக, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை சார்பில் 15 இலட்சம் ரூபாயைப் பேரவைத் தலைவர் பேரூர் ஆ. நடராசன், பொதுச் செயலாளர் மு. சண்முகம், பொருளாளர் கி. நடராசன் மற்றும் அதன் நிர்வாகிகள் சென்னையில் என்னைச் சந்தித்து வழங்கினர். கரூர் கே.சி. பழனிசாமி, எம்.எல்.ஏ., 25 இலட்சம் ரூபாயும், புதுக்கோட்டை ரகுபதி 25 இலட்சம் ரூபாயும், கரூர் சின்னசாமி 25 இலட்சம் ரூபாயும், விழுப்புரம் மாவட்டக் கழகத்தின் சார்பில் பொன்முடி 15 இலட்சம் ரூபாயும், காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்தின் சார்பில் தா.மோ. அன்பரசன் 15 இலட்சம் ரூபாயும், சேலம் மாவட்டக் கழகத்தின் சார்பில் சிவலிங்கம் 5 இலட்சம் ரூபாயும், திருப்பூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் சாமிநாதன் 10 இலட்சம் ரூபாயும், கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் பொங்கலூர் பழனிசாமி 15 இலட்சம் ரூபாயும், சிவகங்கை மாவட்டக் கழகத்தின் சார்பில் பெரியகருப்பன் 15 இலட்சம் ரூபாயும், புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தின் சார்பில் பெரியண்ணன் அரசு 10 இலட்சம் ரூபாயும், கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் நன்னியூர் ராஜேந்திரன் 20 இலட்சம் ரூபாயும், தென்சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பில் ஜெ. அன்பழகன் 10 இலட்சம் ரூபாயும், தஞ்சை மாவட்டக் கழகத்தின் சார்பில் பழனிமாணிக்கம் 15 இலட்சம் ரூபாயும், லால்குடி புள்ளம்பாடி கழகம் சார்பாக சவுந்திர பாண்டியன் எம்.எல்.ஏ., 20 இலட்சம் ரூபாயும், கழக விவசாய அணி சார்பில் அந்த அணியின் செயலாளர் கே.பி.ராமலிங்கம், ஐந்து இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயும், பகுதிக் கழகச் செயலாளர் மதிவாணன் 5 இலட்சம் ரூபாயும், ஒன்றியச் செயலாளர் கதிர்வேலு 5 இலட்சம் ரூபாயும் மேலும் பலரும் நிதியாக அளித்திருக்கிறார்கள்.

நமது கழகத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாநாட்டிலும், அந்த மாநாடு காரணமாக வந்த வரவு எவ்வளவு, செலவழிக்கப்பட்டது எவ்வளவு என்ற கணக்கைக் கூறி மீதப்பட்ட தொகையை வெளிப்படையாக அறிவிப்பது வழக்கம். 1951 ஆம்

ஆண்டு முதல் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்றபோது மிச்சப்பட்ட தொகை 30 ஆயிரம் ரூபாய். இரண்டாவது மாநில மாநாடு 1956ஆம் ஆண்டு நடைபெற்றபோது - மிச்சப்பட்ட தொகை 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய். மூன்றாவது மாநில மாநாடு 1961ஆம் ஆண்டு மதுரையில் நண்பர் முத்து நடத்தியபோது மிச்சப்பட்ட தொகை ஒரு இலட்சம் ரூபாய். நான்காவது மாநில மாநாடு 1967இல் சென்னையில் நடைபெற்றபோது, நான் பொருளாளராக இருந்து ஒன்றரை ஆண்டுகள் அலைந்து திரிந்து திரட்டிய தொகையையும் சேர்த்து மீதப்பட்ட தொகை 11 இலட்சம் ரூபாய். ஐந்தாவது மாநாடு, கோவையில் நண்பர் புஞ்சைப் புளியம்பட்டி பி.ஏ.சாமிநாதன் முன்னின்று நடத்திய மாநாட்டில் மிச்சப்பட்டது 10 இலட்சத்து பத்தாயிரம் ரூபாய்.

1990ஆம் ஆண்டு தி.மு.க. ஆறாவது மாநில மாநாடு திருச்சியில் தம்பி செல்வராஜ் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடைபெற்றபோது மிச்சம் 23 இலட்சத்து 15 ஆயிரத்து, 413 ரூபாய்.

1993ஆம் ஆண்டு கோவையில் தி.மு.க. 7வது பொது மாநில மாநாடு நடைபெற்ற போது மிச்சம் 31 இலட்ச ரூபாய். 1996ஆம் ஆண்டு இதே திருச்சியில் தி.மு.க. 8வது பொது மாநில மாநாடு தம்பி கே.என். நேரு வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடைபெற்றபோது மாநாட்டு நிதி வசூல் மொத்தத் தொகை 1 கோடியே 32 ஆயிரத்து 530 ரூபாய். 2014ஆம் ஆண்டு பிப்ரவரியில், அதே நேரு மூன்றாவது முறையாக, அதாவது "ஹேட்ரிக்" என்பார்களே, அதுபோலவே வரவேற்புக் குழுத் தலைவராகத் தம்பி கே.என். நேரு இருந்து நடத்துகின்ற இந்தப் பத்தாவது பொது மாநில மாநாட்டில் மிச்சத்தொகை எவ்வளவு தரப்போகிறார் என்பதை எல்லோரையும் போலவே அறிந்து கொள்ள நானும் காத்திருக்கிறேன்.

தி.மு.க. 7வது பொது மாநில மாநாடு மற்றும் இந்தி எதிர்ப்பு மாநாடு கோவை மாநகரில், 1993ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26, 27, 28 ஆகிய மூன்று நாட்களில் நம்முடைய மு. கண்ணப்பன் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்த நடத்திய மாநாடாகும். பேரறிஞர் அண்ணாநகரில், தாளமுத்து நடராசன் பந்தலில், வால்பாறை இராமசாமி முகப்பில், கோவை அரங்கநாதன் அரங்கத்தில் நடைபெற்றது.

கோவையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தொழில் பிரதேசங்கள் என்றால், பத்தாவது மாநில மாநாடு நடைபெறும் திருச்சி, அதைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் காவிரி தீரத்தின் டெல்டா மாவட்டங்களாகும். விவசாயிகள் நிறைந்த மாவட்டம். வேளாண் பெருங்குடி மக்கள் அணி அணியாக வந்து கூடப்போகின்ற மாநாடு.

"ஏரினும் நன்றால் எருஇடுதல்; கட்டபின் நீரினும் நன்றுஅதன் காப்பு" என்று வள்ளுவர் சொன்னார். ஏர் பிடித்து உழுவதை விட எருவிடுதல் நல்லது. எரு விட்டு தண்ணீர் பாய்ச்சி பயிருக்குக்களை எடுப்பதையும் விட, அந்த நிலத்தில் ஆடுமாடுகள் மேயாமல் காப்பது எல்லாவற்றையும்விட மேலானது என்று வள்ளுவர் சொன்னார். அதைப்போலத்தான் ஆயிரங்காலத்துப் பயிராம் நமது கழகத்தை - அண்ணா என்கிற அகிலம் போற்றிடும் உழவர் உழுது களை நீக்கிக் கவனமாகச் சாகுபடி செய்திட்ட இந்தப் பயிரைக் காப்பாற்றி வளர்க்கின்ற அரும் பணியிலே நாமனைவரும் ஈடுபட்டுள்ளோம். கழகம் - தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரற்ற வழிகாட்டி! பாதுகாப்புப் பேரரண்! விடிவிளக்கு! குன்றின் மேலிட்ட குல விளக்கு! அண்ணா அவர்கள் 1969ஆம் ஆண்டு மிகுந்த நம்பிக்கையோடு என் கையில் கொடுத்து விட்டுச் சென்ற விளக்கு! அந்த விளக்கு அவ்வப்போது அடிக்கின்ற காற்றால் அணைந்து விடுமோ என்று சிலர் ஆரூடம் போட்டுப் பார்க்கிறார்கள்! அணைந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் நானும் ஒவ்வொரு கணமும் எச்சரிக்கையோடு இருக்கிறேன். இந்த விளக்கென்ன சாதாரணமான விளக்கா? தந்தை பெரியார் வார்த்த எண்ணெயில் - பேரறிஞர் அண்ணா போட்டுக் கொடுத்த திரியில் தமிழ்நாட்டு மக்கள் நீங்கள் அனைவரும் இணைந்து ஏற்றிவைத்த கோபுர தீபம் அல்லவா? இந்தக் கழகத்தைக் கட்டிக் காப்பாற்ற - அதை மேலும் வலுவூட்ட - கழகப் பணிகளைத் தொய்வின்றி ஆற்றிட - நெஞ்சுயர்த்தி நம்முடைய பயணத்தை முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து மேற்கொள்ள சபதம் ஏற்கத்தான் வரும் 15ஆம் தேதியன்று திருச்சியிலே கூடவிருக்கிறோம்.

மாநாட்டு ஏற்பாடுகளைச் செய்தியாளர்களிடம் கூறிய வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி நேரு, செங்கோட்டை வடிவில் நுழைவாயிலும், நாடாளுமன்ற வடிவில் முகப்பும் அமைக்கப்பட்டிருப்பதாகவும், தொண்டர்களின் வசதிக்காக 550

கழிவறைகள், 10 இடங்களில் குளியல் தொட்டிகள், 40 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்க் குழாய்கள், 10 ஆயிரம் வாகனங்கள் நிறுத்தும் அளவுக்கு பார்க்கிங்வசதி, ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவக் குழு உள்ளிட்டவற்றை ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

மாநாட்டில் என்னென்ன தலைப்புகளில் யார் யார் பேசவிருக்கிறார்கள் என்ற பட்டியல் எல்லாம் தலைமைக் கழகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஓரிரு நாட்களில் ஏடுகளின் வாயிலாக அறிவிக்கப்படும். உலகத்தில் எந்தவொரு இயக்கத்தின் சார்பிலும், கட்சியின் சார்பிலும் நம்முடைய இயக்கத்தைப் போல இந்த அளவிற்கு மாநாடுகளைத் திட்டமிட்டு நடத்தியிருக்க மாட்டார்கள். கழகம் நடத்திய மாநாடுகளையெல்லாம் வெற்றி மாநாடுகளாக ஆக்கிக் காட்டிய பெருமை என் அருமை உடன்பிறப்புகளே, இந்த பத்தாவது மாநில மாநாட்டினையும் வெற்றி மாநாடாக்கிட விரைந்து வந்திடுவாய் திருச்சி நகர் நோக்கி! நீ வரும் வழி நோக்கி விழி வைத்துக் காத்திருப்பேன்.

அன்புள்ள,

மு.க.

3-2-2014

3859. பதில் உரையா? பழி உரையா?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா ஆளுநர் உரைமீதான விவாதத்திற்குத் தமிழகச் சட்டப்பேரவையில் பதிலளித்திருக்கிறார். முக்கிய எதிர்க்கட்சிகளான தே.மு.தி.க., தி.மு.க., புதிய தமிழகம், மனிதநேய மக்கள் கட்சி ஆகியவற்றின் சார்பில் ஆளுநர் உரையில் யாரும் தங்கள் கருத்துகளைத் தெரிவிப்பதற்கான சூழ்நிலை இல்லை. தி.மு. கழகத்தைப் பொறுத்தவரையில், ஆளுங் கட்சியை எதிர்த்து எந்தக் கருத்தையும் தெரிவிக்க வாய்ப்பு அளிக்காத சட்டமன்ற ஜனநாயகத்துக் கெதிரான நிலை! ஆளுநர் உரை என்பதே ஏதோ மரபுப்படி வைக்க வேண்டுமே என்பதற்காக ஏனோதானோ என்ற வகையில் வைக்கப்பட்டது போல, இந்த ஆண்டும் வைக்கப்பட்டுள்ளது. அதிலே எந்தப் புதிய கொள்கைகளோ, திட்டங்களோ அறிவிக்கப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும், ஆளுநர் உரை மீதான விவாதம் என்றால் குறைந்தது ஐந்தாறு நாட்களாவது விவாதம் நடைபெறும். அதிலே எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்பு அளிக்கப்பட்டு, அவர்கள் அரசின் மீதான குறைகளை, குற்றச்சாட்டுகளை எடுத்துக்கூற வாய்ப்பு அளிக்கப்பட்டு, அதற்குத்தான் இறுதியாக முதலமைச்சர் பதிலளிப்பது வழக்கம். ஆனால் இந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஆட்சியாளர்களை எதிர்த்து எதையும் பேசக் கூடாது; முதல் அமைச்சருக்குப் பாராட்டு, புகழாரங்களுக்கு மட்டுமே வாய்ப்பு; யாராவது அரசுக்கு எதிரான ஒரு கருத்தைச் சொன்னால் ஒவ்வொரு அமைச்சரும் எழுந்து குறுக்கிட்டுத் தாறுமாறாகப் பேசுவார்கள். பேரவைத்தலைவர் உடனே அரசை எதிர்த்துப் பேசிய கட்சியின் உறுப்பினர்களை அவையிலிருந்து வெளி யேற்றி விடுவார்; அவருக்கு ஆதரவாக அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேச விரும்பினால், அந்தக் கட்சியைச் சேர்ந்த

அத்தனை உறுப்பினர்களையும் வெளியேற்றி விடுவார். எதிர்த்துப் பேசப்பட்டவை அவைக்குறிப்பில் இடம் பெறமாட்டா. இதுதான் இங்கே நடைபெறுகிறது. மூன்றே நாள் விவாதத்தில் எத்தனை பேர் பேச முடியும்? இந்த மூன்று நாள் விவாதத்தில் ஒரு நாள் முதல் அமைச்சர் அவைக்கே வரவில்லை. ஆனால் மூன்றாம் நாள் அவைக்கு வந்து பதிலளித்து ஏடுகள் எல்லாம் அந்தப் பதிலை பிரமாதப்படுத்தி வெளியிட்டு மகிழ்ந்திருக்கின்றன.

இதிலே மாலைப் பத்திரிகை ஒன்றில், முதல் அமைச்சரின் ஆளுநர் உரை மீதான பதிலில் ஒரு பகுதியை முதல் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு தலைப்பு என்ன தெரியுமா?

"ஸ்டாலினுக்கு அழகிரியால் ஆபத்து என்றதும் பிரதமருக்குக் கடிதம் எழுதுவது ஏன்? ஜெயலலிதா கேள்வி" என்பதுதான்!

அந்தத் தலைப்பின் கீழ் வெளிவந்துள்ள செய்தியில், "ஆட்சிக்கு விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. 28-1-2014 அன்று செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த கருணாநிதி, "கட்சியிலே உள்ள மதுரை மாவட்டச் செயலாளர் மூர்த்தி மீது பி.சி.ஆர். சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போலீசாருக்கு எழுதிக் கொடுத்தவரை, கட்சித் தலைவர் என்ற முறையில் நான் விசாரிப்பதும், கண்டிப்பதும் எப்படிக் குற்றமாகும்?" என்று வினவியுள்ளார். அதாவது சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டவர் மீது காவல் துறையில் புகார் கொடுப்பதே தவறு என்று கூறியிருக்கிறார். ஆட்சியில் இல்லாதபோதே இப்படி என்றால், ஆட்சியில் இருந்த போது சட்டம் - ஒழுங்கு எப்படி நிலைநாட்டப்பட்டு இருக்கும் என்பதை உங்களின் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்" என்று ஜெயலலிதா பேசியிருக்கிறார்.

மதுரையில் ஒரு மாவட்டக் கழகச் செயலாளர் உள்பட கட்சியினர் சிலர் மீது, அதே கட்சியைச் சேர்ந்த வேறு சிலர் வேண்டுமென்றே நடக்காத ஒன்றை, ஆளுங்கட்சி துணையிருக்கும் என்ற நப்பாசையோடு புகார் மனு கொடுத்திருப்பது என்பது உள்கட்சிப் பிரச்சினை. அதிலே கட்சியின் தலைவர் என்ற முறையில், தவறாக நடந்து கொண்டவர்களை அழைத்து விசாரிப்பதும், நடவடிக்கை எடுப்பதும் அம்மா "அகராதி"ப்படி குற்றமா? உட்கட்சிப் பிரச்சினைக்காகப் பிடிக்காத

வர்கள் மீது புகார் எழுதி, நடக்காத ஒன்றைப் புகாராகத் தயாரித்துக் காவல் துறையினரிடம் கொடுப்பது நியாயமான ஒன்றா? அவர்கள் மீது கட்சியிலே நடவடிக்கை எடுப்பது என்பது சட்டத்திற்குப் புறம்பான செயலா?

அ.தி.மு.க.விலே உள்கட்சிப் பிரச்சினைகளே கிடையாதா? அப்படி உள்கட்சிப் பிரச்சினை எழுந்தபோது அ.தி.மு.க.விலே நடவடிக்கைகளே எடுக்கப்படவில்லையா? அவர்களுடைய குடும்பம் என்றும், அவர்களுடனேயே ஒட்டி உறவாடி வாழ்பவர் என்றும் சொல்லப்படுபவரின் குடும்பத்தினரோடு எப்படிப்பட்ட சச்சரவுகள் ஏற்பட்டன? அதற்காக ஆளுங்கட்சி என்ற அதிகார அஸ்திரத்தைப் பயன்படுத்திக் காவல் துறை யினரின் துணையோடு எத்தகைய சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாதா?

கோவை ராவணன், மன்னார்குடி திவாகரன் மீதெல்லாம் காவல்துறையினரால் வேண்டுமென்றே அசாதாரணமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது உண்டா இல்லையா? அ.தி.மு.க. ஆட்சி பதவியேற்ற 2011 மே மாதத்திலிருந்து அவர்கள் எல்லாம் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகப் பக்கம் பக்கமாகச் செய்திகள் வந்தன. ஆனால் அவர்கள் மீது தமிழகக் காவல் துறை நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்து விட்டு, கடைசியில் சசிகலா மீது ஜெயலலிதா நடவடிக்கை எடுத்தவுடன் எந்த அளவிற்கு அவர்களையெல்லாம் அடக்கி ஒடுக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது?

உடன்பிறவாச் சகோதரியின் கணவர் நடராஜன் மீது எப்படியெல்லாம் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது? திடீரென்று அவர் மீது புகார் கொடுக்கப்பட்டு, கைது செய்யப்படவில்லையா? புகார் மனு மீது முறையான பூர்வாங்க விசாரணை எதுவும் நடைபெற்றதா? ஒரே நாளில் விசாரணை முடிந்து விட்டதா? புகார் கொடுத்த மறுநாளே கைது செய்யப்பட்டிருக்கிறார் என்றால் அதற்கான உள்நோக்கம் என்ன? சசிகலா பெங்களூர் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்த நாளில் அவருடைய கணவர் கைது செய்யப்பட்டதற்கு என்ன காரணம்?

ஆனால் சசிகலா மீண்டும் அவருடைய வீட்டிற்கு வந்தது எப்படி? சசிகலாவும் அவரது உறவினர்களும் தவறு செய்ததாக ஜெயலலிதா குற்றஞ்சாட்டி அவர்களையெல்லாம் கட்சியிலிருந்தே தூக்கியெறிந்து, தோட்டத்தை விட்டும் வெளியே அனுப்பினார். ஆனால் மீண்டும் அவர்கள் எல்லாம் புனர் வாழ்வு பெற்றது எங்ஙனம்? ஏன்? 30-12-2011 அன்று நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக் குழுவில் ஜெ. பேசும்போது "சசிகலா குடும்பத்தோடு இனி ஒட்டும் இல்லை, உறவும் இல்லை" என்று சொன்னார். ஆனால் ஜெயா டி.வி.யில் 29-3-2012 அன்று சசிகலாவின் அறிக்கை தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டது.

சசிகலா நடராசனை "என்கவுண்டர்" செய்யவே முயற்சி நடைபெற்றதாக நடராசனே கூறினார். அதற்கு இன்றுவரை இந்த அரசிடமிருந்து எந்தவிதமான பதிலும் இல்லை. இப்படிப்பட்ட மோசமான வரலாறுகளை முதுகில் சுமந்து கொண்டுள்ள முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குத் தி.மு.கழகத்தில் கட்சியின் சட்டதிட்டப்படி எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றிக் குறை கூறுவதற்கு ஏதாவது தகுதி இருக்கிறதா?

அடுத்து ஜெயலலிதா தனது உரையில் என் மீது கூறியுள்ள குற்றச்சாட்டு, என்னுடைய இளைய மகன் மு.க. ஸ்டாலின் பாதுகாப்பு பற்றிப் பாரதப் பிரதமருக்கு டி.ஆர். பாலு மூலம் கடிதம் எழுதச் சொன்னேன் என்று தெரிவித்திருக்கிறார். ஏடுகளில் முதலில் ஸ்டாலின் பாதுகாப்பு பற்றி நானே பிரதமருக்குக் கடிதம் எழுதியதைப் போல செய்திவந்தது. அந்தச் செய்தியைப் பார்த்ததும் எனக்கே அதிர்ச்சி ஏற்பட்டு, எப்படி அந்தச் செய்தி வந்தது, நான் எங்கே பிரதமருக்குக் கடிதம் எழுதினேன் என்று விசாரிக்கச் சொன்ன பிறகுதான், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவரான டி.ஆர். பாலு அப்படி ஒரு கடிதத்தை - அதுவும் இப்போது அல்ல - இப்போதைய பிரச்சினை எழுவதற்கு முன்பே எழுதப்பட்டது என்பது எனக்கே தெரிந்தது. அதற்குப் பிறகுதான் டி.ஆர். பாலு அவர்களே, "தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் என்ற தகுதியின் அடிப்படையில் நான் தான் (டி.ஆர். பாலு) பிரதமருக்குக் கடந்த டிசம்பரில் கடிதம் எழுதினேன். கடந்த நாடாளுமன்றக் குளிர் காலக் கூட்டத் தொடரில் அக்கடிதத்தை நான் பிரதமரிடம் அளித்தேன். ஆனால் தற்போதைய நிகழ்வுகளுடன் எனது கடிதத்தைத் தொடர்படுத்தி அதை தி.மு.க. தலைவர் எழுதியதாகச்

செய்திகள் வெளிவருகின்றன. அதில் உண்மையில்லை என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்கிறேன். மு.க. ஸ்டாலின் வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் தி.மு.க.வின் நட்சத்திர பிரச்சாரநாயகனாக தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்யவுள்ளார். தமிழகக் காவல் துறையினரால் ஸ்டாலினின் பாதுகாப்பை எந்த அளவுக்கு உறுதிப்படுத்த முடியும் என்பது கேள்விக்குறியே. 2006ஆம் ஆண்டிலேயே மதுரை ரயில் நிலையம் அருகே ஸ்டாலினை கத்தியால் தாக்க வந்த நபரை அப்போது அவருக்குப் பாதுகாப்பு வழங்கிய மத்திய ரிசர்வ் காவல் படையைச் சேர்ந்தவர்தான் காப்பாற்றினார். அப்போது தமிழகக்காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதே நிலை வரவிருக்கும் தேர்தலில் வரக்கூடாது என்ற எண்ணத்தில்தான் பிரதமருக்கு நான் கடிதம் அனுப்பினேன். இதுதான் உண்மையான நிலவரம்" என்று டி.ஆர். பாலு கூறி, அந்த விளக்கம் ஏடுகளிலே வெளிவந்த பிறகும், முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவையில், பாரதப் பிரதமருக்கு டி.ஆர். பாலு மூலம் நான் கடிதம் எழுதச் சொன்னதாக உண்மைக்கு மாறான ஒரு தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

மேலும் ஜெயலலிதா, "கருணாநிதி, தா. கிருட்டினன் கொலை வழக்கில் என்ன நிலைப்பாட்டை எடுத்தார்? தனக்கு ஒரு நீதி; தன் குடும்பத்திற்கு ஒரு நீதி; மற்றவர்களுக்கு ஒரு நீதி என்ற ரீதியில் செயல்படும் கருணாநிதியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தி.மு.க. வினர் சட்டம், ஒழுங்கு குறித்துப் பேசுவது நகைப்புக்குரியதாக உள்ளது" என்று சொல்லியிருக்கிறார். ஜெயலலிதா கூறும் இந்த வழக்கில் நான் என்ன நிலைப்பாட்டை எடுத்தேன்? அப்போது தி.மு. கழக ஆட்சியா நடைபெற்றது? ஜெயலலிதாவின் ஆட்சிதானே நடைபெற்றது!

முன்னாள் அமைச்சரும், தென்பாண்டி மண்டலக் கழகத் தளகர்த்தரும், தென்னரசின் மறைவுக்குப் பிறகு முகவை மாவட்டத்தில் கழகம் வளரப் பெரிதும் காரணகர்த்தாவாக விளங்கிய வரும், என்னிடம் பேரன்பு கொண்டவருமான பசும்பொன் தா. கிருட்டினன் 20-5-2003 அன்று காலையில் படுகொலை செய்யப் பட்டார் என்ற செய்தியினை அறிந்து துடிதுடித்துப் போனேன்.

தா.கி. மறைவு குறித்து நான் விடுத்த இரங்கல் செய்தியில், "தா.கி. என அழைக்கப்பட்ட என் தம்பியே; என் உயிருக்கு உயிரானவனே; உன் உயிரையா பறித்தார்கள் உன்மத்தர்கள்?

நம்ப முடியவில்லையே தம்பி! இரண்டு நாட்களுக்கு முன்புதானே சென்னை வந்து என் இல்லத்தில் என்னிடமும் உன் அண்ணியிடமும் பிறந்த நாள் வாழ்த்துப் பெற்று இருவருக்கும் பொன்னாடை அணிவித்துச் சென்றாய்! நேற்று 19-5-2003 மாலை 6 மணி அளவில் கூட மதுரையிலிருந்து தொலைபேசியில் என்னிடம் பேசி, மதுரை வட்டாரத்து கழகத் தேர்தல்கள் குறித்து விளக்கமளித்து என்னிடமும் விளக்கம் பெற்று வினையாற்றிக் கொண்டிருந்தாயே; அதற்குள் இப்படியொரு செவி பிளக்கும் சிந்தை தகர்க்கும் செய்தியா? அதற்கு முதல் நாள் 18-5-2003 அன்று காரைக்குடி தொகுதி சட்டமன்ற அ.தி.மு.க. முன்னாள் உறுப்பினர் சுப. துரைராஜ் அவர்களை அண்ணா அறிவாலயம் அழைத்து வந்து கழகத்தில் சேர்த்தாயே; அந்தப் புகைப்படம் கூட இதோ என் எதிரில் காட்சியாகி என்னைத் தணலில் தள்ளுகிறதே! தம்பி, உன்னையெல்லாம் இழந்துவிட்டு நான் எப்படி கழகம் நடத்துவேன் - அய்யகோ! துடிக்கிறேன் - துவளுகிறேன் - எனக்கு ஆறுதல் சொல்லும் ஆற்றல் எனக்கே இல்லையே!" என்று எழுதினேன்.

மறைந்த மாவீரருக்கு நேரில் அஞ்சலி செலுத்தத் தலைமைக் கழகத்தின் சார்பில் பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியும் சென்றனர். அந்த நேரத்தில் அமெரிக்கா சென்றிருந்த தளபதி ஸ்டாலின், இந்தச் செய்தியைக் கேள்வியுற்று, தனது பயணத்தை ரத்து செய்துவிட்டுச் சிகாகோ நகரில் இருந்து மதுரை திரும்பினார்.

கொடுமையிலும் கொடுமை என்பார்களே, அதைப் போல தா. கிருட்டினன் மறைவுக்காக நாங்கள் எல்லாம் ரத்தக் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்த நேரத்தில், அ.தி.மு.க. அரசு அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு, அவருடைய உடல் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்பாகவே 21-5-2003 அன்று அதிகாலை 4.30 மணி அளவில் மதுரை சத்தியசாயி நகரில் உள்ள மு.க.அழகிரியின் இல்லத்திற்குள் நூற்றுக்கணக்கான காவல் துறையினர் நுழைந்து, தா. கிருட்டினன் கொலை தொடர்பாக விசாரணை நடத்த வேண்டுமென்று கூறிக் கைது செய்து அழைத்துச் செல்ல முற்பட்டார்கள். அப்போது அங்கே கூடியிருந்த கழகத் தொண்டர்கள், "போலீஸ் அராஜகம் ஒழிக" என்று முழக்கமிட்டதோடு, வேனிற்கு முன்னால் கீழே படுத்து மறித்தார்கள். ஆனால் அவர்களையெல்லாம் அழகிரியே அமைதிப்படுத்திவிட்டுக் காவல் துறையினரோடு புறப்பட்டுச்

சென்றார். செய்தியாளர்கள் அழகிரியிடம் கேட்டபோது, "அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் பொய் வழக்கை நீதிமன்றம் மூலம் சந்திப்பேன்" என்று கூறினார். முதலில் மதுரை மத்திய சிறைக்கு அழகிரியை அழைத்துச் சென்ற காவல் துறையினர் பின்னர் திருச்சி மத்திய சிறைக்கு வேனில் அழைத்துச் சென்று அங்கே அடைத்தார்கள்.

செய்தியாளர்கள் மு.க. அழகிரி கைதுபற்றி என்னிடம் கேட்டபோது, "உண்மையான குற்றவாளி களைப் பிடித்திருந்தால், அது வரவேற்கத்தக்கது. பாவம் ஓரிடம், பழி ஓரிடம் என்ற நிலையிலோ, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது என்ற நிலையிலோ நடவடிக்கை அமையுமானால்; அது உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்க விடுவதோடு; நேர்மையான நீதி கிடைப்பதற்கு வழியில்லாத தடைக்கல்லாகவும் ஆகிவிடும்" என்று கூறினேன். 24-5-2003 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கும், துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி அவர்களுக்கும் தமிழகத்தில் எதிர்க் கட்சிகள் மீது பொய் வழக்கு, பழிவாங்கும் போக்கு, அதிகார துஷ்பிரயோகம் தொடர்கதையாக உள்ளது என்று நடைபெறும் சம்பவங்களைப் பற்றி விரிவாகக் கடிதம் எழுதினேன்.

18-6-2003 தேதிய "இந்து" நாளேட்டில், "தா. கிருட்டினன் வழக்கு குறித்து விசாரணை நடத்திவரும் காவல் துறை அதிகாரிகளில் நான்கு உயர் அதிகாரிகள் திடீரென மாற்றப்பட்டது குறித்துப் பலருக்குச் சந்தேகம் எழுந்துள்ளது. மதுரையில் காவல்துறை ஆணையாளராகக் கூடுதல் பொறுப்பு வகித்துவந்த டி.ஐ.ஜி., பி. கந்தசாமி என்பவர் மு.க. அழகிரி கைதான 24 மணி நேரத்திற்குள் இடமாற்றம் செய்யப்பட்டார். அவர் பதவியேற்ற மூன்று மாதத்திற்குள்ளாகவே மாற்றப்பட்டு, விழுப்புரத்தில் பதவி ஏற்றுக்கொண்டார். தா.கிருட்டினன் கொலை செய்யப்பட்ட பகுதியையொட்டிய மதுரை அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் சுந்தரேசன் என்பவரும் மாற்றப்பட்டார். ஜூன் 2ஆம் வாரம் வரை அவருக்கான மாற்றுப் பணி இடம் அளிக்கப்படவில்லை. இந்த வழக்கில் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வரும் இரண்டு முக்கிய உதவி ஆணையாளர்களான அரிகரன் மற்றும் ஏ.போஸ் ஆகியோர் இரண்டு தினங்களுக்கு முன்னர் அவசர அவசரமாக மாற்றப்பட்டனர். அவர்களுக்கும் வேறு பணி இடம் ஒதுக்கப்படவில்லை. இவர்கள் இது தொடர்பான விசாரணையில் முக்கியத் தடயங்களைக் கண்டுபிடித்தவர்கள்

என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் திடீர் மாறுதல் இந்த வழக்கில் குற்றவாளிகளைப் பிடிப்பது தொடர்பாக விசாரித்து வரும் சிறப்புப் பணி அதிகாரிகளுக்கே கூட ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேசமயம் அவர் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளராகப் பதவி உயர்த்தப்பட்டு தல்லாகுளம் டிவிஷனில் தொடர்ந்து பணியாற்றிவருகிறார். அவருக்கு வழங்கப்பட்ட இந்தப் பதவி உயர்வுக்கான உத்தரவு இதுவரை வேறு யாருக்கும் தரப்படாத வகையில் முன் எப்போதும் கடைப்பிடிக்காத வகையில் வழங்கப்பட்டுள்ளது" என்றெல்லாம் "இந்து" ஏட்டில் எழுதப்பட்டிருந்தது. இவற்றை மக்கள் மறந்திருப்பார்கள் என்றெண்ணி, மனம் போன போக்கில் புழுதி வாரி இறைத்திருக்கிறார் ஜெயலலிதா!

சட்டம், ஒழுங்குப் பிரச்சினை பற்றிப் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, கழக ஆட்சியில் மதுரையில் பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், குற்றவாளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்றும், இதுதான் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டிய லட்சணமா? என்றும் கேட்டிருக்கிறார். கழக ஆட்சியில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? முதலமைச்சர் என்ன கூறுகிறார்? ஓய்வு பெற்ற நீதிபதியே தொடர்ந்து வழக்கினை விசாரிக்க வேண்டும் என்றும், எதிர்த் தரப்பு வழக்கறிஞராகத் தான் சொல்பவரைத்தான் நியமிக்க வேண்டுமென்றும் கேட்பதுதான் நீதியை நிலைநாட்டுகின்ற இலட்சணமா? உச்சநீதிமன்ற நீதிபதியே அவ்வாறு குறிப்பிட்ட நீதிபதிதான் வழக்கினை விசாரிக்க வேண்டுமென்று கேட்பது தவறு என்று ஒரு முதலமைச்சர் மீதே குற்றஞ்சாட்டினாரே, அது மறந்து விட்டதா? ஆட்சியிலே இருக்கிறபோது சட்டத்திற்கு விரோதமாக நடப்பது யார்? நானா? ஜெயலலிதாவா?

முதலமைச்சர் ஜெயலலிதா பேசியுள்ள ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீடு, மின்வெட்டுப் பிரச்சினை, தொழில் வளர்ச்சிப் பிரச்சினை போன்றவை குறித்து நாளை எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

5-2-2014

3860. பதில் உரையா? பழி உரையா? (2)

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதில் அளித்தபோது தொடக்கத்திலேயே "சட்டப்பேரவையில் கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பு இருந்தும், அதனைப் பயன்படுத்திக் கொள்ளாமல் அரசின் மீது குற்றங்களை மட்டுமே சுமத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனம் போன போக்கில் சிலர் பொறுப்பற்ற முறையிலே வெளியே பேசியிருக்கிறார்கள்" என்று தெரிவித்திருக்கிறார். சட்டப்பேரவையில் ஜனநாயக ரீதியாக, சட்டப்பேரவை விதிகளுக்கு உட்பட்டு கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படுகிறதா? ஆளுங்கட்சியின் மீது ஆக்கப்பூர்வமான முறையில் குற்றங்களை எடுத்துக் கூற இதுவரை யாருக்காவது வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறதா? ஆட்சியினர் மீது பூர்வாங்க ஆதாரங்களோடு குற்றச்சாட்டுகளைக் கூறினால், அது பொறுப்பற்ற முறையில் பேசுவதாகப் பொருளா?

"நிறைகளையும், குறைகளையும் ஆராய்ந்து பார்த்து, அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து, அதன் பிறகு தெளிவான முடிவுக்கு வரவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்" என்று திருவள்ளுவரை முதலமைச்சர் எடுத்துக்காட்டிப் பேசியிருக்கிறார். இந்த ஆட்சியில் அய்யன் திருவள்ளுவர் என்ன பாடுபட்டிருக்கிறார் என்பது தமிழ்நாட்டிற்குத் தெரியாதா? பாடப் புத்தகத்தில் இருந்த திருவள்ளுவர் உருவப் படம் நீக்கப்படவில்லையா? குமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை முறையாகப் பராமரிக்கப்படாமல் விடப்படவில்லையா? ஏன், சென்னை மாநகரிலே உள்ள வள்ளுவர்கோட்டம் இன்றைக்கு எந்தக் கதியிலே உள்ளது? இருளடைந்து பாழடைந்து இருக்க வில்லையா? திருவள்ளுவர் பெயரால் தமிழகத்திலே இருந்த நூலகங்கள் இழுத்து மூடப்படவில்லையா?

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமையையும் முதலமைச்சர் பேரவையிலே சொல்லியிருக்கிறார். ஆனால் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவினையொட்டி ஆசியா கண்டத்திலேயே இல்லாத அளவுக்கு மிகப் பெரிய நூலகம் ஒன்றினைச் சென்னை மாநகரில் கழக ஆட்சியிலே எழுப்பினோம் என்பதற்காக இன்றைக்கு அதன் நிலைமை என்ன? அலட்சியத் திற்கும், ஆணவத்துக்கும் எல்லையே இல்லையா?

சட்டப்பேரவை வைர விழாவினை ஜெயலலிதா 2012 நவம்பரில் கொண்டாடினாரே, அதிலே அண்ணாவைப் பற்றி ஒரு வார்த்தை பேசினாரா? தற்போது தேர்தல் வருகிறது என்றதும், பேரவையில் அண்ணா அவர்களையும், சி. சுப்ரமணியம் அவர் களையும் தன் பேச்சிலே குறிப்பிட்டிருக்கிறார்!

ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய ஜெயலலிதா தனது உரையில் ஆசிரியர் தகுதித் தேர்வில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - மாற்றுத் திறனாளிகளுக்கு 5 சதவிகிதம் மதிப்பெண் சலுகை அளித்து அறிவிப்பு செய்திருக்கிறார்.

நானும், தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்கள் தலைமையிலே உள்ள திராவிடர் கழகமும் மற்றும் தமிழகத்திலே உள்ள எதிர்க்கட்சிகளும் திரும்பத் திரும்ப இந்த அரசிடம் இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு உரிய சலுகையை வழங்கிட வேண்டுமென்று கடந்த சில மாதங்களாக வலியுறுத்தி வந்தோம். ஆனால் அரசின் சார்பில் இந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை. மாறாக ஜெயலலிதா விடுத்த அறிக்கை ஒன்றில் ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருவதாக, நாம் என்ன கேட்கிறோம் என்பதன் அடிப்படையையே புரிந்து கொள்ளாமல் பதில் அளித்திருந்தார். மற்ற மாநிலங்களில் எல்லாம் இந்தச் சலுகை அளிக்கப்பட்டு வருவதைப் பற்றிய புள்ளி விபரங்களை நான் எனது அறிக்கையில் குறிப்பிட்டு, சமூக நீதியின் தாயகமான தமிழகத்திலே மட்டும் ஏன் இந்தச்சலுகை வழங்கப்படவில்லை என்று கேட்டிருந்தேன்.

ஆனாலும் தமிழக அரசு பிடிவாதமாக இருந்த நிலையில், ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு மதிப்பெண் சலுகை அளிக்காதது குறித்து தேசிய ஆதிதிராவிடர்

ஆணையத்தின் சென்னை மண்டல இயக்குனருக்கு திரு. பிரின்ஸ் கஜேந்திர பாபு கொடுத்த புகாரின் அடிப்படையில், தேசிய ஆதி திராவிடர் ஆணையம் பிறப்பித்த உத்தரவில், "இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராக ஆசிரியர் தேர்வு வாரியம் செயல்பட்டுள்ளது, இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு மதிப்பெண் சலுகை அளிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்ததை யொட்டி, கடந்த 30-1-2014 அன்று "இடஒதுக்கீட்டிற்கு இந்த ஆட்சியில் இடமே இல்லையா?" என்று நான் விளக்கி எழுதியிருந்தேன். அவ்வாறு தேசிய ஆதி திராவிடர் ஆணையம் பிறப்பித்த உத்தரவின் காரணத்தாலும், நானும், திராவிடர் கழகத் தலைவர் வீரமணி போன்றவர்களும் தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாகவும்தான் ஜெயலலிதா வேறு வழியின்றி தற்போது கீழே இறங்கி வந்து ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு 5 சதவிகித மதிப்பெண் சலுகை அளிக்க முன்வந்திருக்கிறார்.

ஜெயலலிதா உண்மையிலேயே இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் மீது பற்றுக் கொண்டு இதனை அறிவிக்கவில்லை. இது வெறும் கண்துடைப்பு. சமூக, கல்வி நிலைகளில் வெவ்வேறு அடுக்குகளில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் ஆகிய இடஒதுக் கீட்டுப் பிரிவினர் அனைவரையும் சகட்டுமேனிக்கு ஒன்றாகப் பாவித்து அனைவர்க்கும் ஒரே மாதிரியாக 5 மதிப்பெண் சலுகை என்று ஜெயலலிதா அறிவித்திருப்பதை இட ஒதுக்கீட்டுப் பிரிவினர் எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்? ஆசிரியர் தகுதித் தேர்வினால் ஏற்பட்டுள்ள பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவது பற்றி ஜெயலலிதா பதிலேதும் சொல்லவில்லையே?

தொழில் வளர்ச்சி பற்றியும் ஜெயலலிதா சட்டப் பேரவையில் பேசியிருக்கிறார். புதிய முதலீடுகள், வேலை வாய்ப்புகள் அனைத்திலும் பன்மடங்கு வளர்ச்சியைத் தமிழகம் அடைந்திருக்கிறது என்று பெருமிதப்பட்டிருக்கிறார். அவருடைய பெருமித உணர்வைப் பற்றி நமக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் முதலீடுகள் பற்றி நான் சொல்வதெல்லாம் பொய் என்று ஒரு விதண்டாவாதத்தை வைத்திருக்கிறார். 29-1-2014 அன்று "தமிழகத்தில் தொழில் வளர்ச்சி - அன்றும்,

இன்றும்" என்ற தலைப்பில் நான் ஆதாரங்களோடு பல விபரங்களைத் தெரிவித்திருக்கிறேன். தமிழகத்திலே உள்ள தொழில் முதலீட்டாளர்களை ஈர்த்திழுத்திடும் வகையில், நம்முடைய மாநிலத்திற்குள் கோவை மாநகருக்கு வந்து கர்நாடக மாநில முதலமைச்சர் கடந்த 20-1-2014 அன்று தொழில் முதலீட்டாளர்களையெல்லாம் அழைத்து மாநாடு நடத்தியது பற்றிய செய்தி அனைத்து நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது. அந்த மாநாட்டின் விளைவாக கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட கொங்கு மண்டலப் பகுதிகளிலே தொழில் நடத்துகின்ற சுமார் 200 தொழிலதிபர்கள் 12 ஆயிரம் கோடி ரூபாய்க்குச் சாம்ராஜ் நகரில் முதலீடு களைச் செய்து தொழில் தொடங்கிட முன்வந்துள்ளனர் என்று "முரசொலி"யிலே அல்ல, ஆளுங்கட்சிக்கு வேண்டிய சில பத்திரிகைகளிலேயே செய்தி வந்ததா இல்லையா?

கர்நாடக மாநில முதலமைச்சரும், அதிகாரிகளும் தமிழகத்திற்கு வந்து மாநாடு நடத்தி முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்து, அதனைத் தமிழக முதலீட்டாளர்களும் முழு மனதுடன் ஏற்று, கர்நாடகத்தில் தொழில் தொடங்கிட உறுதி அளித்துள்ள நிலையில், தமிழ்நாட்டிலே உள்ள முதல்வரும், அந்தத் துறையின் அமைச்சர்களும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? கொடநாட்டிலிருந்து ஆட்சிப் பணி புரிந்து கொண்டிருந்ததாக விளம்பரப்படுத்தி வந்த நிலையில் நான் பொய் சொல்வதாகச் சட்டப்பேரவையிலே கூறுவதா?

அதுமட்டுமா? மத்திய அரசின் கயிறு வாரிய துணைத் தலைவர் ஒருவர் செய்தியாளர்களைச் சந்தித்து, "விழுப்புரத்தில் வழுதரெட்டி கிராமத்தில் 200 ஏக்கர் இடத்தில் தொழில் பூங்காவினை உருவாக்க முன்வந்த போதிலும், தமிழக அரசு இதுவரை பூங்கா அமைக்க அனுமதி அளிக்கவில்லை" என்றும்; "இது குறித்து, தமிழக ஊரகத் தொழில் துறை அமைச்சரைச் சந்திக்க கடந்த இரண்டு மாதங்களாக முயன்றும் பார்க்க முடியவில்லை" என்றும் பேட்டி அளித்தாரே; அதுவும் பொய்தான் என்று ஜெயலலிதா கூறிட முயற்சிப்பாரா?

முதலமைச்சர் 9-9-2011 அன்று பேரவையில் 110வது விதியின் கீழ் ஒரு திட்டத்தை அறிவித்தது பற்றியும், ஆனால் அந்தத் திட்டம் ஏற்கனவே 25-8-2011 அன்று பேரவையில்

வைக்கப்பட்ட கொள்கைவிளக்கக் குறிப்பிலேயே இடம் பெற்றுள்ளது என்றும், ஏற்கனவே வைக்கப்பட்ட அந்தத் திட்டம் பற்றி முதலமைச்சர் புதிய அறிவிப்பு போலப் பேரவையில் செய்தது தவறு இல்லையா என்றும் கேட்டிருந்தேனே, இரண்டு மணி நேரம் பேரவையில் பதில் கூறிய முதலமைச்சர் இதற்குப் பதிலளித்திருக்க வேண்டாமா? பதில் இருந்தால்தானே சொல்வதற்கு?

முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் படித்த அந்த பதிலிலேயே, "கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமும், அரசாணைகள் மூலமும் 54 தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்வதாகச் சொல்லப்பட்ட தொகை 66,664 கோடி ரூபாய் ஆகும். இதில் 15,982 கோடி ரூபாய்க்கான 12 தொழில்கள் தொடங்கப்படவே இல்லை" என்று கூறியிருக்கிறார். இதிலிருந்து கழக ஆட்சியில் 50,682 கோடி ரூபாய்க்கான 42 தொழில்கள் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டதாக ஜெயலலிதாவே பேரவையில் ஒப்புக் கொண்டிருக்கிறார் அல்லவா? அதுவே தி.மு. கழக ஆட்சியில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதற்கான ஆதாரம் இல்லையா?

ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இன்று வரை 1 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் 17 இந்திய மற்றும் பன்னாட்டுப் பெரும் நிறுவனங்களுடன் 26,625 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன என்றும், இதுநாள்வரை 10,660 கோடி ரூபாய் முதலீடுகள் கிடைக்கப்பெற்று, 10,022 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவித்திருக்கிறார். புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது 26,625 கோடி ரூபாய்க்கு! ஆனால் முதலீடுகள் கிடைக்கப்பெற்றது வெறும் 10,660 கோடி ரூபாய்க்குத்தான்! வெறும் நாற்பது சதவிகிதம்தான்! 1 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கத்தக்க வகையில் ஒப்பந்தங்கள் போடப்பட்டதாகவும், 10,022 பேருக்கு மட்டுமே வேலை கிடைக்கத்தக்க அளவிற்குத்தான் முதலீடுகள் கிடைக்கப்பெற்றதாகவும் ஜெயலலிதாவே ஒப்புக் கொண்டிருக்கிறார் என்றால், இதுதான் தொழில் வளர்ச்சிக்கான அடையாளமா?

புதிய தொழில் முதலீடுகள், புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவது என்பதில் பன்மடங்கு வளர்ச்சியைத் தமிழகம் எட்டியிருக்கிறது என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறிக்கொண்ட போதிலும், 4-2-2014 தேதிய நாளிதழ் ஒன்றுக்கு, அளித்த சிறப்புப் பேட்டியில், மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் "மத்திய அரசின் தொழில்துறை சார்பில் ஒரு பிரமாண்டமான தொழில் வளர்ச்சித் திட்டம் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான முதலீட்டில் 90 சதவிகிதம்வரை மத்திய அரசு கடனாக வழங்கும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு ஆர்வம் காட்டவில்லை" என்று தொடங்கி, தமிழக அரசு எவ்வாறு தொழில் வளர்ச்சியில் அக்கறை இல்லாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறாரே; ஜெயலலிதா அதற்கென்ன பதில் கூறப் போகிறார்?

சட்டம், ஒழுங்குப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்ட முதலமைச்சர் ஜெயலலிதா சில புள்ளி விவரங்களையும் எடுத்து வைத்திருக்கிறார். குறிப்பாகக் கடந்த 2005ஆம் ஆண்டு ஜெயலலிதாவின் முந்தைய ஆட்சியில் 1,366 ஆக இருந்த கொலைகளின் எண்ணிக்கை 2010ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் 1,715 என்ற அளவுக்கு உயர்ந்துவிட்டது என்று கூறிவிட்டு, பின்னர் அவருடைய ஆட்சியைப் பற்றித் தெரிவிக்கும்போது, 2011ஆம் ஆண்டு 1,747 கொலைகளும், 2012 ஆம் ஆண்டு 1,806 கொலைகளும் நடைபெற்றதாகச் சொல்லியிருக்கிறார் என்றால், தி.மு. கழக ஆட்சியை விட, அ.தி.மு.க. ஆட்சியில் கொலைகள் பெருகி இருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதை ஜெயலலிதா குறிப்பிட்டிருக்கும் இந்தப் புள்ளி விவரங்களிலே இருந்தே தெரிந்துகொள்ளுங்கள்!

சொத்து தொடர்பான வழக்குகளைப் பற்றி ஜெயலலிதா கொடுத்துள்ள புள்ளி விவரத்தில், 2012இல் 18,585 வழக்குகள் என்றும், 2013ஆம் ஆண்டு 19,465 வழக்குகள் தாக்கலாகி உள்ளன என்றும் தெரிவித்திருக்கிறார். 18,585 வழக்குகளைவிட 19,465 வழக்குகள் என்பது அதிகமா? குறைவா?

மேலும் ஜெயலலிதா அவருடைய ஆட்சியிலே கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதாகத் தனது பேச்சிலே தெரிவித்திருக்கிறார். அது எந்த அளவுக்கு உண்மை என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாதா? அன்றாடம் நாளேடுகளைப்

பிரித்தால் கொலை நடைபெறாத நாட்கள் உண்டா? இத்தனை சதவிகிதம் குற்றங்களைக் கண்டுபிடித்து விட்டதாகக் காவல் துறையிலே உள்ளவர்கள் அறிக்கை தயார் செய்து கொடுப்பார்கள். எந்த ஆட்சி நடைபெற்றாலும், அதிலே சாதகமான புள்ளி விவரத்தை மட்டுமே அவர்கள் கொடுப்பார்கள். முதல் அமைச்சர் ஜெயலலிதாவும் அதை ஏற்றுக்கொண்டு, இத்தனைச் சதவிகிதம் குற்றங்களை அ.தி.மு.க. ஆட்சியிலே கண்டுபிடித்ததாகப் பெருமை அடித்துக் கொண்டிருக்கிறார்! நம் கண்ணுக்குத் தெரிந்த கொலை, திருச்சி ராமஜெயம் கொலை! சுப்பிரமணியம் சுவாமி கூட தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப் படவில்லை என்றும், பா.ஜ.க. தலைவர்கள் பலர் கொலை செய்யப்பட்டது பற்றியும் கண்டன அறிக்கை விட்டிருந்தாரே? மதுரையில் பொட்டு சுரேஷ் கொலை செய்யப்பட்டு எவ்வளவு நாட்களாயிற்று? இந்தக் கொலை வழக்குகளில் எல்லாம் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டார்களா?

"எனது தலைமையிலான அரசைப் பொறுத்த வரையில் பயனற்ற இலவசங்களைக் கொடுத்து மக்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை. நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பயனற்ற இலவசங்களைக் கொடுத்து மக்களை ஏமாற்றுபவர்களை வித்தை காட்டி குழந்தையை ஏமாற்றுபவர்களோடு ஒப்பிட்டு இதே சட்டமன்றத்தில் பேசினேன்" என்று ஜெயலலிதா பேரவையில் தெரிவித்திருக்கிறார். ஆனால் இப்போது இந்த அ.தி.மு.க. ஆட்சியில் இலவசங்கள் வழங்கப்படுகின்றனவே, அது வித்தைகாட்டி குழந்தைகளை ஏமாற்றுபவர்களின் செயல்பாடு இல்லையா? தி.மு. கழக ஆட்சியில் இலவசங்கள் வழங்கப்பட்டால், அது வித்தைகாட்டும் செயல்; அ.தி.மு.க. ஆட்சியில் இலவசங்கள் வழங்கப்பட்டால், பாராட்டத்தக்க செயலா?

ஜெயலலிதா வழக்கம் போலக் கச்சத் தீவு பற்றிப் பேசவும் தவறவில்லை. 1991ஆம் ஆண்டு கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து விட்டு, "கச்சத் தீவை மீட்டே தீருவேன்" என்று சபதம் செய்தவர் ஜெயலலிதா. ஆனால் அதுபற்றி நாம் எத்தனை முறை விளக்கங்களையும், பதில்களையும் தந்தாலும் நம் மீது தொடர்ந்து குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகிறார் ஜெயலலிதா. கச்சத் தீவு அருகே இந்திய மீனவர்களுக்கு மீன்

பிடிக்கும் உரிமை கிடையாதென்று இந்திய அரசே சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததற்கு ஜெயலலிதா தெரிவித்த எதிர்ப்பு என்ன? ஒவ்வொரு நாளும் பிரதமருக்குக் கடிதம் எழுதும் ஜெயலலிதா, மத்திய அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டிக்க வேண்டாமா? இலங்கை, இந்திய மீனவர்கள் சந்தித்துப் பேசுவது பற்றிப் பிரதமர் எழுதிய கடிதத்திற்குப் பதில் எழுதாமல் இருந்த ஜெயலலிதாவுக்கு மீனவர் பிரச்சினை பற்றியோ, கச்சத் தீவு பிரச்சினை பற்றியோ பேசுவதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் கிடையாது.

தமிழகத்தில் விரைவில் மின்வெட்டே இருக்காது என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த 2011ஆம் ஆண்டு முதல் இதுவரை எத்தனை முறை ஜெயலலிதா தமிழகத்தில் "விரைவில் மின்வெட்டே இருக்காது" என்று கூறியிருக்கிறார்? ஆனால் மின்வெட்டினால் தமிழ்நாட்டு மக்கள் இந்த ஆட்சியில் அவதிப்பட்டதைப் போல வேறு எந்த ஆட்சிக் காலத்திலாவது சிரமப்பட்டது உண்டா?

தி.மு. கழக ஆட்சியின் திட்டங்களால்தான் தற்போது கிடைக்கும் மின்சாரம் கூடக் கிடைக்கிறதே தவிர, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு எந்தப் புதிய மின் திட்டத்தாலும் தமிழகத்திற்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. மேலும் இந்த ஆட்சியில் பல கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப் போவதாக அறிவித்த பல மின் திட்டங்களும் சர்வதேச ஒப்பந்தப் புள்ளி என்று கூறப்பட்டு எதுவும் நடைமுறைக்கு வரவில்லை. இந்த அழகில்தான் முதலமைச்சர், தமிழகத்தில் விரைவில் மின்வெட்டே இருக்காது என்று திசை திருப்பும் வகையிலே பேரவையிலே கூறியிருக்கிறார்.

வேளாண்மை பற்றியும், கால்நடைகள் பற்றியும் ஜெயலலிதா தனது உரையில் படித்திருக்கிறார். வேளாண்மை கடந்த மூன்றாண்டு காலமாக இந்த ஆட்சியில் முறையான பலனைத் தரவில்லை. அவர்களுக்கு அரசு சார்பில் தருவதாகக் கூறிய நிவாரணத் தொகையும் முறையாக வழங்கப்படவில்லை. கோமாரி நோயினால் கால்நடைகள் இறந்ததற்கான நிவாரணத்தொகை கூட இந்த அரசினால் வழங்கப்படவில்லை. இவ்வாறு வேளாண் பெருங்குடி மக்களுக்கும், சமுதாயத்தின் ஏனைய பிரிவினர்க்கும் அடுக்கடுக்கான தொல்லைகளையும், துயரங்களையும், வேதனை

களையும், விபரீதங்களையும் இழைத்து வருகின்ற அ.தி.மு.க. அரசின் முதலமைச்சர், ஆளுநர் உரையில் அளித்திருப்பதற்குப் பெயர் பதில் உரையா? பழி உரையா? என்பதைத் தமிழ்நாட்டு மக்களே முடிவு செய்து கொள்ளட்டும்!

அன்புள்ள,

மு.க.

6-2-2014

3861. திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (7)

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆறாவது பொது மாநில மாநாடுவரை கடந்த ஆறு "உடன்பிறப்பு" மடல்களில் விளக்கியிருந்தேன். கழகத்தின் ஏழாவது பொது மாநில மாநாடும், இந்தி எதிர்ப்பு மாநாடும் இணைந்து 1993ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26, 27, 28 ஆகிய நாட்களில் கோவையில் பேரறிஞர் அண்ணா நகரில், தாளமுத்து நடராசன் பந்தலில், வால்பாறை ராமசாமி முகப்பில், கோவை அரங்கநாதன் அரங்கத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு நான் தலைமை தாங்கி, கொடியேற்றிவைத்தேன். பொதுச் செயலாளர் பேராசிரியர் மாநாட்டின் திறப்பாளர். வரவேற்புக் குழுத் தலைவர் அப்போது கோவை மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த அருமை நண்பர் மு. கண்ணப்பன்.

மாநாட்டில் இசை முரசு நாகூர் அனீபா, மயிலைதேவன், முரசொலி முகிலன், விஜயா தாயன்பன், வளவனூர் மணிமாறன், நெல்லை அபூபக்கர், ஆரூர் செந்தமிழன், இராஜபாளையம் இசைமணி, ஆயிரம் விளக்கு எஸ்.ஏ.எம். உசேன் அப்துல் காதர் ஆகியோர் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் முதல் நாள் இரவு போலீஸ் கண்ணன் குழுவினரின் "மேற்கே தோன்றும் உதயம்" நாடகமும், இரண்டாம் நாள் என்.எஸ்.கே. தாமு குழுவினரின் "ஓடி விளையாடு பாப்பா" நாடகமும் நடைபெற்றன.

அடுத்து, இதே திருச்சியில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் எட்டாவது பொது மாநில மாநாடு, 1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26, 27, 28 ஆகிய நாட்களில் அன்பில் தர்மலிங்கம் பந்தலில், மன்னை நாராயணசாமி முகப்பில், சாதிக்பாட்சா

அரங்கில், தென்னரசு தியாகிகள் மணி மண்டபத்தில், வீரையா நினைவு கொடி மேடையில் இன்றைய வரவேற்புக் குழுத் தலைவர் கே.என். நேருவின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து சேலத்தில் சிறப்பு மாநில மாநாடு, 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27, 28, 29 ஆகிய நாட்களிலும், தி.மு. கழகப் பொன் விழா தொடக்கச் சிறப்பு மாநாடு திருநெல்வேலியில் 1998ஆம் ஆண்டு செப்டம்பர் 17, 18 ஆகிய நாட்களிலும், விழுப்புரம் மாவட்ட தி.மு.க. மாநாடு 2003ஆம் ஆண்டு செப்டம்பர் 19, 20, 21 ஆகிய நாட்களிலும், தென் மண்டல தி.மு.க. மாநாடு, விருது நகரில் 2004ஆம் ஆண்டு பெப்ரவரி 21, 22 ஆகிய நாட்களிலும், என்னுடைய முத்து விழா, நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி விழா ஆகியவற்றை இணைத்து தி.மு.க. சிறப்பு மாநாடு ஒன்று சேலத்தில் 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21, 22 ஆகிய நாட்களிலும், திண்டுக்கல் மண்டல தி.மு.க. மாநாடு, 2005ஆம் ஆண்டு மார்ச் 12, 13 ஆகிய நாட்களிலும், தஞ்சை மண்டல தி.மு.க. மாநாடு, 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 16, 17 ஆகிய நாட்களிலும், கோவை மண்டல தி.மு.க. மாநாடு 2005ஆம் ஆண்டு மே 28. 29 ஆகிய நாட்களிலும், வேலூர் மண்டல தி.மு.க. மாநாடு 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27, 28 ஆகிய நாட்களிலும் நடைபெற்றதைத் தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்பதாவது பொது மாநில மாநாடு இதே திருச்சியில் 2006ஆம் ஆண்டு மார்ச் 3, 4, 5 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டும் தலைவராகவும் விளங்கி வரும் திருமதி சோனியா காந்தி அம்மையார் கலந்துகொண்டார்கள்.

இவற்றைத் தொடர்ந்து தி.மு.க. இளைஞர் அணி முதல் மாநில மாநாடு, திருநெல்வேலியில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களிலும், தி.மு. கழக மகளிர் அணி மாநில மாநாடு 2008ஆம் ஆண்டு சூன் மாதம் 14, 15 ஆகிய நாட்களிலும் நடைபெற்றதைத் தொடர்ந்துதான் வரும் 15, 16 ஆகிய நாட்களில், திருச்சியில் நமது மாநில மாநாடு நடைபெறுகிறது.

என்னுடைய இந்தக் கடிதத்திற்கும், மாநாட்டிற்கும் இடையே இன்னும் ஐந்து நாட்கள்தான் உள்ளன. நீங்கள் எல்லாம், உங்கள்

குடும்பத்தினரோடு வருவதற்குத் தயாராகிக் கொண்டிருப்பீர்கள். திருமதி சோனியா காந்தி அம்மையாரும் கலந்துகொண்ட தி.மு. கழகத்தின் ஒன்பதாவது மாநில மாநாடு, இதே திருச்சியில் நடைபெற்றதற்குப் பிறகு எட்டு ஆண்டுகள் கழித்து இந்த பத்தாவது மாநில மாநாடு நடைபெறுகிறது. இந்த பத்தாவது மாநில மாநாட்டிற்கு உன்னை வா, வா என்று அன்போடும் உரிமையோடும் அழைத்து ஏழு கடிதங்கள் எழுதியிருக்கிறேன். ஆனால் எட்டாவது மாநில மாநாட்டிற்குப் பதினோறு கடிதங்கள் எழுதினேன் என்பது எனக்கு நினைவிலே உள்ளது. அந்த எட்டாவது மாநில மாநாட்டிலே நான் உரையாற்றும் போது, "வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி நேரு இந்த மாநாட்டின் வெற்றிக்கு முழுப் பொறுப்பு என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது. அவர் பட்டிருக்கின்ற இன்னல்கள் - அவர் ஆற்றியிருக்கின்ற பணி - ஒவ்வொரு நாளும் திருச்சியிலிருந்து சென்னைக்குத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்வது மட்டுமல்ல; காலையில் ஒரு செய்தி கேள்விப்பட்டால் மாலையில் சென்னைக்கு நேரில் காரில் வந்து என்னை, பொதுச் செயலாளரை, பொருளாளரைக் கலந்து கொண்டுவிட்டு, பணியாற்ற உடனடியாக திருச்சிக்கு விரைந்து வருகின்ற ஒரு நிலை இதனையெல்லாம் என்னால் மறக்க முடியாது" என்று குறிப்பிட்டதைத்தான், இந்த மாநாட்டின் ஏற்பாடுகளிலும் மீண்டும் அவர் மெய்ப்பித்திருக்கிறார்.

மாநாடு என்றாலே எனக்கு மகிழ்ச்சிதான்; ஆனால் இது மாநில மாநாடு; அதுவும் திருச்சியிலே என்றால் என் மன மகிழ்ச்சிக்கு எல்லைதான் ஏது? திருச்சி என்றாலே எனக்கு எத்தனையோ நினைவுகள்; உருக்கமும் உணர்ச்சியும் கொப்பளிக்கின்ற அந்த நினைவுகள் கடந்த சில நாட்களாக என் நெஞ்சில் சுற்றிச் சுழன்று சுடர் வீசிக் கொண்டிருக்கின்றன. இந்தத் திருச்சி மாநகரத்தில் எனக்கு நண்பராக, சகோதரராக, என் உயிர்த் தோழராக, என்னுடைய மெய்க்காப்பாளர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் கொள்பவராக வாழ்ந்தவர்தான் என் ஆருயிர் நண்பர் அன்பில் தர்மலிங்கம். திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் என்னுடைய நிகழ்ச்சி என்றால், மேடைகளில் ஒரு பக்கத்தில் அன்பில் இருப்பார்; இன்னொரு பக்கத்தில் எனக்குத் தாயைப் போல விளங்கிய மன்னை நாராயணசாமி வீற்றிருப்பார். அவர்களைப் பற்றிய நினைவுகள்

கடந்த சில வாரங்களாக என்னுள்ளே அலைஅலையாக எழுந்து என்னை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன.

2006ஆம் ஆண்டு மார்ச் 3, 4, 5 ஆகிய நாட்களில் இதே திருச்சியில் நடைபெற்ற ஒன்பதாவது மாநில மாநாட்டின் ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக 21-2-2006 அன்று நானும், அப்போது கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக இருந்த தம்பி ஸ்டாலினும், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் துரைமுருகனும் வந்திருந்தோம். தி.மு. கழகமும், தோழமைக் கட்சிகளும் எத்தனைத் தொகுதிகளில் போட்டியிடும் என்பதை அறிவிக்க இருந்த மாநாடு அது. அந்த மாநாட்டில் 82 அடி உயரக் கொடிக் கம்பத்தில் கொடியேற்றிவைத்தேன். அப்போது எனக்கு வயது 82. இந்தப் பத்தாவது மாநில மாநாட்டில் 90 அடி உயரக் கொடிக் கம்பத்தில் மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக பெப்ரவரி 15ஆம் தேதி காலையில் நான் கொடியேற்றி வைக்கவிருக்கிறேன்.

2006ஆம் ஆண்டில் இதே திருச்சியில் நடைபெற்ற ஒன்பதாவது மாநில மாநாடு - அண்ணா நகர் - அன்பில் பொய்யாமொழி பெயரில் பந்தல் - முரசொலி மாறன் பெயரில் மேடை - து.ப. அழகமுத்து பெயரில் அரங்கம் - எஸ்.ஜே. சாதிக்பாட்சா பெயரில் முன் முகப்பு - க.சொ. கணேசன் பெயரில் உள்முகப்பு - ஜே.எஸ். இராசு பெயரில் நுழைவு வாயில் - சிங்கத் தமிழன் சின்னச்சாமி பெயரில் கொடிமேடை - நாஞ்சிலார் பெயரில் சுயமரியாதைச் சுடர் மாடம் என்றெல்லாம் பெயர் சூட்டப்பட்டு நடைபெற்றது.

இப்போது 2014ஆம் ஆண்டில் நடைபெறும் இந்த பத்தாவது மாநில மாநாடு - வீரபாண்டி எஸ். ஆறுமுகம் பெயரில் பந்தல் - வாசுகி முருகேசன் பெயரில் மேடை - பொற்செல்வி இளமுருகு பெயரில் அரங்கம் - எம்.எஸ். வெங்கடாசலம் பெயரால் முன்முகப்பு - தா. கிருட்டினன் பெயரில் வெளி முன் முகப்பு - மா. பாலகிருஷ்ணன் பெயரில் உள் முகப்பு - பூண்டி கே. கலைச்செல்வன் பெயரில் நுழைவு வாயில் - கே.என். ராமஜெயம் பெயரில் கொடிமேடை என்று பெயர் சூட்டப்பட்டு நடைபெற வுள்ளது.

முதல் நாள் மாநாட்டில் வரவேற்புக் குழுத்தலைவர் என்ற முறையில் தம்பி கே.என்.நேருவின் வரவேற்புரை - தொடர்ந்து மாநாட்டுத் தலைவரை முன்மொழிதல், வழி மொழிதல் - பின்னர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, சர். பிட்டி தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார், புரட்சிக் கவிஞர், மூவலூர் மூதாட்டியார், திருமதி சத்தியவாணிமுத்து, மொழிப்போர்த் தியாகிகள் திருவுருவப் படங்களை முறையே திருச்சி செல்வேந்திரன், திருச்சி என். சிவா, எம்.பி., முனைவர் சபாபதி மோகன், கோவை மு. இராமநாதன், ஆலந்தூர் ஆர்.எஸ். பாரதி, கவிச்சுடர் கவிதைப்பித்தன், சுப்புலட்சுமி ஜெகதீசன், எம்.ஏ. நூர்ஜகான் பேகம், முனைவர் க. பொன்முடி ஆகியோர் திறந்து வைக்கவிருக்கிறார்கள். மாலையில் பல்வேறு தலைப்புகளின் கீழ் கழகத்தின் முன்னணியினர் உரையாற்றுகிறார்கள். முதல் நாள் நிகழ்ச்சியின் முற்றாகக் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் உரையாற்றவுள்ளார்.

இரண்டாம் நாள் காலையில் பல்வேறு தலைப்புகளின் கீழ் உரையாற்றுதல் தொடரும். காலை 11 மணியளவில் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அடுத்து கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் துரைமுருகன், வி.பி. துரைசாமி, சற்குணபாண்டியன், முதன்மைச் செயலாளர் ஆர்க்காடு வீராசாமி ஆகியோரின் உரைகளுக்குப் பிறகு, கழகப் பொருளாளர் தளபதி தம்பி மு.க. ஸ்டாலின் உரையாற்றுவார்.

மாலையில் கழகத்தின் தோழமைக் கட்சித் தலைவர்களான தமிழர் தலைவர் கி. வீரமணி, தொல். திருமா வளவன், எம்.பி., பேராசிரியர் கே.எம். காதர்மொகிதீன், பேராசிரியர் எம்.எச். ஜவாகிருல்லாஹ், எம்.எல்.ஏ., டாக்டர் க.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அருளாளர் ஆர்.எம். வீரப்பன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன், கு. செல்ல முத்து, ஸ்ரீதர் வாண்டையார், பொன். குமார், பேராயர் எஸ்றா சற்குணம், எல். சந்தானம், என். ஆர். தனபாலன், திருப்பூர் அல்தாப், பி.என். அம்மாசி, லியாகத் அலிகான் ஆகியோரின் உரைகளுக்குப் பின் 7 மணி அளவில் மாநாட்டுத் தலைவர் உரையினை நான் ஆற்றவிருக்கிறேன்.

தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ள சிறப்புப்பேச்சாளர்கள் 37 பேர் - தோழமைக் கட்சித் தலைவர்கள் 16 பேர் - படத் திறப்பாளர்கள் 9 பேர் மற்றும் கழகத்தின் முன்னணியினர் என்று சுமார் 70 பேர் இரண்டு நாள் மாநாட்டில் உரையாற்ற வேண்டும். எனவே பேச்சாளர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திடும் முறையில் உரையாற்றுவது தான் நல்லது. ஆனால் இப்போதே பலர் தலைப்புகளுக்கு ஏற்றாற்போல் பேசுவதற்குக் கருத்துகளைத் தேடித் தொகுக்கத் தொடங்கிவிட்டார்கள். எனவே மாநாட்டில் பேசவிருப்போர், நேரத்தை வகுத்துக் கொண்டு உரையாற்றிடத் தயாராக வரவேண்டுமென்று உரிமையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இடையில் இன்னமும் ஐந்தே நாட்கள்தான் - 120 மணி நேரம்தான் - அடடா; அகக்கண்களால் காண்கிறேன்; அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையுடன் அன்றந்தத் தமிழ் நிலத்தில் அரசோச்சிய புலிக்கொடிச் சோழனும் - மீன் கொடிப் பாண்டியனும் - விற்கொடிச் சேரனும் போல நமது மாவட்டக் கழகங்களின் தளகர்த் தர்கள் கம்பீரமாக முதல் வரிசையில் அணிவகுத்து அமர்ந்திருக்க; அவர்கள் பின்னே அந்தந்த மாவட்டத்துச் செயல்வீரர்கள் உடனிருந்திடும் காட்சியும் - இளைஞர் அணி, தொழிலாளர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, விவசாயிகள் அணி, தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக் குழு, மகளிர் தொண்டர் அணி என எழுச்சிக் கோலம் காட்டி அந்தந்த அணிகளின் செயலாளர்களுடன் கடல் மடை திறந்தாற்போலவும் - களத்தில் புகுந்து வீரம் விளைத்திட வீறு கொண்டெழுவது போலவும் சிப்பாய் நடை போட்டு வந்து மாநாட்டில் கலந்து கொள்கின்ற காட்சியும் - அந்தச் சிங்கக் குருளைகளை சீறி வரும் புலியதனை முறத்தால் துரத்திய வீராங்கனையர் வழிவந்த தமிழச்சிகளையும், காய்த்துப்போன கரங்களுக்குச் சொந்தக்காரர்களான பாட்டாளி வர்க்கத்தினரையும், வரலாறு படித்துத் தமிழகத்தில் புதிய வரலாறு படைத்திட தலை நிமிர்ந்து வந்து கலந்து கொள்ளும் மாணவச் செல்வங்களையும், இலக்கிய ஏந்தல்களையும், உழுது பயன் விளைக்கும் நாங்கள் கழகத்தின் விழுதுகளாய்ப் பரவுவோம் என்றுரைத்திடும் விவசாயப்

பெருங்குடி மக்களையும், மானம் காப்போம்; தமிழரின் இனமானமும் காப்போம் என ஒலித்திடும் நெசவாளத் திருக்குலத்தையும், சட்டத்தின் ஆட்சிக்கு விடைகொடுத்து விட்டுச் சட்டம், ஒழுங்கை இஷ்டத்திற்குக் காயப்படுத்தி வரும் சர்வாதிகார அரசுக்குச் சவுக்கடி தந்திட அணி வகுத்து வந்து மாநாட்டில் பங்கேற்கும் சட்டத் துறை தோழர்களையும் கண்டு கண்டு பேருவகை கொள்கிறேன், களிப்பிலாடும் கான மயிலாகிறேன்.

ஆகா, எத்தனை அணிகள் - அத்தனையும் கழகத்தின் வீரத் திருவுருவை அலங்கரிக்கும் மணிகள்! தகத் தகாயத் தங்கமணிகள்! வைரமணிகள்!

நான், தங்கமென்று அவர்களின் குணத்தையும் - வைரமென்று அவர்களின் உறுதியையும்தான் சொல்கிறேன்!

உடன்பிறப்பே, மனக் கண்ணால் நான் கண்டு மகிழும் இந்த மாநாட்டுக் காட்சி; நானும், நீயும் பெப்ரவரி திங்கள் 15, 16 ஆகிய நாட்களில் திருச்சியில் காண இருக்கும் மாநாட்டின் எள் முனை அளவுதான்.

அது ஏழு கடல்! எழுச்சிக் கடல்! அலை கடல்! ஆர்ப்பரிக்கும் கடல்! ஆயிரம், பதினாயிரம், லட்சம், கோடியென்று அல்லிமொக்குகள் திருச்சி மாநகரத்தைப் பெருந்தடாகமாக்கிக் கொண்டு கிளர்ந்தெழுந்தது போல எங்கு நோக்கினும் தலைகள்! தலைகள்! தலைகள்!

"இன்னும் ஐந்து நாட்களுக்குப் பிறகு பார்க்கப்போவதை இப்போதே கனவு கண்டு மகிழ்கிறாயே," என்று விழிகளால் எனைக் கேட்கும் நீ, இன்னொன்றும் கேட்பாய்; உன் கனவு நனவாகுமா என்று!

ஆகும் உடன்பிறப்பே, ஆகும்! ஆவதெல்லாம் உன்னாலே என்று நான் நம்பிக்கிடக்கும்போது; வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் வீரத் திருக் கூட்டமாக உன் கூட்டம் இருந்திடும்போது - "ஆகும்" என்று சொல்வதற்கு நான் ஏன் தயங்க வேண்டும்?

உனக்கொரு புதுமை சொல்லட்டுமா? பகலிலோ இரவிலோ அதிக நேரம் தூங்காமல் இளமை முதல் பழக்கப்படுத்திக் கொண்டு

விட்டவன் நான். தேர்தல் பிரச்சார நேரங்களில் விடிய விடியக் கூட்டங்களில் பேசிவிட்டு விடிந்து ஆறுமணிக்குப் படுத்து, ஏழு மணிக்கெல்லாம் எழுந்து பணிகளாற்றியவன்தான் நான்.

தொண்ணூறைத் தாண்டிவிட்டது வயது என்பதாலோ என்னவோ, அண்மைக்காலச் சில நிகழ்ச்சிகள் என்னைச் சற்றுக் கவலைப்பட வைக்கின்றன. இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் என்னையுமறியாமல் வேதனைகளின் மேய்ச்சல் நடைபெறுகிறது என்பதாலோ இடையில் உறக்கமும் என்னை மறந்த உறக்கமல்ல; திருச்சி மாநாடு பற்றி உனக்கெழுதும் கடிதங்களில் என்னென்ன வாசகங்கள், வர்ணனைகள் குறிப்பிட்டிருந்தேனோ; அவையனைத்தும் வடிவங்களாகி வண்ணத் திரையில் ஓடுவது போல்; என் எண்ணத் திரையில் பதிந்து எழிலார் கனவுகளாகவே மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன.

இப்படி நான் கண்ட இந்தக் கனவெல்லாம் பலிக்கத்தான் போகிறது - திருச்சி குலுங்கத்தான் போகிறது - மாநில மாநாடு அறிவிக்கப்பட்ட பிறகு உன் போன்ற கழகக் கண்மணிகளிடத்திலே மட்டுமல்ல; பொதுவாகத் தமிழ் மக்களின் எல்லாப் பிரிவினரிடத்திலும் ஒரு புத்துணர்வு - எழுச்சி - முகமலர்ச்சி! எதையோ எதிர்பார்க்கிறார்கள்; அதை நம்மால் கொடுக்க முடியுமா?

நீயின்றி, உன் உழைப்பின்றி, உன் ஆற்றல் மிகு செயல்பாடின்றி - தனித்தியங்கித் தரையைக் குடைந்து காட்டுவேன் - வானத்தைக் கிழித்துக் காட்டுவேன் என்று என்றைக்கு நான் நினைத்திருக்கிறேன்? என்றைக்கு அப்படிச் சொல்லியிருக்கிறேன் - நினைத்தால் அல்லவா சொல்வதற்கு!

இதனைத் தெளிவாக அறிந்து கொண்டுள்ள என் உடன்பிறப்பே, திருச்சி மாநாட்டுக்குப் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் உனக்கு; வழக்கமாகச் சொல்வது தான் என்றாலும் - என் சொல்லை, நீயும் உன்னுடன் வரும் உடன்பிறப்புகளும் தட்ட மாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடனும், தட்டக்கூடாது என்ற வேண்டுகோளுடனும் உன் காதுகளில் போட்டுவைக்கிறேன்.

எந்த வாகனத்தைத் தேர்ந்தெடுத்து அதில் வந்தாலும் மிகுந்த எச்சரிக்கையுடன் வரவேண்டும். தேவையற்ற வேகமோ,

அவசரமோ, பரபரப்போ பயணத்தின் போது கூடாது. நீ வந்து திரும்பி ஊர் போய்ச் சேருகிற வரையில் என் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பேன். சிறு தொல்லையுமின்றி வீடு போய்ச் சேர்ந்தாய் எனும் செய்தியே எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி வழங்கும், ஆறுதல் தரும்.

வழியில் ஆங்காங்கு ஓய்வெடுத்துக் கொண்டு பயணம் செய்க! வாகனங்களின் ஓட்டுநர்களும் பொறுப்புடன் செயல்பட வேண்டுகிறேன்!

மாநாட்டில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக மிக முக்கியம்! அவை நம் உயிரைவிட மேலாகக் காப்பாற்றப்பட வேண்டியவை என்பதை மறந்திடக் கூடாது!

திராவிட இயக்கத்தைப் புதுப்பித்து வலுக் கூட்டி உறுதியுடன் நடத்திச் செல்லத்தானே; திருச்சியிலே கூடுகிறோம்! தீரர் கோட்டமாயிற்றே திருச்சி!

எழுச்சி! எழுச்சி! எங்கணும் எழுச்சி! இதுவே இன்றைய திருச்சி! நாளை காணுவோம்; தமிழகத்தின் மலர்ச்சி!

அன்புள்ள,

மு.க.

9-2-2014

3862. உதவாதினி ஒரு தாமதம்; உடனே எழுக தம்பி!

உடன்பிறப்பே,

16வது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் தொகுதிகளும், அந்தத் தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களும் உரிய நேர்காணலுக்குப் பிறகு அறிவிக்கப்பட்டுவிட்டன. எப்போதும் போல இந்த முறையும், கழக வேட்பாளர்களின் பட்டியலைச் செய்தியாளர்களிடம் படித்துவிட்டு வெளியே வந்தபோது, என் உள்ளம் என்னிடம் இல்லை. காரணம் என்ன என்பதை, என்னை முழுவதும் அறிந்த நீ நன்றாகவே உணர்வாய்! ஆம்; இந்த முறை தன்னலம் பாராமல் கழகத்திற்காகப் பல ஆண்டுகள் உழைத்த, மூத்த சில உடன்பிறப்புகளின் விருப்பங்களை என்னால் நிறைவேற்ற முடியவில்லை. அவர்கள் என்னிடம் கேட்டபோது, உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன் என்று என்னால் கூறப்பட்ட போதிலும், தோழமைக்கட்சிகளோடு கொண்டுள்ள கூட்டணி உணர்வையும் அவர்களுடைய உள்ளக் கிடக்கையையும் எண்ணிப் பார்க்க வேண்டிய நெருக்கடிக்கு நான் தள்ளப்பட்டேன்.

உதாரணமாக, தம்பி துரைமுருகன் 24 மணி நேரமும் என்னுடன் இருப்பவர்! கழகத்தின் மூத்த உறுப்பினர். துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவர். மூத்த அமைச்சராகத் திறம்படப் பணியாற்றியவர். கழகத்தின் சார்பில் போட்டியிட வேண்டிய உறுப்பினர்களின் பட்டியலைத் தயாரிக்கும்போது, என்னுடனும், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோருடனும் அமர்ந்து ஒவ்வொரு தொகுதிக்கும் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க உதவி செய்தவர். அவருடைய மகனுக்காக வேலூர் தொகுதி வேண்டுமென்று வேலூர் கழகத்தினர் விருப்பம் தெரிவித்த போது, என்னால் அதனை மறுக்க முடியவில்லை. ஆனால் அந்தத் தொகுதி, நம்முடன் பல ஆண்டுக் காலமாகத் தோழமை

கொண்டிருக்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி தொடர்ந்து போட்டியிட்ட தொகுதி என்றும், அங்கே தற்போது அந்தக் கட்சியின் சார்பில் உறுப்பினராக இருப்பவரே மீண்டும் போட்டியிட விரும்புகிறார் என்றும் அந்தக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவராக உள்ள பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள் கேட்ட போது அதனை எங்களால் மறுக்க முடியவில்லை. அதிலும் பேராசிரியர் காதர் மொய்தீன் வேறொரு கட்சி என்று கூடக் கூற முடியாது. தி.மு. கழகத்தின் அனைத்துச் சுகதுக்கங்களிலும் பங்கெடுத்துக் கொண்ட உயர்ந்த பண்பாளர். அந்தத் தொகுதியில் முடிவெடுக்க நான் பட்ட பாட்டினை நான்தான் அறிவேன்.

10-2-1977 அன்று சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழகத்தின் சார்பில் 24 நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதற்கான பெயர்கள் என்னால் அறிவிக்கப்பட்டது. அதில் மத்திய சென்னை தொகுதிக்கு முரசொலிமாறன் பெயர் படிக்கப்பட்டு, கழகத் தோழர்கள் போஸ்டர்கள் எல்லாம் அடித்து, தேர்தல் பணிகளைத் தொடங்கி விட்டார்கள். அதற்குப் பிறகு பிப்ரவரி 15ஆம் தேதியன்று ஜனதா கட்சியின் சார்பில் நீலம் சஞ்சீவரெட்டி சென்னைக்கு வந்து, என்னைச் சந்தித்து ஜனதா கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கொள்ள வேண்டுமென்று கேட்டபோது, மத்திய சென்னையில் ஜனதா கட்சி சார்பில் பா. ராமச்சந்திரனை நிறுத்துவதில் விருப்பம் தெரிவித்து, அதன் காரணமாக உடன்பாடு என்ன ஆகுமோ என்ற நிலை ஏற்பட்டபோது, பொதுச் செயலாளராக இருந்த நாவலர், மாறனைத் தனியாக அழைத்து, மத்திய சென்னையில் நிற்பதாக அறிவிக்கப்பட்டதிலிருந்து நீ பின் வாங்கி விடாதே என்று கூறிய பிறகும், முரசொலி மாறன் தன்னுடைய பிரச்சினையினால் உடன்பாடு வராமல் போய்விடக் கூடாது என்று எண்ணி மத்திய சென்னையில் தான் போட்டியிடுவதில்லை என்றும், கழகத்தினர் ஒத்துழைக்க வேண்டுமென்றும் அறிக்கை விடுத்தார். இந்தப் பழைய சம்பவம்தான் என் மனதிலே நிழலாடியது.

ஒவ்வொரு தொகுதியிலும் முடிவெடுக்க அப்படித்தான் யோசிக்க வேண்டியிருந்தது. மற்றொரு தொகுதி, என்னுடைய மாவட்டம் என்று சொல்லக்கூடிய அளவிலான தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி. அந்தத் தொகுதியிலே போட்டியிட விருப்பம் தெரிவித்த அனைவரும் முக்கியமானவர்கள் என்ற

போதிலும், இறுதியாக கடந்த நாடாளுமன்றத்திலே கழகத்தின் சார்பில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிலே அமைச்சர்களாக இருந்தவர்கள் - ஒருவர் கழக நாடாளுமன்றக் குழுவின் தலைவராகவே இருந்தவர், தம்பி டி.ஆர். பாலு. - மற்றொருவர் மத்திய அமைச்சரவையில் நிதித் துறையில் இணை அமைச்சராக இருந்தவர், தம்பி பழனிமாணிக்கம் - மூன்றாமவர் அ.தி.மு.க. அமைச்சரவையில் முக்கிய அமைச்சராகப் பணியாற்றி, பின்னர் அந்தக் கட்சியின் நடவடிக்கைகள் பிடிக்காமல் நம்முடைய கழகத்திற்கு வந்து, கழகப் பணிகளை அந்த வட்டாரத்தில் சிறப்பாகப் பணியாற்றிவரும் அழகு திருநாவுக்கரசு அவர்கள். இந்த மூவரில் ஒருவரை நாங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்; எப்படி முடிவெடுப்பது? இதிலே ஒருவரைத் தேர்ந்தெடுத்தால், மற்ற இருவரையும் எப்படிச் சந்திப்பது? எவ்வாறு சமாதானம் கூறுவது? ஆனால் துரைமுருகன் ஆகட்டும், டி.ஆர்.பாலு ஆகட்டும், பழனிமாணிக்கம் ஆகட்டும், இவர்கள் எல்லாம் எனதருமைத் தம்பிகள் அல்லவா? நான் வளர்த்தவர்கள் அல்லவா? கழக வேட்பாளர் பட்டியலை நான் அறிவித்த பிறகு டி.ஆர். பாலு தஞ்சைக்குச் சென்றதும், நேராக பழனிமாணிக்கம் வீட்டிற்குச் சென்று பொன்னாடை அணிவித்திருக்கிறார். பழனிமாணிக்கம் அவரை வரவேற்றுக் கட்டிப் பிடித்துக் கொண்டு சால்வை அணிவித்ததோடு, நேற்று மாலையிலேயே செயல்வீரர்கள் கூட்டத்தை மாவட்டக் கழகத்தின் சார்பில் கூட்டி, டி.ஆர். பாலுவை வெற்றி பெறச் செய்ய அனைவரும் உழைப்போம் என்று உறுதி எடுத்துக் கொண்டதைத் தொலைக்காட்சியிலே நான் பார்த்த போது, "என் தம்பிகள், என் தம்பிகள்தான்" என்று எனக்கு மகிழ்ச்சியும் மனதில் ஒரு துள்ளலும் ஏற்பட்டது.

இதுபோலத்தான் பல்லாண்டுகளாக ராமனாதபுரத்தில் கழகத்திற்காக மாவட்டச் செயலாளராக அரும்பணியாற்றி வரும் தம்பி சுப. தங்கவேலன், தன் மகன், சம்பத் போட்டி யிடுவதற்காக அனுமதி கோரினார். திருவண்ணாமலையில் முன்னாள் அமைச்சர் தம்பி கு. பிச்சாண்டி, தன்னுடைய சகோதரர் கு. கருணாநிதிக்காக அனுமதி கோரினார். கோவையில் பொங்கலூர் பழனிசாமி தன் மகன் பைந்தமிழ் பாரிக்காக வேண்டுகோள் விடுத்தார். அதுபோலவே திண்டுக்கல் ஐ. பெரியசாமியும், விழுப்புரம் பொன்முடியும், திருவண்ணாமலை எ.வ. வேலுவும் தங்களின்

மகன்கள் போட்டியிடுவதற்குத் தயாராக இருந்த போதிலும், என் உள்ளுணர்வைப் புரிந்துகொண்டு, வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவே இல்லை. மேலும் பல தொகுதிகளில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக நன்றாகப் பணியாற்றி வந்த ஒன்பது பேருக்கு மீண்டும் வாய்ப்பளிக்க முடியவில்லை. வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், புதிய முகங்களாக இருக்கவேண்டும், இளைஞர்களாக இருக்க வேண்டும் என்றெல்லாம் பலரும் விருப்பம் தெரிவித்தார்கள். மகளிருக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டுமென்றும் யோசித்தோம். இரவு முழுவதும் தூங்காமல் மிகுந்த கவனத்தோடு ஒவ்வொரு தொகுதியாக அலசி ஆராய்ந்து வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்து அறிவித்துள்ளோம். அவர்களையெல்லாம் வெற்றி வேட்பாளர்களாக ஆக்கிட வேண்டிய கடமையும், உரிமையும் உனக்குள்ளது.

ஒவ்வொரு தொகுதியிலும் தேர்தல் பணிகளை முறையாகக் கவனித்து, அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வைத்திடத் துணையாகத் தலைமைக் கழகத்தின் சார்பில் பொறுப்பாளர்களும் அறிவிக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு தொகுதிக்கும் வழக்கறிஞர் குழுவினரும் அமைக்கப்படவுள்ளார்கள். அனைவருக்கும் அகமும் - முகமும் ஒன்றே என்ற ஒற்றுமை உணர்வோடு, தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளைக் கைகழுவிவிட்டு, இந்த முறை வாய்ப்பு கிடைக்காவிட்டால், அடுத்த முறை நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வாய்ப்புகள் எப்போது வேண்டுமானாலும் வரும், கழகத்தை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வதுதான் இப்போது முக்கியமானது என்று ஆர்வத்தோடு பணிகளை ஆற்றிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கழகத்தின் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவில் டி.ஆர். பாலு, டி.கே.எஸ். இளங்கோவன், கவிஞர் கனிமொழி, சற்குண பாண்டியன், ஆ. இராசா, பேராசிரியர் இராமசாமி, சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் இடம்பெற்று தயாரித்த அறிக்கையினைப் படிக்கச் செய்து, நானும், பொதுச் செயலாளரும், பொருளாளரும், துணைப் பொதுச் செயலாளரும் அதிலே உரிய திருத்தங்களையெல்லாம் செய்து, அதுவும் வெளியிடப்பட்டுவிட்டது. அதனைப் படித்துவிட்டு

ஆக்கப்பூர்வமான அறிக்கையென்று பலரும் தங்கள் பாராட்டினைத் தெரிவித்து வருகிறார்கள்.

எதிர் அணியின் சார்பில் முதலமைச்சர் ஜெயலலிதா, அவர்களுக்குள்ள வசதி வாய்ப்பின் காரணமாக விமானத்திலும், கெலிகாப்டரிலும் பறந்து பறந்து சென்று, மேடைகளில் வேறு யாருக்கும் வாய்ப்பு அளிக்காமல், தனக்காகத் தயாரிக்கப்பட்ட உரைகளை எழுத்து மாறாமல் அப்படியே படித்துவிட்டு வந்து விடுகிறார். அவருடைய கூட்டங்களுக்கு எப்படியெல்லாம் ஆட்களைத் திரட்டி வருகிறார்கள், கூட்டம் நடக்கின்ற ஊர்களில் என்னென்ன நடக்கின்றன; ஆங்காங்கே பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் ஒரு சில ஏடுகள் மட்டும் துணிந்து வெளியிட்டு வருவதை அன்றாடம் படித்துத்தான் வருகிறோம். அம்மையார் பேசுகின்ற மேடை மட்டும் 85 இலட்சம் ரூபாய்ச் செலவில் அமைக்கப்படுகிறதாம்! அனைத்து ஊர்களிலும் கூட்டங்கள் நடத்துவதற்கு மேடை அமைக்க ஒருவருக்கே வாய்ப்பு தரப்படுவதாகவும், அவர்தான் 85 லட்சம் ரூபாயைப் பெற்றுக் கொண்டு, ஒரே மாதிரியாக மேடை அமைக்கிறாராம். கூட்டத்தில் கலந்து கொள்ள ஆண்களாக இருந்தால் ஒரு பேண்ட் அல்லது வேட்டி, 100 ரூபாய் ரொக்கம், மதிய உணவாக "பிரியாணி பாக்கெட்" ஒன்று தரப்படுகிறதாம். பெண்களாக இருந்தால் பேண்ட், வேட்டிக்குப் பதிலாகப் புடவை தருகிறார்களாம். முதலமைச்சர் வருகின்ற வழியிலே அமைக்கப்படும் வளைவுகளுக்கே பல இலட்ச ரூபாய் செலவாகிறதாம். தேர்தல் ஆணையம் என்று ஒன்று இருப்பதாகச் சொல்லப்படுகிறதல்லவா? சிறு வணிகர்கள் குறைந்த அளவிற்கு வியாபாரத்திற்காகத் தொகையைக் கொண்டு போவதைக்கூடச் சோதனை என்ற பெயரால் தடுத்து, அந்தத் தொகையை முடக்கம் செய்வதில் காட்டுகின்ற ஆர்வத்தை தேர்தல் ஆணையம் இதுபோன்ற செயல்களிலும் காட்டலாம் அல்லவா?

இதற்கு முன்பு அம்மையார் பேசுகின்ற மேடைகளில் வேட்பாளர் மட்டுமே கும்பிட்டுக் கொண்டு, அம்மையார் பேசுகின்ற ஒரு மணி நேரத்திற்கு மேலாக, நின்று கொண்டே இருப்பார். மற்ற அமைச்சர்களும், கழக முன்னணியினரும் மேடைக்குக் கீழேதான் அமர்ந்திருப்பார்கள். ஆனால் இந்த முறை அமைச்சர்களும், முன்னணியினரும் மேடையிலே

அமருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது ஒரு நல்ல முன்னேற்றம்தான். அதைப்போலவே ஒரு மணி நேரத்திற்கு மேலாக நின்று கொண்டிருக்க வேண்டிய வேட்பாளருக்கும் சற்று கருணை காட்டலாம்.

முதலமைச்சர் தன்னுடைய பேச்சின் முக்கால் பகுதியை மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியைத் திட்டுவதிலும், மீதி கால் பகுதியைத் தி.மு. கழகத்தைத் தாக்குவதிலும் நேரத்தை எடுத்துக் கொள்கிறார். குறிப்பாக 11-3-2014 அன்று சிதம்பரத்தில் பேசிய - மன்னிக்கவும் - படித்த முதலமைச்சர் கழகப் பொருளாளர், தளபதி மு.க. ஸ்டாலின் மீது கடுமையாகக் காய்ந்து விழுந்திருக்கிறார். பேச்சின் துவக்கத்திலேயே "கிட்டத்தட்ட 17 ஆண்டுக் காலம் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த தி.மு.க. தமிழ்நாட்டிற்காக எதையாவது செய்ததா?" என்று கேட்டிருக்கிறார். அவருடைய தேர்தல் பிரச்சாரத்தின் துவக்க நாளிலிருந்து இதே கேள்வியைத் தொடர்ந்து ஒவ்வொரு கூட்டத்திலும் கேட்கிறார். இந்தக் கேள்விக்கான பதிலை, தி.மு.கழகம் மத்திய அரசில் பங்கேற்றிருந்த காலகட்டங்களில் தமிழ்நாட்டிற்காக என்னென்ன செய்தது என்பதை ஒரு பக்க விளம்பரமாகவே "முரசொலி"யில் வெளியிட்டுவிட்டோம். மேலும் கழகத் தேர்தல் அறிக்கையின் தொடக்கமே, தி.மு. கழகம் மத்திய ஆட்சியில் பங்கேற்றிருந்த காலத்தில், தமிழ்நாட்டிற்காக என்னென்ன திட்டங்களைக் கேட்டுப் பெற்றது என்பதற்கான விரிவான பட்டியல்தான்! முதலமைச்சராக இருப்பவர், ஒரு கட்சிக்குத் தலைவராக இருப்பவர், தான் கேட்கின்ற கேள்விகளுக்கு, தான் சாற்றுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு எதிர் தரப்பிலே இருந்து என்ன பதில் கிடைக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டாமா? தனக்கு என்ன பதில் கிடைக்கிறது என்பதைப் பற்றியே கவலைப்படாமல், தான் முதல் நாளில் படித்ததையே, அப்படியே தொடர்ந்து "சொன்னதையே சொல்லுமாம் கிளிப்பிள்ளை" என்பதைப் போல ஒவ்வொரு நாளும் படித்துக் கொண்டிருந்தால், அதைக் கேட்பவர்கள் எள்ளி நகையாட மாட்டார்களா?

தமிழ்நாட்டில் எங்கெல்லாம் இரட்டை இலை போன்ற தோற்றம் அளிப்பவை இருக்கிறதோ, அவற்றையெல்லாம் மறைக்க வேண்டும் என்று நான் பொருளாளர் தம்பி மு.க.ஸ்டாலின் மூலம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருப்பதாகவும்,

அப்படியென்றால் காங்கிரஸ் கட்சியினுடைய சின்னம் கை, அனைவரின் கைகளையும் வெட்டிவிட வேண்டுமென்று ஸ்டாலின் மனு கொடுப்பாரா? என்றெல்லாம் சிதம்பரத்தில் அம்மையார் ஆழமாகச் சிந்தித்துப் பேசுவதாக எண்ணி, முழக்கமிட்டு அது அனைத்து நாளேடுகளிலும் பெரிதாக வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அந்தப் பேச்சில், "காமாலை கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்" என்பது பழமொழி; அதைப் போல அ.தி.மு.க.வினரைக் கண்டு அஞ்சும் தி.மு.க. வினருக்கு எதைப் பார்த்தாலும் "இரட்டை இலை" போலத் தெரிந்து ஓயாமல் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பேசியிருக்கிறார்.

கிராமங்களில் "ஒப்புக்குச் சப்பாணி" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல ஜெயலலிதா பேசியதற்கு வக்காலத்து வாங்கி இன்றைய (13-3-2014) தினமணி நாளிதழ் எழுதியுள்ள தலையங்கத்தில், "அரசு வாகனம், இலவசப் பொருள்கள், நியாய விலைப் பொருள்களின் மீதான முதல்வர் படம் அழிக்கப்பட்டு விட்டதாலேயே ஒரு மாநில முதல்வரின் முகம் அனைத்து வாக்காளர்களின் மனதிலிருந்து நீக்கப்பட்டு விடுமா?" என்று கேட்டிருக்கிறது. அந்தப் பொருள்களின் மீதெல்லாம் முதல்வரின் படம் இருப்பதால் மட்டும், மக்கள் அவருக்கு வாக்களித்துவிடப் போகிறார்களா? பிறகு எதற்காக அந்தப் படம் இருக்க வேண்டுமென்று அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ நாளேடான "தினமணி" எண்ணுகிறது?

ஒரு முதலமைச்சர் பேசுவதற்காகப் பேச்சினைத் தயாரித்துக் கொடுப்பவர்கள், உண்மையான விவரத்தை அறிந்து பேச்சினைத் தயாரித்துக் கொடுக்கமாட்டார்களா? தவறாகப் பேச்சினைத் தயாரித்துக் கொடுத்து விட்டால், பின்னர் எதிர்க்கட்சி உண்மையை விளக்கும்போது எங்கே கொண்டு போய் முகத்தை வைத்துக் கொள்ள முடியும்? தம்பி மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டில் எங்கெல்லாம் இரட்டை இலை போன்ற தோற்றம் அளிப்பவை இருக்கிறதோ, அவற்றையெல்லாம் மறைக்க வேண்டும் என்ற ரீதியிலா வழக்கு தொடுத்திருக்கிறார்? "தேர்தல் நடத்தை விதிகளை மீறி, அரசின் தண்ணீர் பாட்டில்கள், அரசுப் பேருந்துகள் மற்றும் பொதுச் சொத்துக்களில் இடம்பெற்றுள்ள அ.தி.மு.க.வின் தேர்தல் சின்னங்களையும், முதலமைச்சர் ஜெயலலிதாவின் படங்களையும் அகற்றக் கோரித்தான்

சென்னை உயர்நீதிமன்றத்தில் மு.க. ஸ்டாலின் வழக்கு தொடுத்திருக்கிறார். இவர்கள் ஊர் பூராவும் சொந்தச் செலவில் இரட்டை இலை சின்னத்தை வைத்துக் கொள்வதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை; அரசாங்கச் செலவில், மக்கள் தரும் வரிப் பணத்தில், ஆளுங்கட்சியின் சின்னத்தை விளம்பரம் செய்வது என்ன நியாயம் என்பதுதான் கேள்வியே தவிர, இவர்களின் "இரட்டை இலை" சின்னத்தைப்பற்றி யாரும் அஞ்சுகின்ற நிலையிலே இல்லை. உண்மையில் சொல்லப்போனால், இரட்டை இலைச் சின்னத்தைப் பார்த்து தி.மு.க.வில் யாரும் புலம்பவில்லை. பெங்களூரில் நடைபெறும் சொத்து வழக்கின் முடிவு என்ன ஆகுமோ என்று நாள்தோறும் எண்ணித்தான் ஜெயலலிதா புலம்பிக் கொண்டிருக்கிறார் என்பதைத் தமிழ்நாடே நன்கறியும். அந்தத் தீர்ப்பு விரைவில் வெளிவந்து விடக் கூடாது என்பதற்காகத் தான், தங்களுக்கு எதிராக வாதாட வேண்டிய அரசாங்க வழக்கறிஞர் பவானிசிங் அவர்களை அந்தப் பதவியிலேயிருந்து நீக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் வரை ஜெயலலிதா வழக்கு தொடுத்ததும், தற்போது சிறப்பு நீதிமன்றத்தில் இறுதியாக வாதாட வேண்டிய அந்த அரசு வழக்கறிஞர் பவானி சிங் "மருத்துவக் காரணங்களுக் காக" என்று சொல்லி வாய்தா கேட்கின்ற நிலையையும் வேடிக்கை பார்த்து, தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் சிரிக்கிறார்கள்.

அகில இந்தியக் கட்சிகளான, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகள், எந்த அளவிற்கு உறுதியோடு, அ.தி.மு.க.வோடு தோழமை கொண்டு போட்டியிடுவதற்காகக் காத்திருந்தார்கள்? கடைசி நேரத்தில் அந்தக் கட்சிகளின் காலை வாரிவிட்டு ஏமாற்றி அவர்களை நிராதரவாகக் கைவிட்ட அம்மையார் கடந்த காலங்களில் தங்களோடு கூட்டணி அமைத்தவர்களை எல்லாம் முதலில் நம்பவைத்து முடிவில் ஏமாற்றி நடுத்தெருவிலே நிற்க விட்டார் என்ற வஞ்சக வரலாற்றினைத் தமிழ்நாட்டு மக்கள் அவ்வளவு சீக்கிரம் மறந்திருப்பார்களா என்ன? அப்படியே மறந்திருந்தாலும் அதையெல்லாம் நினைவூட்ட வேண்டிய பொறுப்பும், கடமையும் நமக்குள்ளது. பொருளாளர் தம்பி ஸ்டாலின் இன்று முதல் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்குகிறார். தேர்தல் முடிகின்ற வரை ஒரு நாள் கூட ஓய்வு இல்லாமல் தேர்தல் பிரச்சாரத்தை அவர் அறிவித்திருக்கிறார். அவரைத் தொடர்ந்து கழகத்தின் சொற்பொழிவாளர்கள், தோழமைக் கட்சிகளின் தலைவர்கள், நம்முடைய கட்சியிலே உள்ள கலைத்துறையினர்

சுற்றுப் பயணத் திட்டங்களை வகுத்து அறிவிக்க இருக்கிறார்கள். தலைமையிலே உள்ள நானோ, பொதுச் செயலாளரோ இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை, அவர்கள் அளவிற்கு ஒவ்வொரு நாளும் தொகுதி தொகுதியாகச் சென்று பிரச்சாரம் செய்ய இயலாவிட்டாலும், உடல்நிலை இடம் கொடுக்கின்ற வரையில் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்து கொள்வோம். இதுபோன்ற "உடன்பிறப்பு" மடல்கள் மூலமாகவும் கருத்துகளைத் தெரிவிப்போம்.

உடன்பிறப்பே, இந்தத் தேர்தல் தமிழ்நாட்டுத் தலைவிதியை மாற்றப்போகிற தேர்தல் இல்லையே, நாடாளுமன்றத் தேர்தல்தானே, என்றெண்ணி அலட்சியமாக இருந்து விடாமல், இந்தத் தேர்தலில் நாம் பெறுகின்ற வெற்றிதான் அடுத்து 2016ஆம் ஆண்டு வரவிருக்கின்ற சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முன்னோடி என்பதை மனதிலே கொண்டு, நமது அணியினர் அனைத்து இடங்களிலும் மிகப் பெரிய வெற்றியினைப் பெறுவதற்கான அரிய முயற்சியிலே இன்று முதலே அயராது ஈடுபட வேண்டுமென்று அன்போடும் உரிமையோடும் உன் அண்ணன் என்ற பாச உணர்வோடும் கேட்டுக் கொள்கிறேன். உதவாதினி ஒரு தாமதம்; உடனே எழுக தம்பி!

அன்புள்ள,

மு.க.

14-3-2014

3863. இஸ்லாமியர்களின் இனிய நண்பர் யார்?

உடன்பிறப்பே,

9-3-2014 அன்று நாகர்கோவிலில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட முதலமைச்சர் ஜெயலலிதா பேசியது அனைத்து நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது. அவர்கள் கட்சியின் அதிகாரப்பூர்வமான நாளேட்டில் "இட ஒதுக்கீட்டில் ஏமாற்றுவதும், வஞ்சிப்பதும், துரோகம் இழைப்பதும் கருணாநிதிக்கு கை வந்த கலை; முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளித்தது எனது தலைமையிலான அரசுதான்" என்று தலைப்பிட்டு வெளிவந்துள்ளது.

முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளித்தது அ.தி.மு.க. ஆட்சிதான் என்று முதலமைச்சர் ஜெயலலிதா பேசியிருக்கிறார். தி.மு.கழக ஆட்சியில் தான் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது என்று நாங்கள் கூறுகிறோம். இதில் எது உண்மை? அ.தி.மு.க. ஆட்சியில்தான் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது என்றால், அதற்கான சட்டம் இயற்றப்பட்டதா? எந்தத் தேதியில் அதற்கான ஆணை வெளி வந்தது? எந்த நாளேட்டில் அந்தச் செய்தி வெளியிடப்பட்டது? திட்டவட்டமாகவும் குறிப்பாகவும் ஜெயலலிதா கூறத் தயாரா?

திராவிட முன்னேற்றக் கழகம் 2006ஆம் ஆண்டு வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததும், 24-5-2006இல் படிக்கப்பட்ட ஆளுநர் உரையிலேயே, "சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு ஏற்படுத்துவதற்குத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்" என்று தெரிவிக்கப்பட்டதே, இந்தச் செய்தி இன்றைக்கும் அந்த உரையிலே இருக்கிறதா இல்லையா?

2006ஆம் ஆண்டு மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தைத் திருத்தி அமைத்ததும், அவர்களின்

பரிந்துரையைப் பெற்றுத்தான் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற அம்சத்தைச் சேர்த்ததும் அ.தி.மு.க. ஆட்சி என்றும், அதனால் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளித்தது அவர்கள்தான் என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இஸ்லாமிய சமுதாயப் பெருமக்களைக் கேட்கிறேன். இன்னமும் ஜெயலலிதா அணியினருக்கு ஆதரவாக இருக்கிறோம் என்று தெரிவிக்கின்ற பல்வேறு இயக்கத் தோழர்களைக் கேட்கிறேன். ஜெயலலிதா செய்ததுதான் இட ஒதுக்கீடு என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை ஜெயலலிதாதான் தமிழகத்தின் முதல் அமைச்சர். உண்மையிலேயே முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்று அவர் கருதியிருந்தால், அவர் பதவியிலே இருந்த அந்த ஐந்தாண்டு காலத்திலேயே பிற்படுத்தப்பட்டோர் நல வாரியத்தின் பரிந்துரையைப் பெற்று, முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளித்திருக்கலாம் அல்லவா? அதை ஏன் அவர் செய்யவில்லை?

13-9-2007இல் தி.மு. கழக ஆட்சியில் நான் வெளியிட்ட அறிவிப்பில்தான், "2006-2007ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர்களுக்குக் கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் தனியாக இட ஒதுக்கீடு வழங்கிட மத்திய அரசை வலியுறுத்தி வருவதுடன், தமிழகத்திலும் அவர்களுக்கு இட ஒதுக்கீட்டுக்கு வழி வகுத்திடத் தேவைப்படும் உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பைச் செயல்படுத்துவதன் முதல் கட்டமாக நீதியரசர் திரு. ஜனார்த்தனம் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம், இப்பொருள் பற்றி விரிவாக விசாரணையும், ஆய்வும் செய்து உரிய பரிந்துரையை வழங்குமாறு அரசு சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர்களின் பரிந்துரையை ஏற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் 99ஆம் ஆண்டு பிறந்த நாள் பரிசாக, பிற்படுத்தப்பட்டோருக்கான 30 சதவிகித இட ஒதுக்கீட்டிலிருந்து, தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகிதமும்,

அப்பட்டியலில் இடம் பெற்றுள்ள கிறித்தவர்களுக்கு 3.5 சதவிகிதமும், தமிழகத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளில் 15-7-2007 முதல் தனி இட ஒதுக்கீடு வழங்கி அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுகிறது" என்று கூறப்பட்டு, அது அப்போதே எல்லா ஏடுகளிலும் வெளிவந்திருக்கிறது.

ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா நாகர்கோவில் கூட்டத்தில், அ.தி.மு.க.தான் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியதாகப் பேசியிருக்கிறார். பேசியதோடு ஏமாற்றுவது, வஞ்சிப்பது, துரோகம் இழைப்பதெல்லாம் எனக்கு கை வந்த கலை என்று பேசியிருக்கிறார். துரோகத்தைப் பற்றியும், வஞ்சிப்பதைப் பற்றியும், ஏமாற்றுவதைப் பற்றியும் வேறு யார் பேசினாலும், பாவம்; ஜெயலலிதா பேசலாமா? முந்தா நாள்வரை இவர்களை நம்பியிருந்த இடது சாரிக் கட்சிகளை ஏமாற்றியது, வஞ்சித்தது, துரோகம் செய்தது யார்?

சிறுபான்மையினர் நலன் என்று எடுத்துக்கொண்டால், அ.தி.மு.க. ஆட்சிதான் நன்மைகளைச் செய்தது என்றும் நாகர்கோவிலில் ஜெயலலிதா பேசியிருக்கிறார். கழக ஆட்சியில் முஸ்லிம்களுக்கு செய்த நன்மைகளின் பட்டியல் இதோ :-

சிறுபான்மையினர் நல இயக்குனரகம் தி.மு.கழக ஆட்சியில் தோற்றுவிக்கப்பட்டு 1.8.2007 முதல் இயங்கி வருகின்றது.

இஸ்லாமிய சமுதாயத்தினரின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, தமிழகத்தில் "உருது அகாடமி" தி.மு. கழக ஆட்சியில் 21-7-2000 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

மத்திய அரசு நிதி உதவியுடன் தொழிற்கல்வி-தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ- மாணவியர்க்கு 2007-2008ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 7090 மாணவ - மாணவியர்க்கு 18 கோடியே 53 இலட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

மத்திய அரசு நிதி உதவியுடன் பதினோராம் வகுப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ-மாணவியர்க்குக் கல்வி உதவித்தொகை 2007-08ஆம் ஆண்டு முதல் தி.மு. கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ்,

67 ஆயிரத்து 683 மாணவ மாணவியர்க்கு 22 கோடியே 22 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

மத்திய - மாநில அரசுகளின் நிதி (75:25) உதவியுடன் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை பயிலும் சிறுபான்மையின மாணவ - மாணவியர்க்கு கல்வி உதவித்தொகை 2008-2009ஆம் ஆண்டில் தி.மு. கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு, முதற்கட்டமாக 15,340 மாணவ மாணவியர்க்குக் கல்வி உதவித் தொகைகள் தமிழகத்திற்கென பெற்று வழங்கப்பட்டது. இத்திட்டம் குறித்து தமிழக அரசால் சிறுபான்மையின மக்களிடையே அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தியதன் விளைவாக, 2009-2010ஆம் ஆண்டிற்கு 1 இலட்சத்து 54 ஆயிரத்து 264 மாணவ - மாணவியர்களுக்கு ரூ.18.90 கோடியும்; 2010-2011ஆம் ஆண்டிற்கு 2 இலட்சத்து 42 ஆயிரத்து 301 சிறுபான்மையின மாணவ - மாணவியர்க்கு ரூ.28.62 கோடியும்; கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

வேலையில்லாத சிறுபான்மையின மாணவ - மாணவியர் தனியார்த் துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும், அவர்களது திறனை மேலும் மேம்படுத்தும் வகையில் தகவல் மற்றும் தொழில் நுட்பம், ஆயத்த ஆடை வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு, காலணிகள் வடிவமைப்பு போன்றவற்றில் தொழில் நுட்ப சிறப்புப் பயிற்சித் திட்டம் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்குத் தமிழக அரசின் நிதியுதவி பெற்று ரூ.2.50 கோடி செலவில் 2007-2008 முதல் தி.மு. கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நான்கரை ஆண்டுகளில் 10 கோடி ரூபாய்ச் செலவில் 41 ஆயிரத்து 316 பேர் பயனடைந்தனர்.

முதலமைச்சர் ஜெயலலிதா நாகர்கோவிலில் பேசும்போது உலமாக்களின் மாதாந்திர ஓய்வூதியத் தொகையை ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது பற்றிப் பெருமையாகச் சொல்லியிருக்கிறார். ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 24.8.2009 அன்று தி.மு. கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டு, 11 ஆயிரத்து 274 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன; 704 பயனாளிகளுக்கு ரூ.12.93 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

உலமா ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.200 என்பது 2006இல் தி.மு. கழக ஆட்சியில் ரூ.400 எனவும்; 1.12.2010இல் மாதம் 500 ரூபாய் எனவும் உயர்த்தப்பட்டது. அந்தத் தொகையைத்தான் அ.தி.மு.க. ஆட்சியில் மேலும் அதிகமாக உயர்த்தினார்கள். ஓய்வூதியம் பெறும் உலமாக்கள் எண்ணிக்கை 1998-1999இல் 2000 பேர் என்பது 2200 ஆகவும்; 2007-2008இல் 2400 ஆகவும் தி.மு. கழக ஆட்சியில் உயர்த்தப் பட்டது. உலமா ஓய்வூதியத் திட்டம் தர்க்காக்களில் பணிபுரியும் முஜாவர்களுக்கும் தி.மு. கழக ஆட்சியில் நீட்டிக்கப்பட்டது.

மதவழி மற்றும் மொழிவழிச் சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்திடவும் 1989இல் மாநில சிறுபான்மையினர் ஆணையம் ஒன்று முதன்முதலில் 13.12.1989 அன்று தி.மு. கழக ஆட்சியில் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாணையம் 14.3.1990 முதல் செயல்படத் தொடங்கியது.

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்திடும் சீரிய நோக்கத்துடன் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்திற்கு, சட்டப்படிக்கான அங்கீகாரம் அளித்து தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் 2010 தி.மு. கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது. 1.8.2010 முதல் சட்டப்படிக்கான அதிகாரத்துடன் செயல்பட அரசாணை வெளியிடப்பட்டு, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அருட்திரு வின்செண்ட் சின்னதுரை அவர்கள் தலைமையில், ஐந்து உறுப்பினர்களைக் கொண்டு செயல்படத் தொடங்கியது.

2006இல் தி.மு. கழக அரசு பொறுப்பேற்றவுடன், அதற்கு முந்தைய அ.தி.மு.க. ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட மதமாற்றத் தடைச் சட்டத்தினை ரத்து செய்தது. மேலும் அச்சட்டத்தை எதிர்த்துப் போராட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் முந்தைய அரசு பிடித்தம் செய்திருந்த ஒரு நாள் சம்பளத்தைத் திரும்ப வழங்கியது.

சிறுபான்மையினர் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும்வண்ணம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தி.மு. கழக ஆட்சியில் 27.12.1999 முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இக்கழகத்தின்மூலம்

கடந்த கழக ஆட்சிக் காலத்தில் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த 7208 பேருக்கு 29 கோடியே 68 இலட்ச ரூபாய் தனிநபர் கடனாக வழங்கப்பட்டது.

5 ஆண்டுகளில் 966 பேருக்கு 10 கோடியே 67 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் ஆட்டோ கடன் வழங்கப்பட்டது. ஐந்தாண்டுகளில் கறவை மாடுகள் வாங்கிட 146 பேருக்கு 27 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது.

34,589 பேருக்கு 46 கோடியே 46 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டது.

முஸ்லிம் மக்கள் தொகை அடிப்படையில், ஹஜ் பயணத்திற்கு ஒவ்வொரு நாட்டிற்கான ஒதுக்கீட்டை சவூதி அரசு நிர்ணயிக்கிறது. இவ்வொதுக்கீட்டில் இருந்து 2001ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அந்தந்த மாநில முஸ்லிம் மக்கள் தொகைக் கேற்றவாறு மாநிலங்களுக்கு ஹஜ் பயணத் திற்கான ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. தி.மு. கழக ஆட்சியில் ஒதுக்கீட்டிற்கும் அதிகமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டதால், கூடுதல் ஒதுக்கீடு வழங்கக்கோரி, கழக அரசு இந்தியப் பிரதமரிடம் கேட்டுக் கொண்டதன்பேரில் மத்திய அரசு தமிழகத்திற்கு 5 ஆண்டுகளில் நிர்ணயித்த 13 ஆயிரத்து 626 பேருக்கும் அதிகமாக 5611 பேரைக் கூடுதலாக ஹஜ் பயணம் மேற்கொள்ள இஸ்லாமிய மக்களுக்குத் துணை நின்றதும் தி.மு. கழக அரசுதான்!

தமிழக அரசு சிறுபான்மையினர் நலனுக்காகச் செயல்படுத்திவரும் திட்டங்களை ஆய்வு செய்த மத்திய அரசின் தேசிய சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் தலைவர் திரு. எம்.எஸ்.ஏ. சித்திக் அவர்களும், அவரது தலைமையில் வருகைபுரிந்த குழுவினரும், சிறுபான்மையினருக்கான தமிழக தி.மு. கழக அரசின் திட்டங்களில் முழு மன நிறைவு கொண்டு, கழக அரசு, 'சிறுபான்மையினருக்காகப் பாடுபடும் அரசு' (Pro-Minority) என்று பாராட்டினார்.

இஸ்லாமிய மக்களுக்காகக் கழக அரசு செய்தவை இவை மாத்திரம்தானா? 1969இல் மீலாது நபிக்கு முதன்முதல் அரசு விடுமுறை; முந்தைய அ.தி.மு.க. அரசு 2001இல் ரத்து செய்த மீலாது நபி அரசு விடுமுறையை 15.11.2006 ஆணை மூலம் மீண்டும் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது.

1973இல் உருது பேசும் முஸ்லிம்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டதும் தி.மு. கழக ஆட்சியிலேதான்.

1974இல் சென்னை அண்ணாசாலை அரசினர் மகளிர் கல்லூரிக்கு "காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி" எனப் பெயர் சூட்டப்பட்டது.

2001இல் "காயிதே மில்லத் மணிமண்டபம்" 58 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் சென்னையில் அமைத்திட 25.2.2001 அன்று தி.மு. கழக ஆட்சியிலே அடிக்கல் நாட்டி, திறக்கப்பட ஆவன செய்தது.

தேர்தல் நேரத்தில் இஸ்லாமியர்களை ஆதரித்துப் பேசும் ஜெயலலிதா கடந்த காலத்தில் அவர்களைப் பற்றி பேசியது என்ன?

"அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதை ஆதரிக்கிறீர்களா என்று கேட்டபோது, "ஆமாம், ஆதரிக்கிறேன். இந்தியாவிலேயே ஒரு ராமர் கோவில் கட்ட முடியவில்லை என்றால் வேறு எங்கே கட்ட முடியும்?" என்று கூறியவர்தான் ஜெயலலிதா.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழக அணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும், மனித நேய மக்கள் கட்சியும் கூட்டணி சேர்ந்து தலா ஓர் இடத்தில் போட்டியிடுகிறார்கள். அ.தி.மு.க. ஏதாவது ஒரு முஸ்லிம் இயக்கத்திற்கு ஓர் இடமாவது அளித்திருக்கிறதா? வேட்பாளர்களை எடுத்துக் கொண்டால், தி.மு.கழகத்தின் சார்பாக இரண்டு இஸ்லாமிய சகோதரர்கள், தோழமைக் கட்சிகள் சார்பில் இரண்டு இஸ்லாமிய சகோதரர்கள் என்று மொத்தம் நான்கு பேர், அதாவது 10 சதவிகிதம் என்கிற அளவிற்கு முஸ்லிம்களுக்குப் போட்டியிட வாய்ப்பு தரப்பட்டிருக்க, அ.தி.மு.க.வில் ஒரே ஒருவருக்குத்தான் வாய்ப்புதரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, இட ஒதுக்கீட்டில் ஏமாற்றுவதும், வஞ்சிப்பதும், துரோகம் இழைப்பதும் கருணாநிதியா? ஜெயலலிதாவா?

இஸ்லாமிய சமுதாயத்தினரோடு, நமது திராவிட இயக்கமும் நானும் கொண்டுள்ள தொய்வில்லாத தொடர்பும், உறவும் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. 75 ஆண்டுகளுக்கு முன்பு, பள்ளி செல்லும் மாணவனாக இருந்தபோதே, திருவாரூரிலே நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாட்டிலேயே - நான் கொடிபிடிக்கும் சிறுவனாக - பச்சைப் பிறைக் கொடியைக் கையிலே ஏந்துகின்ற

சிறுவனாக- அந்த மாநாட்டிலே கலந்து கொண்டேன் என்பதை நான் பெருமையோடு நினைவு கூர்கிறேன்.

அந்த மாநாட்டிற்குப் புதுக்கோட்டையில் திவானாக இருந்த கான்பகதூர் கலிபுல்லா சாகேப் அவர்கள்தான் தலைமையேற்றார்கள். ஒரு கையிலே 'குடியரசு' ஏடு; இன்னொரு கையிலே 'தாருல் இஸ்லாம்' என்கிற முஸ்லிம்லீக்கிற்காகப் பிரச்சாரம் செய்கிற ஏடு - இவைகள்தாம் என்னுடைய கைகளை அந்த நாட்களில் அலங்கரிக்கும்.

மாணவப் பருவத்திலே என்னுள் முகிழ்த்த அந்த உறவும், உணர்வும் இன்றைக்குச் செழித்துப் பசுமையாகப் பரவியிருக்கின்றன. எனவே நான், இளமைப் பருவத்திலேயே இஸ்லாமிய சமுதாயத்தினரின் எண்ணற்ற நிகழ்ச்சிகளில், கூட்டங்களில், மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கிறேன். நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதெல்லாம் அந்தச் சமுதாயத்தினருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைத் தவறாது ஆற்றி வந்திருக்கிறேன்.

நேற்றைக்கு நடந்ததைப்போல் இருக்கிறது ஒரு நிகழ்ச்சி; என் நெஞ்சத்தை நெகிழவைத்து, எனது நினைவிலிருந்து நீங்காமல் என்றென்றும் நிலைத்துவிட்ட அந்த நிகழ்ச்சி. இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவரும், பெரியாரின் அன்புக்கும், பேரறிஞர் அண்ணாவின் பாசத்திற்கும், எனது மட்டற்ற மதிப்புக்கும் உரியவரான பெருந்தகையாளர் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள், 1972ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில், சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது - அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்ற செய்தி அறிந்தவுடன், எனது கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்தை ரத்து செய்துவிட்டு, உடனடியாகச் சென்னை திரும்பினேன்.

ஸ்டான்லி மருத்துவமனையில் அவரது நிலையைக் கண்டபோது, அந்தத் துயரத்தைத் தாங்கிக்கொள்ள எனக்குத் தெம்பில்லாமல் போயிற்று. கண்மூடி மயக்கநிலையில் படுத்திருந்த அவர் அருகே குனிந்து, மெல்லிய குரலில், "அய்யா, நான் கருணாநிதி வந்திருக்கிறேன்" என்று கூறினேன். அந்தக் குரல் கேட்டுக் காயிதே மில்லத் அவர்கள் கண்விழித்துப் பார்த்தார். அந்த

நிகழ்ச்சி குறித்து, தென்காசி என்.கே. ரிபாயி அவர்கள் தான் எழுதிய "கவ்மின் காவலர்" என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

> "அவர்கள் கண்விழித்துப் பார்த்தார்கள். வந்திருப்பது யார் என்பதையும் புரிந்து கொண்டார்கள். கலைஞர் கருணாநிதியைப் பார்த்ததும் தங்களது கரங்களை நீட்டினார்கள். அவரும் அக்கரங்களைப் பிடித்துக் கொண்டார். அச்சமயம் காயிதே மில்லத் அவர்கள் மிகவும் பலகீனமான குரலில், 'முஸ்லிம் சமுதாயத்திற்குத் தாங்கள் செய்த உதவிகளுக்கெல்லாம் எனது நன்றி' என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் அவர் அப்படியே மெய்மறந்துவிட்டார். அவரது கண்கள் கலங்கிவிட்டன. என்ன சொல்வதென்றே தெரியாது அவர் தத்தளித்துக் கொண்டிருந்தார். அதற் குள்ளாக காயிதே மில்லத் அவர்களின் கண்கள் மூடிக்கொண்டன. மீண்டும் மயக்கநிலை ஏற்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு காயிதே மில்லத் அவர்கள் மீண்டும் சுயநினைவு பெறவேயில்லை".

இளமைக் காலத்திலேயே இஸ்லாமிய சமுதாயத்தினர்மீது நான் கொண்டிருந்த மதிப்பின் தொடர்ச்சியாக; காயிதே மில்லத் அவர்கள்மீது நான் கொண்டிருந்த அன்புக்கும், பாசத்துக்கும் அடையாளமாக - இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு வாய்ப்பு கிடைத்திடும்போதெல்லாம் பல்வேறு நன்மைகளை வழங்கியிருக்கிறேன். ஆனால் என்னைப் பற்றித்தான் ஜெயலலிதா நான் ஏமாற்றுவதாகவும், வஞ்சிப்பதாகவும் பேசியிருக்கிறார்.

"இஸ்லாம் என்பது ஒரு வாழ்க்கை நெறி" என்றார் அண்ணா. இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்லாமல் மனித சமுதாயம் அனைத்திற்கும் பொதுவாகப் பொருந்தும் வாழ்க்கை நெறிகளைப் போதித்த அண்ணல் நபிகளார், ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் அன்புடன் பழகி, உறவை வளர்க்க வேண்டும் என்றார். மற்றவர்களைப் பற்றிக் குற்றம் குறைகள் கூறும் மனப்பான்மையை விட்டுவிட வேண்டும் என்று போதித்த அண்ணல் நபிகளார், "பிறருடைய குற்றங்களைத் தேடி அலையாதீர்கள்; நீங்கள் உயர்ந்த நிலை அடைவதற்காகப் பிறரைத் தாழ்த்தி விடாதீர்கள்; பிறர்மீது பொறாமை கொள்ளாதீர்கள்; பிறரைப் பற்றிப் புறம் பேசாதீர்கள்; பிறரிடம் முகம் சுளிக்காதீர்கள்" என்கிறார்.

இஸ்லாமியர்களைப் பற்றி பேசியிருக்கின்ற ஜெயலலிதா, நபிகள் நாயகத்தின் இந்த அறிவுரைகளையாவது மனதிலே கொண்டு இனியாவது பிரச்சாரத்தை மேற்கொள்வார் என்று நம்புகிறேன்.

தி.மு.கழக ஆட்சியில் இஸ்லாமியப் பெருமக்களுக்காக நாம் செய்த சலுகைகளையெல்லாம் அவர்களுக்கு நினைவூட்டிட வேண்டும். "முஸ்லிம்கள் மட்டும் சிறுபான்மையினர் அல்ல, வேறு சமுதாயத்தினரும் இருக்கிறார்கள்" என்றெல்லாம் ஜெயலலிதா பேட்டி கொடுத்ததையும், முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளித்தது கழக அரசுதான் என்பதையும் விளக்கிட வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

15-3-2014

3864. நாடாளும் ஜெயாவே; நாவை அடக்குவது நல்லது!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா, திருப்பூர், காங்கேயம் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசும்போது தமிழகத்தில் மின் உற்பத்தி பற்றி நீட்டி முழக்கியிருக்கிறார். "மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்த காலத்தில், அனைத்து மின்திட்டங்களையும் அதோகதியில் விட்ட தி.மு.க. தலைவர் கருணாநிதி, இப்போது மும்முரமாக நடைபெற்று வரும் மின் திட்டங்களின் கதியைப் பற்றி வினவியுள்ளது வேடிக்கையாக இருக்கிறது. தமிழக மக்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் முனைப்பு காட்டாத தி.மு.க.விற்கு வருகின்ற மக்களவைத் தேர்தலில் மறக்க முடியாத சம்மட்டி அடி கொடுக்க வேண்டும்" என்று பேசி, "தினத்தந்தி", "தினமணி" போன்ற நாளேடுகள் பெரிதாக வெளியிட்டிருக்கின்றன.

மேலும் ஜெயலலிதா அந்தப் பேச்சின்போது 3-3-2014 அன்று நான் எழுப்பிய ஒரு குற்றச்சாட்டிற்குப் பதிலும் கூறியிருக்கிறார்.

அதாவது தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக்குவதற்காக 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்க மிக உய்ய அனல்மின் நிலையத் திட்டத்திற்கு ஜெயலலிதா அடிக்கல் நாட்டுவதைப் பற்றி அனைத்து நாளேடுகளிலும் - தவறு; அ.தி.மு.க.வுக்கு ஆதரவளிக்கும் அனைத்து நாளேடுகளிலும் முழுப் பக்க விளம்பரங்கள் வெளிவந்தன. அதுபற்றித்தான் "29-3-2012 அன்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின் கீழ் படித்த ஒரு நீண்ட அறிக்கையில், 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம் என்னும் ஒரு புதிய திட்டம் சுமார் 3,960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படும் என்றும்; இந்த அனல் மின் திட்டம் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தியைத் தொடங்கும் என்றும் அறிவித்தாரே; இதற்கான மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகத்தின்

அனுமதி 24-1-2013 அன்றும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி 18-2-2013 அன்றும் கிடைத்து ஓராண்டு ஆகிறதே; இப்போதுதான் முதலமைச்சர் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார் என்றால் மின் உற்பத்தியில் அ.தி.மு.க. அரசு எந்த அளவிற்கு அக்கறையோடு விரைவு காட்டுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது அல்லவா? இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஒப்புக் கொள்ளப்பட்ட நிறுவனத்திற்கும், தமிழக அரசுக்கும் இடையில் விலை இழுபறி காரணமாகத்தான் ஓராண்டு காலமாக இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படவில்லை என்று மின்வாரிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 2012 மார்ச் மாதத்தில் பேரவையில் அறிவிக்கப்பட்ட திட்டத்திற்கு அடிக்கல் நாட்டவே இரண்டு ஆண்டுகள் என்றால், இந்தத் திட்டத்தின்கீழ் மின் உற்பத்தி கிடைக்க இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும்? இதுதான் மின் உற்பத்தியைப் பெருக்கி மின்வெட்டை நீக்குவதில் அ.தி.மு.க. அரசு காட்டுகின்ற வேகமா? தொடக்க நிலையிலேயே மிகவும் தாமதமாகியுள்ள இத்திட்டத்திற்குக் காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டி வைக்க அரசு வரிப் பணத்தைச் செலவிட்டு நாளேடுகளுக்கு முழுப் பக்க விளம்பரம் கொடுத்தது நியாயமா?" என்று நான் கேட்டதற்குத்தான் திருப்பூர் கூட்டத்தில் பதில் கூறுவதாக நினைத்துக் கொண்டு, பூசி மெழுகி இருக்கிறார்.

அந்தப் பதிலில் அ.தி.மு.க. ஆதரவு நாளேடுகளுக்கு மட்டும் முழுப் பக்க விளம்பரங்கள் கொடுக்கப்பட்டது பற்றி எந்த விளக்கமும் இல்லை! இரண்டாண்டுகள் தாமதத்திற்கு ஜெயலலிதா பதில் கூறும்போது, 24-1-2013 அன்று மத்திய அரசின் சுற்றுச் சூழல் அனுமதி கிடைத்ததாகவும், அதன் பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டு, இறுதியாக "லான்கோ இன்ப்ரா டெக்" நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதாகவும், இதற்கான பணி ஆணையினை மேற்படி நிறுவனத்திடம் 27-2-2014 அன்று, தான் வழங்கியதாகவும் தெரிவித்திருக்கிறார். இதைத்தான் நானும் விளக்கியிருந்தேன்.

24-1-2013 அன்றே மத்திய அரசு அனுமதி வழங்கிய பிறகும், டெண்டர் முடிவு செய்ய 13 மாதங்கள் தேவைதானா என்று கேட்டிருந்தேன். முக்கியமான இந்தப் பிரச்சினையில் ஏற்பட்ட தவிர்க்கக்கூடிய தாமதத்திற்கு, அம்மையாரிடம் ஏற்கத்தக்க

பதிலேதும் இல்லாததால், பதில் சொல்லாமல் அப்படியே விட்டுவிட்டார்.

ஜெயலலிதா தனது பேச்சில், "660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்க மிக உய்ய அனல் மின் நிலையத் திட்டம் 29-3-2012 அன்று என்னால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது" என்று பேசியிருக்கிறார். ஆனால் அவர் இந்தத் திட்டத்தைப் பேரவையில் அறிவிப்பதற்கு முன்பே, தி.மு. கழக ஆட்சியில் இந்தத் திட்டத்திற்கான 275 உயர புகை போக்கியை அமைத்திட இந்திய விமான நிலைய ஆணையத்தின் அனுமதி 16-5-2008 அன்றும்; கடலோரப் பகுதி ஒழுங்கு முறை அனுமதி 23-12-2008 அன்றும் பெறப்பட்டது என்ற உண்மையை அப்படியே பேரவையில் மட்டுமல்ல; மக்கள் மத்தியிலும் மறைத்துவிட்டுத் தன்னால்தான் புதிதாக அறிவிக்கப்பட்டது போலப் பேசியிருக்கிறார்!

நான் 3-3-2014 தேதிய "முரசொலி"யில் எண்ணூர் புதிய மின் திட்டத்தைப் பற்றிக் கூறிய போது, 2012ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 110வது விதியின் கீழ் முதலமைச்சர் இந்தத் திட்டத்தை அறிவித்தபோது, மேலும் சில மின் உற்பத்தித் திட்டங்களைத் தமிழக அரசின் சார்பில் தொடங்கப் போவதாக அறிவித்தீர்களே, அந்தத் திட்டங்களெல்லாம் என்ன ஆயின என்றும்; ஏன் அதற்கு முன்பே, 2011-12ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "4,800 கோடி ரூபாய்ச் செலவில் 800 மெகாவாட் உடன்குடி விரிவுத் திட்டம்; 9,600 கோடி ரூபாய்ச் செலவில் 1,600 மெகாவாட் உப்பூர் அனல் மின் திட்டம்; 3,600 கோடி ரூபாய்ச் செலவில் 40 ஆண்டு பழமை வாய்ந்த எண்ணூர் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய மின் இயந்திரம் நிறுவும் திட்டம்; 4,800 கோடி ரூபாய்ச் செலவில் 800 மெகாவாட் தூத்துக்குடி நான்காம் நிலைத் திட்டம் ஆகியவை தொடங்கப்படும் என்றும், அதனால் அரசாலும், பல்வேறு கூட்டு முயற்சிகளாலும் மொத்தம் 22,800 கோடி ரூபாய் முதலீட்டில் 3,800 மெகா வாட் மின்சார உற்பத்தி கூடுதலாகக் கிடைக்கும்" என்றும் அறிவித்திருந்தீர்களே, அவைகள் எல்லாம் என்ன ஆயிற்று என்றும் வினவியிருந்தேன். இதற்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் சொல்வதற்குப் பதிலேதும் இல்லை என்பதால், அவர் எந்தவிதமான விளக்கமும் தரவில்லை.

"அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எத்தனை திட்டங்கள் நடைமுறைக்கு வந்து, எந்த அளவிற்கு மின் உற்பத்தி நடைபெறுகிறது? நாளையே முதலமைச்சர் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்வதற்கு முன் நாட்டு மக்களுக்குப் புள்ளி விவரங்களோடு அறிவிப்பாரா" என்றும் நான் சுட்டிக் காட்டியிருந்தேன். அந்த திட்டங்களைப் பற்றியும் எதுவும் எழுதித் தரப்படாததால், முதலமைச்சர் தனது பேச்சிலே வாயே திறக்கவில்லையோ? மாறாக அனைத்து மின் திட்டங்களையும் நான் அதோகதியில் விட்டேன் என்றும், தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கையில் முனைப்பு காட்டவில்லை என்றும் அதற்காக எனக்கு மறக்க முடியாத "சம்மட்டி அடி" கொடுக்க வேண்டுமென்றும் ஆவேசத்தோடு கூறியிருக்கிறார்.

உண்மையில் தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கையில் தி.மு.கழக ஆட்சியில் எவ்வகையான முனைப்பு காட்டப்பட்டது? அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா எப்படிப்பட்ட முயற்சி மேற்கொண்டார்? என்பதைப் பலமுறை புள்ளி விபரங்களை எடுத்துக்காட்டி விளக்கிவிட்டேன். இதோ; மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்துகிறேன்!

1991-1996இல் அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது பத்து மின்சார உற்பத்தித் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்ட போதிலும்; எந்தத் திட்டங்களுக்கும் தேவையான நிலம் கையகப்படுத்தப்படவில்லை; சுற்றுப்புறச் சூழல் துறையின் அனுமதியும் பெறப்படவில்லை. 2010ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் மின் உற்பத்திக்காக நடை பெற்றுக் கொண்டிருந்த 13 பணிகள், வட சென்னை (நிலை 2), மேட்டூர், தூத்துக்குடி, வள்ளூர், பவானி கட்டளை (2), பவானி கட்டளை(3), பவானி தடுப்பணை (1), பவானி தடுப்பணை (2), பெரியார் வைகை (1), பெரியார் வைகை (2), பெரியார் வைகை (3), பெரியார் வைகை (4), உடன்குடி ஆகியவைகளாகும்.

முதலமைச்சர் ஜெயலலிதா தமிழகச் சட்டப் பேரவையில் விரைவில் மின் உற்பத்தி துவக்கப்பட உள்ள திட்டங்கள் என்று 7 திட்டங்களை அறிவித்தார். அவை மேட்டூர், வள்ளூர் (1ஆம் அலகு), வள்ளூர் (2ஆம் அலகு), வள்ளூர் (3ஆம் அலகு), வடசென்னை (1ஆம் அலகு), வடசென்னை

(2ஆம் அலகு), தூத்துக்குடி (இரண்டு அலகுகள்). இந்த ஏழு திட்டங்களும் வடிவமைக்கப்பட்டு, தொடக்க நிலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான். கழக ஆட்சியில் துவக்கப்பட்ட இந்தத் திட்டங்களிலிருந்து கிடைக்கின்ற மின் உற்பத்திதான் தற்போது தமிழகத்திற்கு நெருக்கடியான காலகட்டத்தில் மிகுந்த பயன்பாட்டினை அளிக்கின்றது.

மின் உற்பத்திக்காக 2001-2006ஆம் ஆண்டுகளில் ஜெயலலிதா ஆட்சியில் செலவிடப்பட்ட மொத்தத்தொகை வெறும் 700 கோடி ரூபாய்தான். ஆனால் 2006-2011ஆம் ஆண்டுகளில் அடியேன் முதலமைச்சராக இருந்தபோது, மின் உற்பத்திக்காக நான் எந்தவிதமான முனைப்பும் காட்டவில்லை என்று திருப்பூரில் அம்மையார் குற்றஞ்சாட்டியிருக்கிறாரே, அந்தக் கருணாநிதி முதல்வராக இருந்த அந்த ஐந்தாண்டுகளில் மின் உற்பத்திக்காகச் செலவு செய்த தொகை, 2007-2008இல் 774 கோடி ரூபாய்; 2008-2009இல் 710 கோடி ரூபாய்; 2009-2010இல் 2,800 கோடி ரூபாய்; 2010-2011இல் 3,100 கோடி ரூபாய்; 2011-2012இல் 3,700 கோடி ரூபாய் என்று மொத்தம் 11,084 கோடி ரூபாய்.

மின் உற்பத்திக்காக 2011-2012இல் தி.மு.கழக ஆட்சியில் செலவு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை 3,700 கோடி ரூபாய். அதற்கு அடுத்த ஆண்டு, 2012-2013இல் ஜெயலலிதா ஆட்சியில் மின் உற்பத்திக்காக ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா? 2,067 கோடி ரூபாய். அதாவது கழக ஆட்சியில் ஒப்புதல் வழங்கப்பட்ட தொகையை விட சுமார் 1,700 கோடி ரூபாய் குறைவு. இந்த அழகில்தான் மின் உற்பத்தியில் நான் முனைப்பு காட்டவில்லை என்ற பித்தலாட்டப் பேச்சு!

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் 2012ஆம் ஆண்டுக்குள் 151 நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் கழிவைக் கொண்டு, 1000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று ஜெயலலிதா கூறியிருந்தார். மூன்றாண்டுகள் ஆட்சி நடத்திய பிறகும், இதற்காக எந்த ஆயத்தப் பணியாவது மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா? இந்தக் கேள்வியை நான் பலமுறை கேட்டிருக்கிறேன்; இதுவரை பதில் இல்லையே, ஏன்?

முதலமைச்சர் ஜெயலலிதா தமிழகச் சட்டப் பேரவையில் 20-10-2012 அன்று "சூரிய மின் சக்திக் கொள்கை" பற்றி அறிவித்து மூன்றாண்டுகளில் 3000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப் போவதாகத் தெரிவித்தாரே; இதுவரை சூரிய மின் சக்திக் கொள்கை மூலம் எத்தனை மெகாவாட் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பாரா?

முதலமைச்சர் ஜெயலலிதா திருப்பூரில் பேசும்போது, "தமிழ்நாட்டில் மின் உற்பத்தியும், தொழில் வளர்ச்சியும் பெருகிக் கொண்டே வருகின்றன" என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றியும், முதலீடுகள் எவ்வாறு வெளி மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றன என்பது பற்றியும், கர்நாடக மாநில முதலமைச்சர் கோவைக்கே வந்து முதலீடுகளை ஈர்க்க மாநாடு நடத்தியது பற்றியும் நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கிறேன். இந்த ஆட்சியின் தொழில் வளர்ச்சிக்குச் சான்றாக மேலும் ஒரு உதாரணம் கூறுகிறேன்.

தி.மு. கழக ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணியாற்றிய பெண்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 93 ஆயிரம் ஆகும். ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற பெண்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 78 ஆயிரம். அ.தி.மு.க. ஆட்சியில் வேலை வாய்ப்பினை இழந்த பெண்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 15 ஆயிரம் ஆகும். இதுதான் தொழில் வளர்ச்சிக்கான அடையாளமா?

தி.மு.கழக ஆட்சியில் மகளிர் பெற்று மகிழ்ந்திருந்த வேலை வாய்ப்பை, ஜெயலலிதா ஆட்சியில் இழந்து வாடுகின்றனரே; தமிழகத்தில் தொழில் வளர்ச்சி எங்கே துலங்குகிறது? இலட்சக்கணக்கான பெண்கள் ஏற்கனவே பெற்றிருந்த வேலை வாய்ப்பைக்கூட காப்பாற்ற முடியாத ஒரு பெண் முதலமைச்சர், தொழில் வளர்ச்சி பெருகுகிறது என்று பேசுவது எவ்வளவு விபரீதமான வேடிக்கை? நாவால் பேசி, அதனை நாளேடுகள் அச்சியற்றி விளம்பரம் செய்துவிட்டால் போதுமா? நாட்டில் செயலாக்கத்திற்கு வரவேண்டாமா?

மற்றுமோர் உதாரணம்! தமிழக அரசு இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளை ஆலங்குளத்திலும், அரியலூரிலும் நடத்தி வருகிறது. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில், 2010-

2011ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் உற்பத்தி 2 இலட்சத்து 3 ஆயிரத்து 40 டன்கள். அ.தி.மு.க. ஆட்சியில், 2011-2012ஆம் ஆண்டில் அங்கே சிமெண்ட் உற்பத்தி 1 இலட்சத்து 34 ஆயிரத்து 640 டன்கள். 68 ஆயிரத்து 400 டன்கள் குறைவு. அதுபோலவே அரியலூர் அரசு சிமெண்ட் தொழிற்சாலையில் கழக ஆட்சியில் உற்பத்தி 4 இலட்சத்து 90 ஆயிரத்து 35 டன்கள். அ.தி.மு.க. ஆட்சியில் உற்பத்தி 3 இலட்சத்து 88 ஆயிரத்து 55 டன்கள். கழக ஆட்சியைவிட 1 இலட்சத்து ஓராயிரத்து 980 டன்கள் குறைவு. இதுதான் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெருகியிருப்பதற்கான அடையாளமா? தமிழக முதலமைச்சர் இதற்கெல்லாம் விரிவாகப் பதில் அளிப்பாரா?

உடன்பிறப்பே, அம்மையார் விடையளிக்கிறாரோ, இல்லையோ? நீ இந்த விவரங்களை யெல்லாம் எடுத்துச் சென்று மக்களிடம் விளக்கிக் கூறவேண்டும். தமிழகத்தில் எப்படிப்பட்ட ஆட்சி நடைபெறுகிறது? எப்படியெல்லாம் வெற்று அறிவிப்புகளாலும், வீண் ஆரவாரங்களாலும் மக்களைத் திசை திருப்புகிறார்கள்; ஏமாற்றிட எத்தனிக்கிறார்கள் என்பது பற்றியெல்லாம் மக்களுக்குத் தெளிவுபடுத்திட வேண்டும். அந்தப் பணியிலே நீ தொடர்ந்து ஈடுபட்டு வருவதை நான் நன்றாகவே அறிவேன். எனினும் தேவையான விவரங்களைத் தொகுத்து உனக்கு உதவிட வேண்டியது என் கடமை அல்லவா; அதைத்தான் நான் செய்து வருகிறேன், நீ உன்னுடைய பணிகளில் தொடர்ந்து மேலும் மேலும் முன்னேறுவாய் என்ற நம்பிக்கையோடு! நம் கடன் தமிழ் மக்களுக்கு நாள்தோறும் பணி செய்துகொண்டே இருப்பதுதானே!

அன்புள்ள,

மு.க.

16-3-2014

3865. கோயபல்ஸ் யார்? நானா? ஜெயலலிதாவா?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா தூத்துக்குடி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசும்போது, இஸ்லாமியர்களின் இடஒதுக்கீட்டிற்குக் கருணாநிதி மட்டுமே சொந்தம் கொண்டாடுவது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை என்றும் தனது ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையினர் இடஒதுக்கீட்டிற்கு வித்திட்டதே தான்தான் என்றும் பேசியிருக்கிறார். அவருக்கு நான் பதில் கூறுவதைவிட, முஸ்லிம்களுக்காக அன்றாடம் பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர், அண்ணாவின் நெருங்கிய நண்பர், பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களும், மனித நேய மக்கள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவரும், கடந்தமுறை ஜெயலலிதாவுடன் தோழமைக் கொண்டு அந்தக் கட்சி வெற்றி பெற மாநிலம் முழுவதும் சுற்றிப் பாடுபட்டவருமான ஜவாஹிருல்லா அவர்களும் என்ன சொன்னார்கள் என்பதைக் குறிப்பிட்டாலே, முஸ்லிம்களுக்காக இட ஒதுக்கீடு வழங்கியது, தி.மு. கழக ஆட்சியா, ஜெயலலிதாவா என்பது தெளிவாகிவிடும் அல்லவா?

பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள் 10.3.2014 அன்று அவர்கள் கட்சியின் தேசிய அரசியல் ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் கூறும்போது, "முஸ்லிம்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கியது தான்தான் என்று கூறித் தமிழக முதல்வர் ஜெயலலிதா உண்மைக்கு மாறான தகவலைக் கூறி வருகிறார். இது அப்பட்டமான வரலாற்றுப் புரட்டு. முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகித தனி இடஒதுக்கீடு வழங்கியதும், இந்த இடஒதுக்கீடு வழங்குவதற்குக் காரணமாக இருந்த பிற்பட்டோர் பட்டியலில் லெப்பை, தக்னி, தூதேகுலா, மாப்பிள்ளா உள்ளிட்டவர்களைச் சேர்த்ததும், தி.மு.க. தலைவர் கலைஞர்தான் என்பது வரலாற்றில் பதியப்பட்ட ஒன்று. அ.தி.மு.க.

தேர்தல் அறிக்கையில் சமூக, கல்வியில் பிற்படுத்தப்பட்டவர்கள் என்பதற்குப் பதிலாகப் பொருளாதாரத்தில் பிற்பட்டவர்கள் என்று இடம்பெறச் செய்துள்ளதன் மூலம் பா.ஜ.க.வின் கொள்கையை ஜெயலலிதா அப்படியே பின்பற்றுகிறார். எனவே அவரது கூற்றை முஸ்லிம் சமுதாயம் ஒருபோதும் ஏற்காது" என்று தெரிவித்திருக்கிறார்.

திரு. ஜவாஹிருல்லா அவர்களோ, நேற்றைய தினம், "தி.மு.கழக ஆட்சியில்தான் முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகித இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டது. இதை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் நான் பலமுறை பேசியும், அ.தி.மு.க. அரசு கண்டுகொள்ளவில்லை. முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கினோம் என்று சொல்வதற்கு அ.தி.மு.க.வுக்கு அருகதை இல்லை" என்று கூறியிருக்கிறார். ஜெயலலிதா எவ்வளவு பெரிய பித்தலாட்டக்காரர் என்பதற்கு இஸ்லாமிய சமுதாயத்தின் இந்த இரண்டு பெரியவர்கள் கூறியிருக்கும் உண்மை போதுமா? போதாதா?

தப்பித்துக் கொள்வதற்காக இப்போது ஜெயலலிதா தான் மேற்கொண்ட ஒரு நடவடிக்கையால் தான் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு கிடைத்தது என்று சொல்கிறார். தாலி கட்டியவனுக்கு மனைவி சொந்தமே தவிர, அவளைப் பெண் பார்த்துவிட்டுப் போனவன் எல்லாம், தனக்குத்தான் அவள் சொந்தம் என்று கூறினால் ஊரிலே உள்ளவர்கள் எல்லாம் உதைக்க வந்து விடுவார்கள்!

மேலும் ஜெயலலிதா, தூத்துக்குடியில் பேசும் போது அ.தி.மு.க. ஒருபோதும் கரசேவைக்கு ஆட்களை அனுப்பியதே இல்லை என்று கூறித் தப்பிக்கப் பார்த்திருக்கிறார். ஜெயலலிதாவுக்கும், கரசேவைக்கும் உள்ள தொடர்பு பற்றியும், அவர் அப்போது எவ்வாறு நடந்துகொண்டார் என்பது பற்றியும் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாதா என்ன?

தினமணி நாளிதழ் 24-11-1992இல் வெளியிட்ட செய்திக்குத் தலைப்பு என்ன தெரியுமா? "கரசேவை: ஜெயலலிதா வலியுறுத்தல்" என்பதாகும். அந்தச் செய்தியில், ஜெயலலிதா டெல்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு மன்றக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் என்ற முறையில்

ஜெயலலிதாவின் பேச்சு வெளியாகியுள்ளது. அந்தப் பேச்சில், "அரசியல் சட்டத்தின்படி, பெரும்பான்மையினருக்குக் கிடைக்கும் சாதாரண உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் பாதிக்கும் வகையில் அரசியல் சரித்திர, சமூக அமைப்புகளின் பின்னணியில் தங்கள் நலன்களை முன்னிருத்திச் செயல்படுவது சிறுபான்மையினருக்கு ஏற்றது அல்ல. பெரும்பான்மையினரும், அவர்களுடைய உரிமைகளைச் சிறுபான்மையினரைப் போல் அனுபவிக்க அனுமதிக்க வேண்டும். அயோத்தி பிரச்சினையில் இதனைத் தொடர்புபடுத்திக் குறிப்பாகக் கூற வேண்டுமென்றால், உத்தரப் பிரதேச அரசு கையகப்படுத்திய இடத்தில் இந்துக்கள் விரும்பியபடி, கட்டுமானப் பணியை நிறைவேற்ற அனுமதிப்பதாகும்.

உத்தரப் பிரதேச அரசுக்கு உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள ஆணைகளும், உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளும் ஒருவிதமான சட்டச் சூழலை உருவாக்கியிருப்பதை நான் அறிவேன். இந்தச் சூழலில் உத்தரப்பிரதேச அரசு கையகப்படுத்திய இடத்தில், கரசேவையோ அல்லது வேறுவித நடவடிக்கையோ மேற்கொள்வது கடினமாக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் கட்டுமானத்துக்குத் தடை இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொண்டால், கட்டுமானப் பணிக்குத் தடையாக உள்ள சட்டச் சிக்கல்களை அகற்றத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசும் உத்தரப்பிரதேச அரசும் மேற்கொண்டாக வேண்டும். கரசேவை நடைபெறுவதற்குப் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கத் தேவையான முடிவை இந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழு எடுக்க வேண்டியுள்ளது. கரசேவையை அனுமதிக்கும்படி நீதிமன்றங்களை அணுகத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். மிகவும் சுருக்கமாக என்னுடைய வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன். உத்தரப் பிரதேச அரசு கையகப்படுத்திய இடத்தில் கரசேவை நடைபெறத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்" என்று பேசி, ஏடுகளில் எல்லாம் அப்போதே வெளிவந்திருக்கிறது என்றால், முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பது போலத் தற்போது தூத்துக்குடியில் போய், அ.தி.மு.க. ஒருபோதும் கரசேவைக்கு ஆட்களை அனுப்பியது இல்லை என்று பேசினால், மக்கள் நம்பி விடுவார்களா என்ன?

"தினமணி"யில் மட்டுமல்ல; 1.1.1993 தேதிய "ஃப்ரண்ட் லைன்" ஆங்கில இதழில், "I am aware that the Supreme Court directions to the Uttar Pradesh Government and the pendency of the cases in the High Court have created a legal situation making it difficult for the Kar Sewa" v‹W«; "This august body will, therefore, have to take a decision on creating a congenial atmosphere for the conduct of the Kar Sewa. All steps will have to be taken to move the Courts to permit Kar Sewa" என்றும் அப்போது செய்தி வெளியிட்டதுகூட இட்டுக் கட்டிய கதையா? ஜெயலலிதா கூறுவாரா?

முதலமைச்சர் ஜெயலலிதா இந்திய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்திலே பேசியதை, "தமிழ்நாடு விசுவ இந்து பரிசத்" சார்பாக ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியில், "தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில் அயோத்தி கரசேவைக்கு ஆதரவாகப் பேசி கோடிக்கணக்கான இந்துக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்த தமிழக முதல்வர் மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு நன்றி! நன்றி! நன்றி!" என்று அச்சடிக்கப்பட்டிருந்தது.

அது மாத்திரமல்ல; "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேட்டில், 1992 டிசம்பர் 3ஆம் தேதி யன்று, கரசேவை நடைபெற்ற உத்தரப்பிரதேச மாநில "விசுவ இந்து பரிசத்" அமைப்பின் செயலாளரான குலாப் சிங் பரிகார் என்பவர் அளித்த பேட்டியிலேயே அயோத்தியில் நடைபெறும் கரசேவைக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினரைத் தமிழக முதல்வர் ஜெயலலிதா அனுப்பி வைத்துள்ளார். மேலும் கரசேவைக்குரிய பல உதவிகளைச் செய்வதாக உறுதியும் அளித்துள்ளார்" என்று கூறிச் செய்தி வந்ததே, அப்போதே ஜெயலலிதா துள்ளிக் குதித்து, அந்தச் செய்தியில் உண்மையில்லை, நான் கரசேவைக்கு ஆள் அனுப்பவில்லை என்று எந்தப் பத்திரிகையிலே மறுப்புக் கூறினார்? சொல்லத் தயாரா? அப்போது அந்தச் செய்தியைப் பாராட்டாக எடுத்துக்கொண்டவர், தற்போது முஸ்லிம்களின் வாக்குக்காக "கரசேவைக்கு ஆள் அனுப்பவில்லை" என்று சொன்னால் இஸ்லாமியர்கள் நம்பி விடுவார்களா என்ன?

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தமிழ்நாடு கிளைத் தலைவர், மறைந்த ஏ.கே.ஏ. அப்துல் சமத் அவர்கள் அயோத்தியில் நடைபெற்ற கரசேவையில் அ.தி.மு.க. தொண்டர்களும் கலந்து

கொண்டனர் என்று அப்போதே குற்றஞ் சாட்டியபோது, ஜெயலலிதா அதை மறுத்தாரா?

இஸ்லாமியர்களை ஜெயலலிதா என்ன பாடுபடுத்துகிறார் என்பதற்கு, பாவம் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி, தி.மு. கழக ஆட்சியிலே ஒரு முக்கிய பொறுப்பிலே இருந்தார் என்பதற்காக, அவரைப் படுத்துகின்ற பாட்டைத் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கவில்லையா என்ன? இவர்கள் ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து மூன்றாண்டு காலமாக அவர் பணி நீக்கத்திலே வைக்கப்பட்டு, இன்னும் சொல்லப் போனால், அவர் சென்னைக்குக் கூட வரக்கூடாது, ராமேஸ்வரம்-மண்டபத்திலேயே தங்கி இருக்க வேண்டுமென்று இந்த ஆட்சியினர் ஆணை பிறப்பித்திருக்கும் தகவல் தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்குத் தெரியாதா என்ன? ஆனால் தி.மு. கழக ஆட்சியிலே இந்த அதிகாரிக்குப் பெரிய பொறுப்பு அளித்தது மாத்திரமல்ல; உலகத் தமிழ் மாநாட்டிற்கு ஒரு தனி அதிகாரியாகத் திறமையான அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று என்னிடம் கோப்பு வந்தபோது அலாவுதீன் என்ற மூத்த அதிகாரியைத்தான் அந்தப் பதவியிலே நியமித்தேன். நல்லவேளையாக அந்த அதிகாரி தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். இல்லாவிட்டால் அவரும் பழிவாங்கப்படக் கூடும்.

தமிழக மக்களிடம், பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில்தான் இராமர் கோயில் கட்ட வேண்டுமென்று இலட்சக்கணக்கான கையெழுத்துக்களை வாங்கி பா.ஜ.க. வினர் தமிழக ஆளுநரிடம் அப்போது கொடுத்தபோது, அந்த மனுவிலே அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கே.ஆர். முருகானந்தம், ரமேஷ், பன்னீர்செல்வம், கோவிந்தராஜ் ஆகியோர் கையெழுத்திட்டிருப்பதாக அப்போது பா.ஜ.க. சார்பிலே அறிவித்தபோது, இன்று என்னை மறுக்கும் ஜெயலலிதா அப்போது அதை மறுக்கவில்லையே? இப்படி யெல்லாம் பேசி, இஸ்லாமியர்களை ஏமாற்றிவிட முடியுமா என்ன?

இன்று ஜெயலலிதாவின் பேச்சைக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருக்கும் "தினத் தந்தி", தனது 23.7.2004 இதழில் இதே ஜெயலலிதாவின் பேட்டி ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்தப் பேட்டியில் ஒரு கேள்வி இதோ :-

செய்தியாளர் :- சிறுபான்மை சமுதாயமான இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

ஜெயலலிதா :- முஸ்லிம்கள் மட்டும் சிறு பான்மையினர் அல்ல. கிறித்தவர்கள் இருக்கிறார்கள், பார்சிகள் இருக்கிறார்கள், புத்த மதத்தினர் இருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் முஸ்லிம்கள், கிறித்தவர்கள் சமமாக இருக்கிறார்கள். முஸ்லிம்களுக்குத் தனி ஒதுக்கீடு அளித்தால், நாளை கிறித்தவர்களும் இட ஒதுக்கீடு கேட்பார்கள். எனவே இவ்வாறு செய்வது இயலாத ஒன்றாகும். அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் ஏற்கனவே பல சலுகைகளை அனுபவித்து வருகிறார்கள். பெரும்பான்மை சமூகத்தினர் அந்தச் சலுகைகள் எல்லாம் அனுபவிக்கவில்லை. ஏற்கனவே சலுகைகளை அனுபவித்துவரும் சிறுபான்மை சமுதாயத்தினருக்கு மேலும் சலுகைகளை வழங்க முடியாது" என்று இதே ஜெயலலிதா சொன்னாரா இல்லையா? இதையும் மறுக்கிறாரா? இப்போது கூறுங்கள், தமிழ்நாட்டின் கோயபல்ஸ் யார் என்று? நானா? ஜெயலலிதாவா?

அன்புள்ள,

மு.க.

17-3-2014

3866. நீதியே; நீ இன்னும் இருக்கின்றாயா?

உடன்பிறப்பே,

கள்ளக்குறிச்சியில் 16ஆம் தேதி பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, "மத்திய அரசில் அங்கம் வகித்தபோது தமிழ்நாட்டிற்கே தலைக்குனிவை ஏற்படுத்தும் வகையில் 2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அலைக்கற்றை இமாலய ஊழலை முன்னின்று நடத்திய கட்சி தி.மு.க." என்று அவருக்கே உரிய பாணியில் நம் மீது பழி சுமத்தியிருக்கிறார். அலைக்கற்றை பற்றிய வழக்கு டெல்லி சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. விசாரணை தான் நடைபெற்று வருகிறது. குற்றம் சாட்டப்பட்ட ஆ. இராசா உள்ளிட்டோர், ஜெயலலிதாவைப் போல வாய்தா வாங்காமல், விசாரணைக்கு முறையாக ஒத்துழைத்து வருகிறார்கள். ஆனால் ஜெயலலிதா கலந்துகொள்ளும் ஒவ்வொரு தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும் கழகம் ஊழல் புரிந்ததாக வேண்டுமென்றே திட்டமிட்டுக் குற்றஞ்சாட்டி வருகிறார். ஆனால் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில், அவர் மீது, அவருடைய ஆட்சி மீது ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு, அவை நீதிமன்றத்திலும் விசாரிக்கப்பட்டு, என்னென்ன தீர்ப்புகள் நீதிமன்றங்களால் கூறப்பட்டன என்ற விவரத்தை நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஜெயலலிதாவும் சசிகலாவும். இவர்கள் அரசுக்குச் சொந்தமான டான்சி பவுண்டரியின் 3.0786 ஏக்கர் நிலத்தையும் அதிலே உள்ள 2,698 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள கட்டிடத்தையும் வழிகாட்டி மதிப்பீட்டிற்குக் குறைவான விலையில் 29-5-1992 அன்று வாங்கினார்கள் என்பதை ஜெயலலிதாவே 30-6-1992 மதுரையிலே நடைபெற்ற மாநாட்டில் திட்டவட்டமாக ஒப்புக்

கொண்டு அவ்வாறு வாங்கியது ஒன்றும் குற்றம் இல்லை என்று பேசி அனைத்து ஏடுகளிலும் அது வெளிவந்துள்ளது. இவ்வாறு வாங்கியதின் மூலம் 3 கோடியே 50 லட்சத்து 91 ஆயிரத்து 429 ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தப்பட்டது. மேலும் விற்பனைப் பத்திரத்தில் முறைகேடு செய்து அதன் வாயிலாகவும் 43 லட்சத்து 9 ஆயிரத்து 474 ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது.

இந்த வழக்கினை விசாரித்த நீதிபதி, இறுதியாகத் தனது தீர்ப்பில் "ஜெயலலிதா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தீர்மானிக்கப்படுகிறது" என்று கூறி மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் அபராதம் பத்தாயிரம் ரூபாயும் விதித்து 9-10-2000 அன்று அறிவித்திருக்கிறார்.

அதேநாளில் டான்சிக்குச் சொந்தமான மற்றொரு இடத்தை "சசி எண்டர்பிரைசஸ்" நிறுவனத்திற்கு வாங்கியதற்காக இதே நீதிபதி **இரண்டாண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், 5 ஆயிரம் ரூபாய்** வீதம் **அபராதமும்** விதித்துத் தீர்ப்பளித்தார்.

அதைப்போல ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது 1-11-1991 அன்று கொடைக்கானல் ப்ளசண்ட் ஸ்டே ஓட்டலுக்குத் தரைத்தளம் மற்றும் மேலும் ஒரு தளத்துடன் ஓட்டல் கட்டிக் கொள்ள உரிமம் வழங்கப்பட்டது. 29-1-1992 அன்று மேலும் ஆறு தளங்கள் கட்ட அனுமதி கோரியபோது கொடைக்கானல் பெருந்திட்ட விதிமுறைகளுக்கு முரணாக இருந்ததால் 7-2-1992 அன்று கொடைக்கானல் நகரியச் செயல் அலுவலரால் அனுமதி மறுக்கப்பட்டது. இதனை எதிர்த்து ஓட்டல் அதிபர் அரசுக்கு மேல் முறையீடு செய்துகொண்டார். அரசு அதிகாரிகள் இது விதி மீறல் என்று சுட்டிக்காட்டி மனுவை நிராகரிக்கலாம் என்று எழுதிவைத்தனர். அந்தக் கோப்பில் எழுதப்பட்டிருந்த ஆட்சேபணைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் முதலமைச்சர் உத்தரவு பிறப்பித்திருப்பது அந்தக் கோப்பிலே சாட்சியமாக உள்ளது.

சட்டத்திற்குப் புறம்பாக ஆணையிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டித் துறையின் செயலாளராக இருந்த சிரியாக், ஐ.ஏ.எஸ்., அமைச்சரைச் சந்தித்துக் கூறியிருக்கிறார். ஆனால் உடனடியாக சிரியாக் அந்தப் பதவியிலிருந்து மாற்றப்பட்டு, 10-

5-1994 அன்று எச்.எம். பாண்டே என்பவர் அந்தப் பதவியிலே நியமிக்கப்பட்டு, 13-5-1994 அன்றே அரசாணை பிறப்பிக்கப்பட்டு விட்டது. இதனை எதிர்த்துப் பழனி மலைப் பாதுகாப்புக் கவுன்சில் உயர்நீதிமன்றத்திலே அப்போதே அ.தி.மு.க. ஆட்சியிலேயே வழக்குத் தொடுத்தது. உயர்நீதிமன்ற நீதிபதி விதிகளை மீறிக் கட்டப்பட்ட ஓட்டல் பகுதிகளை இடித்துத் தள்ள வேண்டுமென்று தீர்ப்பளித்ததோடு "சட்டத்தின் நடைமுறையிலிருந்து சட்டத்தை உடைப்பதற்கு அரசு விதி விலக்கு அளித்துள்ளது. இது கட்டிலின் அளவுக்கேற்ப மனிதனின் அளவை வெட்டுவது போன்றதாகும்" (The Government had exempted the law-breaker from the operation of the law, which would tantamount to cutting a man to the size of a cot") வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தத் தீர்ப்பின் முடிவிலேதான் "நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன் நாடொறும் நாடி கெடும்" என்ற திருக்குறளை நீதிபதி எழுதியிருந்தார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்தபோது அங்கும் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது. சிறப்பு நீதிமன்றத்திலே இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு, 2-2-2000 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பிலே, "குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து பேரும் ஒருவரோடொருவர் கூட்டுச்சதி புரிந்து ஊழல் மற்றும் கிரிமினல் குற்றங்கள் புரிந்ததை அறிய முடிகிறது. உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் தெரிவித்த பலத்த கண்டனத்தையும் மீறி பொது நலனைக் கருத்திற்கொள்ளாமல், இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பொது ஊழியர்கள் குற்றம் புரிந்துள்ளனர். செய்த குற்றத்தை மறுத்து அவர்கள் கூறும் காரணம், சாத்தான் வேதம் ஓதுவது போல உள்ளது. கூட்டுச்சதி புரிந்து ஆவணங்களைத் திருத்தி ஊழலில் ஈடுபட்டுள்ளனர் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று கூறி, ஜெயலலிதா உட்பட ஐந்து பேருக்கு ஓராண்டு கடுங்காவலும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து சிறப்பு நீதி மன்ற நீதிபதி ராதாகிருஷ்ணன் தீர்ப்பளித்தார்.

1995-96இல் 45,302 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டது. அப்போது வெளிமார்க்கெட்டில் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் விலை ரூ. 12,500. ஆனால் அரசு ஒவ்வொரு பெட்டிக்கும் 14,500

ரூபாய் விலை என்று நிர்ணயித்து வாங்கியது. இதன்மூலம் அரசாங்கத்திற்கு ஒன்பது கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கில் 11 பேர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டபோதே தங்களை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று 9 பேர் மனுக் கொடுத்தனர். அதன்மீது 14-5-98 அன்று தீர்ப்பளித்த நீதிபதி ராதாகிருஷ்ணன், "இந்த வழக்கில் எல்லா எதிரிகளும் சதித் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதற்கு போதுமான ஆதாரம் உள்ளது. சட்டத்திற்குப் புறம்பாக அரசாங்கப் பணத்தைக் கையாடல் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் செயல்பட்டுள்ளனர். நம்பிக்கை மோசடி மூலமாகத் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பண ஆதாயம் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்பது ஆவணங்களிலிருந்து தெளிவாகப் புலனாகிறது. இந்த வழக்கில் கலர் டி.வி. மூலம் அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியுள்ளனர் என்பது கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு ஆவணங்களைப் பார்க்கிறபோது கண்கூடாக வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. ஜெயலலிதாவும் மற்ற ஆறு பேரும் பொது ஊழியர்களாக இருந்துகொண்டே அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து சட்ட விரோதமாக சதித் திட்டம் தீட்டி 45,302 கலர் டி.வி. பெட்டிகளை வெளி மார்க்கெட்டில் 12,500 ரூபாய்க்குக் கிடைத்தும், 14,500 ரூபாய் வீதம் வாங்கி அரசுக்கு 9 கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர்" என்றெல்லாம் கூறித்தான் வழக்கைப் பதிவுசெய்தார்.

ஜெயலலிதா முதல் அமைச்சராக ஆவதற்கு முன்பு அவருக்கு இருந்த சொத்து மதிப்பு அதாவது 1-7-1991 அன்றைய தேதியில் 2 கோடியே 1 லட்சத்து 83 ஆயிரத்து 957 ரூபாய். ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை ஐந்தாண்டுகள் அனுபவித்து முடிந்த பிறகு 12-5-1996 அன்று ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 66 கோடியே 65 லட்சத்து 20 ஆயிரத்து 395 ரூபாயாகும். திரு. சுப்பிரமணிய சுவாமி அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் இந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டது. விசாரணையைத் தடுத்திட ஜெயலலிதா உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து விசாரணை சிறிது காலம் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் பின்னர் தடையை நீக்கி விசாரணையைத் தொடர உயர்நீதிமன்றம் ஒப்புதல் அளித்தது.

இந்த வழக்கிலே ஜெயலலிதா பிறகு உயர்நீதி மன்றத்தில் தனக்கு எதிர்பார்ப்பு ஜாமீன் கோரினார். அதனை நிராகரித்து உயர்நீதிமன்றம் ஜெயலலிதா மீது சாட்டப்பட்டுள்ள ஊழல் வழக்கிற்கு அடிப்படை ஆதாரம் உள்ளது என்றும் அரசியல் பகை காரணமாக இவ்வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது சரியல்ல என்றும் தீர்ப்புக் கூறியது.

ஏனென்றால் ஜெயலலிதா வீட்டைச் சோதனையிட்டபோது கண்டுபிடிக்கப்பட்ட நகைகள், வெள்ளிச்சாமான்கள், ஏனைய சொத்துக்கள், மற்றும் திருவான்மியூர் தொடங்கி மாமல்லபுரம் வரை வாங்கப்பட்டுள்ள பங்களாக்களின் பத்திரங்கள் ஆகியவைகளைக் கணக்கிட்டு எடுக்கப்பட்ட ஆதாரங்களின் பேரில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதைப்போலவே ஜெயலலிதாவின் வங்கிக் கணக்கிலே மூன்று லட்சம் டாலர் வரவு வைக்கப்பட்டது. அன்னியச் செலாவணிச் சட்டத்தின்கீழ் இதன் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. டாலரை அனுப்பியது யார் என்றே தனக்குத் தெரியாது என்று ஜெயலலிதா கூறிவிட்டார். அதுகுறித்த வழக்கும் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கின் மீது ஜெயலலிதா ஜாமீன் மனு தாக்கல் செய்த போது 6-12-1996 அன்று நீதிபதி சிவப்பா அவர்கள் வழங்கிய தீர்ப்பிலே, "வேண்டுமென்றே அரசியலில் காழ்ப்புணர்ச்சியோடு தன் மீது பொய் வழக்குகள் போடப்பட்டிருப்பதாக ஜெயலலிதா தரப்பிலே கூறப்பட்ட வாதத்தை ஏற்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டுக்கான ஆரம்ப ஆதாரங்கள் உள்ளன. தனி மனித சுதந்திரத்தைவிடக் கூறப்பட்ட ஊழலைக் கண்டுபிடிப்பது விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு முக்கியமாகும். அரசுத் தரப்பு ஆவணங்களை ஆராய்ந்த போது இந்த வழக்குகள் உள்நோக்கத்துடன் போடப்படவில்லை என்று தோன்றுகிறது" என்று தீர்ப்பளித்து அதுவும் அனைத்து ஏடுகளிலும் வெளிவந்த செய்தியாகும்.

மைலாப்பூர் கனரா வங்கியிலும் ஸ்ரீராம் நிதி நிறுவனத்திலும் ஜெயலலிதா பெயரில் மூன்று கோடியே 58 இலட்சம் ரூபாய் இருந்தது முடக்கிவைக்கப்பட்டதை எதிர்த்துச் சென்னை உயர்நீதிமன்றத்திலே ஜெயலலிதா தொடுத்த வழக்கின் மீது நீதிபதி ராமமூர்த்தி அளித்த தீர்ப்பிலே, "ஜெயலலிதாவின்

சொத்து சம்மந்தப்பட்ட வழக்கு விசாரணை முக்கியக் கட்டத்தில் உள்ளது. ஜெயலலிதா தனது பெயரில் வங்கியில் உள்ள பணம் முறைகேடாகச் சம்பாதிக்கப்பட்டது அல்ல என்று கூறுவதை இப்போது ஏற்க முடியாது" என்று தெரிவித்தார்.

டான்சி வழக்கிலே 12-9-1995 அன்று ஜெயலலிதா, முதலமைச்சர் பொறுப்பில் இருக்கும்போதே, தொடுத்த மேல் முறையீட்டையொட்டி, உச்சநீதிமன்ற நீதிபதிகள் எஸ்.பி. பரூச்சா, பைஜானுதீன், எஸ்.பி. மஜும்தார் ஆகியோர் தெரிவித்த கருத்து :-

"இந்த மேல் முறையீட்டு மனு கால தாமதத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்த உயர்நீதிமன்றம், மேல் முறையீட்டாளர் (ஜெயலலிதா) பதவியிலே தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும் நிலையிலே, இந்த வழக்கில் எந்தவிதமான காலதாமதத்தையும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் கூறியுள்ளது. சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவுகளின்படி ஜெயலலிதா மீது நடவடிக்கை எடுக்க இந்த வழக்கிலே பூர்வாங்க ஆதாரங்கள் இருப்பதாகவே தெரிகிறது".

டான்சி வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதி 25.11.2003 அன்று அளித்த தீர்ப்பில் -

"பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் குறைந்த பட்ச நடத்தை மற்றும் ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும் என்பதைக் குற்றவியல் சட்டம் வலியுறுத்துகிறது. இத்தகைய நிலையில் உயர் பதவியில் இருப்ப வர்கள் அந்தச் சட்டத்தில் ஒளிந்து கொள்ளாமல் உயர்ந்தபட்ச நாணயத்துடன் நடந்து கொள்ள வேண்டும். பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் நடத்தை நெறிமுறைகளை மதித்து நடக்க வேண்டுமே தவிர குற்றவழக்குகளில் உள்ள நெளிவுசுளிவுகளில் ஒளிந்து தப்பித்துக் கொள்ளக் கூடாது. உயர் பதவியில் இருப்பவர்கள் அரசின் சொத்தைப் பயன்படுத்தித் தங்கள் செல்வங்களை அதிகரிப்பது அல்லது அரசுக்குரியதைத் தங்களுக்குரியதாக மாற்றிக் கொள்வது என்கிற போக்கு அதிகரித்து வருகிறது. அத்தகைய போக்கை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம்".

ஜெயலலிதாவைப் பற்றி உச்சநீதிமன்ற நீதிபதி தெரிவித்த கருத்துத்தான் இது.

ஜெயலலிதா மீது தனி நீதிமன்றங்கள் அமைத்து விசாரணை நடத்துவது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று ஜெயலலிதா உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்தார். அதை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி லிபரான் மற்றும் நீதிபதி பத்மநாபன் ஆகியோர் அளித்த தீர்ப்பு :-

"ஜெயலலிதாவின் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களை விசாரிக்கத் தனி நீதிமன்றங்கள் நிறுவப்பட்டிருப்பது சட்டரீதியாக முறையானதே. இதில் அரசியல் உள்நோக்கம் எதுவும் இல்லை. தனி நீதி மன்றங்களை அமைத்து கடந்த 30-4-1997இல் வெளியிடப்பட்ட அரசின் உத்தரவு சட்டத்துக்கு முரணானது அல்ல. ஊழல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் விசாரணையை நாள்தோறும் நடத்தி முடிப்பதற்காகவே இந்த ஏற்பாடு. அதைவிட இவ்வழக்குகளில் பூர்வாங்க ஆதாரங்கள் காணப்படுவதால் விசாரணையை எதிர்கொள்ளத்தான் வேண்டும்."

அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை முதலமைச்சர் ஜெயலலிதா பதவியில் இருந்தபோது வாங்கியது, மீனா விளம்பர நிறுவனத்திற்குச் சலுகை அளித்தது, கொடைக்கானல் பிளசண்ட் ஸ்டே ஓட்டலுக்கு விதிகளை மீறி அனுமதி வழங்கியது, தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கியதில் ஊழல் போன்ற ஏழு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஜெயலலிதா மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டபோது தன்னைக் கைது செய்யாமலிருக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா ஒட்டுமொத்த முன் ஜாமீன் கோரி மனுத்தாக்கல் செய்தார். அந்த ஜாமீன் மனுவைத் தள்ளுபடி செய்து உயர்நீதிமன்ற நீதிபதி சிவப்பா 11-10-1996இல் அளித்த தீர்ப்பு வருமாறு :-

"கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகம் ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ள பிளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்கிலும், மீனா அட்வர்டைசிங் வழக்கிலும் - வழக்குத் தொடர்வதற்கான அடிப்படை இருப்பது தெளிவாகப் புலனாகிறது. ஜெயலலிதா கூறுவது போல பொய்யான குற்றச்சாட்டுகள் மீது வழக்குத் தொடரப்படவில்லை என்பது தெளிவாகிறது"

ஸ்பிக் நிறுவனப் பங்குகளை விற்றது குறித்து ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி உயர்நீதிமன்றத்திலே

தொடுத்த வழக்கில் நீதிபதி வெங்கடாசலம், 15-12-1997 அன்று அளித்த தீர்ப்பு :-

"எத்தனையோ அரசு நிதி நிறுவனங்கள் பங்குகளை வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கும்போது தனியார் ஒருவருக்கு மட்டும், அப்போதைய அரசு பங்குகளை விட்டுக்கொடுத்தது ஏன் என்ற கேள்விக்கு விடை இல்லை. பங்குகளை வாங்கிக் கொள்வதற்கான உரிமையை ஸ்பிக் நிறுவனத்துக்கு விட்டுக்கொடுக்க நியாயமான காரணமோ, கட்டாயமோ ஏதும் இல்லை. 100 ரூபாய் மதிப்புள்ள சாதாரணப் பொருட்களை வாங்கும்போதும், விற்கும்போதும் கூட இருதரப்பினரும் பேரம் பேசுவர். ஆனால் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள டிட்கோ பங்கு விற்பனையில் பேரம் பேசுவதற்கான முயற்சி கூட எடுக்கப்படவில்லை. இவ்வளவு பெரிய தொகை சம்மந்தப்பட்ட விஷயத்தை அமைச்சரவையைக் கூட்டி முடிவு செய்திருக்க வேண்டும். அப்போதைய அரசு அதுபோலச் செய்யவில்லை. தனக்கிருந்த அரசு அதிகாரத்தை ஜெயலலிதா தவறாகப் பயன்படுத்திச் சட்ட விரோதமாக நடந்து கொண்டுள்ளார். அவரது நடவடிக்கை நீதித் துறைக்கு வேதனை அளிக்கிறது. அரசுக்கு ஏற்பட்ட 28.29 கோடி ரூபாய் நஷ்டத்தை எம்.ஏ. சிதம்பரம், ஏ.சி. முத்தையா, ஜெயலலிதா ஆகியோர் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ ஆறு மாதத்திற்குள் ஈடு செய்ய வேண்டும் என்று உத்தரவிட வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டுள்ளது."

ஐதராபாத்தில் உள்ள திராட்சைத் தோட்டத்தில் 1987ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் விளைந்த திராட்சை விற்பனை மூலம் 60 இலட்ச ரூபாய் வருமானம் வந்ததாக ஜெயலலிதா கூறினார். ஆனால் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ள காலத்தில் அங்கே திராட்சை விளைச்சலே நடைபெறவில்லை என்று வருமான வரித்துறை சுட்டிக்காட்டி அது பற்றியும் ஒரு வழக்கு!

1993-94ஆம் ஆண்டிற்கு ஜெயலலிதா வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்யவில்லை. இதன் மூலம் ஒரு கோடி ரூபாய் வருமானத்தை மறைத்தார். இந்த வழக்கில் ஜெயலலிதா மீது ஏற்கனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டது. இவ்வழக்கு தற்போது நீதிமன்றத்திலே நிலுவையிலே உள்ளது.

இந்த வழக்கில் 24-2-2006 அன்று ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோதே, உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.என். அகர்வால், ஏ.கே. மாத்தூர் ஆகியோர், "You (Jayalalithaa) are making a mockery of the Judicial Process. How long you can drag the proceedings?" (நீதி பரிபாலன முறைகளையே நீங்கள் கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். விசாரணை நடைமுறைகளை எவ்வளவு காலத்திற்கு இழுத்தடிப்பீர்கள்) என்று விமர்சனம் செய்யப்பட்ட பெருமையும் ஜெயலலிதாவுக்கு உண்டு.

தர்மபுரியில் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் கொளுத்தப்பட்ட வழக்கில் 20.9.2003 அன்று உயர்நீதிமன்ற நீதிபதி கனகராஜ் :-

"வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால், இவ்வழக்கை அனாதைக் குழந்தையைப் போல போலீஸ் அதிகாரிகள் நடத்தியுள்ளனர். போலீஸ் மீதான நம்பிக்கை, நன்மதிப்பைக் குலைக்கும் வகையில் அவர்கள் நடந்துள்ளனர். இந்த இமாலயத் தவறுக்காக உள்துறைச் செயலாளர் மற்றும் சி.பி., சி.ஐ.டி., கூடுதல் எஸ்.பி., ஆகியோரை இந்த நீதிமன்றம் கண்டிக்கின்றது."

தற்போது பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் சொத்துக் குவிப்பு வழக்கு பற்றி உச்சநீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பில்,

"இந்த வழக்கில் 76 சாட்சிகள் மீண்டும் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே குறுக்கு விசாரணை நடத்தி முடிக்கப்பட்டவர்கள். ஏன் அவர்களை மீண்டும் அழைத்தீர்கள் என்று கேட்டதற்கு, ஜெயலலிதாவின் மூத்த வழக்கறிஞருக்கு வேறு பல வழக்குகளில் ஆஜராக வேண்டிய பணிகள் இருந்த காரணத்தினால் மீண்டும் அந்தச் சாட்சிகள் திரும்ப அழைக்கப்படுகிறார்கள் என்று காரணம் சொல்லியிருக்கிறார்கள். ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, சாதாரணமான ஏதோவொரு காரணத்தைக் கூறி இந்தச் சாட்சிகள் மீண்டும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு ஜெயலலிதாவின் அரசினால் நியமிக்கப்பட்ட அரசாங்க வழக்கறிஞர் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் அனுமதி கொடுத்திருக்கிறார். இது ஒன்றே எந்த

அளவிற்கு நீதி இந்த வழக்கிலே திசை திருப்பப்பட்டுள்ளது என்பது நன்றாக விளங்குகின்றது. புதிய அரசு வழக்கறிஞர் குற்றவாளிகளோடு (ஜெயலலிதா குழுவினரோடு) இணைந்து செயல்படுவது நன்றாகத் தெரிகிறது. அதன் காரணமாக பொதுவாக நீதி கிடைக்காது என்ற ஒரு நம்பத் தகுந்த ஐயம் மக்கள் மனதிலே எழுந்துள்ளது. நீதி திசை திரும்பிச் செல்வது நிச்சயமாகத் தெரிகின்றது. 313வது விதிப்படி நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்படும்போது, ஜெயலலிதா நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாமல் இருக்கத் தாக்கல் செய்த தவறான மனுவிற்கு அரசு வழக்கறிஞர் எதிர்ப்பே தெரிவிக்காமல் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது வருந்தத்தக்கது. ஜெயலலிதா நேரில் ஆஜராகாமல் இருக்க விசாரணை நீதிமன்றம் அனுமதி கொடுத்ததற்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களுடைய கடுமையான எதிர்ப்பை இந்தத் தீர்ப்பிலே தெரிவித்திருப்பதோடு, "நீங்கள் எவ்வளவு பெரியவராக இருந்த போதிலும், உங்களை விடச் சட்டம் பெரியது. நேரில் ஆஜராகாமல் இருக்க விதிவிலக்கு கொடுக்கக் கூடிய அளவிற்கு அவரது மனுவிலே காரணங்கள் கூறப்படவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், நீதியின் பாதையிலே குறுக்கிட்ட செயல்தான் நடைபெற்றுள்ளது".

நீதிபதிகள் தீர்ப்பின் முடிவில் கூறுகிறார்கள். "In our view, the petitioner has raised many justifiable and reasonable apprehensions of miscarriage of justice and likelihood of bias, which would require our interference" அதாவது "எங்களின் கருத்தின்படி; மனுதாரர் (பேராசிரியர்) நியாயப்பூர்வமான, அர்த்தம் பொதிந்த சந்தேகங்களை எழுப்பி, அதாவது நீதி திசை திரும்பியும், பாரபட்சமாகவும் செல்வதால் எங்களுடைய குறுக்கீடு அவசியம் தேவை என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை" என்று உச்சநீதிமன்ற நீதிபதிகளே தெரிவித்திருக்கிறார்கள்.

ஜெயலலிதா மீது உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் பல வழக்குகளில் தங்கள் கருத்துகளை, தீர்ப்புகளை அவ்வப்போது வழங்கியிருக்கிறார்கள். அதன்பின்னர் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், அவர் மீது தண்டனை வழங்கப்பட்ட ஒருசில வழக்குகளை மேல் முறையீடு செய்து, அந்தத்

தண்டனையிலிருந்து அவர் விடுதலை பெற்ற சில நிகழ்வுகளும் உண்டு. பல்வேறு நீதிமன்றங்களில், பல நீதிபதிகளால் குற்றஞ்சாட்டப்பட்டு, தண்டனை பெற்ற ஜெயலலிதா, தி.மு. கழகத்தின் மீது அலைக்கற்றை ஊழல் என்றெல்லாம் ஊருக்கு ஊர் சென்று பேசுவது என்பது "சாத்தான் வேதம் ஓதுவதைப் போல்" இருக்கிறதா? இல்லையா? இனியும் அவர் அவ்வாறு பேசுவதை நிறுத்திக் கொள்ளாவிட்டால், இந்த வழக்குகளைப் பற்றிய முழு விவரங்களும், அந்த வழக்குகள் விசாரணைகளின்போது என்னென்ன நடைபெற்றது என்ற விவரங்களும் தொடர்ச்சியாக வெளியிடப்படும். எனவே உடன்பிறப்பே, ஜெயலலிதா மீது நீதியரசர்கள் கூறிய இந்த விமர்சனங்களையெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெளிவாகக் கூறி நினைவூட்ட வேண்டிய கடமை உனக்குண்டு. அந்தக் கடமையினை நீ செய்வதற்காகவே இத்தனை விவரங்களையும் திரட்டித் தந்துள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

19-3-2014

1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022